ஆகஸ்ட் 2 முதல் } 1983
செப்டம்பர் 2 "

# தமிழரசு


கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி சேலைக
ஆயிரம் மலர்கள் பூத்து குலுங்கு
சேலைகள்...
கவரும் கைத்தறித் துணிகள்
பட்டுச் சேலைகள் ஆடவர்
அனைவரும் விரும்பும் அருமை
இழையும் ஆடைகள் ஆயிரம்
அழகார்ந்த ரகங்கள்
உண்டு !
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்பு தரும் வகையில் நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்பதை வலியுறுத்திட மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் கறுப்புச்சட்டை அணிந்துள்ளனர்.



இலங்கை வாழ் தமிழர் பிரச்சினை குறித்து காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கத் (தமிழ்நாடு கிளை)தின் ஆதரவில் சென்னையில் 19.8.83 அன்று இலங்கைப் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் உரைநிகழ்த்தினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. ராசாராம் அவர்களும், மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம் அவர்களும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.





சென்னை அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் இந்து ஆதிதிராவிடர் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த 43 இணைகளுக்குச் சிறப்புத் திருமணம் 24.8.83 அன்று மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம வீரப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருமதி இராஜம்மாள் வீரப்பன் அவர்கள் மணமகளுக்குத் திருமாங்கல்யம் வழங்கினார்கள். படத்தில் திருமணத் தம்பதிகளுக்கு அமைச்சர் அவர்கள் பரிசுப் பொருட்கள் வழங்குகிறார்.






44

# தமிழரசு

1-8-1983 75 காசு.

திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி - ஆடி 16


COMMISSIONER OF TAMILNADU
ARCHIVES & HISTORICAL RESEARCH
EGMORE, MADRAS-8



# தமிழரசு

16-9-1983 75காசு

COMMISSIONER OF TAMILNADU
ARCHIVES & HISTORICAL RESEARCH
22 SEP 1983
EGMORE. MADRAS-8





பெருந்தலைவர்
காமராஜா
பிறந்த நாள் விழா
சென்னை
(16-7-1983)

# இலங்கைத் தமிழர் இன்னுயிர் காக்க...!



## மாண்புமிகு முதல்வர்

இலங்கையில் வாழும் தமிழர்கள், இலங்கை ராணுவத்தினராலும், இலங்கையிலுள்ள இனவெறிபிடித்தவர்களாலும், கொலை வெறியுடன் வேட்டையாடப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான அவசர நடவடிக்கைகளை எடுக்குமாறும், உலக நாடுகள் அவைக்கு இப்பிரச்சினையைக் கொண்டு சென்று இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்பிற்கான உத்தரவாதத்தைப் பெற, உடனே அவசர நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கட்குத் தமிழக மக்களின் சார்பில் இன்று வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

இதைத் தொடர்ந்து, இலங்கை அரசுக்கும், தமிழர்களைக் கொலை வெறியுடன் பழி வாங்கும் இலங்கையில் உள்ள வன்முறையாளர்கட்கும் தமிழக மக்களின் கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில், உலக நாட்டு மக்களின் கவனத்தை ஈர்த்து, இந்தக் கொலை வெறியைத் தடுத்து நிறுத்த, உலக நாடுகள் அவையும், சுதந்திர, சமாதான - சகவாழ்வை மதிக்கும் உலகமக்கள் அனைவரும் முனைய வேண்டுமென்பதற்காக, தமிழக அரசின் சார்பில், வருகிற ஆகஸ்ட் மாதம் 2ஆம் நாள் செவ்வாய்க்கிழமையன்று தமிழகம் முழுவதும் முழு கடையடைப்பு-பொது வேலைநிறுத்தம் (பந்த்) நடத்துவதென அரசு முடிவுசெய்திருக்கிறது.

அன்றைய தினம் அரசின் சார்பில் தமிழக அமைச்சர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள், தொழிற்சங்கத்தினர், இலட்சோப இலட்சம் தமிழ்மக்கள் கட்சி, மத, இன வேறுபாடின்றி, பங்கேற்கும், மாபெரும் கண்டனப் பேரணியும் கண்டனப் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

இந்தப் பொது வேலை நிறுத்தம், கடை அடைப்பு நிகழ்ச்சியிலும், கண்டனப் பேரணிப் பொதுக்கூட்ட நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளுமாறு தமிழகத்திலுள்ள எல்லாத் தரப்பு மக்களையும், எல்லா அரசியல் கட்சியினரையும் கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் சட்டமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியான திராவிடமுன்னேற்றக் கழகம் உள்ளிட்ட, எல்லா அரசியல் கட்சித் தலைவர்கட்கும், தொழிற் சங்கங்கட்கும், வர்த்தகப் பெருமக்கட்கும், தொழிற்சாலை மற்றும் நிறுவனங்களின் அதிபர்கட்கும் இந்தப் பொது வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டு, தமிழக அரசின் சார்பில் அழைப்புகளை அனுப்பவிருக்கிறேன்.

உலகத்தின் அடிமைப்படுத்தப்பட்ட, துன்பத்திற்குள்ளாக்கப்படுகிற மக்களுக்காகக் குரல் கொடுக்கிற இந்தியப் பேரரசும் உலக நாடுகள் அவையும் இலங்கையில் நடைபெறும் இந்தக் கொலை வெறிமிக்க அராஜகத்தை, தமிழர்கட்கு இழைக்கப்படுகிற காட்டுமிராண்டித்தனமான கொடுமையை உடனே தடுத்து நிறுத்திட எடுக்கப்படும் நடவடிக்கைக்கு, ஐந்து கோடி தமிழ்மக்களின் பூரண ஆதரவு உண்டு என்பதைக் காட்டும் வகையில் இப்பேரணியும் கடை அடைப்பு நிகழ்ச்சியும் அமையும்.

இரண்டொரு நாட்களில் இந்தியக் குடியரசுத் தலைவரின் சுற்றுப்பயணம் தமிழகத்தில் நடைபெறவிருப்பதால் இந்தக்கடை அடைப்பு கண்டனப் பேரணி ஆகஸ்ட் 2ஆம் நாள் வைக்கப்பட்டுள்ளது.

**26.7.83ல் விடுத்த அறிக்கை**


**தமிழரசு**

மலர் : 14 இதழ் : 3

1—8—1983

திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி — ஆடி 16



சென்னைக்கு வந்திருந்த இந்தியத் தலைமை இராணுவத் தளபதி திரு ஏ. எஸ். வைத்யா, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை அவரது இல்லத்தில் 2.9.'83ல் சந்தித்தார். தென்மண்டல இராணுவத் தளபதி திரு பச்சீந்திர சிங் உடன் உள்ளார்.




தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் 'டாப்கோ' சிற்றுண்டிச் சாலையை 'டாப்கோ' நிறுவனத்தின் தலைவர் திருமதி கல்யாணி இராமசாமி அவர்கள் தலைமையில், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் திருமதி கோமதிசீனிவாசன் அவர்கள் 22.8.'83ல் திறந்து வைத்தார்.



இந்திய அரசின் தகவல் –ஒலிபரப்பு அமைச்சகத்தின் செயலர் திரு. எஸ்.எஸ்.கில், தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு.கே.சொக்கலிங்கம் அவர்களை 30.8.'83ல் சந்தித்தார்.



வாழ்வின் அடிமட்டத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்காகவே தந்தை பெரியார் அவர்கள் பாடு பட்டார். அத்தகைய ஐயா அவர்களின் கருத்து களை மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

**—மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர்.**


திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி — ஆவணி 31

# தமிழரசு

மலர் : 14
இதழ் : 6
16—9—1983




## பேரறிஞர் அண்ணா சிறப்பிதழ்

## தந்தை பெரியார் பிறந்த நாள்



அண்ணாவின் உள்ளம் அரசியல் உலைக்களத் திலே காய்ச்சிய உருக்கல்ல. அரசியல் பாலைவனத் திலே அன்பைச் சுரக்கும் ஊற்று. அழிக்க எண்ணும் எதிரிகூடத் துன்பப்படக்கூடாது என்று எண்ணும் கருணை உள்ளம்.

**—மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர்.**

# நெஞ்சு பொறுக்குதில்லை!



தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் தலைமையில்

(28.7.83ல்) அனைத்துக் கட்சித் தலைவர்கள்

இலங்கைத் தமிழர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தினர்..

இலங்கையில் தமிழ் மக்களுக்குஏற்பட்டிருக்கும் அவதியை-துன்பத்தை - இன்னலை எண்ணிப் பார்க்கும்போது 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என்று ஆயிரம் ஆயிரம் முறை சொல்ல வேண்டிய கட்டம் ஏற்பட்டிருக்கிறது. நமது நெஞ்சங்கள் வெடித்துச் சுக்குநூறாகுன்றன.

''கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது தெரியுமா? கடல் கடந்த நாடுகளுக்கெல்லாம் சென்று வாழ்க்கை நடத்தும் தமிழ்மக்கள் உகுத்த கண்ணீர்தான் கடல் நீரை உப்பாக்கியிருக்கிறது'' என்று ஒருமுறை பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

''அலைகடலுக் கப்பால் வாழ்வார்
அன்பால்நம் அகத்தில் வாழ்வார்''

என்று பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிட்டார்.

நம் அகத்தில் வாழ்ந்துவரும் எண்ணற்ற தமிழ்மக்கள் ஈழ மண்ணிலே வேட்டையாடப்படுகிறார்கள் என்னும் பயங்கர சேதி பூகம்பமாக நம்மை அலைக்கழிக்கிறது.

மனித உரிமைகள் குறித்துப் பேசப்படும் இந்த நாளில்தான் மனிதர்கள் காட்டு விலங்குகளைப் போல - குருவிக் கூட்டத்தைப் போலச் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.



29.7.'83 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் - மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர், தலைமைச் செயலர் ஆகியோர்..

ஜனநாயகம் வளர்ந்து கோலோச்சுகின்ற இந்த 20 ஆம் நூற்றாண்டில்தான் மனிதர்களைப் பிணங்களாக்கி மகிழும் மனப்பான்மை உச்சம் பெற்றிருக்கிறது.

அகிம்சையை - அவனிக்குப் போதித்த புத்த பிரானின் வழியைப் பின்பற்றுவதாகச் சொல்லிவரும் இலங்கை மண்ணிலேதான் அராஜகமும் வெறியாட்டமும் வன்முறையும் தலைவிரித்தாடுகின்றன.

பிரிவினை வாதிகள் என்று இலங்கை அரசினால் கருதப்பட்டுச் சிறைத்தண்டனை பெற்ற இளம் தலை முறையினர் - சிறையிலுள்ள ஏனைய கைதிகளால் கண்டபடி தாக்கப்பட்டு உயிரிழந்தனர் என்னும் செய்தியைக் கேட்டு நாம் கண்ணீர் விடத் தொடங்கிய சில மணி நேரத்திற்குள்ளேயே தமிழ்மக்கள் நூற்றுக் கணக்கில், சிங்கள வெறியர்களால் அழிக்கப்பட்டு ஒழிக்கப் பட்டிருக்கின்றனர் என்ற செய்தி தொடர்ந்தது.

தமிழர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

தமிழர்களின் கடைகள் சூறையாடப்பட்டன.

தமிழர்களின் தொழிற்கூடங்கள் தரைமட்டமாக்கப்பட்டன.

தமிழ்ப்பெண்கள் மானபங்கம் செய்யப்பட்டு நெருப்பிலே தூக்கி எறியப்பட்டனர்.

தமிழர்களைத் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்தன.

இந்திய நாட்டைச் சேர்ந்த வங்கிகள் எரியூட்டப்பட்டன.

பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் வீடு வாசல் இழந்து, பராரிகளாக்கப்பட்டு, அகதிகளாக்கப் பட்டனர்.

சுற்றுலா சென்ற நம் மக்களும் தாக்கப்பட்டார்கள்.

துப்பாக்கி! கத்தி! கட்டாரி! குண்டுகள்! இப்படிப் பல்வேறு வகையான ஆயுதங்களால் தமிழர்களின் குருதி குடிக்கப்பட்டிருக்கிறது.

எண்ணற்ற பயங்கர நிகழ்ச்சிகள் இலங்கையில் நடைபெற்றுள்ளன.

இந்த அராஜகத்தைச் செய்பவர்கள். இராணுவத்தினர் என்பதை எண்ணும்போது நமது இரத்தம் உறைந்து விடுகிறது.

நாட்டின் காவலுக்கென அமைக்கப்பெற்றுள்ள இராணுவமே இந்த அராஜகத்தைச் செய்தால் - பாதிக்கப்பட்ட மக்களுக்கு இனிமேல் யார்தான் கதி?

நினைத்துப் பார்த்தால் நெஞ்சு பதைக்கிறது; சொல்லிப்பார்த்தால் வாய் குழறுகிறது; கண்ணீர் பெருகுகிறது.

இலங்கைத் தமிழரின் நன்மையை நாடுகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி. ஆர். அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு இலங்கைத் தமிழரின் நலன் காக்கக் கோரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழரின் இன்னல்களுக்கு இரங்கலும் துக்கமும் தெரிவிக்கும் வகையில் தமிழக அமைச்சர்கள் ஆகஸ்ட் 2 ஆம் நாள் வரை ஒரு வாரத்திற்கு எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளமாட்டார்கள் என்றும், அமைச்சர்கள் - அரசு அதிகாரிகள் எல்லோரும் ஒரு வாரத்திற்கு கறுப்புச் சின்னம் அணிந்திருப்பர் என்றும், ஆகஸ்ட் 2 ஆம் நாளன்று தமிழகத்தில் முழு வேலை நிறுத்தம் நடைபெறும் என்றும் அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் வேண்டுகோளின்படி - அரசு அலுவலர்கள் - ஆடவர்; பெண்டிர் அனைவரும் கறுப்புச் சின்னத்தை அணிந்து கண்ணீர்க் கடலாகினர்.

தமிழகப் பேருந்துகளில் எல்லாம் கறுப்புக் கொடிகள் பறந்தன. பேருந்து ஓடும்போது தலை நிமிர்ந்தும், நிற்கும்போது தலை சாய்ந்தும் காணப்பட்ட அந்தக் கறுப்புக் கொடிகள் மிருகத்தனமாகக் கொல்லப்பட்ட இலங்கைத் தமிழர்களை ஒவ்வொரு கணமும் நினைவுறுத்திக் கொண்டிருந்தன.


பேருந்து, மின்சார ரயில், அலுவலகங்கள், அஞ்சலகங்கள், அங்காடிகள் - எங்கெல்லாம் மனிதக் கூட்டம் நிறைந்திருக்கின்றதோ அங்கெல்லாம் இலங்கை அராஜகம் பற்றியே பேசப்பட்டது. பலர், துன்பச் சுமை தாங்காமல் பேசமுடியாது தவித்த நிலையும் உண்டு!

ஜூலை 28 ஆம் நாளன்று அனைத்துக் கட்சிகளையும் கூட்டி ஆலோசனை நடத்தினார் மாண்புமிகு தமிழக முதல்வர்.

தமிழக முதல்வர் அவர்களும் அனைத்துக் கட்சித் தலைவர்களில் சிலரும் பிரதமர் இந்திரா காந்தி அவர்களைச் சந்தித்து நிலைமைகளைத் தெரிவிப்பதுடன், வேண்டுகோள்கள் அடங்கிய மனு ஒன்றையும் பிரதமரிடம் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

கீழ்க்கண்ட தீர்மானங்களும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

[illegible] யார்களாலும், இராணுவத்தினராலும், காவல்துறையினராலும்



# பசியைப் போக்கி படிப்பை வளர்ப்போம்!

பொருளாதார மாற்றம் உருவாகக் கல்வியிலே மாற்றம் செய்யப்படவேண்டும்.

தமிழகம் முழுவதும் சத்துணவுத் திட்டதைத் நிறைவேற்றி வருகிறோம். ஒருசில இடங்களில் தவறுகள் நடக்கலாம். அப்படிப் பட்ட தவறுகள் எந்த இடத்திலும் நடைபெறாமல் தடுக்க சத்துணவுக்கு என்று தனியாக ஓர் அமைச்சரை நியமித்து அந்த அமைச்சரிடம் பொறுப்பை ஒப்படைக்க நினைத்திருக்கிறேன்.

எங்களுக்கு மக்கள் வாக்களித்தனர். அதனால் அமைச்சர்கள் ஆனோம். நாங்கள் பதவியில் இருப்பது எங்களுக்கு வசதிகளைத் தேடிக்கொள்ள அல்ல, எங்களுக்கு வாக்களித்த மக்களாகிய உங்களுக்கு வசதியை ஏற்படுத்தித் தரத்தான்.

சில நாடுகளில் புரட்சி நடப்பதாகச் சொன்னார்கள். வேலை இருந்தால் ஒருவேளை உணவாவது கிடைக்கும். இல்லாவிட்டால் பட்டினி தான். பட்டினிதான் புரட்சிக்கு வழி வகுக்கிறது. நக்சலைட்டுகள் பற்றி சிந்திக்க வேண்டும். சில சமயம் அவர்களைச் சட்டத்தைக் கொண்டு, அதிகாரத்தைக் கொண்டு அடக்குகிறோம்.

பட்டின் இருக்க முடியாத நிலை உருவாகும் போது கொள்ளை அடித்தாவது வாழ வேண்டும் என்பதால் நக்சலைட்டுகள் உருவாகிறார்கள். இதைத் தடுக்கச் சட்டம் இருந்தாலும் மற்றொரு முறையாக வேலையற்றவர்களுக்கு வேலையை உருவாக்கித்தர அரசு முயற்சித்து வருகிறது. போலீஸ் கொண்டு அடக்குவோம் எனச் சொல்லும் அரசு அல்ல இது.

படித்துவிட்டு பள்ளியைவிட்டு வெளியே வரும் மாணவனிடம் உனக்கு என்ன வேலை தெரியும்? என்று கேட்டால் இனிமேல் பாலிடெக்னிக் போய்த்தான் படிக்க வேண்டும் என்று கூறும் நிலை உள்ளது.

படிக்கும் கல்வி அறிவு வளர்ச்சிக்கு உதவி செய்ய வேண்டும். அத்துடன் வாழ்வதற்கு ஒரு தொழிலையும் கற்றுத் தருவதாக இருக்க வேண்டும். இதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தால் தான் நாடு சுபிட்சம் அடையும். திருடுவது, கொள்ளை அடிப்பது என்பது பழக்கத்தினால் ஏற்படுவது என்பது வேறு. இதைத் தவிர வேறு வழி இல்லை என்பதால் இதைத் தான் செய்தாகவேண்டும் என்ற நிலை வேறு. வருமானத்திற்கு வேறு வழி இல்லாதவர்களுக்கு நாம் வருமானத்திற்கான வாய்ப்பினை உருவாக்கித் தரவேண்டும்.

வாரத்தில் 6 நாட்கள் பள்ளி செல்லும் மாணவன் அதில் 4 நாட்கள் பாடங்களைப் படிக்க வேண்டும். 2 நாட்கள் தொழில் பயிற்சி பெற வேண்டும்.

**இத்தகைய பயிற்சியைப் பெற வேண்டுமானால் அந்த மாணவனுக்கு உணவு கொடுக்க வேண்டும். இதற்கு என்ன செய்வது? இதற்கும் திட்டம் இருக்கிறது.**

10 வயது முதல் 15 வயது வரை உள்ளவர்களுக்கும் சத்துணவு போடும் திட்டத்தை நீடிக்கலாமா எனக் கருதுகிறேன்.

தொழில் கற்பதற்குச் சாப்பாடு பாரமாக இருக்கக்கூடாது, அப்படி வருமானால் ஏதோ ஒருவேளை உணவுக்காகத்தான் காத்திருக்க வேண்டும். அந்த வகையில் தொழில் கல்வி ஆரம்பிக்கப்பட வேண்டும். அது விவசாயமானாலும் அல்லது தொழிற்சாலையில் பணியாற்றுவதாக இருந்தாலும், இந்தத் திட்டத்தோடு சேர்ந்து உருவாக்கினால் பள்ளிக் கூடத்தை விட்டு வெளியே வரும்போது வேலை காத்திருக்கிறது என்றால் தான் நாடு முன்னேற முடியும். இது எனது திட்டவட்டமான நம்பிக்கை.

ஆபிரகாம்லிங்கன் தொழிலாளியாக இருந்து பின் வழக்கறிஞராகி அரசியலுக்கு வந்து பின் ஜனாதிபதி ஆனவர். இது எப்படி முடிந்தது? அவர் வழக்கறிஞர் படிப்பு படித்த மொழி ஆங்கிலம். அவருக்குத் தாய்மொழியும் ஆங்கிலம். நம் நாட்டில் அவ்வாறில்லை.

பள்ளிக் கல்வி தமிழில் பயின்று பின் சட்டக் கல்லூரிக்குப் போகும் போது ஆங்கிலத்தில் கற்கும் நிலை. தாய்மொழி (தமிழில்) யில் கல்வி கற்று, வழக்கறிஞராக முடியும் என்ற நிலையை உருவாக்க நான் தீவிரமாக இருக்கிறேன். தமிழில் எதையும் சாதிக்க முடியும்.

டாக்டர் படிப்பு படிப்பவர் ஒவ்வொருவருக்கும் அரசு சுமார் 1.50 இலட்சம் ரூபாய் செலவிடுகிறது. அவர்கள் படித்துமுடித்துவிட்டு மருத்துவரான பிறகு அரசு ஊதியம் பெறுகிறார்கள். அதில் சிலர் புகழ் பெறுகிறார்கள். நான் அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்ளப் போகிறேன். உங்களைப் படிக்க வைத்தவர்கள் மக்கள். அவர்கள் தந்த வரிப் பணத்தில் இருந்துதான் உங்களுக்குச் செலவிடப்படுகிறது.

அதில் இருந்து படித்துப் பயன்பெற்ற நீங்கள் உங்கள் வருமானத்தில் ஒரு தொகையை இனிமேல் படிக்கும் மாணவர்களுக்கு, நீங்கள் விரும்பும் பிரிவுக்குக் கொடுங்கள் என்று கேட்கப் போகிறேன்.

மக்கள் வரிப்பணத்தில் படிப்பவர்கள் பின்னால் மக்களுக்கு நன்றி சொல்லும் வகையில் நீங்கள் படித்த கல்லூரிக்கு ஒரு தொகையை ஒதுக்கித் தந்தால் அது நீங்கள் நாட்டிற்குச் செய்யும் தொண்டு

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றார் அமரர் அண்ணா. அந்தச்

## மாண்புமிகு முதல்வர்

சிரிப்பில் சக்தி இருப்பதை அண்ணா ஒப்புக் கொண்டுள்ளார் என்பதே என் கருத்து.

குழந்தையும் தெய்வமும் ஒன்று என்பார்கள். குழந்தைகள் ஆரோக்கியமாக வாழ வேண்டும். தாய்மார்கள் குழந்தைகளுக்குச் சாப்பிடுமுன் கையை நன்றாகக் கழுவிவிட்டு சாப்பிடும் பழக்கத்தைக் கற்றுத்தர வேண்டும். குழந்தைகளை ஜாதி மத பேதங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக வளர்க்க வேண்டும்.

காட்டிலிருக்கும் யானைகள் நான்கைப் பிடித்து ஒன்றைத் தமிழ்நாட்டிலும், ஒன்றைக் கர்நாடகத்திலும், ஒன்றைக் கேரளாவிலும், ஒன்றை ஆந்திராவிலும் அந்தந்த மொழி பேசும் மாவுத்தர்களால் வளர்த்தால்,



நடத்தப்படும் வன்முறைச் செயல்களுக்கு ஆளாகி, உயிர் இழந்த அனைவருக்கும் மரியாதை செய்கிற முறையில் இந்தக் கூட்டம் 2 நிமிடம் அமைதியாக மவுனத்தை மேற்கொண்டது. உயிர் இழந்தவர்களின் குடும்பத்துக்கும், படுகாயமுற்று வீடு இழந்து, உடைமைகளை இழந்து வருந்தும் அந்த மக்களுக்கு இக் கூட்டம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

2) இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்புக்காக ஆகஸ்ட் 2-ஆம் தேதி நடைபெறும் பொது வேலை நிறுத்தத்துக்குத் தமிழக மக்கள் அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

3) இலங்கைத் தமிழர்களின் உயிரையும். உடைமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பினை ஏற்படுத்தவும், படுகொலைகளைத் தடுத்திடும் முயற்சிகளை மேற்கொள்ளவும் இலங்கையில் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் இனத்தைக் காத்திடவும் சிறிதும் தயக்கமின்றி இந்திய அரசு முன்வர வேண்டும் என்று இந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

4) இலங்கையில் கொழும்பு போன்ற இடங்களில் ஆதரவற்ற நிலையில் அகதிகளாக ஆயிரக் கணக்கானவர்கள் வாடுகிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பணியை இந்திய அரசு உரிய வகையில் மேற்கொள்ள வேண்டும் என்று இந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.



இலங்கையில் நடைபெற்ற கலவரங்கள் குறித்துக் கவலை அடைந்த மாண்புமிகு பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இலங்கை அதிபர் திரு ஜெயவர்த்தனேயுடன் தொலைபேசியில் பேசினார். இலங்கையில் உள்ள நிலைமையை நேரில் கண்டறிவதற்காக மாண்புமிகு இந்திய வெளியுறவு அமைச்சர் திரு பி.வி.நரசிம்மராவ் அவர்களை அனுப்பி வைப்பதாக இலங்கை அதிபரிடம் குறிப்பிட்டார்.

இந்த விவரத்தை நாடாளுமன்றத்தில் தெரிவித்த மாண்புமிகு இந்தியப்பிரதமர் அவர்கள், இந்திய மக்களின் - குறிப்பாக - தென்னக மக்களின் ஆழ்ந்த கவலையையும், நாடாளுமன்ற-மாநிலங்கள் அவை உறுப்பினர்களின் உணர்ச்சிகளையும் இலங்கை அதிபருக்கு எடுத்துச் சொன்னதாகக் கூறினார்.

இலங்கையில் முக்கியமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம்களில் உணவுப் பொருட்கள் போன்றவை கிடைக்கவில்லை என்று இந்திய அரசுக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும், இந்த வகையில் உதவி கோரி அனைத்து நாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தை இலங்கை அதிபர் அணுகலாம் என்றும் அவருக்கு ஆலோசனை கூறியதாகவும், இது விஷயத்தில் இந்தியா அரசுத் துறை வாயிலாகவோ தொண்டு நிறுவனங்களின் மூலமாகவோ இலங்கை அரசுக்கு உதவமுடியும் என்று தெரிவித்ததாகவும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் குறிப்பிட்டார்.




மாண்புமிகு இந்திய வெளியுறவு அமைச்சர் திரு நரசிம்மராவ் அவர்கள் 28.7.83 இரவு இந்திய விமானப் படையைச் சேர்ந்த விமானத்தில் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றார். 29ஆம் தேதி இலங்கை அதிபருடன் பேசிவிட்டு, பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு, இந்தியப் பிரதமரிடம் செய்தி தெரிவிக்கத் திரும்பினார்.

மாண்புமிகு இந்தியப்பிரதமர், மாண்புமிகு தமிழக முதல்வர் முயற்சிகளால் இலங்கைத் தமிழர்களின் இன்னல்கள்! நீங்கட்டும்

## இலங்கைத் தமிழர் பிரச்சினையை

## உலகின் கவனத்திற்குக் கொண்டு வருக!

## பிரதமருக்கு முதல்வர் வேண்டுகோள்!

இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் அங்கே ஏற்பட்டுள்ள பதட்ட நிலையையும் உலகின் கவனத்திற்குக் கொண்டுவரும் நிலையில் இந்தப் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபையில் எழுப்ப வேண்டும் என்று இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். தலைமை அமைச்சருக்கு முதல்வர் அவர்கள் அனுப்பியுள்ள "டெலக்ஸ்" செய்தியில்,

"இலங்கையில் நடக்கும் நிகழ்ச்சிகள் குறித்து இந்திய அரசு கவலை தெரிவித்திருப்பதற்காக மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இலங்கையில் உள்ள தமிழர்கள் ஈவு இரக்கமற்ற முறையில் கொல்லப்படுகின்றனர். தமிழர்கள் வாழும் பகுதியில் தீவைப்பு, கலவரம் போன்றவை நடைபெறுவதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அவை பெரிதும் கவலை அளிப்பதாக உள்ளன.

இலங்கையில் உள்ள சிங்கள வெறியர்களாலும், ராணுவத்தினராலும் கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறைச் செயல்கள் இங்குள்ள மக்களிடையே ஆத்திரத்தையும், கொதிப்பையும் ஏற்படுத்தி வருகின்றன. கொலைகாரர்களின கொடூரமான தாக்குதல்களிலிருந்து அப்பாவித் தமிழர்களைக் காப்பாற்றத் தக்க நடவடிக்கை எடுங்கள். இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும், அங்கு ஏற்பட்டுள்ள பதட்ட நிலையையும் உலகின் கவனத்திற்குக் கொண்டுவரும் வகையில் இந்தப் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபையில் எழுப்ப நடவடிக்கை எடுத்தால் மிகவும் நன்றியுடையவர்களாக இருப்போம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கைத் தமிழர்கள் படுகொலைக்குத் துக்கம் - கறுப்புச் சின்னம் அணிய முடிவு! தமிழக அமைச்சரவை தீர்மானம் (27-7-83)

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதற்குத் துக்கம் தெரிவித்து ஆகஸ்டு 2-ஆம் தேதி வரை அமைச்சர்கள், அரசு அலுவலர்கள், அரசுத் துறையைச் சேர்ந்தவர்கள், பணியாளர்கள் அனைவரும் கறுப்புச் சின்னம் அணிவது என்று தமிழக அமைச்சரவை முடிவு எடுத்திருப்பதாக மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி ஆர். அவர்கள் தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இலங்கையில் சிறுபான்மையோராக வாழும் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் அடியோடு பறிக்கப்பட்டு இராணுவத்தினராலும், வன்முறையாளராலும் தமிழர்கள் கண்ட கண்ட இடங்களில் படுகொலைக்கு ஆளாகிறார்கள் என்ற செய்தி மனிதாபிமானம் கொண்ட மக்களின் நெஞ்சத்தைக் குமுறவும், வெடிக்கவும் வைத்துள்ளது.

இந்தச் செய்திகளைக் கேட்டவுடனேயே தமிழக மக்களின் நெஞ்சங்கள் பதைபதைக்கின்றன. இலங்கையில் தமிழர்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஏற்பட்டுள்ள கொடூர நிலையை அறிந்த தமிழக அமைச்சரவை ஆற்றொணாத் துயரமும் துக்கமும் கொள்கிறது. அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இரண்டு நிமிடம் மவுனம் கடைப்பிடித்தது.

இலங்கைப் பிரச்னையில் ஐக்கிய நாடு அவையின் மூலம் முறைப்படியான முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று இந்தியத் தலைமை அமைச்சர் மாண்புமிகு திருமதி இந்திராகாந்தி அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது. இலங்கை வாழ் தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையிலும், அவர்களுக்கு முழு வாழ்வு தரவேண்டும் என்று வற்புறுத்தவும் தமிழகம் தழுவிய அளவில் மேற்கொள்ளவிருக்கும் பொது வேலைநிறுத்தம், கதவடைப்பு ஆகஸ்டு 2-ஆம் நாள் நடைபெறவிருப்பதால் அதுவரை அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் நிறுத்தி வைக்கப்படுகின்றன.

ஆகஸ்ட் 2-ஆம் நாள் வரை அமைச்சர் பெருமக்களும், அரசு அலுவலர்களும், பணியாளர்களும் கறுப்புச் சின்னம் அணிந்து துக்கம் தெரிவிப்பார்கள். அதுபோல் தமிழகப் பொதுமக்களும் கறுப்புச் சின்னம் அணியுமாறு அனைவரையும் அமைச்சரவை கேட்டுக்கொள்கிறது.

எந்த மொழி கற்பிக்கப்படுகிறதோ அதைத் தான் அந்த யானை புரிந்து நடக்கும். நெருக்கடியான நிலைகளான தீ விபத்து போன்றவைகள் ஏற்படும்போது ஜாதி, மதம் பார்ப்பதில்லை. அல்லது கடையில் சென்று அரிசி வாங்கும்போது எங்கள் ஜாதிக்காரர் உற்பத்தி செய்த அரிசி கொடு என்று கேட்டு வாங்குவதில்லை.

சென்னையில் பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இரசாயன மருந்துப் பொருட்கள் ஒரு டாக்டர் வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது.

இது அரசு பொது மருத்துவமனையிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் முறையான கணக்கும் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு மதிப்புள்ள இரசாயன மருந்துப் பொருட்களை அவர்கள் எடுத்துக்கொண்டதால் எத்தனைப் பேர்நோய் தீராமல்வெளியே போய் இருக்கிறார்கள். இதற்கெல்லாம் கடும் தண்டனை வழங்கும் வகையில் சட்டம் திருத்தப்படவேண்டும் எனக் கருதுகிறேன். இதற்கெல்லாம் உங்களின் ஆதரவு வேண்டும்

[மாண்புமிகு முதல்வர் அவர்கள் 28.8.83 அன்று பாப்பாக்குறிச்சி சத்துணவுக்கூடம் திறப்பு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து]

## இந்த இதழுடன்



இலவச

இணைப்பு

## சமுதாயப் புரட்சித் திட்டத்தின் சாதனை



## பெரியார் ஒருவர்தான்!

விசித்திர வைதீகர்களை, வீதி சிரிக்கச் செய்தார் சாக்ரடீஸ்! உலகமுணராதவர்களுக்கு அது உருண்டை என்று உரைத்து, உதை பட்டார் கலிலியோ! வைதீகத்தின் மடமையை வாட்டினார் வால்டேர்! மக்கள் மன்றத்துக்கு மதிப்புத் தரவேண்டுமென்றார் ரூசோ! வேத் புத்தகத்தை விற்று, விபசார விடுதிக்குப் பணம் தரும் போகிகளைக் கண்டித்தனர் விக்ளிப், ஜிவிங்கிலி, மார்ட்டின் லூதர் போன்றார், அடிமைகளை விடுவித்தார் ஆபிரகாம் லிங்கன்; முதலாளிகளின் கொடுமையை எடுத்துரைத்தார் காரல்மார்க்ஸ்; அவர்களுக்காகப் போராடினார் லெனின்; சீனரின் சிறுமதியைப் போக்கினார் சன்-யாட்-சென்; துருக்கியரின் மதி தேய்வதைத் தடுத்தார் கமால்; இறைவன் பெயர் கூறி, ஏழையை வஞ்சித்தவரைச் சந்தி சிரிக்க வைத்தார் இங்கர்சால்; பேதமையைப் போக்கும் பணியை மேற்கொண்டார் பெர்னாட்ஷா. வாழ்க்கையிலே வாட்டம், வேதனை, வறுமையின் கொடுமை; வஞ்சகத்தின் ஆட்சி-இவைகளிருப்பதைப் படம் பிடித்துக் காட்டினர், கோர்க்கி, டர்கினாவ், டாஸ்டாவஸ்கி, சிங்களேர் போன்ற எண்ணற்றவர்கள். இவர்களும், இன்னமும் எண்ணற்றவர்களும் தோன்றித் தொல்லைப் பட்டு, தூற்றப்பட்டு, கொடுமைக்கு ஆளாகி மனித சமாஜத்தின் மறுமலர்ச்சிக்காக, கொள்கைகளை, புதுக்கோட்பாடுகளை, எவர்க்கும் எதற்கும் அஞ்சாது எடுத்துக்கூறி, பாமரனுக்காகப் போராடியதால், இன்று பல்வேறு நாடுகளிலே மக்களின் மனம் விடுதலை பெற்றது. அடிமை மனப்பான்மை அகன்றது. அதனால், அங்கு, ஒரு நாட்டை இன்னோர் நாடு, அடக்கமுடியவில்லை! அடக்கினால், எரிமலை கக்குகிறது, மக்கள் மனமென்னும் கடல் பொங்கி வழிகிறது. புரட்சிப் புயல் வீசுகிறது! அதன் முன்பு எந்தக் கொடியவனாலும் நிற்க முடியவில்லை. இங்கே நடக்கும் கொடுமைகளைக் கண்டித்து, எடுத்துக் கூறி, எதிர்த்தவர்-பெரியார் ஒருவர்தானே!

—பேரறிஞர் அண்ணா





# வாழும்போது மட்டும் பேதாபேதம் ஏன்?...

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர்

## திரு.க. இராசாராம்

தந்தை பெரியாருக்கு இன்று 105வது ஆண்டு பிறக்கிறது. இலங்கையிலே நடைபெற்றுவிட்ட சம்பவங்கள் இன்று அவர் நம்மிடையே வழிகாட்டுவதற்கு இல்லையே என்ற எண்ணம் என் உள்ளத்திலே மேலோங்கிக் கிடக்கிறது. என் தொண்டு எல்லாம் நம் மக்கள் உலக மக்களைப் போல் சரி சமமாக வாழவேண்டும் என்று அயராது பாடுபட்டவர் தந்தை பெரியார்.

''என்னைப் பொறுத்தவரையில் ஒரு மனிதன் யாராக இருந்தாலும் தமிழர் பற்றுடையவர் என்று கருதினால் நான் அவருக்கு அடிமையாவேன்''. ''குணம் குடிகொண்டு உயிருக்கு உயிராகத்தான் இல்லாவிடில் அவர் யாரோ என்று கருதுகிறவனாவேன்'' என்பதைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்லிவிட்டுப் போனவர் தந்தை பெரியார் அவர்கள் ஆவார்கள்.

இலங்கையில் சென்ற மாதம் பல இனப் படுகொலைகள் நடந்ததை நாடு நன்கு அறியும். பல பத்திரிகைகள் பலவற்றை விவரித்து எழுதியிருந்தன. நான் படித்த சம்பவங்களில் ஒரு சம்பவம் என்னால் மறக்க முடியாததாக இன்னமும் உள்ளது. கொழும்பிலேயிருந்த நான்கு மாடிக் கட்டடத்தில், 4-வது மாடியிலே இருந்த அலுவலகத்திலே இருந்த நான்கு தமிழ் இளைஞர்களைக் கீழே வரும்படி அங்கேயுள்ள இராணுவத்தினர் கட்டளையிட்டார்கள். அவர்கள நால்வரையும் அந்தக் கட்டடத்திற்கு முன்னாலே நிறுத்தி ஒருவருக்கொருவர் தமிழிலே பேசுங்கள் என்று கட்டளையிட்டார்கள். அவர்கள் தமிழிலே பேசியதைக் கேட்டுச் சிரித்துவிட்டு நால்வரையும் சுட்டுக் கொன்றுவிட்டு அந்தப் பக்கம் போனார்கள். அந்தச் செய்தியை என் நண்பர் ஒருவர் -அங்கேயிருந்து வந்தவர் வேதனையோடு எடுத்துச் சொன்னார்கள். நால்வரும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள் அல்ல. நால்வரும் உறவுக்காரர்கள்கூட அல்ல. நால்வரும் ஒரே அலுவலகத்தில் வேலை செய்தவர்கள். நால்வரும் தாய் மொழியாம் தமிழைப் பேசியவர்கள். இந்த நால்வரும் தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். ஆக ஒரு கலவரம் ஏற்படும் போது, ஒரு இனக்கலவரம் ஏற்படும்போது, அங்கே தமிழ்ச் சமுதாயத்திற்குள்ளே இருக்கிற ஜாதி எந்தப் பாதுகாப்பையும் அளிக்கவில்லை என்பது இந்தச் சம்பவத்தின் மூலமாக நமக்குத் தெரியவருகிறது. வந்த கொலைகாரர்களும் அவன் தமிழ் பேசுகிறானா என்று சோதித்தார்களே தவிர, அந்த நேரத்திலே நீ உயர்ந்த ஜாதி, நீ தாழ்ந்த ஜாதி, எனவே நீ அந்தப் பக்கம் போ, அவன் இந்தப் பக்கம் போகட்டும் என்றார்களா என்றால் இல்லை.

# வறட்சியை வென்று வாகை சூடுவோம்



**மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்**
**டாக்டர் கா. காளிமுத்து**

**வா**னத்தையே கூரையாக, வரப்பையே தலையணையாக, வயலையே பஞ்சணை மெத்தையாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள் தமிழக உழவர்களில் பலர்!

நெற்றி வியர்வை நிலத்திலே விழ, காலமெல்லாம் உழைத்து உழைத்து, ஒட்டிய வயிறோடும், ஒளியிழந்த கண்களோடும், குழி விழுந்த கன்னத்தோடும், கூனிக்குறுகிய முதுகோடும் தமிழகச் சிறு உழவர்களும், குறுஉழவர்களும் வாழ்கிறார்கள்.

வறண்ட தலையோடு, வயிற்றிலே பசியின் காரணமாக எழும் எரிச்சலோடு, கட்டிக் கொள்ள வேட்டியின்றி, ஒரு சாண் துணியைக் கட்டிக் கொண்டு இரவும் பகலும் உழைத்தும் ஒரு நாளைக்கு ஒருவேளைகூட வயிறாரச் சாப்பிட முடியாத நிலையிலே வாழ்ந்து வருகிறார்கள் வேளாண்மைத் தொழிலாளர்கள்!

இதையெல்லாம் உணர்ந்தே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து பல்வேறு சலுகைகளை உழவர்களுக்கு அளித்து வந்துள்ளார்கள். அந்தச் சலுகைகளைப் பயன்படுத்தி உழவர்கள் பயன்பெற வேண்டிய நேரத்திலே வரலாறு காணாத வறட்சி தோன்றி, கடந்த இரு ஆண்டுகளாகத் தமிழக உழவர்களைச் சீர்குலைய வைத்துவிட்டது.

ஆயினும் வறட்சியைக் கண்டு நிலை குலைந்து விடாமல் தமிழ்நாடு அரசு வறட்சித் துயர்த் துடைப்புப் பணிகளைப் போர்க்கால நடவடிக்கைகளைப்போல் கடந்த இரு ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் இடையறா முயற்சியைக் கண்ட இயற்கை அன்னை, மனமிரங்கி புன்முறுவல் பூக்கத் தொடங்கி விட்டாள். அதன் பயனாய் மழை பொழியத் தொடங்கிவிட்டது! காவிரியன்னையும் கருணை காட்டத் தொடங்கியுள்ளாள்! நடப்பு ஆண்டில் நல்ல மகசூல் பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் உழவர் பெருமக்களும் ஆர்வத்தோடு உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை மேலும் ஊக்குவிக்க தமிழ்நாடு அரசு பல சலுகைகளை அறிவித்துள்ளது! மேலும் பல சலுகைகளை விரைவில் அறிவிக்கவிருக்கிறது.

வறட்சித் துயர் துடைப்புக்காக ரூபாய் 217.73 கோடி அளவிலான திட்டம் தயாரித்து மைய அரசுக்கு அனுப்பி வைத்தோம். மைய அரசு 1982-83-ஆம் ஆண்டுக்கு ரூ. 18.39 கோடியும், 1983-84 ஆம் ஆண்டுக்கு ரூ.45.33 கோடியும் ஆக மொத்தம் ரூ.63.72 கோடியை ஒதுக்கியது. ஆனால் புரட்சித் தலைவர் அரசு இதுவரை வறட்சித் துயர்துடைப்புக்காக ரூ. 81.87 கோடியைச் செலவிட்டுள்ளது. இதைக்கண்ட மைய அரசு அண்மையில் மேலும் ரூ. 4.64 கோடியை அளித்துள்ளது. இத்தொகை முழுவதும் சிறு விவசாயிகளுக்கும் குறு விவசாயிகளுக்கும் விதை, இரசாயன உரம் போன்ற இடுபொருள்களை மானிய விலையில் வழங்கச் செலவிடப்படும்.

திருந்திய வேளாண்மைக் கருவிகளை உழவர் பெருமக்களிடையே பரவச் செய்வதற்காக மானிய விலையில் கருவிகளை வழங்க 3 ஆண்டுகளுக்கு ரூ. 44.76 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



சிறு மற்றும் குறு விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டும், வேளாண் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடனும் மத்திய அரசு உதவியுடன் ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளோம். இத்திட்டத்திற்காக 1983-84 ஆம் ஆண்டிற்காகும் மொத்தச் செலவான ரூ. 18.85 கோடியை மத்திய அரசும் மாநில அரசும் சமமாகப் பங்கேற்கும்.

இச்சிறப்புத் திட்டம், மானிய உதவியுடன் சிறு பாசன வசதிகளைப் பெருக்கல், பழம் மற்றும் எரிபொருள் தரும் மரங்களை உண்டாக்க நாற்றுகளை இலவசமாக வழங்குதல், எண்ணெய்வித்து மற்றும் பயறு உற்பத்திக்கான விதை மற்றும் உரம் அடங்கிய 'மினிகிட்ஸ்' எனப்படும் சிறு பைகளை அதிக அளவில் இலவசமாக விநியோகிக்கவும், நில மேம்பாட்டிற்கு உதவித்தொகை வழங்கவும் வழிவகை செய்து, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவுகிறது. இத்திட்டம் தற்போது தமிழகத்தில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்ட முறையில் செயல்படுத்தப்படும். இதற்காக ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூபாய் ஐந்து இலட்சம் பண ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வளர்ச்சித் திட்டத்தின் மூன்று அம்சங்களில் ஒன்றின் கீழ் அடங்கியுள்ள (1) பயறு மற்றும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியின் பொருட்டு இலவசமாக விதை மற்றும் உர விநியோகம் செய்தல் (2) நில மேம்பாட்டுத் திட்டம் (3) பணியாளர்கள் சம்பளம் ஆகிய இனங்களின் கீழ் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது போன்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் 1983-ஆம் ஆண்டு கரீப் (1-4-83 முதல் 30-9-83 வரை) பருவத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 'மினிகிட்' வழங்குதல் பொருட்டு எண்ணெய்வித்து மற்றும் பயறு வகைப் பயிர்களுக்காக ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ. 30,000 செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள நிதியானது எண்ணெய்வித்துத் துறை மற்றும் வேளாண்மைத் துறையால் செலவு செய்யப்படும். எண்ணெய்வித்துகள் குறித்த மின்கிட் விநியோகத்தின் பொருட்டு ரூ. 25,000 மும், பயறு வகை 'மினிகிட்' விநியோகத்தின் பொருட்டு ரூ. 5,000மும் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 37,000 பயறு வகை 'மினிகிட்டு'கள் விநியோகிக்கவும், 29,744 எண்ணெய்வித்து 'மினிகிட்டு'கள் விநியோகிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 286 வளமுள்ள வட்டாரங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 104 எண்ணெய்வித்து 'மினிகிட்' விநியோகிக்கவும், 377 வட்டாரங்களில் பயறு வகை 'மினிகிட்' வட்டாரத்திற்கு 100 விநியோகிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலும் 'மினிகிட்' விநியோகம் செய்வதில் நிலக்கடலைக்காக 74 'மினிகிட்', எள்ளிற்காக 20 'மினிகிட்' மற்றும் சூரியகாந்திக்கு 10 'மின்கிட்' வீதம் விநியோகிக்கவும், பயறு வகை மினிகிட்டுகள் 100 எண்ணிக்கை விநியோகிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் எண்ணெய்வித்துகள் மற்றும் பயறு வகைப் பயிரில் இது போன்று பெரிய அளவில் மினிகிட் விநியோகம் செய்வதற்கு ஒரு திட்டத்தை எடுத்துக் கொண்டதன் நோக்கம் உயர் ரக வித்துகளைப் பயன்படுத்துவதுடன், அவற்றிற்குத் தேவையான உரமிடுதல், இப்பயிர்களில் அதிக மகசூல் பெறுதல் இவையனைத்தும் சேர்ந்து முடிவில் உற்பத்தியினை அதிகரிக்கும் நிலையினை மக்களுக்குத் தெரியப்படுத்துதலும் ஆகும்.

1982-83-ஆம் ஆண்டில் பயறு வகை மினிகிட்டுகள் 1325-ம், எண்ணெய்வித்துப் பயிரில் 2395 மினிகிட்டுகள் என்ற அளவில் மிகவும் குறைந்த எண்ணிக்கைகளில்தான் விநியோகிக்கப்பட்டன. சிறுபாசன மானியங்கள் வழங்குதல், பழம் மற்றும் எரிபொருள் தரும் மரங்கள் நடுதற்கான நாற்றுகள் விநியோகிப்பதற்கான மானியம் வழங்குதல், நில மேம்பாட்டு மானியத் தொகை வழங்கல் ஆகிய இதர திட்டங்கள் குறித்து விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும்.

மேலும் கன்றுகள் விநியோகம் செய்தல், எரி பொருள் மரங்கள் நடுதல் ஆகிய இனங்களின் கீழ் ஒவ்வொரு வட்டாரத்திற்கும்



ஆகவே தமிழ்ச் சமுதாயம் இன்றைக்குப் பெரியார் வழியில் சிந்தனையை வெகு வேகமாகச் செலுத்தியாகவேண்டும். எதிரி நம்மை இனம் காணும்போது மொழியால்தான் இனம் காண்கிறான். நாம் மட்டும் ஏன் பேதாபேதங்களாலே பிளவுபட்டுக் கிடக்க வேண்டும் என்பதையும் எண்ணிப் பார்ப்பதற்கு உரிய வேளை இன்றைக்கு வந்து விட்டது.

தந்தை பெரியார் சுயமரியாதைத் திருமணத்தை நாடு முழுவதும் அறிமுகப்படுத்தினார். திருமணத்திற்கான பல்வேறு கருத்துகளை அவர்கள் ஆயிரக்கணக்கான திருமணங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ''சுயமரியாதைத் திருமணம் என்பது அறிவு ஆராய்ச்சியின் காரணமாக ஏற்பட்டது'': ''திருமணம் என்பது மணமக்களை மட்டும் பொறுத்தது அல்ல, நாட்டின் முன்னேற்றத்திலே தொடர்பு கொண்டிருக்கிறது''; ''மணமக்கள் எப்படி இருக்கவேண்டும்'' ''வாழ்க்கைத் துணை ஒப்பந்தத்தின் அவசியம் என்ன'' என்றெல்லாம் நமக்கு எடுத்துச் சொல்லி விட்டுப் போயிருக்கிறார்கள்.

பெரியார் இந்தச் சுயமரியாதைத் திருமண முறைகளை நாட்டுக்கு அறிவித்தபோது சில குடும்பங்களில் மூன்று மாத காலம்கூட திருமணம் நடந்தது. அந்தக் காலத்திலேயும் இது உண்டு. அதற்குப்பிறகு 5 நாட்கள் திருமணம் என்பது மிகச் சாதாரணமாக நாட்டிலே வழக்கத்திலே இருந்துகொண்டு வந்தது. சுயமரியாதைத் திருமணத்தை வெகு வேகமாகப் பரப்பத் தொடங்கிய பிறகு திருமணம் சில நிமிடங்களிலே முடியவும், திருமணக் காரியங்கள் பூராவும் ஒரே நாளில் முடிபவுமான சூழ்நிலை வெகுவேகமாக நாட்டிலே பரவியது.

பொருளாதாரச் சிதைவுகளும், போக்குவரத்து வசதிகளும் கல்யாண மண்டபங்களின் வாடகையும் பெருகிய பிறகு பெரியார் சொன்ன முறைகளை எல்லா சமுதாயத்துக்காரர்களும் மெதுமெதுவாகப் பின்பற்றி 5 நாட்கள் திருமணத்தை ஒரே நாளில் முடிக்கிற நிலைக்குத் தாங்களாகவே வந்து விட்டார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன் நாகரசம்பட்டியில் பெரியார் அவர்கள் ஒரு திருமணத்திலே சற்றுச் சலிப்போடு பேசினார்கள். ஏன் அந்தச் சலிப்பு என்றால் நாகரசம்பட்டிக்குப் பல் முறை வந்திருந்தாலும், நடைபெறுகிற திருமணங்கள் சுயமரியாதைத் திருமணங்களாகவே நடக்கிறது என்ற மகிழ்ச்சி இருந்தாலும் தன் தலைமையில் அத்தனை திருமணங்களும் ஒரே ஜாதிக்காரர்களுக்குள்ளே நடக்கிறது; இன்னும் நீங்கள் இப்படியே இருப்பீர்களானால் என்றைக்குத்தான் இந்தத் தமிழ்ச் சமுதாயம் முன்னேறப் போகிறது என்று சலித்துக் கொண்டார்கள். இன்றைக்கு அந்த ஊரிலேயிருந்த பல இளைஞர்கள் வேறு ஜாதிகளில் திருமணங்களைச் செய்து கொள்ள முன் வந்து அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கலப்புத் திருமணங்கள் இன்றைக்கு எல்லா ஜாதிகளிலேயும் நடைபெறுவதை நான் பார்த்துக் கொண்டு வருகிறேன். முன்னாலே கலப்புத் திருமணங்கள் பெரும்பாலும் காதல் திருமணங்களாகவே இருந்தன. இன்றைக்கு அவை பெற்றோர்கள் பார்த்து ஏற்பாடு செய்யப்பட்ட திருமணங்களாக அமைவதை நான் காண்கிறேன். அல்லது பெற்றோர் சம்மதத்துடன் நடைபெறுகிற திருமணங்களாக இருப்பதையும் நான் காண்கிறேன்.



குறிப்பாக, கொங்கு வேளாளக் கவுண்டர் சமுதாயத்தினுடைய ஜாதித் தலைவர் என்பவர் பழைய கோட்டைப் பட்டக்காரர் அவர்கள் ஆவார்கள். அவர்கள் வீட்டிலேயே இன்றைக்கு வேறு ஜாதிப் பெண்ணை அவருடைய மகன் தந்தையின் அனுமதியோடு மணந்து, பேரப் பிள்ளைகளும் வளர்ந்து கொண்டிருக்கிறகாட்சியை நான் காண்கிறேன்.

தமிழ்நாட்டில் மிகப்பெரிய மோட்டார் பாகங்களை உற்பத்தி செய்கிற நிறுவனம் சிம்சன் கம்பெனி. திரு சிவசைலம் அதன் நிர்வாகி. அவர்கள் ஐயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவருக்கு இரண்டே மகள்கள். அவர் தன்னுடைய நிறுவனங்களை எதிர்காலத்தில் நடத்தத் தகுந்த மாப்பிள்ளையைத் தேடி, ஐயங்கார் வகுப்பைச் சார்ந்த டி.வி.எஸ்.சீனிவாசன் அவர்களுடைய மகன் வேணுகோபாலுக்குத் தன்னுடைய மகளை எல்லோர் முன்னிலையிலும் மணம் முடித்து வைத்தார்கள்.

அதைப்போலவே தமிழகத்தில் மிகப் பழைய அச்சகத் தொழில் செய்பவர்கள் ஹோ அண்ட் கம்பெனி என்ற புகழ்பெற்ற ஆயிர வைசிய சமுதாயத்தைச் சார்ந்த எம்பெருமான் குடும்பத்திற்குச் சொந்தமானதாகும். அவருடைய தம்பி திரு சேதுராமன், தன் மகனுக்கு முழுச் சம்மதத்தோடு ஒரு ஐயர் வகுப்பைச் சார்ந்த பெண்ணை எல்லோரையும் அழைத்து மணம் முடித்து வைத்திருக்கிறார்கள். இப்படி எல்லா ஜாதியிலேயும் இன்றைக்குக் கலப்பு மணங்கள் சர்வசாதாரணமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

எனவே, தமிழ்ச் சமுதாயம் ஜாதிகளை மறந்து ஒன்றுபட்டு வாழவேண்டிய கால கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகவே நான் கருதுகிறேன். நாம் இன்னமும் பேதாபேதங்களாலே பிரிந்து கிடப்போமேயானால் எதிர்காலம் ஒளிமயமானதாக நமக்கு அமையுமா? என்பது மிகப் பெரிய கேள்விக் குறியாகும்.

நடுத்தரக் குடும்பங்களில்தான் இன்னமும் தங்களுடைய பிடிவாதப் போக்கை மாற்றிக் கொள்ளாமல், ''மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும்'' என்பதைப் போல, சமுதாய மாறுதல்களுக்கு ஏற்றவகையில் தங்களைச் சரிசெய்துகொள்ளாமல் இருக்கிறார்கள். இதிலே ஒரு புதிய மாறுதலைக் காணுகின்ற வகையில் நாம் சேர்ந்து ஏற்பாடுகளைக் கண்டாக வேண்டும். ''உதைக்கப்படும்போதும், வதைக்கப்படும்போதும் நாம் ஒன்றாக உதைக்கப்படுகிறோம், வதைக்கப்படுகிறோம். வாழும்போது மட்டும் நமக்குள் பேதாபேதங்கள் ஏன்?'' இதுதான் இந்த ஆண்டு பெரியார் பிறந்த 105வது ஆண்டின் சிந்தனையாக உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். தமிழ்ச் சமுதாயம் சிந்திக்குமாக!



# பெருந்தகையர் பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும்

அறியாமை என்னும் காரிருள் கப்பிக் கொண்டு, சாதிவெறி - சமயவெறி - கடவுள் பக்திவெறி - மூடப்பழக்கவழக்கம் - குருட்டு நம்பிக்கை போன்ற நச்சுக் கிருமிகள் நடமாடிக் கொண்டிருந்த தமிழகத்தில், பகுத்தறிவொளி பரப்பி அறியாமையிருளை அகற்றிடவும், நலிவு பயக்கும் நச்சுக் கிருமிகளை நசுக்கிடவும், செஞ்ஞாயிறு போன்று பெருந்தகையர் பெரியாரும், முழு வெண்ணிலவு போன்று பேரறிஞர் அண்ணாவும் தோன்றினார்கள்.

ஞாயிற்றின் கடுமையான கதிர்களை வாங்கி, அவற்றைத் தண்ணொளி நிலவாகத் தருவது திங்களது இயல்பு. அதுபோன்று பெரியாரின் கடுமையான பகுத்தறிவுநெறிக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும், கருத்துக்களையும் வாங்கி, அவற்றை எளிய-அழகிய-இனிய-மென்மையான-நல்ல தமிழில் நாட்டு மக்களுக்கு வழங்கிய பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களைச் சாரும்.

ஞாயிற்றுக் கிழமையை அடுத்துத் திங்கட் கிழமை நிற்பதைப்போல், பெரியாரை அடுத்து அறிஞர் அண்ணா எப்பொழுதும் திகழ்ந்துவந்தார்.

தமிழின மக்கள் அறிவுடையவர்களாக, ஆற்றலுடையவர்களாக, மானமுடையவர்களாக, இனப்பற்றுக் கொண்டவர்களாக, மொழிப்பற்று மிகுந்தவர்களாக, பகுத்தறிவு நெறியைப் பின்பற்றுபவர்களாக, சிந்தனை செய்பவர்களாக, சீர்தூக்கிப் பார்ப்பவர்களாக, உண்மை-ஒழுக்கம்-நாணயம்-நேர்மை ஆகியவற்றினிடத்து மதிப்புக்காட்டுபவர்களாக, பண்பாடுகளிலே அக்கறை கொண்டவர்களாக, பொதுத் தொண்டுகளில் நாட்டங் கொண்டவர்களாக ஆவதற்கு இருபதாம் நூற்றாண்டிலே அடிப்படையாக விளங்கியவர்களும், உறுதுணையாக நின்றவர்களும் பெரியாரும் அவர் வழி வந்த அறிஞர் அண்ணா அவர்களுமே ஆவார்கள்.

சாக்ரடீசுக்குப் பிளேட்டோ எப்படித் தலை மாணாக்கரோ, காரல் மார்க்ஸுக்கு மாவீரன் லெனின் எப்படியோ, அண்ணல் காந்தியடிகளுக்குப் பண்டித நேரு எப்படியோ அப்படியே பகுத்தறிவுப் பெருந்தகையர் பெரியார் ஈ.வெ.இராமசாமி அவர்களுக்குப் பேரறிஞர் அண்ணா அவர்களும் விளங்கினார்கள்.

''சீரிய முதியோர்கள் சிந்திக்கிறார்கள், சிறிய இளையோர் செய்து முடிக்கிறார்கள்'' என்பது பழமொழி. காரல் மார்க்ஸ் சிந்தித்தார்: மாவீரன் லெனின் செயல்படுத்தினார். அதுபோல பெரியார் சிந்தித்தார். பேரறிஞர் அண்ணா அவர்கள் செயல்படுத்தினார்கள்.

வேண்டத்தகாத கருத்துக்களையும், செயல்களையும் போக்குகளையும், நிகழ்ச்சிகளையும் பெரியார் அவர்கள் கடுமையாகத் தாக்கி, வன்மையாகச் சாடினார்கள். அறிஞர் அண்ணா அவற்றையெல்லாம் எளிமையாகச்

மாண்புமிகு நிதி அமைச்சர்
டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன்



ரூ25,000 மதிப்புள்ள 5,000 தென்னங்கன்று களை இலவசமாக வழங்கவும் ரூ. 25,000 மதிப்புள்ள பழம் தரும் மரங்களின் நாற்று களை இலவசமாக விநியோகம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அரசு மேற்கொண்டுள்ள இம்முயற்சியின் காரணமாக, தமிழ்நாட்டில் தொடர்ந்து நிலவிவரும் கடுமையான வறட்சியால் பாதிக் கப்பட்ட நிலையினின்று சிறு மற்றும் குறு விவசாயிகள் நிவாரணம் பெறவும், 1983-ஆம் ஆண்டு கரீப் பருவத்தில் அறுவடையின்போது அவர்கள் நல்ல மகசூலைப் பெற்று உற்பத்தி யைப் பெருக்கவும் உதவும் என்று நம்புகிறேன்.

தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனப் படும் தஞ்சைத் தரணியில், பாசன வசதியை உறுதிப்படுத்த ரூ.7.5 கோடி செலவில் 5,000 குழாய்க் கிணறுகள் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. அப்பணி கடும் விரைவாக நடை பெற்று வருகிறது. தஞ்சை மாவட்ட உழவர் கள் இத்திட்டத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் இம் மாநிலமெங்கும்-சென்னை மாவட்டம் தவிர- சென்ற ஆண்டில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 800 உழவர் குடும்பங் களுக்கு ஒரு கிராம விரிவாக்க அலுவலர் வீதம் நியமிக்கப்பட்டு, ஒவ்வொரு 15 நாட்களுக்கும் ஒருமுறை ஒவ்வொரு விவசாயியையும் சந் தித்து நவீன சாகுபடி முறைகள் எடுத்துக் கூறப்படுகின்றன.

பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் இந்தியாவிலேயே, தமிழகத்தில்தான் சிறப் பாக நடைபெற்று வருகிறது என்று அத்திட் டத்திற்கு நிதிஉதவி அளிக்கும் உலக வங்கி நிபுணர்கள்—அத்திட்டத்தை உருவாக்கிய டாக்டர் பெனோர் உட்படப் பலர் பாராட்டி யுள்ளார்கள் என்பதை மெத்த அடக்கத்தோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

முன்பெல்லாம் வேளாண்மைப் பல் கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் பயன்கள் சாதாரண விவசாயியின் வயல்களை அடைய நீண்ட காலமாகும். ஆனால் பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் செயல்படுத்தப்படுவதன் காரணமாக ஆராய்ச்சியின் பயன்கள் பரி சோதனை நிலையங்களிலிருந்து பண்ணைக்கு ( Laboratory to Land ) வெகு விரைவாக வந்தடைகின்றன.

புத்தம் புதிய ரகங்களையும், புதிய தொழில் நுட்பங்களையும் உருவாக்கிக் கொடுப்பதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் புகழ்பெற்று வருகிறது. சென்ற ஆண்டில் மட்டும் 20 புதிய ரகங் களையும் 20 புதிய கருவிகளையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கண்டு பிடித்துக் கொடுத்துள்ளது. இந்த ரகங்கள் குறுகிய காலத்தில் அதிக மகசூல் தரவல்லவை. கருவிகள் அனைத்தும் செலவைக் குறைக்கும் சிக்கனக் கருவிகளாகும்.

இதுவரை கூறிய சலுகைகளையும், இன்னும் அறிவிக்கப்பட உள்ள சலுகைகளை யும் நன்கு பயன்படுத்தி, நடப்பு ஆண்டில் திட்டமிட்டபடி 60 இலட்சம் டன் அரிசி, 24 இலட்சம் டன் சிறு தானியங்கள், 5 இலட்சம் டன் பயறு வகைகள், 13.25 இலட் சம் டன் எண்ணெய்வித்துக்கள், 24.13 இலட் சம் டன் வெல்லம் அளவில் கரும்பு, 5 இலட் சம் பேல் பருத்தி ஆகியவைகளை உற்பத்தி செய்ய உதவும்படி தமிழக உழவர் பெரு மக்களை அன்புடன் வேண்டுகிறேன்.



# பாலை சோலை ஆகும்!

### மாண்புமிகு பாரதப் பிரதமர்

கல்பாக்கம் அணுமின் நிலையம் இந்திய விஞ்ஞானிகள், பொறி யியல் வல்லுநர்கள், தொழில் நுட்ப நிபுணர்கள் தொழிலாளர் ஆகியோரின் ஆற்றலுக்கும் உழைப்புக்கும் அடையாள மாகும். அவர்கள் அனைவரும் நம்முடையப் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள் ஆவர்.

இந்தியாவின் மூன்றாவது அணு மின் நிலையமும் முழுக்க முழுக்க இந்தியர்களின் உழைப்பிலே உரு வாகிய முதல் நிலையமுமான கல்பாக்கம் நிலையம் நமது அணு மின் திட்டத்திலும் அறிவியல் முன்னேற்றத்திலும் மகத்தான தொரு மைல் கல் ஆகும்.

இந்தியா அணுசக்தித் துறை யில் இவ்வளவு தூரம் வளர்ச்சி அடைந்து உலகில் இத்தகைய சாதனை செய்யும் ஏழாவது நாடாகி உள்ளது. இந்நிலையை எட்டுவதற்கு நாம் பல்வேறு தொல்லைகளைச் சந்திக்கநேர்ந் தது.

நமது அணுசக்தித் திட்டத் திற்கு வித்திட்டவர்கள் நேரு அவர்களும் ஹோமி பாபா அவர் களும் ஆவார்கள். இதனைத் திட்டமிடும் போதே பலநாடுகள் எச்சரித்தன. அணுமின்சாரம் தயாரிக்க அதிக செலவாகும் என்றன.

அணுசக்தித் துறையில் நாம் தன்னிறைவு அடைந்து விடு வதைத் தடுக்க சில வளர்ச்சி அடைந்த நாடுகள் முயன்றன.



நமது அணுத் திட்டங்கள் அவர் களுக்கு ஆத்திரமூட்டின. தங்கள் எதிர்ப்பை அவர்கள் மறைமுக மாகவும் நேரடியாகவும் காட்டி னர். எந்திரங்களை அளித்திட மறுத்தனர். இருதரப்பிலும் பேசி முடிவு செய்து கையெழுத் திட்ட ஒப்பந்தத்தைக்கூட மீறி னர்.

தங்கள் அணுஆயுதக் கிடங்கு களை நிரப்புவதை நிறுத்தாத நாடுகள் மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றும் நல்ல நோக்கத்துக்காக நாம் அணு ஆராய்ச்சியில் ஈடு படுவதைக்கூட தடுக்கப் பார்க் கின்றன. அணுசக்தி மட்டுமல்ல; நமது சக்தி எதையுமே யாரை யும் அடக்கியாள நாம் பயன் படுத்த மாட்டோம். ஆக்கிர மிப்பு எண்ணமும் நமக்குஇல்லை.

நமக்கு ஒத்துழைப்பு தந்தால் ஏற்க மாட்டோம் என்பதல்ல. ஒத்துழைப்பு உதவி பெயரில் நம் மீது கட்டுப்பாடுகளைத் திணிப் பதையோ, கண்காணிப்பு என்ற பெயரில் நமது சுதந்தரத்தைப் பாதிக்கும் நிபந்தனைகளையோ இந்தியா ஒருகாலும் அனுமதிக் காது. எனவேதான் அணுபரவல் தடை ஒப்பந்தத்தை இந்தியா மறுத்து வருகிறது. அதே சமயம் அணு ஆயுதப் பரவலை இந்தியா எதிர்க்காமலில்லை.

அணுசக்தியை அழிவு ஆயுதங் களை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்த நாம் விரும்ப வில்லை. பாலைவனங்கள் பசுஞ் சோலைகளாக ஆக வேண்டும் என்றே விரும்புகின்றோம். பசுஞ் சோலைகள் பாலைவனமாக ஆகக் கூடாது. இது அணு விஞ்ஞா னத்தைப் பொறுத்த வரையில் நமது கொள்கை.

**அட்டை சொல்லும் செய்தி**

விவசாயம், தொழில் போன்ற பல்வேறு பணிகளுக்கு மின்சாரத் தின் தேவை அதிகரித்துக் கொண்டே போகிறது. நீர், நிலக் கரி, காற்று, கடல் அலை, சூரிய வெப்பம், சாணம் என்று எல்லா வற்றையும் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதே நமது குறிக் கோள். புனல் மின்சாரத்தை மட்டும்நம்பினால் வறட்சி வரும் போது அது பெரும் பிரச்சினை. அனல் மின்சாரத்துக்காக நிலக் கரியை நம்பினால் அது எல்லா இடங்களிலும் கிடைப்பதில்லை. இத்தகைய காரணங்களால்தான் அணுமின்சாரம் தயாரிக்கவேண் டிய நிலை அமைந்துள்ளது.

அணுசக்தி உற்பத்தி அதிக செலவுள்ளது என்ற கருத்து இருந்து வருகிறது. ஆனால் எண் ணெய் மற்றும்இயந்திரக்கருவிகள் விலை அதிகரித்து வரும் நிலை யில் மற்றவகை மின் உற்பத்தி யும் கூடுதலாகி வருவதை மனதில் கொள்ள வேண்டும்.

அணுமின்சக்தி தயாரிக்க வேண்டும் என்று அன்றே தீர்க்க தரிசனத்துடன் திட்டமிட்டனர் நேருவும் பாபாவும். அடுத்த வர்கள் சொல்கிறார்கள் என்ப தற்காக அணுசக்தித் துறையில் ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டாம் என்று விஞ்ஞானிகளுக்கு யோசனை கூற முடியுமா?

டிராம்பேயில் முதலாவது அணு ஆராய்ச்சி நிலையத்தை எனது தந்தை நேரு துவக்கி



சொல்லி, அவற்றிலிருந்து விலகும்படி மென்மையாகக் கூறினார்கள்.

பெரியார் அவர்கள் விரும்பத்தகாத பழமை என்னும் பாறைகளைப் பீரங்கிவைத்துப் பிளந்து எறிந்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் பிளவுபட்டு விழுந்த கற்களையெடுத்து அவற்றைப் பயன்படும் அழகான பதுமைகளாகச் செதுக்கிக் காட்டினார்கள்.

பெரியார் அவர்கள் பெருங்கடப்பாறை கொண்டு குருட்டு நம்பிக்கைகளையும், மூடப் பழக்கவழக்கங்களையும் உடைத்தெறிந்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் சிற்றுளி கொண்டு செதுக்கினார்கள்.

பெரியார் அவர்கள் பசும்பாலைப் பச்சையாகக் கறந்து தந்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் அதனைக் காய்ச்சித் தயிராக்கிக், கடைந்து வெண்ணெய் எடுத்து நெய்யாக உருக்கித் தந்தார்கள்.

பெரியார் அவர்கள் பகுத்தறிவு மலர்களைச் சுட்டிக் காட்டினார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் அவற்றிலிருந்து தேனை எடுத்துக்கொடுத்தார்கள்.

பெரியார் அவர்கள் பகுத்தறிவு விதைகளை ஊன்றிச் செடிகளாக வளர்த்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் அவற்றை மரங்களாக்கி கனிகளைக் குலுங்கச் செய்தார்கள்.

பயன்படாத பழமை உலகை வேரொடும் வேரடி மண்ணோடும் அழித்தொழிக்கத் தலைப்பட்டவர் பகுத்தறிவுப் பெருந்தகையர் பெரியார் ஆவார்: பயன்படக்கூடிய புதிய உலகை அழுத்தந்திருத்தமாக அமைக்க முற்பட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

பெரியார் துவக்கப்பள்ளியோடு படிப்பை நிறுத்தியவர். அறிஞர் அண்ணா பல்கலைக் கழகப் படிப்பை முடித்தவர். ஆனால் இருவரும் அறிவின் ஊற்றுக் கண்களாக விளங்கியவர்கள். ஐந்தாவதுவரை படித்த பெரியாரை, எம்.ஏ.வரையில் படித்த அறிஞர் அண்ணா அவர்கள் ஈடும் எடுப்புமற்ற ஒருபெருந்தலைவராகக் கொண்டாரென்றால், அந்த அளவுக்குப் பெரியாரின் அறிவாற்றல் திறனை அறிஞர் அண்ணா போற்றிப் பாராட்டி, வரவேற்று, வழிபட்டு நின்றார். ''நான் என் வாழ்நாளில் ஒரே ஒரு தலைவரைத்தான் கண்டேன்; அவரைத்தான் என் தலைவராகவும் கொண்டேன்; அவர்தான் பெரியார்'' என்று அறிஞர் அண்ணா குறிப்பிட்டுள்ளதிலிருந்து, பெரியாரிடத்தில் அறிஞர் அண்ணா எத்துணையளவு மதிப்பு வைத்திருந்தார் என்பதை அறியலாம்.



பெரியாரை அறிஞர் அண்ணா அவர்கள் இறுதிவரையில் தம்முடைய வளர்ப்புத் தந்தையாகவே கருதிவந்தார். அதுபோல அறிஞர் அண்ணா அவர்களைப் பெரியார் அவர்கள் தம்முடைய வளர்ப்பு மகனாகவே கருதினார்கள்.

பெரியார் பெரும் பணக்காரராக இருந்தபோதிலும், அந்தப் பணத்தைக் கொண்டு பெருஞ்சொத்துச் சேர்க்கும் நோக்கத்தைக் கொள்ளாமல் பொதுநலத்தொண்டே உயிரெனப்பாடுபட்டுவந்தார். அதுபோலவே அறிஞர் அண்ணா பெரும் படிப்பாளியாக இருந்தபோதிலும், பெருஞ்சொத்துத் திரட்ட வேண்டும் என்ற எண்ணமில்லாமல், பொதுநலத்தொண்டு புரிவதே தம் வாழ்க்கையின் குறிக்கோள் என்று கருதினார்.

பெரியாரின் கனவுகள் பலவற்றை நனவாக்கிய பெருமை அறிஞர் அண்ணா அவர்களுக்கு உண்டு. பெரியாருக்கு இருந்த எல்லாவித எதிர்ப்புக்களையும் தகர்த்தெறிந்து, பொதுமக்களின் ஆதரவையும், அரவணைப்பையும், நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெரியாரின் கொள்கைகளின் பக்கம் ஈர்த்து, கொள்கைக்கும் கட்சிக்கும் வெற்றி தேடித் தந்து, பெரியாரின் கொள்கைகளை ஆட்சி மனை ஏற்றிப் பெரியாருக்குப் பெருமையையும், பெரும் புகழையும் ஈட்டித் தந்தவர் அறிஞர் அண்ணா.

பெரியார் அவர்கள் நடத்திவந்த இயக்கத்திற்குத் தொல்லைகள் ஏற்பட்டபோதும், அவரது கொள்கைகளுக்கு ஊறு நேரிட்டபோதும், உற்ற துணையாக இருந்து அவற்றையெல்லாம் அகற்றிப் பெரியாருக்கும் இயக்கத்துக்கும் பாதுகாப்பு அளித்தவர் அறிஞர் அண்ணா ஆவார்.

பெரியார் - அறிஞர் அண்ணா ஆகிய இருவருமே ஆடம்பரத்தை, பகட்டை, படாடோபத்தை, ஆரவாரத்தை, போலித் தன்மையை, வன்முறைப்போக்கை, அடிமைத் தன்மையை, அடக்கும் தன்மையை, சூதுசூழ்ச்சியை எப்பொழுதுமே விரும்பியதில்லை

பெரியாரிடத்தில் பணம் உண்டு; அறிஞர் அண்ணாவிடத்தில் பணம் இல்லை. ஆனால் இருவருமே போற்றத் தகுந்த சிக்கனக்காரர்கள். இருவருமே பாராட்டுதலுக்குரிய பண்பாடுகள் நிறைந்தவர்கள்.

இற்றைக்கால - வருங்காலத் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பகுத்தறிவுப் பெருந்தகையர் பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆகிய இருவருமே இணைபிரிக்க முடியாத எடுத்துக்காட்டுக்களாவர்; வழிகாட்டிகளாவர்; வழிபடத்தக்கவர்களாவர்.

வாழ்க பெரியார் புகழ்!
வாழ்க அறிஞர் அண்ணா புகழ்!



# கல்வியில் புதிய அணுகுமுறை

## மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. சே. அரங்கநாயகம்

வளரும் தமிழகம்

ஒரு நாட்டின் வளத்திற்கு அடிப்படையாக அமைவது கல்வியே. அதனால் தான் கல்விக்காகும் செலவை மனித சக்திகளின் வளர்ச்சிக்காகச் செய்யப்படும் முதலீடு என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு தமிழகக் கல்வித் துறை கடைப்பிடித்துவரும் புதிய அணுகுமுறைகளின் விளைவாக, இன்று தமிழகத்தின் கல்வி வளர்ச்சி அனைவரும் பாராட்டும் அளவுக்கு அமைந்துள்ளது. ''மேல்நிலைப் படிப்பில் தொழிற்கல்வியை எப்படி அமல் செய்ய வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ள தமிழ்நாட்டிற்குச் சென்று பார்க்கவும்'' என்று மைய அரசின் முன்னாள் கல்வியமைச்சர் திரு எஸ். பி. சவான் அவர்கள் பாராட்டியது இங்கு நினைவுகூரத்தக்கது.

கல்விக்காக 1976-77ல் செலவிடப்பட்ட 151 கோடி ரூபாய், இன்று 1983-84ல் 356 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி ஆகியவற்றுக்காக அந்தந்தத் துறைகளின் கீழ் செலவு செய்யப்படும் தொகையைச் சேர்த்தால் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை 382 கோடி ரூபாயாக அமையும். இது 1976-77ல் செலவிடப்பட்ட தொகையைப் போல் ஏறத்தாழ 2½ மடங்காகும். தமிழக அரசு தனது மொத்த வருவாயில், ஏறத்தாழ 22 சதவிகிதத்தைக் கல்வி வளர்ச்சிக்காகச் செலவிட்டு வருகிறது.

கல்விக் கட்டடத்தின் அடித்தளமாக அமைந்திருப்பது தொடக்கக் கல்வி. தொடக்கக் கல்வியில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டகால இறுதியில் 6 முதல் 11 வயதிற்குட்பட்ட சிறார்கள் 95 சதவீதத்தினரையும், 11 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 50 சதவீதத்தினரையும் பள்ளிகளில் சேர்க்க வேண்டுமென்பது அனைத்து இந்தியாவுக்கும் நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டளவாகும். ஆனால், தமிழ்நாட்டில், இப்பொழுதே 6 முதல் 11 வயதினரில் 96.2 சதவீதத்தினரும், 11 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 86.03 சதவீதத்தினரும் தொடக்கக் கல்வி பயின்று வருகின்றனர். சென்ற ஆண்டு மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் அறிமுகப்படுத்திய ''சத்துணவுத் திட்டத்தின்'' பயனாக எந்த ஆண்டிலும் இல்லாத அளவு ஏறத்தாழ 3 இலட்சம் குழந்தைகள் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். ஏழைக் குழந்தைகள் வயிற்றுப் பசியைத் தீர்த்திட கஞ்சி கொடுத்தால் மட்டும் போதாது, அவர்கள் ஊட்டமான சத்தைப் பெற்று உடல் நலமும் அறிவு வளமும் பெற்று நாட்டிற்கு நல்ல பணியாற்றும் சிறந்த குடிமக்களாகத் திகழ வேண்டுமென்ற நன்நோக்கோடு கொண்டுவரப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ், இன்று ஏறத்தாழ 64.04 இலட்சம் குழந்தைகள் பயன் பெறுகின்றனர். மேலும். இத் திட்டத்தினால் 1,80,110 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. இவர்களில் பெரும் பகுதியினர் ஆதரவற்ற பெண்கள், நலிவுற்ற பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக இவ்வரசு தொடக்கக் கல்வியில் கடைப்பிடித்த புதிய அணுகு முறையினால் 1 முதல் 3 வகுப்புகள் இளம் சிறார்கள் ''தோல்வி'' என்று பெரும் ஏமாற்றத்தைச் சந்திப்பது அறவே ஒழிக்கப்பட்டுவிட்டது. அவர்களில் ஏழைகளுக்கு இலவசமாகப் பாடநூல்களும், கரும்பலகைகளும் வழங்கப்படுகின்றன. இதனால் 5 வகுப்புகூட முடிக்காமல் படிப்பை விட்டுவிட்டவர்கள் எண்ணிக்கை 1977-78ல் 40 சதவீதமாக இருந்தது. இன்று 30 சதவீதமாகக் குறைந்தது.

இன்று கிராமப்புறங்களிலும் மேல்நிலைக் கல்வியைப் பள்ளிகளில் இணைத்துக் கற்பிக் முறையினால் ஏறத்தாழ 2,90,600 மாணவர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கின்றனர். அதுமட்டுமல்ல அவர்களில் பலர் தாய்மொழியிலேயே கல்வி கற்கின்றனர் கிட்டதட்ட 57,000 பேர் வாழ்க்கைக்குப் பயனுள்ள தொழிற்கல்வியை இந்த இரண்டு ஆண்டுகளிலேயே பெற்று வருகின்றனர். இதனால் இன்று பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள்

தங்களுக்குரிய பங்கு இடத்தைப் பெறுகின்றனர். அதுமட்டுமல்ல, அவர்கள 70,80 சதவீதம் என்று நிறைய மதிப்பெண்களைப் பெற்று மற்ற மாணவர்களோடு சரிநிகர் சமனாகப் படிக்கும் தகுதியையும் பெற்றுவருகின்றனர். முன்பு பள்ளிகள் திறக்கப்பட்டாலும், அவைகளுக்குத் திட்டமிட்டபடிகட்டடங்களும் ஆய்வுக்கூட வசதிகளும் செய்யப்படாததால் பல பள்ளிகள் இன்றும் கூரை கட்டடங்களிலே நடந்துவரும் அவல நிலை நீடிக்கிறது. ரூபாய் 100 கோடிக்கு மேலாகும் இந்த நிதி ஆதாரத்தைப் பெறுவதற்கு அரசு பல்வேறு வழிகளிலும் முயன்று வருகிறது. ஆனால், மேல்நிலைக் கல்வித்திட்டத்தை அமல் நடத்தும்பொழுது பள்ளிகள் அனுமதியுடனே (சேர்ந்து) ஆய்வுக்கூட வசதிகளும் மற்ற விஞ்ஞானக் கருவிகள் வாங்குவதற்கும் திட்டமிட்டதன் பயனாக இன்று எல்லா மேல்நிலைப் பள்ளிகளிலும் தனியாக ஆய்வுக்கூட வசதி ஏற்பட்டுள்ள நன்னிலை உருவாகியுள்ளது.

1982-83ஆம் ஆண்டு மட்டும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 12 கோடி செலவிடப்பட்டது. இதனால், மேல்நிலைக் கல்வியின் தரம் கட்டிக்காக்கப்படுவதுடன் நாளும் உயரவும் வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கல்வி பயிலும் மொத்த மாணவ மாணவியரில் 43 சதவீதத்தினர் மாணவியராக இருப்பதுபள்ளிக் கல்வி வளர்ச்சியில் பெருமைப்படத்தக்கதாகும்.

கல்வித்தரத்திற்கு அச்சாணியாக விளங்குபவர்கள் ஆசிரியர்களே. எனவே, அவர்களின் நலனைப் பேணுவதில் இவ்வரசு கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது. ஆசிரியர்களுக்கு அண்மைக் காலத்தில் செய்யப்பட்ட சில நன்மைகளைச் சுட்டிக்காட்டத் தகுந்தவை—

(1) 96,000 ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் அனைவரையும் அரசு ஊழியர்களாக ஆக்கியது.

(2) இளநிலை ஆசிரியர்கள் அனைவரையும் குறுகிய காலப்பயிற்சி அளித்து இடைநிலை ஆசிரியர்களாக்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

(3) இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் அனைவரும் முதனிலைத் தமிழாசிரியர்களாக உயாததபபட்டது.

(4) மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் குறுகிய காலப் பயிற்சிக்குப் பின் முழுத் தகுதி உடையவர்களாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(5) அனைத்து ஆசிரியர்களுக்கும் ஓர் ஆண்டிற்கு 10 நாட்கள் ஈட்டிய விடுப்பு வழங்கப்படுகிறது. இன்று பணியாற்றும் 3 இலட்சம் ஆசிரியர்களில் 40% பெண்கள்.

பள்ளிக் கல்வியில் ஏற்பட்டுள்ள மாறுதல் கல்லூரிக் கல்வியிலும் நன்னிலை உருவாக்கியுள்ளது. கல்லூரிகளில் புகுமுகவகுப்பு என்ற பெருங்கூட்டம் இல்லாததால், பட்டப் படிப்பிலும் பட்ட மேற்படிப்பிலும் மாணவர்கள் ஒழுங்காகக் கற்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கல்லூரி நடந்த நாட்களைவிட நடக்காத நாட்கள் அதிகம் என்ற நிலை மாறி இன்று கல்லூரி வளாகங்களில் அமைதி காக்கப்பட்டு கல்வி தொடர்ந்து அளிக்கப்படுகிறது. மாலை நேர வகுப்புகளும் பல்வேறு துறைகளில் தொடங்கப்பட்டு 6,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன் அடைகின்றனர். கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 115 பட்ட வகுப்புகளும், 34 பட்ட மேற்படிப்பு வகுப்புகளும் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

கல்லூரி ஆசிரியர்களின் நலனையும் இவ்வரசு பேணிக் காத்து வருகிறது. கிடப்பில் போடப்பட்ட பல்கலைக் கழக மான்யக் குழுவில் புதிய ஊதியத் திட்டத்தை தூசு தட்டி எடுத்து முன் தேதியிட்டு அமல்படுத்தியது மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் ஆட்சியாகும். தகுதியுடைய பயிற்றுநர்களையும், விளக்குநர்களையும் உதவிப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தியது. 10 ஆண்டுப் பணி முடித்த உதவிப்பேராசிரியர்கள், பேராசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றனர். உதவி பெறும் கல்லூரிகளில் ஆசிரியர்களும் ஆசிரியர்கள் அல்லாதாரும் நேரிடையாக அரசிடமிருந்து ஊதியம் பெற்று வருகின்றனர். கல்லூரியில் உள்ள ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாதோர் அனைவரும் அரசு ஊழியர்களைப் போன்று பணிக்கொடையும் ஓய்வு ஊதியமும் இன்று பெறுகின்றனர்.

**வறட்சி பாதிப்பு**

**1983ல் பருவ மழை பொய்த்ததன் காரணமாக 15 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசம் ஆகியவை கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.**

**வறட்சியால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு 1982-83ல் மத்திய உதவி உச்சவரம்பு ரூ.436.26 கோடி. நடப்பு ஆண்டில். இது ரூ181 கோடியாக இருக்கும்.**

**தமிழ்நாட்டில், வறட்சியின் விளைவாக 38.26 எக்டேர் நிலங்கள் வறண்டு [illegible], 3,28,20,000 பேர் பாதிக்கப்பட்டனர். 1982–83ல் ரூ 18.39 கோடியும், 1983–84க்கென ரூ 49.97 கோடியும் மத்திய உதவி வழங்கப்பட்டது. வறட்சிப் பகுதிகளில் பயன்படுத்த தமிழகம் 41 துரப்பணக் கருவிகளை வழங்கியது, மத்திய அரசு 20 துரப்பணக் கருவிகளை வழங்கியது.**

**இவ்வாண்டு ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களில் தமிழ்நாட்டுக்கு 23,000 டன் உணவு தானியம் சிறப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டது.**



மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி அமைந்த பிறகு தொழில்நுட்ப வளர்ச்சிக்காக அண்ணா பல்கலைக்கழகமும், கோவையில் கவியரசு பாரதியார் பெயரால் பாரதியார் பல்கலைக்கழகமும், திருச்சியில் பாவேந்தர் பாரதிதாசன் பெயரால் பாரதிதாசன் பல்கலைக்கழகமும், தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகமும் நிறுவப்பட்டுள்ளன. காரைக்குடியில் அழகப்பா பல்கலைக் கழகமும், கொடைக்கானலில் மகளிர் பல்கலைக்கழகமும் வெகு விரைவில் அமைய இருக்கின்றன. மகளிர் பல்கலைக் கழகம் பாரதி கண்ட கனவை நனவாக்கி, பெண்கள் ஆண்களோடு ஒரே நிலையாக நாட்டுக்குத் தொண்டாற்றும் நல்ல நிலையை உருவாக்கப் பாடுபடும். பெண்களுக்கு இன்று சமுதாயத்தில் இழைக்கப்பட்டு வரும் அத்தனைக்கொடுமைகளையும் களைந்தெறிய வழிவகை காணும் புதிய பல்கலைக் கழகங்கள் ஏற்பட்டதனால், ஆராய்ச்சித் துறை பல்கிப் பெருகி வருவதுடன் புதிய புதிய கண்டுபிடிப்புகளுக்கும் வித்தூன்றப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும் தொழில் வல்லுநர்கள் இல்லாமல் ஏற்பட முடியாது. தொழில்நுட்பக் கல்வி பெருகினால் தான், தொழில்நுட்ப வல்லுநர்கள் உருவாவார்கள். இதனைக் கருத்தில் கொண்டு 1981-82ஆம் ஆண்டு நெல்லையில் ஒரு புதிய பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டதும், கடந்த 4ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் புதிதாக 23பல் தொழில் பயிலகங்கள் (Polytechnic) தொடங்கப்பட்டுள்ளன. இன்று முழு நேரப் பட்டப்படிப்பு வகுப்புகளில் 1700 மாணவர்களும், பல் தொழில் பட்டப் படிப்புகளில் ஏறத்தாழ 8.500 மாணவர்களும் பயில்கின்றனர். கடந்த 5 ஆண்டுகளில் 40க்கும் அதிகமான புதிய பாடங்கள் புகுத்தப்பட்டுள்ளன. சிறுவர்கள் அறிவியல் அறிவை இளமையிலேயே பெற்றுக் கொள்ள வாய்ப்பு அளிக்கும் முறையில் சென்னை, திருச்சி, கோவை ஆகிய இடங்களில் அறிவியல், தொழில்நுட்ப மையங்கள் நிறுவத் தனியாக ஒரு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னையில் அமையும் நிலையத்தில் ஒரு கோள்காட்சியகம் (Planetorium) அமையும்.

''கண் உடையர் என்போர் கற்றோர்''. தங்கள் இளமைக் காலத்தில் இந்த நல்ல வாய்ப்பைப் பெறத் தவறி விட்ட வயது வந்தோருக்காக இன்று தனியாகக் கல்வி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு அவர்கள் கல்வியாம் கண்ணொளி பெறுகின்றனர். வயது வந்தோர் கல்வித் திட்டத்தினால் கடந்த சில ஆண்டுகளில் மட்டும் ஏறத்தாழ 11,76,000 பேர் எழுத்தறிவு பெற்று இருக்கின்றனர். இதில் 41 சதவீதத்தினர் தாழ்த்தப்பட்டவர்கள். மொத்தத்தில் 6,47,000 பேர் பெண்கள் என்பதையும் எண்ணிப் பார்க்கும்பொழுது நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது. இதனால் தான் 1982ஆம் ஆண்டு யுனெஸ்கோ நிறுவனம் பெருமைக்குரிய ''குரூப்கையா'' விருதை எழுத்தறிவுப் பணிக்காக தமிழ்நாட்டில் பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வித் துறைக்கு வழங்கியுள்ளது.

பெங்களூரா

காலாபாடி

தில்பசந்த்

பீதர்

சொர்ணஜஹாங்கீர்

ஹிமாயத்தீன்



இவர்கள் யார் என்று வியப்படைய வேண்டாம். இவை, தருமபுரி மாவட்டத்தில் விளையும் மாம்பழ ரகங்கள்!

தமிழ் வளர்ச்சியிலும் இவ்வரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. அரசு நிர்வாகத்தில் தமிழ் மொழிக்குச் சிறப்பிடம் அளிப்பதற்காக 1981-82ஆம் ஆண்டு மூன்றாண்டு முனைப்புத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தி பல்வேறு துறைகளிலும் தமிழையே பயன்படுத்தும் நிலையை உருவாக்கி வருகிறது. வறுமையில் வாடும் தமிழ் அறிஞர்களுக்கு ஓய்வு ஊதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதும் இவ்வரசே. எட்டுத்திக்கும் சென்று கலை நுட்பங்களையெல்லாம் தமிழில் கொண்டு வந்து சேர்த்து தமிழை வளர்க்க தஞ்சைத் தரணியில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை இவ்வரசு நிறுவியுள்ளது. உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்க இவ்வாண்டு ரூபாய் 105 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் புதிய புதிய துறைகளில் 50க்கும் மேற்பட்ட நூல்களை வெளிக்கொணர்ந்துள்ளது. கல்வியைக் கற்பிக்கும் முறைகளில் புதிய புதிய முறைகளைப் புகுத்துவதற்காகப் பல்வேறு துறைகளை ஏற்படுத்தி தமிழ்நாட்டுக்கல்வி ஆராய்ச்சிமற்றும் பயிற்சி நிறுவனத்தை இவ் வரசு வலுப்படுத்தியுள்ளது. அயல் மாநிலத்தில் உள்ளவர்கள் தங்கள் தாய்மொழியிலே இடைநிலைக் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் முறையில் அவர்களுக்காகப் பாடநூல்களைத் தயாரிக்கும் பணியையும் இக் கல்வி ஆராய்ச்சி நிறுவனம் செய்துவருகிறது. சுருங்கக் கூறின்,

''என்னருமைத் தமிழ்நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்

பன்னருங் கலை ஞானத்தால்
பராக்கிரமத்தால் அன்பால்

உன்னத இமமாமலைபோல்
ஓங்கிடும்கீர்த்தி எய்தி

இன்புற்றார் என்று மற்றவர் இயம்பிடக்
கேட்டிடல் எந்நாளோ''

என்று அன்று புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் ஏங்கினார். அந்நாள் மாண்புமிகு புரட்சித்தலைவரின் அரசு நடத்தும் இந்நாளே என்று கூறத்தக்க வகையில் தமிழ்நாட்டில் கல்வித் துறை வெற்றிப் பாதையில் பீடு நடை போடுகிறது என்று கூறினால் அது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

நன்றி! வணக்கம்!!

(சென்னை வானொலியில் 17.7.83ல் ஆற்றிய உரை)

வைத்த நாள் எனது நினைவில் தெரிகிறது.

டிராம்பே அணு ஆராய்ச்சி நிலையம் கடலோரத்தில் எலிபண்டா குகைகளுக்கு எதிரே அமைந்துள்ளது. அதேபோல நமது பழங்கால கலைத் திறமைக்கு எடுத்துக் காட்டாகத் திகழும் மாமல்லபுரச் சிற்பங்களின் எதிரே கல்பாக்கம் நிலையம் அமைந்துள்ளது.

எலிபண்டா குகைகளில் புகழ் பெற்ற திருமூர்த்திகளின் சிலைகள் உள்ளன. ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற மூவகை வேலைகளையும் அவை உணர்த்துகின்றன. அணுசக்திகூட அப்படித்தான். எதற்கும் பயன்படும். அதேபோன்று எப்போதும் நான் பிரமிப்புடன் ரசிக்கும் அர்ஜுனன் தவம் சிற்பக்காட்சி மாமல்லபுரத்தில் உள்ளது. நமது மாமுனிவர்கள் அன்று தவம் செய்து சக்தி பெற்றனர். நமது விஞ்ஞானிகள் இன்று ஆராய்ச்சி உழைப்பு ஆகியவற்றால் சக்தி (மின்சாரம்) பெறுகின்றனர்.

இங்கு உற்பத்தியாகும் மின்சாரம் தென் மாநிலங்கள் அனைத்துக்கும் பயன்படும். அடுத்த அணுமின் நிலையத்தையும் தமிழ் நாட்டில் அமைக்க வேண்டும் என்று வெங்கட்ராமன் கேட்டார். அதைப்பற்றிய முடிவை விஞ்ஞானிகளிடமே விட்டுவிடுவது நல்லது.

இந்த மிகச்சிறந்த சாதனைக்கு காரணமாக இருந்த கல்பாக்கம் அணுமின்நிலைய ஊழியர்கள் அனைவருக்கும் இரண்டு சதவீத சிறப்பு பூரிப்பூதியம் அளிக்கப் படும்.

**(மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 23.7.83 அன்று கல்பாக்கத்தில் சென்னை அணுமின் நிலையத்தை நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்து ஆற்றிய உரையிலிருந்து.)**

# தமிழ் நாடு பயன் பெற...

## -மாண்புமிகு முதல்வர்



கல்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள அணு மின் நிலையத்தை நாட்டுக்கு அர்ப்பணிக்க பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் வந்திருக்கிறார். அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டுக்கு மின்சாரத்தின் தேவை எந்த அளவில் இருக்கிறது என்பது நம் எல்லோருக்கும் தெரியும்.

போதிய அளவு மின்சாரம் தமிழகத்தில் இல்லை என்பதால் தமிழகத்தின் மின்சாரத்தேவைக்கு உதவும் வகையில் இத்திட்டத்தை நிறைவேற்றித் தந்த பிரதமருக்கு தமிழகத்தின் சார்பில், தமிழக அரசின் சார்பில், அமைச்சர்கள் சார்பில், தமிழக மக்கள் சார்பில் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



பல ஆண்டுகளுக்கு முன்புஇந்த அணுமின் நிலையப்பணி தொடங்கப்பட்டது என்றாலும் இதை வெற்றிகரமாக நடத்தியேதீருவது என்று நம் விஞ்ஞானிகள் ஒத்துழைத்துப் பணியாற்றினர்.

அவ்வப்போது தேவையான உத்தரவுகளை மத்திய அரசு பிறப்பித்து உதவியது. இந்தத் திட்டம் நிறைவேற உதவிசெய்து இத்திட்டத்தை நிறைவேற்றித் தந்த பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைத் தொடங்கி வைக்கவும் பிரதமர் வந்திருக்கிறார். அவரது உதவிகள் மறக்க முடியாதவை. இதற்கு நன்றி கூறாமல் இருக்க முடியாது.

தமிழ்நாட்டில் மின்பற்றாக் குறை இருக்கிறது. இது பற்றியெல்லாம் விரிவாக வேறு நேரத்தில் பேச வேண்டும்.

பேச்சைவிட செயல்பாட்டுக்கு முக்கியம் தரப்பட்டு இருப்பதாக கருதுகிறேன். இங்கே குறைந்த அளவு நேரம் பேசுவதற்கு நிர்ணயிக்கப்பட்டு இருப்பதற்குக் காரணம் நமது இந்திய வல்லுநர்கள் செயல் வீரர்கள் என்பதைக் காட்டுவதாகக் கருதலாம்.

இங்கே பிரதமர் வந்ததும் விழா களைகட்டிவிட்டது. இத்திட்டத்திற்கு மத்திய அமைச்சர் திரு ஆர். வி. முதல் முயற்சிகளை முன்பு மேற்கொண்டார். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது மத்திய அரசு-மாநில அரசு ஒத்துழைப்புடன் ஆகும். அதன் அடிப்படையில் இத்திட்டம் வெற்றி பெற்றுள்ளது.

அந்த வெற்றிக்கு அஸ்திவாரமாக இத்திட்டத்தை பிரதமர் இங்கு தொடங்கி வைத்திருக்கிறார். அவருக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டின் மின்சாரத் தேவையை நிறைவு செய்யும் வகையில் இத்திட்டத்தைச் செயல்படுத்திய மத்திய அரசுக்கு பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன். பிரதமர் வாழ்க. இத்திட்டத்திற்காக உழைத்தவர்கள் வாழ்க.

**(23.7.83 அன்று கல்பாக்கத்தில் சென்னை அணுமின் நிலையத் தொடக்க விழாவில் ஆற்றிய உரை)**

# சென்னை அணு மின் நிலையம்



இந்தியாவின் மூன்றாவது அணுமின் நிலையமாக, கல்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள அணுமின் நிலையத்தின் பெயர் சென்னை அணுமின் நிலையம் (Madras Atomic Power Station). இது நம் நாட்டின் கிழக்குக் கடற்கரையோரமாக, சென்னை மாநகரின் தெற்கே 60 கிலோ மீட்டர் தொலைவில் - மாமல்லபுரம் அருகில் அமைந்துள்ளது.

இந்தியாவின் முதல் அணுமின் நிலையம் பம்பாய்க்கு வடக்கே 100 கிலோ மீட்டர் தொலைவில் தாராபூரில் அமைக்கப்பட்டது. இரண்டாவது அணுமின் நிலையம் ராஜஸ்தான மாநிலம் 'கோட்டா'விலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் ராவட்பஹடாவில் அமைக்கப்பட்டுள்ளது.

1967-ஆம் ஆண்டில் கல்பாக்கத்தில் அணுமின் நிலையத்துக்கான பணிகள் தொடங்கின. இந்திய பொறியியல் வல்லுநர்கள், அறிவியல் அறிஞர்களின் அருஞ்சாதனையாக இந்த அணுமின் நிலையம் திகழ்கிறது.

சென்னை அணுமின் நிலையத்தின் இரண்டு யூனிட்டுகளுக்குமாகச் சேர்த்து ஏறத்தாழ ரூபாய் 245 கோடி, செலவிடப்பட்டுள்ளது.

இந்த அணுமின் நிலையத்தின் இரண்டு யூனிட்டுகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பொருள்கள் பற்றிய விவரம் வருமாறு:

சிமெண்ட் 70,000 மெட்ரிக் டன்.

காங்கிரீட் 1,10,000 க்யூபிக் மீட்டர்.

வலிமை பெருக்கப்பட்ட (துணை ஆதாரப் பொருள்களுடைய) இரும்பு 16,000 மெட்ரிக் டன்.

**மாமூலன்**

ஏனைய வடிவமைப்பு இரும்பு 6,000 மெட்ரிக் டன்.

இரும்புக் குழாய் 75 கிலோ மீட்டர்.

எவர்சில்வர் குழாய் 9 கிலோ மீட்டர்.

மின்சக்தி கம்பி 600 கிலோ மீட்டர்.

கருவிகளை இணைக்கும் கம்பிகள் 125 கிலோ மீட்டர்.


எவர்சில்வரில் அமைந்த கருவிகளை இணைக்கும் குழாய் 50 கிலோ மீட்டர்.


கருவிகளை இணைக்கும் தாமிரத்தில் உருவாக்கப்பட்டுள்ள குழாய் 27 கிலோ மீட்டர்.

இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் கருவிகள் எண்ணிக்கை 20,000, சாதனங்கள் 16,000.

இப்படிப் பட்டியல் போட்டு எழுதிக் கொண்டே செல்லலாம். கல்பாக்கத்தில் அமைந்துள்ள சென்னை அணுமின் நிலையத்தின் மாபெரும் ஆற்றலுக்குக்







காரணமானவைகளை.

இதுமட்டுமா இந்த அணுமின் நிலையத்தின் சிறப்பு?

தாராபூர் மற்றும் ராஜஸ்தான் அணுமின் நிலையங்களில் இதுவரை ஏற்பட்டுவந்த கோளாறுகள் ஏதும் இந்நிலையத்தில் வராதவாறு எல்லா வகையிலும் கவனித்துச் செய்யப்பட்டுள்ளது. மேலும் இத்தகைய அணுமின் நிலையங்களுக்கே உரியவிபத்துகள் ஏதும் ஏற்படாதவாறு முன்னர் உள்ள அனுபவங்களினால் எல்லா வகையிலும் சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகளும் ஒவ்வொரு கட்டத்திலும் கவனித்துச் செய்யப்பட்டிருக்கின்றன.

மேலும் இயற்கையாகக் கிடைக்கும் யுரேனியம் மூலப் பொருளை கொண்டு எரித்துக் கிடைக்கும் வெப்பத்தின் மூலம் டர்பைன் இயந்திரங்களை இயக்கி மின் சக்தி உற்பத்தி செய்யப்படும். அதே நேரத்தில் இப்படி எரிக்கப் பயன்படுத்தப்பட்ட பின்னர் யுரேனியத்தை மீண்டும் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் அதனைப் பக்குவப்படுத்துவதற்கான தொழிற்சாலை ஒன்றும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.


நாளடைவில் இந்த நிலையம் முழு அளவு வளர்ச்சியடைந்து சுமார் 65 கோடி முதல் 70கோடி யூனிட் அணுமின் சக்தியை நாட்டுக்கு வழங்கும்.


மேலும், கடற்கரையோரம் அமைக்கப்பட்ட தாராபூர் அணுமின் நிலைய மின்விநியோக நிலையத்தில் கடற்காற்றினால் ஏற்படும் அரிப்புகள், கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் ஏற்படாதவாறு முற்றிலும் மூடப்பட்ட வகையில் மிகப் பிரம்மாண்டமான கான்கிரீட் கட்டடத்திற்குள் மின்விநியோக நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து நாட்டில் அமைக்கப்பட்டிருப்பதுபோல நம்நாட்டில் இப்பொழுதுதான் முதன் முறையாக இப்படிஅமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியமும் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் இதுபோன்று அமைத்து வருகிறது. இந்த நிலையத்தின் கண்டென்சர்களைக் குளிர வைக்கத் தேவையான தண்ணீருக்குக் கடல்நீரைப் பயன்படுத்த வழி செய்யப்பட்டுள்ளது. இதற்காகக் கடலில் 468 மீட்டர் தொலைவிற்குச் சிறப்பான அமைப்புடன் ஒரு கால்வாய் அமைத்து, கடலில் 65 மீட்டர் ஆழத்தில் ஆழ்கிணறு அமைப்பின் மூலம் சுத்தமான கடல்நீர் இந்த நிலையத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

இப்படிக் கொண்டு வந்து உபயோகிக்கப்படும் கடல்நீர் ஒரு நிமிடத்திற்கு 2 இலட்சம் லிட்டர் ஆகும். கண்டென்சர்களைக் குளிர வைத்தபின்னர் வெளியேற்றப்படும் தண்ணீர் கதிரியக்கங்கள் ஏதுமின்றிச் சுத்தப்படுத்தப்பட்ட பின்னர், மீண்டும் கடலிலேயே போய் விழுவதற்கும் வழி செய்யப்பட்டிருக்கிறது.








இத்தனைச் சிறப்புகளுடன் விளங்கும் முதல் யூனிட்டுக்கும், இன்னும் 18 மாதங்களில் உற்பத்தி தொடங்கும் இரண்டாவது யூனிட்டுக்கும் சேர்ந்து மொத்தத்தில் ஆயிரம் பணியாளர்கள் தான் பணியாற்றுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்பாக்கத்திலுள்ள அணுமின் நிலையம் நம்நாட்டு விஞ்ஞானிகளாலும் பொறியியல் வல்லுநர்களாலும் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டிருப்பது நாட்டுக்கே பெருமை தருவதாகும்.



இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் 85 சதவீதம் நம்நாட்டு மூலப் பொருட்களால் ஆகியது. 15 சதவீதப்பொருட்கள் (சில உயர் வகை இரும்புகள் போன்றவை) மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டவை.

**மின்சக்தி உருவாகும் முறை**


ஜெனரேட்டர் (டைனமோ) இயந்திரத்தைச் சுழலியின் (டர்பைன்) உதவியால் சுற்றும்போது மின்சக்தி உற்பத்தியாகிறது. சுழலியைச் சுற்ற ஓடும் நீர், நீராவி அல்லது எரிவாயு தேவைப்படும். நீராவியை நிலக்கரி, எண்ணெய் அல்லது எரிவாயுவைக் கொண்டு உற்பத்தி செய்யும் நிலையம் அனல் மின் நிலையமாகும். அணுவைப் பிளப்பதால் வரும் வெப்பத்தைப் பயன்படுத்தி நீராவியை உற்பத்தி செய்யும் நிலையத்திற்குப் பெயர் அணுமின் நிலையம்.

நிலக்கரி, எண்ணெய் கிடைக்கும் பகுதிகளிலிருந்து தொலைவான இடங்களில் அணுமின் சக்தியை உற்பத்தி செய்வது சிக்கனமானது. 235 மெகாவாட் மின்திறன் கொண்ட அனல் மின் நிலையத்திற்கு நாளொன்றுக்குச் சுமார் 2,500 டன் நிலக்கரி தேவைப்படும். ஆனால் சம திறன் கொண்ட அணுமின் நிலையத்திற்குச் சுமார் 100 கிலோ யுரேனியம் மட்டுமே தேவைப்படும்.

நிறைய அளவில் நிலக்கரியைத் தருவிப்பதில் போக்குவரத்துச் செலவு உட்பட பல சிக்கல்கள் உள்ளன. எனவே, அணுமின் நிலையத்திற்கு முதலீட்டுச் செலவு சற்றுக் கூடுதலாகஇருந்த போதிலும், இயக்குவதற்கான செலவு மிகவும் குறைவானது. இதனால், நிகர மின் உற்பத்திச் செலவு அனல் மின் நிலையத்துடன் ஒப்பிடும்போது குறைவாகவே உள்ளது. எடுத்துக்காட்டாக, கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் மின் உற்பத்திச் செலவு யூனிட் ஒன்றுக்கு 35 காசுகளாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தாராபூரில் நிறுவப்பட்ட முதல் அணுமின் நிலையத்தில் செறியூட்டப்பட்ட யுரேனியத்தை எரிபொருளாகப் பயன்படுத்தும் கொதி நீர் அணு உலையாகும். இரண்டாவது அணுமின்நிலையம் கோட்டாவுக்கருகில் நிறுவப்பட்டுள்ளது. இதில் நம் நாட்டில் பீகாரில் இயற்கையாகக் கிடைக்கும் யுரேனியம் எரிபொருளாகவும், கனநீர் முதல் நிலை வெப்பக் கடத்தியாகவும், தணிப்பானாகவும் பயன்படுகின்றன. மூன்றாவது அணுமின் நிலையம் பல்லவனின் கலைக் கோயிலான மாமல்லபுரத்திற்குத் தெற்கே வங்கக் கடல் ஓரத்திலே கல்பாக்கத்தில் நிறுவப்பட்டுள்ளது.

கல்பாக்கத்திலுள்ள அணுமின் நிலையத்தில் ஒவ்வொன்றும் 235 மெகாவாட் மின்சக்தி உற்பத்தி செய்யக் கூடிய இரண்டு பிரிவுகள் உள்ளன. இந்நிலையம் முற்றிலும் நம்முடைய பொறியியல், அறிவியல் வல்லுநர்களால் வடிவமைக்கப்பட்டு, நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நிலையத்திற்கான மொத்தச் செலவில் (ரூ. 245 கோடி) 10 சதவீதமே சிறப்புக் கருவிகளையும், பொருட்களையும் வெளிநாட்டிலிருந்து



தருவிக்கப் பயன்படுத்தப்பட்டுள் ளன.

அணுமின் நிலையத்தின் சிறப்பு பகுதி அணு உலையாகும். உருளை வடிவம் கொண்ட அணு உலைக் கலனில் கனநீர் தணிப்பானாக வைக்கப்பட்டுள்ளது. தணிப் பானால் சூழப்பட்டு 306 எரி பொருள் குழாய்கள் உள்ளன. ஒவ்வொரு எரிபொருள் குழா யிலும் 19 யுரேனிய எரிபொருள் தண்டுகளைக் கொண்ட 12 எரி கற்றைகள் உள்ளன.

முதல்நிலை வெப்பக் கடத்தி யான கனநீர் எரி கற்றைகளை மூழ்க வைத்து, எரிபொருள் குழாய்களில் ஓடுகிறது. கணக் கிடப்பட்ட அளவில் யுரேனிய எரிபொருளும், கனநீர் தணிப் பானும் அருகருகில் இருக்கும் போது, தானாகவே யுரேனிய அணுக்கள் பிளவு பட்டு, தொடர் கிரியை உண்டாகி, நியூட்ரான் களும், எக்ஸ்ரே போன்ற காமாக் கதிர் வீச்சும், ஏராளமான வெப்ப மும் வெளிப்படுகின்றன.

இவ்வெப்பத்தைக் கன நீர் கொதிகலனுக்கு எடுத்துச் செல் கிறது. அங்கு இரண்டாம் நிலை வெப்பக் கடத்தியான, தூய்மைப் படுத்தப்பட்ட பாலாற்று நீருக்குத் தன் வெப்பத்தை அளித்துவிட்டு, கன நீர் அணு உலைக்குத் திரும்புகிறது.

வெப்பத்தை ஏற்றுக் கொண்ட பாலாற்று நீர் நீராவியாகிறது. இந்நீராவி சுழலியி (டர்பைன்) னைச்சுழற்றி, மின் சக்தியை உற் பத்தி செய்கிறது. சுழலியிலிருந்து வெளியேறும் நீராவி குளிர்கல னில் (கண்டென்சர்) தன் வெப் பத்தைக் கடல் நீருக்குக் கொடுத்துவிட்டு, நீராக மாறு கிறது. இந்நீர் கொதிகலனுக்குத் திருப்பி அனுப்பப்படுகிறது.

எரிக்கப்பட்ட யுரேனியம் ஆழ மான நீர்த் தொட்டியின் அடியில் சேமிக்கப்படுகிறது. பிறகு மறு சீராக்கப்பட்டு, இது வருங்கால அணு உலைகளில் பயன்படுத்தப் படும். கதிர் வீச்சமுள்ள கழிவுப் பொருள்களைப் பலமுறைகளில் சீராக்கிய பின், சுற்றுப்புறச் சூழ்நிலைக்குக் கேடு ஏற்படாது என்பதை அறுதி செய்த பிறகு, திரவப் பொருள் கடலிலும், வாயுப்பொருள் காற்று மண்ட லத்திலும், திடப்பொருள் நிலத் திற்கடியிலும் சேர்க்கப்படுகின் றன.

ஹைதராபாத்திலுள்ள 'அணு எரிபொருள் மையம்' யுரேனிய கனிப் பொருளிலிருந்து எரி கற்றைகளை உற்பத்தி செய்து தருகிறது.

கனநீர் என்பது சாதாரண நீரைப் போன்றதுதான். ஆனால் இது எடையில் பத்தில் ஒரு பங்கு கூடுதலானது. சாதாரண நீரைத் தணிப்பானாகப் பயன்படுத்தி, தொடர் கிரியையை உண்டாக்க, செறியூட்டப்பட்ட யுரேனியம் தேவைப்படும். ஆனால், கன நீரைப் பயன்படுத்தினால், இயற்கையில் கிடைக்கும் யுரேனி யத்தைக் கொண்டே தொடர் கிரியையை உண்டாக்க முடியும்.

இக்கனநீர் சாதாரண நீரில் 7000-ல் ஒரு பங்காகக் கிடைக் கிறது. கனநீர் சாதாரண நீரி லிருந்தும், உரத் தொழிற்சாலை யின் உபபொருள்களிலிருந்தும் (அம்மோனியா) தயாரிக்கப்படு கிறது. நம்நாட்டில் பல இடங் களில் கனநீர் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறுவப்பட் டுள்ளன. தூத்துக்குடி 'கனநீர்த் திட்டம்' இவற்றில் ஒன்று.

சென்னை அணுமின் நிலையத் தின் முதல் பிரிவு அணு உலை 1983 ஜூலை 2-ஆம் நாள் இயங் கத் துவங்கிற்று. கல்பாக்கத்தில் கடந்த 23-7-83 அன்று நடை பெற்ற விழாவில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்தார்.

## சத்துணவுத் திட்டத்திற்கு உ.பி. பருப்பு வகைகள்!

முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கும் பொதுமக்களுக்கு 'அமுதம்' நியாய விலைக் கடைகள் மூலம் வழங்குவதற்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், உத்தரப்பிரதேசத்திலிருந்து துவரம் பருப்பு, பச்சைப் பயறு, மசூர் பருப்பு போன்ற பருப்பு வகைகளை வாங்கியுள்ளது.



# இரண்டு நாளில் இரண்டாயிரம் வீடுகள்!



இரண்டே நாளில் இரண்டா யிரத்து நூற்று எட்டு புதிய குடியிருப்புகள் திறந்து வைக்கப் பெற்றன!

சென்னை மாநகரில் ஜூலைத் திங்கள் 9ஆம் நாள் இராணி அண்ணா நகரிலும், 10ஆம் நாள் அண்ணாநகர் மேற்கிலும் இந்தக் குடியிருப்புகளுக்கான திறப்பு விழாக்கள், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கோலாகலமாக நடந்தன.

பி.டி. ராசன் சாலை, கே.கே. நகர் அருகில் உள்ள இராணி அண்ணா நகரில் ரூ. 2 கோடியே 14 இலட்சம் செலவில் 1532 குடி யிருப்புகளுக்கான திறப்பு விழா நடந்தது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தலைவர் திருமதி ஈ. வெ. கி. சுலோசனா சம்பத் அவர்கள் அனைவரையும் வர வேற்றுப் பேசுகையில், ''குடிசை பகுதி மாற்று வாரியம் நிறை வேற்றி வருகிற அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டம், விரைவுபடுத்தப்பட்ட மேம் பாட்டுத் திட்டம், உலக வங்கி உதவியின் கீழ் சுற்றுப்புற மேம் பாட்டுத் திட்டம் இவற்றுக்கெல் லாம் முழு ஒத்துழைப்புத்தந்துதவு கின்ற மாநகராட்சி, குடிநீர்வடி கால் வாரியம், சென்னைப் பெரு நகர் வளர்ச்சிக் குழுமம் ஆகிய அனைத்துத் துறைகளைச்சேர்ந்த அலுவலர்களுக்கும் நன்றி தெரி வித்துக் கொள்கிறேன்'' என்றார்.

தலைமை வகித்து மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில், ''மாநிலங்களுக்கு அதிக அதிகாரமும், நிதியும் கிடைத்தால் மாநில அரசு, தான் நினைப்பதையெல்லாம் ஓர் ஆண் டுக்குள்ளேயே நடத்திக் காட்ட முடியும்'' என்றார்.

குடியிருப்புகளைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி ஆர். அவர்கள் பேசு கையில் குறிப்பிட்டார்:—

'குடிசையிலே இருக்கிறவர்களை நல்ல வீடுகளில் அமர்த்த வேண் டும். அவர்களுக்குத் தீப்பிடிக் காத வீடுகள் கட்ட வேண்டும் என்பது அறிஞர் அண்ணாவின் உள்ளத்தில் தொடங்கப்பட்ட திட்டமாகும்.

அறுபது வயதுக்கு மேல் ஆனவர்கள் 4, 5, 6 என்று மாடி களில் ஏறிப்போவது கடினம். இதுபோன்ற குடியிருப்புகளில் 'லிப்ட்' வைக்க மின்சாரமில்லை; அணு மின்சாரம் கிடைத்தால் 'லிப்ட்' வைக்கலாம். அதனால் இளைஞர்களாக இருப்பவர்களை மேலே மாடிகளில் குடியிருக்கச் செய்ய வேண்டும். வயது ஆன வர்களைக் கீழே இருக்கும்படிச் செய்ய வேண்டும்.

இங்கே குடும்பத்தில் ஒருவ ருக்கு வேலை பற்றிக் கூறினார் கள். காலையில் ஒரு பரிதாப மான விஷயத்தைக் கேள்விப்பட் டேன். ஒரு அம்மாள் என்னைப் பார்க்க வந்தார். அவருக்கு 31 வயது இருக்கும். அவர் கணவர் ஒரு ஆசிரியர். 'வீட்டிற்கு ஒருவ ருக்கு வேலை' திட்டத்தால் தனக்கு வேலை இல்லை என்று கூறிவிட்டார்கள் என்றார்.

இது எப்படிச் சரியாகும்? இதை நான் கேள்விப்பட்டபோது என் உள்ளம் மிகவும் வேதனைப் பட்டது. நாங்கள் வேலைகொடுக்

நிகழ்ச்சித் தொகுப்பு:

**பி. வி. கிரி**

# சிபாரிசுப்படி அடியுரமிட

# விஜய் 17-17-17



இறவைப் பருத்திப் பயிருக்கு விவசாய இலாகா சிபாரிசுப்படி அடியுரமாக தழை, மணி, சாம்பல் மூன்று சத்துக்களும் ஒரே சீரான அளவில் தேவைப்படுகிறது. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய சிறந்த உரம் விஜய் 17-17-17. இதை இங்கு தெளிவாகக் காணலாம்.

ஏக்கருக்கு / கிலோ

| ரகம் | தேவைப்படும் சத்துக்களின் அளவு | | | | விஜய் உரத்தின் அளவு | |
|---|---|---|---|---|---|---|
| | அடியுரம் | | | மேலுரம் | அடியுரம் | மேலுரம் |
| | தழை | மணி | சாம்பல் | தழை | விஜய் 17-17-17 | விஜய் யூரியா |
| வரலட்சுமி | 24 | 24 | 24 | 24 | 140 | 50 |
| எம்.சி.யு-5, 9 | 16 | 16 | 16 | 16 | 95 | 35 |

மேலும் இறவைப் பருத்திப் பயிருக்கான சாகுபடி முறைகளை விவரிக்கும் புத்தகத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

## சமச்சீர் உரமிட



## விஜய்

வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS

HTM-MFL-1220

விஜய் 17-17-17 100 கிலோவில் 17 கிலோ தழைச்சத்து, 17 கிலோ மணிச்சத்து மற்றும் 17 கிலோ சாம்பல் சத்து அடங்கியுள்ளன. இந்தப் பயிருணவுச் சத்துக்கள் சரிவிகித அளவில் இருப்பதற்காக 12.5 கிலோ குறுமணல் சேர்க்கப்பட்டுள்ளது. குறுமணலானது ரசாயன சேர்க்கை அற்றது. ஆகவே இதனை உரத்துடன் சேர்க்கும்பொழுது உரத்தின் தரம் குறைவதில்லை. மேலும் உரக் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் குறுமணல் சேர்க்கை அரசின் அங்கீகாரம் பெற்றுள்ளது.


# தமிழுக்கு காலம் தந்த சீதளச் சீதனம்

வலம்புரி ஜான்



காலத்தால் உருவாக்கப்படுகிறவர்களே தலைவர்கள். காலத்தை உருவாக்குகிறவர்கள் தலைவர்களைப்பிரசவிக்கிற தலைவர்கள். பேரறிஞர் அண்ணா காலத்தை உருவாக்கிய கனிந்த தலைவர்.

நான் பிறந்தபோது இருந்த உலகம், நான் புறப்பட்டுப் போகிறபோதும் புள்ளிகூட மாறாதிருந்தால் நான் பிறவாதிருக்கலாம்.

இந்த எண்ணமே தலைவர்களை உருவாக்குகிற உயிர்க்கருவாக-உந்து சக்தியாக இருந்திருக்கிறது.

ஊர் வாழவேண்டுமென்று நினைத்தவர்கள் உயர்ந்தார்கள். உலகம் வாழவேண்டுமென்று உழைத்தவர்கள் நிமிர்ந்தார்கள். அந்த வகையில் எங்கெங்கெல்லாம் தமிழர்கள் வாழுகிறார்களோ அங்கங்கெல்லாம் அவர்களின் ஆற்றாதொழுகும் கண்ணீரைத் துடைக்கிற அன்புக் கரமாக அமைந்தது பேரறிஞர் அண்ணாவின் கரம்.

எஸ்கிமோக்களின் கண்ணீரைத் துடைக்கிற அளவிற்கு எனது கரங்கள் நீளமாக இல்லை; திபெத்திலிருக்கிற 'யாக்' எருமைகளுக்காக வருத்தப்படுகிற அளவிற்கு எனது இதயம் விசாலமாக இல்லை.

நான் பார்க்கிற மானிடம்-இற்று நொடிந்து கீழே விழுந்து கிடக்கிற மனிதக் கூட்டம்-ஆற்றுவார், தேற்றுவார் இன்றி அரற்றுகிறபோது -எங்கோ இருக்கிற மனிதர்களுக்காக எனது உப்பு நீர்ப்பூக்கள் உலைகின்றன என்றால் என்ன பொருள்?

பெற்றவர் துடிக்கிறபோது மற்றவர்களுக்காக மனம் அழுகிறது என்றால் அந்த மனிதனைப் பற்றி ஊர் என்ன பேசும்? உலகம் என்ன நினைக்கும்?

உலகத்தை அளக்கிற ஆற்றலும், அதனை உற்றுப் பார்த்து, உணர்ந்து நினைக்கிற அறிவாழமும் படைத்திருந்தும் அறிஞர் அண்ணா தமிழ்நாட்டு மக்களை நேசித்ததற்கு இதுவே காரணம்.

சொந்த மண்ணில் அன்னியமாகிப் பழகிப் போன எந்த மரமும் நொந்து போனதே தவிர நொடிப்பொழுதும் வாழ்ந்து முடித்ததில்லை.

வெள்ளைக்காரச் சீமான்களின் தோட்டப் புறக்காடுகளில் கூட்டுக் குடும்பங்களாகக் குலைந்து கொண்டிருந்த நீக்ரோவர்களின் நிலைமை ஆப்ரகாம்லிங்கனைத்தான் தொடும்-தொட்டது. உலகத் தலைவர்களின் கால்களும் ஊரிலேயே பரவி நிற்பதைத்தான் பார்க்கிறோம்.

எண்ணத்திலும் எழுத்திலும் உலகத்தை ஒரு கோலிக் குண்டாக்கிப் பார்க்கிற அளவிற்குப் பக்குவப்பட்டுவிட்ட அறிஞர் அண்ணாவிற்கு, தமிழகம் ஒரு உலகமாகத் தெரிந்தது.

''அநேகமாக அய்ரோப்பிய நாடுகளை விடத் தமிழ்நாடு பெரியது'' என்று அறிஞர் அண்ணா அடிக்கடி கூறிவந்திருக்கிறார்கள்.


சாதிப் பிளவுகளாலும், சமுதாயச் சச்சரவுகளாலும் பிறந்தும், பிரிந்தும் கிடக்கிற இந்தத் தமிழ் மாநிலம் ஒரு உலகிலும் பெரிது என்று அறிஞர் அண்ணா நினைத்தது சரிதானே!


தமிழ்-தமிழ்நாடு-என்று அறிஞர் அண்ணா எழுதிப் பேசி வந்ததற்கே காரணம், மண்ணை நேசிக்கிற மண்பான்மைதான். பிறந்த மண்ணுக்குப் பெருமைசேர்க்காத எவனும், உருவான நாட்டிற்கு ஒரு நாளும் வணக்கம் செலுத்தியவன் ஆகமாட்டான்.

ஏ! தாழ்ந்த தமிழகமே என்று அவர் அழுந்திக் கிடந்த தமிழ் நிலத்தின் குருதி ஓட்டத்தில் ஒரு கொந்தளிப்பை உருவாக்கி வைத்தார்.

அறிவு மனிதனை விடுவிக்கிறது. அன்பு அவனை வேகப்படுத்து







கத்தான் விரும்புகிறோமே தவிர, இருக்கும் வேலையைப் பறிக்க அல்ல. இருக்கிறவர்களை வெளியேற்றுவது அரசின் திட்டமல்ல. அரசு அதைச் செய்யாது. இந்தத் திட்டத்தின் நடைமுறை பற்றி நன்றாக விளக்கிச் சொல்ல வேண்டும்.

**இந்தத் திட்டத்தின்படி புதிதாக யாருக்காவது வேலை கொடுக்கும்போது, எந்தக் குடும்பத்தில் யாருக்கும் வேலை இல்லாமல் இருக்கிறதோ, அவர்களுக்குத்தான் முதல் சலுகை தரவேண்டும் என்றுள்ளதே தவிர, வேலையை எடுப்பது இந்தத் திட்டத்தின் நோக்கமல்ல.**

பத்திரிகைகளில் இதை தயவு செய்து வெளியிட வேண்டும். அவர்கள் இருவரும் சம்பாதித்தாலும் போதுமா என்பது கேள்வி. நல்லது செய்ய வேண்டும் என்பதற்காக அந்தத் திட்டம் கொண்டு வந்துள்ளோம். இப்படிப்பட்ட விபரீதமான விளைவுகள் தொல்லைகள் ஏற்பட அனுமதிக்கக் கூடாது. இதுபோன்ற தவறுகள் நடக்கக் கூடாது. எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டும்.

**குடிசைகளிலிருந்து யாரை வெளியேற்றினோமோ அவர்களுக்கு வீடுகள் கொடுத்தாக வேண்டும். இந்த அரசு யாரையும் நடுரோட்டில் உட்கார விடாது. நடுவீட்டில் உட்கார வைக்கவே நாங்கள் விரும்புகிறோம்.**

இதுபோன்ற குடியிருப்புகளை கிராமங்களிலும் கட்ட வேண்டும் என்பது என் விருப்பமாகும். நான் முதல்வராகத் தொடர்ந்தால் இதை நிறைவேற்றிக் காண்பிப்பேன். அங்கும் மக்கள் தொகை பெருகுகிறது. அங்கே மக்கள் மாடு வளர்க்க வேண்டும்; ஆடுகளை வளர்க்க வேண்டும். அதற்காகத்தான் 'காம்ப்ளெக்ஸ்' என்ற வகையில் 150 வீடுகள், 200 வீடுகள் என்று கட்டும்போது, யார் யார் கால்நடைகளை வளர்க்கிறார்களோ அவர்களுக்கு அதற்காக 'ஷெட்' வைத்துக் கொடுத்தால் மாடுகளை அங்கே வைத்துக் கவனிக்க வசதியாக இருக்கும்.

இந்த எண்ணுள்ள வீடுகளைச் சேர்ந்தவர்கள், இந்த ஷெட்டில் மாடுகளை வைத்துக் கொள்ளலாம் என்று செய்ய உள்ளோம். இப்படி வசதி ஏற்படுத்தித்தரும் திட்டம் உள்ளது. அங்கே பஸ் போக்குவரத்துக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். நாளை துறக்கப்படும் குடியிருப்புப் பகுதிக்கு என். வி. நடராசன் பெயர் வைக்கப்படும். தியாகம் செய்தவர்களை அண்ணாவோடு இருந்தவர்களை நாங்கள் மறக்க மாட்டோம்.''

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் சிறப்புரையாற்றுகையில், ''குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் அனைத்தையும் தவணை முறையில் சொந்தமாக்க அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான காலத் தவணை மற்றும் தொகை குறித்து அமைச்சரவை முடிவு எடுத்துப் பின்னர் அறிவிக்கப்படும். குடிசை மாற்றுவாரியக் குடியிருப்புகளில் ஒதுக்கீடுதாரர் அல்லாதவர்கள் குடியிருந்தால் அவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார்.

**(தொடர்ச்சி 33-ஆம் பக்கம்)**



# தொழில் வளம்: டான்சி

**"டா**ன்சி'' என்று பரவலாக நாட்டு மக்களிடையே நன்கு அறிமுகமாகியிருக்கும் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், பல்வேறு தனியார்துறை தொழில் அமைப்புகளுக்குப் பெரும் அளவில் உள்ளிட்ட தொழில் நுட்ப வசதிகளைப் பெருக்குவது, அவைகளுக்கு அதிகமான அளவில் பல்வேறு வகைகளில் உற்பத்தியைத் திறம்படப் பெருக்குவது ஆகிய சீரிய குறிக்கோள்களுடன் 1965-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

அனைத்து இந்தியாவிலும், டான்சி மாநிலப் பொதுத்துறை சிறுதொழில் இணைப்பின் தனித்பெரும் அமைப்பாக சிறந்து விளங்குகிறது. டான்சி நிறுவனத்தின் கீழ் தற்போது 56 தொழில் உற்பத்திக் கூடங்களும், 7 விற்பனைக் கூடங்களும் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இயங்கி வருகின்றன. சுமார் 6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கி இருக்கும் டான்சி, தன்னுடைய ஆண்டு விற்பனையை ரூ.25 கோடிக்கு உயர்த்தவும் எண்ணிச் செயல்பட்டு வருகின்றது.

டான்சி நிறுவனத்தினரால் தயாரித்து வழங்கப்படும் பொருள்கள் பலப்பல. அவை:

- கனரக மற்றும் இலகு இரும்பு எஃகுக் கட்டுமானங்கள்.
- துத்தநாக மூலாம் பூசப்பட்ட இரும்பு எஃகுக் கட்டுமான கோபுரங்கள்.
- ஹெச். எம். டி. யுடன் இணைந்து ஹேச்சா இயந்திரங்கள் மற்றும் டிரில்லிங் இயந்திரங்கள்.
- ஹெச். எம். டி. நிறுவனத்திற்காக கைக்கடிகார உறுப்புகள் இணைப்பு.
- கொல்லுலை உறுப்புகள்.
- அழுத்தப்பட்ட அச்சு வார்ப்படங்கள்.
- இயந்திரக் கருவிகள். அச்சுகள்.
- இரும்பு வார்ப்படக் குழாய்கள்.
- ஆடைத்தோல், பிற பல வண்ணத்தோல் பதனிடுதல்.
- பதனிடப்பட்ட ஆட்டு ரோமம்.
- தோலினாலான காலணி, பிற சாதனங்கள்.
- பிரெஞ்ச் பாலிஷ், கேஸ் கட் ஷெல்லாக், பிக்சர் வார்னிஷ் போன்றவை.
- சூபர் எனாமல் செப்புக் கம்பிகள்.
- சேஸ் எடை காணும் எடைக்கருவி.
- இரும்பு மற்றும் மரத்தாலான ஃபர்னிச்சர் வகைகள்.
- ஆழ் கிணறு கைப்பம்புகள்.

துத்தநாக முலாம் பூசப்பட்ட இரும்பு எஃகுக் கட்டுமான மின் கடத்திக் கோபுரங்கள், நுண்ணலைக் கோபுரங்கள், இரயில்வே ரூஸ்ட், கனரக மற்றும் இலகு



கிறது. சரம் அவனை நெறிப் படுத்துகிறது என்பதை அறிஞர் அண்ணா கண்டு கொண்டார்.

விழுந்து கிடந்த தமிழகத்தை விழிப்படையச் செய்கின்ற வியக்கத்தக்க பணியில் அவர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டபோது அவர் மேற்கொண்ட முறைகள் மேதியினின் மேனிக்கே சிலிர்ப்பினைச் சிந்துவதாக அமைந்திருந்தன.

பெரியார் என்கிற சூல் கொண்ட கருமேகம் நின்று கனைத்தபோது, வெட்டி இடிக்கிற வேகமின்னலாக இல்லாமல்ீதாக மழையாகத்தவிப்போடு விழுந்தவர் அறிஞர் அண்ணா.

தந்தை பெரியாருக்குத் தன் வந்திரி காலத்து அறுவைச் சிகிச்சை கைவந்த கலையாக இருந்தது. அறிஞர் அண்ணாவிற்கோ அக்குப்பஞ்சர் மென்முறையே கனிந்த பழக்கமாகக் காலமெல்லாம் இருந்தது.

ஒரு மாபெரும் தலைவரிடத்தில் மாறுபட்டும் கூட வேறுபட்டுவிடாத வெள்ளை மனம் படைத்தவர் அவர் காலத்தில் அண்ணா ஒருவர்தான். இரவில் பட்டிமன்றத்தில் எதிரும் புதிருமாக வாதாடுகிறவர்களே, காலை விடிந்தால் கருத்து மாறுபட்டு காலமெல்லாம் எதிரிகளாகி விடுகிற நாடு இது. தெருவில் எரிந்த கட்சி எரியாத கட்சி பாடுகிற ஒரே லாவணிப் பாடகருக்கே சரஜுக்கும் இதயத்துக்கும் தகராறு நடக்கிறதிது.

நேராக நடக்கிற தாயின் வயிற்றில் தலைகீழாகத் தொங்குகிற பிள்ளையைப் போல பெரியாரிடத்தில் பிள்ளையாகவும் இருந்தார்; அண்ணா பிரமிப்பாகவும் வளர்ந்தார்.

பெரியாரிடத்தில் மாறுபடாமலே மகரந்த வார்த்தைகளால்-மந்திர எழுத்துக்களால் -தம்பியர் பட்டாளத்தைத் தழுவியே கடத்திய அந்தத் தாளாளர் உலக வரலாற்றில் ஒப்புவமை இல்லாதவர்.

மேகங்களின் மெல்லிய கூந்தலில் வசந்த மலர்களை வாரி இறைக்கத் தெரிந்த இந்த வானம் பாடிக்கு சரத்தரைகளில் இற்று விழுகிற மண் குடிசைகளை நேசிக்கவும் தெரிந்திருந்தது.

குபேரபுரிகளைக் குலைக்க வந்த அவரது குட்டிக் கதைகள் அறிவாளர்களின் அகல நெஞ்சங்களில் நெருப்புத் துண்டுகளை நீள விதைத்தன.


பண்டித நடைகளைப் படுக்க வைத்துப் பதப்பரதம் ஆடிய அவரது பாண்டி நடை, இளைய நெஞ்சங்களில் அணையாத கவிதைக் காடா விளக்குகளைச் சமைத்தன.

அவர் வாய் திறந்தார்; வரலாறு வாசல் திறந்தது! சொற்கள் அவரிடம் சொந்தம் கொண்டாடின. பூகோளம் புண்ணியம் செய்ததாயிற்று. தமிழ் அவர் நாவில் தாளமிடத் தொடங்கிற்று. தமிழர்கள் தங்கள் வரலாறுகளை வாசிக்காமலே வகை பிரிக்க ஆரம்பித்தார்கள்.

அவரது கருணை சித்தார்த்தனையே சிந்திக்கவைத்தது. அவரது எளிமை விதவைகளுக்கே வியர்வையை வரவழைப்பதாக இருந்தது.

அவருக்குள்ள நீக்குப்போக்கும் தெளிவு கனிவும் அரசியலில் அவரை அவதாரமாக்கியது. 'அஞ்சப்படுகிற அரசியல் வானத்தில்





அவர் ஒரு அத்திப்பூவாக இருந்தார்.

எவர்மேலும் அவருக்குப் பொறாமைப்பட வரவில்லை. எந்த மனிதனையும் பகுத்தும் தொகுத்தும் பார்ப்பது அவருக்கு வாடிக்கையாக இருந்தது. அறவே ஒருவனை வெறுப்பதும் இல்லை; முழுக்க ஒருவனிடம் இழந்து விடுவதும் இல்லை.

அறிஞர் அண்ணா அரசியலில் ராஜரிஷியாக இருந்ததற்கு இதுவேஅடிப்படைக் காரணம்.


அண்ணா தலைவர்களை உருவாக்கிய தலைவர். ராஜா தோடர்மாலை, ராஜாமான் சிங்கை அறிந்து கொண்டதால் அல்லவோ அக்பருக்குப் பெருமை வந்தது!

அதைப்போலவே தன் தம்பிமார்களிடத்தில் ஒளிந்து கிடந்த உணர்வுகளை, உறைந்து கிடந்த திறமைகளை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிற வித்தகராக அவர் விளக்கம் பெற்றார்.

அவர் இன்றும் வாழ்கிறார். தமிழக முதல்வர் புரட்சித்தலைவரின் வடிவில் வாழ்கிறார். வாய்மையான அவர் வாழ்விலும், வள்ளன்மை மிக்க அவரது வடிவிலும் தமிழரின் இனமானம் காக்க உறுதி பூண்டு நிற்கிற அவரது உள்ளன்பிலும் அண்ணா வாழ்கிறார்.

காலத்தால் கனிந்து வரும் பவள விழா நாளில் அவரை அறிந்து கொள்ள ஆரம்பிப்பது இளைய உள்ளங்களுக்கு இன்றியமையாதது.






# சென்னைப் பல்கலைக் கழக 125-வது ஆண்டு விழா

சென்னைப் பல்கலைக் கழகம் 1857ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பம்பாய், கல்கத்தாப் பல்கலைக் கழகங்களும் இதே ஆண்டில்தான் துவக்கப்பட்டன.

சென்னைப் பல்கலைக் கழகம் 125-வது ஆண்டு விழாவினை மிகச் சிரும் சிறப்புமாகக் கொண்டாடத் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதற்காகப் பல்வேறு சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆந்திரா, உஸ்மானியா, கேரளா, மைசூர், மதுரை காமராஜ் பல்கலைக் கழகங்களின் தாயாக விளங்கும் சென்னைப் பல்கலைக் கழகம், தன் நூற்றாண்டின் மேல் வெள்ளி விழாவையொட்டி ரு.25 கோடி செலவில் முன்னோக்குத் திட்டம் ஒன்றை வகுத்துச் செயல்படுத்தவிருக்கின்றது. விழா நிகழ்ச்சிகளை மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஜெயில்சிங் அவர்கள், 1983 செம்படபர் 20ந் தேதி தொடங்கி வைக்க இசைந்துள்ளார்.

விழா நிகழ்ச்சிகளிலும், விழாவையொட்டி நடைபெறும் கருத்தரங்குகளிலும் கலந்து கொள்ள இந்தியாவின் மற்றப் பகுதிகளிலிருந்தும், மேலைநாடுகளிலிருந்தும் 200 கல்வியாளர்கள் பிரதிநிதிகளாக வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 12 வெவ்வேறு கல்விப் பிரிவுகளின் கீழ் தனித்தனிக் கருத்தரங்குகள் விழா நாட்களில் நடைபெறவிருக்கின்றன.

கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் பந்தயங்கள் ஆகியவற்றோடு மூன்று வெவ்வேறு கல்லூரிகளில் ஒரு வார கால விஞ்ஞானக் கண்காட்சிகளும் நடைபெற விருக்கின்றன. ஏழாண்டுக் காலத்தில் சுமார் ரூ. 25 கோடி செலவில் நிறைவேற்றப் படக்கூடிய முன்னோடித் திட்டம் ஒன்றை வகுத்திருப்பதாகத் துணை வேந்தர் டாக்டர் எம். சாந்தப்பா அவர்கள் கூறினார்.

கம்ப்யூட்டர் விஞ்ஞானம், எரிசக்தி, இயல் இசை நாடகம், காந்தீயம், உலக அமைதி உலக கருத்து ஒற்றுமை, இந்திய ஜப்பானிய ஆய்வு, பொது மருத்துவம் மற்றும் குடும்ப மருத்துவம், ஜைனம், வைணவம், சைவம், இஸ்லாம் ஆகியவற்றுக்கெனத் தனித்தனித் துறைகளை ஏற்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தனைப் புதிய துறைகளுக்கும் துறைக்கு 20 இலட்சம் ரூபாய் அறக்கட்டளை ஏற்படுத்தித் தொடங்குவதாகவும், அவ்வயவற்றின் வளர்ச்சியில் ஆர்வம் உடைய அன்பர்கள் அளிக்கும் நன்கொடைகளைக் கொண்டே இந்தத் துறைகளை அமைக்க உறுதியோடு தாங்கள் இப்பணியில் இறங்கியுள்ளதாகவும் மாண்புமிகு நீதிபதி திரு பு. ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்தார்.

விளையாட்டுப் பந்தயங்களின் ஒரு பகுதியாக, பம்பாய், கல்கத்தாப் பல்கலைக் கழகங்களின் கிரிக்கெட் அணிகளோடு, சென்னைப் பல்கலைக் கழகக் கிரிக்கெட் அணி போட்டி இருப்பது பற்றி திரு மேஜர் ஜெனரல் எஸ்.பி. மகாதேவன் அவர்கள் விளக்கினார். இப்பல்கலைக் கழகத்தோடு இணைந்த 68 கல்லூரிகளின் தேசிய சேவைப்படை (என்.எஸ்.எஸ்) மாணவ மாணவியர் பல்கலைக்கழகத்தின் 125ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்க, 125 ஆயிரம் மரக்கன்றுகளைத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

சென்னைப் பல்கலைக் கழக நூலகத்தின் பவளவிழாவும், இதே நாட்களில் கொண்டாடப்படுகிறது. நூலகம் மேலும் நவீனமயப்படுத்தப்படுகிறது. நூலகத் தந்தையாக விளங்கிய டாக்டர் ரங்கநாதனின் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கவும் ஏற்பாடாகியுள்ளது.

விழாக் குழுவின் தலைவர் மாண்புமிகு நீதிபதி திரு. பு.ரா. கோகுலகிருஷ்ணன், நிதிக் குழுவின் தலைவர் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு கே. ராஜாராம், விளையாட்டுப் பந்தயக் குழுவின் தலைவர் திரு மேஜர் ஜெனரல் எஸ்.பி. மகாதேவன், கண்காட்சிக் குழுவின் தலைவர் டாக்டர் சுவாமிநாதன், துணை வேந்தர் டாக்டர் எம்.சாந்தப்பா, பதிவாளர் திரு சி.கே. குமாரசாமி முதலானோர் 29.8.83 அன்று நடந்த செய்தியாளர்கள் கூட்டத்தில், இவ்விழாவையொட்டி செய்யப்பட்டுள்ள பல்வேறு ஏற்பாடுகளை விளக்கினர். —பி. வி. ஜி.



# சுந்தரபாண்டியம் கிராம ஏற்பு விழா

மத்திய அரசுச் செய்தி விளம்பரத் துறையின் முகவை மாவட்டப் பிரிவும், முகவை மாவட்டப் பட்டு வளர்ச்சித் துறையும் இணைந்து வத்திராயிருப்பு ஒன்றியப் பகுதிகளில் வளர்ச்சிப்பணியுடன் கூடிய இந்தியப் பிரதமரின் புதிய 20 அம்சத்திட்ட தீவிர விளம்பர இயக்கத்தினை ஜூலை 13 முதல் 17 வரை மேற்கொண்டன.

என். ரெங்கநாதன்
மத்திய அரசு செய்தி விளம்பர அலுவலர்,
திருநெல்வேலி.

பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில், பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தின்படி கிராம ஏற்புத் திட்டத்தின் கீழ் சுந்தர பாண்டிய கிராமம் ஏற்கப்பட்டுள்ளது.

15ஆம் தேதி சுந்தரபாண்டியம் அரசு மேல் நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கான பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பல்வேறு வளர்ச்சித் துறையினர் பங்கேற்ற கண்காட்சியும் நடைபெற்றது.

மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி, அழகிய கையெழுத்துப் போட்டி, பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி, வினாடிவினாப் போட்டி ஆகியவை நடைபெற்றன.

வெற்றி பெற்றமாணவர்களுக்கு ரூ. 800க்குப் பரிசுப் பொருள்களும், நற்சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.


குன்னூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தினைச் சார்ந்த 23பேர் சுந்தரபாண்டியம் கிராமத்தில் வீடு வீடாகச் சென்று பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டம், சிறு குடும்பநெறி, சத்துணவின் அவசியம் ஆகியவை பற்றி விரிவாக எடுத்துரைத்ததுடன், தாய் சேய் நலப் பணிகளையும் மேற்கொண்டனர். இவ்வியக்கத்தின்போது 837 பேருக்கு டைபாயிடு காய்ச்சல் தடுப்பு ஊசி போடப்பட்டது. டிபிடியும், சத்து மாத்திரைகளும் தேவையானோருக்கு வழங்கப்பட்டன.

சுந்தரபாண்டியம் அரசு மேல் நிலைப்பள்ளிக் கட்டடத்தில் 16ஆம் தேதி முகவை மாவட்ட மருத்துவ அலுவலரின் ஒத்துழைப்பின் பேரில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இம் மருத்துவ முகாமில் 429 கிராம மக்களுக்கு இலவச சிகிச்சையும், மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. அருப்புக்கோட்டை, இராமநாதபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் அரசு மருத்துவமனைகளிலிருந்து அரசு மருத்துவர்களும், மருத்துவப் பணியாளர்களும் வருகை புரிந்து மருத்துவ முகாம் வெற்றிக்கும் பணி புரிந்துகொண்டிருந்தனர்.

கண்காட்சியில், பட்டு வளர்ச்சித்துறையினரின் செயல் விளக்க அமைப்பு அனைவரையும் ஈர்த்தது. மற்றும் மத்திய அரசு விளம்பரத்துறை, ஊட்டச் சத்துப்பிரிவு, மக்கள் நல்வாழ்வுத் துறை, வள்ளுவர் நெசவாளர் கூட்டுறவுத்துறை, வேளாண்மைத் துறை இக்கண்காட்சியில் பங்கேற்றன. பட்டு வளர்ச்சித்துறை, மத்திய அரசு விளம்பரத்துறையின் சார்பில் அரசு திட்ட விளக்க நூல்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

ஜூலை 17ஆம் தேதி மாலை நிறைவு விழா நிகழ்ச்சி சுந்தர பாண்டியம் கிராமத்தில் நடைபெற்றது. அவ்வமயம் பட்டுத் தொழில் தொடங்கக் கடன் உதவி, நெசவாளர்களுக்குக்கடன் உதவி, கறவை மாடு வாங்கக் கடன் உதவி, பாண்டியன் கிராம வங்கி, யூனியன் பேங்க் ஆப் இந்தியா ஆகியவற்றின் சார்பில் வழங்கப்பட்டன.

கிராம ஏற்புத் திட்டத்தின் கீழ், சுந்தரபாண்டியத்தில் கிராமிய பட்டு இளம்புழு வளர்ப்பு நிலையம் துவக்கப்பட்டு இது வரை 17 பேருக்கு 1425 முட்டைத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.



கிராம மக்களின் முக்கிய தேவையான மேல் நிலை நீர்த் தொட்டி, மருத்துவமனை ஆகியவை அமைப்பதற்கு ஆவன செய்ய குழு அமைக்கப்பட்டது. கிராம ஏற்புத் திட்டத்தால் பல்வேறு நற்பணிகள் சுந்தரபாண்டியம் கிராமத்தில் உருவாகி உலகை தர உள்ளன.



திரு.வி.க. அவர்களின் தமையனார் உலகநாதரின் பெண்மக்கள் 'தமிழரசு' இதழுக்கு அளித்த பேட்டி.

# அன்பு நெஞ்சம் கொண்டவர் திரு.வி.க.

## மூத்தமகள் மங்கையர்க்கரசி

திரு. வி. க. அவர்களை சிற்றப்பா என்றழைப்பீர்களா - சின்னய்யா என்றழைப்பீர்களா?

சின்னா என்றுதான் நாங்கள் அழைப்போம்!

திரு. வி. க. தன் தமையனார் மகளான உங்களிடம் எத்தகைய அன்பு காட்டினார்?

எங்களிடம் அவர் மிகுந்த அன்பு காட்டுவார். தமையனாரின் மக்கள் என்று அவர் எங்களை நினைத்ததில்லை. தாம் பெற்ற மக்களாகவே கருதி வந்தார். அவரது மனைவியார் மறைந்தபோது திரு. வி. க.வுக்கு 35 வயதுதானிருக்கும். மறுமணம் செய்து கொள்ளக் கூடிய வயது தான். ஆனால் அவர் செய்து கொள்ளவில்லை. எங்களிடத்தில் வைத்திருந்த பேரன்புதான் அதற்குக் காரணம்.

என் தங்கைக்கு 12 வயதிருக்கும்போது கூட அவளைத் தூக்கி வைத்துக் கொண்டே இருப்பார். அதுபோன்ற அன்பு உள்ளம் வேறு யாருக்கும் இருக்காது.

எங்களுக்குத் திருமணம் செய்வித்தபோது கூட மாமியார் வீட்டுக்கு அனுப்பாமல்- மருமக்கள்மார்களையும் தமது வீட்டிலேயே வைத்துக் கொண்டார் என்றால் - எங்கள் மீது அவருக்கு எவ்வளவு அன்பு இருந்தது என்பது எளிதில் விளங்கும்.

உங்கள் குழந்தைகளை அவர் பார்த்திருக்கிறாரா?

என் மக்களில் சிலரை அவர் பார்த்திருக்கிறார். அதுமட்டுமல்ல - அவரது எழுத்துப்பணிக்கு என் மக்களையும் அவர் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். பரம் பொருள் அல்லது வாழ்க்கைத் துணை என்னும் நூலை அவர் சொல்லச் சொல்ல எனது இரண்டாவது மகள் சிவயோகவல்லி எழுதினாள்.

என் மூத்தமகள் கற்பகவல்லி குழந்தையாக இருக்கும்போது அவளை அவரது பக்கத்திலே போட்டுவிட்டு, வீட்டுக் காரியங்களில் சடுபடுவேன். அவர் 'பீடிங் பாட்டிலை' எடுத்து, குழந்தைக்குப் பால் புகட்டியவாறே எழுத்துப் பணியில் சடுபடுவார். பேத்திகளிடமும் அவருக்குப் பேரன்பு உண்டு. பொதுவாகக் குழந்தைகளிடத்திலேயே அவருக்கு மிகுந்த அன்பு உண்டு.

திரு. வி. க. வின் இயல்புகள் குறித்துச் சொல்ல முடியுமா?

அவர் குழந்தை மாதிரி உள்ளம் படைத்தவர். எளிய வாழ்க்கையில் இன்பம் கண்டவர். உறுதியான நெஞ்சம் படைத்தவர்.

இளமை கோட்டு—சராய்த் தலைப்பாகையுடன் திரு. வி. க.



அவருக்கு இசைப்பாடலில் விருப்பம் உண்டா?

இசைப் பாட்டில் மிகுந்த விருப்பம் உண்டு. என் 3-வது பெண் வசந்தகுமாரி நன்றாகப் பாடுவாள். அவளது பாட்டை மிக விருப்பமுடன் கேட்பார் திரு. வி. க; அவர், தினமும்

பேட்டி: தமிழ்ப்பித்தன்

இரும்பு எஃகுக் கட்டுமானங்கள், பவர் அவுஸ், கப்பல் கட்டுமானக் கூடம், துணை மின் நிலைய கட்டுமானம் மற்றும் நிலக்கரி கையாளப்படும் கூடம் ஆகியவற்றை டான்சி தயாரித்து வழங்கி வருகிறது.

திருச்சியில் அமைந்துள்ள டான்சி கட்டுமானத் தொழிற்சாலையும், டான்சி கருவிகள் மற்றும் பொறியியல் தொழிற்சாலையும் மத்திய அரசு நிறுவனமான ''பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ்'' (BHEL) தொழிற்சாலைக்குத் தேவையான இரும்பு எஃகுக் கட்டுமானங்கள், அழுத்தப்பட்ட அச்சுக் கருவிகள், பாய்லருக்குத் தேவையான உபகரணங்கள், இயந்திரக் கருவிகள் மற்றும் அச்சுகளை உற்பத்தி செய்து வழங்குகின்றன.

டான்சி பொதுத் துறைக்கும் தனியார் துறைக்கும் தேவையான பல்வேறு சாதனங்களை வழங்குவதில் ஒரு முன்னோடியாக விளங்குகிறது. குறிப்பாக அலுமினியம் மற்றும் வேறு உலோகங்களாலான அச்சழுத்தச் சாதனங்களை மோட்டார்த் தொழிலுக்கும் மற்ற பொறியியல் துறைக்கும் டான்சி வழங்குகிறது. ஆவடி கனரக ஊர்தித் தொழிற்சாலைக்கு நுணுக்கம் நிறைந்த உபகரணங்களைத் தயாரித்து வழங்குகிறது. விண்ணியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்குத் ( ISRO ) தேவையான இயந்தரக் கருவிகள் மற்றும் அச்சுகளைத் தயாரித்து பெருமையுடன் வழங்குகிறது. டான்சி கொல்லுலைத் தொழிலகங்கள் உயர் வெப்ப முறையில் உறுதியான எஃகு உறுப்புகளைச் செல்வனே செய்து வழங்குகின்றன.

குடிநீர் மற்றும் வடிகால் வசதிக்காகத் தரம் மிகுந்த இரும்பு வார்ப்படக் குழாய்கள் டான்சி நிறுவனத்தால் செய்யப்படுகின்றன. ஈரோட்டில் அமைந்துள்ள டான்சி தொழிலகம் ''மெஹனைட்'' முறையில் தரத்தில் உயர்ந்த வார்ப்படச் சாதனங்களைச் சர்க்கரைத் தொழிலுக்கும் சிமெண்டுத் தொழிலுக்கும் வழங்கி வருகிறது. கதர் மற்றும் கிராமியத் தொழில் வாரியத்துக்குத் தேவையான எண்ணெய்ச் செக்குகளை டான்சி தனது கிண்டித் தொழிற்சாலையில் தயாரிக்கிறது.

தமிழகத்தில் சூப்பர் எனாமல் செப்புக் கம்பிகளை உற்பத்தி செய்து வழங்கும் ஒரே நிறுவனம் டான்சி. இந்தியத் தர நிர்ணயக் கழக விதிகளுக்கு உட்பட்டு தயாரிக்கப்படும் டான்சியின் ஆழ்கிணறு கைப்பம்புகள் வறட்சி நிவாரண பணிகளுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. ஸ்பிரிட் மூலப் பொருளாய்க் கொண்ட கேஸ்கெட் ஷெல்லாக், பட வார்னிஷ் போன்ற பொருள்களை டான்சி தயாரித்து நியாயமான விலையில் மக்களுக்கு வழங்கி வருகிறது. அரசுத் துறையில் மட்டும் உற்பத்தி அனுமதிக்கப்பட்டிருக்கும் பொருளான பிரெஞ்ச் பாலிஷ் உயர்ந்த தரத்துடன் டான்சியால் தயாரிக்கப்படுகிறது.

டான்சி ஹெச்.எம்.டி. தானியங்கி அனுப்பு இயந்திரம் (Hydraulic Power Hacksaw) ஹெச்.எம்.டி. (சர்வதேசம்) நிறுவனத்தால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மற்றும் துளையிடும் இயந்திரங்களையும் டான்சி உற்பத்தி செய்து வழங்குகிறது.

டான்சயின் தரமிகுந்த மரம் மற்றும் இரும்பு ஃபர்னிச்சர் வகைகள் அழகுக்காகவும், உறுதிக்காகவும் மக்களால் மிகவும் விரும்பப்படுபவையாகும்.


மேல் திசை நாடுகளில் டான்சியின் தோல்கள் மிகவும் புகழ் வாய்ந்ததாக விளங்குகின்றன. ஆண்டிற்கு ரூபாய் 1 கோடி மதிப்புள்ள தோல்கள் ஏற்றுமதி செய்து அரசுக்கு அன்னியச் செலாவணியை ஈட்டித்தருகிறது. தொழிலாளர்களுக்குத் தேவையான பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள் போன்றவற்றை டான்சி தொழிற்சாலைகள் செவ்வனே செய்து தருகின்றன. பதனிடப்பட்ட ஆட்டுரோமம் ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. டான்சியின் மற்றுமோர் ஏற்றுமதிப் பொருள் ஆடைத்தோல் (Garment Leather).

டான்சி, புதிதாக தமிழ்நாடு வனத்துறைக்கு ஆண்டுக்கு 18 மெட்ரிக் டன் சந்தன எண்ணெய் எடுக்கும் திறன் கொண்ட சந்தன எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்று அமைத்துக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்டம் வாணியம்பாடி தாலுகாவின் பின்தங்கிய பகுதியான தெக்குப்பட்டு கிராமத்தில் ரூ.54 இலட்சம் மதிப்புள்ள இவ்வாலையை அமைக்கத் திட்டமிட்டு ஆரம்ப கட்ட வேலைகள் நடந்து வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 125 பேர் வேலைவாய்ப்பு பெறுவர்.

வறட்சி நிவாரணப் பணியில் டான்சியின் பங்கு சிறப்பானது. இந்தியத் தர நிர்ணயங்களுக்கேற்ப தயாரிக்கப்படும் டான்சியின் ஆழ்கிணறு கைப்பம்புகள் சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டு குடிநீர்த் தேவையைச் சமாளிக்க உதவி வருகின்றன. டான்சி வடிவமைத்து வழங்கும் நீர்த் தொட்டிகள் குடிநீர் வசதியே இல்லாத இடங்களுக்குக் குடிநீர் எடுத்துச் செல்லவும் தேக்கி வைக்கவும் உதவி வருகின்றன.

பொதுத்துறை நிறுவனமான டான்சி, வாணிபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல் குறிப்பாக கடந்த ஐந்து ஆண்டுகளில் நாட்டு முன்னேற்றத்திற்கும், மக்கள் நல்வாழ்வுத் திட்டத்திற்குமான பணிகளில் தன்னை திறம்பட ஈடுபடுத்திக் கொண்டு சிறப்பாகத் தொண்டாற்றியிருக்கின்றது.





# கால்நடைச் செல்வம்

வறுமைக்கோட்டின் கீழ்உள்ள அனைவருக்கும் உடனடி உதவியளிப்பதிலும், அவர்தம் வாழ்க்கைத் தரத்தைப் பல்வேறு கால்நடை பராமரிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் மேம்படுத்துவதிலும் சமீப ஆண்டுகளில் அரசு வியத்தகு முன்னேற்றம் கண்டுள்ளது. மாநில வருவாயில் கால்நடை பராமரிப்புத்துறையின் பங்கு மற்ற ஆண்டுகளை விட 1980-81ல் 12,878 இலட்சம் ரூபாயாக அதிகரித்துள்ளது. உயர்ந்துள்ளது. முட்டை உற்பத்தி 1977-78 ஆம் ஆண்டைக் காட்டிலும் 1981-82ல் 34.46 சதவிகிதம் அதிகரித்துள்ளது. அதாவது 1977-78ல் 682 மில்லியனாக இருந்த முட்டை உற்பத்தி 1981-82ல் 917 மில்லியனாக அதிகரித்துள்ளது.

### கால்நடை வளர்ப்புத் திட்டங்கள்

ஏற்கெனவே இயங்கி வந்த ஏழு கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்கள் தவிர, மேலும் 2 திட்டங்கள் தாம்பரம், பண்ணுருட்டி ஆகிய இடங்களில் ஒரு இலட்சம் இனப்பெருக்கக் கால்நடைகளை உள்ளடக்கிப் பணிபுரியும் வகையில் 1981-82ல் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் மூலம் ஆண்டுக்கு 5000 முதல் 6000 வரை சிறந்த கிடேரிக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, ஆண்டொன்றுக்கு எழுபது இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி அதிகரிக்கப்படும்; கால்நடைகளின் மதிப்பு 3.0 கோடி ரூபாயாக உயரக்கூடும்.

ஏற்கெனவே உள்ள 57 கேந்திர கிராம நிலையங்கள் தவிர, மேலும் 5 நிலையங்கள் 1980-82ல் தஞ்சாவூர் மாவட்டத்தில் துவக்கப்பட்டு, 50,000 இனப்பெருக்க ஆவினங்களை உள்ளடக்கிச் செயல்படுகிறது. இந்நிலையங்களுடன் இணைக்கப்பட்ட 50 கிளை நிலையங்களின் மூலம் ஆண்டுக்கு 20,000 கருத்தரிப்பு ஊசிகள் போடப்படுகின்றன.

செயற்கை முறை இனவிருத்தியில் நவீன சாதனமான உறைவிந்து தொழில் நுட்பம் குறிப்பிடத்தக்க விதத்தில் இம்மாநிலத்தில் விரிவாக்கப்பட்டுள்ளது. டென்மார்க் அரசின் உதவியுடன் ரூ.38.81 இலட்சம் செலவில் ஈச்சங்கோட்டையிலுள்ள அயலினக் கால்நடை வளர்ப்புப்பண்ணையில் உறை விந்து வங்கி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. திரவ நைட்டிரஜன் மற்றும் உறைவிந்து நிலையம் ஒன்று ரூ.14.55 இலட்சம் செலவில் அபிஷேகப்பட்டி மாவட்டக் கால்நடைப் பண்ணையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மற்றுமொரு உறை விந்துத் திட்டம் வெண்மைப் புரட்சியின் கீழ் உட்படாத ஐந்து மாவட்டங்களிலுள்ள ஏழு இலட்சம் இனப்பெருக்கப் பருவமுடைய ஆவினங்களை உள்ளடக்கும் வகையில்



### உற்பத்தி உயர்வு

கால்நடை பராமரிப்புத் துறையினால் செயற்படுத்தப்பட்ட திட்டங்களினால் பசு மற்றும் எருமையினங்களின் பால் உற்பத்தியில் ஏற்றங் கொண்டுள்ளதை ஒருங்கிணைந்த மாதிரி அளவீட்டின் வாயிலாக அறியமுடிகிறது. 1977-78ல் பசு மற்றும் எருமை ஒன்றின் அன்றாடச்சராசரிபாலின் அளவு முறையே 1.888 கி.கி. மற்றும் 2.534 கி.கி ஆக இருந்தது. இது 1981-82ல் முறையே 2.018 கி.கி மற்றும் 2.881 கி.கி ஆக உயர்ந்துள்ளது. 1977-78-ல் 1.68 மில்லியன் டன்னாக இருந்த மொத்தப் பால் உற்பத்தி, 1981-82ல் 1.8886 மில்லியன் டன்னாக



ரூ.117.31 இலட்சம் செலவில் மத்திய அரசின் உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**கால்நடைச் செல்வம்**

**சராசரி பால் கறவை**

| | 1978 | 1982 |
|---|---|---|
| ஒரு பசுவின் அன்றாடக் கறவை | 1.888 கி.கி. | 2.018 கி.கி. |
| ஒரு எருமையின் அன்றாடக் கறவை | 2.534 கி.கி. | 2.881 கி.கி. |
| மொத்தப் பால் உற்பத்தி | 16.8 லட்சம் டன் | 18.9 லட்சம் டன் |
| மொத்த முட்டை உற்பத்தி | 68.2 கோடி | 91.7 கோடி |

### ஆட்டின வளர்ப்பு

தமிழகத்தில் இறைச்சி உற்பத்தியை உயர்த்தும் பொருட்டு பெருமளவில் குடற்புழு நீக்கும் புதிய திட்டமொன்று திருச்சி, புதுக்கோட்டை, செங்கற்பட்டு மாவட்டங்களில் 1980-81ல் ரூ. 3.75 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் இதர மாவட்டங்களுக்கு ரூ. 38.28 இலட்சம் செலவில் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. இதன் விளைவாக இறைச்சி உற்பத்தி அதிகரிக்கப்பட்டு, மாநிலத்திற்குக் கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது.

இம்மாநிலத்தில் வெள்ளாடு வளர்ப்பை மேம்படுத்தும் பொருட்டு, மாவட்டக் கால்நடைப் பண்ணை புதுக்கோட்டையில் ரூ.15.98 இலட்சம் செலவில் 200 ஜமுனாபாரி வெள்ளாடுகளை அடிப்படை இருப்பாகக் கொண்டு ''வெள்ளாடு வளர்ப்பு நிலையம்'' ஏற்படுத்தப்பட்டது.

இறைச்சி, பால் ஆகியவைகளை அளிக்கும் இரட்டைப் பயனுள்ள வெள்ளாடுகள் ஆகும். எனவே, இராமேஸ்வரம் பகுதிகளிலுள்ள உள்ளூர் வெள்ளாடுகளின் தரமுயர்த்தி இப்பகுதியிலுள்ள நலிந்த வகுப்பாரின் வாழ்வில் ஏற்றமளிக்கும் பொருட்டு, ரூ.0.51 இலட்சம் செலவில் 1981-82ல் புதிய திட்டமொன்று செயற்படுத்தப்பட்டது.

''கூட்டுறவே நாட்டுயர்வு'' என்பதினை மக்கள் உணர்ந்துள்ளபடியால் அவர்தம் ஒத்துழைப்புடன் 1979-80ல் 311 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. அவை 1982-83ல் 714 சங்கங்களாக உயர்ந்துள்ளன. இதன் மூலம் சுயவேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ளோரின் பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

ஆட்டின வளர்ச்சியில் புது மலர்ச்சி உண்டாக்கும் வகையில் கிராமப் புற வேலையற்ற இளைஞர்கட்கு ஆட்டினப் பராமரிப்பு அவற்றின் சாதாரண நோய்கள் பற்றியவைகள், அவற்றிற்கான தடுப்பு நடவடிக்கைகள் போன்றவற்றில் பயிற்சியொன்று 1981-82ல் துவங்கப்பட்டு, இதுகாறும் 800 இளைஞர்கள் பெரிதும் பயன் அடைந்துள்ளனர். இப்புதிய திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

### கோழியின வளர்ப்பு

சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டதன் மூலம் எண்ணிறந்த கோழி வளர்ப்பு நிலையங்கள் மாநிலமெங்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பெருகிவரும் கோழி வளர்ப்புத் தொழிலைக் கருத்திற்கொண்டு, ''கோழி நோய் கண்டறியும் சோதனைக் கூடம்'' ஒன்று முதன் முறையாக இம்மாநிலத்தில் 1981-82ல் ரூ.2.77 இலட்சம் செலவில் ஈரோட்டில் ஏற்படுத்தப்பட்டது. இப்பரிசோதனைக் கூடம், நோய் கண்டறிவதில் விவசாயிகளுக்கு உதவுவதுடன், வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்படும் கோழியினால் பரவும் நோய்களைக் கண்டறிந்து ஆவன செய்கிறது. இதனால் கோழி இறப்பினால் ஏற்படும் இழப்பு பெருமளவில் தவிர்க்கப்பட்டு கடந்த மூன்றாண்டுகளில் நம் மாநிலத்தின் முட்டை உற்பத்தி 17.3 சதவீதம் அதிகரித்துள்ளது.

### பன்றியின வளர்ப்பு

சமீப ஆண்டுகளில் பன்றி வளர்ப்பில் புதியதோர் சாதனை மேற்கொள்ளப்பட்டது. 1981-82ல் தேர்ந்தெடுக்கப்பட்ட 125 பன்றிவளர்ப்போர் ஒவ்வொருவருக்கும் ஒரு ஆண்பன்றி வீதம் அயலினப் பன்றி இலவசமாக வழங்கப்பட்டது. சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டத்தின் கீழ் 1981-82 மற்றும் 1982-83 ஆம் ஆண்டுகளில் 100 அயலினப் பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. கால்நடைப் புரதச் சத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, சமீப ஆண்டுகளில், பன்றியிறைச்சியை உண்பதில் பொதுமக்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டதுடன், இதற்கான விளம்பரப் பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டன.

### கால்நடை தீவனப்பயிர் வளர்ப்பு

ஏற்கெனவே இயங்கி வந்த 4 தீவனப்பயிர் விதை உற்பத்தி நிலையங்கள் தவிர மேலும் 2 நிலையங்கள், தீவனப்பயிர் விதைகள் மற்றும் புல் நாற்றுகள் ஆகியவற்றை சகாயவிலையில் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்யும்நோக்குடன் ஈச்சங்கோட்டை, செட்டிநாடு ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டன.

### கால்நடை நோய் நீக்கப் பணிகள்

1980-83 ஆம் ஆண்டுகளில் கூடுதலான கிராமங்களுக்குக் கால்நடை நோய் நீக்கப் பணிகள் ஆற்றும் நோக்குடன், 55 புதிய கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டன. 15 மருந்தகங்கள் மருத்துவமனைகளாகவும், 7 மருத்துவமனைகள் பிரதம மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன. இப்பணிகளுக்காகத் தமிழகத்தில் அளிக்கப்படும் நிதி ஒதுக்கீடு, பிற மாநிலங்களைக் காட்டிலும் அதிகமானது என்பது குறிப்பிடத்தக்கதாகும். கடும் வறட்சிக் காலங்களில் நிதி ஒதுக்கீடு இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே இயங்கி வந்த 14 வெக்கை நோய்த் தடுப்பு மாவட்டக் குழுக்கள் தவிர, 1980-81ல் புதுக்கோட்டை, ஈரோடு மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் 4.27 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 3 குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. ஏற்கெனவே இயங்கி வந்த 13 சோதனைச் சாவடிகள் தவிர மேலும் 3 சாவடிகள் நீலகிரி மாவட்டத்திலும் ஏற்படுத்தப்பட்டன. இதன் மூலம் பெரும் இழப்பினை உண்டாக்கும் கொடிய நோயான வெக்கை நோய் ஒழிக்கப்பட்டு வருகிறது.

முதன் முறையாக மதுரையில் ரூ.3.30 இலட்சம் ரூபாய் செலவில் ''கதிர் இயக்கப் பிரிவு'' ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவு ஆண்டுக்குச் சுமார் 900 நோயுற்ற கால்நடைகளுக்குப் பயன் பெறும் வகையில் பணியாற்றும்.

1980-81-ல் கோமாரி நோயைத் தடுக்கும் திட்டமொன்று 7.40 இலட்சம் ரூபாய் செலவில் செயற்படுத்தப்பட்டு, மத்திய அரசின் உதவியுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

கால்நடை மருந்தகங்களில் மருந்துகளின் தட்டுப்பாட்டினைத் தவிர்த்து, உடனடியாக வழங்கும் பொருட்டு தரமுள்ள கால்நடை மருந்துகளைத் தயாரிப்பதற்காக 16.14 இலட்சம் ரூபாய் செலவில் 1980-81ல் ''மருந்து தயாரிக்கும் நிலையம்'' ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் புகழ்பெற்ற நாய் இனங்களான இராஜபாளையம் மற்றும் கோம்பை இனங்களை, அழியவிருந்த நிலையிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் 1980-81ல் 0.50இலட்சம் ரூபாய் செலவில் முதல் ''நாய் வளர்ப்பு நிலையம்'' ஏற்படுத்தப்பட்டது.

கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தின் பல்வேறு பிரிவுகள் கடந்த மூன்று ஆண்டுகளில், தடுப்பு மருந்து உற்பத்தியை உயர்த்தும் நோக்குடன் வலுப்படுத்தப்பட்டன.

சிறு-குறுநில விவசாயிகள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்புகளை அளித்து நல்வுற்ற வகுப்பினர் வறுமைக் கோட்டைத் தாண்டுவதற்கு உதவும் நோக்குடன் இம் மாநிலத்தில் ஒரு மாவட்டங்களில் இத்திட்டம் செயற்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில், கன்று மானியம் பெறும் பொருட்டு 19,857 கன்றுகள் சேர்க்கப்பட்டன. கடந்த மூன்றாண்டுகளில், 489 கறவைப் பசுக்கள்; 990 வேலை எருதுகள்; 195 ஜோடி வேலை மாடுகள்; 13 ஜோடி உழவு மாடுகள் வழங்கப்பட்டன. 1192 செம்மறியாடு வளர்ப்புப் பிரிவுகளும், 20 வெள்ளாடு வளர்ப்புப் பிரிவுகளும், 65 கோழி வளர்ப்புப் பிரிவுகள் மற்றும் 65 பன்றியினப் பிரிவுகளும் 2 கால்நடை மருந்தகங்களும் ஏற்படுத்தப்பட்டன. இவ்விதமான 3029 பழங்குடியினரின் குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

மலைப்பகுதிகளின் மேம்பாட்டிற்காகக் கூடுதல் நிரந்தர வசதிகளை உருவாக்குவதே இத்திட்டத்தின் இலக்காகும். இத்திட்டத்தின் கீழ் 1980-83ல், உதகமண்டலம், மாவட்டக் கால்நடைப் பண்ணை வலுப்படுத்தப்பட்டது. கால்நடை நோய் புலனாய்வு நிலையமொன்று நிறுவப்பட்டது. 4 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம்415ஆடு வளர்ப்புப் பிரிவுகள் அமைக்கப்பட்டன. மேலும் 40 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. 1981-82ல் கீழ்குண்டா மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டப்பட்டது. உதகமண்டலம் மற்றும் குருத்துக்குளி பண்ணைகளில் 5 இலட்சம் ரூபாய் செலவில் தீவனப் பயிர் உற்பத்திக்காகப் புதிய திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 173 மருத்துவ நிலையங்களில் உறைவிந்து தொழில் நுட்பத்தை மேற்கொள்வதற்கான வசதிகளை அளித்தல்: இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கால்நடைகளுக்கு மருத்துவப் பணிகள் ஆற்றும் பொருட்டு 28 நடமாடும் மருத்துவ நிலையங்களை ஏற்படுத்துதல் ஆகியவை 1980-83 ஆண்டின் குறிப்பிடத்தக்க சாதனைகளாகும்.

* **ஜனநாயகம் வளர்ந்து முழுமை பெறும் போது கட்சிகளுக்கிடையே காணும் கொள்கை வேறுபாடு சிறுத்துவிடும்!**

* **நாட்டின் நல்ல அரசியல் மரபை உண்டாக்கவும், உண்மை ஜனநாயகம் மலரவும் எல்லா அரசியல் கட்சியினரும் பாடுபட வேண்டும்!**



சிறு-குறுநில விவசாயிகள் மற்றும் நிலமற்ற தொழிலாளரின் நலன் கருதி 1980-81ல் கன்று மானியத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் கன்றுகளை 25 மாதக் காலத்திற்குப் பராமரிக்கும் பொருட்டு, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 22.85 இலட்சம் செலவில் 2500 கன்றுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழகம் கொடிய வறட்சியால் பாதிக்கப்பட்ட வேளையில் கால்நடை வளர்ப்போரின் துயர் துடைத்து, கால்நடைகளுக்குத் தேவையான தீவனப்பயிர் கிடைப்பதற்கான வழிவகைகளை அரசு மேற்கொண்டு கீழ்க்கண்டுள்ள பணிகளை ஆற்றியது:—

ஒரு கிலோ 7 முதல் 15 பைசாக்கள் வீதம் 8,474 மெட்ரிக் டன் வைக்கோல் 1,14,252 ஏழை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கான மானியம் 34.70 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. வைக்கோல் வாங்குவதற்காக 12.22 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது.

வறட்சிப் பகுதிகளில் கால்நடைகளை கொடியக் கோமாரி நோயிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு 17.25 இலட்சம் ரூபாய் செலவில் 1,44,270 கால்நடைகளுக்குக் கோமாரி நோய்த் தடுப்பூசிகள் போடப்பட்டன.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்குத் தீவிர சிகிச்சைப் பணிகளைத் தக்க சமயத்தில் ஆற்றும் பொருட்டு 50.00 இலட்சம் ரூபாய் செலவில் மருந்துகள் வாங்கப்பட்டன.

வறட்சிப் பகுதிகளிலுள்ள கால்நடைகளுக்குத் தேவையான தண்ணீர் கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன் கால்நடை மருந்தகங்களில் 505 தண்ணீர்த் தொட்டிகள் 7.58 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டன.

திருப்போரூர் சந்நிதிமுறையை வாய்விட்டுப் பாடுவார். தாமே பாடித் துதிப்பார். படுக்கையில் விழுந்த பிறகுகூட திருப்போரூர் சந்நிதி முறை பாடுவதை அவர் விடவில்லை. பாடி முடித்துவிட்டு இரு கைகளையும் கூப்புவார்.

**திரு. வி. க. எத்தகைய ஆடைகளை விரும்பி அணிவார்?**

எப்போதும் அவர் கதர்ஆடையையே மிக விருப்பமாக அணிவார். வெஸ்லி கல்லூரியில்பணி புரிந்த காலத்தில் நீளமான கோட்டு-சரிகைத் தலைப்பாகை, பஞ்ச கச்சம் ஆகியவற்றை அணிந்து வந்தார். கல்லூரி வேலையைவிட்டு நீங்கிய பின்னர் மொட்டைக் கழுத்துச் சட்டையும் மேல் துண்டும் அணிந்து வந்தார். பஞ்சகச்சம் அணிவதை நிறுத்திவிட்டு, சாதாரண முறையில் வேட்டி அணிந்தார். சில நேரத்தில் துண்டைத் தோளில் போட்டுக் கொள்வார்; சில நேரத்தில் உடம்பைச் சுற்றிப் போர்த்துக் கொள்வதும் உண்டு. நெற்றியில் நீள வசத்தில் சந்தனப் பொட்டு இட்டுக் கொள்வார்.

**தொழிலாளர் இயக்கத்தில் திரு. வி. க. வின் பங்கு குறித்துச் சொல்லுங்கள்.**

தொழிலாளர் இயக்கத்துக்காக அவர் தமது உயிரைத்தான் தரவில்லையே தவிர, அதற்கு இணையான தொண்டுகளை எல்லாம் செய்தார். தொழிலாளர்களுக்காக அரும்பாடு பட்டார்.

எனக்கு அப்போது 10 அல்லது 12 வயது இருக்கலாம். வெலிங்டன்வை சிரார்யாக இருந்த சமயம்! அப்போது திரு. வி. க. தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டு, கூட்டங்களுக்குச் சொற்பொழிவாற்றச் செல்லும்போது அவரைப் போகவிட மாட்டேன் என்று அழுவேன். அவர் வீட்டுக்குத் திரும்பிவரும் வரை சாப்பிட மாட்டேன். அவர் வந்த பிறகுதான் சாப்பிடுவேன். வெள்ளைக்காரர் ஆட்சியின் கொடுமையை எனது குழந்தைப் பருவத்திலேயே நான் அறிந்திருந்தேன்.

**பொதுக்கூட்டங்களுக்கு அவருடன் நீங்கள் சென்றதுண்டா?**

பலமுறை பொதுக் கூட்டங்களுக்கு என்னை அழைத்துச் சென்றிருக்கிறார். அன்னி பெசண்ட் அம்மையாரின் சொற்பொழிவுகளை அவர் கேட்பதற்குச் செல்லும் போதெல்லாம் என்னையும் அழைத்துச் சென்றதுண்டு.

**உங்கள் தந்தையாருக்கும் திரு. வி. க. வுக்கும் இருந்த உறவு எப்படி இருந்தது?**

திரு. வி. க. தன் அண்ணனிடம் மிகுந்த பக்தி வைத்திருந்தார். அதைப் போலவே தன் தம்பியிடம் மிகுந்த பிரியம் காட்டினார் அண்ணன்.

அண்ணன் தம்பியின் உறவில் ஒருநாள், ஒருபொழுது கூட வேற்றுமை ஏற்பட்டதில்லை. அதனால்தான் தம்பி, நூல்களை எழுதி எழுதிக் குவிக்க-அண்ணன் பதிப்பித்துக் கொண்டே இருந்தார்.

**திரு. வி. க. வைச் சந்திக்க யார் யார் வருவர்?**

பெரியார், அண்ணா, காமராஜர், ஓமந்தூரார் போன்ற அரசியல் தலைவர்களும், காமத். சக்கரைச் செட்டியார் போன்ற தொழிலாளர் இயக்கத் தலைவர்களும், சச்சிதானந்தம் பிள்ளை, மு. வ., அ. ச. ஞானசம்பந்தன் போன்ற தமிழ் அறிஞர்களும் அடிக்கடி அவரைச் சந்திக்க வருவர்.

**திரு. வி. க. மன உறுதி படைத்தவர் என்று குறிப்பிட்டீர்களே, ஏதேனும் ஒரு நிகழ்ச்சியைச் சான்று காட்ட முடியுமா?**

எத்தனையோ நிகழ்ச்சிகள் உள்ளன. என்றாலும் அவரது வாழ்க்கை நிகழ்ச்சி ஒன்றினைக் கூறுவது பொருத்தமானது.

அவர் நோய்வாய்ப்பட்டு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். கந்தசாமிப்பிள்ளை என்னும் குடும்ப டாக்டர்தான், அவருக்குச் சிகிச்சை அளித்து வந்தார். அந்தச் சமயத்தில் வீட்டுக்கு வந்த காமராஜர் அவர்கள், திரு. வி. க. வின் நோய் முற்றிய நிலையைப் பார்த்து, வேறு டாக்டரிடம் சிகிச்சை செய்து கொள்ளும்படி தெரிவித்தபோது - திரு. வி. க. மறுத்துவிட்டார்.

**உங்களால் மறக்க முடியாத நிகழ்ச்சி ஏதேனும் உண்டா?**

அவர் கண்பார்வை இழந்து தவித்தபோது என்னைத் தொட்டுப் பார்த்து, 'இளைத்திருக்கிறாயே அம்மா' என்று கேட்பார். இறுதி நாளில் அவரது நினைவு மாறியபோது - நான் அழுத சமயத்தில் 'அழாதேடா கண்ணு நான் மீண்டும்வருவேன்' என்று சொல்லிய வார்த்தைகள் இப்போதும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. அவரது அன்பு என்றும் மறக்க முடியாதது. அவருடைய அன்பு யாருக்கும் வராது.

**திருமதி புனிதவதி, திருமதி மங்கையர்க்கரசி ஆகியோருக்கு பாலசுப்ரமணிய பக்தஜன சபையின்80வது ஆண்டு விழாவின்போது (5.8.83) மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் பொன்னாடை போர்த்தினார்.**



# குடும்ப உறுப்பினர்களையும் மறக்காத பண்பாளர்

## இளைய மகள் புனிதவதி

**திரு.வி.க. அவர்கள், எழுதும் நேரம் எது?**

பொதுவாக அவர் இரவு நேரத்தில் தான் எழுதுவார். தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டிருந்த அவர், தொழிலாளர் கொடுத்த ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தித்தான் எழுதுவார்.

குடும்பச் சூழல், தொழிலாளர் பிரச்சினைகள் ஆகியவற்றிற்கிடையேயும் குடும்பப் பொறுப்புகளுக்கிடையேயும், அவர், நூல்கள் எழுதியது வியப்புக்குரிய செய்திதான்.

இறுதிக் காலத்தில் கண் பார்வை இழந்த பின்னர் டிக்டேஷன் முறையைக் கையாண்டார். சாது அச்சகத்தின் மேலாளராக இருந்தவரும் திரு.வி.க. அவர்களின் அணுக்கத் தொண்டராக விளங்கியவருமான நாராயணசாமி முதலியார் அவர்கள் திரு.வி.க. சொல்லச் சொல்ல, சில நூல்களை எழுதியிருக்கிறார். அன்பு கணபதி புரூப் படிப்பார்.

**திரு-வி.க. அவர்கள் கடைசியாக எழுதிய நூல் எது?**

படுக்கைப் பிதற்றல் என்னும் நூல்தான் அவர் எழுதிய கடைசி நூல் ஆகும். அதுவும் அவரால் சொல்லப்பட்டு - நாராயணசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. சொல்லிச் சொல்லி திருவி.க.வின் தொண்டை கூட கட்டிக் கொண்டு விட்டது. அப்போதும் அவர் விடாப் பிடியாக நூலைச் சொல்லி முடித்தார்.

**பார்வையாளர்கள் தம்மை இந்த நேரத்தில்தான் சந்திக்க வேண்டும் என்ற சட்ட திட்டம் வைத்திருந்தாரா?**

அப்படி எதுவும் கிடையாது. அன்பர்கள் எந்த நேரத்திலும் அவரைச் சந்திக்க வரலாம். கடுமையான பணிகளின் காரணமாக 'பார்வையாளர்கள் மாலை 5 மணிக்கு மேல் வரலாம்' என்று அச்சிடப்பட்ட அறிவிப்பு அட்டையைச் சிறிது காலம் சுவரில் மாட்டியிருந்தார். மில் தொழிலாளர்கள் நேரம் காலம் இன்றித் தங்களதுபிரச்சினைகள்குறித்துப் பேசுவதற்காக வந்ததால் அந்த அறிவிப்பு அட்டையை அகற்றி விட்டார். தம்மை எவரும் எப்போதும் வந்து பார்க்கலாம் என்று தெரிவித்தார்.

சில நேரங்களில் மெய்ம்மறந்து தூங்கிக் கொண்டிருப்பார். அந்தச் சமயத்தில் பார்வையாளர்கள் வருவதுண்டு. அவர் தூங்குகிறார் என்ற தகவலை நாங்கள் சொல்லுவோம். அக்குரல் எப்படியோ அவரது காதுகளில் விழுந்து விடும். உடனே விழித்துக் கொள்வார். தேடி வந்தவர்களை அழைத்துப் பேசுவார்.

**திரு.வி.க. குடும்ப நிகழ்ச்சிகளில் ஈடுபாடு காட்டியது உண்டா?**

குடும்ப வாழ்வில் மிகவும் பொறுப்புடன் நடந்து கொண்டவர் திரு.வி.க. அண்ணனையும் அண்ணியையும் மிகவும் மதித்துப் போற்றினார். அண்ணியாரை தெய்வமாகவே அவர் கருதி வந்தார். அவர்கள் மறைவு எய்தி விட்டால், இறுதிக் கடமையைத் தாம் நிறைவேற்ற வேண்டும் என்று கருதியிருந்தார். ஆனால் அண்ணியாருக்கு அந்த பாக்கியம் கிடைக்கவில்லை. திரு.வி.க. அவர்கள் மறைந்த பின்னர்தான் அண்ணியார் (அதாவது என் தாயார்) மறைந்தார்.

**உங்களிடம் திரு.வி.க. காட்டிய அன்புக்குச் சான்றுதரும் நிகழ்ச்சி ஏதேனும் உண்டா?**

என் கணவர் சாதாரணப்பள்ளி ஆசிரியர். அக்காலத்தில் ஆசிரியர் பெறும் ஊதியம் மிகவும் குறைவு. அதனை நன்கு உணர்ந்த திரு.வி.க. அவர்கள், அவ்வப்போது எனக்குப் பணம் தருவார். என் குழந்தைகளுக்கும் பணம் தருவார். உலக மக்களுக்குச் சேவை செய்து வந்த திரு.வி.க. இந்த ஏழை மகளையும் மறக்கவில்லை என்பதை என்னால் மறக்கவே இயலாது.

### ஆர்க்காடு என்பதே சரி




இப்பொழுது வட ஆறுகாடு, தென்னாறுகாடு என்று வழங்கப்பட்டு வரும் நிலப்பகுதி பண்டைக் காலத்தில் ஆர்க்காடு என்றும் இடைக்காலத்தில் ஆறுகாடு என்றும் வழங்கப்பட்டு வந்தது, முன்னையது பழந்தமிழ் நூல் வழக்கு; பின்னையது புராண வழக்கு. இவ்விரு வழக்கும் இற்றை ஞான்று வீழ்ந்து பட்டன. இது காலை ஆற்காடென்றே பல்லோர் எழுதுகின்றனர். நம் ஊர்ப் பெயர்கள் இந்நாளில் மருவிப் பொருளின்றிப் 'பொலிவதை' கோக்குழி எனது மனம் வருந்தா நிற்கிறது.

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

(வடஆர்க்காடு மாவட்ட பதினான்காவது காங்கிரஸ் மாநாட்டில் 1920 மே 2-ஆம் தேதி ஆற்றிய உரையில்.)

# தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சி

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைவது அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி. தொழில் நுட்பக் கல்வி தொழிலகங்களுக்குத் தேவையான மனிதச் சக்தியினைப் பல்வேறு நிலையில் அளிக்கும் ஒரு முக்கிய துறையாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியானது கைவினைப் பயிற்சி அளவிலிருந்து முதுநிலைப் பட்டப் படிப்பு வரையில் விரிவான கல்வியைக் கொண்டது. பொறியியல் தொழிலுக்குத் தேவையான தொழில் நுட்பவியலாளர்களுக்குக் கல்வியும் பயிற்சியும் அறிப்பதற்குப் பல்வேறு பட்ட பாடங்களும் பயிற்சிகளும் தமிழ்நாட்டில் அளிக்கப்பட்டு வருகின்றன.



தற்போது தமிழ்நாட்டில் 14 பொறியியற் கல்லூரிகள், 59 பாலிடெக்னிக்குகள். மற்றும் 14 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. இவற்றில் 7 பொறியியற் கல்லூரிகள், 59 பாலிடெக்னிக்குகள் மற்றும் 14மேல்நிலைப் பள்ளிகள் (தொழில் முறை) ஆகியவை தொழில் நுட்பக் கல்வித் துறையின் கீழ் உள்ளன.

பொறியியற் கல்லூரிகளின் சேர்ப்பு எண்ணிக்கை கடந்த மூன்றாண்டுகளில் 1422லிருந்து 1657 ஆக அதிகரித்துள்ளது. இது போலவே, பாலிடெக்னிக்குகளின் சேர்ப்பு எண்ணிக்கை புதிய பாலிடெக்னிக்குகள் துவக்கப்பட்டதன் காரணமாகவும் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் (Higher Secondary Schools Vocational) பாலிடெக்னிக்குகளில் சேர்க்கப்படுவதன் காரணமாகவும், சேர்ப்பு எண்ணிக்கை 10 சதவிகிதம் கூடுதலாகக் கொள்வதன் காரணமாகவும் 4480லிருந்து 8350 ஆக அதிகரித்துள்ளது.

**அண்ணா பல்கலைக் கழகம் :**

அண்ணா பல்கலைக் கழகம் 4.9.78 அன்று நிறுவப்பட்டது. இது ஒருமை வகையைச் சார்ந்தது. கிண்டி பொறியியற் கல்லூரி இப்பல்கலைக் கழகத்தின் தலைமையிடமாகும். குரோம்பேட்டையிலுள்ள சென்னை தொழில் நுட்பக் கல்வியகமும், சென்னை அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பவியல் கல்லூரியிலுள்ள துறைகளான வேதியல், தொழில் நுட்பவியல், தோல் தொழில்நுட்பவியல், நெசவுத் தொழில் நுட்பவியல், கட்டடவியலும், நகரமைப்பும் ஆகிய நான்கு துறைகளும் இப்பல்கலைக் கழகத்தின் அங்கங்களாகும்.

**கோள் காட்சிச்சாலை அமைத்தல்:**

சேலம் பொறியியல் கல்லூரியில் ரூ. 2.00 இலட்சம் செலவில் ஒரு கோள் காட்சிச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இக்கோள் காட்சிச் சாலை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 6.2.1979 அன்று பொது மக்கள் பார்வைக்குத் திறக்கப்பட்டது. இம்மாநிலத்தில் இவ்வகையில் இதுமுதலாவது ஆகும்.

**புதிய பொறியியற் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக்குகள் துவங்குதல்:**

சமீபகாலமாகத் தமிழ்நாட்டில் உள்ள பொறியியற் கல்லூரிகளிலும் பாலிடெக்னிக்குகளிலும் சேர்ந்து பயில விழையும் மாணவர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளது. அதே சமயம் தொழிலகங்களுக்குத் தேவைப்படும் தொழில் நுட்ப வல்லுநர்கள் மற்றும் பொறியியலாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. இதை உணர்ந்த தமிழ்நாடு அரசு அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் குழுவின் கோட்பாடுகளுக்கிணங்க புதிய பொறியியற் கல்லூரியும், பாலிடெக்னிக்குகளும் துவங்க அனுமதியளித்துள்ளது.



1978-79ஆம் ஆண்டு முதல் கல்வி ஆண்டு 1982-83 முடிய இதுவரை ஒரு அரசினர் பொறியியற் கல்லூரியும் 21 பாலிடெக்னிக்குகளும் துவக்கப்பட்டுள்ளன. இது தவிர 1983-84ஆம் ஆண்டில் பட்டுக்கோட்டையில் ஒரு பாலிடெக்னிக் புதியதாகத் துவங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**புத்தக வங்கிகள்**

தொழில் நுட்பப் பயிலகங்களில் பயிலும் ஏழை மற்றும் தேவையுள்ள மாணவர்களின் நலனுக்கென மாநில அரசின் உதவியுடனும், தனியார் நிறுவனங்களின் நன்கொடை மூலமாகவும் புத்தக வங்கிகள் துவங்கப்பட்டுள்ளன. மேலும் மத்திய அரசாங்கம் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைச்சாதியினர் நலனுக்கென ஒரு புத்தக வங்கித் திட்டத்திற்கு ஏற்பளித்து அதற்கென ரூ. 2.55 இலட்சம் செலவிட ஒப்புதலளித்துள்ளது.

**நூலக வசதிகள் விரிவாக்கம்:**

பாலிடெக்குனிக்குகளிலுள்ள நூலக வசதிகள் செம்மையாகச் செயல்படவேண்டி பாலிடெக்னிக் நூலகங்களிலுள்ள இளநிலை உதவியாளர் பதவியைத் தகுதி வாய்ந்த நூலகர் பதவியாக அரசாங்கம் மாற்றியமைத்துள்ளது. மேலும், தொழில் நுட்பப் பயிலகங்களுக்குத் தேவையான நூலக வசதிகளை அரசு அவ்வப்போது வழங்கி வருகிறது.

**பாடப் புத்தகங்கள்:**

மாநிலத்தில் தொழில் நுட்பக் கல்வியை முன்னேற்றும் வகையில் பாலிடெக்னிக்குகளுக்குப் பாடப்புத்தகங்கள் தயாரிக்கும் பணி இத்துறையில் மேற்கொள்ளப்பட்டது. இதன்கீழ் 31 தலைப்புகளில் பாடப்புத்தகம் தயாரிக்கும் பணி துவங்கப்பட்டு 7 தலைப்புகளில் பாடப்புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதர தலைப்புகள் மீதான பணி முன்னேற்றத்திலுள்ளது. மேலும் ''சிறப்புச் செந்நூல்'' என்ற ஒரு நிலையான பாடப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்புப் பிரிவு:**

வேலை வாய்ப்பு வழிகாட்டும் திட்டத்தின் கீழ், மாணவர்களின் வேலை வாய்ப்புகளுக்கு உதவி செய்தல் மற்றும் இதர வகையில் வழிகாட்டும் ஒரு பிரிவு அனைத்துப் பயிலகங்களிலும் துவங்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

**மகளிர் பிரிவு துவங்குதல்:**

பாலிடெக்னிக்குகளில் சேர விழையும் மாணவிகள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அனைத்துப் பாலிடெக்னிக்குகளிலும் மொத்த சேர்ப்பு எண்ணிக்கைக்குள் தேவை ஏற்படும் நேரங்களில் மாணவிகளைச் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. ஆகையால், சில மாணவர் பாலிடெக்னிக்குகளில் மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். சமீபத்தில் நாகப்பட்டினம் வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக்கில் ஏ.டி. ஜே. தர்மாம்பாள் அறக்கட்டளையின் கீழும், தூத்துக்குடி அரசினர் பால்டெக்னிக்கில் ஆறுமுகசாமி நினைவு கல்வி அறக்கட்டளையின் கீழும் 1979-80ஆம் ஆண்டு முதல் 20 சேர்ப்பு எண்ணிக்கையுடன் மகளிர் பிரிவுகள் துவங்க அரசாங்கம் அனுமதித்துள்ளது.

**செயல்முறைத் திட்டங்களுக்குப் பரிசு வழங்குதல்**

சிறந்த செயல்முறைத் திட்டங்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் சிறந்த செயல்முறைத் திட்டத்தினைத் தயாரிக்கும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகளில் இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்குப் பரிசு வழங்கி ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது.

**கலை மற்றும் கைத்திறன் நுட்பக் கல்லூரிகளை உயர்த்துதல்**

சென்னை அரசினர் கலை மற்றும் கைத்திறன் நுட்பக் கல்லூரியில் 1978-79ஆம் ஆண்டு முதல் பி.எஸ்.சி. இன்டஸ்ட்ரியல் டிசைன் மற்றும் பி.எஸ்.சி. விஷுவல் கம்யூனிகேஷன் பட்டப் படிப்பு தொடங்க அரசாங்கம் ஒப்புதலளித்துள்ளது. இக்கல்லூரிகளின் ஆலோசனைக்குழு இக்கல்லூரிகளின் வளர்ச்சிக்கெனப் பல திட்டங்களைப் பரிந்துரை செய்துள்ளது. சமீபத்தில் ''டெம்பிள் ஆர்கிடெக்சர்'' என்ற பட்டப் படிப்பு மாமல்லபுரம் அரசினர் கட்டட அமைப்புவியல் மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியில் துவங்க அரசாங்கம் ஒப்புதலளித்துள்ளது.

# சென்னை பெருநகர் குடிநீர் நிறுவனத்தின் சீரிய பணிகள்

சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுப் பணிகள் 1.7.77 முதல் 31.7.78 வரை சென்னை மாநகராட்சியின் செயல் அமைப்பின் கீழ் இருந்தது. மேற் கண்ட பிரிவுகளின் முதலீட்டுப் பணிகளை இக் காலத்தில் செயல்படுத்துவதற்காக ரூ.459.75 இலட்சங்கள் மாநகராட்சி செலவு செய்துள் ளது.

தமிழ்நாடு அரசு, 1978ம் ஆண்டு தமிழ் நாடு சட்டம் 28ன்படி 1.8.78 முதல் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்- மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தை அமைத்தது. அந்நாள் முதல் மேற்கண்ட பணிகளை அந்தவாரியம் செயலாக்கி வருகிறது. சென்னைப் பெருநகர் பகுதியின் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுப் பணிகளின் வளர்ந்து வரும் தேவைகள், திட்டமிட்ட முன்னேற்றம் மற்றும் விஞ்ஞான ரீயிதியான செயல்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகளை மட்டும் கவனிக்க வேண்டி இந்த வாரியம் அமைக்கப்பட்டது. இது தற்போது சென்னை நகரின் குடிநீர்



வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் பணிகளின் திட்டம், வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் செயல்பாடு ஆகியவைகளுக்குப் பொறுப்புள்ளதாயிருக்கிறது. நகரின் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுப் பணிகளுக்கான முதலீட்டுப் பணிகளின் திட்டங்களுக்காக 1.8.78 முதல் 31.3.83 வரையிலான காலத்தில் ரூ. 2496.76 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. அவற்றின் ஒவ்வொரு ஆண்டுக்கான செலவுத் தொகையின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | ரூ. இலட்சங்கள் |
|---|---|
| 1. 1.8.78 முதல் 31.3.79 வரை | 152.80 |
| 2. 79—80 | 298.95 |
| 3. 80—81 | 605.60 |
| 4. 81—82 | 800.17 |
| 5. 82—83 | 639.24 |
| மொத்தம் ரூ. | 2496.76 |

இவ்வாரியம் 9.6.80 முதல் செயல்படுத்திய திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

**நீர் வழங்கல் பிரிவு**

1. மணலியிலிருந்து அண்ணா பூங்கா வரை குடிநீர்க் குழாய்கள் போடுதல்
(திட்ட மதிப்பீடு: ரூ. 121.00 இலட்சங்கள்)



தாமரைப் பாக்கம் நிலத்தடி நீரினை நகரின் குடிநீர் மேம்பாட்டுக்காகத் திருப்புவதற்காக மணலியிலிருந்து அண்ணா பூங்காவிற்கு 750 மி.மீ. விட்டமுள்ள குழாய்கள் 8.8.கி.மீ. நீலத்திற்குப் பதிக்கப்பட்டு 1981ம் ஆண்டு செப்டம்பர் மாதம் துவங்கி வைக்கப் பட்டுச் செயல்பட்டு வருகிறது. இதனால் நகரின் குடிநீரின் அளவு நாளொன்றுக்கு 36மி.லி. (8 நா.மி.கா) உயரும். இது நகரின் தற்போதைய குடிநீர் விநியோக அளவில் 15 விழுக்காடு ஆகும்.

2. பிராந்தியம் 1ல் உள்ள தலைமை நீர் நிலையத்திற்கான அதிகப்படி பணிகள்

(மதிப்பீடு: ரூ. 56.84 இலட்சங்கள்)

வடசென்னையில் குடிநீர் வழங்குதலை மேம்படுத்தும்வகையில் நிலத்தடி நீர்த்தேக்கத் தொட்டி, நீரேற்று நிலையம் அமைப்பது. அதற்கான விசை இயந்திரங்கள் வாங்குவது மற்றும் குழாய்கள் பதித்தல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டு 1981ம் ஆண்டு செப்டம்பர் மாதம் செயல்படத் தொடங்கியது.

3. நகரில் 74 குடிசைப்பகுதிகளுக்கு குடிநீர் குழாய்களை அமைத்தல்.

(மதிப்பீடு ரூ. 29.12 இலட்சங்கள்)

நகரில் சுமார் ஒரு இலட்சம் மக்கள் வாழும் 73 குடிசைப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதி அளிப்பதற்காகக் குழாய்கள் போடப்பட்டு பொதுக் குழாய்கள் மூலம் அவ்வப்பொழுது குடிநீர் வசதி அளிக்கப்பட்டது.

4. நகரின் விஸ்தரிக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வசதி அளித்தல்

(மதிப்பீடு: ரூ. 206 இலட்சங்கள்)

தற்போது சென்னை நகருடன் புதிதாக இணைக்கப்பட்ட 12 பஞ்சாயத்துக்களுக்கு குடிநீர் வழங்கும் பணி எடுத்துக் கொள்ளப் பட்டு திருவான்மியூர்பகுதியில் பணி முடிக்கப் பெற்று 1982ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் செயல்படத் துவங்கியுள்ளது. மற்றும் சாலிகிராமம் பகுதியில் வேலை முடியும் தருவாயில் உள்ளது. விருகம்பாக்கம், வேளச்சேரி கனகம், தரமணி போன்ற பகுதிகளில் வேலை நடைபெற்று வருகின்றது.

5. பயிற்சி மையம்

(மதிட்பீடு: ரூ. 29.68 இலட்சங்கள்)

உலக வங்கி உதவியுடன் இவ்வாரியத்தில் எல்லா மட்டத்திலுள்ள களப்பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகப் பயிற்சிக் கூடம் அமைக்கப்பட்டு 1982ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் செயல்படத் துவங்கியது. இது இந்தியாவிலேயே முதன்மையான ஒன்றாகும். இம் மையம் சில ஆண்டுகளில் தமிழகம் மற்றும் அண்டைய மாநிலங்களில் இருக்கும் பணியாளர்களுக்கும் நீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் துறையில் பயிற்சி அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6. நிலத்தடி மற்றும் மேல்மட்ட நீரினை ஒருங்கிணைத்து உபயோகிக்கும் திட்டம் (ஆய்வுத் திட்டம்)

(மதிப்பீடு ரூ. 59.40 இலட்சங்கள்)



தற்போது பூண்டி சோழவரம் மற்றும் புழலேரி நீர்த்தேக்கங்களில் ஏற்படும் சுமார் 60 விழுக்காடு நீர் இழப்பினை குறைப்பதற்காக ஆரணி கொடுதலையாறு கரையோரப் பகுதிகளில் நிலத்தடி மற்றும் மேல்மட்ட நீரை ஒருங்கிணைத்து உபயோகிப்பதற்கான திட்டத்தின் சாத்தியக் கூறுகளை ஆராய ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்ட நிறுவனத்துடன் ஜூன் 1982 முதல் ஆய்வு நடந்து வருகிறது. ஆய்வு வெற்றிகரமானால் நகரின் குடிநீர் வசதியை 80 விழுக்காடு அதிகரிக்க, உதவும்.

**வருங்காலத் திட்டங்கள்**

நகரின் பல துறைகளில் முன்னேற்றத்தின் காரணமாகவும் அதன் வளர்ச்சிக்கு முக்கியத் தேவைகளை ஆலோசித்தும் திட்டங்களைத் தீட்டி அரசுக்கு அனுப்பியதன் பேரில் அரசு அந்த திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அப்பணிகள் விரைவில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

1. கீழ்ப்பாக்கம் நீர் நிலையத்தில் 90 எம். எல்.டி. அளவுள்ள துரித எந்திர வடிகட்டிகள் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுதல்

(மதிப்பீடு-ரூ.295.00 இலட்சங்கள்)

2. கீழ்ப்பாக்கம் நீர் நிலையத்திலுள்ள நீரேற்று இயந்திரங்களில் திறனை அதிகரித்துப் புதுப்பித்தல் (மதிப்பீடு- ரூ. 175.00 இலட்சங்கள்)

3. திருவான்மியூருக்குத்தெற்கிலுள்ள கடற்கரையோர நிலத்தடி நீர்ப் பிடிப்புகளிலிருந்து நீர் கொணர்தல் முதல் கட்டம்

(மதிப்பீடு ரூ. 90 இலட்சங்கள்)

**கழிவுநீரகற்றல் பிரிவு**

1. கழிவு நீர்க் குழாய்சுத்திகரிப்புக் கருவிகள்

(மதிப்பீடு: ரூ. 72.51 இலட்சங்கள்)

பலகாலமாக பழக்கத்திலுள்ள கழிவுநீர்க் குழாய்களை மூங்கில் பத்தைகளினால் தொழிலாளர்கள் சுத்தம் செய்யும் முறையினை



# மின் அணுவியல் துறையில்..

# தமிழகத்தில் சாதனை

அண்மைக் காலத்தில் மின் அணுவியல் அதிவேகமாக முன்னேற்றமடைந்து, இன்று நம் வாழ்க்கை வழிமுறைகள் பல வகைகளிலும் செம்மையுறமாற்றி வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். சென்ற சில ஆண்டுகளுக்கு முன்வரையில் இந்தியாவைப் பொறுத்த அளவில் மின்அணுவியல் என்றாலே ரேடியோப்பெட்டி என்று இருந்த நிலை மாறி, இன்று கம்ப்யூட்டர், ராடார் போன்ற பல நுண்ணுக்கம் மிகுந்த கருவிகளும் நமது நாட்டில் செய்யப்பட்டு வருகின்றன.

1982ஆம் ஆண்டில் நம் நாட்டில் சுமார் 12,000 மில்லியன ரூபாய் பெறுமான மின்னணுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. 1981 -ஆம் ஆண்டின் 8,000 மில்லியன் ரூபாய் உற்பத்தியோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், கணிசமான 40 விழுக்காடு வளர்ச்சியை நாம் காண்கிறோம். அகில இந்திய அளவில் தமிழ்நாடும் இந்தத் துறையில் முக்கிய பங்கேற்று வேகமாக முன்னேறி வரும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

1976ஆம் ஆண்டுவரையில் தமிழகத்தில் 200-க்கும் குறைவான சிறு தொழிற் சாலைகளே மின் அணுவியலில் ஈடுபட்டு இருந்தன. இன்று இந்த எண்ணிக்கை 500-க்கும் மேலாக உயர்ந்துள்ளது. எண்ணிக்கைப் பெருக்கு மட்டும் அல்லாமல் செய்யப்படும் பொருட்களின் வகைகளும், தரங்களும் வளர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் சாதாரண ரேடியோ, டேப்ரிக்கார்டர் போன்ற பொருட்கள் மட்டும் அல்லாமல் மினி கம்ப்யூட்டர், ஏவுகணைக் கருவிகள் போன்ற நுணுக்கம் மிகுந்த கருவிகளும் தமிழகத்தில் சிறுதொழிற்சாலைகளிலேயே உற்பத்தி செய்யப்படுவது நாம் அனைவரும் பூரிக்க வேண்டிய சாதனை என்றால் அது மிகையாகாது.

வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு மட்டுமின்றி வேலை வாய்ப்பைப் பெருக்குவதிலும் மின்அணுவியல் மற்றத் துறைகளைக் காட்டிலும் மிகுந்த பலனளிக்கும் நிலையில் உள்ளது.


எடுத்துக்காட்டாக ஒவ்வொரு கோடி ரூபாய் முதலீட்டிற்கும் ரசாயனத் தொழில் 33 வேலைகளையும், இரும்புத் தொழில் 66 வேலைகளையும் மோட்டார் வாகனத் தொழில் 91 வேலைகளையும், காகிதத் தொழில் 103 வேலைகளையும், துணிஆலைத் தொழில் 133 வேலைகளையும், மின்சாரக் கருவிகள் தொழில் 246 வேலைகளையும், மின்அணுவியல் 312 வேலைகளையும் உண்டாக்குகின்றன. அதாவது ஒவ்வொரு புதிய வேலையை உண்டாக்க இரசாயனத் தொழிலில் ரூ. 3,04,000மும் இரும்புத் தொழிலில் ரூ. 1,50,331ம், மோட்டார் வாகனத் தொழிலில் ரூ. 1,09,443ம், காகிதத்தொழிலில் ரூ. 96,865ம், துணிஆலைத் தொழிலில் ரூ. 74,940-ம் மின்சாரக் கருவிகள் தொழிலில் ரூ. 40,542-ம், மின்அணுவியல் தொழிலில் ரூ.32,129ம் முதலீடு தேவைபடுகிறது. ஆக குறைந்த முதலீட்டில் மிகுந்த வேலைவாய்ப்பினை உண்டாக்க மின்அணுவியல்தான் சாலச்சிறந்தது என்பது தெள்ளத் தெளிவாகிறது. ஆதலால் சிறு தொழில்கள் மிகுதியாக வளரமகத்தான எதிர்காலம் தெரிகிறது.


வேலைவாய்ப்பினைப் பெருக்கி பொருளாதார முன்னேற்றம் காண்பதில் மின்அணுவியலின் பெரும்பங்கை நன்கு உணர்ந்த தமிழக அரசு இந்தத் துறையில் சிறுதொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் மேலும் நன்கு வளர்ச்சியுற பல ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. முதன்மையாக மின் அணுவியல் தொழிற்சாலைகளுக்கென தனித் தொழிற்பேட்டைகள் சென்னை, ஒசூர், திருச்சி, கோவை, மதுரை முதலிய தேர்ந்த இடங்களில் நிறுவப் பெற்றன. இவற்றில் சென்னையிலுள்ள விக்ரம் சாராபாய் இன்ஸ்ரானிக் எஸ்டேட் எனப்படும் பேட்டையிலுள்ள 78 சிறுதொழிற்சாலைகள் 1982 ஆம்ஆண்டில் மட்டும் சுமார் ஆறு கோடி ரூபாய் பெறுமான பொருட்களை உற்பத்தி செய்திருப்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும். மேலும் தொழில் முனைவோரின் தேவைகளுக்கு இணங்க மற்றுமொரு தொழிற்பேட்டை சென்னைக்கருகில் பெருங்குடி என்னுமிடத்தில் 100 ஏக்கர் பரப்பில் சமீபத்தில் துவக்கப்பட்டு 121 தொழிற்சாலைகளுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் செய்யப்படும் சிறுதொழிற்சாலைகளின் மின்ணணுப் பொருட்களின் தரங்களை உயர்த்தும் பொருட்டு, சென்னையில் ஒரு மின் அணுவியல் ஆய்வுக்கூடம் மத்திய அரசின் உதவியுடன் நிறுவப்பட்டு பயனுள்ள வகையில் இயங்கி வருகிறது. இதோடு நில்லாமல் புதியதாக மின் அணுத் தொழிலில் முனைவோருக்குத் தேவையான அடிப்படை விவரங்களையும், கருத்துரைகளையும் அளித்து அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மின் அணுவியல் தகவல் நிலையம் ஒன்று நிறுவப்பெற்று நன்முறையில், இயங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் மின் அணுவியல் துறையில் மேலும் முன்னேற்றம் காணவேண்டும் என்பதைக்கருத்தில் கொண்டு இந்தத் துறையில் நிறுவப்படும் தொழிற்சாலைகளுக்கென சிறப்புச் சலுகையாக 10 சதம் உதவித் தொகை வழங்கப்படும் என்று அண்மையில் அறிவித்துள்ளது. மேலும் ஏற்றுமதியிலும் நமது தமிழ்நாடு பெரும் பங்கு பெறவேண்டி பம்பாய்கருகிலுள்ளதைப் போன்று ஏற்றுமதிக்கெனச் சிறப்புத்தொழிற்பேட்டை ஒன்றை மீனம்பாக்கத்திற்கருகில் நிறுவக்கோரி மத்திய அரசிடம் தமிழக அரசு விண்ணப்பித்துள்ளது.

ஆக, தமிழ்நாட்டில் மின் அணுவியலில் சிறு தொழிற்சாலைகள் வளர்ந்து முன்னேற தகுதியான சூழ்நிலை உளது என்பது தெளிவாகிறது. நமது தொழில் அதிபர்களும், பொறியியல் வல்லுநர்களும் இந்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்தி பல புதிய சிறு தொழிற்சாலைகள் நிறுவ முன்வருவார்கள் என்பது திண்ணம்.





படிப்படியாகத் தவிர்ப்பதற்காக "வாக்டர்" ஜெட் கருவி, கம்பி இயந்திரம், வாளி இயந்திரம் போன்ற நவீன இயந்திரங்கள் வாங்கப்பட்டு 1981ம் ஆண்டு செப்டம்பர் முதல் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் கழிவுநீர்க்குழாய்களை சுத்தப்படுத்துவதில் தொழிலாளர்கள் மனிதக் கழிவுடன் நேரடித் தொடர்பு கொள்வது படிப்படியாகத் தவிர்க்கப்படும்.

2. கிண்டி-வேளச்சேரி மற்றும் அரும்பாக்கம் அமைந்தக்கரை பகுதிகளுக்குக் கழிவு நீரகற்று வசதி அமைத்தல்

(மதிப்பீடு ரூ. 198.99 இலட்சங்கள்)

மேற்கண்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை வசதி செய்வதற்காகக் கழிவுநீர்க் குழாய்கள், கழிவுநீரேற்று நிலையங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன.

3. 15 முக்கிய கழிவுநீரேற்று நிலையங்களை மாற்றியமைத்தல்

(மதிப்பீடு ரூ. 712.50 இலட்சங்கள்)

நகரில் 40 ஆண்டுகளுக்கு மேல் நடைமுறையிலிருக்கும் 15 கழிவுநீரேற்று நிலையங்களை தெரிந்தெடுத்து அவைகளில் அதிகத் திறனுள்ள இயந்திரங்கள், மற்றும் தானாகவே இயங்கும் நவீன அமைப்பு சாதனங்கள் அமைக்கப்பட்டு பெரும்பான்மையான வேலைகள் முடிவு பெற்றுள்ளன. இது மாதிரி கழிவு நீரேற்று நிலையங்கள் தானாகவே இயங்குமாறு நவீன அமைப்புகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது நம் நாட்டில் இதுதான் முதல் தடவையாகும்.

4. அடையாறு ஆற்றில் கழிவுநீர் வழிந்தோடுவதைத் தவிர்த்தல்

(மதிப்பீடு ரூ. 116.00 இலட்சங்கள்)

தற்சமயம் சைதாப்பேட்டை மற்றும் நந்தனம் பகுதிகளில் கழிவுநீர் வழிந்தோடி அடையாறு ஆற்றில் கலந்து அசுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காக இரண்டு திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

5. கோயம்பேட்டில் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து நீரை திருப்பி எடுத்தலுக்கான மாதிரி நிலையம்

(மதிப்பீடு ரூ. 35.00 இலட்சங்கள்)

கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து நீரை திருப்பி எடுத்து அதைத் தொழில் நிலையங்களின் உபயோகத்துக்குப் பயன்படுத்துவதற்காக ஒரு மாதிரி நிலையம் கோயம்பேட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் அந்த அளவுக்கு நிகரான குடிநீர் சென்னை நகரின் குடிநீர் வசதிக்காக அதிகப்படியாகக் கிடைக்கும்.

## இருபது அம்சத் திட்டத்தில் முதலிரண்டு திட்டங்கள்

புதிய இருபது அம்ச திட்டத்தில் முதலிரண்டு திட்டங்களும் வேளாண்மை வளர்ச்சிக்குரிய திட்டங்களாகும்.

பாசன வசதியை அதிகப்படுத்துதலும் மானாவாரி நிலங்களில் நன்முறையில் சாகுபடி செய்யத் தேவையான வேளாண்மை இடுபொருட்கள் வழங்குதலை அதிகரித்தும், உரிய தொழில் நுட்பத்தை வளர்த்துப் பரப்புவதும் திட்டத்தில் முதல் அம்சமாகும்.

பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்க தீவிர முயற்சி எடுத்துக்கொண்டு, பல்வேறு முறைகளில் பயிரிடும் பரப்பினையும் உரிய சாகுபடிமுறைகளைக் கைக்கொண்டு ஏக்கர் விளைச்சலை அதிகப்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதே திட்டத்தின் இரண்டாம் அம்சமாகும்.

இவ்விரண்டு திட்டங்களிலும் தமிழ்நாடு வேளாண்மைத்துறை தீவிர கவனம் செலுத்தி நன்முறையில் செயல்படுத்தி வருகிறது.

1983-84-ஆம் ஆண்டில் 9.20 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பயறுவகைகளைப் பயிரிட்டு 2.83 இலட்சம் டன் உற்பத்தி செய்யத் திட்டமிட்டு தமிழ்நாடு வேளாண்மைத்துறை செயலாற்றி வருகிறது.

இதே போன்று 12.65 இலட்சம் எக்டேர் பரப்பளவில் எண்ணெய் வித்துக்கள் பயிரிட்டு 14.25 இலட்சம் டன் உற்பத்தி செய்யத் திட்டமிட்டு எண்ணெய் வித்துத்துறை செயலாற்றி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



### வருங்கால திட்டங்கள்

அரசு இவ்வாரியத்திற்கு ஒப்புதல்அளித்த முக்கியத் திட்டங்கள்:


1. மாம்பலம் ஏரிக்கரைப்பகுதி கழிவுநீரகற்றுத் திட்டம் மதிப்பீடு ரூ. 60.00 இலட்சங்கள்

2. நகரின் விஸ்தரிக்கப்பட்ட பகுதிகளான திருவான்மியூர் மற்றும் வில்லிவாக்கம் பகுதிகளுக்குக் கழிவு நீரகற்று வசதி அமைத்தல் மதிப்பீடு ரூ. 500 இலட்சங்கள்

3. நகரின் கழிவுநீர் அனுப்பும் முறையை வலுப்படுத்துதல்
மதிப்பீடு ரூ. 800.00 இலட்சங்கள்

4. கழிவுநீர்க் குழாய் சுத்திகரிப்பு கருவிகள் வாங்குதல்
மதிப்பீடு ரூ. 48.00 இலட்சங்கள்

தமிழக அரசு இவ்வாரியத்திற்காக 1.7.80 முதல் 31.3.83 வரை ஒப்புதல்அளித்த திட்டங்களின் விவரம் கீழ்வருமாறு:



1. நீர் வழங்கல் பிரிவு
— 18 திட்டங்கள் மொத்த மதிப்பீடு ரூ. 1511.49 இலட்சங்கள்

2. கழிவுநீரகற்றுதல் பிரிவு
— 14 திட்டங்கள் மொத்த மதிப்பீடு ரூ. 1750.00 இலட்சங்கள்

### வறட்சி நிவாரணப் பணிகள்

சென்னை நகரில் 1981, 1982, 1983ம் ஆண்டுகளில் தொடர்ந்து பருவமழை பொய்த்ததன் விளைவாக ஏற்பட்ட வறட்சி நிலையை சமாளிக்க இவ்வாரியம் ஒரு பெரிய அளவில் தமிழ்நாடு அரசு உதவியுடன் இந்த மூன்று ஆண்டுகளில் நிவாரணப்பணிகள் செயல்படுத்தி வருகிறது. அவற்றின் விவரம் கீழ் வருமாறு:

1. தாமரைப்பாக்கம், பஞ்செட்டி, மீஞ்சூர் முதலிய நிலத்தடி நீர்ப்பகுதிகளில் 22 புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு நிலத்தடி நீர் சென்னை நகருக்குத் தருவிக்கப்படுகிறது.

2. போர்க்கால நடவடிக்கை முறையில் அதிகப்படியான குழாய்க் கிணறுகள் நகரின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டு மொத்தத்தில் 11,356 குழாய்க் கிணறுகள் செயல்பட்டு வருகின்றன.

3. இந்த வாரியம் சென்னை நகரில் சுமார் 132 இடங்களில் சுமார் 80 அடி ஆழத்திற்கு ஆழ்துளைக் கிணறுகள் இறக்கி ஆழ்கைப்பம்புகள் (இந்தியா மார்க் 2) பொருத்தப்பட்டுள்ளன.

4. தாமரைப்பாக்கம் நிலத்தடி கிணறுகளிலிருந்து புழலேரியிலிருக்கும் நீர்வழிப் பாதை வரை நீர் கொணர்வதற்கு 2.3 கி.மீ. நீளமுள்ள இணைப்புக் குழாய் அமைக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

5. குடிசைப்பகுதி வாழ் மக்களுக்கும், நீர் அழுத்தம் குறைவாகவுள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்கும் தேவையான குடிநீர் தேவை சமாளிக்க லாரிகள் எண்ணிக்கையை 187க்கு அதிகரித்து அதேபோல் உருக்குத் தொட்டிகளின் எண்ணிக்கையை 1683க்கு உயர்த்தி லாரிகள் மூலம் தங்கு தடையின்றி குடிநீர் அளிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதல் அமைச்சரின் சத்துணவு திட்ட நிலையங்கள் 1100க்குத் தேவையான தினசரி குடிநீர் தங்கு தடையின்றி அளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

6. தென் சென்னைப் பகுதிகளுக்கு நீர் வழங்குவதற்கு திருவான்மியூருக்குத் தெற்கில் அமைந்திருக்கும் நிலத்தடி நீர்பிடிப்புகளிலிருந்து நீரினைக்கொணர்வதற்கான திட்டமும் மும்மரமாக நடைபெற்று வருகிறது.

தமிழக அரசு 1982ம் ஆண்டு ரூ. 203.46 இலட்சங்களுக்கும் 1983ம் ஆண்டு ரூ. 256.96 இலட்சங்களுக்கும் ஆன மதிப்பீடுகளை அங்கீகரித்து ஒப்புதல் அளித்துள்ளது.

# பேரறிஞர்களையும் மயக்கிய
# 'பாலா' நடராசர்

டாக்டர் இரா. கலைக்கோவன்

தமிழகத்தில் பலவகைப்பட்ட கோயில்கள் இருந்ததாகத் தன் திரு அடைவுத் திருத்தாண்டகத்தில் அப்பரடிகள் குறிக்கின்றார். அப் பல்வகைப்பட்ட கோயில்களுள் 'கரக்கோயில்' என்பதும் ஒருவகை. கரக்கோயில் வகையைச் சேர்ந்ததாய் அப்பர் அடிகளால் குறிக்கப்படுவது ஒரே ஒரு கோயில்தான். அதை,


''வேறு சிந்தை இலாதவர் தீவினை
கூறு செய்த குழகன் உறைவிடம்
ஏறு செல்வத்து இமையவர் தாம்தொழும்
ஆறு சேர்கடம் பூர்க்கரக் கோயிலே''

—என்று அப்பர் அடிகளே இது வென்று இனம்காட்டி விடுகிறார். அப்பரால் கரக்கோயிலாய்க்குறிக்கப்படும் இக்கடம்பூர்க் கோயில், இப்போது அமிர்தகடேசுவரர் திருக்கோயில் என்று அழைக்கப்படுகிறது. இது தென்னார்க்காடு மாவட்டத்தில், சிதம்பரத்திற்கு முப்பத்திரண்டு கிலோமீட்டர் தொலைவிலும், காட்டுமன்னார் கோயிலிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ள மேலைக்கடம்பூரில் அமைந்துள்ளது. சிவத்தலமான இக்கோயிலைச் சம்பந்தரும் பாடியுள்ளார்.

சிற்பக் களஞ்சியமாய்த் திகழும் இக்கோயிலில் பல அழகிய பழமைச் சிறப்பு வாய்ந்த செப்புத் திருமேனிகள் உள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கது 'பாலா நடராசர்' என்றழைக்கப்படும் ஆடல்வல்லானின் திருமேனியாகும். தமிழகத்தில் காணக்கிடைக்கும் ஆடல்வல்லானின் திருமேனிகள், இறைவனின் பலவகையான தாண்டவக் குறிப்புக்களுடன் அமைந்துள்ளன. இவற்றில் இறைவன் குறள் வடிவ அரக்கன் மீது காலை ஊன்றி ஆடுவதாகவோ, தாமரை இருக்கையில் காலூன்றி ஆடுவதாகவோ ஆடல் தோற்றம் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால், 'பாலா நடராசர்' என்று அழைக்கப்படும் இத்திருமேனியில் காளையின் மீது நின்றபடி ஆடுவதாய் இறைவனின் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. இது வங்காளத்துப் படைப்பாகும். வங்காளத்தில் 'நர்த்தேசுவர வடிவம்' என்று இதைக்குறிக்கின்றார்கள். கல்லில் வடித்த பல நாத்தேசுவர வடிவங்கள் டாக்கா அருங்காட்சியகத்தில் இருக்கின்றன. ஆனால், செப்புத் திருமேனியாய்க் காணக்கிடைப்பது மேலைக்கடம்பூரிலுள்ள பாலா நடராசர் வடிவம்தான். இவ்வகை பாலா நடராசர் வடிவங்களில் சிவபெருமானுக்கு ஊர்த்தவலிங்கம் காட்டப்பட்டிருக்கும். இது பாலா நடராசருக்குரிய தனித்தன்மையாகும். இது இறைவனின் யோகத்தன்மைக்கும் தன்னடக்கத்திற்கும் அடையாளமாகக் கூறப்படுகிறது. இறைவனுக்கு இவ்வடிவங்களில் ஆடை வடிக்கப்பட்டிருந்தாலும் திகம்பரராகவும் காட்சி தருகிறார். இவ்வகை வடிவங்கள் பெரும்பாலும் சதுர தாண்டவ அமைப்பிலேயே காணப்படுகின்றன.

மேலைக் கடம்பூரிலுள்ள பாலா நடராசர் முதலாம் இராசேந்திர சோழனின் வடபுலத்துப் படையெடுப்பின்போது, அப்பேரரசனால் வெற்றிப்பரிசாக வங்காளத்திலிருந்து கொணரப்பட்டதாகக் கூறப்படுகிறது. பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் இச் செப்புத் திருமேனியைப் பற்றி மூன்று பேரறிஞர்கள் தங்கள் நூல்களில் குறிப்பிடுகிறார்கள். தில்லி அருங்காட்சியகத்தின் இயக்குநராய் இருந்த திரு. சிவராமமூர்த்தி தன்னுடைய Nataraja in Art, thought and literature என்னும் நூலில் இச்செப்புத் திருமேனியைப் பற்றிக் குறிப்பிடுகிறார். சோழர் கலைமுறையில் ஆய்வு நிகழ்த்திய அறிஞர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தன்னுடைய பிற்காலச் சோழர் கோயில்கள் என்னும் நூலில் இத் திருமேனியைக் குறிப்பிடுகிறார். இசைப் பேரறிஞர் தண்டபாணி தேசிகர் திருவாவடுதுறை ஆதீன வெளியீடான ஆடல் வல்லான் என்ற நூலில் இத்திருமேனியைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இவர்களில் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தவிர ஏனைய இரண்டு பேரறிஞர்களின் விளக்கங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு, சில இடங்களில் தெளிவில்லாமலும், தவறாகவும் கூட அமைந்துள்ளது வியப்பைத் தருகிறது.

பாலா நடராசர் செப்புத் திருமேனியின் திருவாசி



உலகப் புகழ் பெற்ற 'பாலா' நடராசர்— மேலைக்கடம்பூர்.





தாங்குதளத்திலும் முகப்பிலும் உள்ள திருமேனிகள்.

இச் செப்புத்திருமேனி இரண்டு பகுதிகளாய் உள்ளது. திருவாசி ஒன்று. நடராசரின் ஆடல் வடிவமும் உடன்கூட்டத்தெய்வங்களும் அமைந்த பகுதி மற்றொன்று. திருவாசியின் மேற்புறத்தில் இரண்டு வித்யாதரர்கள் தங்கள் கரங்களில் மாலைகளுடன் காணப்படுகிறார்கள். திருவாசியின் வலப்புறத்தில் நடுவில், ஒரு ஆண் வடிவம் பறவையொன்றின் மீது காணப்படுகிறது. திரு. சிவராமமூர்த்தி இவ்வடிவத்தை அன்னத்தின் மீதமர்ந்த கலைமகள் என்று குறிப்பிடுகிறார். இது பெண் வடிவமே அல்ல. பறவையும் அன்னப் பறவை அல்ல. பறவையின் தோற்றம் மயில்போல் இருப்பதால் இந்த ஆண் வடிவம் முருகனாக இருக்கலாம். திருவாசி, அடித்தளத்துடன் பொருந்தும் இடத்தில் வலப்புறம் ஒரு ஆண் வடிவமும், இடப்புறம் ஒரு பெண் வடிவமும் காணப்படுகின்றன. இந்த ஆண்வடிவம் வலது கையில் திரிசூலத்துடன் காணப்படுகிறது. பெண்வடிவத்தின் வலதுகரம் காப்பு முத்திரையில் அமைந்துள்ளது. இடக்கரத்தில் கண்ணாடி காணப்படுகிறது. இவ்வடிவங்கள் யாரைக் குறிக்கின்றன என்பதை அறியமுடியவில்லை.


திருவாசியை எளிதாகப்பிரித்து நீக்கி விடலாம். திருவாசி இல்லாத நிலையில், நந்தியின்மேல் ஆடல்வல்லானும், நந்திநிற்கும் தாங்குதளமும் தனிப்பகுதியாகின்றன. இத்தாங்குதளத்தின் முகப்பில் நான்கு வடிவங்கள் உள்ளன. அவற்றில் முதலும், மூன்றாவதுமாய் அமைந்திருப்பவை கணங்களைப் போலத் தோற்றமளிக்கின்றன. இரண்டாவது வடிவத்தின் முகத்தோற்றமும், தாடை அமைப்பும் ஆட்டை நினைவூட்டுகின்றன! தக்கன் யாகத்திற்குத் தன்னை அழைக்காமல் சிறுமைப்படுத்தியதற்காக இறைவன் தக்கனையும், யாகத்திற்கு வந்தவர்களையும் போரில் தண்டித்ததையும், தக்கனின் தலையைக் கொய்து, அதற்குப் பதிலாக அவனுக்கு ஆட்டுத்தலையைக் கொடுத்ததையும், தக்கன் பணிந்து வணங்க, அவனுக்குத் தன் கணங்களின் ஒரு பகுதிக்குத் தலைவனாகும் பேற்றை இறைவன் வரமாக வழங்கியமையையும் இங்கு நினைவு கூர்ந்தால் இந்த ஆட்டு முகம் கொண்ட மனிதவடிவம் தக்கனையே குறிக்கிறது என்பதை உணர முடியும். நான்காவது மனித வடிவம் குதிரை முகத்துடன் காணப்படுவதால் இது தும்புருவைக் குறிப்பதாகக் கொள்ளலாம். தளத்தின் பக்கவாட்டில் பக்கத்துக் கொன்றாய் இரண்டு கணங்களின் வடிவங்கள் உள்ளன. இவை திர்வாணத் தோற்றத்தில் செதுக்கப்பட்டுள்ளன. இந்த ஆறு வடிவங்களுமே ஆடல் தோற்றத்தில் அழகுபட அமைக்கப்பட்டுள்ளன.

தாங்குதளத்தின் மேல் எட்டு வடிவங்களுக்கான தள அமைப்பு உள்ளது. ஆனால், ஏழு வடிவங்களே தற்போது காணப்படுகின்றன. அவற்றுள்ளும் இரண்டு, தளத்திலிருந்து நழுவி, தனித்துக் கிடக்கின்றன. தாங்குதளத்தின் வலப்புற ஓரத்தில் உள்ள துணைத் தளத்தில் முன்புறம், வடிவம் ஒன்று இருந்தமைக்கான அமைப்பு காணப்படுகிறது. இதையடுத்து பிருங்கி முனிவரின் வடிவம் அமைந்துள்ளது. இது நழுவி உள்ளதால் மெழுகு வைத்துப் பொருத்தியுள்ளனர். இதற்குச் சற்று முன்னால் இசைக்கருவி ஒன்றை வாசித்த நிலையில் ஒரு மனித வடிவம் காணப்படுகிறது. இது தண்டுவாக இருக்கலாம்.

இதற்கு எதிர்ச்சாரியில் இடது புறத்தில் உள்ள தளஅமைப்பில் இரண்டு பெண் வடிவங்கள் அருகருகே வார்க்கப்பட்டுள்ளன. இவ்வடிவங்கள் கங்கையையும், உமையன்னையையும் குறிப்பதாகக் கொள்ளலாம். பாலா வகை ஆடல்வல்லான் தோற்றங்களில் உமை, கங்கை வடிவங்களைப் பக்கத்திற்கொன்றாய் வடிப்பது வழக்கமாக இருந்திருப்பதைத் திரு. சிவராமமூர்த்தி தன் நூலில் பல இடங்களில் குறித்துள்ளார். இவ்விரண்டு வடிவங்களுக்கு முன்னால் சற்றுத்தள்ளி பிள்ளையார் தனியானதொரு சிறுதளத்தின் மீது ஆடல்தோற்றத்தில் காணப்படுகிறார். இவரது வலது முன்கரம் சிதைந்துள்ளது. வலது பின்கரத்தில் மலர் மொட்டும் இடது பின்கரத்தில் பாசமும், இடது முன்கரத்தில் மோதகமும் உள்ளன.

வலக்கரங்களிலுள்ள ஆயுதங்களைத் தெளிவாகக் காட்டுகிறது








# ஊரகவளர்ச்சிக்கு ஒப்பிலாப் பணிகள்

ஊரக வளர்ச்சிப் பணிக்கான திட்டங்கள் இரு பெரிய பண்புக் கூறுகளை உள்ளடக்கியன ஒன்று அனைத்து வகைகளிலும் சமுதாயத்திற்கான அமைப்பாண்மைத் திறஞ்சார்ந்த செயற் கூறுகளாகும். மற்றது சமுதாயத்தில் நலிவுற்ற பகுதியாளரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும். இவ்விரண்டு கூறுபாடுகளும் சமூகம் பொருளாதார மேம்பாட்டின் இலக்கை எய்துதற்கு ஒன்றையொன்று சார்ந்து இணைந்துள்ளவையாகும்.

சமுதாய வளர்ச்சியென்பது நடப்புக் காலக் கட்டத்தை மட்டுமல்லாது, வருங்காலத்தின் தொடர்ச்சியான மேம்பாட்டிற்கும் உத்தரவாதமளிக்கும் தன்மையுடையதாய் இருத்தல் அவசியம். எனவே, ஊரக வளர்ச்சியென்பது சமூகப் பொருளாதார உயர்விற்குரிய சம நீதி; பொருளாதாரத் தேவையியல்பு, ஒருங்கிணைந்த முன்னேற்றம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கி உருவாக்கும் பணியாகும்.

## ஊராட்சி அமைப்பு

ஊராட்சி அமைப்பு நிர்வாகம் ஏற்படைப்பு மூலம் ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பணிகள் கட்டுக்கோப்பிற்குள் அடங்கிய, ஒவ்வொரு நிலையிலும் நிர்வாகம்பாதுகாப்புக்குரிய வரையறுக்கப்பட்ட நிலையில் இயங்கி வருகின்றன. எனவே ஒவ்வொரு ஆண்டிற்கும் அந்தந்தப் பணிக்கு இலக்காக நிர்ணயித்து ஒதுக்கப்படும் அரசின் நிதி ஒதுக்கீடு அல்லது மானியம் இவைகளுடன் இணைந்த ஒன்றியம் அல்லது ஊராட்சிகளின் பங்குத் தொகை இவைகளைக் கொண்ட வாலாயப் பணிகளைச் செயலாக்கும் நிர்வாக அமைப்புகளாக இயங்கி வந்துள்ளன.

இவை தவிர்த்து அவ்வப்பொழுது ஊட்ட உணவுத் திட்டம், வேலைக்குணவுத் திட்டம், குறைந்தபட்ச தேவைத் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்கள் மத்திய அரசின் முழு அளவுத் திட்டமாகவோ, மானியத் திட்டமாகவோ ஒன்றியங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டன.

## திட்டப் பணிகள்

பல தரப்பட்ட பொருளாதார மேம்பாட்டிற்கு வளர்ந்து பெருகி வரும் தேவைகளை நன்குணர்ந்த தமிழக அரசு 1977-78 ஆம் ஆண்டு முதல், ஊரக வளர்ச்சித் திட்டங்களை ஊக்குவிக்கும் வகையில் பெருவாரியான அளவில் நிதி ஒதுக்கீடு செய்யத் தலைப்பட்டது. அதன் மூலம் கிராமப்புற மக்களின் சமூக நலனுக்கு அத்தியாவசியத் தேவைகளான குடிநீர் வழங்கல், போக்குவரத்துக்கு ஏதுவான சாலைகள் அமைத்தல், பள்ளிச் சிறார்கள் பாங்குடன் அமர்ந்து கல்வி கற்கப் பள்ளிக் கட்டடங்கள் அமைத்தல், சுகாதாரப் பணிகள் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து முனைப்புடன் 1977-78 ஆம் ஆண்டு முதல் செயலாக்கியது.

கிராமப்புறச் செழுமைக்கு அதில் ஈடுபடுத்திக் கொண்ட அனைத்துத் துறைகளுக்கும் சேர்ந்து எழுபதாம் வரிசை ஆண்டுகளின் முற்பகுதியில் கிராமப்புற வளர்ச்சிக்காக ஒன்றியங்களின் மூலம் செயலாக்க ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 6,526.12 இலட்சங்களேயாகும்! இதுவே 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 13,255.30 இலட்சம் அளவில் மிகவும் உயர்ந்த ஒதுக்கீட்டுத் தொகையுடன் செயலாக்கப்பட்டன. இதன்படி எழுபதாம் வரிசை ஆண்டுகளின் முற்பகுதியில் சராசரியாக ரூ. 17.25 இலட்சம் பெற்று வந்த ஒவ்வொரு ஒன்றியமும், 1977-78 ஆம் ஆண்டில் ஏறத்தாழ ரூ. 35.44 இலட்சம் அளவில் இருமடங்கிற்கு மேலாகப் பெற்றுப் பணிகளை நிறைவேற்றின. இது ஒரு மாபெரும் சாதனையாகும்.

தமிழ்நாட்டில் ஊரக சமுதாய வளர்ச்சித் திட்ட வரலாற்றிலேயே 1980-81 முதல் 1982-83

வரையான மூன்று ஆண்டுகள் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவைகளாகும். தமிழக முதல்வரின் மகத்தான நோக்கத்திற்கேற்ப, தன்னிறைவுத் திட்டம் என்ற திட்டத்தைச் செயலாக்கத்தில் ஈடுபடுத்திக் கொண்டது. இதன்கீழ் 1980-81 ஆம் ஆண்டில் 69 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு திட்டம் செயலாக்கப்பட்டது. ஒவ்வொரு கிராமமும் அனைத்து அடிப்படைத் தேவைகளைத் தன்னகத்தே கொண்டதாக இருக்க வேண்டுமென்பதே தன்னிறைவுத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். அதற்கிணங்க குடிநீர் வசதி, நல்ல போக்குவரத்துக்குச் சாதகமாக கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள், நல்ல கட்டட வசதிகள் கொண்ட பள்ளிகள் சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்கள், பாசனக் கண்மாய்களைச் சீர்படுத்துவதன் மூலம் விவசாய உற்பத்திப் பெருக்கம், ஆதி திராவிட குடியிருப்புகளுக்குத் தேவையான மயானப் பாதையமைப்பு, மேலும் அவர்களுக்கு குடியிருப்பு வசதிகள் போன்ற பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு சிறப்பாகச் செய்து முடிக்கப்பட்டன.



## அணிசேர் அரிய சாதனை

1980-81 ஆம் ஆண்டில் 69 வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டச் செயலாக்கத்தின் மூலம் 1,330.74 இலட்சம் ரூபாயைத் தமிழக அரசு செலவு செய்துள்ளது. அத்தொகையில் பள்ளிக் கட்டடங்கள் கட்டமைப்புக்கு மட்டும் ரூபாய் 271.90 இலட்சம் செலவாக்கப்பட்டுள்ளது.

1981-82 ஆம் ஆண்டு, மேல் கொண்டு 150 வட்டாரங்களுக்கு தன்னிறைவுத் திட்டம் விரிவாக்கப்பட்டு ரூ. 4,067.56 இலட்சம் செலவு செய்யப்பட்டது. அதனில் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவிப்பதற்கு மட்டும் ரூ. 638.81 இலட்சம் செலவாக்கப்பட்டது.

1982-83 ஆம் ஆண்டிற்கு எஞ்சியுள்ள 159 வட்டாரங்களுக்குத் தன்னிறைவுத் திட்டம் நீட்சி செய்யப்பட்டு திட்டவேலைகள் ரூ. 4,653.04 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டன. அதில் ரூ. 1,102.00 இலட்சம் செலவில் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

தன்னிறைவுத் திட்டப் பணிகளுக்கென ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஏறத்தாழ ரூ. 26 இலட்சம் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

## தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்

மத்திய மாநில அரசுகள் இணைந்து சம அளவில் செலவினத்தில் பங்கு கொண்டு செயல்படுத்தப்படும் திட்டம் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம். ஏற்கெனவே செயல்பட்டு வந்த உழைப்புக்கு உணவு என்ற திட்டத்திற்குப் புது உருக்கொடுக்கப்பட்ட இத்திட்டம் தமிழகத்தில் 1980-81 ஆம் ஆண்டு அமல் செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் நோக்கம் கிராமங்களில் வேலையற்றோர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதோடு, கிராம சமுதாயத்திற்குத் தேவையான நிரந்தர சமூக சொத்துக்கள் உருவாக்கப்படுவதாகும்.

1980-81 முதல் 1982-83 உடன் முடிவுற்ற மூன்றாண்டுகளில் 47,378, 37,746 மற்றும் 25,819 மெட்ரிக் டன் அரிசி முறையே மேற்குறித்த ஆண்டுகளில் தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் ஆக்கப் பணிகளில் ஈடுபட்ட வேலையாட்களுக்குக் கூலியாகக் கொடுக்கப்பட்டது. 1980-81 ஆம் ஆண்டு ரூ. 670.50 இலட்சமும், 1981-82 ஆம் ஆண்டு ரூ. 2,747.78 இலட்சமும், 1982-83 ஆம் ஆண்டு ரூபாய் 3,782•58 இலட்சமும் இத்திட்டம் அமல் செய்து பல்வேறு கட்டமைப்புகள் முடித்ததில் செலவாக்கப்பட்டது. இதன்மூலம் 146.75, 441.16, 495.13 இலட்சம் மனிதசக்தி நாட்கள் முறையே 1980-81, 1981-82, 1982-83 ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இப்பணிகளின் மூலம் ரூ. 872.30, ரூ. 3,137.05 மற்றும் ரூ. 4,267.88 இலட்சம் பெறுமானமுள்ள நிரந்தர சமுதாயச் சொத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஏனைய மாநிலங்களின் சாதனைகளை ஒப்பிடுகையில் தமிழகத்தில் தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் செயலாக்கம் முன்னணியில் நின்று, தமிழகம் அகில இந்தியாவில் முதன்மை இடத்தை வகிக்கிறது என்பது உண்மையிலேயே பெருமைப்படக் கூடியதாகும்.

## சாண எரிவாயுத் திட்டம்

சாண எரி வாயுத் திட்டம், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அனைத்திந்தியாவிற்குரிய அங்கமாகவும், பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தின் ஒன்றாகவும், கிராமப்புற இல்லங்களுக்கு ஒளி விளக்காய்த் திகழ்வதொன்றாகும்.

இத்திட்டம் 1981-82 ஆம் ஆண்டில் தமிழகத்தில் தேசிய திட்டமாக அமல் செய்யப்பட்டது. எளிய நிலையில் கிடைக்கும் தரமான எரி வாயுவையும், நல்ல பக்குவமான உரத்தை உருவாக்குவதுமே இதன் நோக்கம்.

இத்திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகளுக்கும் மலைவாழ் இனத்தவர்களுக்கும், ஏனையவர்களைக் காட்டிலும் கணிசமான அளவு அரசு மான்யம் வழங்க வழி வகுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 1981-82 ஆம் ஆண்டில் 1,327 சாண எரிவாயுக் கலன்கள் கிராமங்களில் நிர்மாணிக்கப்பட்டுப் பயன்பட்டு வருகின்றன. 1982-83 தமிழகத்திற்கான இலக்கான 3,000-ஐயும் மிஞ்சி, 4,644 கலன்கள் நிறுவ, தமிழக அரசு வெற்றிகரமாகச் சாதனையை நிகழ்த்தியுள்ளது.





# புகழ் சிறக்கும் கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறியாளரின் வாழ்வில் முன்னேற்றத்தைக் காண வேண்டும், அவர்களைக் கூட்டுறவின் கீழ் கொண்டு வந்து, அவர்தம் உற்பத்திகளை வர்த்தக ரீதியில் விற்பனை செய்து, கைத்தறித் தொழிலைச் சீராக வளர்க்க வேண்டுமென்ற தலையாய குறிக்கோள்களுடன் நிறுவப்பட்ட அமைப்பே, இன்று 'கோ-ஆப்டெக்ஸ்' என்ற சுருக்கமான பெயரில், பெரும் புகழுடன் விளங்கும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கமாகும்.

பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான மூலப் பொருள்களைக் குறிப்பாக, நூலைக் கொள்முதல் செய்து விநியோகிக்கவும், அச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் கைத்தறி ஆடைகளின் விற்பனைக்கு உதவுவதும் கோ-ஆப்டெக்ஸின் பணிகளாகும்

31-3-1983-ல் இச்சங்கத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 13.78 கோடியாகும். இதில் தமிழக அரசு செலுத்தியுள்ள பங்கு ரூ. 12.82 கோடியாகும். மீதித்தொகை, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் இதரர்கள் செலுத்தியதாகும்.

தமிழகத்திலுள்ள 12 கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து நூலை வாங்கி, ரொக்க விற்பனை அடிப்படையில், பிரதம சங்கங்களுக்குக் கோ-ஆப்டெகஸ் தனது 22 நூல் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்து வருகிறது.

பிரதம நெசவாளர் சங்கங்களின் உற்பத்தியில் 50 சதவிகிதத்திற்கு மேல் கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்து வருகிறது. ஜனதா மற்றும் பாலியஸ்டர் இரகங்களைப் பொறுத்த வரையில், உற்பத்தி முழுவதையும் கொள்முதல் செய்கிறது கோ-ஆப்டெக்ஸ்.

கீழே குறிப்பிட்டுள்ளபடி தமிழகத்திலும், தமிழகத்திற்கு வெளியேயும் அமைக்கப்பட்டுள்ள விற்பனை நிலையங்கள் மூலம் கைத்தறித் துணிகளை விற்பனை செய்து வருகிறது கோ-ஆப்டெக்ஸ்.

தமிழகத்தில் 325 விற்பனை நிலையங்களும், தமிழகத்திற்கு வெளியே 290 விற்பனை நிலையங்களும் ஆகமொத்தம் 615 விற்பனை நிலையங்கள் உள்ளன.

''கோ-ஆப்டெக்ஸ் இன்டர் நேஷனல்'' என்ற பெயருடன் தனியானதொரு ஏற்றுமதிப் பிரிவு சென்னை, பம்பாய் மற்றும் புது டில்லி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகிறது. கைத்தறித் துணிகள் பற்றிய வியாபார விசாரிப்புகள் அயல்நாடுகளிலிருந்து வருகின்றன.

கீழ்க் குறிப்பிட்டுள்ளபடி கோ-ஆப்டெக்ஸ் இன்டர் நேஷனல் விற்பனையைச் சென்ற 1983 பிப்ரவரி வரை நிகழ்த்தியுள்ளது.

1980-81-ல் ரூபாய் 95 இலட்சங்களுக்கும், 1981-82-ல் ரூபாய் 84.65 இலட்சங்களுக்கும், 1982-83 (பிப்ரவரி வரை) ரூபாய் 63.00 இலட்சங்களுக்கும் விற்பனை செய்துள்ளது.

தற்போது அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவிலுள்ள வியாபாரிகளுடன் நேரடி வியாபாரத் தொடர்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1982-83 முடிவுக்குள் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை நடக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது கோ-ஆப்டெக்ஸ் செய்யும் நேரடி ஏற்றுமதி மிகுந்த நம்பிக்கையளிப்பதாக உள்ளது சிங்கப்பூரில் ஒரு கண்காட்சி நிலையம் துவக்கப்பெற்று இயங்கி வருகிறது.

தொழில்நுணுக்கம் மற்றும் வளர்ச்சிப் பிரிவின் கீழ் தற்போது 5 வடிவமைப்பு நிலையங்கள்செயல்பட்டு வருகின்றன. மதுரை, கோயம்புத்தூர், சேலம் திருச்சிராப்பள்ளி மற்றும் கடையநல்லூர் ஆகிய இடங்களில் வடிவமைப்பு நிலையங்கள் உள்ள.

புதிய வடிவமைப்புகளைக் காகித அட்டைகளில் வண்ணம் பூசி உருவாக்கி, அவற்றைப் பிரதம சங்கங்களுக்கு வழங்கி வருகின்றன இந்நிலையங்கள்.

தளத்தில், முன்புறம் பார்த்த வண்ணம் இரண்டு வடிவங்கள் ஆடல் தோற்றத்தில் அமைந்துள்ளன. வலப்புற வடிவம் பைரவரைக் குறிக்கிறது. இதன் இடது கரங்களில் கபாலமும், திரிசூலமும் உள்ளன. வலக்கரங்களில் உள்ள ஆயுதங்களைத் தெளிவாக இன்னதென்று அறியமுடியவில்லை. இடப்புறத்திலுள்ள வடிவம், திருவாசியின் வலப்புறத்து அடிப்பகுதியில் உள்ள ஆண் வடிவத்தை ஒத்துள்ளது. இது யாரைக் குறிக்கிறதென்று அறியக் கூடவில்லை. தளத்தின் மையத்தில் தாமரை இருக்கையின்மீது நந்தி நின்று கொண்டு இருக்கிறது. இதன் வலது முன் கால் தூக்கிய நிலையில் காணப்படுகிறது. முகம் மேலே நிமிர்ந்து தன் தலைவனின் ஆடல் அழகைக் கண்டு களிப்பது போல் காட்டப்பட்டுள்ளது.

இறைவனின் வலது பாதத்தின் விரல்கள் காளையின் திமிலின் மீது ஊன்றியுள்ளன. இடது பாதத்தின் முன்பகுதி காளையின் முதுகின் பின்புறத்தில் ஊன்றியுள்ளது. இரண்டு குதிங்கால்களுமே தூக்கிய நிலையில் உள்ளன. வலதுபாதத்தின் உள்ளங்கால் பகுதியில் இடது குதிங்கால் பொருந்தியுள்ளது. இரண்டு கால்களுக்கிடையில் உள்ள பகுதி சாய்சதுர அமைப்பில் உள்ளது. இதைத்தான் சதுரதாண்டவம் என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது. திரு எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியமும், தேசிகரவர்களும் இதைச் சதுரதாண்டவம் என்று கூற, திரு சிவராமமூர்த்தி இதை வலிதகரணமாகக் குறிப்பிடுகிறார்.

ஆடல்வல்லான் பத்துத் திருக்கரங்களோடு இதில் காட்சி தருகிறார். திரு. சிவராமமூர்த்தி, இத்திருமேனி பதினாறு கரங்களைக் கொண்டிருப்பதாகத் தன் நூலில் குறிப்பிடுகிறார். (பக். 304) திரு. தண்டபாணிதேசிகர் எட்டுக்கரங்கள் என்று எழுதியுள்ளார்.(பக்.339)

இப்பத்துக் கரங்களுள் வலது முன்கரம் வேழ முத்திரையில் அமைந்துள்ளது. இதையே திரு. சிவராமமூர்த்தியும், திரு.எஸ். ஆர்.பாலசுப்பிரமணியமும் குறிப்பிட, தேசிகரவர்களோ இதை டோல முத்திரையென்று சொல்கிறார். டோல முத்திரைக்குச் சிற்பச் செந்நூலில், 'ஒடிந்த அறாக்கிளை மரத்தில் தொங்கி நிற்கிற நிலையைப் போலத் தோளிலிருந்து நீட்டப்பட்டு தொங்கியமையும் கை அமைதி என்று விளக்கம் தரப்படுகிறது. இரண்டு முத்திரைகளிலுமே விரல்கள் 'தளிர்க்கை' அமைப்பில் இருந்தாலும், வேழமுத்திரையில் தான், மணிக்கட்டில் கைத்தலம் கீழ்நோக்கிச் சரியும் அமைப்பு கூறப்படுகிறது. இப்படிமத்தின் வலது முன்கரத்து மணிக்கட்டில் கைத்தலம் கீழ்நோக்கிச் சரித்து அமைக்கப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம். எனவே, இது வேழ முத்திரைதான் என்பதில் ஐயமில்லை.

இதன் பிறகரங்களிலுள்ள ஆயுதங்களைப்பற்றித் திரு.பாலசுப்பிரமணியம் ஒன்றும் கூறவில்லை. திரு சிவராமமூர்த்தி அவர்கள் எந்தக்கரத்தில் எதுவென்றுகுறிப்பிடாமல் பொதுப்படையாக, வில், அம்பு, திரிசூலம், வாள், கேடயம், கட்வாங்கம், தலையோடு, பாசம் முதலிய ஆயுதங்கள் பிறகரங்களில் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இடது முன்கரம் அபயம் அல்லது பதாக முத்திரையில் மேல்நோக்கிய நிலையில் இருப்பதாகவும் குறித்துள்ளார்.

தண்டபாணி தேசிகரவர்கள் வலக்கரங்களில் கீழிருந்து முறையே, சூலம், குந்தம், வாள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். (பக்.239). ஆனால், இத்திருமேனியில் வேழமுத்திரையுடன் அமைந்துள்ள வலது முன்கரத்தைத் தவிர ஏனைய நான்கு வலக்கரங்களிலும் கீழிருந்து மேலாக சட்டி, தண்டம், திரிசூலம், வாள் முதலியனவே காணப்படுகின்றன.

இடக்கரங்களில் முன்கரம் மேல் நோக்கி விரிந்தகை என்பதில் தேசிகரவர்களுக்கும், சிவராமமூர்த்தி அவர்களுக்கும் மாறுபாடு இல்லை. இது சிவராமமூர்த்தி குறிப்பது போல் மேலே விரித்த அபயம் அல்லது பதாக முத்திரையில்தான் உள்ளது. ஆனால், ஏனைய இடக்கரங்களில் மேலிருந்து கீழாகக் கேடயம், கட்வாங்கம், தலையோடு, பாம்பு முதலியனவே காணப்படுகின்றன. திரு. தேசிகரோ இவற்றைக் கேடயம், அம்பு, தண்டம் என்கிறார்.

திரு. சிவராமமூர்த்தி அவர்கள் குறிக்கும் அம்பு,வில், பாசம் முதலியன இத்திருமேனியின் கரங்களில் இல்லை. திரு.தேசிகர் கட்வாங்கத்தையே அம்பாகக் கொண்டார் போலும்.

கரங்களின் எண்ணிக்கை, அவை கொண்டிருக்கும் ஆயுதங்கள், அவற்றின் முத்திரை போன்றவற்றில் இப்பேரறிஞர்கள் இருவரும் இப்படி மாறுபட்டிருப்பது வியப்பாகவும், விந்தையாகவும் உள்ளது.



இடக்கரங்களிலுள்ள ஆயுதங்கள்

இத்திருமேனியின் தலையில் காணப்படும் சடாமகுடம், வங்காளக் கலை முறையில் அமைந்துள்ளது. சடையின் முடிச்சுகள் தோளில் சரிந்து அழகாகக் காட்டப்பட்டுள்ளன. கழுத்தில் பாம்பு படமெடுத்த நிலையில் காணப்படுகிறது. கண்டிகை, சவடி, சரப்பளி முதலிய கழுத்தணிகளும் இத்திருமேனியை அழகு செய்கின்றன.

எல்லாவற்றிலும் சிறப்பு இத்திருமேனியின் முகத்தோற்றம் தான். புன்னகை பூத்த அந்தத் திருமுகத்தில் தன்னையிழக்காதார் யாரும் இருக்கமுடியாது. நளினமும், எழிலும் நிரம்பிய அந்த அழகு முகத்தில் மலர்ந்திருக்கும் கருணையும், கனிவும் இச்சதுர தாண்டவத் திருக்கோலத்தை ஈடுஇணையற்ற சிற்பத்திருமேனியாக்குகின்றன. பேரறிஞர்களையும் மயக்கிய இந்தப் பாலா நடராசர் தமிழகத்தின் வரலாற்றில் இடம்பெற்ற வடிவழகுப் படிமம்! தமிழ்மன்னன் இராசேந்திரன் வங்காளத்து வெற்றியின் அடையாளமாகக் கொணர்ந்த இணையற்ற எழில் பரிசு. இதைக் கொண்டிருக்கும் மேலைக்கடம்பூர் கோயில் முதற்குலோத்துங்கன் காலத்துச் சிற்பக்களஞ்சியம்.

## ஓர் அறிவிப்பு!

'தமிழக' இதழுக்கு எழுத்தோவியங்களை அனுப்பும் நண்பர்கள், வெளியிடப் பெறாதவற்றைத் திரும்பப் பெறுவதற்கு, உரிய அஞ்சல் தலைகளை இணைத்து அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிரியர்.



# வட ஆர்க்காடு மாவட்டத்தில்...!

வட ஆர்க்காடு மாவட்டம் நாட்ரம்பள்ளிக்கு அருகாமையில் உள்ள தெக்குப்பட்டு என்னும் கிராமத்தில் சந்தன எண்ணெய்த் தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டுவிழா, 17.7.83 அன்று நடந்தது. மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில், மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்தத் தொழிற்சாலை ரூ.60 இலட்சம் முதலீட்டில் அமைக்கப்பட உள்ளது. தமிழ்நாடு சிறு தொழில் கழகம் (டான்சி) சார்பில் அமைக்கப்பட்டு வரும் இந்தத் தொழிற்சாலை, கட்டி முடிக்கப்பட்டவுடன் வனத்துறையின் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படும். இதன் மூலம் ஏறத்தாழ 300 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் அடிக்கல் நாட்டிப் பேசியதாவது:

''முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் கடந்த 1978ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்த இந்தச் சந்தன எண்ணெய்த்தொழிற்சாலைத்திட்டம் 5 ஆண்டுகளுக்குப்பிறகு இன்று அடிக்கல் நாட்டு விழாவாக வடிவம் பெற்றுள்ளது.

100 டன் சந்தனக் கட்டைகளைப் பயன்படுத்தி 4 அல்லது 5 சிறிய சந்தன எண்ணெய்த் தொழிற்சாலைகளை உருவாக்கலாம் என்று முடிவு செய்து, ''டான்சி'' நிறுவனத்திடம் அறிக்கை கேட்டு இருந்தோம்.

அதைத் தொடர்ந்து பெரிதாகவும் இல்லாமல், சிறியதாகவும் இல்லாமல் இப்போது உருவாக இருக்கும் 400 டன் சந்தனக் கட்டைகளைப் பயன்படுத்தி 20 ஆயிரம் கிலோ எடையுள்ள எண்ணெய் தயாரிக்க முடிவு செய்தோம்.

இப்போதெல்லாம் பரவலாகப் பேசப்படும் ''சோதனைக் குழாய் குழந்தை''யைப்போல், வனத் துறை சார்பில் நடத்த இருக்கும் இந்தக் குழந்தையை (தொழிற் சாலை) ''டான்சி'' நிறுவனம் பெற்றுத்தர இருக்கிறது.

விலை உயர்ந்த சந்தன மரங்கள் உலகத்தில் 75 சதவீதம் இந்தியாவில் உள்ளன. அதில் 90 சதவீதம் தமிழ்நாடு, கர்நாடக மாநிலங்களில்தான் உள்ளது. தமிழ்நாட்டில் அதுவும் குறிப்பாக இந்த ஜவ்வாது மலைப்பகுதியில் பெரும் அளவில் 10 இலட்சம் சந்தன மரங்கள் உள்ளன. அவற்றில் வயது முதிர்ந்த, காய்ந்து போன மரங்களை மட்டும் வெட்டுவதன் மூலம் ஆண்டுக்கு 1,500 டன் சந்தனக் கட்டைகள் கிடைக்கின்றன.

தொடக்க காலத்தில் (1904) சந்தனக் கட்டைகளை ஏலம் விட்டதில் டன் விலை ரூ. 60க்குப் போனது. கடந்த சில ஆண்டுகளில் ஒரு டன் விலை ரூ. 80 ஆயிரம் வரை உயர்ந்தது.

கர்நாடக மாநிலம் நம்மிடம் இருந்து சந்தனக் கட்டைகளை வாங்கி எண்ணெய் தயாரித்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள். சந்தன எண்ணெய்த் தொழிற்சாலைக் கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டினார்.





# ஏற்றம் பெறும் இந்திய மருத்துவம்

**1977-78**ஆம் கல்வியாண்டில் பி.எஸ்.எம். & எஸ். என்னும் பட்டப்படிப்பு இந்திய மருத்துவ ஊமயக் கழகத்தால் அனுமதியளிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. 1978-79ஆம் ஆண்டு முதல் பி.எஸ்.எம். & எஸ். படிப்புக்கு ஆண்டு தோறும் எடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 40லிருந்து 44க்கு உயர்த்தப்பட்டது. 1980-81ஆம் ஆண்டு முதல், அதன் எண்ணிக்கை 75க்கு அதிகரிக்கப் பட்டது.

மூன்றாண்டுப் பயிற்சிக் காலமுள்ள சித்த மருத்துவம், சித்த குண பாடம் ஆகிய இரு பிரிவுகளைக் கொண்ட சித்தா மேற்பட்டப்படிப்பு அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டு வருகிறது. ஆண்டு தோறும் பயிற்சி பெற எடுக்கப்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை மேற்கண்ட ஒவ்வொரு பிரிவிலும் 10 ஆகும். இப்பட்ட மேற்படிப்புப் பயிற்சியாளர்களுக்கு அதிகப்படியான உதவித் தொகை 20.10.81 முதல் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அவை பின் வருமாறு:

5 ஆண்டுகள் முறைப்படுத்தப்பட்ட பணி முடிக்கப் பணியிலுள்ளவர்கள் மற்றும் அவர்களின் தகுதிகாண் பருவம் முடிந்திருந்தால் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 650 பெறுவார்கள்.

5 ஆண்டுகள் முறைப்படுத்தப்பட்ட பணி முடிந்த பணியிலுள்ளவர்கள் மாதம் ஒன்றிற்கு ரூ. 525 பெறுவார்கள்.

தற்காலிக நியமனங்களிலுள்ளவர்களும் பணியிலில்லாதவர்களும் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 325 பெறுவார்கள்.

மருந்தாளுநர் பட்டயப்படிப்பு பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியிலும் சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையிலும் நடத்தப்பட்டு வருகிறது.

1981-82க்குமுன் ஆண்டுதோறும் சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் சித்தாவில் 7 பேர்களும், ஆயுர்வேதாவில் 5 பேர்களும், யுனானியில் 5 பேர்களும், பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் சித்தாவில் 8 பேர்களும் எடுக்கப்பட்டார்கள்.

1981-82 முதல் பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் 8லிருந்து 25 மாணவர்களாகவும், சென்னை அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனையில் 7 லிருந்து 25 சித்தா மாணவர்களாக உயர்த்தப்பட்டது. மே 1982ல் அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி(சித்தா) என்ற பெயா அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி என்று மாற்றப்பட்டது. பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியில் கீழ்க்கண்ட சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

1. உடல் கூற்றியல் பிரிவுக் கட்டடம் கட்டுதல்.

2. ஆண்-பெண் மாணவர்களுக்குத் தனித்தனி மாணவர் இல்லம் கட்டுதல் (1979-80)

3. பயிற்சி பெறுபவர்களுக்கு விடுதி கட்டுதல் (1979-80)

1979-80ஆம் ஆண்டு ஒரு அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி (யுனானி) சென்னையில் 15 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. நவம்பர் 1982இல் அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி (யுனானி) என்ற பெயர் அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரி என்று பெயர் மாற்றப் பட்டது. இந்திய முறை மருத்துவ நிலையங்களில் செவிலியர் பணிகளைக் கவனித்துக் கொள்ள அலோபதி முறை பயிற்சி பெற்ற செவிலியர் தற்போது பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு



இந்திய முறை மருத்துவத்தில் பயிற்சி தரும் திட்டத்தை 1980-81ல் அரசு அனுமதித்துள்ளது.

இயற்கை முறை பட்டப்படிப்பிற்கு 3 பேர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. 3 மாணவர்கள் ஹைதராபாத் காந்தி இயற்கை முறை மருத்துவக் கல்லூரியில் படிக்கிறார்கள்.

1982-83ல் அரசு யோக முறையை ஒரு மருத்துவ முறையாக ஏற்றுக் கொண்டுள்ளது.

**மருத்துவமனைகள்**

1977க்குப்பிறகு சென்னை அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனையில் செய்யப்பட்ட வளர்ச்சிப் பணிகள் பின் வருமாறு:

1. சென்னை, அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனையில் அரசிதழ் பதிவில்லா ஊழியர்களுக்கு என்று தனி வெளி நோயாளிகள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

2. 1979-80இல் நூல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

3. 1979-80இல் நவீன வசதிகளோடு கூடிய சமையற்கூடம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

4. 1982-83இல் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு அனுமதிக்கப்பட்டுள்ளது.

5. நோய்க்குறியில் ஆய்வகம், உயிர்வேதியல் ஆய்வகம், ஊடுகதிர்ப் பிரிவுகளுக்கான கட்டடங்கள் கட்ட 1979-80ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

6. மருந்து செய் நிலையம் இயந்திரமயமாக்கும் பணி 1979-80ல் ஆரம்பிக்கப்பட்டது.

7. புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம் கட்ட 1981-82ல் அரசு அனுமதித்துள்ளது.

1977க்குப் பிறகு பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் மருத்துவமனையில் செயயப்பட்ட சாதனைகள் பின்வருமாறு:

1. ஒருபுதிய புற நோயாளர் பிரிவு டிசம்பர் 1978ல் திறக்கப் பட்டது.

2. 1980-81ல் நவீன வசதிகளோடு கூடிய சமையற்கூடம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

3. இயந்திரமயமாக்கப்பட்ட மருந்து செய் நிலையம் 1980-81லும் 1982-83லும் அனுமதிக்கப்பட்டது.



4. ஊடுகதிர் பிரிவுக்கான கட்டடம் கட்ட 1982-83ல் அரசு அனுமதித்துள்ளது.

5. 1982-83ல் அரசு 24 படுக்கைகள் கொண்ட குழந்தைப் பிரிவின் கட்டடம் கட்ட அரசு அனுமதித்துள்ளது

1979-80ல் தாலுக்கா, மற்றும் தாலுக்கா அல்லாத மருத்துவமனைகளில் 15 சித்த பிரிவுகளும் 1980-81இல் 15 சித்தா பிரிவுகளும் திறக்க அரசு அனுமதித்துள்ளது. தற்போது மாவட்டத் தலைமை, தாலுக்கா மற்றும் தாலுக்கா அல்லாத மருத்துவமனைகளில் 102 சித்தா பிரிவுகள் இயங்குகின்றன.

1979-80ல் அரசினர் மருத்துவமனை, சிதம்பரம், மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் இராமநாதபுரம், தருமபுரி ஆகிய இடங்களில் 15 படுக்கைகள் கொண்ட சித்தா பிரிவு தொடங்க அரசு அனுமதியளித்துள்ளது.

1980-81ல் மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் நாகப்பட்டினம், ஈரோடு, ஆகிய இடங்களிலும் 1981-82ல் மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் வேலூர், திண்டுக்கல் ஆகிய இடங்களிலும் 25 படுக்கைகள் கொண்ட சித்தா பிரிவு தொடங்க அரசு அனுமதித்துள்ளது. மே 1981ல் 185 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா பிரிவுகளும் டிசம்பர் 1981ல் 15 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா, பிரிவுகளும், ஏப்ரல் 1982ல் 10 அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சித்தா பிரிவுகளும் மே 1983ல் 10 அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சித்தாப் பிரிவுகளும் திறக்க அரசு ஆணையிட்டுள்ளது

பிப்ரவரி 1980ல் 20 அரசினர் கிராமப்புற மருந்தகங்களும் மே 1983ல் அரசினர் கிராமப்புற மருந்தகம் ஒன்றும் திறக்க அரசு ஆணையிட்டுள்ளது

1977-78ல் மூலிகைப்பண்ணைக்குத் தேவையான நிலங்களைப் பெறவும் மூலிகைகளைப் பயிரிடவும் அரசு அனுமதியளித்துள்ளது. 1983ல் தன்னாட்சி உரிமையுள்ள மூலிகை வாரியம் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. பிப்ரவரி 1983ல் முதல் அனைத்திந்திய சித்த மருத்துவ மாநாடு தஞ்சாவூரில் சித்த அறிவியல் மேம்பாட்டுக் குழுவில் நடத்தப்பட்டது.

கிறது; எனவே, மத்திய அரசு சந்தனக்கட்டை ஏற்றுமதிக்கு விதித்துள்ள தடையை மறு பரிசீலனை செய்து நீக்கவேண்டும் என்று தமிழக அரசு சார்பில் மீண்டும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அமைக்கப்பட இருக்கும் இந்தச் சந்தன எண்ணெய்த் தொழிற்சாலையில், ஆண்டுக்கு ரூ. 2 கோடி மதிப்புள்ள எண்ணெய் உற்பத்தி செய்யமுடியும். அதில் ரூ. 2 கோடி மதிப்புள்ள எண்ணெய் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் ரூ. 25 முதல் 30 இலட்சம் வரை நிகர இலாபம் திரட்ட முடியும்.

இந்தத் தொழிற்சாலையை, 400 டன் சந்தனக்கட்டைகளில் இருந்து 1,500 டன் கட்டைகள் வரை பயன்படுத்தும் அளவுக்கு விரிவுபடுத்தவும், அதோடு இணைந்து சோப்பு, பவுடர், ஊதுவத்தி போன்ற வாசனைப் பொருட்கள் தயாரிக்கும் துணைத் தொழில்கள் தொடங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதே நேரத்தில், சந்தனக் கட்டைகள் திருடும் சமுதாய விரோதிகளுக்கு, மலைவாழ் மக்கள் துணைபோக வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன். மலைவாழ் மக்களின் நல்வாழ்வுக்குத் தமிழக அரசு எல்லா உதவிகளையும் செய்யும்''.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசியதாவது:

"மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சமுதாயத் தீமைகளை எதிர்த்துப் போராடும் வகையில் பல்வேறு வேலைவாய்ப்புத் திட்டங்களை உருவாக்கி வருகிறார். இன்று உருவாக இருக்கும் இந்த சந்தன எண்ணெய்த் தொழிற்சாலை போல் மேலும் 4 தொழிற்சாலைகளை உருவாக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது''.

விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ந. நாராயணன், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு டி.அன்பழகன், திரு என். குலசேகரப் பாண்டியன், வனத்துறைச் செயலர் திரு சுப்பிரமணியம், இ.ஆ.ப., வனத்துறைத் தலைவர் திரு டி. அச்சய்யா, இ.வ.ப., ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

தொகுப்பு :

**மு. பிச்சய்யா,**

**உதவி மக்கள்**

**தொடர்பு அலுவலர்,**

**வட ஆர்க்காடு**

**மாவட்டம்.**

**மாண்புமிகு செய்தி–அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் பட்டுத் தொழில் மையத்தைத் திறந்து வைக்கிறார்.**



## பட்டுத் தொழில் மையம்

வட ஆர்க்காடு மாவட்டம் வாணியம்பாடியில், மாவட்ட பட்டுத் தொழில் மையம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இந்த மையத்தின் புதிய கட்டடங்களை மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் 17.7.83 அன்று திறந்து வைத்துப் பேசினார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்—

"1979-80-ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சிக்குத் தனித்துறை ஏற்படுத்தப்பட்டது. அப்போது ரூ.4 இலட்சத்து 13 ஆயிரம் மதிப்புள்ள பட்டு நூல் தயாரிக்கப்பட்டது. கடந்த ஆண்டில் இதன் மதிப்பு ரூ.71½ இலட்சமாக உயர்ந்து உள்ளது. பட்டுப்பூச்சி வளர்க்கும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் வரை ஆண்டு வருமானமாகக் கிடைக்கிறது.

மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் கிராமங்களைச் சிறிய நகரங்களாக மாற்றுவோம் என்று அறிவித்தார்கள். இந்தவாக்குறுதி இப்போது படிப்படியாக நிறைவேறி வேருகிறது. தமிழக வரலாற்றில் ஒரு 'மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறது.''

மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறியதாவது:

''பட்டுத் தொழிலில் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் மட்டும் இருந்த நிலை மாறி இன்று தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வளர்ந்து வருகிறது. 1979-ஆம் ஆண்டிற்குப் பிறகு மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சியில் பட்டு வளர்ச்சிக்கென்று தனி இயக்குநர் உருவாக்கிய பிறகு 5,000 ஏக்கர் மட்டுமே பயிரிடப்பட்டு வந்த நிலை மாறி இன்று 60,000 ஏக்கர் நிலத்தில் பட்டு வளர்ப்பதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பட்டுத் தொழில்வளர்ச்சியில் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றும் வகையில் மாவட்டப் பட்டுத் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

முதல் மையம் சேலத்தில் திறக்கப்பட்டது. இன்று வாணியம்பாடியில் திறக்கப்படுவதை அடுத்து கோவையிலும், திண்டுக்கல்லிலும் பட்டுத் தொழில் மையங்கள் திறக்கப்பட இருக்கின்றன.

ஜப்பான் போன்ற நாடுகளில் 8 நாள் புழுவை, விவசாயிகளிடம் கொடுத்து 20 நாட்கள் காப்பாற்றித்தருவதுபோல இங்கேயும் தரலாம் என்றுள்ளோம். ஏனெனில், முட்டையாகக் கொடுக்கும்போது 20 சதவீதம் வீணாகி விடுவதால் உழைப்பும் வீணாகிவிடுகிறது. இந்த முறையை இங்கே செய்யலாம் என்றுள்ளோம்.

6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பட்டுத் தொழில் துறைக்காக ரூ. 22 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது. தமிழ்நாடு முழுவதும் 3 இலட்சம் பேருக்கு இந்தத் தொழிலில் வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது. இன்னும் 2 ஆண்டுகளில் தமிழகம், பட்டு உற்பத்தியில் கர்நாடக மாநிலத்தில் இருந்து இறக்குமதி செய்வதைத் தவிர்த்து, தன்னிறைவு அடைந்தாக வேண்டும்.

இயற்கை நம்மைச் சோதித்துக் கொண்டிருக்கிறது. தண்ணீர்ப் பற்றாக்குறை இன்று கடுமையாக இருக்கிறது. எனவே, இயற்கையோடு போராட நாம் கற்றுக்கொள்ளவேண்டும். கிடைக்கின்ற தண்ணீரைக் கொண்டு பட்டு வளர்க்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். தஞ்சை மாவட்டத்தில் கூட நெல் பயிரை மாற்றி வேறு பணப்பயிர்களை விளைவிக்க விரும்புகிறார்கள். பட்டுப்பூச்சி வளர்ப்பது வறட்சியிலும் வாழ்வளிக்கும் ஒரு தொழிலாகும்.

தமிழ்நாட்டில் ரூ. 10 கோடி முதலீட்டில் தோல் தொழில் வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டு உள்ளது. வாணியம்பாடி, இராணிப்பேட்டை, ஆம்பூர் பகுதியில் தோல் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர்ப்பிரச்சினையைத் தீர்க்க போர்க்கால நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக மத்திய அரசிடம் ஏற்கெனவே நாம் கொடுத்துள்ள ரூ. 8 கோடியைத் திரும்பப் பெற முயற்சி எடுத்து வருகிறோம்.''

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ந.நாராயணன் அவர்கள் விழாவில் பேசுகையில், ''வட ஆர்க்காடு மாவட்டத்தில் பட்டுத் தொழில் வளர்ச்சி 50 ஏக்கரில் இருந்து 4 ஆயிரம் ஏக்கராக உயர்ந்து உள்ளது. இதை ஆண்டு தோறும் மேலும் ஆயிரம் ஏக்கர் வீதம் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது'' என்று கூறினார்.

விழாவில், வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் திரு குலசேகரப் பாண்டியன், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் திரு.கே. ஆர்.சின்னராஜ், பட்டு வளர்ப்பாளர்கள் சார்பில் திரு விஜைநாதன் ஆகியோர் பேசினார்கள். தொடக்கத்தில் பட்டுவளர்ச்சித் துறை இயக்குநர் திரு கே. எஸ். ஸ்ரீபதி அனைவரையும் வரவேற்றார். விழா இறுதியில் பட்டு வளர்ச்சித்துறை இணை இயக்குநர் திரு வெங்கடேசன் நன்றி தெரிவித்தார்.

தொகுப்பு :

**எஸ். எம். கலைமணி**

**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**

**வட ஆர்க்காடு**

**மாவட்டம்.**

## கொய்னா

சின்கோனாத் துறை தமிழ்நாடு அரசால் வணிக அடிப்படையில் நடத்தப்படும் ஓர் அரசுத் துறை நிறுவனமாகும். இத்துறை மலேரியா நோயினை ஒழிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் கொய்னா சல்பேட் மற்றும் இதய நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் குனிடின் சல்பேட் ஆகிய மருந்துப் பொருட்களைப் பெருமளவில் தயாரித்து வருகிறது. மேலும் மருந்து மற்றும் வாசனை தைலங்களையும் தயாரித்து வருகிறது. தென் அமெரிக்காவிலிருந்து சர். கிளமண்ட் ஆர். மார்க்கம் என்பவரால் கொண்டு வரப்பட்ட சின்கோனாச் செடிகளிலிருந்து கிடைத்த விதைகளைக் கொண்டு இந்தியாவில் 1860-ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டத்தில், தொட்டபெட்டாவில் சின்கோனாப் பயிர் முதலில் சோதனை அளவில், உதகைத் தாவரப் பூங்காவில் அன்று காப்பாளராக இருந்த திரு மெக் அய்வர் என்பவரால் பயிரிடப்பட்டது.

திரு. மெக் அய்வரால் துவக்கப் பெற்ற அந்தச் சோதனைப் பயிரும், சின்கோனா பயிரிட ஏற்ற காலநிலையுள்ள மற்ற இடங்களிலும் பெருமளவில் விரிவடைந்தது. சின்கோனா பயிரிடப்பட்ட மொத்த பரப்பு 2051.03 எக்டேர்களாகும். துறையின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு மருந்து மற்றும் மணம் தரும் செடிகள் பயிரிடல் மேற்கொள்ளப்பட்டது. மருந்து மற்றும் மணம் தரும் செடிகளின் மொத்தப் பரப்பு 1493.02 எக்டேர்களாகும்.

1980-81 முதல் 1982-83 வரையிலும் 378.50 எக்டேர்களில் சின்கோனா செடிகளும், 548.50 எக்டேர்களில் மருந்து மற்றும் மணம் தரும் தைலச் செடிகளும் பயிரிடப்பட்டுள்ளன. 30,910 கிலோ கொய்னாப் பொருட்கள் சின்கோனாவிலுள்ள அரசினர் கொய்னா ஆலையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 32,358 கிலோ மருந்து மற்றும் மணம் தரும் தைலங்கள் நடுவட்டத்திலுள்ள அரசினர் மருந்து மற்றும் மணம் தரும் தைல ஆலையில் 1980-81 முதல் 1982-83 வரையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

ரூ. 51.66 இலட்சம் மதிப்புள்ள கொய்னாப் பொருட்கள், வெளிநாட்டுச் சந்தையிலும், உள்நாட்டுச் சந்தையிலும், விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர ரூ. 70.33 இலட்சம் மதிப்புள்ள மருந்து மற்றும் மணம் தரும் தைலங்கள் விற்பனை செய்யப்பட்டது.



கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் மருந்து மற்றும் மணம் தரும் செடிகளுக்கும் மற்றும் சின்கோனாப் பயிரில் வரும்நோய்களைத் தடுக்கவும், நோய்களைக் கட்டுப்படுத்தவும் ஒருங்கிணைந்த இரு திட்டங்கள் அமல்படுத்தி செயல்பட்டு வருகின்றன.

மேலே கூறிய திட்டங்களும் சமுதாயத்தின் பின்தங்கிய நிலையில் இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பும் வீட்டு வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. தற்பொழுது இத்துறையில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களில் 2,000க்கு மேற்பட்ட தொழிலாளர்களும் 75 பணியாளர்களும் பணியாற்றிவருகிறார்கள்.

தற்போதுள்ள குடியிருப்புகள் 1940ஆம் ஆண்டில் கட்டப்பட்டவை. பழுதடைந்த இவ்வீடுகள் தொழிலாளர் நலச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தரத்திற்கேற்றவையாக இல்லை. ஆகவே, இந்தப் பழைய வீடுகளுக்குப் பதிலாக தேவையான வசதிகளுடன் கூடிய புதியதொழிலாளர் குடியிருப்புகளைப் படிப்படியாகக் கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது.

# 'பலம் பெருக்கும் பதலுணவு

**மா**ண்புமிகு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்துள்ள சத்துணவு திட்டத்தினால் குழந்தைகள் உடல் நலம் பெரிதும் வளர்ச்சி அடைந்துள்ளது என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் பாராட்டு தெரிவித்துள்ளது.

இலவச சத்துணவுத் திட்டத்தின் பயனாகக் குழந்தைகளின் உயரம், எடை முதலியவை கூடியுள்ளன என்றும், குறிப்பாக இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் இந்த சத்துணவுத் திட்டத்துக்குப்பின் மிகப் பெரிய அளவில் பயனடைந்துள்ளனர் என்றும் மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் கூறியுள்ளது.

சத்துணவால் சிறுவர்களின் எடை 0.64 கிலோ முதல் 1.63 கிலோ வரை அதிகரித்துள்ளது. சிறுமிகளின் எடை 0.84 முதல் 1.15 கிலோ வரை கூடியுள்ளது.

சத்துணவுத் திட்டம் பற்றி இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் ஓர் ஆய்வு நடத்தியது.

''கோவை அவினாசிலிங்கம் மனை 'இயல் கல்லூரி' மேல்நிலைப் பட்டப் படிப்பு மாணவிகள் மற்றும் ஊழியர்கள் 37 சத்துணவுத் திட்ட மையங்களிலும் 33 சத்துணவு ஆரம்பப் பள்ளிகளிலும் சென்று ஆய்வு நடத்தினர்.

பெரும்பாலும் ஏழை மக்களின் குழந்தைகளிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

சத்துணவு போடப்படுவதற்கு முன்பு இருந்த நிலையும், சத்துணவு சாப்பிட்டதற்குப் பின் இருந்த நிலையும் ஆய்வு செய்யப்பட்டன. அதில் சத்துணவால் குழந்தைகளின் உடல்நலம், ரத்த ஓட்டம், உடல் வளர்ச்சி முதலியவை கூடியுள்ளன. இத்திட்டம் தொடர்ந்தால் குழந்தைகளின் மன நலம், உடல் நலம் மேலும் மேன்மை அடையும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

இந்த ஆய்வு கோவை நகர்ப்புறம், மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உள்ள 3,219 குழந்தைகளிடம் நடத்தப்பட்டது.

வீடுகளில் போதிய உணவு கிடைக்காத நிலையில் பள்ளிகளில் கிடைக்கும் இந்த இலவச மதிய சத்துணவு பெரிதும் உதவுகிறது. அதே சமயத்தில் வசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் கூட இந்தச் சத்துணவுத் திட்டத்தால் பயனடைகின்றனர்.

சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்ட சமயம் 23.47 சதவிகிதக் குழந்தைகள் மட்டுமே போதிய சத்துடன் இருந்தனர். ஆனால் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டு 4 மாதங்களுக்குப்பின் 75.2 சதவிகிதம் குழந்தைகள் போதிய சத்தினைப் பெற்றதோடு வயிற்று நோய், இரத்தச் சோகை, தசைகள் பற்றிய நோயிலிருந்தும் விடுபட்டுள்ளனர்.



இத்திட்டத்தினால் குழந்தைகள் மத்தியில் உணவுப் பழக்கத்தில் நல்ல மாறுதல் ஏற்பட்டு உள்ளது.

பள்ளிகளில் சத்துணவு போடப்படுவது நிறுத்தப்பட்டால், 10 சதவிகிதப் பெற்றோர்கள்தான் தங்கள் குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புவார்கள் என்றும் ஆய்வில் இருந்து தெரியவந்துள்ளது.

சத்துணவுத் திட்டம் பற்றி அதைச் சாப்பிடும் குழந்தைகளிடமிருந்தோ, அவர்களது பெற்றோர்களிடமிருந்தோ எவ்விதப் புகார்களும் சொல்லப்படவில்லை. இத்திட்டத்தால் குழந்தைகளின் உடல் வளர்ச்சி அதிகரித்துள்ளது என்று 400 பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இத்திட்டம் கல்வி வளர்ச்சியில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இது மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பதுதான் அனைவரது விருப்பம். இவ்வாறு அந்த ஆய்வு நடத்தியவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## பல் சிதைவைத் தடுக்கப் புது மருந்து

பல் சிதைவைத் தடுப்பதற்குரிய வழிகள் குறித்து அமெரிக்க அரசின் உடல் நல மக்கள் பணிகள் துறை விஞ்ஞானிகள் கடந்த 10 ஆண்டுகளாக விரிவான ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறார்கள்.

பல் சிதைவு எப்படி ஏற்படுகிறது? மனிதன் வாயில் இருக்கும் ஒரு வகைக் கிருமிகள், பற்களில் தங்கும் சர்க்கரையையும் மாவுப் பொருட்களையும் அமிலங்களாக மாற்றுகின்றன, அமிலங்கள் பற்களை அரித்து அவை தேய்ந்து சிதையுமாறு செய்கின்றன.

பல் சிதைவுக்கு முக்கிய காரணமாகவுள்ள கிருமி வகை எது என்று கண்டறிந்துள்ளனர். சிதைவு ஏற்படுத்தும் கிருமிக்கு எதிராகப் பாதுகாப்பு அளிக்கும் சிறந்த "வாக்ஸின்" உருவாக்கி விலங்குகளிடம் அதைப் பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளனர். பெருமளவில் மனிதர்களிடம் அதைப் பயன்படுத்திப் பலன் காண்பதில் முனைந்துள்ளனர். பல் சிதைவைத் தடுக்க ஒரு "வாக்ஸின்" விரைவில் தயாரிக்க முடியுமென வல்லுநர்கள் உறுதியாக நம்புகின்றனர்.

ஆதாரம் "சயன்ஸ் அன்டு டெக்னாலஜி"



(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

விழாவில் சட்டமன்ற உறுப்பினர் திரு கே.எம். அப்துல் ரசாக் அவர்கள் வாரியப் பணிகளைப் பாராட்டிப் பேசினார்.

விழாவில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு குடிசைமாற்றுவாரியத்தின் சார்பில் ரூ. 31,000 வழங்கப்பட்டது.

கட்டடத்தைக் கட்டிய கொத்தனார் திரு பெருமாளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்தினார். இறுதியில் வாரிய உறுப்பினர் திரு சொ. கடும்பாடி அவர்கள் நன்றி நவின்றார்.

### இரண்டாம் நாள் நிகழ்ச்சி

இரண்டாம் நாள் (10.7.'83) அண்ணா நகர் மேற்கிலுள்ள திருமங்கலத்தில் (என்.வி.நடராசன் நகர்) ரூ. 92 இலட்சம் செலவில் 576 குடியிருப்புகளுக்கான திறப்பு விழா மிகச் சிறப்பாக நடந்தது.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்றுவாரியத் தலைவர் திருமதி ஜ.வெ.கி.சம்பத் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

விழாவுக்குத் தலைமைவகித்து மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில், ''சென்னைக்குக் கிருஷ்ணா ஆற்று நீர் வர இருக்கிறது. இது வரலாற்றுச் சிறப்பு மிக்க காரியம். கிருஷ்ணா ஆற்று நீர் பெரும் பகுதி வீணாகக் கடலில் கலக்கிறது. ஒரு காவேரி ஆற்று நீர் அளவுக்குக் கடலில் கலக்கிறது. சென்னை நகரின் தண்ணீர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் இந்தத் திட்டத்தை முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்'' என்றார்.

குடியிருப்புக்களைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:—

''இந்தக் குடியிருப்புப் பகுதிக்கு என்.வி.நடராசன் பெயர் சூட்டப்படும் என்று நேற்று சொன்னேன். அது நிறைவேறி இருக்கிறது. அதற்குக் காரணம் பல உண்டு.

அண்ணாவுடன் இருந்தவர்களை நாங்கள் எப்போதும் மறக்க மாட்டோம். காங்கிரசிலிருந்து விலகி 3 வருடம் எந்தக் கட்சியிலும் சேராமல் அண்ணாவின் புத்தகங்களையும், சோஷலிசப் புத்தகங்களையும், பொதுவுடைமைப் புத்தகங்களையும் படித்த காலத்தில், நான் முதன் முதலில் திராவிட இயக்கத் தலைவர் ஒருவருடன் அறிமுகப்படுத்திக்கொண்டேன் என்றால் அவர் என்.வி. நடராசன்தான்.

டி. வி. நாராயணசாமிதான் அவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அன்று இரவு என்.வி.என். எனக்கு ஒரு புத்தகம் கொடுத்தார். அது 'இளமை விருந்து' திரு.வி.க. எழுதிய நூல்.

உடலை எப்படிப் பாதுகாத்துக் கொள்வது? உள்ளத்தை எப்படிப் பாதுகாத்துக்கொள்வது? வசதிக்கு ஏற்ப சுற்றுச் சார்பை எப்படி வைத்துக் கொள்வது? என்ற விவரங்கள் அடங்கிய அந்தப்புத்தகத்தைத் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த என்.வி.என். தந்தார்.

அவர், கட்சியைப் பற்றித் தெரிந்து கொள் என்று ஏதாவது கொடுப்பார் என்று நினைத்தேன். ஆனால் உடலைப் பேணிப் பாதுகாத்துக் கொள் என்று புத்தகத்தைத் தந்தார். அவரை என் முதல் குரு என்று கூடச் சொல்லலாம்.

குழந்தைகள் கல்வியோடு, நல்ல உடல் நலத்தோடு இருக்க வேண்டும். இதுதான் முக்கியம். வசதி இருக்கிறதே படித்துதான் சம்பாதிக்க வேண்டுமா என்று நினைக்கக்கூடாது. அதுபோல் ஏழைகள் நாம் உழைக்கத்தான் பிறந்தோம் என்று எண்ணக் கூடாது. யார் எந்தப் பதவிக்குப் போவார் என்று நிச்சயமில்லை.

மகாத்மா ஆவார் என்று அவரைப் பெற்றவர்கள் முதலில் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். அண்ணாவைப் பெற்றவர்களும் அப்படித்தான். பெரியாரைப் பெற்றவர்களும் அப்படித்தான். என்.வி.என்னைப் பெற்றவர்களும் அப்படித்தான். இந்தக் குழந்தை இப்படித்தான் வரும் என்று முதலில் சொல்ல முடியாது. இதையெல்லாம் மனத்தில் கொண்டு கல்வி கற்று சுத்தமாக இருக்க வேண்டும்.

எதையும் உண்ணும் முன், கைகளைச் சோப்புப் போட்டுக் கழுவ வேண்டும். தாய்மார்கள் குழந்தைகளுக்கு இதைச் சொல்ல வேண்டும். இளைஞர்களுக்குச் சொல்வேன் தினமும் தாய் தந்தையரைப் பெற்றவர்களை வணங்கிவிட்டுச் செல்லுங்கள். அதைவிடச் சக்தி தரும் கடவுள் வேறு இல்லை. தாயையும், தந்தையையும் வணங்கிவிட்டு நீங்கள் சென்றால் நீங்கள் வெற்றிமேல் வெற்றி பெறுவீர்கள்.

எனக்கு வெற்றி கிடைத்திருக்கிறது என்றால், என் தாய்க்குப் பிறகு அண்ணா, அதற்கு அடுத்து நீங்கள் தான். உங்கள் ஆதரவினால்தான் நான் இந்த நிலையில் இருக்கிறேன். என்.வி.என்.செல்வம், என்.வி.என்னின் துணைவி யார் அவர்கள் எல்லாம் இங்கே இருக்கும்போது, இந்தக் குடியிருப்புக்குஎன்.வி.நடரான்பெயர் வைக்கக் கிடைத்த பேற்றைப் பெரும் பேறாகக் கருதுகிறேன்.''

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் ஓய்வு பெறுவோருக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையின் பேரில் அன்றே பணம் முதலியவைகளைக் கொடுத்தும், தேநீர் விருந்து கொடுத்தும், பல்லவன் போக்குவரத்துக் கழக வாகனங்களில் இல்லங்களில் சேர்ப்பிக்கின்றார்கள்

விழாவில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச்.வி.ஹண்டே அவர்களும் சட்டமன்ற உறுப்பினர் திரு ஜே.சி.டி பிரபாகரன் அவர்களும், குடிசை மாற்று வாரியப் பணியை வெகுவாகப் பாராட்டிப் பேசினார்கள்.

கட்டடங்களைக் கட்டிய கொத்தனார் திரு கோபாலுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்தினார்.

இறுதியில் வாரிய உறுப்பினர் திரு.வி. ராஜ்குமார் அவர்கள் நன்றி கூறினார்.

இனிமையான இரண்டு நாள் விழாக்களில் ஆடவர் பெண்டிர் குழந்தைகள் என ஆயிரக்கணக்கானவர் திரண்டிருந்தனர். அழகிய அடுக்குமாடி வீடுகளில் குடியேறப் போவதை எண்ணி அவர்கள் குதூகலமாகக் காட்சி அளித்தார்கள்.

பேரறிஞர் அண்ணாவின் கனவு நனவாகிற வகையிலே, புதிதாகத் திறந்து வைக்கப்பெற்ற இந்த அழகிய அடுக்கு மாடிவீடுகள் நகரின் அழகுக்கு மேலும் மெருகூட்டும்.



# நவீனப்படுத்தப்பட்ட பொது விலங்கியல் கூடம்


பா. ஜவகர்,
காப்பாட்சியர், விலங்கியல் பிரிவு,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை.


செத்த காலேஜ் என்று செல்லமாக அழைக்கப்படும் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் ஆரம்பத்தில் உயிருள்ள விலங்குகளும் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. இவ்வருங்காட்சியகத்தின் முதல் கண்காணிப்பாளரான டாக்டர் பால்பரின் மேற்பார்வையில் 1856-ஆம் ஆண்டு சுமார் 360 உயிருள்ள விலங்குகள் காட்சியில் இருந்தன.

பிறகு 1863ஆம் ஆண்டு சென்னை நகராட்சி விலங்குகளின் பொறுப்பை ஏற்று தற்போதுள்ள பீப்பிள்ஸ் பூங்காவிற்கு விலங்ககம் மாற்றப்பட்டது ஆரம்ப காலத்திலிருந்து இவ்வருங்காட்சியகம் மக்களுக்கு ஒரு பொழுதுபோக்கான இடமும் மட்டுமல்லாமல் ஒரு கல்வி நிறுவனமாகவும் திகழ்ந்து வருகின்றது.

கேப்டன் மிட்செல் (1859-1872) இவ்வருங்காட்சியகத்தின் கண்காணிப்பாளராக இருந்தபோது ஐரோப்பா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து பதப்படுத்தப்பட்ட பூச்சிகள், மெல்லுடலிகள், மீன்கள், பறவைகள், பாலூட்டிகள் மற்றும் கற்படியுருவங்கள் போன்றவற்றை மாற்று முறையில் தருவித்துக்காட்சிக்கு வைக்கப்பட்டன.


அவ்வாறு தருவிக்கப்பட்ட அற்றுப்போன · பறவையான மோவாவின் கால் எலும்புகள் மற்றும்சில பதப்படுத்தப்பட்ட பிராணிகளை இன்றும் காணலாம். பெரும்பான்மையோருக்கு சென்னை அருங்காட்சியகம் என்றாலே திமிங்கலத்தின் எலும்புக்கூடுதான் ஞாபகம் வரும் என்பது யாவரும் அறிந்த விவரம்.

மங்களூர் கடற்கரையில் ஒதுக்கப்பட்ட திமிங்கலத்தின் இவ்வெலும்புக்கூடு 1874ஆம் ஆண்டு பொருத்தப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டது. இவ்வெலும்புக்கூடு உள்ள கூடத்தில் பாலூட்டிகளின் எலும்புக்கூடுகள், மண்டை ஓடுகள், பற்களமைப்பு, வெளிப்புறத் தோலமைப்பு, பறவைகளின் காலமைப்பு, அலகமைப்பு, இறகமைப்பு, இரு வாழ்விகள், மீன்கள் மற்றும் ஊர்வனவற்றின் புறத்தோலமைப்பு தொடர்பான காட்சிப் பொருட்கள், காட்சியில் இருந்து வருகின்றன.

பெருமளவில், பிராணிகளின் எலும்புகள் தொடர்பானகாட்சிப் பொருட்கள் இருந்ததால் இக்கூடம் 'எலும்புகள் கூடம்' என அழைக்கப்பட்டது. அக்காட்சிப் பொருட்களனைத்தும் ஆரம்பக் கல்வி மாணவர் முதல் கல்லூரி மாணவர்கள் வரை அனைவரும் அறிந்து கொள்ள பெருமளவில் உதவின. இவ்வருங்காட்சியகத்திற்கு மாணவர்கள் மட்டுமேயன்றி, படித்தோர் மற்றும் பாமரர்கள் பெருமளவில் நாள்தோறும் வருகை புரிந்து வருகின்றனர். வருகை புரிவோரில் பெருமளவு எண்ணிக்கை பாமர மக்களே.

பாமரருக்கும், படித்தோருக்கும் விளங்கும் வகையில் காட்சிப் பொருட்களைநவீனமாகக்காட்சியமைக்கும் நோக்குடன், மற்ற நாடுகளிலுள்ள அருங்காட்சியகங்களுக்கு நிகராக ஒவ்வொரு கூடத்திலும் பழைய காட்சிப் பெட்டிகளை மாற்றி நவீன காட்சிப் பெட்டிகளை அமைக்கும் திட்டத்தின் வரிசையில் எலும்புகள் கூடம் சமீபத்தில் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

இக்கூடத்தை நவீனப்படுத்து முன், காட்சிப் பொருட்கள் அனைத்தும் சாய்வுக் காட்சிப் பெட்டிகளிலும் தனித்தனி காட்சிப் பெட்டிகளிலும் அமைக்கப்பட்டிருந்தன. அக்காட்சிப் பொருட்களைப்படித்தோருக்கும் பாமரருக்கும் விளக்க பெயர்ச்சீட்டுகளும், நீண்ட விரிவுரைகளும் கொடுக்கப்பட்டிருந்தன.



கழுகின் இறகமைப்பு மற்றும் எலும்புக்கூடு







சில பிராணிகளின் கால் எலும்புகளும், எலும்புக் கூடுகளும்.

தற்போது நவீனப்படுத்திய பிறகு பிராணிகளின் பற்களமைப்பை விளக்கும் மண்டை ஓடுகளுடன், அப்பிராணிகளின் சிறிய மாதிரி உருவங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய மாதிரி உருவங்கள் அனைத்தும் கண்ணாடி இழையினால் முதன் முதலாக இவ்வருங்காட்சியகத்தின் விலங்கியல் பிரிவிலேயே தயாரிக்கப்பட்டன.

இத்தகைய மாதிரி உருவங்கள் பார்வையாளர்களை வசீகரித்து பார்வையிட உதவுவதுடன், அங்குள்ள மண்டை ஓடு எப்பிராணியினுடையது என்பதையும் எளிதாக விளக்குகிறது. எனவே, பாமரமக்களுக்குஒருவர் விளக்கிக் கூறவோ அல்லது குறிப்புச் சீட்டுகளைப் படித்து அறியவோ தேவையில்லை. தாங்களாகவே அறிந்துகொள்ள இத்தகைய காட்சியமைப்பு பெரிதும் உதவுகிறது. எலும்புக்கூடுகள் எந்தப் பிராணியினுடையது என்பதை விளக்க அப்பிராணியின் 'கட்—அவுட்' உருவங்கள் வண்ணம் தீட்டப்பட்டு எலும்புக்கூடுகளின் பின்புறம்பொருத்தப்பட்டுள்ளன. இதிலிருந்து ஒவ்வொரு எலும்புக்கூடும் எந்தப்பிராணியினுடையது என்பது விளக்கப்படுகிறது.

அடுத்து, பிராணிகளின் வெளிப்புறத் தோலமைப்புகளில் மாறுபாடுகள், தோலிலுள்ள உரோமங்கள் பல்வேறு பிராணிகளில் எவ்வாறு வேறுபாடடைந்து அமைந்துள்ளன என்பதை விளக்க பிராணிகளின் தோல்கள் அவற்றின் வரைபடங்களுடனும், சில பிராணிகள் எந்த சூழ்நிலையில் வாழ்கின்றன என்பதை விளக்கும் வகையிலும் அவை காட்சிக்குஅமைக்கப்பட்டுள்ளன.

வெவ்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்த யானை, குதிரை, மனிதன் மண்டை ஓடுகளின் வெட்டுத்தோற்றங்கள் ஆகியவை தற்போது ஒரு காட்சிப் பெட்டியில் வைக்கப்பட்டு அப்பிராணிகளின் படங்களுடன் அவற்றின் மூளை அளவின் ஒத்தமைப்பு விளக்கப்பட்டுள்ளது. சில பிராணிகளின் தலையிலுள்ள கொம்புகளில் உள்ள வேறுபாடுகளை ஆடு, மான், காண்டாமிருகம் ஆகியவற்றின் கொம்புகளும், கொம்புகளின் வெட்டுத்தோற்றங்களும் விளங்குகின்றன. அக்கொம்புகள் எப்பிராணியினுடையவை என்பதை வரைபடங்களும், பெயர்ச்சுட்டுகளும் விவரிக்கின்றன

அடுத்ததாக, பறவையின் எலும்புக்கூட்டின் பல பாகங்களை விளக்க கழுகின் முழு எலும்புக்கூடு ஒன்றும், பறவைகளின் பல்வேறு சிறகுகளை விளக்க பதப்படுத்தப்பட்ட பருந்து ஒன்றும் பெயர்ச்சீட்டுகளுடன் வைக்கப்பட்டுள்ளன. மேலும் பறவைகளின் எலும்புக்கூடுகள் அவை பறப்பதற் கேற்றவாறு எவ்வாறு அமைந்துள்ளன என்பதைப்



# கல்லூரிக் கல்வித்துறை

## சென்னை-600 006.

## அறிவிக்கை

### ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிக்கூட ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான மாநில உபகாரச் சம்பளங்கள் 1983-84க்கான திட்டம்

அங்கீகாரம் பெற்ற (1) ஆரம்ப, முன் -ஆரம்ப, நடுத்தர, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக்கூடங்களிலும், (2) உடல் ஊனமுற்றோர் கல்வி நிறுவனங்களிலும் பயிற்சிப் பள்ளிக் கூடங்களிலும் பணியாற்றும் ஆசிரியர்களின் குழந்தைகள் மற்றும் (3) பாதுகாப்பு அமைச்சகத்தால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் பணியாற்றும் சிவிலியன் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளங்களைத் தொடர்ந்து வழங்கத் தமிழ்நாடு அரசு தீர்மானித்திருக்கிறது என்பது பொதுமக்களின் தகவலுக்கு அறிவிக்கப்படுகிறது.

2. **தகுதி**

**தகுதிக்கான முக்கிய நிபந்தனைகளாவன**

(1) மார்ச்சு-ஏப்ரல் 1983ல் நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.சி (10-ம் வகுப்பு புதிய பாடத்திட்டம்)-மெட்ரிகுலேஷன்-ஆங்கிலோ இந்திய உயர்நிலைப்பள்ளித்தேர்வு தொழில் நுட்ப உயர்நிலைப்பள்ளி இறுதியாண்டு தேர்வில் விண்ணப்பதாரர் 60 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

(2) 1983 மார்ச்சு-ஏப்ரலில் நடைபெற்றமேல்நிலைக் கல்வித் தேர்வில் (பிளஸ் 2) முதல் வகுப்பு அல்லது மொத்தத்தில் 60 மதிப்பெண்கள் பெற்றிருக்கவேண்டும்.

(3) 1983 ஏப்ரல்-மே மாதத்தில் நடைபெற்ற பட்டப்படிப்பில் முதல் வகுப்பு அல்லது மொத்தத்தில் 60 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

(4) 1983 ஏப்ரல்-மே மாதத்தில் நடைபெற்ற முதுகலைப் பட்டப் படிப்பில் முதல் வகுப்பு அல்லது மொத்தத்தில் 60 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

(5) மாலைக் கல்லூரிகள் அல்லது அஞ்சல் வழிக் கல்வி மூலம் பயின்று வரும் மாணவர்கள் தகுதியுடையவர்கள் அல்ல.

(6) (மேற்கண்ட பாராக்களில் குறிப்பிடப்பட்டுள்ள) மேற்கண்ட தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டில் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

(7) உபகாரச் சம்பளம் பெற விரும்பும் மாணவர்கள், நிர்ணயிக்கப்பட்ட கடைசித் தேதிக்குள் கல்வி நிலையங்களில் இடம் பெற முடியாமல் போனால், விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து தேவையான சான்றுகளுடன் இந்த இயக்ககத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட முடிவு தேதிக்குள் அனுப்பி வைக்கலாம். கல்வி நிலையங்களில் இடம் பெற்ற பிறகு, சேர்ந்ததற்கான தகவலைத் தெரிவிக்கலாம்.

(8) 1983க்கு முன் நடந்த தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் அல்ல.

(9) 1982 டிசம்பரில் நடைபெற்ற இந்தியன் பள்ளிக்கூடச் சான்றிதழ் (Indian School Certificate Examination) தேர்ச்சி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

(10) ஆய்வு அலுவலர்கள் அல்லது நிர்வாக சம்பந்தமான பதவிகளில் உள்ள இதர அலுவலர்களின் குழந்தைகள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் அல்ல.

3 சரியான மற்றும் முழுமையான தகவலுடன் (முழுநீள) வெள்ளைத் தாள்களில் கையினால் தெளிவாக எழுதப்பட்ட, அல்லது டைப் செய்யப்பட்ட விண்ணப்பங்களைப் பின் வரும் படிவத்தில் சமர்ப்பிக்கவேண்டும்



### பள்ளிக்கூட ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான மாநில உபகாரச் சம்பளங்கள், 1983-84க்கான திட்டம்

### விண்ணப்பப் படிவம்

1. பெயரும் பிறந்த தேதியும் (விண்ணப்பத்தின் முதல் பக்கத்தில் மேல் கோடியில் சமீபத்தில் எடுக்கப்பட்ட ஒரு பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டப்பட வேண்டும்);
2. நாடு இனம்
3. முழுஅஞ்சல் முகவரி
4. பெற்றோர்களின் பெயர்
   அ) தகப்பனார்
   தொழில் (முழு விவரங்கள் தரவும்)
   வருமானம் (ஏப்ரல் 82முதல் மார்ச் 83 வரை)
   (ஆ) தாயார்
   தொழில் (முழு விவரங்கள் தரவும்)
   வருமானம் (ஏப்ரல் 82 முதல் மார்ச் 83 வரை)
5. 1982-83ம் வருடத்திய மொத்த வருமானம்:
   (அ) தகப்பனாரின் வருட வருமானம்
   (ஆ) தாயாரின் வருட வருமானம்
   (இ) இதர வகைகளிலிருந்து வருமானம்
6. பெற்றோர்கள் பணிபுரியும் பள்ளிக்கூடத்தின் பெயர்
   (அ) தந்தை: (ஆ) தாயார்
7. (அ) மார்ச்-ஏப்ரல் 1983, டிசம்பர் 1982ல் தேர்ச்சி பெற்ற தேர்வுகள், போர்டு-பல்கலைக்கழகப் பெயர், ரோல் நம்பர், பெறப்பட்ட மதிப்பெண்கள், மொத்த மதிப்பெண்கள் முதலிய விவரங்கள் மதிப்பெண்களின் சான்று. (நகல் இணைக்கப்பட வேண்டும்):
   (ஆ) தேர்ச்சி பெற்ற பள்ளிக்கூடம்-கல்லூரியின் பெயர் (இருக்கும் இடத்தின் பெயர் மற்றும் மாவட்டத்தின் பெயருடன்)
8. மாணவர் வேறு எந்த ஒரு உபகாரச் சம்பளம் பெறுகின்றாரா, அப்படி இருந்தால், அது பற்றிய 1983-84க்கான முழு விவரங்களையும் தரவும்;
9. 1983-84ல் பயின்றுவரும் மேல்நிலைப்பள்ளிக்கூடம்-கல்லூரிகளின் பெயர், பயிலும் பாடத்திட்டத்தின் பெயர் மற்றும் சேர்ந்த தேதி

| | |
|---|---|
| **தலைமை ஆசிரியர்** | **விண்ணப்பதாரரின்** |
| **தலைமை ஆசிரியை-** | **கையொப்பம்** |
| **முதல்வர் கையொப்பம்** | **தேதியுடன்** |

4 அங்கீகரிக்கப்பட்ட முன் ஆரம்ப (Pre - Primary) ஆரம்ப, நடுத்தர, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக்கூடத்தில் இந்த மாணவரின் தகப்பனார் - தாயார் ஆசிரியராகப் பணிபுரிகிறார் என்பதற்குத் தகுந்த முத்திரையுடன் கூடிய நிறுவனத் தலைவரிடமிருந்து பெற்ற ஒரு சான்றிதழையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்..

5 உபகாரச் சம்பளத்திற்காக விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களில் மொத்த சதவிகித மார்க்குகளின் மூலம் நிர்ணயிக்கப்படும் திறமை மற்றும் வருமான ( Merit-cum-Means ) அடிப்படையில் தேர்ந்தெடுப்பு செய்யப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களில் பெற்றோர்களின் 1982-83ம் வருடத்திற்கான வருட வருமானம் ரூ. 6,000-க்கு குறைவாக உள்ள மாணவர்களுக்குப் பண உதவி அளிக்கப்படும். மற்றும் இதர (அதாவது ரூ. 6,000-க்கு மேல் வருமானமுள்ள) மாணவர்களுக்குத் திறமை சான்றிதழும் மற்றும் கருத்தளவான பரிசு ரூ. 100 மட்டும் வழங்கப்படும்.

6 இந்த இயக்ககத்தில் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

7 இந்த அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளக் கடைசித் தேதி:

அ) மேல்நிலைப் பள்ளிகள், மற்றும் பாலிடெக்குனிக்குகளில் பயிலும் மாணவர்கள் சம்பந்தப்பட்ட விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளக் கடைசித்தேதி 31.8.1983 ஆகும்.

ஆ) கலை மற்றும் அறிவியல் பாடத்திட்டங்கள், மற்றும் (மருத்துவம், பொறியியல், வேளாண்மையியல் போன்ற) தொழிற் கல்வி பாடத்திட்டங்கள், முதுகலைப் பாடத்திட்டங்களில் பயிலும் மாணவர்களைப் பொறுத்தவரை விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்குக் கடைசித் தேதி 30.9.1983 ஆகும்.

8. உபகாரச் சம்பளங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே, அவர்களது தேர்வு பற்றி அறிவிக்கப்படும்.

9 1982-83ஆம் ஆண்டில், பொதுத் தேர்வுகளில் 10ஆம் வகுப்பில் (எஸ்.எஸ்.எல்.சி) 500க்கு 443க்குக் குறையாமலும், 12-வது வகுப்பில் (மேல்நிலைப்பள்ளி)1,200க்கு 964க்குக் குறையாமலும் மதிப்பெண்கள் பெற்றவர்கள் மட்டுமே உபகாரச் சம்பளத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பது மாணவர்களுக்குத் தகவலுக்காகத் தெரிவிக்கப்படுகிறது.

சென்னை - 600 006 **கல்லூரிக் கல்வி இயக்குநர்**

தேதி 18 – 7 - 1983.

DIPR/43361/83-15/aspeo

தளத்தில், முன்புறம் பார்த்த வண்ணம் இரண்டு வடிவங்கள் ஆடல் தோற்றத்தில் அமைந்துள்ளன. வலப்புற வடிவம் பைரவரைக் குறிக்கிறது. இதன் இடது கரங்களில் கபாலமும், திரிசூலமும் உள்ளன. வலக்கரங்களில் உள்ள ஆயுதங்களைத் தெளிவாக இன்னதென்று அறியமுடியவில்லை. இடப்புறத்திலுள்ள வடிவம், திருவாசியின் வலப்புறத்து அடிப்பகுதியில் உள்ள ஆண் வடிவத்தை ஒத்துள்ளது. இது யாரைக் குறிக்கிறதென்று அறியக் கூடவில்லை. தளத்தின் மையத்தில் தாமரை இருக்கையின்மீது நந்தி நின்று கொண்டு இருக்கிறது. இதன் வலது முன்கால் தூக்கிய நிலையில் காணப்படுகிறது. முகம் மேலே நிமிர்ந்து தன் தலைவனின் ஆடல் அழகைக் கண்டு களிப்பது போல் காட்டப்பட்டுள்ளது.

இறைவனின் வலது பாதத்தின் விரல்கள் காளையின் திமிலின் மீது ஊன்றியுள்ளன. இடது பாதத்தின் முன்பகுதி காளையின் முதுகின் பின்புறத்தில் ஊன்றியுள்ளது. இரண்டு குதிங்கால்களுமே தூக்கிய நிலையில் உள்ளன. வலதுபாதத்தின் உள்ளங்கால் பகுதியில் இடது குதிங்கால் பொருந்தியுள்ளது. இரண்டு கால்களுக்கிடையில் உள்ள பகுதி சாய்சதுர அமைப்பில் உள்ளது. இதைத்தான் சதுரதாண்டவம் என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது. திரு எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியமும், தேசிகரவர்களும் இதைச் சதுரதாண்டவம் என்று கூற, திரு சிவராமமூர்த்தி இதை லலிதகரணமாகக் குறிப்பிடுகிறார்.

ஆடல்வல்லான் பத்துத் திருக்கரங்களோடு இதில் காட்சி தருகிறார். திரு. சிவராமமூர்த்தி, இத்திருமேனி பதினாறு கரங்களைக் கொண்டிருப்பதாகத் தன் நூலில் குறிப்பிடுகிறார். (பக். 304) திரு. தண்டபாணிதேசிகர் எட்டுக்கரங்கள் என்று எழுதியுள்ளார்.(பக்.239)

இப்பத்துக் கரங்களுள் வலது முன்கரம் வேழ முத்திரையில் அமைந்துள்ளது. இதையே திரு. சிவராமமூர்த்தியும், திரு.எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியமும் குறிப்பிட, தேசிகரவர்களோ இதை டோல முத்திரையென்று சொல்கிறார். டோல முத்திரைக்குச் சிற்பச் செந்நூலில், 'ஒடித்த அறாக்கிளை மரத்தில் தொங்கி நிற்கிற நிலையைப் போலத் தோளிலிருந்து நீட்டப்பட்டு தொங்கியமையும் கை அமைதி என்று விளக்கம் தரப்படுகிறது. இரண்டு முத்திரைகளிலுமே விரல்கள் 'தளிர்க்கை' அமைப்பில் இருந்தாலும், வேழமுத்திரையில் தான், மணிக்கட்டில் கைத்தலம் கீழ்நோக்கிச் சரியும் அமைப்பு கூறப்படுகிறது. இப்படிமத்தின் வலது முன்கரத்து மணிக்கட்டில் கைத்தலம் கீழ்நோக்கிச் சரித்து அமைக்கப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம். எனவே, இது வேழ முத்திரைதான் என்பதில் ஐயமில்லை.

இதன் பிறகரங்களிலுள்ள ஆயுதங்களைப்பற்றித் திரு.பாலசுப்பிரமணியம் ஒன்றும் கூறவில்லை. திரு சிவராமமூர்த்தி அவர்கள் எந்தக்கரத்தில் எதுவென்றுகுறிப்பிடாமல் பொதுப்படையாக, வில், அம்பு, திரிசூலம், வாள், கேடயம், கட்வாங்கம், தலையோடு, பாசம் முதலிய ஆயுதங்கள் பிறகரங்களில் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இடது முன்கரம் அபயம் அல்லது பதாக முத்திரையில் மேல்நோக்கிய நிலையில் இருப்பதாகவும் குறித்துள்ளார்.

தண்டபாணி தேசிகரவர்கள் வலக்கரங்களில் கீழிருந்து முறையே, சூலம், குந்தம், வாள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். (பக்.239). ஆனால், இத்திருமேனியில் வேழமுத்திரையுடன் அமைந்துள்ள வலது முன்கரத்தைத் தவிர ஏனைய நான்கு வலக்கரங்களிலும் கீழிருந்து மேலாக சட்டி, தண்டம், திரிசூலம், வாள் முதலியனவே காணப்படுகின்றன.

இடக்கரங்களில் முன்கரம் மேல் நோக்கி விரிந்தகை என்பதில் தேசிகரவர்களுக்கும், சிவராமமூர்த்தி அவர்களுக்கும் மாறுபாடு இல்லை. இது சிவராமமூர்த்தி குறிப்பது போல் மேலே விரித்த அபயம் அல்லது பதாக முத்திரையில்தான் உள்ளது. ஆனால், ஏனைய இடக்கரங்களில் மேலிருந்து கீழாகக் கேடயம், கட்வாங்கம், தலையோடு, பாம்பு முதலியனவே காணப்படுகின்றன. திரு. தேசிகரோ இவற்றைக் கேடயம், அம்பு, தண்டம் என்கிறார்.

திரு. சிவராமமூர்த்தி அவர்கள் குறிக்கும் அம்பு,வில், பாசம் முதலியன இத்திருமேனியின் கரங்களில் இல்லை. திரு.தேசிகர் கட்வாங்கத்தையே அம்பாகக் கொண்டார் போலும்.

கரங்களின் எண்ணிக்கை, அவை கொண்டிருக்கும் ஆயுதங்கள், அவற்றின் முத்திரை போன்றவற்றில் இப்பேரறிஞர்கள் இருவரும் இப்படி மாறுபட்டிருப்பது வியப்பாகவும், விந்தையாகவும் உள்ளது.



இடக்கரங்களிலுள்ள ஆயுதங்கள்

இத்திருமேனியின் தலையில் காணப்படும் சடாமகுடம், வங்காளக் கலை முறையில் அமைந்துள்ளது. சடையின் முடிச்சுகள் தோளில் சரிந்து அழகாகக் காட்டப்பட்டுள்ளன. கழுத்தில் பாம்பு படமெடுத்த நிலையில் காணப்படுகிறது. கண்டிகை, சவடி, சரப்பளி முதலிய கழுத்தணிகளும் இத்திருமேனியை அழகு செய்கின்றன.

எல்லாவற்றிலும் சிறப்பு இத்திருமேனியின் முகத்தோற்றம் தான். புன்னகை பூத்த அந்தத் திருமுகத்தில் தன்னையிழக்காதார் யாரும் இருக்கமுடியாது. நளினமும், எழிலும் நிரம்பிய அந்த அழகு முகத்தில் மலர்ந்திருக்கும் கருணையும், களிவும் இச்சதுர தாண்டவத் திருக்கோலத்தை சடுஇணையற்ற சிற்பத்திருமேனியாக்குகின்றன பேரறிஞர்களையும் மயக்கிய இந்தப் பாலா நடராசர் தமிழகத்தின் வரலாற்றில் இடம்பெற்ற வடிவழகுப் படிமம்! தமிழ்மன்னன் இராசேந்திரன் வங்காளத்து வெற்றியின் அடையாளமாகக் கொணர்ந்த இணையற்ற எழில் பரிசு. இதைக் கொண்டிருக்கும் மேலைக்கடம்பூர் கோயில் முதற்குலோத்துங்கன் காலத்துச் சிற்பக்களஞ்சியம்.

## ஓர் அறிவிப்பு!

'தமிழரசு' இதழுக்கு எழுத்தோவியங்களை அனுப்பும் நண்பர்கள், வெளியிடப் பெறாதவற்றைத் திரும்பப் பெறுவதற்கு, உரிய அஞ்சல் தலைகளை இணைத்து அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிரியர்.



# வட ஆர்க்காடு மாவட்டத்தில்...!

வட ஆர்க்காடு மாவட்டம் நாட்ரம்பள்ளிக்கு அருகாமையில் உள்ள தெக்குப்பட்டு என்னும் கிராமத்தில் சந்தன எண்ணெய்த் தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டுவிழா, 17.7.83 அன்று நடந்தது. மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில், மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்தத் தொழிற்சாலை ரூ.60 இலட்சம் முதலீட்டில் அமைக்கப்பட உள்ளது. தமிழ்நாடு சிறு தொழில் கழகம் (டான்சி) சார்பில் அமைக்கப்பட்டு வரும் இந்தத் தொழிற்சாலை, கட்டி முடிக்கப்பட்டவுடன் வனத்துறையின் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படும். இதன் மூலம் ஏறத்தாழ 300 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் அடிக்கல் நாட்டிப் பேசியதாவது:

''முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் கடந்த 1978ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்த இந்தச் சந்தன எண்ணெய்த்தொழிற்சாலைத்திட்டம் 5 ஆண்டுகளுக்குப்பிறகு இன்று அடிக்கல் நாட்டு விழாவாக வடிவம் பெற்றுள்ளது.

100 டன் சந்தனக் கட்டைகளைப் பயன்படுத்தி 4 அல்லது 5 சிறிய சந்தன எண்ணெய்த் தொழிற்சாலைகளை உருவாக்கலாம் என்று முடிவு செய்து, ''டான்சி'' நிறுவனத்திடம் அறிக்கை கேட்டு இருந்தோம்.

அதைத் தொடர்ந்து பெரிதாகவும் இல்லாமல், சிறியதாகவும் இல்லாமல் இப்போது உருவாக இருக்கும் 400 டன் சந்தனக் கட்டைகளைப் பயன்படுத்தி 20 ஆயிரம் கிலோ எடையுள்ள எண்ணெய் தயாரிக்க முடிவு செய்தோம்.

விலை உயர்ந்த சந்தன மரங்கள் உலகத்தில் 75 சதவீதம் இந்தியாவில் உள்ளன. அதில் 90 சதவீதம் தமிழ்நாடு, கர்நாடக மாநிலங்களில்தான் உள்ளது. தமிழ்நாட்டில் அதுவும் குறிப்பாக இந்த ஜவ்வாது மலைப்பகுதியில் பெரும் அளவில் 10 இலட்சம் சந்தன மரங்கள் உள்ளன. அவற்றில் வயது முதிர்ந்த, காய்ந்து போன மரங்களை மட்டும் வெட்டுவதன் மூலம் ஆண்டுக்கு 1,500 டன் சந்தனக் கட்டைகள் கிடைக்கின்றன.


இப்போதெல்லாம் பரவலாகப் பேசப்படும் ''சோதனைக் குழாய் குழந்தை''யைப்போல், வனத் துறை சார்பில் நடத்த இருக்கும் இந்தக் குழந்தையை (தொழிற்சாலை) ''டான்சி'' நிறுவனம் பெற்றுத்தர இருக்கிறது.

தொடக்க காலத்தில் (1904) சந்தனக் கட்டைகளை ஏலம் விட்டதில் டன் விலை ரூ. 60க்குப் போனது. கடந்த சில ஆண்டுகளில் ஒரு டன் விலை ரூ. 80 ஆயிரம் வரை உயர்ந்தது.

கர்நாடக மாநிலம் நம்மிடம் இருந்து சந்தனக் கட்டைகளை வாங்கி எண்ணெய் தயாரித்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்

மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள், சந்தன எண்ணெய்த் தொழிற்சாலைக் கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டினார்.





''பெருந் தலைவர் காமராஜருக்குப் பெற்றோர் இட்ட பெயர் காமாட்சி. தாய் ராஜா என்று அழைத்தார். அதைச் சேர்த்து தந்தை காமராஜர் என்று வைத்தார் என்று நான் கேள்விப்பட்டேன். அந்தக் காமாட்சி என்ற காமராஜருக்குத் தான் இன்று பிறந்த நாள் விழாவும் படத்திறப்பும் கொண்டாடுகிறோம்.

''எனக்கு உண்மையிலேயே சில ஆண்டுகளாகப் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழாவில் பேசும்போது ஐந்து, ஐந்து வயதாகக் குறைந்து கொண்டே வருகிறது என்று நான் கருதுகிறேன். அவரைத் தலைவர் என்று சொன்னதற்காக நான் பட்டபாடு எனக்கல்லவா தெரியும்? இன்று நானும் பெருந்தலைவர் என்று சொல்லுகிறேன். மற்றவர்களும் சொல்கிறார்கள். என்னைத் திட்டியவர்களும் சொல்கிறார்கள். கட்சியை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று சொன்னவர்களும் சொல்கிறார்கள். இப்போதும் நான் ஒழிய வேண்டும் என்று சொல்லுகிறவர்களும் பெருந்தலைவர் காமராஜர் என்று சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்வதைக் கேட்கும் போது அன்று நான் குற்றம் செய்யவில்லை என்று என் மனச்சாட்சி சொல்கிறது.

**காமராஜர் பாணியில்**

''ஒருமைப்பாடு முக்கியம் என்பதை நான் எப்போதும் சொல்பவன். அவர்கள் ஒருமைப்பாடு வேண்டும் என்பதைச் சொல்லியிருக்கிறார். ஒருமைப்பாடு ஒருமைப்பாடு என்று நாம் சொல்வதே இல்லாத ஒன்றைச் சொல்கிறோமோ என்று மற்றவர்கள் சந்தேகப்படுவார்கள். அதை நாம் செயலில் காட்டவேண்டும் என்றுதான் எல்லோருக்கும் யோசனை வைக்கிறேன்.

''சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் பேசும்போது, காமராஜரின் வாழ்க்கை வரலாற்றை உருவாக்க ஒரு குழு அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். பேரறிஞர் அண்ணா, அய்யா, பெருந்தலைவர் காமராஜர் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றைச் செவ்வனே எழுத வேண்டும் என்ற முயற்சியைத் தொடங்கி இருக்கிறோம். அய்யா, அண்ணா, பெருந்தலைவர் காமராஜர் வாழ்க்கை வரலாற்றை எழுத இந்த அரசு குழு அமைக்கும்.

''காமராஜர் பெயரில் ஒரு ஆராய்ச்சிப் பிரிவு பல்கலைக் கழகத்தில் துவங்க வேண்டும் என்றார்கள்.

''நல்லவர்களின் வாழ்க்கையை ஆராய்ச்சி செய்ய எதிர்காலத்தில் ஒரு களஞ்சியத்தைக் கொடுப்பதுபோல. அதற்கு நாங்கள் முயற்சி செய்வோம். நான் பெருந்தலைவர் பாணியைக் கடைப்பிடித்துக்கொண்டு வருகிறேன்.

''சட்டம் மக்களுக்காகத்தான் இயற்றப்பட்டது. மக்களுக்கு நன்மை செய்ய சட்டம் இடம் தரவில்லையென்றால், அதை மாற்றுங்கள் என்று அவர் கூறியதை இங்கே சொன்னார்கள். அந்த வகையில்தான் நான் இப்போது செயல்பட்டு வருகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

**மேதகு ஆளுநர்**

மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், 'இந்திய விடுதலைப் போராட்டத்தில் அவரது பங்கு சிறப்பு வாய்ந்தது. 9 ஆண்டுக் காலம் முதல்வராக இருந்து தமிழகத்தில் தனது திறமையால் மிகச்சிறந்த ஆட்சியை நடத்தினார். அவர் சிறந்த நிர்வாகி. எல்லாத் துறைகளும் அவர் காலத்தில் சிறந்து விளங்கின.



''எல்லா மக்களும் கல்வி கற்கவேண்டும் என்று விரும்பினார். பள்ளிகள் இல்லாத

## சிலை திறப்பு

பெருந்தலைவர் காமராஜரின் 81-வது பிறந்த நாளையொட்டி தியாகராய நகர், திருமலைப் பிள்ளை சாலையிலுள்ள அவரது நினைவு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள 7.3 அடி உயரமுள்ள முழு உருவ வெண்கலச் சிலை திறப்புவிழா 16-3-83 மாலை நடந்தது. மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு பாதுகாப்புஅமைச்சர்திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் காமராஜரின் சிலையைத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வரவேற்றார். சிலை அமைப்புக் குழுத் தலைவர் திரு. கண்ணப்ப முதலியார் நன்றி கூறினார்.



கிராமமே இருக்கக்கூடாது என்று அதற்காகப் பாடுபட்டார். அதனால் அவரது காலத்தில் கிராமங்கள் நல்ல கல்வி வளர்ச்சி பெற்றன.

''1963-ஆம் ஆண்டு காமராஜர் திட்டத்தை அளித்தார். அந்தத் திட்டத்தின்படியே தாமே பதவி விலகினார். கட்சி வளர்ச்சிக்கு அந்த காமராஜ் திட்டம் உறுதுணை புரிந்தது.

''நேருவுக்குப் பிறகு தனது சிறப்பான பணிகளால் நாட்டுக்குப் புகழ் தேடித் தந்தவர். மக்களுக்காக உழைத்தவர். ஏழை எளிய மக்களின் வாழ்விற்காக நாளெல்லாம் பாடுபட்டவர்.

''ஒருமைப்பாட்டைக் காத்து நாடு வலுவாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். காமராஜர் சொன்னதை அண்ணாவும் சொன்னார். அதையே தான் நம் முதல்வரும் சொல்கிறார். அந்த வகையில் நாட்டின் ஒற்றுமைக்காக, ஒருமைப்பாட்டிற்காக நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபடுவோம்'' என்று குறிப்பிட்டார்

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

''பெருந்தலைவர் காமராஜர் நாட்டின் விடுதலைக்காக 9 ஆண்டுக் காலம் சிறையில் இருந்தார். அவர் நாடாண்ட காலம் 9 ஆண்டுகள். எதிர்க்கட்சியாக இருந்த காலம் 9 ஆண்டுகள். இந்த மூன்று காலங்களிலும் அவர் படைத்த வரலாறு சிறப்பானது.

''அன்று சரித்திரம் படைத்தவரின் திருவுருவப் படத்தை, இன்று சரித்திரம் படைக்கும் முதல்வர் புரட்சித் தலைவர் திறந்து வைத்துள்ளார். நாட்டிற்கு வழிகாட்டியாக இருந்தவர் காமராஜர். எந்தக் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். அவர் வாழ்ந்த காலம் தமிழ்நாட்டின் பொற்காலமாக இருந்தது. நாட்டின் சுதந்திரம் காப்பாற்றப்பட

## தமிழ்நாட்டிலிருந்து ...

தமிழ்நாட்டிலிருந்து எஸ். டி டி. மூலம் டில்லிக்குத் தொடர்பு கொள்ள வசதி செய்யப்பட்டுள்ள ஊர்கள்:

சென்னை, கோவை, திருச்சி. விருதுநகர், திருப்பூர், உடுமலைப்பேட்டை, ஈரோடு, ஊட்டி. சேலம், தேனி.வேலூர், கோவில்பட்டி, மயிலாடுதுறை, மன்னார்குடி, நாகப்பட்டினம், திருவாரூர், தூத்துக்குடி. செங்கற்பட்டு. சிதம்பரம். விழுப்புரம், ராஜபாளையம், தர்மபுரி, திண்டுக்கல். மேட்டுப்பாளையம் ஆகியவை.

மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டிலிருந்துதான் அதிக இடங்களிலிருந்து அதாவது 24 ஊர்களிலிருந்து டில்லியோடு எஸ். டி. டி. தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்து. உத்தரப்பிரதேசத்திலிருந்து 23 ஊர்களிலிருந்து டில்லியோடு எஸ். டி டி. தொடர்பு கொள்ளலாம்.

## முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்: பிரதமர் பாராட்டு



"தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்' நல்ல திட்டம்தான்; அது அவசியமானதுதான்".

—மாண்புமிகு பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் 23.7.83 அன்று சென்னை நிருபர்கள் கூட்டத்தில் கூறியது.

நமக்கு முதலில் வேண்டுவது இந்தியன் என்ற நினைப்புதான்.

''முதல்வர் சொன்னதைப்போல, மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வேண்டும் என்றால் அது தேச ஒருமைப்பாடு மறந்து அல்ல புரட்சித் தலைவரின் அந்த வாக்கியம். அதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தேன். கூடுதல் அதிகாரம் தேவை என்பதை அவர் மறுக்கவில்லை. பெருந்தலைவர் காமராஜரின் விழாவினை இந்த அரசு கொண்டாடி வருகிறது. இதைப் பெரிதும் பாராட்டுகிறேன். இதற்காக முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டுக்காகச் சிறப்பாகப் பாடுபட்ட தலைவர்களை இன்றுள்ள இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்ற சீரிய நோக்கத்தில் நல்லமுறையில் விழா கொண்டாடுகிறார்கள். இதை நாம் பாராட்ட வேண்டும். இதனால் எனக்கு அளவு கடந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது.''

கலைவாணர் அரங்கில் நடந்த சிறப்புக் கூட்டத்தில் பங்கேற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களும் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா கொண்டாடிய அரசுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்தனர்

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம வீரப்பன் அவர்கள் தமது வரவேற்புரையில், ''பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா இந்த ஆண்டு மட்டும் கொண்டாடவில்லை. 1977-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து கொண்டாடி வருகிறோம். இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் இங்கே இருப்பதால் தமிழ் மக்களின் உணர்வுகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

''தமிழகம் தந்த மிகப் பெரிய தலைவரான காமராஜர் இந்தத் தமிழகத்திற்கு மாத்திரம் சொந்தமானவர் அல்ல. இந்தியா முழுவதுக்கும் சொந்தமானவர். காமராஜர் பிறந்த நாள் விழாவை இந்தியா முழுவதும், மற்ற மாநிலத் தலைநகரங்களிலும் கொண்டாடும் வகையில் மிகச் சிறந்த திட்டத்தை ஏற்றுக் கொண்டு இந்திய அரசு நிறைவேற்ற வேண்டும் என்று தமிழ் மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

''பெருந்தலைவர் காமராஜர் வரலாற்றுச் சிறப்புமிக்க மாபெரும் தலைவராக விளங்கியவர். இளைஞர்கள் நாட்டுக்காக உழைத்தவர்களின் வரலாறுகளைத் தெரிந்தால்தான்

கிறது. எனவே, மத்திய அரசு சந்தனக்கட்டை ஏற்றுமதிக்கு விதித்துள்ள தடையை மறு பரிசீலனை செய்து நீக்கவேண்டும் என்று தமிழக அரசு சார்பில் மீண்டும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அமைக்கப்பட இருக்கும் இந்தச் சந்தன எண்ணெய்த் தொழிற்சாலையில், ஆண்டுக்கு ரூ. 2 கோடி மதிப்புள்ள எண்ணெய் உற்பத்தி செய்யமுடியும். அதில் ரூ. 2 கோடி மதிப்புள்ள எண்ணெய் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் ரூ. 25 முதல் 30 இலட்சம் வரை நிகர இலாபம் திரட்ட முடியும்.

இந்தத் தொழிற்சாலையை, 400 டன் சந்தனக்கட்டைகளில் இருந்து 1,500 டன் கட்டைகள் வரை பயன்படுத்தும் அளவுக்கு விரிவுபடுத்தவும், அதோடு இணைந்து சோப்பு, பவுடர், ஊதுவத்தி போன்ற வாசனைப் பொருட்கள் தயாரிக்கும் துணைத் தொழில்கள் தொடங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதே நேரத்தில், சந்தனக் கட்டைகள் திருடும் சமுதாய விரோதிகளுக்கு, மலைவாழ் மக்கள் துணைபோக வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன். மலைவாழ் மக்களின் நல்வாழ்வுக்குத் தமிழக அரசு எல்லா உதவிகளையும் செய்யும்''.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசியதாவது:

"மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சமுதாயத் தீமைகளை எதிர்த்துப் போராடும் வகையில் பல்வேறு வேலைவாய்ப்புத் திட்டங்களை உருவாக்கி வருகிறார். இன்று உருவாக இருக்கும் இந்த சந்தன எண்ணெய்த் தொழிற்சாலை போல் மேலும் 4 தொழிற்சாலைகளை உருவாக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது''.

விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ந. நாராயணன், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு டி.அன்பழகன், திரு என். குலசேகரப் பாண்டியன், வனத்துறைச் செயலர் திரு சுப்பிரமணியம், இ.ஆ.ப., வனத் துறைத் தலைவர் திரு டி. அச்சய்யா, இ.வ.ப., ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

தொகுப்பு :

**மு. பிச்சய்யா,**

**உதவி மக்கள்**

**தொடர்பு அலுவலர்,**

**வட ஆர்க்காடு**

**மாவட்டம்.**

## பட்டுத் தொழில் மையம்

வட ஆர்க்காடு மாவட்டம் வாணியம்பாடியில், மாவட்ட பட்டுத் தொழில் மையம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இந்த மையத்தின் புதிய கட்டடங்களை மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் 17.7.83 அன்று திறந்து வைத்துப் பேசினார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்—

"1979-80ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சிக்குத் தனித்துறை ஏற்படுத்தப்பட்டது. அப்போது ரூ.4 இலட்சத்து 13 ஆயிரம் மதிப்புள்ள பட்டு நூல் தயாரிக்கப்பட்டது. கடந்த ஆண்டில் இதன் மதிப்பு ரூ.71½ இலட்சமாக உயர்ந்து உள்ளது. பட்டுப்பூச்சி வளர்க்கும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் வரை ஆண்டு வருமானமாகக் கிடைக்கிறது.

மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் கிராமங்களைச் சிறிய நகரங்களாக மாற்றுவோம் என்று அறிவித்தார்கள். இந்தவாக்குறுதி இப்போது படிப்படியாக நிறைவேறி வேருகிறது. தமிழக வரலாற்றில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறது.''

மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறியதாவது:

''பட்டுத் தொழிலில் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் மட்டும் இருந்த நிலை மாறி இன்று தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வளர்ந்து வருகிறது. 1979ஆம் ஆண்டிற்குப் பிறகு மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சியில் பட்டு வளர்ச்சிக்கென்று தனி இயக்குநர் உருவாக்கிய பிறகு 5,000 ஏக்கர் மட்டுமே பயிரிடப்பட்டு வந்த நிலை மாறி இன்று 60,000 ஏக்கர் நிலத்தில் பட்டு வளர்ப்பதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பட்டுத் தொழில்வளர்ச்சியில் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றும் வகையில் மாவட்டப் பட்டுத் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

முதல் மையம் சேலத்தில் திறக்கப்பட்டது. இன்று வாணியம்பாடியில் திறக்கப்படுவதை அடுத்து கோவையிலும், திண்டுக்

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் பட்டுத் தொழில் மையத்தைத் திறந்து வைக்கிறார்.



## கொய்னா

சின்கோனாத் துறை தமிழ் நாடு அரசால் வணிக அடிப்படையில் நடத்தப்படும் ஓர் அரசுத் துறை நிறுவனமாகும். இத்துறை மலேரியா நோயினை ஒழிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் கொய்னா சல்பேட் மற்றும் இதய நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் குனிடின் சல்பேட் ஆகிய மருந்துப் பொருட்களைப் பெருமளவில் தயாரித்து வருகிறது. மேலும் மருந்து மற்றும் வாசனை தைலங்களையும் தயாரித்து வருகிறது. தென் அமெரிக்காவிலிருந்து சர். கிளமண்ட் ஆர். மார்க்கம் என்பவரால் கொண்டு வரப்பட்ட சின்கோனாச் செடிகளிலிருந்து கிடைத்த விதைகளைக் கொண்டு இந்தியாவில் 1860-ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டத்தில், தொட்டபெட்டாவில் சின்கோனாப் பயிர் முதலில் சோதனை அளவில், உதகைத் தாவரப் பூங்காவில் அன்று காப்பாளராக இருந்த திரு மெக் அய்வர் என்பவரால் பயிரிடப்பட்டது.

திரு. மெக் அய்வரால் துவக்கப் பெற்ற அந்தச் சோதனைப் பயிரும், சின்கோனா பயிரிட ஏற்ற காலநிலையுள்ள மற்ற இடங்களிலும் பெருமளவில் விரிவடைந்தது. சின்கோனா பயிரிடப்பட்ட மொத்த பரப்பு 2051.03 எக்டேர்களாகும். துறையின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு மருந்து மற்றும் மணம் தரும் செடிகள் பயிரிடல் மேற்கொள்ளப்பட்டது. மருந்து மற்றும் மணம் தரும் செடிகளின் மொத்தப் பரப்பு 1493.02 எக்டேர்களாகும்.

1980-81 முதல் 1982-83 வரையிலும் 378.50 எக்டேர்களில் சின்கோனா செடிகளும், 548.50 எக்டேர்களில் மருந்து மற்றும் மணம் தரும் தைலச் செடிகளும் பயிரிடப்பட்டுள்ளன. 30,910 கிலோ கொய்னாப் பொருட்கள் சின்கோனாவிலுள்ள அரசினர் கொய்னா ஆலையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 32,358 கிலோ மருந்து மற்றும் மணம் தரும் தைலங்கள் நடுவட்டத்திலுள்ள அரசினர் மருந்து மற்றும் மணம் தரும் தைல ஆலையில் 1980-81 முதல் 1982-83 வரையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

ரூ. 51.66 இலட்சம் மதிப்புள்ள கொய்னாப் பொருட்கள், வெளிநாட்டுச் சந்தையிலும், உள்நாட்டுச் சந்தையிலும், விற்பனை



செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர ரூ. 70.33 இலட்சம் மதிப்புள்ள மருந்து மற்றும் மணம் தரும் தைலங்கள் விற்பனை செய்யப்பட்டது.

கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் மருந்து மற்றும் மணம் தரும் செடிகளுக்கும் மற்றும் சின்கோனாப் பயிரில் வரும்நோய்களைத் தடுக்கவும், நோய்களைக் கட்டுப்படுத்தவும் ஒருங்கிணைந்த இரு திட்டங்கள் அமல்படுத்தி செயல்பட்டு வருகின்றன.

மேலே கூறிய திட்டங்களும் சமுதாயத்தின் பின்தங்கிய நிலையில் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பும் வீட்டு வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. தற்பொழுது இத்துறையில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களில் 2,000க்கு மேற்பட்ட தொழிலாளர்களும் 75 பணியாளர்களும் பணியாற்றிவருகிறார்கள்.

தற்போதுள்ள குடியிருப்புகள் 1940ஆம் ஆண்டில் கட்டப்பட்டவை. பழுதடைந்த இவ் வீடுகள் தொழிலாளர் நலச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தரத்திற்கேற்றவையாக இல்லை. ஆகவே, இந்தப் பழைய வீடுகளுக்குப் பதிலாக தேவையான வசதிகளுடன் கூடிய புதியதொழிலாளர் குடியிருப்புகளைப் படிப்படியாகக் கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது.

கல்லிலும் பட்டுத் தொழில் மையங்கள் திறக்கப்பட இருக்கின்றன.

ஜப்பான் போன்ற நாடுகளில் 8 நாள் புழுவை, விவசாயிகளிடம் கொடுத்து 20 நாட்கள் காப்பாற்றித்தருவதுபோல இங்கேயும் தரலாம் என்றுள்ளோம். ஏனெனில், முட்டையாகக் கொடுக்கும்போது 20 சதவீதம் வீணாகி விடுவதால் உழைப்பும் வீணாகிவிடுகிறது. இந்த முறையை இங்கே செய்யலாம் என்றுள்ளோம்.

6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பட்டுத் தொழில் துறைக்காக ரூ. 22 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது. தமிழ்நாடு முழுவதும் 3 இலட்சம் பேருக்கு இந்தத் தொழிலில் வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது. இன்னும் 2 ஆண்டுகளில் தமிழகம், பட்டு உற்பத்தியில் கர்நாடக மாநிலத்தில் இருந்து இறக்குமதி செய்வதைத் தவிர்த்து, தன்னிறைவு அடைந்தாக வேண்டும்.

இயற்கை நம்மைச் சோதித்துக் கொண்டிருக்கிறது. தண்ணீர்ப் பற்றாக்குறை இன்று கடுமையாக இருக்கிறது. எனவே, இயற்கையோடு போராட நாம் கற்றுக் கொள்ளவேண்டும். கிடைக்கின்ற தண்ணீரைக் கொண்டு பட்டு வளர்க்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். தஞ்சை மாவட்டத்தில் கூட நெல் பயிரை மாற்றி வேறு பணப்பயிர்களை விளைவிக்க விரும்புகிறார்கள். பட்டுப்பூச்சி வளர்ப்பது வறட்சியிலும் வாழ்வளிக்கும் ஒரு தொழிலாகும்.

தமிழ்நாட்டில் ரூ. 10 கோடி முதலீட்டில் தோல் தொழில் வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டு உள்ளது. வாணியம்பாடி, இராணிப்பேட்டை, ஆம்பூர் பகுதியில் தோல் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர்ப்பிரச்சினையைத் தீர்க்க போர்க்கால நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக மத்திய அரசிடம் ஏற்கெனவே நாம் கொடுத்துள்ள ரூ. 8 கோடியைத் திரும்பப் பெற முயற்சி எடுத்து வருகிறோம்.''

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ந. நாராயணன் அவர்கள் விழாவில் பேசுகையில், "வட ஆர்க்காடு மாவட்டத்தில் பட்டுத் தொழில் வளர்ச்சி 50 ஏக்கரில் இருந்து 4 ஆயிரம் ஏக்கராக உயர்ந்து உள்ளது. இதை ஆண்டு தோறும் மேலும் ஆயிரம் ஏக்கர் வீதம் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது'' என்று கூறினார்.

விழாவில், வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் திரு குலசேகரப் பாண்டியன், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் திரு.கே. ஆர்.சின்னராஜ், பட்டு வளர்ப்பாளர்கள் சார்பில் திரு விசைநாதன் ஆகியோர் பேசினார்கள். தொடக்கத்தில் பட்டுவளர்ச்சித் துறை இயக்குநர் திரு கே.எஸ். ஸ்ரீபதி அனைவரையும் வரவேற்றார். விழா இறுதியில் பட்டு வளர்ச்சித்துறை இணை இயக்குநர் திரு வெங்கடேசன் நன்றி தெரிவித்தார்.

தொகுப்பு :

**எஸ். எம். கலைமணி**

**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**

**வட ஆர்க்காடு**

**மாவட்டம்.**

ஒருமைப்பாடு நிலைக்கும். அந்த வகையில் மிகச் சிறந்த பணியை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும். கடந்த ஆண்டு பாரதியார் நூற்றாண்டு விழா சிறப்பாக நடந்தது. பெருந்தலைவர் காமராஜர் விழாவினை நடத்த 19 ஆண்டுகள் காத்திராமல் இந்த ஆண்டே தொடர்ந்து விழா நடத்த வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் தமது சிறப்புரையில் குறிப்பிட்டார்:



''உண்மையான நேர்மையான முறையில் ஜனநாயக அடிப்படையில் நடக்கும் இந்த விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன். கட்சி கருத்து வேறுபாடுகளை மறந்து காமராஜருக்கு அஞ்சலி செய்வோம். இது ஜனநாயகத்தின் உயர்ந்த பண்பை எடுத்துக் காட்டுவதாகும். காமராஜர் எளிமையாகவும் தூய்மையாகவும் நிர்வாகத்தின் திறமை மிக்கவராகவும்வாழ்ந்தவர். நுட்பமான விஷயங்களிலும்கூட தமது பொது அறிவைக் கொண்டு தீர்வுகள் கண்டவர். காமராஜரிடம் பதவி ஆசை என்றைக்கும் தலை தூக்கியது இல்லை. காமராஜர் காலம்பொற்காலம். காமராஜரே ஒரு சரித்திரமாகிவிட்டார். தனது இறுதி மூச்சு உள்ள வரை ஏழை-எளிய மக்களுக்கு என்ன நன்மை செய்ய முடியும் என்பதை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து காட்டினார். அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடருவோம்.''


'விழாவில் அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் திரு ப. உ. சண்முகம் பெரியவர் திரு. எம். பக்தவத்சலம், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. எம். பழனியாண்டி, ஜனதாக் கட்சித் தலைவர் திரு. முகமது இஸ்மாயில் எம். எல். ஏ., திரு. எஸ். ஆண்டித்தேவர் எம். எல். ஏ., (பார்வர்டு பிளாக்), திரு ஜி. மூர்த்தி (குடியரசு கட்சி), திருவாரூர் கே. தங்கராசு (திராவிடர் கழகம்), திரு. மார்க்கபந்து (உழைப்பாளர் கட்சி) திரு. வை. பாலசுந்தரம் (அம்பேத்கார் இயக்கம்), திரு செங்கம் ஜப்பார் (முற்போக்கு முஸ்லீம் லீக்), திரு கு. சா. கிருஷ்ணமூர்த்தி (தமிழரசு கழகம்), திரு. செய்குத்தம்பி (தமிழ்நாடு முஸ்லீம் லீக்), திரு ஆர். தனுஷ்கோடி ராஜா (தியாகிகள் சங்கம்), திரு அ. சக்திதாசன் (குடியரசு கட்சி-கவாய் பிரிவு), திரு எம். பிரான்சிஸ் ராயன் (கிறிஸ்துவ ஜனநாயக முன்னணி) ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு பேசினார்கள்.

அனைவரையும் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வரவேற்றார். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எஸ். டி. காசிராஜன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் நன்றி கூறினார்.


கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக கவிஞர் சுப்பு ஆறுமுகத்தின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடந்தது. முடிவில் திரு என். ஏ. தாஹீர் ''காமராஜர்'' பற்றிய பாடலைப் பாடினார்.

**செய்திகள் • செய்திகள் • செய்திகள்**

முன்னேற்றம் என். டி. சி.



நேரடித் தொலைபேசித் தொடர்பு





## நகரில் நடந்த ரம்ஜான் விழா !

முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கத்தின் சார்பில் 7.7.1983 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் ரம்ஜான் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரும், முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கத் தலைவியுமான திருமதி யாஸ்மின் அகமது, இ.ஆ.ப., அவர்கள் வரவேறபு உரையாற்றுகையில், கடந்த எண்பது ஆண்டுகளுக்கு மேலாக இச்சங்கம் ஏழை முஸ்லிம் பெண்களுக்குப் பல்வேறு உதவிகளைச் செய்து வருவதாகப் பாராட்டினார்.

விழாவிற்குத் தலைமை தாங்கி, தையல் இயந்திரங்களை வழங்கி மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள். நபிகள் நாயகத்தின் புகழையும், ரம்ஜான் நோன்பின் சிறப்புத் தன்மைகளையும் விளக்கிக் கூறினார்.

மாணவிகளுக்கு ரொக்கப் பரிசுகளை வழங்கி சிறப்புரை ஆற்றிய மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் பேசுகையில், ஏழை முஸ்லிம் பெண்களுக்கு உதவிடும் பணியில் ஈடுபட்டுள்ள இந்த அமைப்பின் சேவையைப் பாராட்டினார்.

துணிகள் அடங்கிய பரிசுப் பொருட்களை ஏழை முஸ்லிம் பெண்களுக்கு, மேதகு ஆளுநரின் துணைவியார் திருமதி இந்திரா குரானா அவர்கள் வழங்கினார். விழா இறுதியில் இச்சங்கத்தின் கௌரவச் செயலாளர் திரு ஏ. ஹாஜிமுகமத் உபயதுல்லா அவர்கள் நன்றி கூறினார்.

முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம் 1892இல் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கத்தில் ஏறத்தாழ 40 பேர்கள் உறுப்பினர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஏழை முஸ்லிம் மகளிருக்குப் பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றனர். சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் இச்சங்கத்தின் தலைவராக இருந்து வருவார்.

* 10 தையல் இயந்திரங்களை, திரு அப்துல் வகாப் அவர்கள் நன்கொடையாக வழங்கினார்.
* பள்ளி இறுதித் தேர்வுகளில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்ற பதினைந்து மாணவிகளுக்கு ரூ. 250ம், ரூ. 150ம் வழங்கப்பட்டன.
* 390 முஸ்லிம் பெண்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு புடவை, ஒரு சோளி பீஸ் ஒரு படுதா பீஸ் மற்றும் ரூ. 30ம் வழங்கப்பட்டன.
* 140 முஸ்லிம் பெண்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு புடவை, ஒரு சோளி பீஸ், ஒரு படுதா பீஸ் மற்றும் ரூ. 15ம் வழங்கப்பட்டன.

மருது





# நவீனப்படுத்தப்பட்ட பொது விலங்கியல் கூடம்

பா. ஜவகர்,
காப்பாட்சியர், விலங்கியல் பிரிவு,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை.

செத்த காலேஜ் என்று செல்லமாக அழைக்கப்படும் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் ஆரம்பத்தில் உயிருள்ள விலங்குகளும் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. இவ்வருங்காட்சியகத்தின் முதல் கண்காணிப்பாளரான டாக்டர் பால்பரின் மேற்பார்வையில் 1856-ஆம் ஆண்டு சுமார் 360 உயிருள்ள விலங்குகள் காட்சியில் இருந்தன.

பிறகு 1863ஆம் ஆண்டு சென்னை நகராட்சி விலங்குகளின் பொறுப்பை ஏற்று தற்போதுள்ள பீப்பிள்ஸ் பூங்காவிற்கு விலங்ககம் மாற்றப்பட்டது ஆரம்ப காலத்திலிருந்து இவ்வருங்காட்சியகம் மக்களுக்கு ஒரு பொழுதுபோக்கான இடமும் மட்டுமல்லாமல் ஒரு கல்வி நிறுவனமாகவும் திகழ்ந்து வருகின்றது.

கேப்டன் மிட்செல் (1859-1872) இவ்வருங்காட்சியகத்தின் கண்காணிப்பாளராக இருந்தபோது ஐரோப்பா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து பதப்படுத்தப்பட்ட பூச்சிகள், மெல்லுடலிகள், மீன்கள், பறவைகள், பாலூட்டிகள் மற்றும் கற்படியுருவங்கள் போன்றவற்றை மாற்று முறையில் தருவித்துக்காட்சிக்கு வைக்கப்பட்டன.


அவ்வாறு தருவிக்கப்பட்ட அற்றுப்போன பறவையான மோவாவின் கால் எலும்புகள் மற்றும்சில பதப்படுத்தப்பட்ட பிராணிகளை இன்றும் காணலாம். பெரும்பான்மையோருக்கு சென்னை அருங்காட்சியகம் என்றாலே திமிங்கலத்தின் எலும்புக்கூடுதான் ஞாபகம் வரும் என்பது யாவரும் அறிந்த விவரம்.

மங்களூர் கடற்கரையில் ஒதுக்கப்பட்ட திமிங்கலத்தின் இவ்வெலும்புக்கூடு 1874ஆம் ஆண்டு பொருத்தப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டது. இவ்வெலும்புக்கூடு உள்ள கூடத்தில் பாலூட்டிகளின் எலும்புக்கூடுகள், மண்டை ஓடுகள், பற்களமைப்பு, வெளிப்புறத் தோலமைப்பு, பறவைகளின் காலமைப்பு, அலகமைப்பு, இறகமைப்பு, இரு வாழ்விகள், மீன்கள் மற்றும் ஊர்வனவற்றின் புறத்தோலமைப்பு தொடர்பான காட்சிப் பொருட்கள், காட்சியில் இருந்து வருகின்றன.

பெருமளவில், பிராணிகளின் எலும்புகள் தொடர்பானகாட்சிப் பொருட்கள் இருந்ததால் இக்கூடம் 'எலும்புகள் கூடம்' என அழைக்கப்பட்டது. அக்காட்சிப் பொருட்களனைத்தும் ஆரம்பக் கல்வி மாணவர் முதல் கல்லூரி மாணவர்கள் வரை அனைவரும் அறிந்து கொள்ள பெருமளவில் உதவின. இவ்வருங்காட்சியகத்திற்கு மாணவர்கள் மட்டுமேயன்றி, படித்தோர் மற்றும் பாமரர்கள் பெருமளவில் நாள்தோறும் வருகை புரிந்து வருகின்றனர். வருகை புரிவோரில் பெருமளவு எண்ணிக்கை பாமர மக்களே.

பாமரருக்கும், படித்தோருக்கும் விளங்கும் வகையில் காட்சிப் பொருட்களைநவீனமாகக்காட்சியமைக்கும் நோக்குடன், மற்ற நாடுகளிலுள்ள அருங்காட்சியகங்களுக்கு நிகராக ஒவ்வொரு கூடத்திலும் பழைய காட்சிப் பெட்டிகளை மாற்றி நவீன காட்சிப் பெட்டிகளை அமைக்கும் திட்டத்தின் வரிசையில் எலும்புகள் கூடம் சமீபத்தில் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.


இக்கூடத்தை நவீனப்படுத்து முன், காட்சிப் பொருட்கள்



[illegible] பறவை மற்றும் எலும்புக் கூடு







சில பிராணிகளின் கால் எலும்புகளும், எலும்புக் கூடுகளும்.

அனைத்தும் சாய்வுக் காட்சிப் பெட்டிகளிலும் தனித்தனி காட்சிப் பெட்டிகளிலும் அமைக்கப்பட்டிருந்தன. அக்காட்சிப் பொருட்களைப்படித்தோருக்கும் பாமரருக்கும் விளக்க பெயர்ச்சிட்டுகளும், நீண்ட விரிவுரைகளும் கொடுக்கப்பட்டிருந்தன.

தற்போது நவீனப்படுத்திய பிறகு பிராணிகளின் பற்களமைப்பை விளக்கும் மண்டை ஓடுகளுடன், அப்பிராணிகளின் சிறிய மாதிரி உருவங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய மாதிரி உருவங்கள் அனைத்தும் கண்ணாடி இழையினால் முதன் முதலாக இவ்வருங்காட்சியகத்தின் விலங்கியல் பிரிவிலேயே தயாரிக்கப்பட்டன.

இத்தகைய மாதிரி உருவங்கள் பார்வையாளர்களை வசிகரித்து பார்வையிட உதவுவதுடன், அங்குள்ள மண்டை ஓடு எப்பிராணியினுடையது என்பதையும் எளிதாக விளக்குகிறது. எனவே, பாமரமக்களுக்குஒருவர் விளக்கிக் கூறவோ அல்லது குறிப்புச் சீட்டுகளைப் படித்து அறியவோ தேவையில்லை. தாங்களாகவே அறிந்துகொள்ள இத்தகைய காட்சியமைப்பு பெரிதும் உதவுகிறது. எலும்புக்கூடுகள் எந்தப் பிராணியினுடையது என்பதை விளக்க அப்பிராணியின் 'கட்—அவுட்' உருவங்கள் வண்ணம் தீட்டப்பட்டு எலும்புக்கூடுகளின் பின்புறம்பொருத்தப்பட்டுள்ளன.



இதிலிருந்து ஒவ்வொரு எலும்புக்கூடும் எந்தப்பிராணியினுடையது என்பது விளக்கப்படுகிறது.

அடுத்து, பிராணிகளின் வெளிப்புறத் தோலமைப்புகளில் மாறுபாடுகள், தோலிலுள்ள உரோமங்கள் பல்வேறு பிராணிகளில் எவ்வாறு வேறுபாடடைந்து அமைந்துள்ளன என்பதை விளக்க பிராணிகளின் தோல்கள் அவற்றின் வரைபடங்களுடனும், சில பிராணிகள் எந்த சூழ்நிலையில் வாழ்கின்றன என்பதை விளக்கும் வகையிலும் அவை காட்சிக்குஅமைக்கப்பட்டுள்ளன.

வெவ்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்த யானை, குதிரை, மனிதன் மண்டை ஓடுகளின் வெட்டுத்தோற்றங்கள் ஆகியவை தற்போது ஒரு காட்சிப் பெட்டியில் வைக்கப்பட்டு அப்பிராணிகளின் படங்களுடன் அவற்றின் மூளை அளவின் ஒத்தமைப்பு விளக்கப்பட்டுள்ளது. சில பிராணிகளின் தலையிலுள்ள கொம்புகளில் உள்ள வேறுபாடுகளை ஆடு, மான், காண்டாமிருகம் ஆகியவற்றின் கொம்புகளும், கொம்புகளின் வெட்டுத்தோற்றங்களும் விளங்குகின்றன. அக்கொம்புகள் எப்பிராணியினுடையவை என்பதை வரைபடங்களும், பெயர்ச்சுட்டுகளும் விவரிக்கின்றன

அடுத்ததாக, பறவையின் எலும்புக்கூட்டின் பல பாகங்களை விளக்க கழுகின் முழு எலும்புக்கூடு ஒன்றும், பறவைகளின் பல்வேறு சிறகுகளை விளக்க பதப்படுத்தப்பட்ட பருந்து ஒன்றும் பெயர்ச்சிட்டுகளுடன் வைக்கப்பட்டுள்ளன. மேலும் பறவைகளின் எலும்புக்கூடுகள் அவை பறப்பதற் கேற்றவாறு எவ்வாறு அமைந்துள்ளன என்பதைப்

# பாலமாய் விளங்கும் வேலை வாய்ப்புத் துறை

வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வேலையற்றோரையும், வேலையளிப்போரையும் இணைக்கும் ஒரு பாலமாக இயங்கி வருகிறது. வேலையளிப்போரால் தெரிவிக்கப்படும் காலியிடங்களுக்கு ஏற்கெனவே வேலை நாடிப் பதிந்துள்ள மனுதாரர்களைத் தகுதிக்கும், செயற்பாட்டிலுள்ள விதிமுறைகளுக்கும் ஏற்ப வேலை வாய்ப்பகங்கள் பரிந்துரைக்கின்றன.

கல்வியில்லாதவர் முதற்கொண்டு உயர்ந்த கல்வி பெற்றவர்கள் வரை வேலை வாய்ப்பகங்களின் உதவியைப் பெறலாம். மனுதாரர்களைப் பரிந்துரைக்கும்போது வேலைவாய்ப்பகங்கள் பொதுவாகக் கல்வித் தகுதி மற்றும் விதிமுறைகளுக்கு ஏற்ப அதிகக் காலம் பதிந்து காத்திருப்பவர்களுக்கு முதலிடம் கொடுத்துப் பரிந்துரை செய்கின்றன.

பெரும்பாலும் வேலை தேடுவோர் அடிப்படைக் கல்வியோ, பொதுக் கல்வியோ கற்றவர்களாக இருப்பதாலும், அவர்களுடைய வேலைவாய்ப்பினைப் பெருக்குவதற்கு மேலும் பயிற்சிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும் நாட்டிலுள்ள வேலை வாய்ப்புகள், தேவைப்படும் ஆட்கள் கிடைக்காத தொழில்கள், அதற்கேற்ற பயிற்சிகள் பற்றிய விவரங்களை வேலை தேடிவரும் மனுதாரர்களுக்கு விவரமாக எடுத்துக்கூறி, வேலை தேடுவதற்கு அவர்களுக்கு ஒரு குறிக்கோளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஒவ்வொரு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலும் ''வாழ்க்கைத் தொழில் நெறி வழிகாட்டும் பிரிவுகள்'' செயல்பட்டு வருகின்றன.

தொழில், வேலைவாய்ப்புப் பயிற்சிபெறுவதற்கான வசதிகள், வேலைவாய்ப்பு குறித்த தகவல், தொழிற் பயிற்சி பெறுவதற்கான வசதிகள் குறித்த விவரங்கள் முதலியவை மாணவர்களுக்கும், பதிவு செய்பவர்களுக்கும் கூட்டுக் கலந்துரையாடல், தனியாக அறிவுரை வழங்கும் முறைகள் மூலம் அளிக்கப்படுகின்றன. வேலைவாய்ப்பற்றோர்களுடைய நலனுக்காகத் தொழில் தகவல் கண்காட்சிகள் நாகர்கோயில் சென்னை மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சமீப காலங்களில் நடத்தப்பட்டது. மேலும் மாநில தொழில் நெறி வழிகாட்டும் பிரிவு, 33 தொழிற் பயிற்சி நிலையங்களில் சுமார் 28,446 விண்ணப்பதாரர்களுக்குப் பல்வேறு தொழில்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காகத் திறனாய்வுத் தேர்வை (Aptitude Test) ஆண்டுதோறும் நடத்தி வருகிறது.

நாட்டில் உள்ள வேலைவாய்ப்புப் பெருக்கம் மற்றும் மாற்றங்கள் பற்றி அறிவதற்காகத் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து காலாண்டிற்கு ஒருமுறை நிறுவனங்களில் பணி புரியும் பணியாளர்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் வேலை நிலவரத் தகவல் பிரிவால் திரட்டப்படுகிறது. இப்பிரிவு இத்தகவல்களை அமைப்பு ரீதியான துறைகளில் ( Organized Sector ) மட்டுமே சேகரிக்கிறது. 30.9.82 முடிவுற்ற காலாண்டில், தகவல் கேட்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை, பொதுத்துறை, தனியார் துறையைச் சார்ந்த நிறுவனங்களில் வேலையில் இருப்போர்களின் எண்ணிக்கை ஆகிய புள்ளிவிவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவையன்றி நாட்டில் அமலாக்கப்படும் ஐந்தாண்டுத் திட்டங்களுக்குத் தேவைப்படும் மனிதத் தேவை மற்றும் மனிதச் சக்தி பற்றிய பல்வகை விவரங்களை இப்பிரிவு திரட்டி மாநில மத்திய அரசுக்கு அளிக்கும் பணியைச் செய்து வருகிறது.

பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புப் பணி நிறுவனக் குழுவினரால் பரிந்துரை செய்யப்பட்ட[illegible] இணங்க (சிவராவ் குழு) தேசிய வேலைவாய்ப்புப் பணி தமிழ்நாடு அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் 1.11.56 முதல் செயல்படத் தொடங்கியது. 1977 ல் 30 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் செயல்பட்டு வந்தன. 1.7.77 முதல் 9.6.80 வரையுள்ள காலத்தில் பல முக்கிய முன்னேற்றங்கள் இத்துறையில் ஏற்பட்டன.

பழங்குடியினர்களை வேலையில் அமர்த்தும் பணியில் முக்கியத்துவம் அளிப்பதைக் கருத்தில் கொண்டு வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஆலங்காயத்திலும், தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள சங்கராபுரத்திலும் ஒரு சிறப்புத் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் நிறுவப்பட்டது.

உடல் ஊனமுற்றோர்களை வேலையில் அமர்த்தும் பணியினை ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி, மற்றும் சேலம் அலுவலகங்களில் உடல் ஊனமுற்றோர்களுக்கென்று இரு சிறப்புப் பிரிவுகள் அரசினரால் அனுமதியளிக்கப்பட்டு நிறுவப்பட்டன.

கிராமப் புறங்களில் வாழும் மக்களின் வேலைவாய்ப்புக்கான பணியைச் சீரிய முறையில் செய்[illegible] திருச்சிராப்பள்ளி மாவட்ட[illegible] வேலைவாய்ப்பு அலுவலக[illegible] லுள்ள பணிப் பளுவினைக் குறைப்பதற்கும் கரூரில் ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகம் நிறுவப்பட்டது.

இந்தியர்களை - குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை வெளி நாடுகளில் தொழிலில் அமர்த்தும் பொருட்டு அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்று அரசினரால் 30.11.'78 அன்று நிறுவப்பட்டது.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினர்களைப் பணியில் அமர்த்துவதை அதிகப்படுத்துவதற்கும், வேலைவாய்ப்பு அலுவலகங்களின் ஒத்துழைப்பை இப்பணிக்காகப் பெறுவதற்கும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககத்தில் ஒரு சிறப்புப் பிரிவு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் நலனுக்காக நிறுவப்பட்டது.

பழங்குடியினருக்கு வாழ்க்கைத் தொழில் நெறி வழிகாட்டுதல் பற்றிய விவரம் அ[illegible] உதகமண்டலத்தில் [illegible]னருக்கான சிறப்புத் [illegible] நெறி வழிகாட்டும் நிலை[illegible] ஒன்று நிறுவப்பட்டது.

சென்னைப் பல்கலைக் கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டி நிலையத்தால் 21-3-1983 அன்று நடத்தப்பட்ட தொழில் நெறிக் கண்காட்சியில் (Informex'83), மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. எம். விஜயசாரதி அவர்கள் பங்கு பெற்ற போது...



## பல்கேரியாவில் பாரதி கவிதைகள்



பல்கேரியாவிலேயே முதல் முறையாக "ரோதினா ரெச்" என்ற சஞ்சிகையும் "பல்ஸ்" என்ற இலக்கிய சஞ்சிகையும் பாரதியாரின் கவிதைகள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து வெளியிட்டிருக்கின்றன. "விநாயகர் நான் மணி மாலை", "உயிர் பெற்ற தமிழர்" என்ற பாடல்களின் சில பகுதிகளை அவை மொழி பெயர்த்திருக்கின்றன.

சோவியத் இந்தியவியலாளர்களுக்கும், பல்கேரியப் புலவர்களுக்கும் இடையேயான ஒத்துழைப்பினால் இது சாத்தியமாயிற்று. இந்தப் பாடல்களைப் பல்கேரியக் கவிஞர் கிராசிமீர் மாஷெவ் மொழிபெயர்த்தார்.


"இந்திய இலக்கியத்தில் சுப்பிரமணிய பாரதி ஓர் அலாதியான இடம் வகிக்கிறார். அவர் மக்களின் மாபெரும் கவிஞர்" என்று மாஷேவ், "பல்ஸ்" சஞ்சிகையில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பல்கேரிய சஞ்சிகைகளில் பாரதியார் கவிதைகளுடன், சோவியத் கலைஞர் மிகாயீல் ஃபியோதோரோவ் தீட்டிய பாரதியாரின் படமும் வெளியிடப்பட்டுள்ளது.

பறவைகளின் பல்வேறு எலும்புகளின் வெட்டுத் தோற்றங்கள் விளக்குகின்றன.

பறவைகளின் இறக்கைகள் பறப்பதற்கு ஏற்றவாறு அமைந்துள்ளதை பல வகைப் பறவைகளின் இறக்கைகள் விவரிக்கின்றன. பறவைகளின் கால்கள், அவைவாழுமிடத்திற்கேற்றவாறு அமைந்துள்ளதைப்பலவகைப்பறவைகளின் கால்கள் படங்களுடன் காட்சிக்குஅமைக்கப்பட்டுள்ளன. பறவைகளின் அலகுகள் அவற்றின் உணவுப் பழக்கத்திற்கேற்றவாறு அமைந்துள்ளதைப் பல வகைப் பறவைகளின் தலையுடன் கூடிய அலகுகள் விளக்குகின்றன.

ஊர்வன இனப்பிராணிகளில் அரணை, பாம்பு, ஓணான், உடும்பு, முதலை, ஆமை ஆகியவற்றின் உடலின் வெளிப்புற அமைப்பை விளக்க அரணை, பாம்பு, ஓணான், உடும்பு, முதலை ஆகியவற்றின் தோல்களும் ஆமையின் ஓடுகளும் படங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. மீனினத்தில் பல்வேறு மீன்களின் வெளிப்புறத் தோலமைப்பை விளக்க பதப்படுத்தப்பட்ட சில 'மீன்களும், சில மீன்களின் பாகங்களும் வரைபடங்களுடன் காட்சியில் உள்ளன. இரு வாழ்வினங்களான தவளை, தேரை ஆகியவற்றின் தோலமைப்பில் உள்ள வேறுபாடுகளை அவற்றின் தோல்களும் படங்களும் விளக்குகின்றன.



மனிதன், குதிரை, யானை ஆகியவற்றின் மூளைக் குழியின் ஒத்தமைப்பு



மேலும், இக்கூடத்திலுள்ள யானை, குதிரை, மனிதன், திமிங்கலம் ஆகியவற்றின் எலும்புக்கூடுகளைப் பார்த்தவுடன் இவ்வெலும்புக்கூடு இப்பிராணியைச் சேர்ந்தது என மிக எளிதாக அறிந்துகொள்ள பெயர்ச் சீட்டுகளுடன் அவற்றின் 'கட்-அவுட்' உருவங்களும் படங்களும் வைக்கப்பட்டுள்ளன.

எலும்புகள் கூடம் என அழைக்கப்பட்ட இக்கூடத்தில், விலங்குகளின் எலும்புக் கூடுகள் மட்டுமின்றி, பற்களமைப்பு, தோலமைப்பு, காலமைப்பு போன்ற பொதுவான விவரங்களை விளக்கும் வகையில் காட்சிப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளதால் இக்கூடம் பொது விலங்கியல் கூடம் என மாற்றப்பட்டு புதுப்பொலிவுடன் திகழ்கிறது. விலங்கியல் பிரிவிலுள்ள மற்ற கூடங்களையும்நவீனப்படுத்தி புதுப்பொலிவு ஏற்படுத்த பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.



# மக்கள் வசதிக்கு மகத்தான முயற்சி

சுயமரியாதைச் சுடர் தந்தை பெரியார் அவர்களின் பெயரால், அண்ணாவின் அரசு தோற்றுவித்துள்ள இந்த மாவட்டம் பொலிவும், வலிவும் பெற்றிட ஆயிரமாயிரம் ஆக்கப் பணிகள் அரசின் பல்வேறு துறைகளின் மூலம் நடைபெற்று வருகின்றன.

ஒரு மாவட்டத்தின் ஆட்சி அமைப்புக்கு அடித்தளமாக அமைந்திடும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லை என்ற குறையினைப் போக்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, புதிய கட்டடங்கள் உருவாக்கிட வழி வகுத்துக் கொடுத்துள்ளார்கள். ஏற்புடைய செயலை இனிதே செய்திட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, பெரியார் மாவட்ட மக்களும் அரசு அலுவலர்களும் என்றும் கடமைப்பட்டவராவார்கள்.

ஈரோடு பெருந்துறைச்சாலையில் காளிங்கராயன் இல்லத்திற்கு அருகில் 4.36 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டிருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரின் புதிய கட்டடத்தில், வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித்துறை, உணவு வழங்கல் துறை, ஆதி

**—நா. தில்லை கோவிந்தன்**

**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெரியார் மாவட்டம்.**

திராவிட நலத்துறை, பிற்பட்டோர் நலத்துறை, சமூக நல அலுவலகம், மாவட்டக் கருவூலம், நில அளவை உதவி இயக்குநர் அலுவலகம், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகம், மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம், தமிழ் வளர்ச்சித்துறை ஆகிய அலுவலகங்கள் இடம் பெற்றுச் செயல்பட இருக்கின்றன.

எழில்மிகு எட்டுமாடிக் கட்டடமாகப் புதிய அலுவலகம் உருவாகி இருக்கிறது. எட்டுச் சதுர வடிவில், மூன்றடுக்கு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டக்கட்டடமும் உடன் அமைந்திருப்பது சிறப்பாகும். எட்டு மாடிக்கட்டடத்தில் நான்கு 'மேலேற்றிகள்' (லிப்ட்) அமைக்கப்பட்டிருப்பது மக்களுக்கு கிடைத்த மற்றுமொரு சிறப்பு.

கொடுத்துச் சிவந்த கரம் எடுத்து வைத்த அடிக்கல், பெரியார் மாவட்ட அரசுப் பணியாளர்களுக்கும், பொது மக்களுக்கும் குன்றாத வளம் தந்து காக்கும் வகையில் அமைந்தது என்பது திண்ணமாகும்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்களின் சீரிய முயற்சியின் எடுத்துக்காட்டுதான் இக் கட்டடம். கட்டட வேலை முடியும் தறுவாயில் உள்ளது. விரைவில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களது பொற்கரங்களால் திறக்கப்படவுள்ளது.

## 9.6.80-க்குப் பின்பு ஏற்பட்ட முன்னேற்றங்களின் சிறப்பு அம்சங்கள்

தொழில் நுட்பத் தகுதி பெற்ற விண்ணப்பதாரருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பணியை செவ்வனே செய்யவும், தொழில் துறையில் குறிப்பாக தனியார் துறையில் தொழில் நுட்ப மனுதாரர்களுக்கு உள்ள வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கும் திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கான சிறப்பு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் நிறுவப்பட்டன.

விருதுநகர் மற்றும் மேட்டூர் ஆகிய இடங்களில் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் பணியை சீரிய முறையில் ஆற்றும் வகையில் துணை வேலை வாய்ப்பு அலுவலகங்கள் நிறுவப்பட்டன. மனுதாரர்களுக்கு வேலைவாய்ப்புப் பணியை விரைவாகவும், சீரிய முறையில் செய்வதற்காக, துணை வேலை வாய்ப்பு அலுவலகங்களாக இருந்து வந்த தூத்துக்குடி, நாகப்பட்டினம், மற்றும் திண்டுக்கல் அலுவலகங்கள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களாக மேம்படுத்தப்பட்டன. இன்றைய தேதி நிலவரப்படி 38 அலுவலகங்கள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன.

மேலும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் ஆற்றும் பணியை மனுதாரருக்கும், வேலையளிப்போருக்கும் நன்மை பயக்கும் வகையில் செய்யும் வண்ணமாக மேற்பார்வை செய்வதற்காகவும் நடைமுறையிலுள்ள குறைகளைக் களைவதற்காகவும், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் துணை இயக்குநர் தலைமையில் வட்டார அலுவலகங்கள் நிறுவப்பட்டன.

நிதி உதவி பெறும் தனியார் நிறுவனங்களும் வேலைவாய்ப்பகங்கள் மூலமாகவே பணியாட்களுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று அரசு ஆணை எண். 1138 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை 25.9.1978 நாளிட்ட ஆணை மூலம் உத்தரவிட்டதால், 1978-ஆம் ஆண்டிற்குப் பின் வேலையற்றவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் உயர்ந்துள்ளது.

### வேலைவாய்ப்புப் பணிகளைக் கணக்கீடு பொறி மூலம் (Computer) செய்தல்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணியைக் கணக்கீடு பொறி மூலம் கணக்கிடும் பணியை மேற்கொள்ள ஒரு சிறப்புப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் முதல் அலுவலகமாகத் தொழில் மற்றும் நிர்வாக வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வலுவலகத்திலுள்ள அனைத்து மனுதாரர்களின் பதிவு விவரங்களும் கம்ப்யூட்டர் நாடாவில் பதிவு செய்யப்பட்டு, சில குறிப்பிட்ட தொழிலில் பதிந்துள்ள மனுதாரர்களைச் சோதனை முறையில் கம்ப்யூட்டர் மூலம் பரிந்துரைக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. வருங்காலத்தில் அவ்வலுவலகத்திற்கு அறிவிக்கப்படும் எல்லா காலியிடத்திற்கும், மனுதாரர்களைக் கம்ப்யூட்டர் மூலம் பரிந்துரைக்கும் பணி துவங்கப்படும்.

### படித்த வேலையற்றோருக்கு நிவாரணம் அளிக்கும் திட்டம்

வேலைவாய்ப்பகங்களில் பதிந்துள்ள படித்த மனுதாரர்களுக்கு வேலையளிப்பதில் ஏற்படும் தாமதத்தைக் கருத்தில் கொண்டு அவர்களின் அவல நிலையினைப் போக்கும் பொருட்டு அரசு வேலையற்றோர் நிவாரணத்திட்டம் ஒன்றை உருவாக்கி, அத்திட்டம், 1.7.80 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள சில ஏற்பளிக்கப்பட்ட பிரிவினர், இத்திட்டத்தின்கீழ் நிவாரணம் பெறுவர். 31.3.83 வரை இத்திட்டத்தின் கீழ் 17,244 பேர் பயன்பெற்றுள்ளனர். 31.3.83 வரை மேற்கூறப்பட்டவர்களுக்கு வழங்கியுள்ள உதவித் தொகை ரூ. 1,78,91,000 ஆகும். மேலும் பார்வையிழந்தவர்களில் தகுதி வாய்ந்தவர்கள் என்று வரையறுக்கப்பட்டவர்கள் 58 பேரும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளனர்.

### மாவட்ட உழைப்பாற்றல் திட்ட வேலை வாய்ப்புக் குழுக்கள்

மாவட்டத்திலுள்ள வேலையற்றோரையும், தம் கல்வித் தகுதிக்கு குறைவான வேலையில் உள்ளோரையும் நல்ல முறையில் இயக்கக்கூடிய மற்றும் உள்ளூரிலுள்ள கனிவளங்களைக் கொண்டே நடத்தக்கூடிய சுய தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்தும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் உழைப்பாற்றல் திட்ட வேலைவாய்ப்புக்குழு, தமிழ்நாடு அரசு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 20.10.81 நாளிட்ட ஆணை எண் 2406-யின்படி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விவசாயம், தொழில், கூட்டுறவு, புள்ளி விவரம், கல்வி, கால்நடை பராமரிப்புத்துறை, கிராமத் தொழில், தாழ்த்தப்பட்ட சமுதாயம், மகளிர், வங்கிகள், மக்கள் பிரதிநிதிகள் தனியார் துறை மற்றும் ஏனைய துறைகளைச் சார்ந்தவர்கள் இக்குழுவில் அங்கத்தினர்களாக பணியாற்றும் வகையில் இக்குழுக்களின் அமைப்பு உள்ளது. மாவட்ட ஆட்சியாளர் இக்குழுவின் தலைவராகவும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் உறுப்பினர், செயலாளராகவும் உள்ளனர்.

இக்குழு எல்லா மாவட்டங்களிலும்அமைக்கப்பட்டுவிட்டது. சில மாவட்டங்களில் அக்குழுக்கள் ஏற்கெனவே கூடி, சுய வேலை வாய்ப்புகளையும், சுய வேலை வாய்ப்பை நாடுபவர்களையும் அறிந்து தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. வேலையற்ற இளைஞர்கள் சுய தொழிலில் நாட்டம் கொள்ளும் வகையில்அவர்களைத் தூண்டுவதற்கான நடவடிக்கையும் மற்றும் அவர்களுக்குச் சுய தொழில் தொடங்க தேவையான கடன் வசதி பெறுவதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வேலையற்ற இளைஞர்கள் சுய தொழிலில் ஈடுபாடு கொள்ளச் செய்யும் முயற்சியில் கூடிய விரைவில் சிறப்பான முன்னேற்றம் ஏற்படுமென எதிர் பார்க்கப்படுகிறது.

### இந்திய ஓவியங்கள் லெனின்கிராடில் பிரசுரம்

சோவியத் யூனியனிலேயே மிகப் பழமையான நூலகங்களில் ஒன்றான எம். ஒய். சால்ட்டிகோவ்—ஷெட்ரின் பொது நூல் நிலையத்தில உள்ள சிறு இந்திய ஓவியங்களை (மினியேச்சர்ஸ்), தபால் கார்டுகளில் லெனின்கிராடு 'ஆரோரா' பதிப்பகத்தார் வெளியிட்டிருக்கின்றனர்.

பாரிஸ் தேசிய நூல்நிலையத்திலும், லண்டன் பிரிட்டிஷ் மியூசியத்திலும் உள்ள இந்திய ஓவியங்களுக்குச் சமமான மதிப்புள்ள இந்திய ஓவியங்கள், இந்த நூல் நிலையத்தில் உள்ளன.

இப்பொழுது வெளியிடப்பட்டுள்ள படங்கள் 10–18 நூற்றாண்டுகளைச் சேர்ந்த சிறந்த மொகலாய, தட்சிண பாணி ஓவியக் கலைஞர்களால் தீட்டப்பட்டவையாகும். இந்திய பாணியையும், மத்திய ஆசிய பாணியையும் கலந்து தீட்டிய படங்களும் இவற்றில் உள்ளன.

# ஆலயப்பணியாளர்கள் குடும்பப் பாதுகாப்புத் திட்டம்

**ப. சாமிநாதன், செய்தி மக்கள்-தொடர்பு அலுவலர், மதுரை.**

தமிழகத்திலுள்ள ஆலயப்பணியாளர் ஒருவர் பணியிலிருக்கும் போது மரணமடைந்தால், அவரது குடும்பத்திற்கு ரூ. 5000- அளிக்கும் ஓர் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியினை-ஆலயப் பணியாளர்களுக்கான பொது ஆயுள்காப்புறுதித் திட்டத்தினை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் 10.6.1983 அன்று திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் தனி நிர்வாக அமைப்புத் தொடக்க விழாவின்போது தொடங்கி வைத்தார்.

அரசு புதிதாக உருவாக்கியுள்ள இத்திட்டத்தினால் தமிழக ஆலயங்களில் பணிபுரியும் 25 வயதுக்கு மேற்பட்ட 60 வயதுக்குட்பட்ட சுமார் 36 ஆயிரம் பேர்களுக்கு மேல் பயன்பெறுவார்கள். ரூ. 100க்குக் குறைந்த மாத ஊதியம் வாங்கும் ஊழியர்கள் பிரிமியத்தொகை ஏதும் செலுத்த வேண்டியதில்லை. 100ரூபாய்க்கு மேல் ஊதியம் பெறுபவர்கள் ஆண்டிற்கு ரூ. 25 பிரிமியமாகச் செலுத்த வேண்டும். இதற்காக மாதம் ரூ. 2 அவர்களது ஊதியத்திலிருந்து பிடிக்கப்படும். பணிபுரிகிற காலத்தில் எதிர்பாராமல் இயற்கை எய்தும் பணியாளரது குடும்பத்திற்கு ரூ.5000 வழங்கப்படும்.

இந்த இருபெரும் நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்து மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பேருரை ஆற்றினார்.

விழாவிற்கு இந்து அறநிலையத்துறை ஆணையர் திரு ஆர். சண்முகசிகாமணி தலைமை வகித்தார். மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய தக்கார் திரு.வி.என்.சிதம்பரம், பழனி தண்டாயுதபாணி ஆலய தக்கார் திருமதி டாக்டர் ராதா தியாகராஜன், பேராசிரியர் சொ. சொ. மீ. சுந்தரம், திருக்குறள் முனுசாமி, திருவாளர்கள் எம். அன்பழகன், எம்.பி., எஸ். பாலுசாமி, எம்.எல்.ஏ. மதுரை எல். பாண்டியன், லட்சுமிநாராயணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். துறை ஆணையர் திரு சி. எஸ். தீனதயாளு நன்றி கூறினார்.

பணியில் இருக்கும்போது மரணமடைந்த—திருப்பரங்குன்றம் ஆலயப் பணியாளர் ஒருவரின் குடும்பத்திற்கு ரூ.5,000/—க்குரிய காசோலையை மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் வழங்கினார்.





# சமுதாயப் புரட்சித் திட்டத்தின் சாதனை



# அயல் நாட்டில் வேலை வாய்ப்பு

பல்வேறு மையகிழக்காசிய மற்றும் வளைகுடா நாடுகள் மேற்கொண்ட பெருநோக்கு வளர்ச்சிப் பணிகளின் விளைவால் கட்டடம் மற்றும் இதர செயல் திட்டங்களுக்குரிய ''மனிதத் திறன் தேவை'' அதிகரிக்கத் துவங்கியது. இத்தேவைகள், பெருமளவில் ஆசிய நாடுகளால், குறிப்பாக இந்தியா, பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, தாய்லாந்து, கொரியா போன்றவற்றால் தீர்த்து வைக்கப்பெற்றன.

மைய கிழக்காசிய நாடுகளில் அதிகரித்து வரும் இந்திய மனிதத் திறன்களுக்கான தேவையின் விளைவால் இந்தியத் தொழிலாளர்கள் தனியார் முகவர்களால் (ஏஜெண்ட்) சுரண்டப் பெற்றும், வஞ்சிக்கப் பெற்றும் வரலாயினர். அயல்நாட்டிற்குத் தொழிலாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் சட்ட விரோதமான முறைகள் கையாளப்பெற்றன.

வெளிநாட்டு வேலைக்காகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற தொழிலாளர்களுக்குப் பொய்யான உறுதிமொழிகள் அளிக்கப்பெற்றுப் பெருமளவில் பணம் வசூலிப்பதாகத் தனியார் முகவர்கள் (ஏஜெண்ட்) மீது புகார்கள் அதிகமாக வரலாயின. எனவே, தற்போதைய அரசு, வெளிநாட்டிற்குத் தொழிலாளர்களை அனுப்புவதிலுள்ள அனைத்து அம்சங்களையும் நன்கு ஆய்வு செய்தது.

1956ஆம் ஆண்டு கம்பெனி சட்டத்தின் கீழ், அரசினால் நியமனம் செய்யப்பெற்ற இயக்குநர் குழாமினால் நிருவகிக்கப் பொருத்தமான சுயாட்சி பெற்ற அமைப்பு ஒன்று நிறுவுவதன் மூலம் வெளிநாட்டில் வேலை வாய்ப்பைப் பெற்றுத்தர இயலும் என அரசு கருதியது. இவ்வாறாக, தமிழ்நாடு அரசினால் ''அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்'' 1956ஆம் ஆண்டு இந்தியக்கம்பெனிச் சட்டத்தின் கீழ் 30.11.1978 அன்று அரசுச் சார்பு நிறுவனமாக நிறுவப் பெற்றது. இந்த நிறுவனம் தற்போது 150, சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை-600 004 என்கின்ற முகவரியில் இயங்கி வருகிறது.

**நிறுவனத்தின் குறிக்கோள்:**

1. வெளிநாட்டில் வேலை வாய்ப்பினைப் பெற்றுத் தருவது;
2. வெளிநாட்டில் பணிபுரியும் தொழிலாளர்கள் சேமித்து அனுப்பிவைக்கும் தொகையினை முதலீடு செய்வது;
3. இந்தியாவிலும் வெளிநாட்டிலும் கூட்டுத் தொழில் நிறுவனங்களை நிறுவுவது.
4. இந்தியப் பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்துவது.

இந்நிறுவனம், தற்பொழுது வெளிநாட்டில் வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருவது என்னும் நோக்கத்தினை மட்டும் செயல்படுத்தி வருகிறது. மற்றவை எதிர்காலத் திட்டங்களாகும்.

**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நாடுவோரின் பெயரினைப் பதிவு செய்து கொள்வது**

ஏதேனும் ஒரு தொழிலில் குறைந்தது 5 ஆண்டு அனுபவம் பெற்றுள்ள எவரும், வெளிநாட்டில் வேலை செய்ய விருப்பம் உடையவராக இருந்தால், இந்த நிறுவனத்தில் தமது பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம். இதற்கெனக் குறிப்பிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை இரண்டு ரூபாய் மதிப்பிற்குரிய இந்திய அஞ்சலக ஆணையினை அனுப்பி வைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். பதிவு செய்த பின்னர், வேலைக்குத் தேர்ந்தெடுப்பதன் பொருட்டோ, தேர்வுக்குப்பின் குடியகற்சி செய்வதன் பொருட்டோ மனுதாரரிடமிருந்து பணம் ஏதும் வசூலிப்பதில்லை. 31.3.1983 முடிய வெளிநாட்டில் வேலை செய்ய விரும்பும் 14,346 மனுதாரர்களின் பெயர்களை இந்நிறுவனம் பதிவு செய்து கொண்டுள்ளது.

**அயல்நாட்டில் வேலையில் அமர்த்தப் பெற்றுள்ளோரின்எண்ணிக்கை**

இந்நிறுவனம், இந்நாள் வரை ஐக்கிய அரபுக் குடியரசு, லிபியா, ஈராக், தென் ஏமன் போன்ற அயல்நாடுகளில் 708 மனுதாரர்களை வேலையில் அமர்த்தியுள்ளது. இந்நிறுவனத்தின் மூலமாக வெளிநாட்டில் வேலைக்காகச் சென்ற தொழிலாளர்கள் தங்களது சேமிப்பின் வாயிலாக ஆண்டு ஒன்றிற்கு ஏறக்குறைய ரூ. 1.25 கோடி அன்னியச் செலாவணியை இந்தியாவுக்கு அனுப்பி வைப்பர் என மதிப்பிடப்படுகிறது.

சேவையே குறிக்கோளாகக் கொண்டு இந்நிறுவனம் பணியாற்றி வருகிறது. மிகக் குறுகிய காலத்தில் மைய கிழக்காசிய மற்றும் வளைகுடா நாடுகளில் இந்நிறுவனம் மிகவும் நம்பிக்கைக்குரிய நிறுவனமாக நிலைத்த பெயரினைப் பெற்றுள்ளது. வெளிநாட்டில் பணியாற்றச் சென்ற தொழிலாளர்களும் இந்த நிறுவனத்தின் சேவையைப் பெருமையுடன்பாராட்டித்தொடர்ந்து கடிதங்கள் எழுதி வருகின்றனர்.





## உழைப்போரை உயர்த்திய பல்லவன்

ஆ. மருதவிநாயகம்.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் ஒய்வு பெறும் பணியாளர்களுக்கும் ஐந்து ஆண்டுகளுக்கு விபத்தின்றிப் பணியாற்றிய ஓட்டுநர்களுக்கும் பாராட்டு விழா சென்னை கலைவாணர் அரங்கில் 1.7.83 அன்று நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தவர்களைப்பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் திரு சி. கோபாலகிருஷ்ணன் வரவேற்றார். பல்லவன் போக்குவரத்துக் கழகத் தலைவர் திரு கே. ரவீந்திரன் ஐ.பி.எஸ். தலைமை வகித்தார். போக்குவரத்துச் செயலர் திரு ஆர்.சண்முகம் இ.ஆ.ப. சிறப்புரையாற்றினார்.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சு.முத்துசாமி அவர்கள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் ஒயவு பெறும் பணியாளர்களுக்க ஓய்வூதியம் வழங்கியும், ஐந்து ஆண்டுகள் விபத்தின்றிப் பணியாற்றிய ஓட்டுனர்களுக்குப் பதக்கங்கள் வழங்கியும் உரையாற்றினார்.

''நேற்று ஓய்வு பெற்றவர்களுக்கு இன்று ஒய்வு ஊதியம் வழங்கப்படுகின்றது. ஐந்து ஆண்டுகள் விபத்தின்றிப் பணியாற்றிய 73 பேருக்கு ஊக்கமளிக்கப்படுகின்றது. இங்கு பல்வேறு தரப்பினர் பணியாற்றுகின்றனர். அவர்களை வித்தியாசம் பாராமல் பாராட்டுகின்றோம்.

ஏறத்தாழ 30 ஆண்டுகட்கு மேலாகப் பாடுபட்டார்கள். இன்று ஓய்வு பெறுவது பற்றி அந்தந்த அதிகாரிகட்குத்தான் தெரியும். ஐந்து ஆண்டுகளாக சென்னையில் விபத்தின்றி ஓட்டுவது மிகவும் சிரமம். இன்னும் இந்த எண்ணிக்கை அதிகமாக வேண்டும். மூன்று மாதத்திற்கு ஒரு முறை தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி பிரச்சினைகளைத் தீர்த்து வருகிறேன். தொழிலாளர்களின் முழு ஒத்துழைப்பால் பல்லவன் நல்ல முறையில் செயல்படுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்''.

விழா இறுதியில் பல்லவன் போக்குவரத்துக் கழகத் தலைமை மக்கள் தொடர்பு அலுவலர் திரு வெ.நாமதேவன் நன்றி கூறினார்.

## தண்டையார்ப் பேட்டையில் புதிய பணிமனை!

சென்னை தண்டையார்ப் பேட்டையில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் இரண்டாவது புதிய பணிமனை 1.7.83 அன்று திறந்து வைக்கப்பட்டது.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சு.முத்துசாமி அவர்கள் பணிமனையினைத் திறந்து வைத்துப் பேசுகையில், ''200 பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்துகளின் பயன்பற்றி ஆய்வு நடத்தப்படுகிறது. இது வெற்றி பெற்றால் மேலும் இது போன்ற பேருந்துகள் விடப்படும். இலாப நட்டக் கணக்கில் போக்குவரத்துக் கழகங்கள் செயல்படுவதில்லை. பொதுமக்களின் நலமே முக்கியமாகும். இன்னும் 5 அல்லது 6 ஆண்டுக் காலத்தில் ஒரு பேருந்து எந்த இடத்தில் உள்ளது என்று தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் கருவிகள் பொருத்தப்பட உள்ளன.

சேரன் போக்குவரத்துக் கழகத்தினர் தங்களுடைய சொந்த முயற்சியில் ஸ்பிரிங்' தயார் செய்கிறார்கள். அதேபோல மற்ற

[redacted]

சமுதாயப்
புரட்சித்
திட்டத்தின்
சாதனை






போக்குவரத்துக் கழகங்களும் தங்களுடைய சுய தேவைகளைப் பூர்த்தி செய்யும். 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு மோட்டல் அமைக்கப் படும். இந்த மோட்டலுக்கான செலவை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகமும், அந்தப் பகுதி போக்குவரத்துக் கழகமும் சேர்ந்து ஏற்கும், என்றார்.

இந்த விழாவில், மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் திரு சு.முத்துசாமி அவர்கள் பேருந்தில பொருத்தப்பட்ட வயர்லெஸ் கருவியையும், பேருந்துகளுக்கு உபயோகப்படுத் தும் எண்ணெய் சுத்திகரிப்பின் சிக்கன ஆலை யையும் திறந்துவைத்தார்.

## பழங்காலத்து யானைப்படை



பெரியார் மாவட்டத்தில் சத்தியமங் கலம் அருகே உள்ள நல்லூரில் சேரமன் னர் இரவிகோதையின் தமிழ் வட்டெழுத் தால் ஆன அரிய கல்வெட்டு ஒன்றைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கல்வெட்டுத் துறையினர் அண்மையில் கண்டுபிடித்த னர்.

அன்றிருந்த யானைப்படைத் தலைவர் களின் குழு பற்றிய அரிய செய்தி அந்தக் கல்வெட்டு மூலம் தெரியவருகிறது. அந்தக் கல்வெட்டின் காலம் கி.பி. 9ஆம் நூற் றாண்டு ஆகும்.

அங்கிருந்த சமணப்பள்ளிக்கு இரவி கோதையின் ஆணைப்படி சமண வணி கர்கள் கொடை கொடுத்தனர் என்பதும் அதனை அத்திகோசத்தார் என்னும் யானைப்படைக் குழுவினர் பாதுகாத்தனர் என்ற செய்தியும் குறிக்கப்பெற்றுள்ளது. அக்காலத்து வணிகக் குழுவினர் தன் உடைமைகளைப் பாதுகாக்கத் தனிப்படை வைத்திருந்த செய்தியும் இதன்மூலம் புலனாகிறது.

இக் கல்வெட்டில் கோலார்நாடு, புந் நாடு, பட்டாலி ஆகிய பகுதிகள் குறிக்கப் பெற்றுள்ளன. இதில் அத்திகோசம் என்ற குறிப்பு வருவது மிகவும் சுவையானதாகும். தமிழ் இலக்கியமான பெருங்கதையில் முதல் முறையாக அத்திகோசத்தார் ஐம் பெருங்குழுவுடன் இணையாகக் கூறப்படு கின்றனர். கி.பி.5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலும் அத்திகோசத்தார் அரசனின் உடன்கூட் டத்தாருடன் குறிக்கப்பெற்றுள்ளனர்.

கி.பி. 6, 7ஆம் நூற்றாண்டு விஷ்ணு குண்டி சாளுக்கியர் கல்வெட்டிலும் குறிக் கப்பெறும் இவர்களைப்பற்றிய செய்திகள் பெரு வழிகளிலேயே கிடைப்பது அரிய தகவலாகும். இப்போது கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்ட நல்லூரும் பெருவழி யிலேயே உள்ளது. இதன்மூலம் பெருவணி கக் குழுவினர் அறக் கொடைகளை அத்தி கோசத்தார் பாதுகாத்ததுபெறப்படுகிறது.

இந்த வட்டெழுத்துக் கல்வெட்டின் மறுபக்கம் மற்ற இடங்களில் கண்டுபிடிக்கப் பட்ட வணிகக் குழுவினரின் கல்வெட்டுக் களைப் போலவே போர்க்கருவிகள் இருக் கின்றன. இங்கு அத்திகோசத்தார் பெயர் வருவதால் குதிரையோடு யானையின் சின் னமும் பொறிக்கப்பட்டுள்ளது.

சத்தியமங்கலம் அருகே வட்டெழுத் துக் கல்வெட்டு கண்டு பிடிக்கப்பட்டிருப் பது இதுவே முதல் முறையாகும்.



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.






Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676

தமிழரசு
1.8.1983






COMMISSIONER OF TAMILNADU
ARCHIVES & HISTORICAL RESEARCH
2 3 AUG 1983
EGMORE, MADRAS







இலங்கைத் தமிழர் இன்னல் குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் 6.8.83ல் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.



# சுதந்தரப் பெருமை

வீர சுதந்தரம் வேண்டிநின் றார்பின்னர்
வேறொன்று கொள்வாரோ?—என்றும்
ஆரமு துண்ணுதற் காசைகொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ? (வீர)

பிறந்தவர் யாவரு மிறப்ப துறுதியெனும்
பெற்றியை யறிந்தாரேல்—மானம்
துறந்தற மறந்தும்பின் னுயிர்கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ? (வீர)

மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்தரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினாற்
கைகொட்டிச் சிரியாரோ? (வீர)

—மகாகவி பாரதியார்

# சுதந்தரச் சபதம்

அங்கியர்கள் நமைஆண்ட அவதி நீங்கி
அரசுரிமை முழுவதையும் அடைந்தோம் நாமே
என்னினும் என்? சுதந்தரத்தின் இன்பம் காண
எவ்வளவோ மனமாற்றம் இன்னும் வேண்டும்
தன்னலமே பெரிதாகக் கருதி டாமல்
பொதுநலமே தன்னலமாய்த் தரிக்க வேண்டும்
பொன்னின்உயர் சுதந்தரத்தைப் பாதுகாக்க
பொறுப்புணர்ந்து கடமைகளைப் புரிய வேண்டும்

உயிர்க்கொலையை அஞ்சிஅஞ்சி ஒதுக்க வேண்டும்
உயிர்கொடுக்க அஞ்சாத உறுதி வேண்டும்
பயிற்சியுடன் அன்புநெறி பழக வேண்டும்
பல்லுயிரும் நல்லுறவாம் பரிவு வேண்டும்;
முயற்சிமிக உணவளிக்கும் தொழில்க ளெல்லாம்
முன்னேறப் துமுறையில் முனைதல் வேண்டும்
உயர்ச்சியென்றும் தாழ்ச்சியென்றும் பேதமின்றி
உழைப்புகளில் சமமான ஊக்கம் வேண்டும்.

— நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்



தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி — ஆடி 31
மலர் : 14 இதழ் : 4
16—8—1983

# இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து நடைபெற்ற கண்டனப் பேரணிகள்












# இலங்கைத் தமிழருக்கு ஆதரவாகத் தமிழக அரசு உருவாக்கிய எழுச்சி!



இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் அடைந்திடும் இன்னல்கள் துடைக்கப்பட வேண்டும் என்பதற்கான ஆவேச உணர்வு அனைத்திந்தியாவின் எல்லைகள் வரை எழுந்துள்ளது!

இலங்கை-ஸ்ரீலங்கா என்ற பெயருடன் அமைந்துள்ள தனி ஆதிபத்திய உரிமை படைத்த அயல்நாடுதான்.

ஆனால் அதை ஒரு காரணமாகக் கொண்டு தமிழகத்தில் பொறுப்பேற்றுள்ள அனைத்திந்திய அண்ணா தி.மு.கழக அமைச்சரவை வாளா இருந்து விடவில்லை.

தமிழ்நாடு மக்களின் உள்ள உணர்வுகளுக்கு - செயல்வடிவம் கொடுக்கிற பொறுப்பை மாண்புமிகு முதல்வர் திரு.எம்.ஜி.ஆர்., அவர்களே ஏற்றார்கள். இந்தியப் பொதுவாழ்வின் வரலாறு காணாச் சம்பவங்கள் நிகழ்ந்திட முன் முயற்சி எடுத்தார்கள்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்காக - குரல் கொடுக்க தமிழகத்தின் இன்றைய அரசு தானே முனைந்து முன்வந்து களத்தில் நின்றது.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு மனித உரிமைகள் மறுக்கப்படுவதும், தமிழ் இனத்தைப் பூண்டறுக்கச் செய்யும் முயற்சியில் ராணுவம், காவல் துறை, சிங்கள வெறியர்கள் இவர்களின் துணை கொண்டு அங்குள்ள சிங்கள அரசு திட்டமிட்டு வேண்டுமென்றே ஈடுபடுவதும் வேறு ஒரு நாட்டின் உள் விவகாரம் என்று ஒதுக்கித் தள்ளப்படக் கூடியதல்ல. இந்த அடிப்படையில்தான் தமிழக அரசு கடமை ஆற்றி வருகிறது.

கடந்த ஜூலை 16-ந் தேதியன்று-சென்னையில் அரசு சார்பில் நடைபெற்ற காமராசர் விழாவில் தமிழக முதல்வர் மாண்புமிகு திரு.எம்.ஜி.ஆர்.அவர்கள் பேசும்போது, 'இலங்கையில் தமிழர்கள் நிம்மதியுடன் வாழும் வகையில் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பு ஜெயவர்த்தனேக்கு உண்டு; அதை அவர் நிறைவேற்ற வேண்டும்' என்று முதல் குரலை எழுப்பினார்.

இலங்கையின் துயர சம்பவங்களும் கொடூர நிகழ்ச்சிகளும் வெளி உலகத்திற்குத் தெரியத் தொடங்கிய உடனே தமிழக முதல்வர் அவர்கள் இந்தியப் பிரதமருக்கு அவசரமாகத் தந்தி கொடுத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டினார்.

அடுத்து ஜூலை 27-ந் தேதி தமிழக அமைச்சரவை அவசரமாகக் கூடியது. முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றி முடிவுகளையும் எடுத்தது.

இலங்கைத் தமிழரின் துயரங்களில் பங்கு கொள்ளும் வகையில் கறுப்புச் சின்னம் அணிய முடிவெடுக்கப்பட்டது. அரசு நிகழ்ச்சிகள், விழாக்கள் நிறுத்தப்பட்டன.

இலங்கை அரசுக்குக் கண்டனமும், மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுகோளும் விடுத்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அமைச்சரவை எடுத்த முடிவின்படி ஜூலை 28ந் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டம் முதல்வர் தலைமையில் நடந்தது.

ஆகஸ்ட் 2-ந் தேதியன்று தமிழகம் முழுவதும் ஒரு நாள் முழு அடைப்பு நடுத்துவதென அரசு செய்த முடிவுக்கு அனைத்துக் கட்சித் தலைவர்கள் முழு மனதுடன் ஒப்புதல் அளித்தார்கள்.

இதற்கிடையில் மத்திய அரசின் மாண்புமிகு வெளி உறவுத் துறை அமைச்சர் திரு.பி.வி. நரசிம்மராவ் அவர்களை மாண்புமிகு பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்கள் இலங்கைக்கு அனுப்பி வைத்தார்கள்.

ஆகஸ்ட் 2-ந் தேதி முழு அடைப்பிற்கு முன்னதாக அனைத்துக் கட்சித் தலைவர்கள் அடங்கிய குழுவுடன் தமிழக முதல்வர் அவர்கள் பிரதமரிடம் தமிழக மக்களின் உணர்வுகளை நேரில் கூற முடிவு செய்தார். பிரதமரும் சிக்கிம் சுற்றுப் பயணத்தை முடிக்கு முன்னரே ஒரு நாள் முன்னதாகவே டில்லி திரும்பினார்.

அதன்படி தமிழக முதல்வர் அவர்களின் தலைமையில் அனைத்துக் கட்சிக் குழு 31.7.83 அன்று டில்லி சென்று பிரதமரிடம் அனைத்து விவரங்களையும் கூறியது.

இலங்கை அரசின் கொடுமைக்காளாகித் தவிக்கும் தமிழக மக்களின் துயரங்களைத் தீர்க்கும் பிரச்சனை-தமிழ் நாட்டின் பிரச்சனை மட்டுமல்ல - அது இந்தியாவின் தேசியப் பிரச்சனை; உலகின் மனிதாபிமானப் பிரச்சனை' என்பதை பிரதமர் திருமதி இந்திரா காந்தி திட்டவட்டமாக வாய்ப்பு நேரிட்ட போதெல்லாம் தெரிவித்தார்.

இதற்கான சூழ்நிலையை உருவாக்கியது தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளே!

பிரதமர் அவர்கள் இதே கருத்தை டில்லியில் கூடிய தென்கிழக்கு ஆசிய வெளிஉறவு அமைச்சர்கள் மாநாட்டிலும் எடுத்துக் கூறினார்கள்.

எந்த ஒரு கோரிக்கை அல்லது காரணத்திற்காகவும் முழு அடைப்பு செய்வதைக் கொள்கை அளவில் மத்திய அரசு ஏற்றுக் கொண்டதில்லை.

ஆனால் இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக தமிழக அரசு நடத்த முன்வந்த முழுஅடைப்பில் மத்திய அரசு பங்கேற்றது. இத்தகைய சம்பவம் இந்திய வரலாற்றில் இதற்கு முன்பு எங்கும் எப்போதும் நடந்ததில்லை.

மாண்புமிகு முதல்வர் எடுத்த பெருமுயற்சியின் காரணமாக மத்திய அரசின் அலுவலகங்கள் மூடப்பட்டிருக்கும், விமானங்கள் பறக்காது - ரயில்கள் நிறுத்தி வைக்கப்படும். அஞ்சல் அலுவலகங்கள் இயங்காது! எனப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி ஆணையிட-ஆகஸ்ட் 2ந்தேதி தமிழக அரசு நடத்திய முழு அடைப்பு ஒரு சரித்திர சாதனையாக அமைந்தது.

தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களுடைய தலைமைப் பண்புக்கும், செல்வாக்கிற்கும், இலங்கைத் தமிழருக்கு ஆதரவான அவருடைய உள்ள உணர்வுகளுக்கும் ஆகஸ்ட் 2ந்தேதி முழு அடைப்பு ஒரு அத்தாட்சியாக விளங்கியது.



## அனைத்துக் கட்சிகள் அணிவகுப்பும்

# தமிழக முதல்வரின் முன்னேற்பாடும்

முழு அடைப்பு நடைபெற்ற மறுநாள் - ஆகஸ்ட் 3ந்தேதியன்று மீண்டும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார்.

இலங்கைத் தமிழரின் துயர் தணிப்பு நடவடிக்கைகளுக்கு திட்டம் தீட்டியதோடு நின்றுவிடாமல் தமிழக மக்களின் ஒன்றுபட்ட தன்மை அனைத்துக் கட்சிகள் ஓரணியில் திரண்டு ஒரு குரலில் முழங்கிடும் ஒற்றுமைச் சரித்திரத்தில் விரிசல் கண்டு விடக் கூடாது என்பதிலும் தமிழக முதல்வர் மிக அக்கறையோடு இருந்தார்.

எனினும் தமிழகத்தின் சட்ட மன்ற எதிர்க்கட்சியான தி.மு.க. ஆகஸ்ட் 4-ந் தேதியன்று மத்திய அரசு அலுவலகங்கள் முன்னால் மறியல் எனவும், ஆகஸ்ட் 5ந் தேதியன்று ரயில் நிறுத்தப் போராட்டத்தையும் தானே தன்னிச்சையாக அறிவித்தது.

அனைத்துக் கட்சித் தலைவர்கள் - தமிழக முதல்வர் ஆகியோரின் வேண்டுகோள்களைப் புறக்கணித்து ரயில் நிறுத்தக் கிளர்ச்சி நடத்துவதில் தி.மு.க பிடிவாதம் காட்டியது.

இன்ன இடத்தில்

இன்னார் இந்த முறையில்

கிளர்ச்சி நடத்துவார்கள் என்று முன் அறிவிப்புக் கொடுத்து நடத்தப்படும் கிளர்ச்சிகளே அறப் போர் எனப்படும்.

துரதிருஷ்டவசமாக தி.மு.க. அறிவித்த கிளர்ச்சியில் ரயில்களை யார் யார், எங்கெங்கு நிறுத்துவார்கள் என்ற தகவல்கள் இல்லை.

அதுமட்டுமல்ல; ரயில்களை நிறுத்துவதற்கு தண்டவாளத்தில் படுத்து மறியல் செய்யப்படும் எனவும் - ரயில் பெட்டிகளில் சங்கிலியை இழுத்து ரயில்கள் நிறுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இத்தகைய கிளர்ச்சிகளால் மக்களின் உயிருக்கும், உடைமைக்கும், பொதுச் சொத்துக்கும் ஏற்படும் சேதங்களை எப்படித் தடுப்பது, சட்டம் ஒழுங்கை எப்படி நிலைநாட்டுவது என்பதில் தமிழக முதல்வர் கவனம் செலுத்தினார்.

**இலங்கைத் தமிழரின் கண்ணீரைத் துடைக்கின்ற முயற்சிக்கு பதிலாக இங்குள்ள தமிழர்கள் கண்ணீர் விடும் ஆபத்தான அபாயமான சூழ்நிலையைத் தவிர்க்க அயராது பாடுபட்டார்.**

பிரதமருடன் மீண்டும் தொடர்பு கொண்டார். 5-ந்தேதியன்று ரயில்கள் ஓடாதிருக்க மத்திய அரசின் ஒப்புதலை வாங்கினார். மூன்று நாட்களில் இரண்டாவது முறையாக ரயில்கள் ஓடாமல் நிறுத்தப்பட்டதால் மக்களுக்குச் சொல்லொணாத் துன்பம் நேர்ந்தாலும் நாட்டுக்கும் மக்களுக்கும் சொத்துக்களுக்கும் நேர்ந்திருக்கக் கூடிய மிகப் பெரிய ஆபத்துக்களை-இழப்புக்களைத் தடுத்துக் காப்பாற்றிய பெருமை, முன் யோசனை மிக்க தமிழக முதல்வரையே சாரும் என்பதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமில்லை.

## கச்சத் தீவுப் பிரச்சனை

கச்சத்தீவு பிரச்சனையில் அன்றைய முதல்வர் கருணாநிதி நடந்து கொண்ட விதத்தை முதல்வர் செய்தியாளர்களிடம் விவரித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலே உள்ள கச்சத்தீவு யாருக்குச் சொந்தம் என்ற பிரச்சனை ஏற்பட்டது. அது இலங்கைக்கு உரியது என்று விட்டுக் கொடுக்கும் உடன்பாட்டில் இந்தியா இலங்கை இருநாடுகளும் 1974ம் ஆண்டு ஜூன் 28ம் தேதி கையெழுத்திட்டன. அப்போது கச்சத்தீவு பிரச்சனை பற்றி மத்திய அரசு தமிழக முதல்வர் கருணாநிதியுடன் கலந்து பேசவில்லை என்று மக்களவையில் தி.மு.க. உறுப்பினர்கள் குற்றம் சாட்டினர்.

கச்சத்தீவு இலங்கைக்கு உரியது என்று உடன்பாடு ஏற்படு முன்பு தமிழக முதல்வர் கருணாநிதி மத்திய வெளிஉறவுத் துறைச் செயலாளர் கேவல்சிங் இருமுறை சந்தித்துப் பேசினர் என்ற தகவலை வெளி உறவுத் துறை அமைச்சர் சுவரன்சிங் வெளிஉறவுத் துறைத் துணை அமைச்சர் சுரேந்திரபால்சிங் இருவரும் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் கூறினர். இது 3.8.74, 27.8.74தேதியிட்ட நாளேடுகளில்வெளிவந்துள்ளதை முதல்வர் எடுத்துக் காட்டினார்.

கச்சத்தீவு உடன்பாடு ஏற்பட்டது 28.6.74. அதற்கு மறுநாள் தான் அதாவது 29.6.74 அன்று தான் தமிழக முதல்வராயிருந்த கருணாநிதி அதுபற்றிஅனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார் என்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். இந்தச் செய்திகளைத்தான் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் வேறுவழியின்றி 5.8.83 அன்று செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

# ஆட்சியில் இருந்த நாளிலே அன்றைய முதல்வர் செய்தது என்ன?

இலங்கைத் தமிழர் பிரச்சனையில் இத்தகைய கட்சிக் கண்ணோட்டம் இடையே புகுந்து விட்டதால் உண்மை நிலையை விளக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். ஆளாக்கப்பட்டார். அவருக்கு சரித்திரத்தின் பழைய ஏடுகள் துணை நின்றன.

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் எண்ணிக்கை சுமார் 30 லட்சம்

இவர்களில் 15 இலட்சம் தமிழ் மக்கள் அந்நாட்டின் பூர்வ குடிகள். மீதியுள்ள தமிழர்கள் இந்தியாவிலிருந்து குடியேறியவர்கள்.

இந்த இருவகைத் தமிழர்களுக்கும் 1952 முதல் ஏதாவதொரு வகையில் ஆபத்துக்கள் ஏற்பட்டு வந்துள்ளன.

இந்த முப்பதாண்டுகளில் (1977 வரை) தமிழகத்தின் பொறுப்பில் இருந்த எந்த அரசும் தமிழக சட்டமன்றத்தின் வாயிலாக இலங்கைத் தமிழர் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியது இல்லை.

இலங்கையில் குடியேறிய இந்தியர்களுக்கு அங்குள்ள இலங்கை அரசு குடியுரிமைகளை மறுத்த பொழுது 1952ல் தமிழக சட்டமன்றத்தில் மூதறிஞர் ராஜாஜி முதல்வராயிருந்தபோது ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதற்குப் பிறகு 1977ஆம் ஆண்டுதான் மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகுதான் தமிழக சட்டமன்றத்தில் இலங்கைத்தமிழருக்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

அதேபோல அனைத்திந்திய அண்ணா தி.மு.கழக அரசு தான் ஒட்டுமொத்தமாக தமிழக மக்களின் ஆதரவைக் காட்டும் வகையில் 1981 செப்டம்பரில் முழு அடைப்பு நடத்தியது.

அன்று நடைபெற்ற முழு அடைப்பை ஏற்காத இந்தியப்



முன்னாள் இலங்கை [illegible] வரவேற்கிறார் அந்நாள் தமிழக முதல்வர்!

பிரதமர் 1983 ஆக்ஸ்ட் 2ந் தேதி முழு அடைப்பில் மத்திய அரசும் பங்குகொள்ளும் என அறிவிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தியதும் முதல்வர் திருஎம்.ஜி.ஆர். தலைமையில் இயங்கும் தமிழக அரசே ஆகும்.

இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக தென்மாநில முதல்வர்கள் கருத்துக் கூறினர்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக உணர்வுக் குரல் எழுப்பினர்.

இந்தியாவின் அனைத்து ஏடுகளும் மக்களின் எண்ணங்களுக்கு எழுத்து வடிவம் கொடுத்தன.

இவற்றுக்கெல்லாம் வாய்ப்பான ஒரு சூழ்நிலையைத் தமிழகத்தின் முதலமைச்சர் உருவாக்கினார் என்பது மிகையல்ல.

ஆனால், தன்மீது சுமத்தப்பட்ட பொறுப்பை பாரே வியக்கும் வகையில் தமிழக முதல்வர் நிறைவேற்றியபோது - அவருடைய முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் - நுட்பமான சிக்கல் நிறைந்த ராஜதந்திர நடவடிக்கைகளுக்குப் பாதகம் ஏற்படும் வகையில் கட்சிக் கண்ணோட்டங்களைப் புகுத்துகிற வகையில் இன்று செயல்படுகின்றவர்கள் - அன்று பொறுப்பில் இருந்தபோது என்ன செய்தார்கள் என்பது விவாதக் களத்தில் நிறுத்தப்படும் நிலை உருவாகிவிட்டது.

தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் 5.8.83 அன்று செய்தியாளர்களிடம் சில சரித்திர நிகழ்ச்சிகளை ஆதாரத்துடன் வெளியிட்டார்.

தமிழகத்தில் முதலமைச்சராக வீற்றிருந்த திரு மு.கருணாநிதி அவர்கள் டில்லி சென்று பிரதமர் இந்திராவைச் சந்தித்து சென்னை திரும்பி, 1973ம் ஆண்டு ஏப்ரல் 30ந் தேதி அன்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

''இலங்கைத் தமிழர்களுடைய அவதிகளைப் போக்கி அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க நாங்கள் இங்குள்ள மத்திய சர்க்காரை வற்புறுத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்கச் செய்வோமே ஒழிய தமிழ்நாடு அரசோ - அல்லது தி.மு.கழகமோ இலங்கைத் தமிழர் பிரச்சனையில் நேரடியாகத் தலையிடாது'' என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களின் போராட்டத்திற்கு உங்களுடைய தார்மீக ஆதரவு உண்டா என்று ஒரு நிருபர் கேட்டதற்கு முதலமைச்சர் கருணாநிதி பதிலளிக்கையில் ''போராட்டத்திற்கு ஆதரவில்லை'' என்று திட்டவட்டமாகக் கூறினார்.

30.4.73-தினமணி

இத் தகவலை வெளியிட்ட தமிழக முதல்வர் இதேபோல மற்றொரு சம்பவத்தையும் சுட்டிக் காட்டினார்.

''யாழ்ப்பாணத்தில் 1974 ஜனவரியில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது இலங்கை போலீஸ் தலையிட்டதில் பலர் மாண்டனர். இதுபற்றி அன்று முதல்வராயிருந்த கருணாநிதி கருத்துத் தெரிவிக்கையில் 'இலங்கையில் நடைபெற்ற துயரமிக்க சம்பவங்களுக்கு நான் பெரிதும் வேதனைப்படுகிறேன். நடைபெற்ற சம்பவத்தின் விவரங்களுக்குள் நுழைந்து விமர்சிக்க நான் விரும்பவில்லை. சட்டம் ஒழுங்குப் பிரச்சனையில் ஒரு மாநில அரசு தலையிடுவதாகிவிடும்'' என்று கூறியிருந்தார்.

(ஆதாரம் 19.1.74 முரசொலி)

இதையும் செய்தியாளர்களுக்கு முதல்வர் படித்துக் காட்டினார்.

''யாழ்ப்பாணம் சம்பவம் நடந்த சில நாட்களில் அதாவது 22.1.74 அன்று இலங்கைப் பிரதமர் திருமதி பண்டார நாயகா சென்னை வந்தார். அவரை மாலையிட்டு வரவேற்றார் அன்றைய முதல்வர் கருணாநிதி. அது மட்டுமல்ல யாழ்ப்பாணம் சம்பவங்களையொட்டி திருமதி பண்டார நாயகாவுக்கு கறுப்புக் கொடி காட்ட முயன்ற டாக்டர் இரா.ஜனார்த்தனத்தைக் கைது செய்து சிறையிலடைத்து விட்டுத்தான் இலங்கைப் பிரதமரை வரவேற்றார் கருணாநிதி. 23.1.74 தேதியிட்ட அனைத்து நாளேடுகளிலும் இச் செய்தி வெளியாகி உள்ளது'' என்பதனையும் தெரிவித்த முதல்வர் அதுபற்றிய படங்களையும் நிருபர்களுக்குக் காட்டினார்.

அன்று இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாராவுக்குக் கறுப்புக் கொடி காட்ட முயன்று கைதான டாக்டர் ஜனார்த்தனம் தி.மு.க. மாணவர் பிரிவு தலைவராக இருந்தார். அவரோடு கைது செய்யப்பட்ட மற்றவர்களும் தி.மு.கழகத் தொண்டர்களே. ஆனால் கருணாநிதி ஒரு பேட்டியில்:

'இலங்கைப் பிரதமருக்கு கறுப்புக் கொடி காட்டியோர் தி.மு.க.வினராக இருக்கமாட்டார்கள்' என்று கூறிவிட்டார்.

(ஆதாரம்-மக்கள் குரல் 22.1.74)

தான் முதல்வராயிருந்தபோது இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக அரசின் சார்பில் அனைத்துக் கட்சி சார்பில் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாத திரு கருணாநிதி - இன்று தமிழக மக்களின் ஒன்றுபட்ட தன்மையைக் குலைக்கும் வகையில் தன் கட்சியின் சார்பில் தனியே செயல்படுவதும், சட்டம் ஒழுங்கு சீர்குலைவை உருவாக்க நினைப்பதும், ரயில் நிறுத்தம் போன்ற அழிவுப் பாதையில் செல்லமுனைவதும் எப்படி இலங்கைத் தமிழர் துயர் தீர்க்க உதவும்? இந்தக் கேள்விகளைத்தான் தமிழக மக்கள் மத்தியில் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். எழுப்பினார்.

இலங்கைத் தமிழர் பிரச்சனை என்பது எந்த ஒரு கட்சியின் தனிப் பிரச்சனை அல்ல. அது இந்தியாவின் தேசியப் பிரச்சனை என்ற நிலையை எட்டிவிட்டது. உலக மக்களின் மனிதாபிமானப் பிரச்சனையாக உருவெடுத்துவிட்டது. இலங்கைத் தமிழரின் துயரங்களைத் தீர்க்க மத்திய அரசுதான் நடவடிக்கை எடுக்க முடியும்.

மத்திய அரசும் மிக தீவிரமாக அதே நேரத்தில் நிதானம் தவறாமல் நடவடிக்கை எடுக்க ஆர்வம் காட்டி வருகிறது.

இந்நிலையில் முள் மீது வாழை இலை விழுந்தாலும், வாழை இலை மீது முள் விழுந்தாலும் சேதம் வாழைக்குத்தான் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டிய பொறுப்பு தமிழக மக்களுக்கு உண்டு.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகத் திரண்டுள்ள தமிழக மக்களின் ஒன்றுபட்ட சக்தியைச் சிதறடிக்க எவரையும் அனுமதியாதீர்.

இலங்கைத் தமிழர்களின் துயரங்களைக் கட்சி அரசியல் ஆக்கிட எவரையும் அனுமதியாதீர்!

காலத்தின் தேவையறிந்து கவனம் செலுத்தி - இலங்கைத் தமிழரின் கண்ணீர் துடைத்திட இயன்றது அனைத்தையும் விரைந்து செய்திடும் தமிழக அரசுக்கு - மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களுக்குப் பேராதரவு நல்கிடுவீர்!

இந்த முழக்கங்களே இன்றைய தேவையாகும்.





# திரு.வி.க. இளமையும் கல்வியும்

எஸ். டி. காசிராஜன், ஐ.ஏ.எஸ்.,
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத் துறை

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பொங்குபுகழ் தமிழகத்தில் தமிழ்ஆய்ந்த சான்றோர்களுக்கு என்றும்பெருமையுண்டு முடியுடை மூவேந்தர்கள் காலத்திலும் பிற்காலச் சோழர்கள் ஆட்சியிலும் தண்டமிழ்ப் புலவோர் மன்னர்களால் பெரிதும் மாட்சிமைப் படுத்தப்பட்டனர்: அவர்களின் அறிவுரைகளைப் பொன்போல் போற்றினர். புரவலர்களால் ஏற்றம் கண்ட தமிழ்ப் புலவர்கள் தன்னிகரற்ற என்றுமுள செந்தமிழை வளப்படுத்தியதோடு, அரசியல் பிறழாது மன்னர்கள் அறவழி கோலோச்சிட அரும்பணியாற்றினர். நாட்டின் நலனில் நனி சிறந்த நாட்டம் செலுத்தி வந்தனர். கன்னித் தமிழ் வளர்த்த கபிலரும், பண்பாடு போற்றிய பரணரும் அழகிய தமிழில் அரும்பொருள் உரைத்த ஔவையாரும் என்றும் போற்றப்படும் வெற்றி பெற்றவர்கள். இவர்கள் முத்தமிழ் போற்றிய திறத்துடன் சமுதாய வாழ்க்கையிலும் பற்றுக் கொண்டு வாழ்க்கை முறையை அமைத்திருந்தனர். பண்டைய மரபு வழியே, இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் தோன்றிய திரு.வி.கலியாணசுந்தரனாரும் தமிழை வளர்த்தார்; தமிழர்களின் நலம் பேணினார்; தமிழகத்தின் சமுதாய மறுமலர்ச்சிக்கும் உழைத்திட்டார். கபிலர், பரணர் போன்றே தூய வாழ்வு நெறியிலும் நாட்டுப் பற்றிலும் சிறந்து தமிழ்ச் சான்றோராய் அழியாப் புகழ் நாட்டிச் சென்றுவிட்டார்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த செழுந்தமிழ்ப் புலவர் கணியன் பூங்குன்றனாரைத் தமிழ் உலகு இன்றும் நினைவு கொள்கிறது. பெயரே தெரியாத ஒரு புலவரை, அவர் பாடிய பாட்டின் திறத்தால், பாட்டு வரிகளாலேயே பெயர் சூட்டி - தேய்புரிப்பழங்கயிற்றினார் - என்று இன்றும் போற்றுகின்றோம். இவர்கள் ஒவ்வொருவரும் பாடிய பாட்டு,ஒன்றுதான். ஆனால் கால வெள்ளத்தால் இச்செந்நாப் போகர்களின் பெயரும் புகழும் அழிக்கப்படவில்லை; இவர்கள் அழியாப் புகழ் பெற்றுவிட்டார்கள். இத்தகைய திறமும் தமிழக வரலாற்றில் நின்றிலங்கும் தகுதிப்பாடும் கொண்டவர், திரு.வி.க. அவர் யாத்த தமிழ் நூல்களின் அழியாத் தன்மை பெற்ற கருத்துவளத்தாலும் எளிய இனிய தூய செழுந்தமிழ்ப் பாங்காலும் என்றும் நிலைத்து நிற்பார்.

ஒருகாலத்தில் தன்னிகரற்று பெருமைபெற்று இலங்கிய பழம் தமிழன், தன் பெருமை மறந்து தமிழையே மறந்து வாழ்ந்திருந்த காலம், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி. அடிமை வாழ்வைப் பெற்றிருந்த தமிழர்கள், ஆங்கில மோகத்தில் அமிழ்ந்திருந்தனர். கற்றறிந்தோர் நாட்டை நல்வழிப்படுத்திட முயலாமல் ஆங்கில ஆதிக்கத்தின் பிடியில் சுகம் கண்டனர். பெண்ணின் பெருமை ஓங்கிய காலம் போய், பெண்டிர் உரிமை முயற்கொம்பாய் இருந்த காலம் அது. மகாகவி பாரதியார் தோன்றிய காலக் கட்டத்தைக் குறிப்பிட்டுப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் கூறியது, திரு.வி.க.வின் காலப் பகுதிக்கும் பொருந்துவதாகும்.

**தமிழரின் உயர்விகர்**
**தமிழ்நிலை தாழ்ந்ததால்**
**இமை திறவாமல்**
**இருந்த நிலையில்**
**தமிழகம் தமிழுக்குத்**
**தகும்உயர் வளிக்கும்**
**தலைவனை எண்ணித்**
**தவங்கிடக்கையில்**
**இலகு பாரதிப்**
**புலவன் தோன்றினான்!**

என்றார், புரட்சிக் கவிஞர். இதே காலப் பகுதியில் - இருண்ட காலக் கட்டத்தில், தமிழ் முனிவர் தோன்றினார். திண்மை உள்ளம்; தெளிந்த நல்லறிவு; விரிந்து பரந்த நோக்கு; உலகளாவிய உன்னத இயல்பு; திரு.வி.க.வின் மாண்பு, ''தொண்டே எனது வாழ்க்கை; எனது செல்வம்; எனது ஆருயிர்; எனது சமயம்; எல்லாம், எல்லாம்.'' இவ்வாறு கூறியதுடன் வாழ்நாள் முழுவதும் தொண்டையே உயிர் மூச்சாகக் கொண்டு திகழ்ந்த பெருந்தகை திரு.வி.க; செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள துள்ளம் என்ற சிற்றூரில் 1883ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 26ஆம் நாள் பிறந்தார். தந்தையார் விருத்தாச்சலத்திற்கும் தாயார் சின்னம்மைக்கும் ஆறாவது மகனாகத் தோன்றினார். இவர் பெயரிலுள்ள 'திரு' அவரது முன்னோர்கள் வாழ்ந்த திருவாரூரைக் குறிக்கின்றது.

துள்ளத்தின் நான்கு பக்கமும் வேலிசூழ்ந்த ஓலை வீட்டில் இளமையில் வாழ்ந்த இவர், அஞ்சா



நெஞ்சம் உடையவராக இருந்தார். பாம்பிற்கும் அஞ்சாத சிறுவராகத் திகழ்ந்தார். ஆனால், படமெடுத்தாடும் பாம்பை எவரேனும் அடித்து வீழ்த்தினால் இவரது மனம் வருந்தும்; பாம்பை அடிக்கும் அடி இவர் மீது படுவது போல் கண்ணீர்விடும் இளகிய மனம் பெற்றிருந்தார்.

துள்ளம் கிராமத்தில் பள்ளி இல்லாமையால் படிக்க விரும்புவோர் ஒரு கல் தொலைவிலுள்ள சத்திரம் அல்லது மூன்று கல் தொலைவிலுள்ள பூவிருந்தவல்லிக்குச் செல்ல வேண்டும். இவரை வெளியூர் அனுப்ப விரும்பாத இவரது தந்தையாரே ஆசிரியராக இருந்து, கடையின் தாழ்வாரத்தில் பாடம் புகட்டத் தொடங்கினார். இவரது தமையனார் கற்கும் பாடங்களைத் திரு.வி.க உரத்த குரலில் சொல்லிக் கொண்டு ஓடுவார்; ஆடுவார். இவரது தந்தையாருக்கு ஓரளவு ஆங்கிலமும் தெரிந்தமையால் அவரிடம் தொடக்க ஆங்கிலப் பயிற்சியைப் பெற்றார். திரு.வி.க; குழந்தைகளை உயர்நிலைப் பள்ளியில் சேர்த்துப் பயிற்றுவிக்கும் நோக்கத்திலும் பெண்களுக்குத் திருமணம் செய்விக்கும் பொருட்டும் இவரது தந்தையார் துள்ளம் கிராமத்தை விடுத்து, சென்னைக்கு வந்து இராயப்பேட்டை முத்து முதலி தெருவில் தேப்பெருமாள் முதலியார் வீட்டின் பகுதி ஒன்றில் வாடகைக்குக் குடியமர்ந்தார். 1891ஆம் ஆண்டில் திரு.வி.க.வும் அவரது தமையனார் உலகநாதனும் முத்து முதலி தெருவின் கோடியில் இருந்த 'ஆரியன் பிரைமெரி' பள்ளியில் முறையே இரண்டாம் வகுப்பிலும், நான்காம் வகுப்பிலும் சேர்க்கப்பட்டனர். பின்னர் 1894ல் வெஸ்லி கல்லூரியில் நான்காம் வகுப்பில் சேர்க்கப்பட்டார்.

திரு.வி.க. இளமையில் திண்மையாக இருப்பார். கழுத்தில் தசைகள் மடிப்பு விட்டிருக்கும். உடன் பயிலும் மாணாக்கர்கள் அவரைப் ''பொதுக்கன்'', ''பொதுக்கன்'' என்று கூறிக் கிண்டலும் கேலியும் செய்வர். உடல் பருமனைக் குறைக்க ஒரு வித மருந்தெண்ணெய் சாப்பிட்டுப் பத்தியம் இருந்தார். ஒரு நாள் நண்பர்கள் வாங்கி வந்த உளுந்து வடையைத் தின்று விட்டார். பத்திய முறிவு ஏற்பட்டு விட்டது. அவரது இடது காலும் வலது கையும் முடங்கிவிட்டன. சிகிச்சை நடந்தது. முடங்கிய காலும் கையும் சூம்பின. வேதனை - தாங்க முடியாத வேதனை. பல்விதச் சிகிச்சை தொடர்ந்து நடந்தது. ஓராண்டு உருண்டோடி விட்டது. ஒருவாறு குணமடைந்தார். பள்ளி செல்ல விருப்பம் தெரிவித்தார். வைத்தியர் ஒத்துக் கொள்ளவில்லை. ஓர் ஆண்டு ஓய்வு வேண்டுமென்று கூறிவிட்டார். என்ன செய்ய? இரண்டு இளம் ஆண்டுகள் வீணே கழிந்தன.

பட்டகாலிலே படும் என்பது போல, இப்போது அவரது தந்தை சுகவீனம் கொண்டார். மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டார். பலவிதத் தொல்லைகள் அவரது குடும்பத்தை அடைந்தன. அரிசி மண்டி மூடப்பட்டது. ஊரிலிருந்து நெல் ஒழுங்காக வருவதில்லை. திரு.வி.க.வின் தமையனார் பள்ளியை விட்டு விட்டு ஓர் அச்சுக் கூடத்தில்சேர்ந்துஉழைக்கவேண்டியதாயிற்று. திரு.வி.க.வின் கதி என்ன? பள்ளி செல்ல முடியுமா? ஏழ்மையும் இல்லாமையும் இல்லத்தில் தாண்டவமாடும்போது, இவரும் ஏதாவது தொழிற்சாலைக்குச் சென்று ஊதியம் தேடலாமல்லவா? இப்படித்தான் அவரது தந்தையார் எண்ணினார். செல்வநிலை குலைந்தபோது இந்த எண்ணம்தானே வரும்! இங்கும் போகாமல் அங்கும் போகாமல் ஏறக்குறைய ஈராண்டுகள் இன்னணம் கழிந்தன. மொத்தத்தில் நல் நான்காண்டுகள் விருதாவாயின.

இப்போது ஆண்டு 1898. திரு.வி.க.வுக்கு வயது 15.

வெஸ்லி கலாசாலையில் மீண்டும் நான்காம் வகுப்பில் சேர்ந்தார். ''பழைய தோழர் பலர் உச்சியிலிருத்தல் கண்டேன். பாழும் எண்ணெய்யையும் அபத்தியத்தையும் நினைந்து நினைந்து மனம் நொந்தேன்.''

திரு.வி.க.வின் திறமை ஆசிரியருக்கு விரைவில் புலனாயிற்று. வகுப்பில் முதல் மாணாக்கராயிருந்தமையால், அவரே சட்டாம் பிள்ளையானார்.

முதல் பாரம் படிக்கும்போது சம்பளத்தைப் பற்றிப் பள்ளி முதல்வருக்கு விண்ணப்பஞ் செய்தார். அதன் பயனாக அவர் சம்பளமில்லாத மாணாக்கனானார்.

ஆறாம் பாரம் படிக்குங்கால் அப்பள்ளியில் தமிழாசிரியராய் இருந்த கதிரைவேல் அவர்களிடம் பழகும் வாய்ப்பு எய்தினார். ''முதன்முதல் எனக்குக் கல்விக் கண் திறந்தவர் யாழ்ப்பாணம் கதிரைவேற்பிள்ளை. ஓய்வு கிடைக்கும் எந்த நேரத்திலும் அவர் பாடஞ்சொல்வார்; எவ்விடத்திலும் சொல்வார்; அவரது வாதப் பேச்சுகளிலும் தமிழ் மணங்கமழும்; கலைமகள் நடம்புரிவாள்'' என்று அன்பு கசிய நெக்குருகி எழுதுகின்றார்.

தன[illegible]ள்ளங்கவர்ந்த இந்த ஆசிரிய[illegible]மல் வில்வபதி என்றொருவர் தன்னை கொத்தவால் சாவடியண்டைத் தாக்கிப்புடைத்தனர் என்று எழும்பூர் மாஜிஸ்ட்ரேட் மன்றத்தில் வழக்குத் தொடுத்தது தொடர்பாக, அவ்வழக்கில் சாட்சி சொல்லவும் திரு.வி.க. முனைந்தார். காரணம் என்று தன்னை நன்கு உதைத்ததாக வில்வபதி விளம்பினாரோ அன்று கதிரைவேல், பள்ளியில் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். சாட்சி சொல்லச் சென்ற திரு.வி.க. பேருந்து சரியான நேரத்தில் திரும்பி வரக் கிடைக்காததால் தகுதித் தேர்வுக்கு வரமுடியவில்லை. அதன் விளைவு பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதத் தகுதியுடையவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்வு எழுதவில்லை; எனவே தேர்ந்தெடுக்கப்படவில்லை.

இப்போது ஆண்டு 1904. வயது 21. பள்ளிப்படிப்பு முற்றுப் பெற்றது.





''முதல் மாணாக்கன் ஆக எவ்வளவு உழைத்தேன்! முதல் பரிசில் பெற எவ்வளவு பாடுபட்டேன்! வக்கீலாதல் வேண்டும் அல்லது கணிதப் பேராசிரியனாதல் வேண்டும் என்று எத்தனை நாள் மனக்கோட்டை கட்டினேன்! முதல் மாணாக்கன் என்ற இறுமாப்பும், முதல் பரிசுச் செருக்கும், மனக்கோட்டையும் என்ன ஆயின? தேனென இனித்த பள்ளிப் படிப்பு வேம்பெனக் கைத்தது. பரிசிலாகப் பெற்ற நூல்கள் எங்கே போயின? நண்பர் வீடுகளுக்குப் போயின. அவைகளைப் பொன்னென மதித்த மனம் என்னவாயிற்று? அம்மனம் மாண்டது. யான் வேறு மனிதனானேன். கோயில் எனக்குப் பள்ளி ஆயிற்று. தேவார-திருவாசகம் எனக்கு நூல்களாயின'' என்று பெரிதும் வருந்தினார் திரு.வி.க.



பள்ளிப் படிப்பு இடையில் நின்ற பின்னர், யாழ்ப்பாணம் நா.கதிரைவேலரின் தமிழ் மணம் கமழும் வாதப் பேச்சுகளைக் கேட்டுப் பயன் பெறுவார் திரு.வி.க. கதிரைவேலரின் சொல் மாரி வெள்ளத்தில் இலக்கியம், இலக்கணம், தர்க்கம், சாத்திரம் முதலிய கலைகள் நடமிடும். இவரது உரையில் திரு.வி.க. மெய்ம் மறந்து போயினார். பெரியபுராணம், தணிகைப்புராணம், திருவிளையாடற்புராணம், யாப்பிலக்கணம் முதலிய இலக்கிய நூல்களின் நயத்தையும் அவரிடம் கேட்டுணர்ந்தார்.

சிவப்பிரகாசம், சிவஞானசித்தி, சிவஞானபோதம், சிந்தாமணி, பிரபுலிங்க லீலை முதலியனவற்றின் சிறப்பையும் ஆய்வையும் மயிலை மகாவித்வான் தணிகாசலம் அவர்களிடம் பாடம் கேட்டுணர்ந்தார். சென்னை செயிண்ட் எப்பாஸ் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் தேவப்பிரசாதம் பண்டிதருடன் சேர்ந்து கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய நூல்களை ஆராய்ச்சி செய்தார் திரு.வி.க.

சமஸ்கிருதம் அறிந்துகொள்ள வேண்டுமென்னும் இவரது அவா, பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் மூலம் ஓரளவு முற்றுப்பெற்றது. இவர் திருவல்லிக்கேணியில் இருந்தபோது மாலை நேரத்தில் கடற்கரைக்குச் செல்வார். திரு.வி.க.வும் அவருடன் சென்று, அவர் புகட்டும் உபநிடதக் கருத்துக்களைச் செவிமடுத்துப் பயனடைவார். வான்மீகி இராமாயணம், வியாசபாரதம், சிவகீதை முதலிய நூல்களைத் தக்கோரிடம் கேட்டு உணர்ந்தார். பகவத்கீதை பலரிடம் கேட்டுத் தெளிந்து கொண்டதுடன் அதன் ஆங்கில மொழிபெயர்ப்புகளையும் ஆர்வத்துடன் படித்தறிந்தார்.

சமஸ்கிருதத்திலுள்ள சமண நூல்களின் சாரங்களை, சமணக் கலைஞர்கள் பார்சுவநாத நயினாரிடமும் சக்ரவர்த்தி நயினாரிடமும் கேட்டு அறிந்தார்.

பௌத்த மூலங்கள் பாலி மொழியில் உள்ளன. இதை அறிந்து கொள்ளும் பேரவா திரு.வி.க. விற்கு எழுந்தது. இச்சமயம் இராயப்பேட்டையில் சாக்கிய பௌத்த சங்கம் ஒன்று அயோத்தி தாஸ் பண்டிதரால் நடத்தப்பட்டது. அங்கு இலங்கைத் தமிழரான ஒரு பிக்ஷு வந்தார். அவர் போதித்த திரிபிடகமும் வேறு நூல்களும் கேட்டுத் தெளிந்தார், திரு.வி.க.

ஷேக்ஸ்பியர், மில்டன், வொர்ட்ஸ் ஓர்த், ஷெல்லி, கீட்ஸ், பைரன், கோல்ரிட்ஜ், டென்னிசன் முதலிய பெருங்கவிஞர்களின் கவிச் சுவையை ஷேக்ஸ்பியர்களின் சொற்பொழிவுகள் மூலம் அறிந்து மகிழ்ந்தார். பச்சையப்பன் கல்லூரி முதல்வராயிருந்த ரோலோ அவர்களின் ஆங்கில உரையை மெய்ம்மறந்து கேட்டு இன்புற்றார் திரு.வி.க.

ஆயிரம் விளக்குப் பள்ளியில் ஆசிரியப் பணியில் இருந்தபோது அஞ்சல் அலுவலகத்தில் செயலாற்றிய திரு அப்துல்கரீம் என்பவர் மூலம் திருக்குரான் பற்றிய சாரத்தைத் தமிழில் அறிந்தார். அப்போது வெஸ்லி கல்லூரியில் பணியாற்றிய அரபு பண்டிதரிடத்தும் திருக்குரான் பற்றிய ஆராய்ச்சிகளை அறிந்து கொண்டார்.

ஒரு சமயம், மேல்நாட்டுப் பாதிரிமாருடன் மாமல்லபுரம் சென்றார் திரு.வி.க. ஒரு ஸ்காட்ச் அம்மையார் ஓவியயானையின் அழகை உளம் உருகி ரசிப்பதைக் கண்டு, திரு.வி.க.வும் ஓவியப் பித்தரானார். புலன்களை ஒன்ற வைக்கும் பேராற்றல் ஓவியக் கலைக்கு உள்ளதை உணர்ந்த திரு.வி.க., ''வீடுதோறும் தெருவு தோறும், நாடுதோறும் ஓவியக் கல்வி பெருகி நின்றால், உலகம் அமைதி இன்பத்தில் திளைத்தல் ஒருதலை'' என்று குறிப்பிடுகின்றார். ஓவியக் கலையில் அவருக்குள்ள ஆர்வமும் ஓவியக் கலையின் பயனாக நாடு எய்தும் நலனில் அவருக்குள்ள நம்பிக்கையும் இதனால் வெளிப்படுகின்றது. ஓவியர் கனகசபாபதி, ஓவியர் திரு கோ. வடிவேல் ஆகியோரின் ஓவியங்களைப் பாராட்டி 'நவசக்தி'யில் கட்டுரை வரைந்து சிறப்பித்துள்ளார்.

திரு.வி.க.வின் தந்தையார் ஓர் இசைப்புலவர்; அவர் மறைந்த பின்னர், திரு.வி.க., இசையயிலும் ஆர்வத்தில் சிலரிடம் சென்று, பின்னர் முயற்சியைக் கைவிட்டார். இசையைக் கேட்பதில் தணியா வேட்கை கொண்டார். இசையின் சிறப்பைக் கூட்டங்களில் அறிவுறுத்தினார்; நூல்களில் எழுதினார். 'முருகன் அல்லது அழகு' என்ற நூலில் இசையின் மாட்சியை எழில்படக் காட்டியுள்ளார். கீர்த்தனை இசை, தேவாரப் பண் இவற்றைச் செவி மடுப்பதில் பேரார்வம் கொண்டார்.

திரு.வி.க.வின் இளமைக்கல்வி, பள்ளி இறுதி வகுப்பும் நிறைவு பெறாதது. அவ்வாறாயினும் பிற்காலத்தில் தமிழ் இலக்கிய, இலக்கணங்களில் தேர்ந்த புலமையும் ஆங்கிலத்தில்சீர் பெற்றஞானமும் பிற சமயங்களிலும் சைவ, வைணவ சமயங்களில் ஆழ்ந்த

பறவைகளின் பல்வேறு எலும்பு
களின் வெட்டுத் தோற்றங்கள்
விளக்குகின்றன.

பறவைகளின் இறக்கைகள்
பறப்பதற்கு ஏற்றவாறு
துள்ளதை பல வகைப்
களின் இறக்கைகள் விவ
றன. பறவைகளின் கா
அவைவாழுமிடத்திற்கேற்
அமைந்துள்ளதைப்பலவ
வைகளின் கால்கள் படங்க
காட்சிக்குஅமைக்கப்பட்டு
பறவைகளின் அலகுகள்
றின் உணவுப் பழக்கத்திற்
வாறு அமைந்துள்ளதைப்
வகைப் பறவைகளின்
யுடன் கூடிய அலகுகள்
கின்றன.

ஊர்வன இனப்பிராண
அரணை, பாம்பு, ஓ
உடும்பு, முதலை, ஆமை
வற்றின் உடலின் வெ
அமைப்பை விளக்க அர
பாம்பு, ஓணான், உடும்பு, மு
ஆகியவற்றின் தோல்களும்
யின் ஓடுகளும் படங்க
அமைக்கப்பட்டுள்ளன. மீ
தில் பல்வேறு மீன்களின்
புறத் தோலமைப்பை
பதப்படுத்தப்பட்ட சில
களும், சில மீன்களின்
களும் வரைபடங்களுடன்
யில் உள்ளன. இரு வாழ்
களான தவளை, தேரை
வற்றின் தோலமைப்பில்
வேறுபாடுகளை அவற்றின்







அறிவுத்திறனும் அவருக்கு இருந்ததற்குக் காரணம், அவர் இளமையில் இவ்வாறு பலதிறப்பட்ட நூல்களைப் படித்தும் கேட்டும் புலமையைப் பெருக்கிக் கொண்டதாகும்.

''யான் கற்றன சில. கேட்டன சில. இரண்டும் எனக்குச் செல்வமாயின. பொருட்செல்வம் பெறாத எனக்குக் கல்விச் செல்வமே சிறிது வாய்த்தது. கல்விச் செல்வம் என்னைத் தொண்டனாக்கியது; தமிழ்த் தொண்டனாக்கிற்று'' என்று உரைக்கும் திரு. வி.க. வின் பரந்த உளப்பாங்கை அறிந்து வியக்கின்றோம்.

பள்ளிப் படிப்பைத் திரு.வி.க. விட்ட சில தினங்களில் அவரது தந்தையார் மறைந்தார். கிராமத்திலிருந்து வந்து கொண்டிருந்த நெல்லும் நின்றுவிட்டது. வருவாய்க்குறைவால் குடும்பம் நெருக்கடியில் உழன்றது.

இந்நிலையில் இவரது தமையனாரின் மாமனார் ஆலம்பாக்கம் சிதம்பரம் மூலமாக 'பின்னி அண்டு கம்பெனி'யில் கணக்கர் வேலை கிடைத்தது. அங்குள்ள தலைமைக் கணக்கர் ஒரு கிழவர். அவர்க்கு இவரது வரவு பிடிக்கவில்லை. காரணம், இவர் மேலதிகாரியின் சிபாரிசு மூலம் நுழைந்ததுதான். இந்நிலையை மேலதிகாரிக்குக் கூறியிருந்தால் இவரது வேலையைக் காத்துக் கொண்டிருக்க முடியும். ஆனால் கோள் மூட்ட விரும்பவில்லை. வேலையினின்றும் நின்று விட்டார்.

திரும்பவும் சிதம்பரம் மூலமாக 'வால்காட்பிரதர்ஸ்'க்குப்போயினார். எழுதும் பணி (Copyist) தருவதாகச் சொன்னார் அங்குள்ள நிர்வாகி. ''அது வேண்டாம்'' என்றார் திரு.வி.க. அவர் ''இவ்விளைஞன் ஒருவரிடத்தில் ஊழியஞ் செய்பவனாகக் காணப்படவில்லை'' என்று அவருக்குச் சில நன்மொழி பகர்ந்து அனுப்பினார்.

பின்னர் ஸ்மித் கம்பெனியில் வேலை தேடப்பட்டது. அங்கே கதிரைவேல் பகைவர் ஒருவர் இருந்தார். அவர் கத்திரி இட்டு விட்டார். வேலை கிடைக்கவில்லை.

இப்போது ஸ்பென்ஸரில் வேலைக்கு ஓர் ஆள் தேவை என்று அறிந்து அங்கு ஏகினர். பார்க்கர் என்பவர் அவரைச் சோதனை செய்தார். திரு.வி.க. தனது கையெழுத்தின்சிறுமையை வெளியிட்டார்.

''எல்லார்க்கும் கையெழுத்து நன்றாயமையுமா? என் கையெழுத்தைப் பாரும் ,'' என்றார்.

''நல்ல காலம்'', என்று மகிழ்ச்சியுற்றார் திரு.வி.க. வேலை கிடைத்தது. 1908 ஆம் ஆண்டு வரை அங்கிருந்தார்.

சுதந்திர இயக்கம் அவரையும் தாக்கிற்று. பத்திரிகைச் செய்திகளைப் படித்து அங்கு பணி புரிந்து வந்த மற்றவர்களிடமும் விளக்கிச் சொல்லுவார். இஃது ஆங்கிலேய அதிகாரிகளுக்குப் பிடிக்காதல்லவா? ஒரு நாள் காலை நிர்வாக இயக்குநர் அவரை அழைத்து எச்சரிக்கை செய்தார். அந்த எச்சரிக்கை அவரது நெஞ்சைப் பிளந்தது. அன்று பகல் வைஜயந்தி அச்சுக்கூடம் சென்று தமையனாரிடம் நடந்ததைக் கூறி, வேலையை விட்டு நீங்குவதாகச் சொல்லி, அன்றே வேலையை விட்டு வீடு வந்து சேர்ந்தார்.

நிலைமையை ஆழச் சிந்தித்து அவரது தமையனாரும் இன்னொருவரும் சேர்ந்து, 'உமாபதி குருப்பிரகாசம் பிரஸ்' என்ற பெயரில் அச்சுக் கூடம் ஒன்றை அமைத்தனர். அஃது ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் இயங்கியது. திரு.வி.க. பார்வை பெற்ற திருமந்திரம் பதிப்பிக்கப் பெற்றது. அவர் எழுதிய விசேடக் குறிப்புரையுடன் பெரியபுராணம் சஞ்சிகை சஞ்சிகையாக வெளியிடப்பட்டது. எனினும் பெரு நஷ்டமே விளைந்தது. அவரது அன்னையார் நகையும் இழக்கப்பட்டது. இதுதான் கண்ட பலன். அச்சுக் கூடம் விற்கப்பட்டது.

''அந்நாளில் எங்கள் குடும்பம் புயலிடைப் பட்ட கலமாயிற்று. எனது பெரும்பொழுது கடலோரத்தில் கழியும். கடற்கரை எனக்கு ஆசிரமமாயிற்று. தனியே ஓரிடந் தேடி அமர்வேன். நீலமேனியனை - கமலக் கண்ணனை - பவள வாயனை - என்னாருயிர் பார்த்த சாரதியை - நினைந்து நினைந்து உருகுவேன், ஆறுதலுண்டாகும்''

மாதங்கள் நகர்ந்தன. ஆண்டு 1910 வந்தது. திரு.வி.க.வின் பழைய நண்பர் டானியல் சிங் என்பவர், ஆயிரம் விளக்கு வெஸ்லியன் மிஷன் பள்ளியில் ஆசிரியர் பதவி காலியிருக்கிறதென்று கூற, இருவரும்சேர்ந்து வேலையினைப் பெற்றுக் கொண்டனர். டானியல் சிங் மூன்றாம் வகுப்பு ஆசிரியராகவும், திரு.வி.க. ஐந்தாம் வகுப்பு ஆசிரியராகவும் அமர்த்தப்பட்டார்கள்.

ஆறாண்டுகள் இங்கே பணி புரிந்தார்.

சேர்ந்த ஒரு வாரத்திற்குள் ஒரு நாள் மாலை தலைமை ஆசிரியர் ஜான்ரத்தினம் திரு.வி.க.வைப் பள்ளியின் ஒரு பாகத்திலுள்ள அவர் வீட்டிற்குஅழைத்துச் சென்றார். பலவற்றைப் பற்றிப் பேசினர்.

''ஏதேனும் அகப் பாட்டொன்று சொல்லிப் பொருள் விரியுங்கள்'', என்றார் தலைமையாசிரியர்.

''ஆனந்த வெள்ளத்து..... '' என்ற திருக்கோவைப் பாட்டு நினைவுக்கு வர, அதனை விரித்து விளம்பினார் திரு.வி.க.

தமிழில் மூழ்கித் திளைத்தார் தலைமையாசிரியர் ஜான்ரத்தினம்.

மணி எட்டினை எட்டி விட்டதால் பொருள் சொல்வதை நிறுத்தினார் திரு.வி.க.

''ஏன், ''என்றார் ஜான்ரத்தினம்.



''உங்கட்கு எவ்வளவோ வேலையிருக்கும். யான் நீண்ட நேரம் போக்கினேன்,'' என்றார் திரு.வி.க.

''தமிழுக்கு மணிக் கணக்கு ஏது?'' என்று இன்சொல் இயம்பினார் ஜான்ரத்தினம்.

''தமிழறிந்த அன்பரிடத்தில் பணி செய்யும் பேறு கிடைத்தமைக்குத் திருவருளை வழுத்துகிறேன்,'' என்று சொல்லிவிட்டு எழுந்தார் திரு.வி.க.

''யான் தமிழ்ப் புலவனல்லன். ஒரு தமிழ்ப் புலவரை இப்பள்ளி பெற்றமை குறித்து ஆண்டவனுக்கு நன்றி செலுத்துகிறேன்'' என்று விடையிறுத்தார் தலைமையாசிரியர்.

பள்ளியின் சூழ்நிலை இன்பம் பயப்பதாகவே அமைந்திருந்தது. அதிகாரம் ஆக்கிரமிப்பு செய்யாமல், அன்பே ஆட்சி செய்து வந்தது. ஆசிரியர்களும் சலியாது உழைத்து வந்தனர்.

''எங்களுக்குரிய வேலைகளை மட்டும் செய்யும் அளவில் நில்லோம்; குறைபட்டுள்ள வேறு வேறு வேலைகளிலுந் தலைப்படுவோம். வேலையைக் குறித்துக் கவலையோ சோர்வோ சலிப்போ தோன்றுவதில்லை. பள்ளிக்கூடத்துக்குப் பெருமை தேட வேண்டுமென்ற கருத்துடன் நாங்கள் உழைப்போம்''.

ஒருமுறை பள்ளியில் சோதனை செய்ய அதிகாரி வந்திருந்தார். அவரைக் கண்டால் யாவர்க்கும் அச்சமும் திகிலும் உண்டாகும். அவரை ஆசிரியர்கள் 'புலி' என்றே அழைப்பர்.

புலி வந்தது. வகுப்புகளைக் கலக்கியது. திரு.வி.க.வின் வகுப்புக்கும் வந்தது.

'''இவ்வகுப்புக்கு டிக்டேஷன் போடுக,'' என்றார் புலியார்.

''அவ்வாறே செய்தார் திரு. வி.க. புலியார் அடுத்த வகுப்புக்குச் சென்றார்.

புலியார் இட்டபணி முடிந்தவுடன் திரு.வி.க. எதிரேயுள்ள தன் வகுப்புக்குச் சென்று விட்டார்.

புலி திரும்பி நான்காம் வகுப்புக்கு வந்தது. திரு.வி.க., அங்கு இல்லை. எதிர்ப் பக்கத்திலுள்ள வகுப்பில் இருந்தார்.

அவரைக் கை காட்டி அழைத்தது புலி.

''ஏன் அவ்வகுப்புக்குப் போனீர்,'' என்றார் புலியார்.

''அஃது என் வகுப்பு,'' என்றார் திரு.வி.க.

''யான் உம்மை இங்கே அழைத்து ஒரு வேலை கொடுத்தேன். மீண்டும் என் கட்டளை பிறக்கும் வரை நீர் இவ்வகுப்பிலேயே இருத்தல் வேண்டும். நீர் உமது வகுப்புக்குச் சென்றது தவறு, ''என்று கண்டிப்புரை வழங்கினார் புலியார்.

பின்னர் பலகைகளை எடுத்தார். அவைகள் திருத்தப்படாமல் இருப்பதனைக் கண்டார்.

''ஏன் திருத்தவில்லை?'' கேட்டது புலி.

''திருத்தும்படி நீங்கள்சொல்லவில்லை,'' என்றார் திரு.வி.க.

''டிக்டேஷன் என்றால் அதில் திருத்தலும் அடங்கும். இது தெரியாதா !''என்று கடாவியது புலி.

திரு.வி.க. ஒன்றும் பேசவில்லை.

ஆங்கொன்றும் ஈங்கொன்றுமாகப் பலகைகளை எடுத்துப் பார்த்துவிட்டுப் ''போம்'' என்றது புலி.

திரு.வி.க. தன் வகுப்புக்குச் சென்றார்.

புலி இவ்வகுப்புக்கும் அவ்வகுப்புக்கும் ஓடி ஓடிச் சென்று ஆசிரியன்மாரைக் குலை நடுங்கச் செய்தது.

முதல் நாள் முடிந்தது. இரண்டாம் நாள் வந்தது. புலியாரும் போந்தார்.



''என்ன பாடம்?'' கேட்டார் புலியார்.

''கணக்கு,'' என்றார் திரு.வி.க.

கரும்பலகையில் எழுதியிருந்த கணக்கை அழித்தது புலி. வேறு கணக்கைப் பொறித்தது. ''சீக்கிரம், சீக்கிரம்'' என்று மாணாக்கர்களை விரட்டியது. சோதித்தது விடையை. முடிந்தது வேலை.

மனக் கணக்கொன்று போட்டார் புலியார். விடையை அவரே பார்வையிட்டார்.

''எம் முறையில் விடை கண்டாய்?'', வினவினார் ஒரு மாணாக்கனை அருகில் அழைத்து. அவனும் முறையைச்சொன்னான். அடுத்த மாணாக்கனை அழைத்துக் கேட்டார். அவனும் முறையைச் சொன்னான்.

''இம்முறை உம்மால் போதிக்கப்பட்டதா?'', கேட்டார் புலியார்.

''ஆம்'', என்று பகர்ந்தார் திரு.வி.க.

''முறை தவறு'' என்றார் புலியார்.

''மனக் கணக்குக்குரிய முறைகள் பலவிதம். அவை வகுப்புக்கேற்றவாறு போதிக்கப்படும்'', என்றார் திரு.வி.க.

''கணக்கில் நீர் பட்டம் பெற்றவரா? பதக்கம் பெற்றவரா?'' என்று புலியார் சீறியதோடு நில்லாமல், ''யான் சொல்வதைக் கேளும்'' என்று தமது முறையை வெளியிட்டார்.

''இம்முறை இவ்வகுப்புக்குப் பொருந்தியதன்று'' - பட்டெனப் பகர்ந்தார் திரு.வி.க.

''அப்படியா'', உறுமியது புலி. உறுமி விட்டு வெளியே சென்றது.

''புலி பூனையாகுமா, சிங்கமாகுமா?''-இவ்வாறு எண்ணினார் திரு.வி.க.

'என்னைத் தாங்கள் பள்ளியை விடுத்து அகற்றலாம் அதைப் பற்றிய கவலை எனக்குக் கிடையாது. யான் அன்புக்கு எளியன். அநியாய அதிகாரத்துக்கு எளியனல்லன். அதிகாரத்துக்கு அஞ்சி மானம் விற்கும் நீர்மையை என் பிறவி பெறவில்லை. என் முறையை அதிகாரத் திமிரால் தாங்கள் அலட்சியஞ்செய்தல் கூடாது. எந்த மேடையிலும் என் முறை



# காலத்தை வென்ற கலைவாணர்

நாடு வாழ, சமுதாயம் சீர் திருந்த கலைத்துறை மூலம் நற் பணியாற்றிய தனிப் பெரும் கலையுலக மேதை - நகைச்சுவை மன்னர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் நினைவு நாள் 30.8.83 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் கொண்டாடப்பட்டது.

'கலைமாமணி' கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினர் வில்லிசையுடன் விழா துவங்கியது. திரைப் பட நடிகர் 'கலைமாமணி' சி.எஸ். பாண்டியன் குழுவினர் கலைவாணர் வாழ்க்கையைச் சித்திரிக்கும் கலை நிகழ்ச்சியை நடத்தினர். தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றச் செயலாளர் 'கலைமாமணி' டி.வி.நாராயணசாமி வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி திரு.பு.ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் தமது தலைமையுரையில்:

''கலைவாணர் என்.எஸ்.கே. நடிகர் மட்டுமல்ல. சிந்தனையாளர் - சமுதாயத்தைச் சீர்திருத்த வந்த சீர்திருத்தவாதி. சமுதாயத்திற்குத் தன்னையே அர்ப்பணித்தவர் கலைவாணர். அப்படிப்பட்ட தன்னலம் கருதாத தகைமையாளரை நாம் நினைவு கூர்வது மிகவும் பொருத்தமானதாகும்: சிரித்து வாழ வேண்டும், பலர் சிரிக்க வாழக் கூடாது என்ற இலட்சியத்தைக் கொண்டவராகத் திகழ்ந்தார். அப்படிப்பட்ட மேதை கலைவாணர் என்.எஸ். கே. நினைவு நாளினை வருகிற ஆண்டில் இன்னும் சிறப்பாக நடத்தத் திட்டமிட்டிருக்கிறோம்'' என்று குறிப்பிட்டார்.

விழாவைத் துவக்கி வைத்த மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில்-

''தாழ்ந்து கிடந்த சமுதாயத்தை முன்னேற்றுவதற்காக வாழ்ந்தவர் கலைவாணர். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோருடன் தொடர்புகொண்டிருந்த போது, வாய்ப்புக்கள் கிடைத்தபோதெல்லாம் அவர்களது கருத்துகளை எடுத்துச் சொன்னார். அவர் நடிகராக மட்டுமல்லாமல் - மிகச் சிறந்த கலைஞராக, மக்கள் கலைஞராக வாழ்ந்தார். அவரை மக்கள் சொத்தாக அங்கீகரித்து மதிப்புத் தந்துள்ளோம்.

நிகழ்ச்சித் தொகுப்பு :

**ஜீ. ஆனந்தன்**

''மக்களுக்கு விஞ்ஞான மனப் பான்மையை வளர்ப்பதில் முன்னணியில் இருந்தவர் கலைவாணர் விஞ்ஞான மனப்பான்மையோடு அவர்களைச் சிந்திக்கும்படி தூண்டியவர். விஞ்ஞான ரீதியில் சிந்தித்தால் நிச்சயமாக நமது முடிவுகள் தவறாக இருக்காது. கலைவாணரின் 'கிந்தனார் நாடகம்' நந்தனார் நாடகத்திற்குப் போட்டியானது அல்ல. நந்தனார் நாடகத்தின் மூலம் தவறான மூட நம்பிக்கைகள் விளைந்திருக்கலாம். அதை எதிர்த்து மக்களுக்கு நல்ல அறிவினைப்புகட்ட வேண்டும் என்ற முயற்சிதான் கலைவாணரின் கிந்தனார் நாடகம்.

''அவரை நினைக்கும் இந்த நேரத்தில் கலைஞராக இருந்தாலும் சரி. நமது நோக்கம், மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்று எண்ணிச் செயல்பட வேண்டும். இதை ஒரு உறுதியாகக் கொண்டு செய்யவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி கௌரவ இயக்குநர் கலைமாமணி சி.எஸ்.ஜெயராமன் அவர்கள் பேசுகையில், ''கலைவாணர் தமிழ்நாட்டிற்குக் கிடைத்த ஒரு பெரிய மேதை. அவர் தமிழுக்கும் கலைத்துறைக்கும் ஆற்றிய அரும்பணிகளை உலகம் உள்ளவரை சொல்லிப் பெருமைப் பட்டுக் கொள்ளலாம்'' என்றார்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் டாக்டர் ஏ. என். பெருமான் அவர்கள் பேசுகையில், ''கலைவாணர் என்.எஸ்.கே. மக்களைச் சிரிக்கவும், சிந்திக்கவும் வைப்பவர். பிறரைச் சிரிக்க வைத்த அவர் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையின் 70-வது ஆண்டு விழாவில் 'கவிமணி'யின் வறுமையை கண்டு வருந்திக் கண்ணீர் வடித்தார். இப்படிப்பட்ட இரக்க குணம் - வள்ளல் தனம் கொண்டவர் கலைவாணர்'' என்றார்.





கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனுடன் செந்தமிழ் விறலி டி.ஏ.மதுரம்.

சுற்றுலாத்துறை இயக்குநர் திரு எஸ். டி. காசிராஜன், ஐ.ஏ.எஸ். அவர்கள் பேசுகையில், ''மக்கள் நல்வாழ்வு வாழக் கலைவாணர் அரும் பணியாற்றினார். அவரது கடுமையான உழைப்புக்குப் பலன் கிடைத்தது. தமிழ் மக்களிடையே சீர்திருத்தக் கருத்தைப் பரப்பியவர். தந்தை பெரியார் போன்ற தலைவர்களாலேயே கலைவாணர் பாராட்டப் பட்டிருக்கிறார்'' என்றார்.

திரைப்பட நடிகை கலைமாமணி திருமதி எம்.என்.ராஜம் அவர்கள் பேசுகையில், ''கலைவாணரின் சிறப்புக்களை வாழ்நாள் முழுவதும் சொல்லிக் கொண்டிருக்கலாம். ஏழை-எளிய மக்களுக்குப் பெரிதும் உதவியிருக்கிறார். கொடை வள்ளல் குணம் படைத்தவர். பெண்ணுக்குச் சம உரிமை வேண்டும் என்பதை வற்புறுத்தினார் கலைவாணர் என்.எஸ்.கே. கலைவாணர் இடத்தை நிரப்ப இன்னும் யாரும் வரவில்லை'' என்றார்.



கவிஞர் தஞ்சைவாணன் அவர்கள் பேசுகையில், ''கலைவாணர் வறுமை தன்னை வாட்டிய காலத்திலும் பிறருக்கு உதவுவதில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட உத்தமர்'' என்றார்.

மொழி பெயர்ப்புத்துறை இயக்குநர் டாக்டர் அவ்வை நடராஜன் அவர்கள் பேசுகையில்: ''கலைவாணர் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் நீங்கா இடம் பெற்றவர்'' என்றார்.

தமிழ்ப் பழங்கலை இயக்கக இயக்குநர் திரு திருக்குறள் முனுசாமி அவர்கள் பேசுகையில்: ''கலைவாணர் ஒரு பல் கலைக்கழகம். அவர் பிறவி வள்ளல். அவரது சீர்திருத்தக் கருத்துக்கள் இன்றும் நிலை பெற்று நிற்கின்றன'' என்றார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் செயலாளர் திரு.டி.வி. நாராயணசாமி அவர்கள் நன்றி கூறினார்.

**ஈழ மண்டலத்துக்கு உணவளித்த சோழ மண்டலம்**

**கண்டிநாடு பஞ்சம்பட்டகாலத்து கப்பலாயிரத்தில் நெல்லனுப்பிக் காத்த சடையவள்ளலை வியந்து கண்டி நாட்டரசனான பரராசசிங்கன் பாடியது.**

**இரவுநண்பகல் ஆகிலென்?பகல் இருளறாஇரவு ஆகிலென்?**
**இரவியெண்திசை மாறிலென்? கடலேழும் ஏறிலென்? வற்றிலென்?**
**மரபுதங்கிய முறைமை பேணிய மன்னர் போகிலென்? ஆகிலென்?**
**வளமையின்புறு சோழமண்டல வாழ்க்கை காரணமாகவே!**

**கருதுசெம் பொன் அம்பலத்தில்ஓர் கடவுள்நின்று நடிக்குமே!**
**காவிரித்திரு நதியிலே ஒரு கருணைமாமுகில் துயிலுமே!**
**திருவுயர்ந்திடு புதுவையம்பதி தங்குமானிய சேகரன்**
**சங்கரன்தரு சடையனென்றொரு தருமதேவதை வாழவே!**

(மு. இராகவையங்கார் தொகுத்த பெருந்தொகை 1135-வது பாடல்)

**தகவல்: —டாக்டர் ந. சஞ்சீவி**

பொருந்தியதென்பதை வலியுறுத்தச் சித்தமாயிருக்கிறேன்', என்ற கருத்துச்செறிய ஒரு கடிதத்தில் எழுதி அதைப் புலியாகிய ஆய்வாளரிடம் சேர்க்கும்படி ஒரு பையனிடம் கொடுத்து அனுப்பி விட்டார் திரு.வி.க.

மத்தியானம் மணி அடித்தது. உணவு கொள்ள யாவரும் சென்றனர். திரு.வி.க.வும் சாப்பிட்டு விட்டுத் தோட்டத்திலுள்ள படியொன்றில் அமர்ந்து எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தார்.

ஓர் ஆள் ஓடி வந்து தலைமை ஆசிரியர் அழைக்கிறார் என்று திரு.வி.க.விடம் சொன்னான். திரு.வி.க. சென்றார். அங்கே தலைமையாசிரியருடன் ஆய்வாளர் காணப்பட்டார்.

''இவர் இன்ஸ்பெக்டர். நாம் ஆசிரியர்'', என்று தொடங்கினார் தலைமை ஆசிரியர்.

''அதனால்'', குறுக்கிட்டார் திரு.வி.க.

''தலைமை ஆசிரியர் வார்த்தை முடியட்டும்'', என்றார் ஆய்வாளர்.

திரு.வி.க. பேச்சை நிறுத்திக் கொண்டார்.

''யானைக்கும் அடி ச்றுக்கும். மறப்பு என்பது எல்லார்க்கும் உண்டு. இன்ஸ்பெக்டர் நான்காம் வகுப்பென்ற நினைவுடன் உம்முடன் வாது புரிந்தனர். கடிதங் கிடைத்த பின்னரே வகுப்பு நினைவு உண்டாயிற்றென்று தெரிகிறது'', என்று தலைமை ஆசிரியர் கூறியதும், ''போதும்'' என்று கூறி ஆய்வாளரைப் பார்த்து ''மன்னிக்க'' என்று சொன்னார் திரு.வி.க.

''யானல்லவோ மன்னிப்புக் கேட்டல் வேண்டும்'' என்று ஆய்வாளர் செப்பியதோடன்றி, திரு.வி.க. கடிதம் வரைந்ததையும் பாராட்டினார்.

''யான் மன்னிப்புவரை செல்பவனல்லன். இனித் தங்கள் அன்புக்கு எளியன்,'' என்று புகன்றார் திரு.வி.க.

''இவையெல்லாம் அந்தரங்கம்'' என்று சொன்னார் தலைமை ஆசிரியர்.

அன்பு வென்றது. அதிகாரம் வீழ்ந்தது. ஆண்மை தலை நிமிர்ந்தது. ஆணவம் மண்ணைக் கவ்வியது.

திரு.வி.க. திருமணப் பருவம் அடைந்ததும் திருமணம் செய்து கொள்ளப் பற்றில்லாமலே இருந்தார். இதனை அறிந்த அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தரம் திரு.வி.க.வை ஒரு மடத்துக்கு அனுப்ப விழைந்துஅவரிடம் கேட்டார். இச் செய்தியை ஜான் ரத்தினம் அவர்களிடம் சொன்னார் திரு.வி.க; அவர் தோட்டத்திலுள்ள மரமொன்றைக் காட்டி, ''அம்மரம் எவ்வெவ்வழியில் பயன்படுகிறதென்பதை உங்களுக்கு விரித்துச் சொல்ல வேண்டுவதில்லை. எத்தனை பறவைகள் அதில் தங்குகின்றன, அதனடியில் எத்தனை மாடு, கன்றுகள் படுத்திருக்கின்றன, பாருங்கள்! நீங்கள் இப்பள்ளியில் நல்ல மரமாயிருக்கிறீர்கள். நாடோறும் எவ்வளவு பிள்ளைகள் உங்களிடத்தில் கூடுகிறார்கள்! அவர்கட்கெல்லாம் நீங்கள் பயன்படுகிறீர்கள். மடத்தில் இவ்வளவு உயிர்கட்கு நீங்கள் பயன்படுவீர்களா? நீங்கள் மட்டும் ஒரு வேளை நலம் பெறலாம். இவைகளை எல்லாம் கூர்ந்து உன்னி உங்கள் விருப்பப்படி நடக்க'' என்றார். அவரைப் போல் பலரும் தொண்டுக்குத் தனி வாழ்க்கை கூடாது, மண வாழ்க்கை வேண்டுமென வலியுறுத்தினர்.

மணம் செய்துகொள்ள இசைந்தார், திரு.வி.க; திருச்சி கிருஷ்ணசாமி அவர்களின் மகள் கமலாம்பிகை அம்மையாரை 13.9.1912ல் திருமணம் செய்து கொண்டார். இல்லற வாழ்வு நீண்டகாலம் நீடிக்க வில்லை. இரண்டு குழந்தைகளை ஈன்ற இவரது துணைவியார், பெற்ற குழந்தைகள் இரண்டும் இளமையிலேயே மறைந்த கொடுமையால் மெலிந்து வருந்தினார். ஆறு ஆண்டுகள் இல்லற வாழ்விற்குப் பின்னர், நோய் வாய்ப்பட்டு 1918ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார்.

1916ஆம் ஆண்டு ஜூன் இறுதியில் வெஸ்லி கல்லூரித்தலைமைத் தமிழாசிரியர் பதவியை திரு.வி.க ஏற்றார். அக்கல்லூரியில் ஒன்றரை ஆண்டுகள் தமிழ்த் தொண்டாற்றி அப்பதவியை விடுத்தார். 7.12.1917ல் 'தேசபக்தன்' ஆசிரியரானார்; இரண்டரை ஆண்டுகளுக்குப் பின்னர், 'நவசக்தி' ஆசிரியர் பொறுப்பேற்று, இருபது ஆண்டுகள் பணியாற்றினார்.

இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் தொகுத்துப்பார்க்கின்றபொழுது திரு.வி.க. அவர்களின் இளமையும் கல்வியும் இக்கால இளைஞர்களுக்கு மிகவும் எழுச்சி ஊட்டத் தக்க அளவில் அமைந்திருக்கின்றன என்பதில் ஐயமில்லை.



# கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுறவு ரப்பர் தொழிற்சாலை

**இரா. நடேசன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**கன்னியாகுமரி மாவட்டம்.**

கன்னியாகுமரி மாவட்டம் விவசாயம், கல்வி, ஆகிய துறைகளில் முன்னேறியிருந்தும், தொழில் துறையைப் பொறுத்த மட்டில் மிகவும் பின் தங்கிய மாவட்டமாகவே இருந்துவருகிறது.

இம்மாவட்டத்தில் ரப்பர் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. ரப்பரை அடிப்படையாகக் கொண்ட தொழில் நிறுவனங்கள் இல்லாததால், ரப்பரை முழு அளவில் பயன்படுத்த முடியவில்லை.



குமரி மாவட்டத்தில் சுமார் 4,372 எக்டேர் பரப்பளவில், ஆண்டொன்றிற்கு 12,000 டன் ரப்பர் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவிலேயே, ஏன் உலகத்திலேயே முதல் தரமான ரப்பர் குமரி மாவட்டத்தில் தான் கிடைக்கிறது. இதில் அரசு ரப்பர், தோட்டங்களைத் தவிர சுமார் 100க்கு மேற்பட்ட ரப்பர் பயிரிடும் சிறிய விவசாயிகள் இருக்கிறார்கள்.

ரப்பர் பயிரிடும் சிறிய விவசாயிகள் தாங்கள் தயாரிக்கும் கச்சா ரப்பரை நல்ல விலைக்கு விற்கவும், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், தொழில்துறையின் பின் தங்கிய இம்மாவட்டத்தைத் தொழில் வளமாக்கவும், கூட்டுறவு முறையில் ரப்பர் பயிரிடும் சிறிய விவசாயிகளையே அங்கத்தினர்களாகக் கொண்ட ஒரு கூட்டுறவு ரப்பர் தொழிற்சாலை அமைக்கத் திட்டமிடப்பட்டு அது செயற்படுத்தப்பட்டு, அதனுடைய கால்கோள் விழா 13.6.83 அன்று நடைபெற்றது.

கால்கோள் விழாவிற்கு, குமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எல்.கே.திரிபாதி . இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.முத்துசாமி அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

விழாவில் தொழில்துறை இயக்குநர் திரு சிவசுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் முத்துக்கிருஷ்ணன், டி.வி.மணி ஆகியோரும் வனப்பாதுகாவலர் திரு. சித்தரப்பு, நேசமணி போக்குவரத்துக் கழக நிர்வாகஇயக்குநர் திரு.அரசன்கோவன், சட்ட மேலவை உறுப்பினர் திரு.சங்கரலிங்கம் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டென்னிஸ் அவர்கள் வரவேற்புரையாற்ற, திரு.வில்சன் நன்றியுரையாற்றினார்.

சங்க உறுப்பினர்களான ரப்பர் பயிரிடும் சிறிய விவசாயிகளிடம் இருந்து ரப்பரை நியாயவிலை கொடுத்து வாங்குதல், இந்த ரப்பரைக் கொண்டு மோட்டார் வாகன டயர்களுக்குப் பயன் படுத்தக் கூடிய ''திரட் ரப்பர்'' ( Rubber Tread ) தயார் செய்தல். உற்பத்தி செய்யும் திரட் ரப்பரைத் தமிழ்நாடு அரசு நிறுவனங்களான போக்குவரத்துக் கழகங்களுக்கும் இதர நிறுவனங்களுக்கும் விநியோகித்தல், இந்தத் தொழிற்சாலையின் மூலம்வேலை வாய்ப்பை ஓரளவு பெருக்கி, படித்த இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்தல், உறுப்பினர்களின் நலன் கருதிப் பல உதவிகளைச் செய்து சிறிய விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படச் செய்தல் ஆகியவை இச்சங்கத்தின் நோக்கங்களாகும்.

தற்பொழுது 171 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். தொழிற்சாலை எளிதில் தொழில்



துவங்கத் தமிழ்நாடு அரசுப் பங்கீடாக ரூபாய் இரண்டு இலட்சம் வழங்கியுள்ளது. உறுப்பினர்கள் பங்கு மூலதனமாக ரூ. 54,675 வழங்கியுள்ளார்கள்.

இந்த ரப்பர் தொழிற்சாலையில் ஆண்டு ஒன்றிற்கு 360 டன் கச்சா ரப்பர் தேவைப்படும். 300 டன் திரட் ரப்பர் உற்பத்தி செய்யப்படும்.

தொழிற்சாலைக்கு நிரந்தர மூலதனமாகவும், நடைமுறைமூலதனமாகவும் ரூபாய் 35 இலட்சம் தேவைப்படுகிறது. இதில் அரசு மற்றும் உறுப்பினர்கள் மூலதனமாகவும் தவிர, தேவைப்படும் நிதியினைத்தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்தும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்தும் கடனாகப் பெற்றுக் கொண்டு செயல்படும்.

## பசுமையாக மாறிய வறண்ட பகுதி



சென்னைக்கு அருகிலுள்ள நாராயணபுரம் உவர் மண்ணும் உப்பு நீரும் கலந்த வெற்றிடம். நிலத்தடி நீர் மட்டுமல்ல, இங்குள்ள மழைநீரும்கூட மண்ணில் பட்டதுமே உப்பாகிவிடுகிறது. பழைய விவசாய முறைக்கு இந்நிலம் ஏற்றதாக இல்லை. மிகக் கடினமான நிலமாகையால், மழை நீர் எளிதில் மண்ணில் இறங்குவதில்லை.


சில ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதியில ஒரு சிறு புல்கூட பார்க்க முடியாமலிருந்தது. தற்போது பச்சைப்பசேலென்று எங்கு பார்த்தாலும் பசுமையாக உள்ளது. சூபாபுல், தென்னை மரங்கள், வாழை மரங்கள் மற்றும் மலர்ச் செடிகள் ஏராளமாக வளர்ந்துள்ளன. இதற்குக் காரணம்—

பானைத் தண்ணீர்ப்பாசனம்

ஒரு பானையில் சுத்தமான தண்ணீரை வைத்து அடியில் புதைக்கிறார்கள். செடியின் வேர் இந்தத் தண்ணீரை உறிஞ்சுவதால் செடி நன்றாக வளர்கிறது.

நாராயணபுரத்தில் வீணாகக் கிடந்த நிலத்தின் ஒரு பகுதியை இவ்வாறு சோலைவனமாக்க விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் உதவியுள்ளன.





# குடிநீர் வடிகால் வாரியப் பணிகள்

தமிழகத்திலுள்ள அனைத்துக் கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கான குடிநீர், மற்றும் வடிகால் வசதிகளை அமைக்கும் பொருட்டு தமிழக அரசினால் 1971-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 'தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்' அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

### ஊரகக் குடிநீர்த் திட்டம்

1981-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கு எடுப்பின் ( census ) மூலம் தமிழ்நாட்டின் மக்கள் தொகை 4.83 கோடி என மதிப்பிடப் பட்டுள்ளது. இதில் சுமார் 2.706 கோடி மக்கள், தமிழகத்திலுள்ள 47075 கிராமக் குடியிருப்புகளிலும், 2.124 கோடி மக்கள் நகரங்களிலும் வசித்து வருகின்றனர்.

தமிழகத்திலுள்ள அனைத்துக் கிராமங்களிலும் உள்ள குடிநீர் நிலையினை அறிய 1977-ஆம் ஆண்டு அரசினால் ஒரு விஞ்ஞான பூர்வமான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலமாகத் தமிழகத்திலுள்ள 47075 கிராமக் குடியிருப்புகளில் 18167 கிராமக் குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் நிலைகள் ஏதுமில்லை என்றும் மீதமுள்ள 28,908 குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் நிலைகள் உள்ளன என அறியப் பட்டது. மேற்கூறிய 18,167 பாதுகாக்கப் பட்ட குடிநீர் நிலைகள் அற்ற குடியிருப்புகள் 5 வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை :

| குடியிருப்புகளின் தகுதி | எண்ணிக்கை |
|---|---|
| (1) | (2) |
| I பாதுகாக்கப்பட்ட குடிநீர் நிலைகள் அற்ற குடியிருப்புகள் | 3,567 |
| II உபயோகிப்பதற்கு தகுதியற்ற நீர் நிலைகள் உள்ள குடியிருப்புகள் | 2,051 |
| III நிரந்தரமற்ற குடிநீர் நிலைகள் உள்ள குடியிருப்புகள் | 6,487 |
| IV தனியாருக்குச் சொந்தமான அல்லது பாதுகாக்கப் படாத குடிநீர் நிலைகள் உள்ள குடியிருப்புகள் | 4,955 |
| V குடிநீர் நிலைகள் ஏதுமற்ற குடியிருப்புகளாயிருந்து 1 கி.மீ. தூரத்தில் நல்ல குடிநீர் நிலைகள் உள்ள குடியிருப்புகள் | 1,107 |
| மொத்தம் | 18,167 |



# இந்தியாவுக்கு ஏற்ற கல்வி!

## மாண்புமிகு இந்தியப் பிரதமர்
## திருமதி இந்திராகாந்தி

டாக்டர் இராதாகிருஷ்ணன் மற்றும் டாக்டர் ஜாகிர் உசேன் ஆகிய இரண்டு ஆசிரியர்களைக் குடியரசுத் தலைவர்களாகப் பெற்றிருந்தது நமது நாடு செய்த புண்ணியம்.

நவீன கல்வித் தேவைகளை நிறைவேற்ற பழைய கல்லூரி கட்டடங்களால் இயலவில்லை.

நாம் அனைவரும் கனவு காணும் புதிய இந்தியாவை உருவாக்க கல்வி முறைகள் உதவ வேண்டும். பயனுள்ள குடிமகனாகவும் நல்ல மனிதனாகவும் வாழ இளைஞர், மகளிர்க்குக் கல்வி உதவ வேண்டும். போட்டி அதிகரித்து வரும் தற்போதைய உலகில் தம்மை காத்துக் கொள்ளவும் கல்வி உதவ வேண்டும்.

மேட்டுக் குடியினருக்கு மட்டும் கல்வி உரியது அல்ல. குறிப்பிட்ட லட்சியங்கள் மற்றும் அதே நேரத்தில் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் கல்வி அமைய வேண்டும். தன்னுடைய சொந்த திறன் மூலம் மாணவர்கள் உயரவேண்டும்.

தங்கள் முழுத் திறனையும் உணர மாணவர்களுக்கு கல்வி நிறுவனங்கள் உதவ வேண்டும். பயிற்சி வகுப்புகளை அதிக அளவில் சார்ந்திருப்பது இது சம்பந்தமாக கல்வி நிறுவனங்களின் தோல்வியை சுட்டிக்காட்டுகிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை நாம் கண்டு பிடிக்க வேண்டும். சரியான கல்விக்கு மாற்றாகவோ மாணவர்க்கு பாரமாகவோ பயிற்சி வகுப்புகள் அமையக் கூடாது.

**பெண் கல்வி அவசியம்**

பெண்கள் கல்வி குறித்து நான் பெருத்த கவலை கொண்டுள்ளேன். படித்த பெண்களின் எண்ணிக்கை நாட்டில் 25 சதவீதம் மட்டுமே. பல மாநிலங்களில் இந்த எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. நமது தற்கால சமுதாயத்தைப் பிடித்துள்ள நோய்களில் பெண் கல்வியின்மையும் முக்கியமான ஒன்று. நவீன சமுதாயத்துடன் போட்டியிட பெண்களுக்கு வாய்ப்பை மறுப்பதன் மூலம் அவர்கள் நமக்குப் பாரமாக மாறுகிறார்கள். இதனால் அடுத்தவர்களின் கருணையை எதிர்பார்த்து வாழ வேண்டிய சூழ்நிலையையும் மோசமான பின் விளைவுகளையும் இது ஏற்படுத்துகின்றது.

**முறைசாராக் கல்வி**

முதியோரிடையே எழுத்தறிவில்லாமை மற்றொரு முக்கியப் பிரச்சினை. இதுதவிர பெரும்பாலான குழந்தைகள் பள்ளிகளுக்கே வருவதில்லை. பள்ளிகளில் சேர்ந்த குழந்தைகளும் பல்வேறு கட்டங்களில் படிப்பை நிறுத்தி விடுகின்றனர். இவர்கள் அனைவரும் நமது கல்வி முறையின் கீழ் கொண்டுவரப்பட்டால் தான் உண்மையான முன்னேற்றம் சாத்தியமாகும். இதற்காக நாடெங்கிலும் முறைசாராக் கல்விமையங்கள் துவக்கப்படுகின்றன. ஆயினும் இவற்றுக்கான செலவை அரசு மட்டும் ஏற்பது சாத்தியமல்ல.

இதுபோன்ற கல்லூரிகளில் இருந்து வரும் மாணவர்களும், ஆசிரியர்களும் முறைசாராக்கல்வியை மேம்படுத்த உதவவேண்டும். நாள்தோறும், மாதந்தோறும் சில குறிப்பிட்ட மணி நேரங்களில் போதனைக்காக இம்மையங்களில் செலவிடுவது நல்ல முறையாகும். தங்கள் சகோதர குடிமக்களுக்கு நெருக்கமாக வரவும், இந்தத் தேசிய லட்சியத்தை எட்டவும் இதர முறைகள் மற்றும் திட்டங்கள் குறித்தும் இளைஞர்கள் ஆலோசிக்க வேண்டும்.

உயர்நுட்பம் வாய்ந்த தொழில் நுட்ப மையங்கள் உள்ள நமது நாடு உலகின் சிறந்த விஞ்ஞானிகள், பொறியாளர்கள் மற்றும் இதர நுட்ப வல்லுநர்களை உருவாக்கியுள்ளது. சிறந்த மெக்கானிக்குகள், எலக்ட்ரிஷியன்கள், பிளம்பர்கள், கம்பவுண்டர்கள் ஆகியவர்களை உருவாக்க நடுத்தர அளவிலான தொழில்நுட்ப மையங்கள் அவசியம். சரியான பயிற்சி இருந்தால் ஒவ்வொரு துறையிலும் சிறப்பு நிலையை அடைய வாய்ப்பு உள்ளது.

எனினும் பெரும் செலவு செய்து பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று விடுகின்றனர். இதற்கு நாமும் ஓரளவுக்கு காரணம் என்றாலும் நாட்டுப் பற்று இல்லாத காரணத்தினாலும், சவாலை எதிர்நோக்கத் தயங்குவதாலும் இளைஞர்கள் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பினை எதிர் நோக்கிச் செல்கின்றனர்.

**விஞ்ஞான அணுகுமுறை வேண்டும்**

பொதுக்கல்வி வழங்கும் நிறுவனங்களிலும் விஞ்ஞான ரீதியான அணுகுமுறை அவசியம். நல்ல வசதியான வாழ்வைப் பெற வீட்டில் இருப்போருக்கும் விஞ்ஞானம் தேவைப் படுகிறது.

நமது கல்வி முறைக்குப் புதிய வடிவம் கொடுப்பதில் கல்லூரி முதல் இடம் வகிக்க வேண்டும். சவாலைச் சமாளிக்கவும் எதிர் காலத்தை உருவாக்கவும் தேவையான மனோ பலத்தை வழங்கும் நிரந்தரமான கருத்துகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

கல்வி கற்பதும், போதிப்பதும் முக்கியமானவை. ஆனால் அதே நேரத்தில் சிறந்த மனிதனை உருவாக்குவதாக இவை அமைய வேண்டும். தலைவர்கள் கனவு கண்ட, நிர்மாணத்தைத் துவக்கிய இந்தியாவுக்குச் சுற்றிலும் ஆபத்து உள்ள சூழ்நிலையில் இது மிகவும் முக்கியம். நாட்டினுள் வகுப்பு வாதம் என்ற உருவிலும் வெளிநாடுகளில் இருந்து அச்சுறுத்தல் மூலமும் நமது சமாதான சக வாழ்வுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இது நம் நாட்டுக்கு மட்டுமே உரிய அம்சமல்ல. உண்மையில் இவற்றில் சில முறைகளையும் கருத்துகளையும் செல்வச் செழிப்புமிக்க நாடுகளில் இருந்து நாம் பெற்றுக் கொண்டோம்.

நமது இலட்சியங்களில் நாம் உறுதியாக இருந்தால் மட்டுமே நமது மதிப்பை நாம் மெய்பித்துக் கொள்ள முடியும். மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் இதர ஊழியர்கள் இந்த உணர்வைப் போகுமிடமெல்லாமல் பரப்பினால் அவர்கள் தங்கள் வாழ்விலேயே வெற்றியையும் மகிழ்ச்சியையும் அடைய இயலும்.

## 1975க்குப் பின்னர் பெரியம்மை இல்லை!

சமீபத்தில் பெரியம்மை நோய் மீண்டும் கிளர்ந்துள்ளதற்கான அறிகுறி ஏதும் இல்லை என்று தேசிய தொத்துநோய் மையம் நடத்திய ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது.


பெரியம்மை நோய்க்கு ஆளான ஒரு சிறுமி, பாட்னா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார் என்று பத்திரிகைகளில் செய்தி வந்ததையடுத்து, இந்த ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

சுகாதார சேவைகள் தலைமை இயக்குநர் விசாரணைக்கு உத்தரவிட்டார். தேசிய தொத்து நோய் மையம் மருத்துவக் குழுவொன்றை அனுப்பியது.

தேசிய பெரியம்மை சோதனைச்சாலையில் நடத்தப்பட்ட சோதனைகளில் பெரியம்மை நோய் அறிகுறி ஏதும் இல்லை என்று தெரிய வந்துள்ளது.

1975 முதல் நாட்டில் பெரியம்மை இறப்பு ஏதும் இல்லை.





| | |
|---|---|
| நல்ல ஆதாரங்கள் கொண்ட நீர் நிலைகள் உள்ள குடியிருப்புகள் | 28,908 |
| | 47,075 |

முதல் இரண்டு வகை குடியிருப்புகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டு 1977-78 முதல் செயலாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் மூலம் 5,618 குடியிருப்புகளில் 1983 வரை சுமார் 5,389 குடியிருப்புகளுக்கு ரூ. 3,219.67 இலட்சம் செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து முடிக்கப்பட்டது.

இதற்கிடையில், தமிழக அரசு, மக்களுக்கு அடிப்படைத் தேவைகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர் மருத்துவ வசதி, போன்றவைகளை நிறைவு செய்யும்பொருட்டு 'தன்னிறைவுத் திட்டங்களை' 1980-81, 1981-82, 1982-83 ஆகிய மூன்று ஆண்டுகளில் மூன்று கட்டங்களில் 378 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தியது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் (1980-81) சுமார் 12,916 கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் செய்யப்பட வேண்டியிருந்தது. தவிர, தொடர்ந்து நிலவி வரும் வறட்சியின் காரணமாக, நல்ல நீர் ஆதாரங்களுடன் கூடிய குடியிருப்புகள் பலவற்றிலும் குடிநீர்த் தட்டுப்பாடுகள் ஏற்பட்டதை அடுத்து 6வது வகையினைச் சார்ந்த குடியிருப்புகளில் சுமார் 7,600 குடியிருப்புகளில் வகை மாற்றி அமைக்கப்பட்டு அரசு ஆணையின்படி குடிநீர் வசதி செய்யப்பட்டது.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் நிலைகளற்ற 9,416 குடியிருப்புகள் மற்றும் அரசினால் வகை மாற்றம் செய்யப்பட்ட 7,600 குடியிருப்புகளிலும் ஆக 17,016 குடியிருப்புகளிலும், ஆறாவது திட்ட காலத்தில் ரூ. 170 கோடி செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தவிர 1977 முதல் இதுவரை சுமார் 13,709 குடியிருப்புகளுக்குச்சுமரா ரூ10,021.568 இலட்சம் செலவில் குடிநீர் வசதி செய்யப்பட்டு, 52.95 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர். தொடர்ந்து வேலைகள் நடத்து வருகின்றன. தொடர்ந்து நிலவி வரும் வறட்சியின் காரணமாகத் தமிழக அரசு மாவட்ட ஆட்சியர்களை, குடிநீர்த் தட்டுப்பாடுள்ள கிராமங்கள் அவசியமானால், மீண்டும் வகைப்படுத்த கோரியதன் விளைவாக அக்டோபர் 82 முடிய சுமார் 14,826 குடியிருப்புகள் வகைப்படுத்தப்பட்டன. தொடர்ந்து குடிநீர் அளிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1977 முதல் 1983 வரை செயலாக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் ஏற்பட்ட செலவினங்கள் மற்றும் பயனடைந்த மக்கள் தொகை:







| ஆண்டு | பயனடைந்த குடியிருப்புகள் | பயனடைந்த மக்கள்தொகை இலட்சங்கள் | மொத்த செலவு (இலட்சம் ரூபாயில்) |
|---|---|---|---|
| 1977—78 | 1,140 | 2.94 | 715.00 |
| 1978—79 | 1.404 | 7.44 | 860.30 |
| 1979—80 | 921 | 3.81 | 1,022.31 |
| 1980—81 | 2,300 | 11.49 | 1,807.00 |
| 1981—82 | 3,875 | 15.06' | 3,165.23 |
| 1982—83 | 4,069 | 12.21 | 2,451.72 |
| | 13,709 | 52.95 | 10,021.56 |

ஊரகக் குடிநீர்த் திட்டங்களுடன் நகரகக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் வடிகால் திட்டங்கள் அமைக்கும் பொறுப்பையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ளது. 1971-77 வரை நகரகத் திட்டங்களுக்காக அரசு சுமார் ரூ. 4,235 இலட்சங்களை செலவழித்துள்ளது. தவிர ரூ. 5,618 இலட்சங்கள் 1977-83 வரைக்கான நகரகத் திட்டங்களுக்காகச் செலவிட உத்தேசித்துள்ளது.

1077 முதல் 83 வரை செயலாக்கப்பட்ட, முடிக்கப்பட்ட மொத்த குடிநீர்த் திட்டங்கள்—101.

வடிகால் திட்டங்கள்—3.

பயனடைந்த மக்கள் தொகை—45.42 இலட்சங்கள்.

செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகை —5770.48 இலட்சங்கள்.

மேற்கூறிய முடிக்கப்பட்ட திட்டங்களன்றி, தமிழகத்திலுள்ள நகராட்சி பேருராட்சிகளில் 69 குடிநீர்த் திட்டங்களும், 11 வடிகால் திட்டங்களும் செயலாக்கப்பட்டு வருகிறது. கூடிய விரைவில் அவை முடிக்கப்பட்டு மக்களின் உபயோகத்திற்குக் கொண்டு வரப்படும்.

**வறட்சி நிவாரணப் பணிகள்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வழக்கமான ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் நகரிய குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்கள் மட்டுமின்றி தொடர்ந்து 81-82 மற்றும் 82-83ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சியின்போது அரசு ஆணையின்படி வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்துக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டத்தைச் செயலாற்றி வறட்சியால் ஏற்பட்ட குடிநீர்த் தட்டுப் பாட்டினை அகற்றியது.

வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் நகரங்களில் 1981-82-ஆம் ஆண்டு ரூ. 167.537 இலட்சங்களும், 82-83ல் ரூ. 505.662 இலட்சங்களும் செவழிக்கப்பட்டன.

# தெரிந்து கொண்டால் நல்லது!



யானை நம் நாட்டின் மிகப் பழமையான விலங்குகளுள் ஒன்று. தமிழ் இலக்கியங்களில் யானையைப் பற்றிய பல குறிப்புகளைக் காணலாம். இலங்கை, பர்மா, மலேசியா, சயாம், சீனா, சுமத்திரா நாடுகளிலும் ஆப்பிரிக்காவிலும் யானைகள் வாழ்கின்றன. நம் நாட்டில் இமயமலைச் சரிவிலும், கங்கை, கிருஷ்ணா ஆறுகளுக்கிடையே உள்ள காடுகளிலும் மேற்கு மலைத்தொடரிலும் மைசூர், அஸ்ஸாம் காடுகளிலும், தமிழ்நாட்டுப் பெருங் காடுகளிலும் யானைகள் வாழ்கின்றன. யானைகள் கூட்டம் கூட்டமாய் வாழும்; கூட்டம் கூட்டமாய்ச் செல்லும்.

யானையின் தோல் மிக உறுதியானது. அதன் கால்கள் தூண்கள் போலப் பருத்திருக்கும். யானையின் கால்களில் பளபளப்பான அகன்ற நகங்கள் இருக்கின்றன. முன்னங்கால்களில் ஐந்து நகங்களும், பின்னங் கால்களில் நான்கு நகங்களும் உள்ளன.

யானைக்குப் பிற விலங்குகளுக்கு இல்லாத துதிக்கை என்னும் உறுப்பு உள்ளது. அதனைத் 'தும்பிக்கை' எனவும் வழங்குவர். 'தும்பிக்கை' என்பதற்கு யானையின் 'கை' என்பது பொருள். துதிக்கை ஏறத்தாழ இரண்டு மீட்டர் நீளம் இருக்கும். யானை துதிக்கையால் உணவை வாய்க்குள் செலுத்தும்; தண்ணீரையும் அதனால் உறிஞ்சி வாயில் ஊற்றிக் கொள்ளும். துதிக்கை, உயர்த்தவும், தாழ்த்தவும், நீட்டவும் சுருட்டவும், சுழற்றவும், முறுக்கவும் ஏற்ற நிலையில் அமைந்துள்ளது. துதிக்கையின் நுனியில் உள்ள விரல் போன்ற நீட்சியால் யானை, காசு, கடலை போன்ற சிறு பொருள்களையும் பொறுக்கி எடுத்துவிடும்.

யானையின் மற்றோர் உறுப்பு, அதன் தந்தம். அதைக் 'கோடு' எனவும் வழங்குகிறோம். யானையின் மேல் தாடையிலிருந்து வளர்ந்துவரும் பற்களே தந்தங்கள். பெண் யானைக்குத் தந்தங்கள் இல்லை. அவற்றின் பற்கள் வெளியே நீளாமல் வாய்க்குள்ளேயே அமைந்துள்ளன. தந்தங்கள் அமையாத ஆண் யானைகளும் உண்டு. தந்தம் விலை மதிப்பு மிக்கது.

## மாணவர் பக்கம்

தயாரிப்பு : 'கிரிஜா'

யானையின் காதுகள் பெரியவை. காதுகளின் மேல் விளிம்பில் உள்ள வளைவைக் கொண்டு யானையின் வயது ஒருவாறு கணக்கிடப்படும். காட்டிலே வாழும் யானைகள் நூறாண்டுகளுக்கு மேல் வாழ்கின்றன. நாட்டிலே வளர்க்கப்படும் யானைகள் ஏறத்தாழ எண்பது ஆண்டுகள் உயிர் வாழுமாம். யானைகளின் கண்கள் சிறியவை. எனினும், யானையின் பார்வை கூர்மையானது. யானையின் கழுத்து தடித்து இருக்கிறது. எனவே கழுத்தைப் பின்புறம் வளைத்துப் பார்க்க யானைக்கு இயலுவதில்லை. ஆயினும் யானைக்குக்கூர்மையாகக்கேட்கும் திறமும், மோப்பம் பிடிக்கும் ஆற்றலும் மிகுதியாய் உண்டு.

யானை நீரில் நன்றாக நீந்தும். அது நீர்க்குள் மூழ்கியிருந்தாலும் துதிக்கையை மட்டும் நீர்ப்பரப்பிற்கு மேலே உயர்த்தி மூச்சு விட்டுக்கொண்டு நீந்திச் செல்லும்.

இலையும், மூங்கிற் குருத்தும், புல்லும், தேங்காயும், கரும்பும் யானைக்கு விருப்பமான தீனிகள். இவற்றைத் தவிர, அரசு, ஆல், பலா மரங்களின் இலையையும் யானை தின்னும். வாழை இலையும், முலாம்பழமும், பலாப் பழமும், அன்னாசிப் பழமும், நுங்கும் யானைக்கு மிகவும் விருப்பமான பொருள்கள். யானை பெருந்தீனி தின்னும். எனவே தான் 'யானையைக் கட்டித் தீனி போடுவது போல' என்னும் பழமொழி வழங்கி வருகிறது. யானை பருகும் நீரின் அளவும் அதிகமே. யானை ஒரு வேளைக்கு ஏறக்குறைய எழுபது லிட்டர் தண்ணீர் குடிக்கும்.

யானையைக் குறிக்கும் பல சொற்கள் தமிழில் உள்ளன. 'களிறு' என்பது ஆண் யானையைக் குறிக்கும். 'பிடி' என்பது பெண் யானைக்குரிய பெயர். யானையின் குட்டியை 'யானைக் கன்று' என்று வழங்குவது மரபு. யானை வாயைத் திறந்து ஒலியெழுப்புதலைப 'பிளிறுதல்' என்று வழங்குகிறோம். யானை என்னும் சொல் 'ஆனை' என்றும் வழங்கப்படும்.

## எழுதுங்கள்!

மாணவ மணிகளே!

இது உங்கள் பக்கம். இந்தப் பக்கத்தில் நீங்கள் கதை, கட்டுரை-கவிதை - துணுக்குகள் எழுதி அனுப்பலாம். ஆனால் அவையெல்லாம் உங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும்.

உங்களில் யாரேனும் ஏதாவது ஒரு துறையில் (கதை, கட்டுரை, விளையாட்டு, ஓவியம், நடனம்) சிறந்தவர்களாக இருக்கலாம். அவர்கள் தங்கள் புகைப்படத்துடன், தங்களைப் பற்றிய குறிப்பையும் எழுதி, ஆசிரியர் அல்லது தலைமையாசிரியர் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கலாம்.

—ஆசிரியர்

# பூமி சிரிக்குது!



கோலப் பூமிக் குழந்தைக்கு
கொடிய தாகம் பிறக்குது!
சீலத் தென்றல் காற்றிடம்
சேதி சொல்லி அனுப்புது!

காற்று சென்று வானத்தின்
கதவை மெல்ல அசைக்குது;
வேற்று ஓசை கேட்டதும்
விரைந்து வாசல் திறக்குது!

தென்றல் வந்த சேதியைத்
தென்னத் தெளிய விளக்குது;
அன்பு கொண்ட வானுமே
அழைத்து முகிலை விரட்டுது!

மேகம் போகும் வழியெலாம்
மின்னல் தீபம் பிடிக்குது;
போகும் வேகம் இடியெனப்
புவியின் காதைத் துளைக்குது!

போட்டி போட்டு மேகமும்
புனலை வாரித் தெளிக்குது
கூட்டி அள்ளிக் குடித்ததும்
குளிர்ந்து பூமி சிரிக்குமே!

—தளவை இளங்குமரன்




## பர்மாவில் வள்ளுவர் கோட்டம்

புத்தரின் அருளறம் ஒளிரும் பர்மியப் பொன்னாட்டில், சொர்ணபூமி என்றழைக்கப்படும் தட்டோன் மாநகரில், வான்புகழ் வள்ளுவர்க்குக் கோட்டம் அமைக்கப்படுகின்றது.

பர்மா தமிழர்கள் சார்பில், இந்த அழகிய வள்ளுவர் கோட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா 24.4.83 அன்று மிகச் சிறப்பாக நடந்தது. விழாத் துவக்கத்தில் திருக்குறள் முழங்கியது. திருக்குறளின் 133 அதிகாரங்களை நினைவூட்டும் வகையில், வட்டார வாரியாக 133 பிரதிநிதிகள் விழாவில் கலந்து கொண்டு கருத்துரையாற்றினர்.

இந்தக் கோட்டத்திற்கான நிலத்தை பர்மிய அரசு வழங்கியுள்ளது. இந்த அழகிய வள்ளுவர் கோட்டம் 93 அடி நீளம், 40 அடி அகலம் உடையதாய் இருக்கும். கோட்டத்தின் மேல்தட்டில் திருவள்ளுவரின் திருவுருவச்சிலை அமையும். அத்துடன் அவர் அருளிய குறளோவியங்கள் கல்வெட்டுகளில் பதிக்கப்படும்.

வள்ளுவர் கோட்டத் துவக்க விழாவில் வெளியிடுவதற்கெனச் சிறப்பு மலர் ஒன்றும் தயாராகிக் கொண்டிருக்கிறது. இம்மலரில் 1333 சான்றோர்கள் எழுதுகிறார்கள்.

தகவல் : எஸ். முனுசாமி
இரங்கூன், பர்மா.

**கல்வி என்பது**

கல்வி என்பதற்கு நான் கொண்ட பொருள் ஒழுக்கத்தைப் படிப்படியாக வளர்ப்பது என்பது. எழுத்திலக்கணம் பயில்வது கல்வியாகாது.

— காந்தியடிகள்

## விளையாட்டுக் குறியீடுகள்

| | |
|---|---|
| வில் வித்தை | ஹாக்கி |
| தட, கள ஆட்டங்கள் | ஜூடோ |
| பேஸ் பால் | குதிரை வித்தைகள் |
| கூடைப் பந்து | பலர் படகு விடல் |
| குத்துச் சண்டை | சுடுதல் |
| ஓராள் படகு விடல் | நீச்சல் |
| மிதி வண்டி | தண்ணீர் போலோ |
| குதிரை ஏற்றம் | டென்னிஸ் |
| வாள் வீச்சு | வாலி பால் |
| கால் பந்து | பளு தூக்குதல் |
| அரங்கு ஆட்டங்கள் | மற் போர் |
| கைப் பந்து | பாய் மரப் படகு விடல் |

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில்...

# சென்னையில் சிங்காரக் குடியிருப்புகள்



சென்னை மாநகராட்சி வட்ட எண். 115-ல் சுமார் 159.90 மனைப் பரப்பில் வட பழனிக் கோவிலுக்கு அருகில் இராணி அண்ணா நகர் அமைந்துள்ளது. இந்த இடத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒப்புதல் அளித்த திட்ட வரைபடத்தின்படி மொத்தம் 1532 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. திட்டத்திற்கான நிலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து மனை ஒன்றுக்கு ரூ. 8,500 வீதம் பெறப்பட்டது. நிலத்திற்கான மொத்த விலை ரூ. 13.60 இலட்சமாகும்.

ஒரு குடியிருப்பின் விலை சுமார் ரூபாய் 14,000 ஆகும். ஒரு குடியிருப்பில் கட்டடப் பரப்பு 21.56 சதுர மீட்டர்கள். ஒவ்வொரு குடியிருப்பும் ஒரு பொது அறை, சமையல் அறை மற்றும் கழிப்பிட வசதிகளுடன் கூடிய குளியல் அறை கொண்டதா இருக்கும். ஒவ்வொரு வீட்டிற்கும் தண்ணீர்க் குழாய் மூலமாக மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து வழங்கப்படும். ஒவ்வொரு வீட்டிலும் மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இதுவரை இராணி அண்ணா நகரில் 418 குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 1114 குடியிருப்புகளிலும் அவ்வாறே ஒதுக்கப்படவுள்ளன.

குடிநீர் வசதிக்காக, இப்பகுதியில் 16' விட்டமுள்ள கிணறுகள் ஆறும், 8' விட்டமுள்ள கிணறுகள் ஐந்தும், 4' விட்டம் உள்ள கிணறுகள் இரண்டும் ஆக மொத்தம் பதின்மூன்று கிணறுகள், வெளிப்புற தண்ணீர்க் குழாய் வசதிகளுடன் ரூ. 7.26 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் தற்போது ரூ. 0.42 இலட்சம் செலவில் இரு ஆழ்துளைக் கிணறுகளும், 10 குழாய்க்கிணறுகளும் போடப்பட்டுள்ளன.

குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் மற்றும் மழைநீர் சீரான முறையில் வெளியேற்ற ரூ. 1.57 இலட்சம் செலவில் உட்புற, வெளிப்புறக் கழிவுநீர்க் குழாய்கள் அமைத்து முக்கிய சாலைகள் செல்லும் கால்வாய்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டப் பகுதியில் 41 தெருவிளக்குகள் ரூ.1,50,000 செலவில் அமைக்கப்பட்டுள்ளன. ரூ. 14.37 இலட்சம் செலவில் உட்புற மின் வசதி செய்யப்பட்டுள்ளது.

ரூ. 1.55 இலட்சம் செலவில் கப்பி மற்றும் தார் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. திட்டப் பகுதியின் சாலை ஓரங்களில் 300 மரங்கள் நடப்பட்டுள்ளன.

மேற்கு அண்ணா நகர் பகுதியின் அருகே திருமங்கலம் (என். வி. நடராசன் நகர்) திட்டம் அமைந்துள்ளது. அங்கு 1024 குடியிருப்புகள் ரூ. 119.20 இலட்சம் செலவில் மாநில அரசின் நிதி உதவியுடன் கட்டப்பட்டு உள்ளன. 114 மனைப் பரப்புள்ள இத்திட்டத்திற்கான நிலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து மனை ஒன்றுக்கு ரூ. 8,210 வீதம் பெறப்பட்டது. நிலத்திற்கான மொத்த விலை ரூ. 9.37 இலட்சம் ஆகும்.

ஒவ்வொரு குடியிருப்பும் ஒரு பொது அறை, சமையல் அறை மற்றும் கழிப்பிட வசதிகளுடன் கூடிய குளியல் அறை கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு வீட்டிற்கும் தண்ணீர் மேல்நிலைத் தொட்டிகளில் இருந்து குழாய் மூலமாக வழங்கப்படும்.

இராணி அண்ணா நகர், திருமங்கலம், இந்திரா நகர் பகுதி-2 போன்ற குறிப்பிட்ட குடிசை வாழ்வோருக்காக அன்றி, பொதுவாக குடிசை வாழ்வோருக்கு வழங்குவதற்காகக் கட்டப்படும் குடியிருப்புகள் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்குத் தவணை முறைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

மொத்தக் குடியிருப்புகள் 1024ல் மீதமுள்ள 576 குடியிருப்புகளில், 210 குடியிருப்புகள் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்குத் தவணை முறைத் திட்டத்தின்கீழ் உட்புற மின்வசதியுடன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 366 குடியிருப்புகளும் அவ்வாறே ஒதுக்கப்பட்டுள்ளன.

குடிநீர் வசதிக்காக இப்பகுதியில் 20' விட்டமுள்ள கிணறுகள் ஐந்தும், 16' விட்டமுள்ள கிணறுகள் இரண்டும், வெளிப்புறத் தண்ணீர்க் குழாய்களும் மற்றும் பொது மேல்நிலை நீர்த் தொட்டியும் ரூ. 6.89 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் தற்போது ரூ. 0.46 இலட்சம் செலவில் 2 ஆழ்துளைக் கிணறுகளும், 14 குழாய்க் கிணறுகளும் போடப்பட்டு உள்ளன.

குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் மற்றும் மழைநீர் சீரான முறையில் வெளியேற்ற ரூ. 1.67 இலட்சம் செலவில் உட்புற, வெளிப்புறக் கழிவுநீர்க் குழாய்கள் அமைத்து முக்கிய சாலைகளில் செல்லும் வீட்டு வசதி வாரியக் கால்வாய்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டப்பகுதியில் 23 தெருவிளக்குகள் ரூ. 0.69 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. தவணை முறையின் கீழ் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு ஒதுக்கப்படும் 576 குடியிருப்புகளுக்கு ரூ. 3.67 இலட்சம் செலவில் உட்புற மின்வசதி செய்யப்பட்டுள்ளது.

ரூ. 0.94 இலட்சம் செலவில் கப்பி மற்றும் தார்ச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ. 0.25 இலட்சம் செலவில் இரு குழந்தைகள் விளையாட்டுப் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. திட்டப்பகுதியில் சாலை ஓரங்களில் 85 மரங்கள் நடப்பட்டுள்ளன.

# சிறுநடை... பெரும் முன்னேற்றம்



நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கிராமத்தொழில்கள் மிகவும் முக்கியமான அமைப் பாகும்: இந்தியத் தலைமை அமைச்சரின் புதிய இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தில், கிராமப்புற வளர்ச்சிக்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவமும், தமிழக முதல்வரின் ஊக்கமளிக்கும் தலைமையின் கீழ், தளராத கிராமப்புற வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்டிருக்கும் பல்வேறு நடவடிக்கைகளும் சிறுதொழில் மற்றும் கிராமப் புறத் தொழில் வளர்ச்சிக்கான முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளன.

தோல், பட்டு வளர்ப்பு, தீப் பெட்டி, கயிறு தயாரிப்பு போன்ற தொழில்களின் மேம்பாட்டிற்குக் கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழக அரசு அதிக அளவு முக்கியத்துவத்தைத் தந்துள்ளது.

கிராமப்புறங்களில் உள்ள தொழில் வினைஞர்கள் எளிதாகத் தொழில் தொடங்க வாய்ப்புகள் அதிகமாக்கப்பட்டுள்ளன.

தீப்பெட்டி, கயிறு, ஜவ்வரிசி தயாரித்தல் போன்ற சில கிராமத் தொழில்கள் வேகமாக வளர்ச்சி பெறுவதற்குச் சிறந்த கருவியாகத் தொழிற் கூட்டுறவுத் துறை பணியாற்றி வருகிறது. தீப்பெட்டி தொழிற் சேவை சங்கங்களின் எண்ணிக்கை 1977-78ஆம் ஆண்டில் 297ஆக இருந்தது. 1982 டிசம்பர் முடிவில் எண்ணிக்கை 881 என உயர்ந்துள்ளது. இவற்றில் 374 சங்கங்கள் பெண்களுக்காக மட்டுமே உள்ளன; 100 சங்கங்கள் பிற்பட்ட வகுப்பினருக்கானவை. இவற்றினால் சுமார் 5,500 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கித் தரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஜவ்வரிசி மற்றும் மாவு உற்பத்தி செய்யும் தொழிலில் சுமார் 600 தொழிற்சாலைகள் ஈடுபட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் சேலம், தருமபுரி மாவட்டங்களில் மட்டும் 500 தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய, மாநில அரசின் உதவியுடன் ஜவ்வரிசி மற்றும் மாவு உற்பத்தியாளர்களின் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நம் மாநிலத்தின் கயிறு தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் 1980-ஆம் ஆண்டு வரை 10 மட்டுமே இருந்தன. மேலும் பல தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசு திட்டம் வகுத்தது. இவற்றின் பங்கு முதலீட்டில் அரசின் பங்கான ரூ. 66.54 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டது.

தொழிற்கூட்டுறவு அமைப்புகள் 1982-ஆம் ஆண்டு முடிவில் 52 ஆக உயர்ந்து சுமார் 7,500 பேருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளது.

முசுக்கொட்டை செடி பயிரிடப்பட்ட நில அளவு 1956-ஆம் ஆண்டில் 1,000 ஏக்கராக இருந்தது. 1980-ஆம் ஆண்டில் 20,000 ஏக்கர்களாக உயர்ந்து தற்பொழுது 55,000 ஏக்கர்களாக உள்ளது. இதனால் தமிழ்நாட்டில் கிராமப் புறங்களிலுள்ள 2.5 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சேவைத் தொழிற் கூட்டுறவு



# அறிவுச்சுடர்

உலகத்திலேயே உயரமான நீர் வீழ்ச்சி வெனிசூலா நாட்டிலுள்ள ஏஞ்சல் நீர்வீழ்ச்சியாகும். இதன் உயரம் 979 மீட்டர்.

உலகத்திலேயே உயரமான மரம் கலிபோர்னியாவிலுள்ள ரெட் வுட் மரமாகும். இதன் உயரம் 112 மீட்டர். இது மனிதனைவிட 63 மடங்கு உயரமானது!

உலகத்திலேயே மிகப் பெரிய பாலைவனம் ஆப்பிரிக்காவிலுள்ள சகாரா பாலைவனம், இதன் பரப்பளவு 84 இலட்சம் சதுர கிலோ மீட்டர்! இதில் அல்ஜீரியா சாட், எகிப்து, லிபியா, மாலி, மாரிட்டானியா, மொராக்கோ, நைஜர், சூடான், டுனீசியா போன்ற நாடுகள் உள்ளன.

உலகத்திலேயே விலை மதிப்பில் உயர்ந்த பாலம் நியூயார்க்லுள்ள வெரசானோ நாரோஸ் தொங்கு பாலமாகும். இதற்கான செலவு 320 கோடி ரூபாய்!

உலகின் மிகப் பெரிய மீன் திமிங்கலச் சுறாவாகும். இதன் நீளம் 60 அடி! எடை 43 டன்!


உலகத்திலேயே உயரமான பாலம் அமெரிக்காவில் அரகான்சாஸ் ஆற்றின் மீதுள்ள ராயல் கோர்க் பாலமாகும். இது ஆற்றின் மட்டத்திற்கு 1053 அடி (321 மீட்டர்) உயரத்தில் கட்டப்பட்டுள்ளது!

மொனாகோ நாட்டில் நூறில் எண்பத்து நான்கு பேர் தொலைபேசிகள் வைத்துள்ளனர்! அமெரிக்காவில்-70

உலகத்திலுள்ள பூக்கும் தாவரங்களில் 2,50,000 இனங்கள் உள்ளன. இவற்றின் அறிவியல் பெயர் ஆங்கியாஸ்பெர்ம்ஸ் (Angiosperms). —நன்றி: பூக்கூடை

**சாம்பலில் இருந்து செங்கல்**

நிலக்கரி சாம்பலில் ஒன்றும் இல்லை என்று அதை வீணாக்கி விடுகிறார்கள். சீனாவில் இந்தச் சாம்பலைக் கடலில் கொட்டி வந்தனர். ஆனால், அதில் இருந்து கட்டடம் கட்டுவதற்குரிய செங்கற்களைத் தயாரிக்க முடியும் என்று இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஷாங்காங் என்ற பெரிய செங்கல் தயாரிப்புத் தொழிற்சாலை நிபுணர்கள் இதைக் கண்டுபிடித்து உள்ளனர். இப்போது அங்கு யாரும் நிலக்கரிச் சாம்பலை வீணாக்குவதில்லை.




## உலக கடியாரம்

பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்வதால் இரவும் பகலும் உண்டாகிறது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் பூமியில் பல்வேறு இடங்களிலும் என்ன மணி என்பதைப் படம் காட்டுகிறது. ஆசியப் பகுதியில் சூரியன் மறையும்போது, அமெரிக்கப் பகுதியில் சூரியன் உதயம் ஆவதையும், கிரீன்விச்சில் நடுப் பகலாக இருக்கும் வேளையில் நியூஸிலாந்தில் நடு இரவாவதையும் காண்கிறோம். 15 தீர்க்க ரேகைக்கு ஒரு மணி விதம் நேரம் அதிகரிக்கவும், குறையவும் செய்கிறது.

நன்றி - விஞ்ஞானச் சுடர்

● மனம் சாந்தமாயும், சமாதானமாயும் இருக்க வேண்டுமானால், அதை அறிவுள்ள- உயர்ந்த எண்ணங்களைக் கொண்டு நிரப்ப வேண்டும்.

— புத்தர்



# சென்னை மாவட்ட ஆசிரியர் தின விழா

—பி.எல்.ஆர்.

ஆசு-குற்றம்.

இரிதல்-நீக்குதல்.

—'ஆசிரியர்' என்கிற சொல்லுக்கு ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் அளித்திடும் விளக்கமிது. இந்த விளக்கம் ஆசிரியப் பெருமக்களின் அருமை பெருமையை நமக்குத் தெரிவிப்பதாகும்.

தேக்குச் செடி தானே வளர்ந்து விடுமென்றாலும், சிறிய கன்றை யொட்டி நேரான சிறு கொம்பொன்றை நட்டு, சேர்த்துக் கட்டுவதுண்டு கிராமப்புறங்களில், ஏனென்றால், அது வளைந்து வளர்ந்துவிடுமானால் மரமான பிறகு நிமிர்த்தி நேராக்குவது சாத்தியமில்லை என்பது தான்.

ஆசிரியப் பெருமக்கள் செய்வதும் ஏறத்தாழ இதேபோன்ற பணியே யாகும். சின்னஞ்சிறு வயதிலேயே மாணாக்கர்களின் வளர்ச்சியைச் செம்மைப்படுத்தி, எதிர்காலம் ஒழுங்குடையதாக அமைய அவர்களுக்கு உதவிடும் உன்னதப்பணி இவர்களுடையது.

கல்விக் கண் திறக்கும் ஆசிரியர்களின் உயரிய பணிக்கு உரிய மதிப்பளிக்கும் நோக்குடன் கொண்டாடப்படுவதே ஆசிரியர் தினம்.

போற்றுதலுக்கும் புகழுதலுக்கும் உரியவராகத் திகழ்ந்த மாமேதை-தத்துவஞான் -முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 5ஆம் நாள், ஆண்டுதோறும் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

அரசும் சமுதாயமும் ஆசிரியப் பெருமக்களுக்கு எந்த அளவுக்குக் கடமைப்பட்டிருக்கின்றன என்பதனை அவனிக்கு உணர்த்துவதே இந்த விழா நோக்கமாகும்.

**புகழுரைகள்**

'ஆசிரியர் இன்று ஏங்கினால் நாளை நாடு ஏங்கும்; ஆசிரியர் இன்று தேங்கினால் நாளை நாடு தேங்கும்' என்றார் பேரறிஞர் அண்ணா.

'தேசிய ஆசிரிய நலநிதிக்குப் பெருமளவில் பொருளுதவிசெய்து நம் கல்வி முறையை வலிமைப்படுத்த வேண்டும்' என்று மாண்புமிகு குடியரசுத் தலைவர் திரு. ஜெயில்சிங் அவர்களும்-'நம் நாட்டு இளம்பிராயத்தினரின் நற்பண்புகளை ஒளிரச் செய்வதிலும், உருவாக்குவதிலும், மனிதப் பண்பாட்டை வளர்ப்பதில் அர்ப்பணித்துக் கொள்வதன் மூலமாகவும் ஆசிரியர்கள் தங்கள் தகுதியை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும்' என்று மரியாதைக்குரிய நம் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களும்-'ஆசிரியர்கள் தங்களது உழைப்பினாலும் நன்னடத்தையாலும் மாணவர்களிடமிருந்து மரியாதையையும், சமுதாயத்திலிருந்து மதிப்பினையும் பெறவேண்டியவர்களாக இருக்கின்றனர். நல்லாசிரியர்களைக் கவுரவிக்க வேண்டியது நமது சமுதாயத்தின் கடமையாகும்' என்று மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களும் இந்த ஆண்டு ஆசிரியர் தினவிழாவின்போது அளித்திட்ட தங்கள் தங்கள் வாழ்த்துச் செய்திகளிலே குறிப்பிட்டிருந்தார்கள்.

**"எல்லோருக்கும் கல்வி என்கிற குறிக்கோளின் அடிப்படையில் அரசு செயலாற்றி வருகிறது. ஆசிரியத் தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கு ஊதியத்திலும் பணிப்பாதுகாப்பிலும் இருந்த குறைபாடுகள் படிப்படியாக நீக்கப்பட்டு, அரசின் இதர ஊழியர்களைப் போலவே ஆசிரியப் பெரு**



**'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக'** —குறள்

நிலையம் ஒன்று வாணியம்பாடியில் தமிழக அரசால் நிறுவப்பட்டுள்ளது. ஏற்றுமதி செய்வதன் மூலம் நல்ல விலை பெறவும், வேலை வாய்ப்புகள் பரவலாக்கப்பட்டு பெருகவும் இது உதவும். தொழிற் கூட்டுறவு அடிப்படையில் இதுபோன்ற சேவை அமைப்புகள் கைத்தொழில் வணிக இயக்குநகரத்தால், திண்டுக்கல், இராணிப்பேட்டை, பேரணாம்பட்டு ஆகிய இடங்களில் ஒவ்வொரு இடத்திலும் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன.

ரூ. 11 இலட்சம் செலவில் தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பாலிதீன் பை உற்பத்தி செய்யும் கூட்டுறவுத் தொழிற் சங்கங்கள் ஏழும், பாலிதீன் சாக்குப் பைகள் உற்பத்தி செய்யும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. இவை, கிராமப்புறங்களில் குறிப்பாகப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன.

மேற்கூறிய வளர்ச்சித் திட்டங்கள் சிறந்த பயன்களை அளிக்கத் தொடங்கி விட்டன, சிறு தொழில்கள் எண்ணிக்கை பெருமளவு உயர்ந்திருப்பதிலிருந்து இதனை அறியலாம். 1978-ஆம் ஆண்டு மார்ச் மாத முடிவில் 18,789 ஆக இருந்தது; 1982ஆம் ஆண்டு நவம்பர் மாத முடிவில் 44,784 என உயர்ந்துள்ளது.

**'சிட்கோ'வின் பங்கு**

சிறுதொழில் துறையில் விரைவான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு நிறுவனமான 'சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்' (சிட்கோ) ஆற்றியுள்ள பங்கு பணியைக் கூறாவிட்டால், தமிழ்நாட்டின் தொழிற்துறை வளர்ச்சி பற்றி முழுவதுமாகக் குறிப்பிட்டதாக ஆகாது.


கடந்த 12 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய 'சிட்கோ' இன்று சிறு தொழில் துறையில் நடைபெறும் பணிகளுக்கு உந்து விசையாகத் தொடர்ந்து இருந்து வருகிறது.

தொழில் தொடங்குவதற்குத் தேவையான அத்தியாவசிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருதல்-உற்பத்தியான பொருள்களை விற்பனை செய்ய உதவுவது— மத்திய அரசின் முதலீட்டு மானிய உதவித் திட்டத்தை 33 தாலுக்காக்களில் செயல்படுத்துவது - தமிழ்நாட்டின் 31 தாலுக்காக்களில் மாநில அரசின் முதலீட்டு மான்ய உதவித் திட்டத்தைச் செயல்படுத்துதல் - சிறு தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனைக் கடன் வழங்குதல்-குறைந்த அழுத்த மின்சாரம் பயன்படுத்தும் சிறுதொழில்களுக்கு மின் கட்டணச்சலுகை வழங்குதல், நலிந்த, சிறுதொழில்களின் மறுவாழ்வுக்குப் பங்கு நிதி வழங்குதல் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பிரிவு தொழில்களுக்கு மாநில அரசின் 10 சதவிகித மாநில மான்ய தொகை வழங்குதல், அத்தியாவசியமான மூலப் பொருள்களைக் கொள்முதல் செய்து சிறு தொழில்களுக்கு விநியோகிப்பது போன்றவை 'சிட்கோ' வழங்கும் முக்கியமான உதவிகளாகும்.

மாநிலம் முழுவதும்இதுவரை சிட்கோவினால் 1748 சின்னஞ் சிறு தொழிற்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும் பகுதியாகத் தீப்பெட்டித்தொழில்களுக்கு 73%ம், பட்டு வளர்ப்புக்கு 7%ம் ஆகும்.

மோட்டார் வாகனத் தயாரிப்பு தொழிலுக்கான துணைத் தொழில்கள்-மருந்துப்பொருள்கள் தயாரித்தல், மின் அணுச் சாதனங்கள் தயாரித்தல் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்டசிலதொழில் பிரிவுகளுக்கு 10 சதவிகித தமிழக அரசு பங்கு முதலீட்டு மானியம் வழங்குவதென அண்மையில் செயல்படுத்தப்பட்ட திட்டம் இத் தொழில்கள் சிறப்பான வளர்ச்சி பெற வாய்ப்பு அளிக்கிறது.


மொத்த முதலீட்டின் அளவில் 10சதவிகிதம் அல்லது வேலைக்கு அமர்த்தப்படும் ஒருவருக்கு ஆண்டுக்கு ரூ. 20,000 இவற்றில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. உயர்ந்த அளவு ஒரு தொழிற்சாலைக்கு ரூ. 10 இலட்சம் மட்டும் அளிக்கப்படும். 15 சதவிகித மாநில முதலீட்டு மானியத் திட்டத்தின் கீழ் வராத தமிழகத்தின் இதர பகுதிகளில் உள்ள, மேற்சொன்ன தொழில்களுக்கு இம்மானிய தொகை கிடைக்கும்.



சிட்கோ, தவணை முறையில் வழங்கும் தொழிற்கூடம்

ஏற்கெனவே உள்ள மாநில முதலீட்டுப் பங்கு மானியத் திட்டத்தை, அரசு, மேலும் 7 தாலுக்காக்களுக்கு விரிவாக்கியுள்ளது. குமரி மாவட்டத்தில் தோவாளை, சேலம் மாவட்டத்தில் இராசிபுரம், மதுரை மாவட்டத்தில் பழனி, கோவை மாவட்டத்தில் அவினாசி, நீலகிரி மாவட்டத்தில் குன்னூர், பெரியார் மாவட்டத்தில் தாராபுரம், நெல்லை மாவட்டத்தில் இராதாபுரம் ஆகியவை இந்த 7 தாலுக்காக்களாகும்.






மூன்றாண்டுப் பணிகள் தொகுப்பு மலர் மிகச் சிறப்பாக இருந்தது. மலரை மனமாரப் பாராட்டுகிறேன்.

—எஸ் செல்லப்பா
சந்தூர்

'தமிழரசு' மூன்றாண்டுப் பணிகள் தொகுப்பு மலர் கண்டேன். வியந்தேன். அரசு புரிந்துள்ள சாதனைகளைப் புள்ளி விவரங்களுடன் படித்து மகிழ்ந்தேன்.

—ஆர். ராஜேந்திரன்
கருவலூர், கோவை.

முன்றாண்டுப் பணிகள் தொகுப்பு மலர் பிரமாதம். வண்ண முகப்புடன் எண்ணம் இனிக்கும் கட்டுரைகளைப் படித்து மகிழ்ந்தேன். பாராட்டுகள்.

—சாந்தகுமார்
விவேகானந்தன்
கும்பகோணம்

தமிழக அரசின் மூன்றாண்டுப் பணிகள் தொகுப்பு மலர் கண்ணைக் கவரும் வண்ணத்துடனும், நல்ல காகிதத்திலும் அச்சிடப்பட்டு, வெளிவந்துள்ளது. மலர் கருத்துக் கருவூலமாகக் காட்சியளிக்கிறது. தமிழக அரசின் பல்வேறு துறைகளின் சாதனைகளை முறையாகத் தொகுத்து மலர் வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கு ஏற்ப, புகைப்படங்கள் மலரில் அணிசெய்கின்றன. யாவரும் படித்துப் பயன்பெற வேண்டிய இதழாகும் இது.

—மனோகரன்,
போரூர், சென்னை.

16.7.83 இதழ் கண்டேன். பெருந்தலைவர் காமராஜர் புகைப்படத் தொகுப்பு அருமை. அவரைப் பற்றிய கட்டுரைகளும் தகவல்களும் மனத்தைக் கவர்ந்தன.

—ம. இரத்தினவேலு,
ஸ்ரீபெரும்புதூர்.

மாநில முதலீட்டு-மானிய உதவித் திட்டத்தின் கீழ் 1980-81ஆம் ஆண்டிலிருந்து 'சிட்கோ' 381 தொழிற்சாலைகளுக்கு ரூ. 57.73 இலட்சம் உதவிய வகையில் சுமார் 30,000 பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தந்துள்ளது.

மத்திய அரசின் முதலீட்டு மானிய உதவித் திட்டத்தின் கீழ் திட்டம் தொடங்கிய 1974-75 ஆம் ஆண்டிலிருந்து 31-3-83 வரை 4,796 சிறுதொழில்களுக்கு ரூ. 1,621.51 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதில் 1982-83ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உதவித் தொகை மட்டும் ரூ. 894.58 இலட்சமாகும். 2369 சிறு தொழில் அமைப்புகள் இதனால் பலன் பெற்றன. இந்த ஆண்டு வழங்கப்பட்ட உதவித்தொகையின் மதிப்பு கடந்த எட்டு ஆண்டுகளில் வழங்கப்பட்ட மொத்த மானியத் தொகையின் மதிப்புக்கு ஈடாகிறது.

பல்வேறு தொழிற்பேட்டைகளில் தவணை முறைத் திட்டத்தின் கீழ் 'சிட்கோ' இதுவரை 1119 தொழிற்கூடங்களைக் கட்டித் தந்துள்ளது. 983 மேம்படுத்தப்பட்ட மனைகள் பல்வேறு தொழிற்பேட்டைகளில் சிறுதொழில்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 57,700 பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கின்றனர்.

அரசு தொழிற்பேட்டைகளில் வாடகை அடிப்படையில் ஒதுக்கப்பட்ட தொழிற்கூடங்களைத் தவணை முறையில் மாற்றித் தர வேண்டுமென்ற சிறுதொழிற்சாலை உரிமையாளர்களின் வேண்டுகோள் நீண்டகாலமாகவே ஏற்றுக் கொள்ளப்படாமலேயே இருந்து வந்தது. சென்ற ஆண்டு இதைப்பற்றி அரசு இறுதியாக முடிவு எடுத்து, அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றியது. 'சிட்கோ'வின் நிர்வாகத்திற்குட்பட்ட 33 அரசு தொழிற்பேட்டைகளிலுள்ள 783 தொழிற்கூடங்களை உள்ளடக்கியது இத்திட்டம்.

திருப்போரூர் அருகிலுள்ள ஆலத்தூரில் மருந்து தயாரிப்பு தொழிலுக்கு மட்டுமேயான ஒரு தொழிற்பேட்டையை அமைக்கும் ஒரு பெருமையான-அத்தியாவசியமான திட்டத்தை 'சிட்கோ' செயல்படுத்தி வருகிறது. தங்கள் மருந்து தயாரிப்புத் திட்டத்தைச் செயல்படுத்த சுமார் 75 சிறு தொழிற்சாலைகளுக்கு வாய்ப்பளிக்கப்பட இருக்கிறது.

சிறுதொழில்களின் உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை வசதி உதவி தரும் திட்டம் 1978-79-ல் தொடங்கப்பட்டது. 1978-79ஆம் ஆண்டில் சிறிய அளவில் அதாவது ரூ. 106.30 இலட்சம் மதிப்புள்ள விற்பனை வசதி உதவியுடன் தொடங்கியது. 1982-83ஆம் ஆண்டில் அதன் மதிப்பு ரூ. 494 இலட்சத்தை எட்டியுள்ளது. இந்த ஆண்டில் 1982-83ஆம் ஆண்டில் பெற்ற ஆர்டரின் மதிப்பு ரூ. 700 இலட்சமாகும்.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்படி தமிழக் அரசு நிர்ணயித்த தரத்திற்கேற்ப பல்பொடியைத் தற்போது தமிழகமெங்கும் பரவலாக அமைந்துள்ள 45 சிறு தொழில் அமைப்புகள் தயாரித்து அளிக்கின்றன. இத்திட்டத்தின் விளைவாக 15,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. குழந்தைகள் நல மையங்களுக்குத் தேவைப்படும் கல்வி போதனைக் கருவிகள் வழங்குவது மற்றொரு முக்கியமான பணியாகும். எட்டு மாத காலத்திற்குள் ரூ. 116.46 இலட்சம் மதிப்புள்ள 19,410 'செட் கருவிகளை' சிட்கோ கிடைக்குமாறு செய்தது. இவற்றைத் தயாரிக்கும் பணியில் 18 சிறு தொழில் அமைப்புகள் பங்கு கொண்டன.

# பதிப்புரை

தமிழ்நாட்டில் 1982 ஜூலை முதல் நாள் கிராமப்புறங்களில் துவக்கப்பட்ட மாபெரும் சமுதாயப் புரட்சித் திட்டமான முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான 15.9.82 அன்று நகர்ப்புறங்களுக்கும் விரிவாக்கப்பட்டது.

இந்தியாவின் அனைத்து மாநிலத்தவர்களாலும், வல்லுநர்களாலும், பல்துறை அறிஞர்களாலும், வெளிநாட்டவராலும் பாராட்டப்பட்டு வரும் இத்திட்டத்தின் அரிய பணிகளைத் தொகுத்து, தமிழரசு 16.9.83 இதழுடன் இலவச இணைப்பு நூலாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

# சமுதாயப் புரட்சித் திட்டத்தின் சாதனை

'மாபெரும் சமுதாயப் புரட்சித்திட்டமாக' கடந்த ஆண்டு ஜூலை முதல் நாள் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்திட்டம் ஊரகப் பகுதிகள் அனைத்திலும் தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பேரறிஞர் அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15 ஆம் நாளில் நகர்ப்புறங்களிலும் இத்திட்டம் தொடங்கப்பட்டது.

தமிழ்நாட்டின் கிராமப்புறங்களிலும் பிற நகர்ப்புறங்களிலும் வாழும் ஏழை எளிய மக்களின் குழந்தைச் செல்வங்கள் ஒரு வேளையேனும் ஊட்டச் சத்துணவை உண்டு மகிழும் வாய்ப்பை அளித்து இன்றைய தலைமுறையினரை வருங்காலத்தில் சீரிய குடிமக்களாக்கும் பெருந்தொண்டை நமது அரசு கடந்த ஆண்டு செயல்படுத்தத் தொடங்கியது.

இந்தியாவில் முதன்முதலாக ஏழை எளியோர் மகிழ்ந்திடும் வகையில் இத்தகைய அரிய திட்டத்தை அறிவித்து செயல்படுத்தியது தமிழ்நாடு அரசுதான்.

1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் ஏழைச் சிறு குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தின் குறிப்பு அறிவிக்கப்பட்டது.

''ஏழ்மைக் கோட்டுக்குக் கீழேயுள்ள பல குடும்பங்களில் குழந்தைக்குப் பிசைந்து ஊட்டுவதற்குச் சோறு இல்லாமல் கைபிசைந்து, கண் கலங்கி, அன்னைகள் நிற்கும் அவலநிலையைப் போக்கச் சிறிதேனும் முயற்சி செய்வது அரசின், அவசர அவசியக் கடமை என்பதை

இந்த அரசு உணர்கிறது. இந்த அடிப்படையில் 2 முதல் 10 வயது வரை உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு மதியம் ஒரு வேளையாகிலும் சத்துணவு கிடைப்பதற்கு வகை செய்ய ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 1982 சூலைத் திங்கள் முதற்கொண்டு தமிழ்நாடு முழுவதிலுமுள்ள, ஒரு வேளை உணவுக்கும் வழியின்றித் தவிக்கும் மிக ஏழ்மையிலுள்ள குழந்தைகளுக்கு மதிய உணவு இலவசமாக வழங்க இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.''

இவ்வாறு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட இத்திட்டத்தைத் துவக்குவதற்கு முதல் நாள் 30.6.1982 வானொலியிலும் தொலைக்காட்சியிலும் உரையாற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

''உறுபசியும், ஓவாப்பிணியும், செறுபகையும் சேராது இயல்வது நாடு'' என்பது வள்ளுவரின் வேத வாக்கு. 70 கோடி என்ற எண்ணிக்கை அளவை எட்டிக் கொண்டிருக்கும் இந்தியநாட்டின் மக்கள் பெருக்கம் ஒருபுறம், மீளமுடியாத வறுமையின் பயங்கரக் கொடுமை மறுபுறம், இவ்விரண்டு சூழலில் பிறந்துள்ள குழந்தைகள் ஒட்டிய வயிறோடும் உலர்ந்த உதடுகளோடும், இடுங்கிய கண்களோடும் இளைத்த மேனியோடும் இருக்கும் அவலநிலையை நமதுநாட்டு மருத்துவர்கள் பலமுறை வேதனையோடு சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

''கொடிது கொடிது வறுமை கொடிது, அதனினும் கொடிது இளமையில் வறுமை'' ஆம். பசித்தால் அழ மட்டுமே தெரிந்த வயதில் பசிக் கொடுமைக்காளாகும் அனுபவத்தை நான் இளமையில் அறிந்ததன் விளைவே இத்திட்டம். பக்கத்து வீட்டிலிருந்த ஒரு தாய் முறத்தில் அரிசியைத் தந்து கஞ்சி காய்ச்சிக் குடிக்க எங்களுக்கு உதவியிருக்காவிடில் மூன்று நாட்களாகப் பட்டினியாகக் கிடந்த எங்கள் தாயும் நாங்களும் என்றோ இந்தஉலகை விட்டுப் போயிருப்போம். அத்தகைய தாய்க்குலம் முழு நம்பிக்கையோடு என்னை முதல்மைச்சராக்கியுள்ளது.

அந்தத் தாய்க்குலத்தின் **கண்ணீரைத் துடைக்க** எனக்குத் தெரிந்த வழியில் இப்பணியை மேற்கொண்டுள்ளேன்.

தமிழ்நாட்டின் மொத்த மக்கள்தொகை 1981-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 4.82 கோடியாகும். இதில் 2 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 42.10 இலட்சம். 5 முதல் 10 வயது வரையுள்ள குழந்தைகளின்



**அன்னக் குவளையில் இறைவன் ஏழைகளுக்குக் காட்சி அளிக்கிறான்.**

**—அண்ணல் காந்தி அடிகள்**

எண்ணிக்கை 63.73 இலட்சமாகும். ஆக 2 முதல் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை மொத்தம் 105.83 இலட்சமாகும். ஏழ்மைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குழந்தைகளுக்கு இந்த இலவச உணவு அளிக்கப்பட வேண்டுமென்று திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது;' என்று குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துரைத்தபடி ஏழைத்தாய்மார்களின் கண்ணீரைத் துடைத்திட்ட இத்திட்டம் கடந்த ஓராண்டில் பெருஞ்சாதனை புரிந்துள்ளது.

இதுகுறித்த சுருக்கமான விவரங்கள் வருமாறு:—

2 முதல் 10 வயதுப் பிள்ளைகளுக்கு இலவச சத்
துணவு வழங்குவதற்கான ஒரு வரலாற்றுப் பெருமை
பெற்ற இத்திட்டத்தை 1.7.1982 அன்று தமிழ்நாடு
அறிமுகப்படுத்தியது. அன்று நண்பகல் 12 மணியளவில்
55.96 இலட்சம் குழந்தைகள் தமிழக கிராமப்புறங்களில்
உள்ள ஆயிரக்கணக்கான குழந்தைகள் சத்துணவு
மையங்களிலும், துவக்கப் பள்ளிகளிலும் அரசு இலவச
மாக வழங்கும் சத்துணவை அருந்த அமர்ந்தனர். குழந்
தைகள் உடல் நலத்தில் மட்டுமல்லாமல் கிராமப்புற
சமூக நிலைகளிலும் புதிய மாற்றங்களுக்கு வழி வகுத்
துள்ள திட்டம் ரூ. 100 கோடி மதிப்பீட்டில் உரு
வாக்கப்பட்ட இம்மாபெரும் திட்டம் மாண்புமிகு
முதல்வர் திரு எம். ஜி. ஆர் அவர்கள் உள்ளத்
தில் உதித்தத் திட்டமாகும். இத்திட்டம் செயற்கரிய
பரிமாணமும், அளப்பரிய பிள்ளைகளின் எண்ணிக்கை
யும் கொண்டிருப்பதால் நுணுக்கமான செயல் திட்
டத்தை வெகு தீர்க்கமாக வகுக்க வேண்டியிருந்தது. இம்
மாபெரும் திட்டத்தின் உன்னதமான நோக்கத்தால்
உந்தப்பட்டு நிருவாகம் மிகத் திறமையுடனும், கட்டுப்
பாட்டுடனும், நம்பிக்கையுடனும் செயல்பட்டுள்ளது.
இத்திட்டத்திற்கான பல்வேறு அறிவுத் திறம் படைத்த
பொதுமக்களிடமிருந்து வந்துள்ள மாபெரும் வரவேற்பு
இத்திட்ட அலுவலர்களுக்கு ஒரு பெரும் ஊக்கமாக
இருந்து வருகிறது.

**2+ - 4+ வயதுப் பிரிவினர்:**

இத்திட்டத்தினால் பயனடையும் பிள்ளைகள் இரு பிரிவினராக வகுக்கப்பட்டுள்ளனர். 2+ - 4+ வயதுப் பிரிவினர் குழந்தைகள் மையங்கள் குழந்தைகள் நல அமைப்பாளர்களால் இரு உதவியாளர்களின் துணையோடு பயிற்சியும், உணவும் அளிக்கப்படுகிறார்கள். அமைப்பாளர், உதவியாளர் பணியிடங்களுக்கு உள்ளூர் பெண்மணிகளே நியமிக்க தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அமைப்பாளர்களில் பெரும்பாலோர் பள்ளி இறுதி வகுப்பு தேறியவர்களாவர். இவர்கள் வயது வரம்பு 25 முதல் 35 வரை ஆகும். விதவைகளுக்கு இவ்வயது வரம்பு 25 முதல் 40 வரை அனுமதிக்கப்பட்டுள்ளது. 25 - 40 வயதிற்குட்பட்ட தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் உதவியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்விரு நியமனங்களிலும் விதவைகளுக்கும், கைவிடப்பட்ட பெண்களுக்கும் முன்னுரிமை வழங்கப்கட்டுள்ளது. அமைப்பாளர்களுக்கு ரூ.175 -ம் உதவியாளர்களுக்கு ரூ.60 -ம் மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது. உதவியாளர்கள் சமையல் மற்றும் பரிமாறுதல் பணியைச் செய்வர். அமைப்பாளர்கள் மையத்தின் பொது மேற்பார்வைகளையும், குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கும் பணியையும் ஆற்றுவர். ரூ.600 - மதிப்புள்ள கல்வி மற்றும் விளையாட்டுச் சாதனங்கள் ஒவ்வொரு பாலர் பள்ளி மையத்திற்கும் அளிக்கப்பட்டுவருகின்றன. ரூ.2,000-மதிப்புள்ள சமையல் பாத்திரங்கள், தட்டுக்கள், குவளைகள் ஒவ்வொரு மையத்திற்கும் அளிக்கப்பட்டுள்ளன. 1.8.82-ம் நாளின்படி 2+ - 4+ வயதுப் பிரிவில் 19.89 இலட்சம் குழந்தைகள் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளனர்.

**வயலுக்கு நாற்றங்காலில் பயிரை வளர்ப்பார்கள். அதுபோல எதிர்கால வயலுக்கு ஏற்ற நாற்றங்கால் பயிராகப் பள்ளிப் பிள்ளைகள் இருக்கிறார்கள்.**

**நாற்றங்கால் பயிர் பார்ப்பதற்கு பசேல் என்று பசுமையாக இருப்பது மட்டுமல்ல-அதை நன்றாக வளர்த்து விரிவான வயலில் முறையாக நட்டு ஒழுங்காக வளர்த்தால் தரமான பயன் கிட்டும்.**

**—பேரறிஞர் அண்ணா**



**5+ - 9+ வயதுப் பிரிவினர்:**

துவக்கப் பள்ளிகளில், பயிலும் 5+ - 9+ வயதுப் பிள்ளைகள் இப்பிரிவின் கீழ் பலனடைகின்றனர். இத்திட்டம் நடக்கும் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.2 - தினசரி ஊதியத்தில் ஒரு பகுதி நேர சமையலரும், ரூ.1 - தின சரி ஊதியத்தில் ஒரு பகுதி நேர உதவியாளரும் நியமிக் கப்பட்டுள்ளனர். 500 பிள்ளைகளுக்கும் மேல் உணவுண் ணும் பள்ளிகளுக்கு கூடுதலாக ஒரு சமையலர் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

**சத்துணவு:**

கீழ்ககண்ட விகிதத்தில் சத்துணவு தயாரித்து வழங் கப்படுகிறது.

| பொருட்கள் | 2+ - 4+ கிராம் | 5+ - 9+ கிராம் |
|---|---|---|
| அரிசி | 80 | 100 |
| பருப்பு | 10 | 15 |
| எண்ணெய் | 5 | 5 |
| காய்கறி, தாளிதம் | 50 | 50 |

தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 5 முதல் 10 வயது வரையிலான சிறுவர்களோடு 2 முதல் 5 வயது வரை உள்ள பாலர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கப்படுகிறது.

சத்துணவுத் திட்டத்தின்படி ஆண்டில் 365 நாட் களும் உணவு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழே வுள்ள சிறுவர்கள் அனைவருக்கும் சத்துணவு வழங்கப் படுகிறது. வறுமைக் கோட்டை நிர்ணயிக்கையில் தாரா ளமான கண்ணோட்டத்துடன் செயல்பட வேண்டும் என் றும், மதிய உணவைப் பெற விரும்பும் சிறுவர் எவர்க்கும் அந்த வாய்ப்பு மறுக்கப்படக்கூடாது என்றும் உத்தரவு கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சத்துணவு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சிறுவருக்கும் உணவுச் செலவுகளுக்காக 5 45 காசு மானியமும், நிருவாகச் செலவுகளுக்காக 5 காசும் அளிக்கப்படுகிறது. இவ்வாறாக இத்திட்டத்திற் காகும் நிதிப் பொறுப்பு முழுவதையும் அரசே ஏற்றுக் கொண்டு உள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு 500


சிறுவர்களுக்கும் ஒரு சமையற்காரரையும், உதவியாளர் ஒருவரையும் நியமித்து அவர்களுக்கு அரசு நிதியிலிருந்து மதிப்பூதியம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

**பெண்கள் வேலைவாய்ப்பிற்கான** மாபெரும் திட்டம்:

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்







தினால் நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் 1,58,381 பெண்களுக்குக் குறிப்பாக விதவைகளுக்கும், கைவிடப்பட்ட பெண்களுக்கும் முன்னுரிமை தரப்பட்டு, வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இம்மாபெரும் வேலைவாய்ப்புத்திட்டம் கிராமப்புறங்களில் ஒரு புதிய மலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சுதந்தர இந்தியாவின் 35 ஆண்டுக்காலத்தில் இத்தகு மாபெரும் வேலைவாய்ப்பு ஏற்படுத்திய முன்னோடித் திட்டமாக இது திகழ்கிறது.

மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

—மணிமேகலை

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்

—திருக்குறள்

**பாலர் பள்ளிகளில் வேலைவாய்ப்ப:**

பாலர் பள்ளிகளில் குழந்தைகள் நல அமைப்பாளர் குழந்தைகள் நல உதவியாளர் பணிகளுக்காக 78,490 பெண்களுக்குப் புதிதாக வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கிராமப்புறக் குழந்தைகளைக் கண்காணிக்கும் பொறுப்பிற்கும், சமைத்து உணவூட்டும் சேவைக்கும் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள் குழந்தைகள் நல அமைப்பாளர்களாகவும், குழந்தைகள் நல உதவியாளர்களாகவும் மக்களால் ஏற்கப்பட்டிருப்பது ஒரு மன நிறைவு தரும் அனுபவமாகும். சமுதாய ஒருமைப்பாட்டிற்கு இத்திட்டம் வழி வகுத்துள்ளது என்பது தெளிவு. சாதி வேறுபாட்டுணர்வுகள் முற்றும் மறைந்து ஒருமைப்பாடு நிலைபெற்று தழைக்கப் பல்லாண்டுகள் ஆகலாம் எனினும், இவ்வொருமைப்பாட்டிற்கு சரியான ஒரு துவக்கத்தை இத்திட்டம் ஆரம்பித்துள்ளது என்பதில் ஐயமில்லை.

பாலர் பள்ளிகளில் பணிபுரியும் பெண்களில் 10,507 விதவைகளும், 3,416 கைவிடப்பட்ட பெண்களும் உள்ளனர். வாழ்வில் முதன்முறையாக இவர்களுக்கு நிலையான வருவாய் தரும் ஒரு பணி ஆற்றும் மகிழ்ச்சி கிட்டியுள்ளது.

**பள்ளிகளில் வேலை வாய்ப்பு:**

பள்ளிகளில் சமையல் பணிக்கும், எடுபிடி பணிக்கும் முறையே 34,298 பேர்களும் 33,828 பேர்களும் நியமிக்கப்பட்டுளனர். சமையலாளர்களில் 2,490 (10 விழுக்காட்டிற்கும் குறைவு) பேர்களே ஆண்கள். பிற 31,808 பேர்கள் பெண்கள். உதவியாளர்களில் 2,396 ஆண்களும், 31,432 பெண்களும் உள்ளனர். இதைத் தவிர பள்ளிச் சத்துணவு மையங்களில் மேலும் 33,829 அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மொத்தமுள்ள 1,80,119 பேர்களில் 1,58,381 பேர் பெண்கள் ஆவர்.



பெண்கள், சமூக ஊழியர்கள், கொடையாளர்கள்
தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர்கள் அடங்கிய
கிராமப் புற ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டு
உள்ளூர்களில் இத்திட்டம் கண்காணிக்கப்பட்டு வரு
கிறது. அதிகாரிகள் மற்றும் அலுவல் சார்பற்றவர்களால்
இத்திட்டம் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**நகர்ப்புற விரிவாக்கம்:**

15.9.1982 முதல் இத்திட்டம் 2+ - 4+ வயதுப்
பிள்ளைகளுக்காக நகர்ப்புறங்களுக்கும், பள்ளிப் பிள்ளை
களுக்காகச் சென்னை, கோவை, மதுரை மாநகராட்சி
களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனால் மேலும்
4 இலட்சம் 2+ - 4+ வயதுப் பிள்ளைகளும், 2.5 இலட்
சம் 5+ - 9+ வயதுப் பிள்ளைகளும் பயனடைந்துள்ள
னர். இவர்களுள் 2+ - 4+ வயதுப் பிரிவில் 1.43 இலட்



சம் பிள்ளைகளும், 5+ - 9+ வயதுப் பிரிவில் 46,000 பிள்ளைகளும் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள். இம்மாபெரும் திட்டத்தினால் தற்போது மாநிலமெங்கும் 22.66 இலட்சம் 2+ - 4+ வயதுப் பிள்ளைகளும், 41.74 இலட்சம் 5+-9+ பிள்ளைகளும் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தில் பயனடைந்து வரும் 64.40 இலட்சம் பிள்ளைகள் இந்த வயதுப் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கையில் 60 விழுக்காடு ஆகும்.

தற்போது 33,829 பள்ளிச் சத்துணவு மையங்களும் 27,920 பாலர் பள்ளி மையங்களும் ஆக மொத்தம் 61,749 முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்கள் இயங்குகின்றன. இவற்றுள் கிராமப்புறங்களில் 32,321 பள்ளி மையங்களும், 22,915 பாலர் பள்ளி மையங்களும் ஆக மொத்தம் 55,236 மையங்கள் (89 விழுக்காடு) உள்ளன. மீதமுள்ள 6,433 மையங்கள் நகராட்சி மற்றும் மாநகராட்சி நகர்ப்புற எல்லைகளில் உள்ளன.

கட்டடங்கள் :

ரூ.38,000 - முதல் ரூ.40,000 - மதிப்பீட்டில் சத்துணவு மையத்திற்கான ஒரு கட்டட மாதிரி வரைவு செய்யப்பட்டுள்ளது. இச்சத்துணவு மையங்களைக் கட்டுவதற்காகப் பொதுமக்களிடமிருந்து பெருமளவு நன்கொடை வருகிறது. கட்டடம் கட்டுவதற்காக நன்கொடை தருவோரின் பெயரை அந்தந்த மையங்களுக்கு வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை வரப்பெற்றுள்ள நன்கொடைகளிலிருந்து 5 மாவட்டங்களில் 7 மையங்கள் கட்டி முடிக்கப்பட்டமைக்காக ரூ.2.80 இலட்சம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**முதியோர் உதவித் தொகை பெறுவோர்க்குச் சத்துணவு:**

11.1.1983-ம் நாளிட்ட சமூக நலத் துறை அரசாணை எண்.69-ல் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் முதியோர் உதவித் தொகை பெற்று வருவோர்க்கும் 15.1.1983 முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனால் 1,99,158 பேர் பலனடைவர். சத்துணவு மையத்திற்கு நேரில் வந்து உணவு பெறக்கூடிய முதியோர்களுக்கும் 90 பைசா மதிப்புள்ள ஒரு வேளை மதிய உணவு இலவசமாக வழங்கப்படுகிறது. இதைத்தவிர அவர்களுக்கு ஏற்கனவே முதியோர் உதவித் தொகை



திட்டத்தில் வழங்கப்பட்டு வந்த ஒரு கிலோ அரிசியில் அரைகிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. சத்துணவு மையங்களுக்கு வர இயலாத முதியோர்களுக்கு அவர்கள் முன்பு பெற்று வந்ததுபோலவே ஒரு கிலோ அரிசி தொடர்ந்து வழங்கப்படும். 2 இலட்சம் முதியோர் களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டதால் அரசுக்குக் கூடுதலாக ரூ.6.48 கோடி செலவாகும் என மதிப்பிடப் படுகிறது. 1,99,158 முதியோர்களில் 43,888 கைவிடப் பட்ட விதவைகளும், 14,471 ஊனமுற்றவர்களும் 30,000 விவசாயத் தொழிலாளர்களும் உள்ளனர்.

முதியோர்களுக்கு கீழ்வரும் அளவில் உணவு வழங்கப் படும்:

| | |
|---|---|
| அரிசி | 200 கிராம் |
| எண்ணெய் | 10 கிராம் |
| பருப்பு | 15 கிராம் |
| காய்கறி மற்றும் தாளிதம் | 50 கிராம் |

இத்திட்டத்திற்கான மொத்த செலவு ரூ.133 கோடி ஆகுமெனத் தோராயமாகக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சத்துணவுத் திட்டச் செலவுகளுக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதிலுள்ள பெரும் இடர்ப்பாடுகளை அரசு உணர்ந்தும் இச்செலவு இந்நாட்டில் வருங்கால முதலீடு என்பதாலும், நாளைய இளைய தலைமுறையினரின் நல்வாழ்விற்குச் செய்து கொள்ளும் முன்வைப்பீடு என்பதாலும் ஆழ்ந்த நம்பிக்கையோடு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசின் இப்பணியைத் தமிழக மக்கள் உறுதியோடும் மகிழ்ச்சியோடும் ஏற்க முன் வந்துள்ளனர் என்பது இத்திட்டத்தின் ஓராண்டு நிறைவின் வெற்றி நமக்கு மிகத் தெளிவாகக் காட்டியுள்ளது.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் செயல்பாட்டினை மேலும் சிறப்பாக்கி திறம்பட நிறைவேற்றிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டத்திற்காக தனியானதொரு அமைச்சரை நியமித்துள்ளார்கள். கடந்த 9.9.83 அன்று

மாண்புமிகு சத்துணவுத்திட்ட அமைச்சராகத் திரு ஆர். சவுந்தரராஜன் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்.

முதன்முதலில் சத்துணவுத் திட்டத்தைத் துவக்கி வைக்குமுன்பு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரையில்—

''இந்த மாநிலம் முழுவதும் ஆயிரக் கணக்கான குக்கிராமங்களிலும் சிற்றூர்களிலும் இலட்சக்கணக்கான ஏழைக் குழந்தைகள் ஒன்றுகூடி, ஊட்ட உணவு அருந்தும் காட்சி அவர்கள் தங்கள் மழலை மொழியில் நமக்கு வாழ்த்துக் கூறும் ஒளிமயமான நிகழ்ச்சியாக அமையும்'' என்றார்கள்.

ஆம், அந்த எதிர்காலச் செல்வங்கள் நாளும் நமக்கு வாழ்த்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு ஓர் உத்தரவாதத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம்.

பொன்னெழுத்தால் உருவாகும் அப்புதிய சரித்திரத்தை உருவாக்குவதில் அரசுடன் ஒத்துழைப்பதும் ஆதரவு காட்டுவதும் நமது கடமை.



# முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் ஓர் ஆய்வு

மாண்புமிகு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்துள்ள சத்துணவு திட்டத்தினால் குழந்தைகள் உடல் நலம் பெரிதும் வளர்ச்சி அடைந்துள்ளது என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் பாராட்டு தெரிவித்துள்ளது.

இலவச சத்துணவுத் திட்டத்தின் பயனாகக் குழந்தைகளின் உயரம், எடை முதலியவை கூடி யுள்ளன என்றும், குறிப்பாக இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் இந்த சத்துணவுத் திட்டத்துக்குப்பின் மிகப் பெரிய அளவில் பயனடைந்துள்ளனர் என்றும் மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் கூறியுள்ளது.

சத்துணவால் சிறுவர்களின் எடை 0.64 கிலோ முதல் 1.63 கிலோ வரை அதிகரித்துள்ளது. சிறுமிகளின் எடை 0.84 முதல் 1.15 கிலோ வரை கூடியுள்ளது.

சத்துணவுத் திட்டம் பற்றி இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் ஓர் ஆய்வு நடத்தியது.

''கோவை அவினாசிலிங்கம் மனை இயல் கல்லூரி''மேல்நிலைப் பட்டப் படிப்பு மாணவிகள் மற்றும் ஊழியர்கள் 37 சத்துணவுத் திட்ட மையங்களிலும் 33 சத்துணவு ஆரம்பப் பள்ளிகளிலும் சென்று ஆய்வு நடத்தினர்.

பெரும்பாலும் ஏழை மக்களின் குழந்தைகளிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

சத்துணவு போடப்படுவதற்கு முன்பு இருந்த நிலையும், சத்துணவு சாப்பிட்டதற்குப் பின் இருந்த நிலையும் ஆய்வு செய்யப்பட்டன. அதில் சத்துணவால் குழந்தைகளின் உடல்நலம், ரத்த ஓட்டம், உடல் வளர்ச்சி முதலியவை கூடியுள்ளன. இத்திட்டம் தொடர்ந்தால் குழந்தைகளின் மன நலம், உடல் நலம் மேலும் மேன்மை அடையும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

இந்த ஆய்வு கோவை நகர்ப்புறம், மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உள்ள 3,219 குழந்தைகளிடம் நடத்தப்பட்டது.

வீடுகளில் போதிய உணவு கிடைக்காத நிலையில் பள்ளிகளில் கிடைக்கும் இந்த இலவச மதிய சத்துணவு பெரிதும் உதவுகிறது. அதே சமயத்தில் வசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் கூட இந்தச் சத்துணவுத் திட்டத்தால் பயனடைகின்றனர்.

சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்ட சமயம் 33.47 சதவிகி

தக் குழந்தைகள் மட்டுமே போதிய சத்துடன் இருந்தனர். ஆனால் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டு 4 மாதங்களுக்குப்பின் 75.2 சதவிகிதம் குழந்தைகள் போதிய சத்தினைப் பெற்றதோடு வயிற்று நோய், இரத்தச் சோகை, தசைகள் பற்றிய நோயிலிருந்தும் விடுபட்டுள்ளனர்.

இத்திட்டத்தினால் குழந்தைகள் மத்தியில் உணவுப் பழக்கத்தில் நல்ல மாறுதல் ஏற்பட்டு உள்ளது.

பள்ளிகளில் சத்துணவு போடப்படுவது நிறுத்தப்பட்டால், 10 சதவிகிதப் பெற்றோர்கள்தான் தங்கள் குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புவார்கள் என்றும் ஆய்வில் இருந்து தெரியவந்துள்ளது.

சத்துணவுத் திட்டம் பற்றி அதைச் சாப்பிடும் குழந்தைகளிடமிருந்தோ, அவர்களது பெற்றோர்களிடமிருந்தோ எவ்விதப் புகார்களும் சொல்லப்படவில்லை. இத்திட்டத்தால் குழந்தைகளின் உடல் வளர்ச்சி அதிகரித்துள்ளது என்று 400 பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இத்திட்டம் கல்வி வளர்ச்சியில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இது மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பதுதான் அனைவரது விருப்பம். இவ்வாறு அந்த ஆய்வு நடத்தியவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.



தமிழரசு அச்சகம்,

மக்கள் மதிக்கப்படுகிற நிலை ஏற்பட்டுள்ளது" என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தம்முடைய வாழ்த்துச் செய்தியிலே கோடிட்டுக் காட்டியிருந்தார்.

### சென்னை விழா

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க.சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் முன்னின்று நடத்திய சென்னை மாவட்ட ஆசிரியர் தினவிழாவும்-தமிழக நல்லாசிரியர் விருது வழங்கு விழாவும் வள்ளுவர் கோட்டத்தில் சிறப்புற நடைபெற்றன. தமிழக பள்ளிக் கல்வித்துறை சார்பிலே இம்மாதம் 4,5 ஆகிய இருநாட்களும் இவ்விழா இனிது கொண்டாடப்பட்டது.

4.9.83 ஞாயிறன்று நடைபெற்ற ஆசிரியர் தினத் தொடக்க விழாவில் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பங்கேற்றார்.

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் வரவேற்புரையோடு மாலை 4 மணியளவில் தொடங்கிய விழாவுக்கு, கல்வித்துறை ஆணையரும் செயலாளருமான திரு தி.து.சுந்தரராஜ் இ.ஆ.ப. அவர்கள் தலைமையேற்றார். வேளாண்மைத்துறை இயக்குநர் திரு யு.எஸ். நடராஜன், இ.ஆ.ப. அவர்களும் தமிழகப் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு ஜே.ஏ. ரயான், திரு எம்.ஏ. தேவராசன், திரு பி.என். தவான், திரு.காந்திலால் திரு எச். சங்கு ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர்.

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள்-இந்த ஆண்டு ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெறும் சென்னை மாவட்ட ஆசிரியர்கள் ஆசிரியைகள் 170 பேர்களுக்குப் பரிசுகளும், முப்பதாண்டுகள் பணிபுரிந்த ஏறத்தாழ ஆயிரம் ஆசிரியப் பெருமக்களுக்கு அன்பளிப்புகளும், பேச்சு, கட்டுரை போன்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்குப் பரிசுகளும் வழங்கினார்.

**பின்னர் அவர் ஆற்றிய தமது உரையில்: "கல்விக் கண்ணைத் திறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தாங்கள் செய்வதைச் சாதாரண தொழில் என்று மட்டுமே கருதாமல் கடமையாக சமுதாயத் தொண்டாகக் கருதிட வேண்டும். உங்கள் பணி எதிர் காலச் சந்ததியை உருவாக்கும் பணி என்பதால் அது ஊனப்பட்டு விடாதபடி கவனம் செலுத்த வேண்டும். எதிர்காலச் சந்ததிக்கு வழி காட்டும் பொறுப்பை நல்லவிதமாக நிறைவேற்றித் தர வேண்டும்" என்று குறிப்பிட்டார்.**



**'விலைபோட்டு வாங்கவா முடியும்-கல்வி**
**வேளை தோறும் கற்று வருவதால் படியும்!'**

**—பாவேந்தர் பாரதிதாசனார்**

மாவட்டக் கல்வி அலுவலர் திரு.வே.ரமணி நன்றி கூறினார்.

நிகழ்ச்சியின் முடிவாகப் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவிகள் பங்கேற்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### விருது வழங்கும் விழா

5.9.83 திங்களன்று மாலை 4.30 மணியளவில் தொடங்கிய சென்னை மாவட்ட ஆசிரியர் தின விழாவில், நல்லாசிரியர் விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் வரவேற்புரையோடு தொடங்கிய இவ்விழாவிற்கு மதிப்புமிகு தலைமைச் செயலர் திரு கு.சொக்கலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினார்.





**விழாவில் பங்கேற்ற மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், 208 ஆசிரியர்களுக்கும் ஆசிரியைகளுக்கும் நல்லாசிரியர் விருது வழங்கினார். அதற்கு முன்னதாக அவர் பேசுகையில் "ஆசிரியப் பெருமக்களுக்கு ஒரு முக்கியக் கடமை உள்ளது. வருங்காலச் சமுதாயம் இன்றைய இளந்தலைமுறையினர் கையில் உள்ளது. அந்தச் சமுதாயம் தேச பக்தி உணர்வு, சமுதாய விசுவாசம் ஆகியவற்றோடு எதிர் காலத்தில் உருவாகத் தக்க வகையில் உங்கள் பணி அமைய வேண்டும்"என வேண்டுகோள் விடுத்தார்.**

### முதல்வர் மோதிரம்

பத்தாம் வகுப்புத் தேர்வில், தமிழகத்திலேயே அதிக மதிப்பெண் பெற்ற மாணவி லீமா பாலினுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பரிசாக வழங்கிய தங்க மோதிரம் மாண்புமிகு கல்வியமைச்சரால் பரிசாக அளிக்கப்பட்டது. அடுத்த கட்ட மதிப்பெண் பெற்ற மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

கீழ்த்திசை மொழிப் பள்ளி மாணாக்கர் 9 பேருக்குத் தங்கப் பதக்கங்களும், 7 பேருக்கு வெள்ளிப்பதக்கங்களும் அளிக்கப் பட்டன.

பத்தாம் வகுப்பில் அதிக சதவீதம் மதிப்பெண் பெற்ற பள்ளிகளின் தலைமையாசிரியர்-தலைமையாசிரியை 16 பேர்களுக்கும் மேநிலைப் பள்ளி தலைமையாசிரியர் 15 பேர்களுக்கும் கேடயங்கள் அளிக்கப்பட்டன.

### நிதியளிப்பு

தமிழக ஆசிரியர் நல நிதிக்கென விழாக் குழுவின் சார்பில் 25 ஆயிரம் ரூபாய் காசோலை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

ஆந்திரத் தொழிலதிபரான திரு எல்.வி.இராமையா என்பவர், இந் நிதிக்கென ஐயாயிரம் ரூபாய் வழங்குவதாக அறிவித்தார்.

விழா முடிவில், பள்ளிக் கல்வி இயக்குநர் நன்றி கூறினார். ஆசிரியர் தின விழா நடந்த இருநாட்களும் வள்ளுவர் கோட்டம் ஆசிரியப் பெருமக்களும் மாணவ மாணவிகளும் நிரம்பி வழிவதாக அழகுறத் திகழ்ந்தது.



**அறிவும் ஆற்றலும்!**

**அறிவினாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்!**

**—பேரறிஞர் அண்ணா.**



# உதகையில் ஒரு புதுமை

மலைகளின் ராணி என்னும் மங்காப்புகழ் பெற்று நிலை பெற்று நிற்கும் நீலகிரி மாவட் டம், உதகமண்டலத்தில் 18.6.83 அன்று மாண்புமிகு செய்தி-அற நிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமையில், மேதகு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா அவர்கள் தொட்டபெட்டாவில் தொலை நோக்கி இல்லத்தினையும், உத கையில் படகுக் குழாமினையும் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்கெனவே கொடைக் கானலில் ''கோக்கர்ஸ்வாக்'' என்ற இடத்திலும், குறிஞ்சி ஆண்டவர் கோயில் அருகிலும் மற்றும் ஏர்க்காட்டில் ''லேடீஸ் சீட்'' என்ற இடத்திலுமாக 3 தொலைநோக்கி இல்லங்களை அமைத்துள்ளது.


தென்னகத்திலேயே மிக உயர்ந்த சிகரமாக 8,600 அடி உயரமுள்ள தொட்டபெட்டா வில் 4-வது தொலைநோக்கி இல் லம் ரூ. 4 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு அடுக்குகள் கொண்ட இத்தொலை நோக்கி இல்லத்தில் உள்ள கருவி பார்வையாளர்களுக்கு வழங்கப் படும் டோக்கன் மூலம் தானா கவே இயங்கும். அமெரிக்க நாட்டிலிருந்து இறக்குமதி செய் யப்பட்ட இக்கருவியின் விலை ரூ. 47,000 ஆகும். இத்தொலை நோக்கிக் கருவி மூலம் சுற்றுலாப் பயணிகள் நீலமலையைச் சுற்றி

**கிருபால்தாஸ் ஜான்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**நீலகிரி மாவட்டம்.**

ஏழிலார்ந்து நிற்கும் இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளிக்கலாம்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பயணிகளுக்குத் தங்கும் வசதிகள் மற்றும் சுற்றுலாப்







படகுக் குழாமினை மேதகு ஆளுநர் அவர்கள் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் உடன் உள்ளார்.

தொட்டபெட்டாவில் அமைக்கப் பெற்றுள்ள தொலைநோக்கிக் கருவி.



பயணத் திட்டங்களை அளிப்ப தோடு பொழுதுபோக்கு வசதி களும் செய்து வருகின்றது. படகுக் குழாம்கள் சுற்றுலாப் பய ணிகளைப் பெரிதும் கவர்ந்திழுக் கின்ற வகையில் உதகையிலும் ஏர்க்காட்டிலும் அமைக்கப்பட் டுள்ளன.

உதகையிலுள்ள படகுக் குழாம் பெருகிவரும் பயணிகளின் தேவைக்குப் போதுமானதாக இல்லாமையால் படகுக் குழாம் கட்டடத்திற்கு அருகில் ரூ. 6.50 இலட்சம் செலவில் புதிய படகுக் குழாம் கட்டப்பட்டுள்ளது.

இப்புதிய கட்டடம் இரு தளங் களையுடையது. கீழ்த்தளத்தில் பயணிகள் ஓய்வுக்கூடமும், மேல் தளத்தில் சிற்றுண்டி விடுதியும், நடத்தப்படும். மேல்தளத்தில் பார்வையாளர்கள் உதகையின் எழில்மிகு ஏரியைச்சுற்றியுமுள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கும் வகையில், கண்ணாடிகள் பொருத்தப்பட்டு, கண்ணாடி மாளிகையாகக் காட்சி அளிக் கிறது.



# பேரூராட்சிகளில் தன்னிறைவு

எச்.பி.என். ஷெட்டி, இ.ஆ.ப.
ஆணையாளர்-அரசுச் செயலாளர்
ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித்துறை

தன்னிறைவுத் திட்டம் என்றதொரு மகத்தான திட்டம் ஊராட்சிகளிலே நிறைவேற்றப்படாதிருந்தால், ஊராட்சிகளிலுள்ள மக்களுக்கு அன்றாட வாழ்க்கையின் அடிப்படை வசதிகள் கூட இன்னும் கிடைக்காமலே போயிருக்கும் என்பதை எவரும் மறுக்க இயலாது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்பு ஊராட்சிகள் அனைத்து வசதிகளும் பெற்று, கிராம வாழ் மக்கள் வாழ்விலே பெரியதொரு முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அனைவரும் அறிவர். தன்னிறைவுத் திட்டத்தின் தன்னிகரற்ற பயன்களை அனைத்துப் பேரூராட்சிகளுக்கும் படிப்படியாக அளிக்க விரும்பிய தமிழ்நாடு அரசு, 1982-83ஆம் ஆண்டில் 146 பேரூராட்சிகளைத் தேர்ந்தெடுத்து ரூ. 5 கோடி உதவித் தொகை அளித்து தன்னிறைவுத் திட்டத்தைச் செயல் படுத்த ஆணையிட்டது.

அன்றாட அடிப்படைத்தேவைகளான குடிநீர் வழங்கல், இணைப்புச் சாலைகள், வடிகால்கள், ஆதி திராவிடர்களுக்கான குடியிருப்பிலிருந்து மயானத்திற்குப் பாதைகள் அமைத்தல், தெரு விளக்குகளைப் பொருத்துதல், சலவைத் துறைகளைக் கட்டுதல் ஆகிய பணிகளையே முதற்கண் எடுத்துக் கொள்ள வேண்டுமென அரசு ஆணையிட்டது.

1983-84ஆம் ஆண்டில் இரண்டாவது கட்டமாக 200 பேரூராட்சிகளில், தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.5 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



தன்னிறைவுத் திட்டம், மாவட்டங்களில் எவ்வித மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக, சேலம் மாவட்டத்தின் பேரூராட்சிகளில் இத்திட்டம் நிறைவேற்றப்படும் சிறப்புக்களைச் சிறிது காண்போம்.

இம்மாவட்டத்தில், ஆர்.புதுப்பட்டி, வீரகனூர், காடையாம்பட்டி, சேராப்பள்ளி, நாமகிரிப்பேட்டை, கொளத்தூர், கீரிப்பட்டி, தெடாவூர், வனவாசி, சிராமணி என்ற 10 பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டம் சென்ற ஆண்டு செயல்படுத்தப்பட்டது.

குடிநீர் வழங்கும் பணிகள் 11. இணைப்புச்சாலைகள் 47 770 கிலோ மீட்டருக்கான 107 வேலைகள். சிறுபாலங்கள் 29, வடிகால்கள் 156, ஆகியவற்றுடன் 7 பேரூராட்சிகளிலே தெருவிளக்குகள் அமைக்கும் வேலையும் மேற்கொள்ளப்பட்டன. எடுத்துக்கொண்ட மொத்த வேலைகளின் எண்ணிக்கை 310. இவற்றிற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ 48.200 இலட்சம்.

மேற்கூறிய புள்ளிவிவரங்கள் சேலம் மாவட்ட அளவிலே சேகரிக்கப்பட்டவையாகும்.

ஓரிரு பேரூராட்சிகளிலே நடைபெற்ற வேலைகளைப்பற்றி தனித்தனியே காண்பது நல்லது.

நாமகிரிப்பேட்டைப் பேரூராட்சியில் 14 இடங்களில் சாக்கடைகளும், 2 இடங்களில் சாலைகளும் ஒரு சிறுபாலமும் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கான மொத்த முதலீடு ரூ. 4,79,500. இப் பேரூராட்சியில் போதுமான கழிப்பிடங்கள் இருக்கின்றன. இரண்டு கிணறுகளில் நீரிறைவை இயந்திரங்களைப்பொருத்தி, குடிநீர்த் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வசதி செய்யப்பட்டுள்ளது. வாரந்தோறும் இங்குச் சந்தை கூடுகிறது. ஆதி திராவிடர்களுக்கென்றே 4 இடங்களில் சாக்கடை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நாமகிரிப்பேட்டையில் 18,617 பேர்கள் வசிக்கின்றனர். தன்னிறைவுத் திட்டத்தில் இங்குள்ள ஒவ்வொருவருக்கும் சராசரியாக ரூ. 25.50 செலவிட்டு தமிழ்நாடு அரசு பல வசதிகளைச் செய்துள்ளது.

இரா. புதுப்பட்டியிலே 2,230 மீட்டர் மொத்த நீளத்திற்கு ரூ.3,20,200 செலவில் கழிவுநீர்க் கால்வாய்கள் அமைக்கப்பட்டு உள்ளன. தவிர 6.4 கிலோமீட்டர் நீள இணைப்புச் சாலைகளும் ரூ. 1,46,300 முதலீட்டில்போடப்பட்டுள்ளன.

காடையாம்பட்டி பேரூராட்சியில், சுண்டாகப்பட்டி ஓர் ஒற்றையடிப் பாதையாகவே இருந்தது. 9 கிராமங்களைச் சார்ந்த மக்கள் இந்தக் கரடுமுரடான சாலையையே கடந்து சென்று கொண்டிருந்தனர். நோயாளிகளைக் கட்டிலில் தூக்கிச்சென்று சிகிச்சைப் பெற்று திரும்பிக் கொண்டிருந்தனர். கண்டிராக்டர்கள் கூட, புதிய சாலையை அமைத்துத் தரமுன்வரவில்லை. 10 ஆண்டுகளாக மக்கள் சாலை வேண்டி நின்றனர். தன்னிறைவுத் திட்டம் இந்தப் பேரூராட்சிக்கு வந்த பிறகுதான், நிலைமை மாறிற்று. சாலையோரத்து நிலங்களை ஆக்கிரமித்து இருந்தவர்கள் தாங்களாகவே இடங்களைக் காலி செய்து வழிவிட்டனர். சாலையிட்டதும் நோயாளிகளுக்கும், இதர போக்குவரத்திற்கும் விடிவு ஏற்பட்டது. ஒவ்வொரு ஞாயிறன்றும் 1500 பேர் சந்தைக்கு வருகின்றனர். தவிர இவ்வூராட்சியிலுள்ள ஆதி திராவிடர்கள் பகுதியில் மட்டும் 49 மின்விளக்குகள் உள்ளன.

சேராப்பள்ளிப் பேரூராட்சியில் தன்னிறைவுத் திட்டத்திலே சராசரியாகத் தனியொருவருக்கு ரூ. 46.80 செலவிடப்பட்டுள்ளது என்பது வியப்பில் ஆழ்த்தும் தகவல் அல்லவா?

தன்னிறைவுத் திட்டத்தால் ஏற்பட்ட நன்மைகள் யாவை?

வடிகால்கள் அமைக்கப்பட்டதால், சாக்கடைகள் ஓரே வழியாகத் தடங்கல் ஏதும் இன்றி ஓடுகின்றன. அவை நாள்தோறும் சுத்தம் செய்யப்படுவதால் கொசுத் தொல்லை ஒழிந்தது. தொத்துநோய்கள் பரந்தோடின. சாலைகளை ஆக்கிரமிப்புச் செய்தவர்கள் அகற்றப்பட்டார்கள். ஆக்கிரமிப்பு செய்ய எண்ணியவர்கள் அந்த எண்ணத்தைக் கைவிட வேண்டியது தவிர வேறு வழியே இல்லை. தவிர இதனால் சாலைகள் அகலமாகவும் அழகாகவும் போக்குவரத்திற்குத் தங்கு தடையின்றி இருக்கின்றன.

சாலைகளினால் நல்ல பயன் கிட்டியுள்ளது. சிறுபாலங்களைத் தேவையான இடங்களிலெல்லாம் அமைத்ததால், போக்குவரத்து சுகமாக இருக்கிறது.

தவிர, வறட்சிக் காலத்திலே, உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு பெருகிற்று.

முடிவில், ஓரே வரியில் கூற வேண்டுமானால்—

தன்னிறைவுத் திட்டம் ஊராட்சிகளைப் போல், பேரூராட்சிகளிலும் புதிய பொலிவைத் தோற்றுவித்துள்ளது.



# கோவை மாவட்டச் செய்திகள்

துடியலூரில் 40 தொழிற் பயிற்சி மாணவர்கள் தங்கிப் படிக்கின்ற வகையில், ஆதிதிராவிட மாணவர்களுக்கு ரூ. 6.44 இலட்சம் மதிப்பீட்டில் விடுதி ஒன்று கட்டுவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்திருக்கிறது. இதற்கான வேலைகள் ஆதி திராவிட நலத் துறை மூலம் துவக்கப்பட்டுள்ளன.

**விதவைகள் அமைத்துள்ள சிற்றுண்டிச்சாலைகள்**

கோவை மாநகராட்சி எல்லைக்குள் சமூக நலத்துறையின் மூலம் அரசு மான்யம் பெற்று ஏழை விதவைகள், ஆதரவற்றவர்கள், சிற்றுண்டிச்சாலைகளை மேட்டுப்பாளையம் சாலையில்



பெ. பாஸ்கரதாஸ், இ.ஆ.ப.
கோவை மாவட்ட ஆட்சித் தலைவர்

உடல் ஊனமுற்றோர் இல்லம், சாயிபாபா கோயில், பஸ்நிலையம் காந்திபுரம் திருவள்ளுவர் விரைவு பேருந்துநிலையம், காந்திபுரம் ஆட்டோ ஸ்டாண்டு, கோவை வேலைவாய்ப்பு அலுவலகம் ஆகிய இடங்களில் அமைத்துள்ளார்கள்.

**தரமான கால்நடை வளர்ப்புப் பணிகள்**

கோவை மாவட்டத்தில் ஆலந்துறையிலும், அவிநாசிக் கோட்டத்தில் தாயனூரிலும் கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இக் கால்நடை மருந்தகங்களுக்கு நடப்பு ஆண்டிற்கு ரூ. 1,15,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**வறட்சி நிவாரணப் பணிகள்**

ஆழ்துளைக் கிணறுகள்: குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு 1,617 ஆழ்துளைக்கிணறுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டு 538 ஆழ்துளைக் கிணறுகள் போடப்பட்டுள்ளன. 440 ஆழ்துளைக் கிணறுகளில் கைப்பம்பு மேடை அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 94.56 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

கிணறுகளை ஆழப்படுத்துதல்: திறந்த கிணறுகளை ஆழப்படுத்துகின்ற திட்டத்தின் கீழ் 309 கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதுகாறும் 287 கிணறுகள் ரூ. 21 இலட்சம்செலவில்ஆழப்படுத்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுகாறும் 113 கிணறுகள் ரூ. 8.962 இலட்சம் செலவில் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் 1,11,668 உழைப்புத் தினங்கள் கிடைத்துள்ளன.

ஏரி, குளக்கரைகளில் திறந்த வெளிக் கிணறு: ஏரி, குளக்கரைகளில் திறந்த வெளிக் கிணறுகளை வெட்டுவதற்கு ரூ. 12 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. கோவை மாவட்டத்தில் 9 கிணறுகளைத் தோண்டுவதற்கு ரூ.15.25 இலட்சம் மதிப்பீட்டில் வேலைகள் துவக்கப்பட்டுள்ளன. இதுகாறும் ரூ. 24,500 செலவிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 2,006 உழைப்புத் தினங்கள் கிடைத்துள்ளன.

**குடிநீர் விநியோகத்திற்கு நிதி ஒதுக்கீடு**

குடிநீர் விநியோகம் செய்ய டேங்கர்கள், ஸ்டீல் டேங்கர்கள் வாங்கவும், லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யவும் தமிழக அரசு ரூ. 8,05,000 நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**புதிய மண் பாதைகள்**

19 புதிய மண் பாதைகள் ரூ. 8,06,400 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுகாறும் 10 மண் பாதைகள் ரூ. 3,70,000 செலவில் முடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 25,600 உழைப்புத் தினங்கள் கிடைத்துள்ளன.

**பாசனங்கள் சீர் செய்யும் பணி**

50 ஏக்கருக்குக் குறைவான 28 ஏரிகளைப் பழுது பார்க்கவும், தூர் வாரவும், கிராம நெடுஞ்சாலைத் துறையின் மூலம் நிறைவேற்ற ரூ. 6,04,500 நிதி ஒதுக்கீடு சீர்செய்யப்பட்டு, 15 ஏரிகள் ரூ. 1,88,600 செலவில் முடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 21,700 உழைப்புத் தினங்கள் கிடைத்துள்ளன.

50 ஏக்கருக்கு மேல் ஆயக்கட்டுள்ள 943 பாசனக் குளங்களைப் பழுதுபார்க்கவும், சீர்படுத்தவும் பொதுப்பணித்துறைக்கு ரூ. 26,80,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 29 பாசனக் குளங்கள் ரூ. 6,97,400 செலவில் முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 83,554 உழைப்புத் தினங்கள் கிடைத்துள்ளன.

**கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல்**

கோவை மாவட்டத்தில் 19 கசிவு நீர்க் குட்டைகள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 10 கசிவுநீர்க்குட்டைகள் அமைக்க ரூ. 24,27,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 16 கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கின்ற பணி நடைபெற்று வருகிறது. இதன் மூலம் 18,276 உழைப்புத் தினங்கள் கிடைத்துள்ளன.

**வேளாண்மை வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கீடு**

விதைகள் விநியோகத்திற்கு ரூ. 6 இலட்சமும், பயிர்வகை வித்துக்கள் விநியோகத்திற்கு ரூ. 4,80,000மும், புஞ்சைத் தானிய வித்துக்கள் விநியோகத்திற்கு ரூ. 6,50,003ம் நடப்பு நிதியாண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்திற்கு ரூ.13,29,500, சிறப்புத் திட்டத்தின் கீழ் விதை வித்துக்கள் வழங்குவதற்கு ரூ. 1,95,000மும், மருந்துகள் வழங்குவதற்கு ரூ. 2,37,700மும், பயிர் வித்துக்கள் விநியோகத்திற்கு ரூ. 6,80,000, பருத்தி வளர்ப்பிற்கு ரூ. 21,300 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.



**புதிய 20 அம்சத் திட்டப் பணிகள்**

1,600 எக்டேர் மானாவாரி நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வருகின்ற திட்டத்தின் கீழ் இதுகாறும் 2,448 எக்டேர் பரப்பு புஞ்சை நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டதோடு, நான்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன் மூலம் 1,559 விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். 370 எக்டேர் பரப்பில் மண் வளப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 39.4 எக்டேர் பரப்பில் பயிர் வித்துக்கள் போடப்பட்டுள்ளன.

**தேசிய ஊரக வேலை வாய்ப்பு**

கோவை மாவட்டத்திலுள்ள 21 ஊராட்சி ஒன்றியங்களில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.229.99 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக வேலைகளை மேற்கொள்வதற்குத் திட்டம் தயாரித்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கோவை மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ. 8 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 162 வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. ரூ. 1,15,653 இதுகாறும் செலவிடப்பட்டு, 22 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 21 ஊராட்சி ஒன்றியங்களில் பணிகளை நிறைவேற்றுவதற்கு ரூ. 168 இலட்சம் தமிழக அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் 1.4.83 முதல் 15.6.83 வரை ரூ. 12,65,000 செலவிடப்பட்டுள்ளது. இதில் 1,092 கறவை மாடுகளும், 94 வண்டி மாடுகளும், வண்டிகளும், 34 ஆட்டுக் கூட்டங்களும், 33 பம்பு செட்டுகளும், 173 கிராமக் கைவினைஞர்களுக்குக் கருவிகள் வாங்கவும் மான்யம் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மான்யத்திற்கு ஈடாக ரூ. 35.25 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதுகாறும் 1396 பேர் பயனடைந்திருக்கிறார்கள். இதில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த 343 குடும்பங்களும், 298 பெண்களும் அடங்குவார்கள்.

ஊரகச்சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக ரூ. 1,17,096 செலவிடப்பட்டுள்ளது.

**கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன்**

கூட்டுறவு வங்கிகள் மூலம் குறுகிய காலக் கடனாக ரூ. 135.69இலட்சமும், மத்தியகால்க் கடன் ரூ. 18.24 இலட்சமும், நீண்டகாலக் கடன் ரூ. 53.58 இலட்சமும், நகைக் கடன்கள் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.123 இலட்சமும், கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் ரூ.135.5 இலட்சமும், நகர வங்கிகள் மூலம் ரூ. 794 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.





மாணபுமிகு சததுணவுத திட்ட அமைசசராக
திரு ஆர். சவுந்தரராஜன் அவர்கள்

## புதிய அமைச்சர்கள் பதவி ஏற்பு



மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சராக
திரு ஒய். எஸ். எம். யூசுப் அவர்கள்





மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சராக
திரு ஆர். அருணாசலம் அவர்கள்

*ஆளுநர் மாளிகையில் 9-9-83-ல் பதவி ஏற்றனர்*



மாண்புமிகு மின்வளத்துறை அமைச்சராக
திரு க. கலைமணி அவர்கள்



## காலம் உணர்க!

காலம் உணர்ந்திடு குழந்தாய்—நீ
கடமையை ஆற்றிடு ஒழுங்காய்
ஞாலம் அறிந்திடு தெளிவாய்—செய்யும்
கன்றியைப் போற்றிடு பணிவாய்!

உலகம் மிகவும் பெரிது—அதில்
உயிர்கள் நாமோ சிறிது
இளமை வருதல் அரிது—அதை
இருக்கும் போதே உணரு!

அறிவை நம்பிப் பழகு—நீ
அன்பு கொண்டே ஒழுகு
பெருமை வந்து சேரும்—உன்னைப்
பெற்ற வயிறும் ஆறும்!

சோகம் கொள்ளல் தீது—அதைத்
தூக்கி எறிதல் வேண்டும்
சாகும் போதும் சிரிப்பாய்—நீ
சாகா தென்றும் நிலைப்பாய்!

கே. எஸ். நாகராஜன்,

# 90 இலட்சம் பிரதிகள் அச்சாகும் குழந்தைகள் பத்திரிகை

சோவியத் நாட்டில் உள்ள 200க்கும் அதிகமான புத்தக வெளியீட்டாளர்கள் 70 மொழிகளில் குழந்தை இலக்கியங்களை வெளியிடுகின்றனர். 1982-ல் குழந்தைப் புத்தக வெளியீட்டாளர்கள் மட்டும் 560 தலைப்புகளுடன் கூடிய புத்தகங்களை, 21.5 கோடிப் பிரதிகள் அச்சிட்டு வெளியிட்டனர். மற்ற நிறுவனங்களைப் போலவே இவையும் பிற மொழிகளிலிருந்து நூல்களை மொழி பெயர்த்து வெளியிடுகின்றன. சென்ற ஆண்டில் 51 பிற நாட்டு ஆசிரியர்களின் நூல்களை அவை மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளன. ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க ஆசிரியர்கள் எழுதிய நூல்களும் அவற்றில் அடங்கும்.

உரைநடை, கவிதை, நாடகம், விமரிசனக் கட்டுரைகள், விஞ்ஞான நூல்கள், சாகசக்கதைகள் முதலிய பலதரப்பட்ட இலக்கிய வடிவங்களும் தேசிய மொழிகளில் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்றன.

இளங் குழந்தைகளுக்கான 'வசேலியே சர்த்திஸ்கி' (மகிழ்ச்சிப் படங்கள்) என்ற இதழ் 90 இலட்சம் பிரதிகளுக்கு மேல் அச்சிடப்படுகிறது: 'முர்சில்கா' என்ற இதழ் 50 இலட்சம் பிரதிகள் அச்சிடப்படுகிறது. 1917-ஆம் ஆண்டுக்குப் பின் இந்நாட்டில் பாடப் புத்தகங்கள் நீங்கலாக, குழந்தைகளுக்காக 2,000 கோடிப் புத்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.


வரும் செப்டம்பரில் மாஸ்கோவில், நான்காவது அனைத்து நாட்டுப் புத்தகச் சந்தை நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**மாணவர் பக்கம்**


தயாரிப்பு : 'கிரிஜா'

### கப்பல்களுக்குப் புதிய பாதுகாப்பு முறை


வானொலி நிர்வாக உலக மாநாடு கடலில் பாதுகாப்பு முறையை உருவாக்குவதில் புதிய வழி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது. இந்தப் புதிய முறை 1990 ஆம் ஆண்டு வாக்கில் நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. ஆபத்திலிருப்பவர்களைக் காப்பாற்ற உதவவும், எல்லாவித ஆபத்துக் கால செய்திகளைப் பெற்றுக் கொள்ளவும் ஏதுவானது இது. நவீன மின் அனுப்பல் மற்றும் தொலைத் தொடர்பு கருவிகளைக் கப்பல்களில் பயன்படுத்துவதே இப்புதிய முறையாகும்.



முதல் மாணவி வீமா



மாணவர் சீனிவாசன்



மாணவி விஜயலட்சுமி

# பத்தாம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றவர்கள்

1983 மார்ச் திங்களில் நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.சி. (பத்தாம் வகுப்பு) தேர்வில், மதுரை, கே. புதூர் ஜார்ஜ் அன்னைமகளிர் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த செல்வி இ. வீமாபாரலின் மாநிலத்திலேயே முதலாவதாக வந்துள்ளார். இவர் 500க்கு 477 மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.

முதல் வகுப்பு முதல் 10ஆம் வகுப்புவரை தனது பள்ளியில் முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றுள்ள வீமா பாலினுக்குக் கட்டுரை எழுதுவதில் மிகுந்த ஆர்வமும் திறமையும் உண்டு. குறிப்பாக 1982-ஆம் ஆண்டில் பாரதியார் நூற்றாண்டு விழாவையொட்டி நடத்திய கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு மாவட்ட அளவில் முதற்பரிசு பெற்றுள்ளார்.

செல்வி வீமா பாலினுக்குத் தமிழ்நாடு கல்வி அறக்கட்டளையின் மதுரைப் பிரிவின் சார்பாக ரூ. 2,000 பரிசினை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அறக்கட்டளையின் தலைவர் திரு கு. அருணாசலம்பிள்ளை வழங்கியுள்ளார்.

மயிலாடுதுறை, டி. பி. டி. பி. தேசிய மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த செல்வன் பி. சீனிவாசன் இரண்டாவதாகத் தேறி 473 மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.

திருச்சிராப்பள்ளி சாவித்திரி வித்யாசாலா மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி என். விஜய லெட்சுமி அன்னையில் நடைபெற்ற பத்தாம்வகுப்புத்தேர்வில் மாநிலத்திலேயே 500க்கு 472 மதிப்பெண்கள் பெற்று மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

படிப்பில் மிகுந்த ஆர்வம் காட்டுவதோடு தேசிய மாணவியர் படையிலும் பயிற்சி பெற்று சிறந்த மாணவி என்ற நற்சான்றிதழைப் பெற்றதோடு, துப்பாக்கி சுடும் போட்டியில் முதலாவது இடத்தையும் பெற்றுள்ளார். 1982-83ஆம் ஆண்டு பள்ளியின் சிறந்த மாணவிக்கான கேடயமும் பரிசாகப் பெற்றுள்ளார்.

இந்த ஆண்டு 10ஆம் வகுப்பில் தேர்வு பெற்றவர்கள் சதவிகிதம் 51.4 சென்ற ஆண்டில் இது 52.7 பையன்களை விட பெண்கள் நன்றாகத் தேர்வு எழுதியிருக்கிறார்கள். பையன்களில் 49 சதவிகிதம் பேர் தேறி இருக்க, பெண்களில் 58 சதவிகிதம் பேர் வெற்றி பெற்றுள்ளனர்.

இந்த ஆண்டு மொத்தம் 3,46,883 பேர் தேர்வு எழுதினார்கள்.

## எழுதுங்கள்!

மாணவ மணிகளே!

இது உங்கள் பக்கம். இந்தப் பக்கத்தில் நீங்கள் கதை, கட்டுரை-கவிதை - துணுக்குகள் எழுதி அனுப்பலாம். ஆனால் அவையெல்லாம் உங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும்.

உங்களில் யாரேனும் ஏதாவது ஒரு துறையில் (கதை, கட்டுரை, விளையாட்டு, ஓவியம், நடனம்) சிறந்தவர்களாக இருக்கலாம். அவர்கள் தங்கள் புகைப்படத்துடன், தங்களைப் பற்றிய குறிப்பையும் எழுதி, ஆசிரியர் அல்லது தலைமையாசிரியர் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கலாம்.

—ஆசிரியர்



# எம்.ஆர்.நகர் ஒளி பெறுகிறது

88343

சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த கொடுங்கையூர் எம்.ஆர். நகரின் தெருக்களில் 27.8.83 அன்று மெர்க்குரி விளக்குகளின் ஒளி வெள்ளம் பாயத் தலைப்பட்டது. ஒளி வெள்ளம் பெருக்கும் பணியைச் சென்னை மாநகராட்சியினர் விழாவாகக் கொண்டாடினர்.

சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.தி.ச. சிவப்பிரகாசம், இ.ஆ.ப. வரவேற்றுப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்.

''சென்னை மாநகரில் மிக வேகமாக வளர்ச்சியுற்று வரும் பகுதி கொடுங்கையூர்ப் பகுதியாகும்! அதன் வளர்ச்சியில் மாநகராட்சி மிகுந்த ஈடுபாடு கொண்டிருக்கிறது. 18 இலட்ச ரூபாய் செலவில், இங்கு தெருக்களில் புதிய மெர்க்குரி விளக்குகள் இயக்கி வைக்கப்படுகின்றன.''

விழாவுக்குத் தலைமை வகித்த சென்னை மாநகராட்சி சிறப்பதிகாரி திரு கி. சந்திரசூடன், இ.ஆ.ப., தமது உரையில் தெரிவித்தார்:

''சென்னை நகரில் 1978ல், 12 ஊராட்சிகளை மாநகராட்சி தனது பகுதிகளாகச் சேர்த்துக் கொண்டது. அவற்றில் ஒன்று இந்தக் கொடுங்கையூர் ஆகும். இந்தப் பகுதியிலிருந்து மாநகராட்சிக்குப் போதிய வருவாய் கிடைக்காவிட்டாலும் கூட, இதன் வளர்ச்சிக்கு மாநகராட்சி மிகவும் பாடுபட்டு வருகிறது''.

எம்.ஆர்.நகர் நற்பணி மன்றத் தலைவர் திரு ராமர், தனது உரையில் குறிப்பிட்டார்:

''இந்தப் பகுதியில் ஒரு காலத்தில் மழை நாட்களில் தெருவில் தண்ணீர் 3 அடி ஆழத்திற்குத் தேங்கி நிற்கும். மிதியடி சேற்றிலே புதைந்து விடும். பலர் விழுந்து சென்றிருக்கின்றனர். ஆகவே நல்ல தார் ரோடு வேண்டும் என்று நாங்கள் கேட்டோம். மாநகராட்சியினர் இங்கு வந்து பார்த்து, மக்களின் குறை அறிந்து பரிந்துரை செய்து மெட்டல் ரோடுகள் 4 அமைத்துத் தந்தனர்.

''1978ஆம் ஆண்டிலிருந்து தெரு விளக்குகள் வேண்டுமென்று கேட்டு வருகிறோம். 45 குழாய் விளக்குகள் ஒதுக்கப்பட்டன. பின்னர் அவை 25ஆக்கப்பட்டன. என்றாலும் அவை அமைக்கப்படவில்லை. இன்று 45 மெர்க்குரி விளக்குகள் இந்தப் பகுதியில் ஆறுபோல் ஒளி வெள்ளத்தை வழங்க இருக்கின்றன என்பதை எண்ணி நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பெருமை கொள்கிறோம். மாநகராட்சியினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்''.

விழாவில் கலந்து கொண்ட திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு குமரி அனந்தன் குறிப்பிட்டார்;

''இந்தப் பகுதி மக்கள் தெருவில் சிரமமின்றி நடந்து செல்வதற்கு உதவும் வகையில் ஒளி விளக்குகள் கிடைப்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

''மின்சாரத்தை மனிதன் கைவசப்படுத்திக் கொண்டுவிட்டான். மின்சாரம் கண்டு பிடிக்கப்பட்டு 200 ஆண்டுகள் கூட ஆகாது. அது, இரண்டு இலட்சம், மூன்று இலட்சம் ஆண்டுகள் சாதிக்க முடியாதவற்றை எல்லாம் சாதித்து வருகிறது. வீட்டிலே மின்சாரம் இல்லை என்றால் சம்சாரம் கூடக் கோபித்துக் கொள்வாள் என்னும் அளவுக்கு, மின்சாரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு வினாடியில் 1 இலட்சத்து 86 ஆயிரம் அடி தூரம் பயணம் செய்கிறது மின்சாரம்.''

தெரு மின் விளக்குகளை இயக்கி வைத்து மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப.குழந்தைவேலு அவர்கள் தெரிவித்தார்:

''சென்னை மாநகராட்சிக்கு ஆண்டொன்றிற்கு 23 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. இதில் 18 கோடி ரூபாய், சம்பளமாகவும், கடன் தொகை அசலுக்காகவும் வட்டிக்காகவும் செலவிடப்பட்டு வருகின்றது. மீதமுள்ள 5 கோடி ரூபாயை வைத்துத் தான், மாநகராட்சி, தனது திட்டப் பணிகளை நிறைவேற்றி வருகிறது.

''கடந்த 1978ல் மாநகராட்சியால் எடுத்துக் கொள்ளப்பட்ட 12 பஞ்சாயத்துக்களில் இந்தக் கொடுங்கையூர் பகுதியும் ஒன்று. இந்த 12 பஞ்சாயத்துக்களிலும், கொடுங்கையூரில்தான் முதன்முதலாக மெர்க்குரி விளக்குகள், தெருக்களில் அமைக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

''இந்தப் பகுதியின் வளர்ச்சிக்கு மாநகராட்சி இலட்சக் கணக்கில் செலவு செய்து வருகிறது என்றாலும் இந்தப் பகுதியிலிருந்து மாநகராட்சிக்கு வருகின்ற வருமானம் குறைவுதான். பஞ்சாயத்துக்குக் கொடுத்து வந்த வரியைத்தான் இன்னும் கொடுத்து வருகிறார்கள்.

''மாண்புமிகு புரட்சித்தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர்தான் மாநகராட்சிகளின் திட்டங்களுக்கு அதிகத் தொகை ஒதுக்கப்படுகின்றது.

''இந்த ஒளிவிளக்குகள் உங்கள் வாழ்க்கையில் ஒளி வழங்கட்டும்!''

நற்பணிமன்ற உறுப்பினர் திரு பொன்னரசன் தமது நன்றியுரையில், ''இந்தப் பகுதிக்கு, மாநகராட்சியினர் பலவகைகளிலும் முன்னேற்றங்களை வழங்கி வருகிறார்கள் என்றால், இந்தப் பகுதி, மாநகராட்சியின் தத்துப் பிள்ளையாக விளங்குவதுதான் காரணம்'' என்று குறிப்பிட்டார்.

மின் விளக்குகளை இயக்கி வைப்பதற்கு வருகைபுரிந்த மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப.குழந்தைவேலு அவர்களை, எம்.ஆர். நகரில் உள்ள 'அவர் லேடிஸ் மெட்ரிகுலேஷன்' பள்ளி சிறுமியர், சீருடை அணிந்து - வண்ண வண்ணக் கொடிகள் - பலூன்கள் - ரிப்பன்கள் கரங்களில் ஏந்தி வரவேற்ற நிகழ்ச்சி அனைவரின் நெஞ்சங்களையும் கவர்ந்தது.

நிகழ்ச்சித் தொகுப்பு :
**தமிழ்ப்பித்தன்**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



# 'எங்களாலும் முடியும்'

"உடலில் ஊனமிருந்தாலும், உள்ளத்தில் இல்லை' என்பதைச் சொல்லாமல் சொல்லும் வண்ணப்படம்தான் 'எங்களாலும் முடியும்' என்னும் குழந்தைகள் படம். இந்தியக் குழந்தைகள் பட நிறுவனத்தால், இந்தப் படம் அற்புதமாகத் தயாரிக்கப் பட்டிருக்கிறது இதன் கதை—

ஊனமுற்ற குழந்தைகளுக்கான ஆசிரமம் ஒன்றை, தெய்வ நெறித் தொண்டர் ஒருவர் நடத்தி வருகிறார். குழந்தைகளுக்கு நன்னெறிகளைப் புகட்டுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்.

இந்த ஆசிரமம்இருக்கும் இடம் ஒரு பெரிய நிலக்கிழாருக்குச் சொந்தமானது. அவருக்கு இரண்டு மகன்கள். மூத்த பையன் ராமு, தான் ஒரு பணக்காரன் என்று பெருமை பாராட்டி, செருக்குற்றவனாக இருக்கிறான். இளையவன் கால் முடமானவன். ஆனால் தந்தை, மூத்த பையனைச் செல்லமாக வளர்க்கிறார். முடமானவனைத் தாயார் பேணி வருகிறார்.

கால் பந்து போட்டி ஒன்று நடைபெறுகிறது. அதில் ஊனமுற்றோர் இல்லத்தைச் சேர்ந்த ரவி என்ற மாணவன், ராமுவைத் தோற்கடித்து விடுகிறான். இதனால் ராமுவின் தம்பிக்கு ஒரே மகிழ்ச்சி உண்டாகிறது.

இந்த நிகழ்ச்சியின் விளைவாக ஊனமுற்றோர் இல்லத்திற்குப் பல இடையூறுகள் நேரிடுகின்றன. அந்த இல்லம் அந்த நிலத்திலிருந்து அகற்றப்படுகிறது. ரவியும் கடத்தப்பட்டு, பிச்சைக்காரர் கூட்டத்தில் சேர்க்கப்படுகிறான். ஆனால் ரவியோ தப்பிச் செல்கிறான். மற்ற ஊனமுற்ற குழந்தைகளும் ரவியைக் கண்டு பிடிக்கப் பாடுபடுகிறார்கள்.

ரவி, நிலக்கிழாரின் முடமான பையனை அந்தப் பிச்சைக்காரர் கூட்டத்திலிருந்து காப்பாற்றுகிறான். இந்தப் பிச்சைக்காரர் கூட்டத்திற்கு ராமுவே பக்கபலமாயிருந்து வருகிறான். ஓர் இசைப் போட்டியிலும் அந்தக் கர்வமுள்ள ராமு ஊனமுற்ற மாணவர்களிடம் தோல்வியடைகிறான்.

நிலக்கிழாருக்குத் தன் மூத்த புதல்வனின் தீயசெயல்கள் தெரிய வருகின்றன. அவர் மனம் வருந்தி ஊனமுற்றோர் இல்லத்தை அகற்றிய தவறை உணர்கிறார். மூத்த பையனைக் கண்டிக்கிறார்.

ஊனமுற்றோர் இல்லம் பழைய இடத்திற்கே மாற்றப்பட்டு, சிறப்பாகச் செயல்படுகின்றது. ஊனமுற்ற குழந்தைகள் மற்றவர்களைப் போன்று 'தங்களாலும் முடியும்' என்பதை நிரூபித்துக் காட்டுகிறார்கள். இந்த அறைகூவலில் வெற்றியும் பெறுகிறார்கள்.

இந்தப் படத்தில் மாஸ்டர் ராமு, மாஸ்டர் ரவி சங்கர், செல்வி வரலட்சுமி, எஸ். பி. பல்லவி ஆகியோர் மிகச் சிறப்பாக நடித்துள்ளார்கள். ஊனமுற்ற குழந்தைகள் ஆடியும் பாடியும், நாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதை மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார்கள்.

ஊனமுற்றவர்களுக்கும், மற்ற மாணவர்களுக்கும் நடக்கும் இசைப் போட்டி நிகழ்ச்சியை அற்புதமாகப் படமாக்கியிருக்கிறார்கள். அந்நிகழ்ச்சியில் ஒளி அமைப்பு ஜாலங்களை நாம் பார்க்க முடிகிறது.

இந்தப் படத்தில் குழந்தைகளோடு, பூர்ணம் விசுவநாதன், மேஜர் சுந்தரராஜன், சௌகார் ஜானகி, ஒய். ஜி. மகேந்திரன் ஆகியோரும் சிறப்பாக நடித்துள்ளார்கள்.

இந்தப் படத்தின் மூலக் கதையை டி. அன்னபூர்ணாவும், திரைக்கதை வசனத்தை ரான்டார்கையும் எழுதியுள்ளனர். பாடலும் இசையும் காதுக்கு இனிமையாக இருக்கின்றன. படத்தைச் சிறப்பாக இயக்கி இருப்பவர் டி. பிரகாஷ்ராவ்.

குழந்தைகளோடு பெரியவர்களும் பார்க்கக்கூடிய நல்ல படம்.

—பி. வி. ஜி.



# சக்திக்கு ஒரு வித்தாம் சாண எரிவாயு

நாவிற்கும் மனத்திற்கும் இதமளிக்கும் அறுசுவை உண்டி தயாரிக்கும் சமையல்வேலை அல்ல சமையற்கலை தொன்று தொட்டு, குடும்பத்தைப் பேணும் பெண்களால் செய்யப்படுவதாகும். குறுந்தொகையில் கூடலூர் கிழார் என்னும் புலவர் கீழ்வரும் பாட்டில் புதுமணப் பெண்ணின் சமையலை வருணிக்கிறார்.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல்
முகனே"

இப்பாடலின் பொருள், புதிதான திருமணப்பெண் சமைப்பதில் ஈடுபட்டிருக்கிறாள். சமைக்கும் பொழுது நன்றாகக் கட்டிபோன்ற தயிரை காந்தள் பூப்போன்ற மெல் விரலால் பிசையும்பொழுது (சமையலின் பதம் கெட்டு விடக்கூடாது என்பதற்காக ) அவிழ்ந்த சேலையை, கையைக் கழுவாது அப்படியே கையால் அள்ளி எடுத்து செருகிக் கொண்டும், அடுப்பிலிருந்து வெளி வந்திட்ட கரும்புகையையும் பொறுத்துக் கொண்டு அவ்வாறு சமைத்திட்ட புளிச்சாதம் நன்றாக(இனிதாக) உள்ளது என்று கணவன் கூறி உண்டபோது அவள் மிகவும் மகிழ்ந்தாள் என்பதாகும்.

பெண்கள் குறுந்தொகைக் காலத்திலிருந்து இக்காலம் வரையில் சமைக்கும்போது ஏற்படும் ஏனைய சிரமங்களோடு, அடுப்பிலிருந்து மூண்டு எழும்புகையைப் பொறுத்துக்கொண்டு தான் சமையல் செய்து குடும்பத்தில் அனைவருக்கும் இன்னமுதூட்டி வருகிறார்கள். இந்நிலை இன்னும் நீடிக்க வேண்டுமா? இல்லை! சாண எரிவாயு இதற்குக் கைகொடுக்கிறது.

**பெண்களுக்கொரு வரப்பிரசாதம்**

ஆம். சாண எரிவாயு வீட்டளவில் பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதம் மட்டுமல்ல, சமுதாய அளவிற்குக்கூட பயன்படக்கூடிய அரியதொரு மாபெரும் சக்தியாகும்.

சாண எரிவாயு தயாரிப்பது மிக மிக

**து. அருணாசலம்**
**புள்ளியியல் இணை இயக்குநர்**

## "கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்" என பார்த்தாலே தெரிகிறது



எளியதொன்றாகும். ஒரு குடும்பத்தில் 4 பேரிலிருந்து 6 நபர்கள் வரை இருந்து 3 அல்லது 4 மாடுகள் இருந்தால் அந்தக் குடும்பத்தில் அன்றாடம் சமைப்பதற்குத் தேவையான எரிவாயுவைப் புழக்கடையிலேயே அதற்குரிய சாதனத்தின் மூலம் தயாரித்துக் கொள்ளலாம்.

இதற்கான மூலதனச் செலவினம் ரூ. 3,000 மட்டுமே. இதன்பொருட்டு இந்தத் தொகையை முழுமையாகக் கையிலிருந்து செலவு செய்ய வேண்டியதில்லை. இந்த அளவில் சாதனம் அமைப்பதற்கு சாதாரணமாக ஒவ்வொருவருக்கும் அரசு ரூ. 1,000 மானியமாகக் கொடுக்கிறது. மீதமுள்ள ரூ. 2,000க்கு வங்கி மூலம் கடன் உதவியளிக்க வசதி செய்து கொடுக்கிறது.

இதனைச் சுலபமாக மாதத் தவணையில் செலுத்திவிடலாம். இதுவே மலைவாழ் பழங்குடியினருக்கு ரூ. 1,500 மானியமாக அரசு அளிக்கிறது.

அந்தந்தக் குடும்பங்களின் தேவைகளுக்கேற்பவும், அவரவர்களிடமுள்ள மாடுகளின் எண்ணிக்கையைப் பொறுத்தும்சாண எரிவாயு சாதனத்தைப் பெரிய அளவில் நிருமாணித்துக் கொள்ளலாம். அதனதன் கொள்ளளவைப் பொறுத்து கட்டுமானச் செலவில் மானியத் தொகையின் கூறுபாடும் நிர்ணயிக்கப்படுகிறது.

சாதனங்கள் இரண்டு வகையில் அமைக்கலாம். கூண்டு வடிவமைப்பு (மலிவு விலை) சாதனம், எஃகு, தகடு அமைப்பு சாதனம் ஆக இரண்டு வகைகளில் அமைக்கலாம். இவைகளுக்குரிய விவரங்கள் தரப்பட்டுள்ளன.

## வகுத்திட்ட வழிமுறைகள்

எரிவாயு சாதனம் அமைக்க ஆர்வமுள்ளவர்கள் ஊரக வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஊர்நல அலுவலர்கள் வட்டார வளர்ச்சி அலுவலரை அணுகி, அதற்குரிய விண்ணப்பத்தைப்பெற்றுப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.

| சாதனத்தில் எரிவாயு கொள்ளளவு (கனமீட்டர்) | தேவைப்படும் கால்நடைகளின் எண்ணிக்கை (சராசரி) | குடும்ப நபர்களின் எண்ணிக்கை (சராசரி) | சாதனத்தை அமைப்பதற்கான அடக்கவிலை (தோராயமாக) ரூபாய் | அரசு மானியத்தொகை. மலைவாழ் பழங்குடியினருக்கு ரூபாய் | அரசு மானியத்தொகை. ஏனையோருக்கு ரூபாய் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| கூண்டு வடிவமைப்பு சாதனம் | | | | | |
| 2 | 3-4 | 4-6 | 3,000- | 1,500- | 1,000- |
| 3 | 4-6 | 7-10 | 4,000- | 1,950- | 1,300- |
| 4 | 6-8 | 11-15 | 5,000- | 2,320- | 1,550- |
| 6 | 8-12 | 16-20 | 6,000- | 2,910- | 1,940- |
| எஃகு தகடு அமைப்பு சாதனம் | | | | | |
| 2 | 3-4 | 4-6 | 4,150- | 1,500- | 1,000 |
| 3 | 4-6 | 7-10 | 5,050- | 1,950- | 1,300- |
| 4 | 6-8 | 11-15 | 5,600- | 2,320- | 1,550- |
| 6 | 8-12 | 16-20 | 6,800- | 2,910- | 1,9 40- |

அவரவர்களின் தேவை, மற்றும் தங்கள் வசமுள்ள கால்நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அமைக்கப்படும் சாதனத்தின் கொள்ளளவைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கொடுக்கப்படும் விண்ணப்பத்தின் பேரில் அரசு மானியத்திற்கான அங்கீகாரத்துடன், தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் மூலமாகத் தகுதியான கடன் வழங்கப்படும். தேவையான சாதனங்கள் தருவிக்கப்பட்டு, கட்டுமானப் பணி அரசுப் பொறியாளர் உதவியுடன் செயலாக்கப்படும். கட்டுமானத்திற்குத் தேவையான சிமெண்ட்,இரும்புத் தளவாடம், கம்பி முதலியவை அரசால் நிருணயிக்கப்பட்ட சலுகை விலையில் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வழங்கப்படும்.

கட்டுமானப் பணியிலிருந்து, சாதனம் அமைத்து முடித்து எரிவாயுவை உபயோகிக்கும் நிலை வரையில் விண்ணப்பதாரர்களுக்குப் போதுமான அளவு களப்பணியாளர்களும் அலுவலர்களும் உறுதுணையுடன் செயல் புரிவார்கள். ஏன் அதற்கு மேலும் எரிவாயு உபயோகிப்பதிலோ சாதனத்திலோ குறைபாடுகள் நேர்ந்தாலும், அவற்றைச் சரிசெய்து சுமுகமாகப் பயன்படுத்த வழி செய்தும் கொடுப்பார்கள்.






# தாய் சேய் நல மருத்துவமனை

'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த மக்கட்பே றல்ல பிற'
—என்றார் திருவள்ளுவர்.

'மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லைத்தாம் வாழும் நாளே'
—என்கிறது புறநானூறு.

பி. எல். ராஜேந்திரன்

பேறுகளிலெல்லாம் சிறந்த பேறு மக்கட் பேறுதான். பிள்ளைப்பேறு இல்லாவிட்டால் வாழ்நாளே பயனுடையது ஆகாது என்றெல்லாம் பொருள்தரும் அந்தப் பாடல்கள் நமக்கு எளிதாகவே விளங்குகின்றன ஆனால் அந்தப் பேற்றை அடைவதிலே தான் எத்தனைச் சிக்கல்கள் இருக்கின்றன!



குறைப் பிரசவக் குழந்தை கவனிப்பு

தலைப் பிரசவம் என்பது ஒரு தாய்க்கு உயிர்ப் பரிசோதனையாகவே அல்லவா அமைந்துவிடுகிறது!

இவ்வகையில் தாய்க்குலத்திற்குப் பேருதவி புரிந்துவருவதுதான் சென்னை எழும்பூரில் உள்ள அரசினர் தாய்சேய் நல மருத்துவமனை. அரசு பொது மருத்துவமனை கண்காணிப்பின்கீழியங்கும் அந்த மருத்துவமனையின் சிறப்புகள் பற்றிய செய்தியைச் சேகரிக்க அங்கே சென்ற எங்களை அன்போடு வரவேற்றார் தாய் சேய் நல மருத்துவமனை இயக்குநர் செல்வி கே.சேஷம்மா அவர்கள்.

## கட்டட அமைப்பு

'மகப் பேறு மற்றும் மகளிர் நோய் இயல் நிலையம்' என்று அழைக்கப்படும் இந்த மருத்துவமனையின் பிரதான கட்டடங்கள் 140 ஆண்டுகளுக்கு முன்னால் அதாவது 1844ல் கட்டப்பட்ட பழம்பெருமை உடையனவாகும்.

உலகப் புகழ்பெற்றதான 'கிஃபார்ட் பள்ளி' (Giffard School) யையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் இம் மருத்துவமனைக் கட்டட அமைப்பிலேயே ஒரு தனிச் சிறப்பிருக்கிறது. பெண்களின் இடுப்புப் பகுதி எலும்புகள் எப்படி அமைந்துள்ளனவோ, அதே அமைப்புடையனவாகக் கட்டடங்கள் தொடர்பு கெடாமல் அமைக்கப்பட்டுள்ளன. மேலிருந்து பார்த்தால் ( arielview ) இந்த உண்மை விளங்கும். இதை இப்படிக் கட்டத் திட்டமிட்ட பெருமையாளர் கர்னல் டாக்டர் பிரான்புட் (Col. Dr. Branfoot) என்பாராவார்.

இதில் இன்னொரு சிறப்பு, நோயாளியை ஒரு கட்டடப் பிரிவிலிருந்து இன்னொரு கட்டடப் பிரிவுக்கு வெயிலோ, மழையோ படாமல் எளிதாகக் கொண்டு

[illegible]
16-9-1983

Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676





அவசர சிகிச்சைப் பணிகள்



மகளிர் நோய் இயல் நிலையம்

செல்ல முடியும். வழியமைப்பில் அப்படிக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

குடும்ப நலத்திட்டப் பள்ளி முதல்வரான டாக்டர் ரஞ்யா முதல்-டாக்டர் சீதாமினி, டாக்டர் கே.வி. மாலதி, டாக்டர் கோபால், டாக்டர் லோகசுந்தரி செல்வராஜ், டாக்டர் நபீஸா பீவி, டாக்டர் ருக்மணி சௌரிராஜன், டாக்டர் ஜி.முனுசாமி போன்ற திறமையும் பெருமையும் மிக்க டாக்டர்கள் 75 பேர் ஒருங்கிணைந்து பணியாற்றும் அருமை பெருமை மிக்கதான இந்த மருத்துவமனையின் உள்ளுறை மருத்துவ அதிகாரியாக டாக்டர் எஸ்.பிரமீளா இருக்கிறார்.

அவசரச் சிகிச்சைப் பகுதி, கருத்தடைச் சிகிச்சைப் பகுதி, புற்று நோய்ச் சிகிச்சைப் பிரிவு, மகளிர் நோயியல் பிரிவு, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகப் பிரிவு, முழுவளர்ச்சி பெறாத சிசுப் பாதுகாப்புப் பகுதி, பிரசவப் பிரிவு, ஆவணப் பிரிவு எனப் பல்வேறு பிரிவுகளும் இங்கே சிறப்புறச் செயல்பட்டு வருகின்றன.

''இந்த மருத்துவமனையின் முதல் கண்காணிப்பாளர் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராயிருந்த டாக்டர் அ.லட்சுமணசுவாமி முதலியார்'' என்று பெருமையோடு நமக்குத் தெரிவிக்கிறார் இயக்குநர் செல்வி. சேஷம்மா.

## கருக்கலைப்பில் கவனம்

கருக்கலைப்பு சட்டப்பூர்வமாக்கப்பட்டுவிட்ட பிறகு இந்த மருத்துவ மனைக்கு இதற்கென வரும் தாய்மார்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எந்தத் துன்பமும் இல்லாமல் 'அபார்ஷன்' செய்து இரண்டு மூன்று மணி நேரத்திலேயே இங்கிருந்து நலமாக வீட்டுக்குச் செல்லத் தாய்மார்களால் முடிகிறது. கருத்தறித்தபின் எவ்வளவு குறைந்த காலத்தில் அதைக் கலைக்க முன் வருகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு நல்லது என்கிறார்கள் மருத்துவர்கள்.



இங்கு வந்து குடும்பநலத் திட்ட அறுவை செய்து கொள்ளுவோரும் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றனர்.

'மகப்பேறு மற்றும் மகளிர் நோய் இயல் நிலை'யத்தில் தனியே ஒரு ஆவணப் பிரிவு வைத்திருக்கின்றனர். 1973முதல் இம் மருத்துவமனையில் பிறந்த குழந்தைகள் பற்றிய விவரங்கள் அனைத்தும் உடனுக்குடன் சேகரிக்கப்பட்டு இப்பிரிவில் பாதுகாக்கப்படுகின்றன. ''1973க்கு முந்திய குழந்தை பிறப்பு விவரங்களும்கூட எங்களிடம் உள்ளன'' என்கிறார் அதன் பொறுப்பாளர் திரு ஏ. வேங்கடகிருஷ்ணன்.

சென்னை அருகேயுள்ள திருவள்ளூர், செங்கற்பட்டு, பொன்னேரி, காஞ்சிபுரம் போன்ற ஊர்களிலிருந்து மட்டுமல்ல; மற்ற மாவட்டங்களிலிருந்தும் - இன்னும் சொல்லப்போனால் ஆந்திரம், கேரளம் போன்ற பிற மாநிலங்களிலிருந்தும், ஏன்-அந்தமான் தீவிலிருந்தும்கூட தாய்மார்கள் இம் மருத்துவமனைக்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள வருகின்றனர்.

கருவுற்ற பெண்கள் ஜன்னி போன்ற உபாதைகளுக்குச் சில நேரங்களில் ஆளாவதுண்டு. அவர்களைக் குணப்படுத்த இங்குள்ள (eclampsia) தனிப் பிரிவு' பெயர் பெற்றதாகும்.



ஆவணப் பாதுகாப்புப் பிரிவு

பிறக்கின்ற குழந்தை சாதாரணமாக 2.5 கிலோ கிராம் எடையுள்ளதாக இருக்க வேண்டும். குறிப்பாக இந்தியக் குழந்தைகள் 2.2 கிலோ கிராம்தான் எடையிருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது. பிறக்கும் சிசு 4 கிலோ கிராம் இருக்குமானால் அறுவைச் சிகிச்சை மூலம்தான் அதை எடுக்க நேரும்.

## நிறைவாக்கப்படும் குறைப்பிரசவம்


இதற்கெல்லாம் கீழான எடையோடு, தாய்ப்பால் குடிக்கக்கூட திடகாத்திரமில்லாமல் சில காரணங்களால் குழந்தைகள் பிறப்பதுண்டு. அப்படிப்பட்ட குறைப் பிரசவக் குழந்தைகளைக் கவனிக்க இங்குள்ள தனிப்பிரிவு ஆற்றும் (Premature ward) பணிகள் நம்மைத் திகைக்க வைப்பனவாக உள்ளன.

அங்கே, குறைமாதக் குழந்தைகள் தாயிடமிருந்து தனிமைப் படுத்தப்பட்டு மருத்துவர்களின் முழுக் கண்காணிப்பில் வைக்கப் பட்டுள்ளன. ஆனாலும் அவ்வப்போது தாய்ப்பால் தருவதற்காக அவ்வக் குழந்தைகளின் தாய்மார்கள் வந்து போக அனுமதிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட குழந்தைகள் பத்துப் பதினைந்து நாட்களிலேயே பரிபூரண வளர்ச்சியுள்ளதாக்கப்பட்டு, தாமே பாலுண்ணும் அளவுக்குத் தெம்படைந்த பிறகு அந்தந்தத் தாய்மார்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

1930ஆம் ஆண்டு முதல், இந்த மருத்துவமனை பயிற்றுவிக்கும் மருத்துவமனையாக (Teaching Hospital) இயங்கி வருகிறது' பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, மகளிர் நோய் இயல் டிப்ளோமா போன்றவற்றுக்கான வகுப்புகள் இங்கு நடத்தப்படுகின்றன. அவர்களுக்கான தங்கு விடுதியும் இங்குள்ளது.

மொத்தம் 685 படுக்கை வசதிகளைக் கொண்ட 'மகப்பேறு மற்றும் மகளிர் நோய் இயல் நிலையத்'தில் ஆண்டொன்றுக்கு சராசரி 16,300 குழந்தைகள் பிறக்கின்றன.

தாயின் பிரசவ வேதனை தாளாமலே சில சிசுக்கள் இறந்து பிறப்பதுண்டு. குழந்தையோ தாயோ அவ்வாறானால் அதற்கான மூலகாரணம் ஆராயப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சிறந்த குழந்தையும் பெருமகிழ்ச்சியுமாய்வெளிச்செல்லும் தாய்மார்களுக்கு அந்தக் குழந்தையைப் பேணிக்காக்கும் விதமும் அடுத்த குழந்தைக்கான



'ஜேனஸ்' கதிர்ச் சிகிச்சைக் கருவி

இடைவெளியும் பற்றி இங்கே சொல்லித் தரப்படுகின்றன.

## புற்றுநோய்ச் சிகிச்சை

இங்குள்ள புற்றுநோய்ச்சிகிச்சைப் பிரிவில் ஆண்டொன்றுக்கு ஆயிரத்துக்கும் மேலான கருவுற்ற தாய்மார்கள் குணப்படுத்தப்படுகின்றனர்.

வெகுநாளாக ஆறாத ரணங்கள், வழக்கத்திற்கு மாறான நீர்க்கசிவு-இரத்தப்போக்கு, உடலின் எந்தப் பாகத்திலாவது சதைத் தடிப்பு அல்லது கட்டி ஏற்படல், சாப்பிடச் சங்கடமான அஜீரண நிலை, மலத்தில் அடிக்கடி ஏற்படும் மாறுபாடு, ஆறாத பருக்களில் ஏற்படும் மாறுதல், குணமாகாத இருமல் அல்லது அடிக்கடி குரல்மாறுவது போன்ற ஏழு காரணங்களே புற்றுநோய்க்கான அறிகுறி ஆதாரங்களாகச் சொல்லப்படுகின்றன.

இந்நோயோடு இங்கு வந்து சேரும் கருத்தறித்த தாய்மார்களுக்கு 'அணுக்கதிர் சிகிச்சை' அளிக்கப்படுகிறது. இவ்வகைச் சிகிச்சைக்கு, 'ஜேனஸ்' (Janus) என்ற இருமுகக் கதிர்க்கருவி பயன்படுத்தப்படுகிறது. இதை விடப் பயனளிக்கும் வேறொரு கருவிக்காக (Linear acceiarater) அரசிடம் விண்ணப்பித்திருப்பதாகவும், அது வந்துவிட்டால் இந்தப் பிரிவில் இன்னும் ஏராளமானோர் எளிதில் குணம் பெற

முடியும் என்றும் நமக்குத் தெரிவிக்கப்பட்டது.

'இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகப் பிரிவும் (Indian Council of Medical Research) இங்கே இயங்கி வருகிறது.

சிக்கலான பிரசவங்கள், கருச்சிதைவு, கருத்தடை போன்ற பல இப்பிரிவில் ஆராயப்படுகின்றன. சுகாசினி குணசாகரன், வசந்தா சங்கரன், ஜெஸிட் நிர்மலா, அபர்ணா துரைசாமி, ரீமா மாத்யூஸ் ஆகிய ஐந்து டாக்டர்களும், அவர்களுக்கு உதவியாளர்களாக எட்டுப் பேரும் இப்பிரிவில் திறம்படச் செயலாற்றி வருகின்றனர்.

சென்னை நகரில் குடும்பநலத் துறையில் முதன்மையாக இந்த மருத்துவ மனையின் மகப்பேறு பின் கவனிப்புத் திட்ட (Post-Partum programme) பகுதி விளங்கி வருகிறது. இதன் கீழ் கருக்கலைப்பு ஆலோசனை நிலையமும் செயல்பட்டு வருகிறது. 1982-83 நிதி ஆண்டில் மட்டும் 6790 பேர் இங்குவந்து குடும்ப நல நிரந்தரச் சிகிச்சை ஏற்றுச் சென்றிருக்கின்றனர்.



நூல் நிலையம்



இயக்குநர் செல்வி. சேதும்மா விளக்கமளிக்கிறார்

இரண்டே வினாடிகளில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு தழும்பே இல்லாமல், இரண்டே நாட்களில் இல்லம் திரும்பும் வசதி பெற்ற ''லேபராஸ்கோப்'' முன்ற அறுவைச் சிகிச்சை அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு இதனை ஏற்றுக் கொள்ளும் தாய்மார்களின் எண்ணிக்கை எங்கும் போல் இங்கும் பெருகிவருகிறது. இந்த ஆண்டு மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையை விட இதற்கென வருவோர் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதே போலத் தற்காலிகக் குடும்பநல முறைகளை ஏற்றுக் கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கையும் ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்தே வருகிறது. சென்ற நிதி ஆண்டில் இங்கே வந்து 2057 பேர் கருத்தடை வளையம் பொருத்திக் கொண்டுள்ளனர். இவைகளைப் பற்றிய கணக்கு விவரப் பட்டியல் பலகைகள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

மகளிர் நோய் இயல் சம்பந்தமான பிரச்சினைக்குரிய நோயாளிகள் பிற மருத்துவமனைகளிலிருந்தும் இங்கே அனுப்பப்பட்டு, சிகிச்சை பெற்று இல்லம் திரும்புகின்றனர்.

இங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள இரு அறுவை அரங்குகளில் நாள்தோறும் பெரிய அறுவைச் சிகிச்சைகள் அவ்வத் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களைக் கொண்டு சிறப்புறச் செய்யப்படுகின்றன.

''லேபராஸ்கோப்'' அறுவைச் சிகிச்சைக்குரிய பயிற்சி நிறுவனமாகவும்கூட இந்நிலையம் செயல்படுகிறது.

நோய்க்குறியியலுக்கான துறைகள் (Pathology, Seriology Bio-Chemistry) முழு அளவில் இங்கே உரிய தொழில் நுணுக்கப் பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. இரவு-பகல் எந்நேரமும் பரிசோதனைகள் உடனுக்குடன் செய்திடத்தக்க வசதி வாய்ப்புக்கள் இங்குள்ளன. மகப்பேறு மகளிர் நோய்இயல் நிலையம்' தனிக்கட்டடத்தில் இயங்குகிறது.

இங்கே பயிற்சி பெறுகின்ற மருத்துவர்களுக்காகவும் நோயாளிகளுக்காகவும் நாள்தோறும் காலை 10.00 மணியிலிருந்து மாலை 5 மணிவரை இம்மருத்துவமனையில் மாவட்ட மைய நூலகத்தின் கிளை நூலகம் ஒன்றும் இயங்கி வருகிறது. பல்வேறு தலைப்புகளிலான ஏழாயிரம் புத்தகங்கள் இங்குள்ளன.

'தாய் சேய் நல மருத்துவ மனை' இவ்வகையில் தாய்க்குலத்திற்கு ஆற்றி வரும் பணிகள் அளவிடற்கரியனவாகும்.



# நலிந்தோர் வாழ்வில் நலம் காண...

வேளாண்மையும் அதனைச் சார்ந்த பிற தொழிலுமே பின் தங்கிய ஆதிதிராவிட மக்களுக்கு முக்கிய வருவாய் அளிக்கும் வாய்ப்புகளாகும். ஆகவே வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, கோழி வளர்ப்பு மற்றும் பிற தொழில்களில் அவர்களை ஊக்குவிக்க சிறப்பு உள்ளடக்கத் திட்டமொன்று தமிழ்நாடு அரசால் தீட்டப்பெற்று நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் வேளாண்மை அங்கமாக வேளாண்மை இடுபொருள்களாக விதை மற்றும் பூச்சி மருந்துகளை 25 சத மானிய விலையில் ஆதிதிராவிட பழங்குடி விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்றது. இதுவன்றி உழவர் பயிற்சி நிலையங்களின் மூலம் பயிற்சி பெறும் விவசாயிகளில் 50 சதவீதம் ஆதிதிராவிட மக்களாக இருத்தல் வேண்டும் எனவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், ஆதி திராவிட விவசாயிகளுக்கெனவே ரூபாய் 65•13 இலட்சம் பெறுமானமுள்ள

**வெ. பழனிச்சாமி,**
**வேளாண்மை கூடுதல் இயக்குநர்,**
**(பணியாளர் மற்றும் திட்டம்)**

2481 டன் நெல் மற்றும் சிறு தானிய விதைகள் விநியோகிக்கப் படும். ரூபாய் 10.94 இலட்சம் மதிப்புள்ள 230 டன் பயறு விதைகளும் ரூபாய் 2.6 இலட்சம் மதிப்புள்ள 158 டன் பருத்தி விதைகளும் விநியோகிக்கப்படும்.

இதுபோன்றே ரூபாய் 36.55 இலட்சம் மதிப்புள்ள பூச்சி மருந்துகளும் விநியோகிக்கப்படும்.

இதுவன்றி 17,000 ஆதிதிராவிட விவசாயிகள் உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் பயிற்சி பெற்று பயனடைவர். பயிற்சி மற்றும் தொடர்பு வழித்திட்டத்தில் மொத்த தொடர்பு விவசாயிகளில் 20 சத விகிதம் ஆதிதிராவிட மக்களாக இருத்தல் வேண்டுமென அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.


**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்**
"தென்றல்" கிரீன்வேஸ் சாலை, சென்னை-600 028.

## முக்கிய அறிவிப்பு

சங்கீத நாட்டியக் கலைஞர்கள், சங்கீத சபைகள், சங்கீத நடனப் பயிற்சிப் பள்ளிகள் கவனிக்கவும்.

1983-84ஆம் ஆண்டில் மன்றம் பின்வரும் திட்டங்களை அமல் நடத்த இருக்கிறது.

தகுதிவாய்ந்த கலைஞர்களுக்கு சங்கீத சபைகள் மூலமாக ஊக்கம் அளிக்கும் திட்டம். வருகின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு இத்திட்டத்திற்கான நேர்முகத் தேர்வு ,சென்னையில் மட்டுமன்றி திருச்சியிலும் நடத்த ஏற்பாடு செய்யப்படும்.

சங்கீத-நடனப் பயிற்சிப் பள்ளிகளுக்கு உதவி மானியம் அளிக்கும் திட்டம்

மேற்கண்ட திட்டங்களின் மூலம் பயன்பெற விரும்பும், திட்டப்படி, தகுதிபெற்ற கலைஞர்கள் சங்கீத சபைகள், சங்கீத-நடனப் பயிற்சி நிலையங்கள், திட்ட விதிமுறைகளையும், விண்ணப்பப் படிவங்களையும் பின்வரும் முகவரிக்கு உடனே எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

''செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தென்றல்', கிரீன்வேஸ் சாலை, சென்னை-600 028"

பூர்த்தி செய்யப்பட்ட மேற்படி விண்ணப்பங்கள் அஞ்சல் மூலம் மன்றத்திற்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள் **15.9.1983**

குறிப்பிட்ட தேதிக்குமேல் தாமதமாக வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா.



# ராட்சதப் பல்லி

சென்னை கிண்டி தேசிய சிறுவர் பூங்காவில் சிறுவர்களையும், பெரியவர்களையும் கவருகிற அளவுக்குப் புதிதாக பைபர் கண்ணாடியால் செய்யப்பட்ட பழங் காலத்தில் வாழ்ந்ததாகக் கருதப் படும் பல்லி இனத்தைச் சேர்ந்த 'ராட்சத பிராணியான 'மெகலாசரஸ்' ( Megalosaurus ) சின் உருவம் 22.7.83 அன்று திறந்து வைக்கப்பட்டது.

மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''பைபர் கண்ணாடியால் செய்யப்பட்ட 20 அடி நீளம், 13 அடி அகலம், 75 ஆயிரம் ரூபாய் செலவில் மத்திய அரசினர் உயிரியல் சர்வே நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்டுள்ள ராட்சதப் பல்லி அமைக்கப்பட்டுள்ளது. 4 கோடி ஆண்டுகளுக்கு முன் இந்தப்பிராணி, திருச்சி அருகே அரியலூர் பகுதியில் வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது. இதன் எலும்புகள் அந்தப் பகுதியில் கண்டெடுக்கபபட்டதாக இந்திய உயிரியல் ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

''இந்த ராட்சதப் பல்லி பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் வாழ்ந்ததாக இந்திய ஆராய்ச்சித் துறையினர் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதுபோல நமக்கும் தெரியாத பல உண்மைகள் உலகத்தில் ஏராளமாக இருக்கின்றன. இவற்றைச் சிறுவர்கள் மட்டுமின்றி, பெரியவர்களும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். இவ்வளவு பெரிய அளவில் வாழ்ந்த பல்லி இனம் பரிணாம மாற்றமடைந்து இப்போது நமது வீடுகளில் வாழ் பல்லியைப் போல குறுகிவிட்டது. இதுபோல மனிதர்களும் குறுகி இருக்கலாம். அல்லது பெரிதாகி இருக்கலாம். எனவே, இதுபற்றியும் மனித ஆராய்ச்சியாளர்கள் ஆராய வேண்டும்.

''உயிரியல் பற்றி எல்லோரும் நல்ல முறையில் அறிந்து கொள்ளும் வகையில், சென்னையில் உயிரியல் அருங்காட்சியகம் அமைக்க 25 இலட்ச ரூபாய் செலவிடப்பட இருக்கிறது. மேலும் 3 கோடி செலவில் வண்டலூரில் வனவிலங்கு பூங்கா அமைக்கப் பட்டுள்ளது. இந்தப் பூங்காவில் மத்திய அரசின் உயிரியல் ஆராய்ச்சிப் பிரிவின் 'அரிய உயிரியல் தொகுப்பை' அமைத்துத் தர வேண்டும். உலகத்திலேயே தமிழகத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைதான் வயது முதிர்ந்ததும் ஆழமானதும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த அளவு பழமை மிகுந்த இந்த வனங்களையும் உயிரினங்களையும் பாதுகாத்து வரப் பெரிதும் முயன்று வருகிறோம். இந்தத் துறைக்கெனத் தனிச் செயலாளர் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார்.

''எனவே, மத்திய அரசு அமைக்க இருக்கும் வனவிலங்கு இன்ஸ்டிடியூட்டைத் தமிழகத்தில் அமைக்க வேண்டும். அதற்குத் தேவையான நிலத்தைத் தமிழக அரசு தரத் தயாராக இருக்கிறது''.

பல்லி எறும்புகளும், பறகளும் திருச்சி மாவட்டம் அரியலூர் அருகிலுள்ள கல்லமேடு கிராமத்தில் புவியியல் ஆராய்ச்சியின் போது கிடைத்தது. 120 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளைக்காரர் ஒருவர் இதனைக் கண்டெடுத்தார். ஆராய்ச்சியின் பயனாக அப்பகுதியில் மேலும் பல உறுப்புகளும், எலும்புகளும் கிடைத்தன. எல்லாவற்றையும் வைத்து இந்த பல்லியின் வடிவம் இப்படித்தான் அமைந்திருக்க வேண்டும் என்று நிர்ணயித்து இவ்வுருவத்தைச் செய்திருக்கிறார்கள். 7½ கோடி ஆண்டுக்கு முன்பு இதே காலத்தில் உலகின் மற்ற பகுதிகளிலும் இத்தகைய இராட்சதப் பிராணி வாழ்ந்து வந்ததாம். இதுவாழ்ந்த காலத்தில் மனித இனமோ அல்லது சிங்கம் புலி, யானைகள் போன்ற மிருகங்களோ தோன்றவில்லையாம். 20 அடி நீளமும் 40 டன் எடையும் கொண்ட இந்த ராட்சதப்பல்லி அந்தக் காலத்தில் காட்டை ஆட்சிபுரிந்து வந்த பயங்கர ராட்சதப்பிராணி என்று சொல்கிறார்கள்.

தொகுப்பு: ஜீ. ஆனந்தன்

# திருவள்ளூரில் பால் பெருக்கும் பணி

செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த திருவள்ளூர் வட்டத்தில் காக்களூர் கிராமத்தில் 21.7.83 அன்று பால் குளிரூட்டும் நிலையத்தின் அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது. விழாவுக்கு, தமிழ்நாடு பால்வளத்துறை ஆணையர் திரு ஏ.எம். சுவாமிநாதன் இ.ஆ.ப. தலைமை ஏற்றார்.

சென்னை-செங்கை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் பெருந்தலைவர் திரு கே.பாலாஜி அனைவரையும் வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''கிராம மக்கள் நகரத்துக்கோ வேறு மாநிலத்துக்கோ செல்வதைக் கட்டுப்படுத்தியுள்ளோம் என்றால், அதற்குக் காரணம் வெண்மைப் புரட்சி தான். இங்கு உருவாகும் பால் குளிரூட்டும் நிலையத்தினால் பல பேருக்கு வேலை வாய்ப்புத் தரமுடியும்''.

தலைமை உரையாற்றிய பால் வளத்துறை ஆணையர் திருஏ.எம். சுவாமிநாதன் இ.ஆ.ப. குறிப்பிட்டதாவது:


''செங்கை மாவட்டத்தில் பால்வளம், மிகவும் முன்னேற்றமான நிலையில் உள்ளது. பால் உற்பத்திக்குத் தேவையான அம்சங்கள் இரண்டு. கால்நடைகளுக்குத் தேவையான நீர்நிலைகளும், தீவன வசதியும் தேவை. அடுத்து, உற்பத்தியாகும் பாலை விற்பதற்கு, அருகிலே நகரங்கள் இருக்க வேண்டும். இந்த இரண்டு வசதிகளும் செங்கை மாவட்டத்துக்குப் பொருந்தியிருக்கின்றன.

''செங்கை மாவட்டத்து மக்கள் கடுமையான உழைப்பாளிகள். அவர்களது உழைப்பை எதிர்பார்த்துத்தான் இந்தப் பகுதியில் இந்த நிலையத்தைத் தொடங்க இருக்கிறோம்.''

திருவள்ளூர்த் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.பட்டாபிராமன் தமது உரையில் தெரிவித்தார்:

''தற்போது இங்கு 2000 லிட்டர் பால் நாளொன்றுக்கு உற்பத்தியாகிறது. இதனை அதிகப்

தொகுப்பு: தமிழ்ப்பித்தன்



படுத்த வேண்டும் என்ற முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகிறது. அவ்வாறு அதிகரிக்கும்போது விவசாயக் குடும்பத்தினர் பலர் பயன் பெறுவார்கள் என்பதை எண்ணும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது''.

கோ-ஆப்டெக்ஸ் ஆலோசனைக் குழுத் தலைவர் திரு. அனகாபுத்தூர் சி. ராமலிங்கம் எம்.எல்சி. தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''பாலாறு என்று ஒரு ஆறு வட ஆர்க்காடு மாவட்டத்தில் தொடங்கி செங்கையில் சங்கமம் ஆகிறது. பால் போன்ற மணல் படைத்ததனால் அந்தப் பெயர் பெற்றது. தற்போது வெண்மைப் புரட்சியின் காரணமாகச் செங்கையில் பாலாறு ஓடுகிறது என்று நாம் கூறலாம். இந்தப் பெருமை மாண்புமிகு முதல்வர் அவர்களாலும் பால்வளத்துறை அமைச்சர் அவர்களாலும் தான் ஏற்பட்டுள்ளது.''

பால் குளிரூட்டும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டிய மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்;

''62 இலட்ச ரூபாய் செலவில் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அனுமதியுடன் இன்று இந்தக் குளிரூட்டும் மையத்தின் அடிக்கல் நாட்டு விழா நடைபெறுகிறது. சென்னைக்கு நாளொன்றிற்கு 8 இலட்சம் லிட்டர் பால் தேவைப்படுகிறது. 3 இலட்சம் லிட்டர் பால் தான் விநியோகிக்க நம்மால் முடிகிறது.

''திருவள்ளூரில் தொடங்கப்படும் குளிரூட்டும் மையத்தின் மூலம் பலருக்கு வேலை வாய்ப்புக் கிட்டும். பொதுவாக, பல கோடி ரூபாய்களைச் செலவு செய்து ஒரு தொழில் நிறுவனத்தை உருவாக்கினால் அதன்மூலம் 100 பேருக்குக் கூட வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர முடிவதில்லை. ஆனால் பால் உற்பத்தி சங்கங்களின் மூலம் நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரமுடிகிறது.

''பால் வழங்கு சங்கங்கள் இந்த மாவட்டத்தில் 500 உள்ளன. அவை யாவும் ஒரே இடத்தில் இல்லை. மாவட்டம் முழுதுமாகப் பரவி-விரவி- உள்ளன. தொழிற்சாலையில் பணிபுரியும் அவர்கள் ஒரே இடத்திலிருக்க முடியும். ஆனால் பால் சங்கங்கள் அப்படி இல்லை. மாவட்டம் முழுதும் நிறைந்திருக்கின்றன.

## உழவர் பெருமக்களுக்கு உவகை தரும் செய்தி நெல் கொள்முதல் விலை உயர்வு

வருகின்ற குறுவைப் பட்டத்தில் விவசாயிகள் தங்களுடைய நெல்லை விற்பதற்கு வசதி செய்து தரும் வகையில் தஞ்சை மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் வட்டங்கள், திருச்சி மாவட்டத்தில் குளித்தலை, முசிறி, திருச்சிராப்பள்ளி மற்றும் லால்குடி வட்டங்களில் சுமார் 600 நேரடி கொள்முதல் நிலையங்களைத் திறக்க அரசு உத்தேசித்துள்ளது. பாசனத்திற்குத் தாமதமாகத் தண்ணீர் விடப்படுகின்ற காரணத்தினால் விவசாயிகளுக்கு நெல் பயிரிடுவதில் இடைஞ்சல்கள் இருக்கலாம். எனவே, அவர்களை ஊக்குவிக்கும் முறையில், விவசாயிகள் நேரடிக் கொள்முதல் நிலையங்களில் விற்கும் நெல்லுக்கு, மத்திய அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலைகளுக்கு மேலாக ஒரு குவிண்டால் நெல்லுக்கு வறட்சி அலவன்சாக ரூ. 15/-ம், பாசன, மற்றும் இன்னல் (ரிஸ்க்) அலவன்சாக ரூ. 20/-ம் ஆக மொத்தம் ரூ. 35/- 1.10.'83 முதல் 14.1.1984 வரை தர, அரசு முடிவு செய்துள்ளது.

சாதாரண ரக நெல்லுக்கு மத்திய அரசு தற்போது அனுமதித்துள்ள விலை ஒரு குவிண்டாலுக்கு ரூ. 122. சன்ன ரக நெல்லுக்கு அனுமதித்துள்ள விலை ரூ. 126. இவற்றிற்கு மாறாக 1.10.'83 முதற்கொண்டு மேலே குறிப்பிட்டுள்ள பகுதிகளில் உள்ள நேரடிக் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் விற்கும் சாதாரண ரக நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ 167ம், சன்னரக நெல்லுக்கு ரூ. 171ம் கிடைக்கும்.

''ஒரு விவசாயக் குடும்பத்திற்கு 1 மாடு இருந்தால் போதும் 4 அல்லது 5 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். இந்தப் புள்ளி விவரம் ஜவுளி ஆலை, சிமெண்ட் ஆலை போலப் பளிச்சென்று தெரிவதில்லை.

''தமிழகத்தில் 16 மாவட்டங்களில் 13 இலட்சம் குடும்பத்தினர் இந்தப் பால்வளத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் குறைந்தது 5 அல்லது 6 பேர் இருப்பர். எனவே ஏறக்குறைய 75 லட்சம் பேர்களுக்கு முறையான பாதுகாப்பை அளித்து வருகிறது இந்தத் தொழில்.

''அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டார்கள். 'ஏழையின் கண்ணீரைத் துடைப்பதற்காக நான் கோட்டை செல்கிறேன்' என்று! அதுதான் எங்கள் கொள்கை.

''விலைவாசி ஏறும்போது அரசு கொள்முதல் விலையைக் கூட்டித் தருவதற்குத் தயங்கியது கிடையாது. ஒரு கிலோ கிராம் கொழுப்புப் பொருள் கொண்ட பாலுக்கு முன்பு 27 ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தற்போதுள்ள விலைவாசியைக் கருத்தில் வைத்து கிலோவுக்கு 40 ரூபாய் தரப்படுகிறது.

''அரசிடம் உதவி பெற்று, பால்வள உற்பத்திப் பணியில் ஈடுபட்டுள்ள விவசாயக் குடும்பத்தவர்கள் சில நேரங்களில் பாலைத் தனியார்களுக்குக் கொடுப்பதாகத் தெரிகிறது. அது அவர்களுக்கும் நல்லதல்ல-தொழிலுக்கும் உகந்ததல்ல.

''விரைவில் சேலத்தில் பால் பவுடர் ஆலை ஒன்றினை ரூ. 8 கோடி செலவில் அமைக்க இருக்கிறோம். 2-வது பால் வளப்பெருக்குத் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் பால்வளத்தை அதிகப்படுத்தும் முயற்சி-வெற்றி பெறுவது உறுதி''

ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் அளிக்கப்பட்ட சலவைப் பெட்டிகள், முடிதிருத்தும் கருவிகள், தச்சுத் தொழிற் கருவிகள் ஆகியவற்றைச் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களிடம் வழங்கினார் மாண்புமிகு அமைச்சர். நலிவுற்ற-விவசாயத் தொழிலாளர்கள் 50க்கும்மேற்பட்டவர்களுக்கு இலவச வேட்டி-சேலைகளையும் மாண்புமிகு அமைச்சர் வழங்கினார்.

இறுதியில் ஒன்றிய இயக்குநர் திரு .வலசை ஆர்.பெருமாள் நன்றி கூறினார்.





# நாளைய கிராமங்கள்

அந்த ஊர், மற்ற ஊர்களைப் போல் அல்லாமல் சற்று வித்தியாசமாகவே காட்சியளித்தது. அந்த ஊரினுள் நுழையும்போதே அந்த ஊரில் என்னென்ன இருக்கின்றன, எங்கெங்கே இருக்கின்றன என்பதை அறிந்து கொள்கின்ற வகையில் பெரிய பலகை ஒன்றில் எல்லா விதமான விவரங்களும் குறிப்பிடப்பட்டிருந்தன. அதுவே ஒரு புதுமையாக இருந்தது.

அந்த கிராமத்திற்குள் நான் நுழையும்போது காலை 9 மணி இருக்கும். பள்ளிக்கூடத்து மணி அடித்துக் கொண்டு இருந்தது. சீருடையில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள், வகுப்பிற்குள் வேக வேகமாக நுழைந்து கொண்டிருந்தார்கள். ஐந்தாம் வகுப்பு வரை இருந்த அந்தப் பள்ளியில், ஐந்து வயதுக்கும் மேற்பட்ட அந்த ஊர்க் குழந்தைகள் அனைவரும் கட்டாயமாகக் கல்வி பயின்றார்கள்.

**மருத்துவமனை:**

பள்ளிக்கு எதிரே மருத்துவமனைக்குள் நுழைகிறேன். நோயாளிகள் அதிகமாக இல்லை. ஓரிருவரே இருந்தனர். அவர்களைப் பார்த்துவிட்டு அடுத்தடுத்து அருகில் இருந்த நான்கு சிற்றூர்களுக்கும் சென்று வருவதற்காக டாக்டர் தயாராகிக் கொண்டிருந்தார். ஐந்து சிற்றூர்களுக்கும் அவர் ஒருவர்தான் டாக்டர். 2,000 மக்களின் உடல் நலனைப் பேணுவது எனது கடமை என்று அவர் பொறுப்புணர்ச்சியோடு சொன்னது எனது மனத்தைத் தொட்டது.

**கூட்டுறவுப் பண்டகசாலை:**

மருத்துவமனையை ஒட்டினாற்போல இருந்த கூட்டுறவுப் பண்டகசாலை கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் அமைந்திருந்தது. நகரங்களில் பெரிதாக அமைக்கப்பட்டிருக்கும் சிறப்பு அங்காடிகளைப் போல அந்தச் சிற்றூர் மக்களுக்கு வாழ்க்கைக்கும் - தொழிலுக்கும் என்னென்ன தேவையோ அவைகள் அனைத்தும் அங்கேயே கிடைக்கின்ற வகையில் எல்லாப் பொருள்களும் இருந்தன. இரண்டு இரண்டு ஊர்களுக்கு ஒன்றாக இத்தகைய அங்காடிகள் செயல்பட்டு வந்தன.

பொருள்களை விற்பதற்கு மட்டும்தான் சிறப்பங்காடிகள் என்பதில்லை. அந்த ஊரில் விளையும் விளைபொருள்களை வாங்குவதற்கும் ஓர் அமைப்பு அவ்வூரில் அமைக்கப்பட்டிருந்தது.

பேராசிரியர்
**இல. சே. கந்தசாமி**

அந்த ஊரில் விளைபொருள்கள் ஒவ்வொன்றிற்கும் அவ்வூர் மக்களே விலை நிர்ணயம் செய்து இருந்தார்கள்.

இதற்கும் அடுத்தாற்போல் பணிமனை ஒன்று இருக்கிறது. அங்கே சைக்கிள் முதற்கொண்டு டிராக்டர் வரை, கருவிகளைப் பழுது பார்க்கிறார்கள்.

இந்த நான்கைந்து கட்டடங்களே இந்த ஊரின் பெரிய 'அரண்மனைகள்'. இவற்றோடு பஞ்சாயத்து அலுவலகம், அஞ்சல் அலுவலகம் இரண்டையும் சேர்த்துக் கொள்ளலாம். மற்றவைகள் எல்லாம் சிறு சிறு வீடுகளே. அந்த ஊரில் வீட்டுக்கொரு கறவை இருந்ததைப் பார்த்தேன். தங்களுக்குத் தேவையான பால் போக எஞ்சியதை 'வாங்கும் நிலையத்தில்' விற்றுவிடுகிறார்கள்.

**கோழிப் பண்ணை:**

சில வீடுகள் கோழிப்பண்ணைகளாகவே மாற்றப்பட்டு இருந்தன. வெள்ளை வெளேர் என்று நூற்றுக்கணக்கான கோழிகள் எழுப்பும் ஒருவித ஒலி எனக்குப் புதுமையாக இருந்தாலும்-புத்துணர்ச்சியை ஊட்டியது. ஒரு கோழிப்பண்ணை வீட்டிற்குள் புகுந்து, 'கோழிகளுக்கு நோய் வந்தால் என்ன செய்கிறீர்கள்?' என்றேன். 'கால்நடை மருத்துவர் ஒருவர் வாரம் ஒருமுறை

வந்து போகிறார். அதோடு எங்களுக்கு இரவுப் பள்ளிக்கூடத்தில் கோழி வளர்ப்பு பற்றிச் சொல்லிக் கொடுத்து இருக்கிறார்கள்' என்றார் அந்தப் பெண்மணி.

'உங்களுக்குப் படிக்கத் தெரியுமா?' என்று கேட்டேன். 'படிக்கத் தெரியாது; ஆனால் கோழி வளர்ப்பது எப்படி என்பதை அவர்கள் பாடம் நடத்தினார்கள். நான் காதால் கேட்டுக் கற்றுக் கொண்டேன்' என்றார். 'என்னைப் போலவே ஊரிலுள்ள எல்லாப் பெண்மணிகளுக்கும் அவரவர்களுக்கு என்னென்ன தேவையோ அவற்றைக் கற்றுக் கொடுக்கிறார்கள்' என்றார்.

அந்த ஊரில் உள்ள படித்த இளைஞர்களே ஒரு இரவுப் பள்ளிக்கூடம் நடத்துகிறார்கள். அவர்கள் எழுத்தறிவைப் பற்றிக் கவலைப்படாமல் இந்த ஊர் முன்னேற்றத்திற்கு ஒவ்வொரு குடும்பத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு என்ன தேவை என்பதை அறிந்து கற்பிக்கிறார்கள்.

ஊரின் ஒரு பகுதியில் இரண்டு மூன்று ஓட்டு வீடுகளை இணைத்துப் பெரிய சுற்றுச் சுவர் எழுப்பி இருந்தார்கள். வெளியில் தொழில் அகம் என்ற பெயரில் பெயர்ப் பலகை ஒன்று தொங்கியது.

உள்ளே சென்று பார்த்தேன். சில பெண்கள் கைக்குத்தல் அரிசிக்காக நெல் குற்றிக் கொண்டிருந்தார்கள். சிலர் துணி தைத்துக் கொண்டிருந்தார்கள். சிலர் நூற்றுக் கொண்டிருந்தார்கள். சிலர் ரொட்டி தயார் செய்து கொண்டிருந்தார்கள்.

**தொழிலகம்:**

இப்படிப் பெண்களாகவே இயக்கும் தொழிலகம் அந்த ஊர் மக்களாலேயே நடத்தப்பட்டு வருகிறது என்று அறிந்து மகிழ்ந்தேன்.

அதேபோல் ஆண்கள் பணி புரியும் பகுதியும் இருந்தது. அதில் சோப்புத் தொழிலும், வேப்பங் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுப்பதும் நடந்து கொண்டிருந்தன. அந்த ஊரில் வேப்ப மரங்களே அவர்களுக்கு மூலப்பொருள்களைத் தந்தன. இயற்கை வளத்திற்கும் வாய்ப்பிற்கும் ஏற்ற தொழில்களை அம்மக்கள் தேர்ந்தெடுத்துச் செய்வதை அறிந்து பெரிதும் மகிழ்ந்தேன்.


இளைஞர் ஒருவரை விசாரித்த போது, 'வீட்டுக்கு ஒருவருக்கு வேலை' என்று ஒரு திட்டத்தைத் தீட்டி, எங்கள் ஊரிலுள்ள எல்லா வீட்டிலிருந்தும் ஒவ்வொருவர் இந்தப் பணியில் ஈடுபட்டு இருக்கின்றோம். ஒவ்வொருவருக்கும் குறைந்தது மாதம் இருநூறு ரூபாய் வருமானம் கிடைக்கிறது. பங்கீட்டு முறையில் அதனைப் பகிர்ந்து கொள்கிறோம். எல்லாரும் எல்லா வேலைகளையும் பகிர்ந்து செய்கின்றோம்' என்றார்.

அங்கிருந்து அப்படியே நடந்து சென்றேன். ஊரின் புறம்போக்கு நிலங்களில் எல்லாம் வேப்ப மரங்களும் புளிய மரங்களும் செழித்து வளர்ந்து இருந்தன. நிலம் வீணாகாதவாறு இடைவெளி விட்டு மரங்கள் நடப்பட்டு இருந்தன. இடையிடையே யூகலிப்டஸ் மரக் கன்றுகளின் புதிய தோற்றம், அண்மையில் நடப்பட்டு இருக்கக்கூடும் என்பதை நானே ஊகித்துக் கொண்டேன். தொலைவில் தென்பட்ட ஏரியிலும் மரங்கள், நிறைந்து காணப்பட்டன.

அப்படியே சென்று ஒரு தோட்டத்திற்குள் நுழைகிறேன். அந்த விவசாயி மலர்ந்த முகத்தோடு என்னை வரவேற்று விசாரித்தார். அவருடைய தோட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு பயிர் செய்து இருந்தார்கள். அதே வயலில் வெங்காயமும் நடப்பட்டிருந்தது. இடையிடையே கொத்தமல்லிக் கீரை பச்சைப் பசேல் என்று காற்றில் அசைந்து கொண்டிருந்தது.

''என்ன ஒரே வயலில் மூன்று பயிர்களைப் பயிர் செய்து இருக்கிறீர்களே? விளைச்சல் குறையாதா?'' என்றேன்.





''கொத்தமல்லியை இரண்டு மாதத்தில் பிடுங்கி விடுவோம். வெங்காயம் மூன்று மாதத்தில் அறுவடைக்கு வந்துவிடும். கிழங்கு பத்துமாதப் பயிர் - அதனால் விளைச்சல் பாதிப்பதில்லை அதோடு கொத்தமல்லி வெங்காயத்தால் கொஞ்சம் வருமானமும் கூடக் கிடைக்கும்'' என்றார்.

**நவீன விவசாயம்**

'இந்த நவீன விவசாயத்தை வேளாண் பட்டதாரிகள் தோட்டத்துக்குத் தோட்டம் வந்து சொல்கிறார்கள். செய்தும் காட்டுகிறார்கள். சந்தேகம் வந்தால் இரவுப் பள்ளிக்கூடத்தில் தீர்த்து வைப்பார்கள்' என்றார்.

இன்றைய இரவுப் பள்ளியில் ஆடுவளர்ப்புக்கும், மாடு வளர்ப்புக்கும் கடன் பெறுவது எப்படி என்பது பற்றி வங்கி அலுவலர் சிறப்புரை ஆற்றுவார்' என்று அறிவித்தார்கள். இரவு நேரத்தில் ஓய்வுள்ளவர்களெல்லாம் ஒன்றாகக் கூடுகிறார்கள். அவரவர்களின் தேவையை-அனுபவத்தை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்கிறார்கள்.

எனக்கு ஏதோ வேற்று நாட்டில் இருப்பது போன்ற உணர்வு. ஊருக்குத் தேவையான பள்ளிக்கூடம், மருத்துவமனை -கூட்டுறவு முறையில் விற்பதற்கும், வாங்குவதற்கும் அமைப்பு, விளைபொருள்களுக்கு நிர்ணய விலை பணியகம்,, தொழிலகம், நவீன முறையில் தொழில் செய்தல், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை - என்று இவ்வளவு வாய்ப்புகள் இருந்தால்!

ஓ....என்னுள் பெருமூச்சு எழுந்தது. எங்கள் ஊர் எப்போது இப்படி எல்லாத் தேவைகளும் நிறைந்த ஓர் ஊராக மாறும்? மற்றவர்களையே குறை கூறுவதைவிட, அதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம் என்ற சிந்தனையோடு - பலப்பல எண்ணி ஊர் வந்து சேர்ந்தேன்.

சிந்தனைகள் எல்லாருடைய மனத்திலும் எழுகின்றன. ஆனால் அது செயல் வடிவம் பெறவேண்டாமா? அந்தநாள் தான் எல்லா ஊர்களும் தன்னிறைவு பெறும் நல்ல நாளாகும்.

## தமிழ்நாட்டுக்கு ரூ. ஒரு கோடி ஹட்கோ நிதியுதவி

பதினைந்து மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களில் விரவியுள்ள 123 நகரங்களுக்கான 147 புதிய வீட்டு வசதித் திட்டங்களுக்கு 'ஹட்கோ' அனுமதி வழங்கியுள்ளது.

இவற்றுக்கு ஆகும் மொத்தச் செலவு ரூ 91.32 கோடி. இதில் ரூ 59.56கோடியை 'ஹட்கோ' வழங்கும். திட்டங்கள் முடிவடையும்போது புதிதாகச் சுமார் 65,000 வீடுகளும், 3,000 மேம்பாடு செய்யப்பட்ட வீட்டு மனைகளும் தயாராகும்.

புதியதிட்டத்தில் 55 சதவீதம் கிராமப் புறத்திற்கானவை. மீதம் நகர்ப்புறங்களில் அமையும்.

தமிழகம் இத்திட்டத்தைப் பொருத்தவரை ஹட்கோவிடமிருந்து ஒரு கோடி ரூபாய் நிதியுதவி பெறுகின்றது. தமிழகக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 16 ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களுக்கென 1,146 பலவீனப் பிரிவினருக்கான வீடுகளைக் கட்டுவதற்காக இந்த உதவி வழங்கப்படுகின்றது.

## இளைஞர் சுயவேலைவாய்ப்பு

மயிலாடுதுறை, சீர்காழி, தரங்கம்பாடி வட்டங்களில் உள்ள படித்து வேலையில்லாமல் உள்ள இளைஞர்கள் சுய வேலை வாய்ப்பு பெற உதவும் நோக்கத்துடன், "மயிலாடுதுறை வட்டத்தில் பயின்ற இளைஞர் சுயவேலை வாய்ப்புக் கூட்டுறவுச் சிக்கன நாணயச் சங்கம்" 10.6.83-ல் மயிலாடுதுறை துணைப் பதிவாளரால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சங்கம், மயிலாடுதுறை வருவாய்க்கோட்டத்தை விவகார எல்லையாகக் கொண்டு செயல்படும். இதனால் மயிலாடுதுறை, சீர்காழி, தரங்கம்பாடி வட்டத்தில் உள்ள வேலையில்லா பட்டதாரி இளைஞர்கள் அவரவருடைய திறனுக்கேற்ப தொழில் துவங்குவதற்கு ரூ. 10,000/-வரை கடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

# பசுமைப்புரட்சியில் வெண்மைப்புரட்சி!



நம் இந்தியாவில் மாடுகளின் எண்ணிக்கையும் எருமை இனத்தின் எண்ணிக்கையும் உலகிலுள்ள மாடு, எருமைகளின் எண்ணிக்கையில் முறையே ஐந்தில் ஒன்றும், பாதியும் உள்ளன. ஆனால் எண்ணிக்கைக் கேற்ப உற்பத்தித் திறன் மிகவும் குறைவாக உள்ளது எனினும் கால்நடை பராமரிப்புத் துறை மற்றும்பால்வள நிறுவனம் ஆகியவற்றின் தீவிர முயற்சிகளினால் கலப்பின மாடுகளின் பெருக்கத்தினால் பால் உற்பத்தி கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

தற்போது நாட்டில் ஆண்டுக்கு 33 மில்லியன் டன் பால் உற்பத்தி என்ற நிலையிலிருந்து 1985-ல் 38 மில்லியன் டன் பால் உற்பத்தி என்ற குறியீட்டை எட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்சமயம் ஒரு நபருக்கு அன்றாடம் தேசிய அளவில் 132 கிராம் பாலும், தமிழ்நாட்டில் 99 கிராம் பாலும் கிடைப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. தேக ஆரோக்கியத்துடன் வாழ தினமும் ஒரு நபருக்கு 280 கிராம் பால் தேவை என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதை நாம் எட்ட அதி தீவிரமாகத் திட்டங்கள் தீட்டி, பால் உற்பத்தியைப் பன் மடங்கு பெருக்கி வழிவகை செய்ய வேண்டியது அவசியமாகும்.

## தீவிர பால் பெருக்குத் திட்டம்

நம் நாட்டில் தேசிய அளவில் உலக உணவுப் பொருள் வழங்கு திட்டத்தின் உதவியுடன் பால் பெருக்குத் திட்டம் ஒன்று 1970-ல் ஆரம்பித்து சென்னை, பம்பாய், கல்கத்தா, டெல்லி போன்ற மிகப் பெரிய நகரங்களில் பாலின் தேவையைப் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டது. தமிழகத்தில் தமிழ்நாடு பால் வள நிறுவனம் அமைக்கப்பட்டு, பால் பெருக்குத் திட்டம் சீராகச் செயல்பட வழி வகை செய்யப்பட்டது. அதன்பின் 1980-ல் இரண்டாவது பால் பெருக்குத் திட்டம் அமல் செய்யப்பட்டது. இத்தகைய தீவிர பால் பெருக்குத் திட்டங்களினால் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (Milk Producers' Co-operative Federation) மாநில அளவிலும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் (Milk Producers' Co-operative Union) மாவட்ட அளவிலும், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் (Milk Producers' Co-operative Society) கிராமங்களிலும் நிறுவப்பட்டுப் பால் உற்பத்தி, கொள்முதல், பால் பதனிடுதல், உபரி பாலைப் பால் பண்டங்களாகத் தயாரித்தல், பால் மற்றும் பால் பண்டங்களை விற்பனை செய்தல், கறவை மாடுகள் நலம் பேணுதல், கன்று வளர்ப்பு, சத்துள்ள கால்நடைத் தீவனம் தயாரித்துக் குறைந்த விலையில் வழங்குதல் போன்ற பணிகளைத் தமிழ்நாடு பால்வள நிறுவனம் கவனித்து வந்தது. 1980-க்குப் பின்னர் மாநிலப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மேற்கூறிய பணிகளை மேற்கொண்டதோடு பால் உற்பத்தியைப் பெருக்கவும், கறவை மாடுகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.


**டாக்டர் ந. மாரிமுத்து**
**உதவிப் பேராசிரியர்**
**(பால் பண்ணை)**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்.**
**கோவை.**


நம்நாட்டுக் கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறன் மிகவும் குறைவு. எனவே எண்ணிக்கை அதிகமிருந்தும் மரபியல் முறைப்படி பால் உற்பத்தி குறைவாக உள்ளது.

அயல் நாடுகளில் மாடுகள் மந்தை மந்தையாக மேய்வதற்கேற்ற நூற்றுக்கணக்கான ஏக்கர் மேய்ச்சல் நிலபரப்பு உள்ளதைப் போல் நம்நாட்டில் மேய்ச்சல் நிலப்பரப்பு அதிகமில்லை.

நம்நாட்டிற்குத் தேவையான பசுந்தீவனத்தில் சுமார் 70 சதவிகிதம் அளவுதான் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் ஊட்டச்சத்துள்ள பசுந்தீவனம் கிடைப்பது அரிதாக உள்ளது. இக்காரணமாகப் பால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது.

பால் பெருக்குத் திட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள அனைவரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த மத்திய, மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களினால் மான்ய உதவி கிடைத்து தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மூலம் கடனுதவி பெற்று வாங்கும் கறவை மாடுகளுக்குப் பொருளாதாரப் பற்றாக் குறைவினால் மாட்டுத் தீனி, பசுந்தீவனம் ஆகியவற்றைத் தேவையான அளவு அளிக்க இயலாததாலும் பால் உற்பத்தி வெகுவாகக் குறைகிறது.

நம் நாட்டில் கறவை இனங்கள் பராமரிக்கத்தக்க தட்பவெப்ப நிலை நாடெங்கிலும் சீரான அளவு எல்லாப் பருவங்களிலும் இல்லாததாலும் பெரும்பாலும் அதிக வெப்பமான பருவ நிலை உள்ளதாலும் பால் உற்பத்தி குறைவாக உள்ளது.

## பசுந்தீவனம் பெருக்கும் வழி முறைகள்

1. எல்லா நகரங்களிலும் கிடைக்கும் சாக்கடைக் கழிவு நீரைப் பயன்படுத்தி சாக்கடை கழிவுநீர் புல் வளர்ப்புப் பண்ணை (Sewage Fodder Farm) அமைத்து பசுந்தீவனம் உற்பத்தி செய்து விநியோகம் செய்யலாம்.
2. எல்லா மாவட்ட கால்நடைப் பண்ணைகளிலும் உள்ள நீர், நிலவள வசதிகளைப் பயன்படுத்தி அதிக அளவில் பசுந்தீவனம் உற்பத்தி செய்யவும் அவற்றை அருகிலுள்ள கிராமங்களுக்குப் பால் உற்பத்தியைப் பெருக்க ஊக்குவிக்கும் வகையில் குறைந்த விலையில் பசுந்தீவனம் விநியோகிக்கத் திட்டம் தீட்டி அமல் செய்யவேண்டும்.
3. எல்லாக் கிராமங்களிலும் புறம்போக்கு நிலம் உள்ளதைப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பயன்படுத்தி பசுந்தீவனம் உற்பத்தி செய்து அச்சங்க அங்கத்தினர்களுக்கு விநியோகம் செய்யலாம்.
4. தனியார் பசுந்தீவனம் உற்பத்தி செய்து விநியோகிக்க முன் வந்தால் ஏக்கருக்கு ரூ. 400 முதல் ரூ 500 வரை மானியம் வழங்கி ஊக்குவிக்கலாம்.

## முன் மாதிரி புல் வளர்ப்புத் திட்டம்

நீர்வளம், நிலவளம் உள்ள விவசாய நண்பர்களின் உதவியால் இத்திட்டத்தைச் செயல்படுத்தி பசுந்தீவனப் பற்றாக்குறையை நீக்கி எல்லாக் கிராமங்களிலும் பசுமைப் புரட்சி ஏற்படுத்தலாம்.

1. தேவையான நிலம்: 5 ஏக்கர்.
2. பருவம்: இறவைப் பயிராக ஆண்டு முழுவதும் பயிரிடலாம்.
3. முன்செய்நேர்த்தி: நிலத்தை நன்கு பண்படுத்தி 12.5 சென்ட் கொண்ட 40 பாகமாக அமைத்தல்.
4. அடிஉரம் தொழு உரம் ஏக்கருக்கு 10 டன்வீதம் 5 ஏக்கருக்கு 50 டன்.
5. தேவையான புல்கரணை ஏக்கருக்கு 10,000வீதம் 50,000.
6. பா(ருக்குப்) ... தேவை : $2\frac{1}{2} \times 2\frac{1}{2}$ அடி.
7. ஒரு புல்கரணைக்கும் மற்றொரு புல் கரணைக்கும் உள்ள இடைவெளி $2\frac{1}{2}$ அடி.
8. முதல் பசுந்தீவன அறுவடை: புல்கரணை நட்ட 60 நாட்களுக்குப் பின்.
9. ஒவ்வொரு அறுவடைக்கும் உள்ள இடைவெளி: 40 நாட்கள்.
10. மேலுரம் ஒவ்வொரு அறுவடைக்குப் பின்னும் களை எடுத்து மேலுரமாக, ஏக்கருக்கு 88 கிலோ வீதம். யூரியா போட வேண்டும்.
11. தினமும் அறுவடை செய்யும் நிலப்பரப்பு : 12.5 சென்ட் (40 பாகத்தில் 1 பாகம்).
12. தினம் கிடைக்கும் பசுந்தீவனம் (மகசூல்): 1250 கிலோ ஆண்டுக்கு ஏக்கரில் 100 டன் பசும்புல் கிடைக்கும் என்ற அடிப்படையில்.

அன்றாட வரவு : உற்பத்தி செய்யப்படும் பசும்புல்லின் மதிப்பு, ரூ. 250.00

ஒரு கிலோ 20 பைசா வீதம் 1250 கிலோ பசும்புல்.

அன்றாடச் செலவு :
1. தினம் புல் அறுவடை செய்ய.
2. களை எடுக்க.
3. உரமிட (யூரியா 88 கிலோ) ஏக்கருக்கு-ஆண்டுக்கு என்றஅடிப்படையில்-
4. நீர்பாய்ச்சுதல், மின்சாரச் செலவு-இறவைக் கூலி.
5. அருகிலுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்துக்குப் புல்லை எடுத்துச் செல்ல வண்டிச் செலவு.
6. இதர எதிர்பாராத செலவு இனம்.
7. ஆக மொத்தச் செலவு ரூ. 100.00.

அன்றாட நிகர வருவாய் 5 ஏக்கரில் ரூ. 250—100 ரூபாய் 150.00.

இவ்வாறு தினம் உற்பத்தியாகும் 1250 கிலோ பசும்புல்லை அச்சங்க அங்கத்தினர்களுக்கு ஒரு மாட்டுக்கு சுமார் 10 முதல் 15 கிலோ வரை விநியோகம் செய்வதன் மூலம் 80-125 கறவை மாடுகளுக்கு விநியோகம் செய்யலாம்.

இத்தகைய முன் மாதிரி புல் வளர்ப்புத் திட்டத்தினால் ஏற்படும் பயன்கள்:

1. பசுந்தீவனம் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டு பற்றாக் குறையை இத்திட்டத்தின் மூலம் நிவர்த்தி செய்ய வழி உண்டாவதால் எல்லாக் கிராமங்களிலும் பசுமைப் புரட்சி ஏற்படுகிறது.
2. இத்தகைய பசுமைப்புரட்சியின் மூலம் அதிகப்பால் உற்பத்தி உண்டாகிறது. இதனால் 'வெண்மைப்புரட்சி' நாடு முழுவதும் உண்டாக வழி வகை செய்யப்படுகிறது.
3. ஒவ்வொரு கறவை மாட்டுக்கும் தேவையான பசுந்தீவனம் கிடைத்து பால் உற்பத்தித் திறன் அதிகரிப்பதால் ஒவ்வொருகறவை மாட்டின் மூலம் மாட்டின் சொந்தக்காரர்களுக்கு அன்றாடம் வருவாய் அதிகரித்து பால் பண்ணை பொருளாதார முன்னேற்றம் காணலாம்.
4. சங்க அங்கத்தினர்களின் பொருளாதார முன்னேற்றங்களின் மூலம் வாழ்க்கைத் தரம் உயரவும் அக்கிராமத்தின் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வழி ஏற்படுகிறது.
5. இத்தகைய திட்டத்தினால் கறவை மாடுகளில் பசுந்தீவனப் பற்றாக் குறையால் ஏற்படும் மலட்டுத் தன்மை நீக்கப்பட்டு மாடுகளில் சினைப் பிடித்தலில் தாமதம் நீங்கி கன்று பிறக்கும் இடைவெளி குறைவதால், உற்பத்திப் பெருக்கமும், அதிகக் கன்று பிறப்பும் ஏற்படுவதால் பண்ணையின் பொருளாதாரம் மேம்படுகிறது.
6. பசுந்தீவன விற்பனையின் மூலம் இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாய நண்பர்களுக்கு அன்றாடம் மொத்தம் சுமார் ரூ. 250 வருவாய் அல்லது நிகர வருமானமாக ரூ. 150 கிடைப்பது ஒரு முக்கிய அம்சமாகும்.
7. நாட்டின் பால் உற்பத்தி அதிகரித்து ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் பால் மற்றும் பால் பண்டங்கள் தேவையான, அளவு கிடைக்கவும் தன்னிறைவுஅடையவும் இத்திட்டம் வழிகாட்டுகிறது.

இவ்வகையில் 'பசுமைப்புரட்சியின் மூலம் 'வெண்மைப்புரட்சி' மலர வழி ஏற்படுவதால் நாட்டின் பால் உற்பத்தி அதிகரிக்கவும் தேசிய அளவில் பொருளாதார முன்னேற்றமடையவும் ஏதுவாகிறது. எனவே பால்வளம் பெருக அனைவரும் பாடுபடுவோமாக.

**ஓர் அறிவிப்பு**

'தமிழரசு' இதழுக்கு எழுத்தோவியங்களை அனுப்பும் நண்பர்கள், வெளியிடப் பெறாத வற்றைத் திரும்பப் பெறுவதற்கு, உரிய அஞ்சல் தலைகளை இணைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*ஆசிரியர்.*




**பூ. சோலையப்பன்**
**வேளாண்மை இணை இயக்குநர் (பயறு)**
**சென்னை**

தமிழ்நாடு பயறு வகை உற்பத்தியில் பற்றாக்குறை மாநிலமாக இருந்து வருவதால், நமது தேவைக்கு அண்டை மாநிலங்களை நம்பியிருக்கிறோம். பயறு உற்பத்தியில் இந்நிலையைப் போக்கித் தன்னிறைவு அடைந்திட நமது தமிழக அரசும், மைய அரசும் திட்டங்கள் பலவற்றைச் செயலாக்கி வருகின்றன.

பயறு உற்பத்தியைப் பெருக்க வேளாண் பெருங்குடி மக்கள் பயறு சாகுபடியை அதிகமான பரப்பளவில் மேற்கொள்வதன் மூலமும் உயர் ரகவிதைகளைப் பயன்படுத்தி திருந்திய சாகுபடி முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமும் பயறு உற்பத்தியைப் பெருக்கிட முடியும்.

பயறு சாகுபடியை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் பின்வருமாறு:

மானாவாரி நிலக்கடலை மற்றும் சோளம் ஆகிய பயிர்களுடன் பயறு வகைகளைக் கலப்புப் பயிராக அதிக அளவில் பயிரிடுதல்.

பருத்தி, கரும்பு, வாழை, மஞ்சள் போன்ற பாசனப்பயிர்களில் ஊடுபயிராக அதிக அளவில் பயிர் செய்தல்.

மானாவாரி பருத்தி, மரவள்ளிப் பயிர்களில் ஊடுபயிராகப் பயிர் செய்தல், நெல் வரப்பில் குறுகிய வயதுடைய பயறு இரகங்களைப் பயிரிடல்.

ஒரு போகக் களிமண் நஞ்சைத் தரிசுகளில் உளுந்து, பாசிப்பயறு போன்ற பயறு வகைகளை அதிகப் பரப்பில் பயிரிடுதல்.

கோடையில், தண்ணீர் தட்டுப்பாடுள்ள இடங்களில் குறைந்த வயதுடையதும், குறைந்த தண்ணீர் தேவையுடையதுமான உளுந்து, பாசிப்பயறு, தட்டைப் பயறு ஆகிய பயறு வகைகளை அதிக அளவில் பயிரிடுதல்.

மானாவாரி நிலங்களில் வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் இரண்டாம் பயிராக உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு, கொண்டைக்கடலை, கொள்ளு ஆகிய பயறு வகைகளை அதிக அளவில் சாகுபடி செய்தல்.

உயர் இரகங்களை அதிக அளவில் பயிரிடாமை, பயறு வகைகளுக்கு, பரிந்துரைப்படி உரமிடா திருத்தல், போதிய பின் செய் நேர்த்தி செய்யாதது, தக்க பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிக்காதது என்ற வகையில் நமது மாநிலத்தில் பயறு வகைகளின் மகசூல் குறைவாக இருப்பதற்கான காரணங்கள் பல உள்ளன.

பயறு மகசூலை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் இல்லாமல் இல்லை. அவை இவை—

ஆராய்ச்சியின் பயனாக கிடைக்கப்பெற்ற குறைந்த வயதுடைய உயர் இரகங்களை அதிக அளவில் பயிரிடுதல்.

விதை மூலம் பரவும் பூஞ்சான நோய்களை தடுக்க, ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் திரம், பிராசிகால் போன்ற மருந்துகளுடன் கலந்து விதைத்தல்.

விதைக்கு முன் விதையுடன் நுண்ணுயிர்க் கலவையைக் கலந்து பின் விதைத்தல்.

மானாவாரிப் பயிருக்கு ஏக்கருக்கு 5 கிலோ தழைச்சத்து, 10 கிலோ மணிச்சத்தும் கிடைக்குமாறும், பாசனப் பயிருக்கு ஏக்கருக்கு 10 கிலோ தழைச்சத்தும், 20 கிலோ மணிச்சத்தும், கிடைக்குமாறும்அடியுரமிடுதல். அல்லது பூப்பிடிக்கும் தருணத்தில் ஒரு





முறையும், பின் 15 நாட்கள் கழித்து மற்றொரு முறையும் ஏக்கருக்கு 7 கிலோ வீதம் அமோனியம் பாஸ்பேட் உரத்தை 235 லிட்டர் நீரில் கரைத்து செடி மேல் தெளித்தல்.

காலத்தே களையெடுத்து, நன் முறையில் பின்செய் நேர்த்தி செய்தல்.

காய்ப்புழுவைத் தடுக்க, ஏக்கருக்கு 10 கிலோ விதம் பி.எச்.டி. 10சதம் தூளை தூவுதல் போன்ற திருந்திய சாகுபடி முறைகளைக் கடைப்பிடித்து வேளாண் பெருமக்கள் மகசூலைப் பெருக்கிடலாம்.

மேற்கண்ட திருந்திய சாகுபடி முறைகளை ஏழை, எளிய விவசாயிகள்கூட கடைப்பிடிக்க வழி செய்யும் வகையில் நமது தமிழக அரசும், மைய அரசும் பல்வேறு சலுகைகளை வழங்குகின்றன.

ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆண்டிற்கு 100 விவசாயிகள் வீதம் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு நபருக்கு ரூ.40 வீதம் மானியம் அளித்து, திருந்திய பயறு உற்பத்தி நுணுக்கங்களில் பயிற்சி அளிப்பது. பயறு பெருக்க நுணுக்கங்களைத் தெரியப்பலத்த துண்டு வெளியீடுகள், புத்தகங்கள் போன்றவை ஆண்டிற்கு மாவட்டம் ஒன்றிற்கு ரூ. 5000 செலவில், வெளியிட்டு, வழங்குவது. டை அமோனியம் பாஸ்பேட் உரத்தை கரைசலாகத் தெளிக்கும் செலவில் எக்டேருக்கு ரூ. 10 வீதம் 10000 எக்டேருக்கு மானியம் அளிப்பது போன்ற சலுகைகள் தமிழக அரசால் வழங்கப்படுகின்றன.

தரமான பயறு விதைப் பெருக்கத்தை ஊக்குவிக்க சான்றிதழ் விதை உற்பத்தியில் குவிண்டாலுக்கு ரூ.200 வரை மானியம் வழங்குதல், விவசாயிகள் நிலத்தில் செயல்விளக்கப் பண்ணைகள் அமைப்பதற்காக இடுபொருள் மானியமாக எக்டேருக்கு ரூ.375 வீதம் வழங்குதல். நுண்ணுயிர் கலவை பொட்டலங்களைப் பயறு விதைகளுடன் கலந்து உபயோகிப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு அதன் முழு விரையில் 50% மானியமாக வழங்குதல், பூச்சி, பூஞ்சான நோய்களிலிருந்து காக்க பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் 50% மானியத்தில் வழங்குதல், பயிர்ப் பாதுகாப்பு செய்வதற்கான செலவினத்தில் எக்டேருக்கு ரூ. 15 வீதம் மானியம் வழங்குதல். பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைக் கையாளுவதற்குத் தேவையான கைத்தெளிப்பான் மற்றும் தூவான்களை 50% மானியத்தில் விநியோகித்தல். புத்திய பயறு இரகங்களை விவசாயிகள் மத்தியில் பரப்பிட, 0.1 எக்டேருக்குத் தேவையான விதை மற்றும் நுண்ணுயிர்க் கலவை கொண்ட மினிகிட்டுகளை இலவசமாக வழங்குதல்-போன்ற பல சலுகைகள் மைய அரசால் அளிக்கப்படுகின்றன.

1983 காரீப் பருவத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு 0.2 எக்டேருக்குத் தேவையான விதை, நுண்ணுயிர்க் கலவை, மற்றும் 20 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட் உரம் கொண்ட 'மினி கிட்டு'களை இலவசமாக வழங்க ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ. 5000 வீதம் எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வழங்கப்படுகிறது.

எனவே, வேளாண்குடிப் பெருமக்கள் மேற்கூறப்பட்ட அரசின் சலுகைகளைப் பயன்படுத்தி, பயறு சாகுபடிப் பரப்பளவை அதிகப்படுத்தியும் ஏக்கர் மகசூலை அதிகரித்தும் நாட்டின் வளத்தையும் தங்கள் வளத்தையும் மேன்மேலும் பெருக்குவார்களாக!.



பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 81-வது பிறந்தநாளையொட்டி 15-7-83 அன்று சென்னை அண்ணா சாலையில் உள்ள காமராஜரின் திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களும, அமைச்சர் பெருமக்களும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதர் திரு.கே. ஆர்.நாராயணன் அவர்கள், சென்னை தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களை (11-7-83-ல்) சந்தித்து உரையாடினார்.

## படமும் செய்தியும்






திருவேற்காடு அருள்திரு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டியையும், குளிர் காற்று சாதனத்தையும், 10-7-83-ல் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் துவக்கி வைத்தார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.






Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676

இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் ஆகஸ்ட் 2-ஆம் நாள் முழு அடைப்பு நடைபெற்றது.

முழு அடைப்பு நாளில்
முற்றிலும் ஓய்ந்து கிடந்த
சென்னை மாநகரம்



# தமிழரசு

1-9-1983 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி — ஆவணி 16

COMMISSIONER OF TAMILNADU
ARCHIVES & HISTORICAL RESEARCH
7 SEP 1983
EGMORE, MADRAS-8



மான்புமிகு முதல்வர் அவர்களை 25.8.'83 அன்று காலையில், இலங்கைக்கு இந்தியப் பிரதமரின் சிறப்புத் தூதுவராகச் செல்லும் திரு ஜி. பார்த்தசாரதி சந்தித்து உரையாடினார்.

"டான் இந்தியா வேட்டில் எக்ஸ்டிராக்ட் நிறுவனம்" சார்பில் திரு. ராஜ்கபூர், திரு. ராஜேந்திரகுமார், திரு எஸ். எஸ். எம். சவுண்டப்பன் ஆகியோர் இலங்கைத் தமிழர் உதவி நிதிக்காக மான்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர் அவர்களிடம் ஓர் இலட்ச ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். (25.8.83)



# நினைவில் நிறுத்துக!

இலங்கையில் இபபோது நடைபெறும் சம்பவங்கள் பெரிதும் வேதனை தருவதாக உள்ளன.

இலங்கைத் தமிழாகள் பிரச்சனைகளைத் தீர்க்க நமது பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். இந்த வாய்ப்பை இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே தவறவிட்டால் இலங்கை சுதந்திர நாடாக இருக்க முடியாது. ஆத்திரத்தில் அவர் வேறு நாட்டைத் துணைக்கு அழைத்தால், அந்தநாடு இலங்கையில் காலூன்றுவதன் மூலம் இலங்கை அடிமை நாடாக ஆகக் கூடிய நிலைகூட உருவாகும்.

இலங்கையில் நடைபெறும் இனப் படுகொலைகள் தொடர்பாகத் தமிழக மக்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றனர். அங்குள்ள தமிழர்களைக் கூண்டோடு அழிக்க மேலும் முயற்சிகள் நடைபெறுமானால், இலங்கை மோசமான விளைவுகளுக்கு அழைப்பு விடுப்பதாகவே அது அமையும்.

—மாண்பமிகு தமிழக முதலவர்

(21.8.83 அனறு திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசியதிலிருந்து)




**தமிழரசு**

மலர் : 14 இதழ் : 5

திருவள்ளுவர் ஆண்டு 2014

ருத்ரோத்காரி — ஆவணி 16

1—9—1983

# சமத்துவ இலட்சியம் வெல்க!

## மாண்புமிகு முதல்வர்

என்னை வாழவைக்கும் தாய்மார்களே! என்னுடைய நல்ல செயல்களுக்கு எப்போதும் ஆதரவு தரும் பெரியோர்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே!

நமது தாய்த்திருநாடு விடுதலை பெற்று 36 ஆண்டுகள் நிறைவுற்று 37-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நேரத்தில் நாட்டு மக்கள் அனைவருக்கும் என்னுடைய இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விடுதலைத் திருநாளை நாம் உள்ளத்தின் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றிக் கொண்டாட வேண்டிய கடமை உடையவர்கள் ஆனாலும், நம்முடைய கவனமெல்லாம் அண்மையில் உள்ள இலங்கைத் தீவில் கொடுமைகளுக்கு ஆளாகித் தவித்துக் கொண்டிருக்கும் நமது சகோதரர்களைச் சுற்றியே வட்டமிட்டு வருகிறது.

தமிழக மக்களின் மனவுணர்வுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கின்ற வகையில் தமிழக அரசும், அரசின் அழைப்பை ஏற்று அனைத்துக் கட்சிகளும் செயல்பட்டன என்பதையும், அதன் காரணமாக இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கு ஆதரவாக ஒரு தேசிய கருத்து எழுந்திருப்பதையும், இருக்கின்ற நிலைமைகளுக்கு ஏற்ப நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இலங்கைத் தமிழர் துயர் தணிய உரிய முயற்சிகளில் ஈடுபட்டு வருவதையும் அனைவரும் அறிவார்கள்.

இலங்கைத் தமிழ் மக்கள் அனைத்து உரிமைகளோடு கவுரவமான முறையில் வாழ்ந்திடவும், இலங்கையில் தமிழ் பேசும் மக்களுடைய உயிருக்கும் உடைமைகளுக்கும், மானத்துக்கும் பாதுகாப்பு கிட்டிடவும், பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கு வகை செய்யப்படவும் மத்திய அரசின் வாயிலாகத் தேவைப்படும் நடவடிக்கைகள் எடுக்க நாம் தொடர்ந்து கடமை ஆற்றுவோம்: இதில் நமக்குள்ள பொறுப்பைச் செவ்வனே நிறைவேற்றுவோம் என்று நாம் உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும்.

பாதுகாப்புக்கும், வழிகாட்டுதலுக்கும் தகுதிவாய்ந்த தலையாய இடத்தைப் பெற்றுள்ள நம் நாட்டை மேலும் வலிமை மிக்கதாகவும், கட்டுக்கோப்புமிக்கதாகவும், ஆக்க வேண்டிய பொறுப்பை நாம் உணர்ந்து பணிபுரிய வேண்டிய கட்டாயத்தைக் காலம் நமக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறது.



அனைத்துமக்களுக்கும் சம உரிமை, சம வாய்ப்பு, மதச்சார்பற்ற தன்மை ஆகிய கோட்பாடுகள் ஒரு நாட்டுமக்களாலும், ஆட்சியினராலும் கடைப்பிடிக்கப்படவேண்டும். பிளவுமனப்பான்மையும், குறுகிய நோக்கமும் கொண்ட வன்முறைச் சக்திகளை ஒடுக்கி மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் கடமையை ஆட்சியில் உள்ளவர்கள் செம்மையுடன் நிறைவேற்றவேண்டும். இந்த அம்சங்களை ஒரு நாடு கடைப்பிடிக்கத் தவறினால் அதன் காரணமாக மக்களுக்கு எத்தகைய இன்னல்களும் இழப்புகளும் ஏற்படும் என்பதற்கு இலங்கை நிகழ்ச்சிகள் ஒரு எச்சரிக்கையாக அமைந்துள்ளன.

வருங்காலத் தலைமுறையினர் உரிமையுடன் இன்பமான விடுதலை வாழ்வு வாழ்ந்திட தங்களது இன்னுயிரைக் காணிக்கையாக்கிய தீரமிக்க தியாகத் திலகங்களை இன்று நன்றியுடன் வணங்கக் கடமைப்பட்டுள்ளோம். பெயர் தெரிந்தும் தெரியாமலும் விடுதலைப் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட வீரப்பெருமக்கள் பெற்றுத் தந்த விடுதலையை என்ன விலை கொடுத்தாகிலும் காத்தே தீருவோம் என்று உறுதி ஏற்போம்.

விடுதலைப் போரை நடத்திய பாங்கு; வேற்றுமையில் ஒற்றுமை காத்திடும் நமது தனிப்பண்பு; மாபெரும் நாட்டை மக்களாட்சித் தத்துவ அடிப்படையில் செலுத்திக் கொண்டு வருகிற சிறப்பு; அமைதியான திட்டமிட்ட வழிகள் வாயிலாக முன்னேற்றத்தை அடையும் நமது பயணம் - இவற்றால் இந்தியத் திருநாடு உலக நாடுகளின் வரிசையில் தனியாததோர் இடத்தையும், மதிப்பையும் பெற்றுள்ளது. இத்தகைய தருணத்தில் இந்தியாவின் உண்மையான வலிமை தன மக்களுடைய சீரான முன்னேற்றத்தில் தான் அடங்கியிருக்கிறது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

எந்த ஒரு நாடும் சலியாத உழைப்பின்றி, குறிக்கோளின்றி முன்னேற இயலாது. நாம் விடுதலை பெற்று 37 ஆண்டுகள் ஆன பிறகும் பல்வேறு துறைகளில் வளர்ச்சி பெற்ற பின்னரும் வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களின் எண்ணிக்கை நம் நாட்டு மக்கள் தொகையில் சரி பாதி என்கிற உண்மையை நாம் மறத்தல் கூடாது. அப்படி நலிந்து கிடக்கும் மக்களைக் கைதூக்கி விடவில்லை என்றால், அதற்கான பணிகளை விரைவாகச் செயல்படுத்தவில்லை என்றால், மக்களாட்சித் தத்துவத்திற்குப் பொருளில்லை என்று ஆகிவிடும்.

''முன்னேறாமல் இருக்கிற ஒரு சமுதாயம் பலவீனமுற்றுவிடும். அந்தச் சமுதாயத்தின் ஆக்கப் பணிகள் அனைத்திலும் இந்தபலவீனத்தின் விளைவுகளே இடம் பிடித்துவிடும்'' என்று அமரர் பண்டித ஜவர்ஹர்லால் நேரு அவர்கள் மெத்தப் பொருத்தமாகக் கூறினார்கள். அப்படியானால் முன்னேற்றத்திற்கு ஏற்பட்டுள்ள இடையூறுகள் எவை? வளர்ச்சிப் பாதையில் வைக்கப்பட்டுள்ள தடைக் கற்கள் யாவை? என்பதை உணர்ந்து அவற்றை அகற்றுவதன் வாயிலாகத்தான் நாட்டின் உயர்வை உறுதி செய்ய முடியும்.

வன்முறையும், பிளவுச் சக்திகளுமே இன்றைக்கு எழுந்துள்ள மிகப் பெரிய தடைக் கற்கள். எந்த ஒரு பிரச்சினையிலும் தீர்வு காண வன்முறை வழியை நாடுவதும், நாட்டின் ஒட்டுமொத்த நலனைவிட ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது கட்சியின் நலனே பெரிது என்று கருதும் மனப்பான்மையும் நாளடைவில் நம்மைச் சிதைத்துச் சீரழித்துவிடும். வன்முறைக்கும், பிளவு மனப்பான்மைக்கும் இடம் இல்லாத, இடம் தராத ஒரு உன்னதமான பொது வாழ்வை உருவாக்குவோம். அடித்தள மக்களின் நல்வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கின்ற திட்டங்களுக்கு முதலிடம் தருவோம். சமுதாய ஒற்றுமைக்கான முயற்சிகளை விரைவுபடுத்துவோம். இந்த அடிப்படையான தேவைகளை நிறைவேற்றுவதன் வாயிலாக நமது நாட்டின் வலிமையைப் பெருக்குவோம். வலிமையும், ஒற்றுமையும் கட்டிக்காக்கப்படுகிற நிலையில் நம் நாடு திகழ்ந்திடுமானால் அதுவே வாழ்வற்று ஏங்கித் தவிக்கும் பிற மக்களுக்கு நல்லதொரு பாதுகாப்பாக இருக்கும் என்பதை அண்மைக்கால நிகழ்ச்சிகள் காட்டுகின்றன.

தன்னுடைய உரிமைகளுக்காகப் போராடுவதிலும் எந்தக் கட்சி அல்லது தலைவருக்கும் அறவழியில் செல்ல உரிமை உண்டு. ஆனால் தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்ற பொதுச் சொத்துக்களை அழிக்கவோ அல்லது உயிர்களைப் பலி வாங்கவோ எந்த ஒரு தலைவருக்கும், கட்சிக்கும், அமைப்பிற்கும் உரிமை கிடையாது என்பதை நாம் அனைவரும் உணரவேண்டும். அப்படிப்பட்டவர்கள் மக்களின் நல்வாழ்வுக்கு எதிரான சமூக விரோதிகள் ஆவர். எவ்வளவு உன்னதமான கொள்கையாயிருப்பினும் பிறருக்குத் தீங்கு விளைவிக்காத செயலில் ஈடுபடுகிறவர்கள்தான் தேசப்பற்று உள்ளவர்கள், சமூகத்தைப் பாதுகாப்பவர்கள் ஆவார்கள்.

இப்படிப்பட்ட உன்னதக் கொள்கைகளைக் கொண்ட நல்லவர்கள்தான் புதிய சமதர்ம, சமுதாயக் கொள்கைகளை மக்களுக்குத் தரமுடியும்.

''அத்தகைய புதிய இந்தியாவை, புதிய தமிழகத்தை சமதர்ம சமத்துவப் பாதையில் உறுதியோடு செலுத்த அயராது உழைப்போம். இந்த தூய நோக்கம் கொண்ட அனைவரையும் ஒரே அணிவகுப்பாகக் கொண்டு வருவோம்'' எனும் குறிக்கோளுடன் தொண்டாற்ற இந்த ஆண்டின் விடுதலைத் திருநாள் நமக்கெல்லாம் உணர்வூட்டும் திருநாளாக அமைந்திடும் என்று நம்புகிறேன்; அமைந்திட வேண்டும் என விரும்புகிறேன்.

இந்திய விடுதலை வாழ்க!

நமது ஒற்றுமை முயற்சிகள் வெல்க!


சமத்துவ இலட்சியம் வெல்க!

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

வாழிய பாரத மணித் திருநாடு!

வாழ்க அண்ணா நாமம்!

— மாண்புமிகு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர் அவர்களின் சுதந்திர நாள் செய்தி (15·8·83)



# திரு.வி.க.வும் தேசியமும்

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர்
சிலம்புச் செல்வர்
டாக்டர். ம.பொ. சிவஞானம்

இந்தியாவில் கன்னியாகுமரி முதல் காஷ்மீரம் வரை தேசிய எழுச்சி ஏற்பட்டது 19ஆம் நூற்றாண்டிலேதான் என்று வரலாற்றுப் பேராசிரியர்கள் கூறுகின்றனர். இந்த எழுச்சிக்கு இராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, ராமகிருஷ்ண பரமஹம்சர் ஆகிய மூவரையும் அவர்கள் காரணமாக்குவதுண்டு. இது உண்மையானால், அந்த மூவரோடு வள்ளற்பெருமானையும் சேர்ப்பது, வரலாற்றை முழுமைபடுத்துவதாக இருக்கும். ஆனால் அவர்கள் தோற்றுவித்ததுகூட கலாச்சார ரீதியான தேசிய எழுச்சிதான்! அதை முன்னோடியாகக் கொண்டு இருபதாம் நூற்றாண்டில் முதற் பத்தாண்டுக் காலத்திலே, அரசியல் ரீதியான தேசிய எழுச்சி தோன்றியது. அதிலே, தேச விடுதலை ஆவேசமும் சிறிதளவு கலந்து இருந்தது.

அதனை எழுப்பியவர்கள் லோகமான்ய திலகர், லாலா லஜபதிராய், அரவிந்த கோஷ் ஆகியோராவர் என்கிறார்கள் வரலாற்றுப் பேராசிரியர்கள். அந்த மூவருடன் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரையும் சேர்த்துச் சொன்னால் வாய்மை முழுமைபெறுவதாக இருக்கும்.

இந்திய தேசிய எழுச்சியானது அகிம்சை ரீதியான புரட்சி வடிவத்தைப் பெற்றது, காந்தியடிகள் இந்திய அரசியலில் புகுந்த காலத்திலேதான், சரியாக, 1919-ஆம் ஆண்டில் தேசாவேசமுடைய வன்முறையாளரை அடக்கிஒடுக்குவதற்கென்று, ''ரௌலட் சட்டங்கள்'' என்னும் பெயரில் இருவேறு சட்டங்களை பிரிட்டிஷ் ஆட்சி இந்திய சட்டசபையில் பிரேரணை செய்தது. அந்தக் கொடிய சட்டங்களை எதிர்த்து காந்தியடிகள் போர்முரசு கொட்டினார்.

இதற்கு முன்னே தியோசாபிகல் சங்கத்தின் தலைவரான அடையாறு பெசன்ட் அம்மையார் அவர்கள் ''ஹோம் ரூல்'' கிளர்ச்சி என்னும் பெயரிலே இந்திய சுயாட்சிக் கிளர்ச்சியைத் தோற்றுவித்தார்.

பெசன்ட் அம்மையாரின் எழுச்சிமிக்க பேச்சுக்களைக் கேட்டும், காந்தியடிகளின் அகிம்சை அரசியலிலே கவர்ச்சியுற்றும் திருவாரூர் விருதாச்சலனார் பெற்றெடுத்த கல்யாண சுந்தரனார், அரசியலில் புகுந்தார். அதன்பின், ''திரு.வி.க.'' என்னும் மூன்றெழுத்து மந்திரமான அவரது பெயர் மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் உள்ள தமிழர் நெஞ்சங்களிலே நிலை பெற்றது.

சென்னை இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராக இருந்த திரு.வி.க. தேசியவாதியாக மாறலானார். ஆம்; தமிழ் இலக்கியங்களில் வரும் பழந்தமிழர் வீரம் பற்றிய செய்திகளையெல்லாம் மாணவர்களுக்கு பாடம் சொல்வதையே தொழிலாகக் கொண்டிருந்த திரு.வி.க. அந்தத் தொழிலைத் துறந்து, தம் காலத்து தமிழ் மக்களுக்குப் புறநானூறு வீரத்தைப்போதித்து போதித்து, நாட்டுக்கு விடுதலை தேட இந்திய தேசிய காங்கிரசிலே இணைந்துகொண்டார்!

ஆம்; தீந்தமிழ்ப் பண்டிதர் தேசியவாதியானார்!

அன்றைய தேசியம் தாய்மொழிப்பற்றுக்கு நெடுந்தொலைவில் இருந்தது. தேசிய காங்கிரசிலே புலவர்களைக் கண்டிராத காரணத்தால். அந்த நிலையில்தான் நிறைபுலமை பெற்ற பேராசிரியரான திரு.வி.கல்யாணசுந்தரனார், தேசிய அரசியலில் பிரவேசித்தார். அந்த நாள், தாய்மொழிப்பற்றும் தாய்நாட்டுப் பற்றும் பிணைந்தநன்னாளாகும்.

நல்ல தமிழிலே, ஆவேச அரசியலைப் பேச தேசிய மேடைக்கு திரு.வி.க. கிடைத்துவிட்டார். அவர் முதல்வரல்ல என்றாலும், வ.உ.சி., வ.வெ.சு. அய்யர் போன்ற முன்னணியில் இருந்த தமிழ்ப் புலவர்களிலே முக்கியமானவராவார். அன்றைய தேசியம் வகுப்புவாதத்தை அறியாதது மத வெறியை விரும்பாதது-ஏன் மாநில வேற்றுமையையும் மறந்தது!

அதனால்தான் ''பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு'' என்று பாடினார் பாரதியார். ''எந்தையும் தாயும் மகிழ்ந்து என்று பாடினார் பாரதியார். ''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே'' என்றும் அவரை இதய எழுச்சியோடு இசைநயம் தோன்றப் பாடினார்.

அந்தப் பாட்டுக்குப் பொருள் உரைக்கும் பண்டிதப் பெருமானார் திரு.வி.க. அரசியல் மேடையில் ஏறினார். ''தாய்நாட்டை



வணங்குகிறேன்'' என்ற பொருளுடைய ''வந்தேமாதரம்'' என்னும் திருமந்திரச் சொல்லானது தமிழர் ஒவ்வொருவருடைய நாவிலேயும் நர்த்தனமாடிய காலம் அது. அந்த மந்திரத்தின் பொருளை விளக்கும் விரிவுரையாளராக திரு.வி.க. அரசியல் மேடையில் ஏறினார். அந்த மாமுனிக்கு' 'தமிழகம் என்பது தாய்வீடு! ''பாரதம் ''என்பது தாய் நாடு''. ''வீடின்றி நாடில்லை; நாடின்றி வீடில்லை'' என்கிறார் தமது நூல் ஒன்றிலே!

காந்தியடிகள் 1919ல் சென்னைக்கு வருகை தந்தபோது, அவருடைய வாய்மை கலந்த ஆங்கிலப்பேச்சை தூய்மைகலந்த தமிழ் மொழியிலே பெயர்த்துச் சொன்ன பெருமை திரு.வி.க.வுக்கு உண்டு. ஆம்; வாய்மையாளர் சொல்லின் பொருளை தூய்மையாளர்கள் தானே உணர முடியும்!

திரு.வி.க. பெரும்புலவர்தான் என்றாலும், கல்லூரியிலிருந்து வெளியேறியவுடன் பாட்டாளிக்கும் புரியக்கூடிய வகையிலே பழகு தமிழிலே பேசலானார். அந்த நாளிலே விடுதலை ஆவேசத்தை ஊட்டுவதற்கென்று அரசியல் மேடையேறிப் பேசும் எவரும் தொல்காப்பியத் தமிழைத் தொட முடியாது! புறநானூற்றுத்தமிழை அணுக முடியாது. பழகு தமிழையே பயன்படுத்த வேண்டியிருந்தது. ஆயினும் பண்டிதத் தமிழுக்கும், பழகு தமிழுக்கும் பாலமாக அமைந்தார். திரு.வி.க. வின் பழகுதமிழிலேசங்கத் தமிழின் சுவை உண்டு. அவர் வாய்திறந்து பேசினால், தேசியமும் தமிழும் கலந்து மணக்கும். மற்ற தலைவர்கள் எல்லாம் அரசியல் கலைச் சொற்களை ஆங்கிலத்திலே வழங்கிய காலத்திலே, அவற்றை எளிய தமிழிலே வடித்துக் கொடுத்த பெருமை திருவாரூர் தந்த முனிவருக்கு உண்டு.

''காந்தியம்'' என்னும் தத்துவம் தோன்றிய காலத்திலே, உலக வரலாற்றில் அதற்கு இணை சொல்ல இன்னொரு தத்துவம் இருக்கவில்லை. ''ஆன்மீகமும் அரசியலும் கலந்தது காந்தியம்'' என்கிறார் திரு.வி.க. ''காந்தியடிகள் போதித்தது, மனிதாபிமானத்தோடு கலந்த தேசாபிமானம்! இன்னொரு வகையில் சொல்வதானால், தேசாபிமானத்தோடு கலந்த மனிதாபிமானம்'' என்று திரு.வி.க. அடிக்கடி சொல்வது உண்டு.

''காந்தியடிகளும் மனித வாழ்க்கையும்'' என்னும் தமது நூலிலே, அப்போதுதான் தோன்றியிருந்த காந்திய நெறியை இராயப்பேட்டை முனிவர் வியாக்கியானப் படுத்தி இருக்கிறார். ''காந்தி பஞ்சகம்'' என்னும் பெயரில் கவிதை நடையிலே, ஐந்து செய்யுட்களைப் பாடி காந்தியத்திற்கு வரவேற்பு கூறினார் பாரதியார். அவர் பாடிய அந்த ஐந்து செய்யுளுக்கு வியாக்யானமாக, ''காந்தியடிகளும் மனித வாழ்க்கையும்'' என்னும் உரைநடை நூலைப் படைத்தார் திரு.வி.க.

மொழிப்பற்றுக்கும் நாட்டுப் பற்றுக்கும் பிரித்தெடுக்க முடியாபடி பிணைப்பை ஏற்படுத்திய பெருமை பாரதியாருக்கும் திரு.வி.க.வுக்கும் உண்டு. இவர்களிலே பாரதியார் கவிஞர்! திரு.வி.க. அறிஞர்.

திரு.வி.க. கவிதைகளையும் படைத்திருக்கிறார்.

சித்தாந்த, வேதாந்த தத்துவங்களைப் பற்றிய நூற்களையெல்லாம் திரு.வி.க. கற்றுத் தேர்ந்திருந்தார். அவர் பழுத்த சைவர்; ஆயினும், கனிந்த மனமுடைய சமய சமரசவாதி! தேசபக்தியுடைய இந்தியர்! அத்துடன், சர்வதேச நெறியில் நம்பிக்கையுடைய உலகாபிமானி. நெஞ்சாலும் வன்முறையை நினைக்க அனுமதிக்காத காந்தியவாதி'. அத்துடன், கொள்கையளவில் பொதுவுடைமைப் புரட்சியைக் கூறும் மார்க்கீசியத்திலும் நம்பிக்கையுடையவர். இந்த இரண்டு தத்துவங்களையும் பிணைத்துப் புது உலகம் காண விரும்பியவர்; காண முடியும் என்றும் நம்பியவர்.

திரு.வி.க. எளிய வாழ்க்கை வாழ்ந்தார். அன்றைய தேசியம் ஆடம்பரத்தை வெறுத்தது, எளிய வாழ்க்கையை ஏற்றது. ''உண்பது நாழி, உடுப்பன இரண்டே; பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே'' என்ற புறநானூற்றுப் போதனையே காந்தியத்தின் சாதனை. திரு.வி.க. உடையாலும், உணவாலும், உள்ளத்தாலும், வாழ்க்கைநடையாலும், வாய்மை மொழியாலும் காந்தியடிகளின் மறுவடிவமாக தமிழ் நாட்டிலே நடமாடினார்! அவரை நான் நேரில் பார்த்த போதெல்லாம் காந்தியடிகளாகவே நினைத்து கையெடுத்துக் கும்பிட்டு வணங்கினேன்.

நெற்றி நிறைய திருநீறு; உச்சிக்குடுமி; தாமே நூற்று நெய்த கதராடை கட்டிக் கொண்ட பழுப்பு நிறமுடைய கதராடை; கணத்திற்கு கணம் மூடித் திறக்கும் கண்கள். இது, அந்தப் புனிதரின் தோற்றம்.

வாயைத் திறந்து பேசினாரானால், தமிழ், தென்றலாக வீசுகிறதோ எனக் கேட்போருக்கு ஐயம் தோன்றும்.

பிறர் கருத்துடன் மாறுபட்டுப் பேசும்போதும் அவர் வாக்கு தென்றலாகத்தான் இருக்கும். மாற்றார் கருத்தை மறுத்து வாதிடும்போதும் அவரது கருத்து தென்றலின் இனிமையையே காட்டும். அதனால், ''தமிழ்த் தென்றல்'' என்ற சிறப்புப் பெயருக்குரியவரானார், திருவாரூர் கலியாணசுந்தரனார்.

அவரை ''தேசியவாதி'' என்று சொல்லும்போது, என் வாய் மணக்கிறது. 'தமிழ்த்தென்றல்' என்று எழுதும்போது, எனது எழுத்து மணக்கிறது.

எங்களைப் பிணைத்தது காந்தியடிகள்பாலும் வள்ளற்பெருமான்பாலும் எங்களுக்கிருந்த பற்றுதல்தான். மொழிப்பற்றுக்கும் நாட்டுப்பற்றுக்குமிடையே துரதிருஷ்டவசமாக போராட்டம் உருவாகியிருந்த காலத்திலே அந்தப் பெருமகனார் வாழ்ந்தார். அந்த நிலையிலும் தமிழையும் தேசியத்தையும் பிணைக்கும் பாலமாக அவர் விளங்கினார்.

தமிழ்ப் பண்டிதராக வாழ்க்கையைத் தொடங்கி, தாய்நாட்டின் விடுதலைக்காகப் போராடும் தேசியவாதியாக அரசியலில் புகுந்த திரு.வி.க. அடுத்த கட்டத்திலேயே தொழிலாளர் வர்க்கத்தின் தோழரானார்! வர்க்கப் புரட்சியிலே அவருக்கு நம்பிக்கை உண்டு. இந்தியாவிலேயே முதன் முதலில் தோன்றிய தொழிற் சங்கம் எனப்படும் சென்னை தொழிலாளர் சங்கத்தின் செவிலித்தாய் அவர்தாம்!

1920ல் அப்போதைய வில்லிங்டன் ஆட்சி நடத்திய அடக்குமுறைக் கொடுமையை தாங்கிக் கொண்டு, பாட்டாளி வர்க்கத்தின் தலைவராகத் திகழ்ந்தார்.

தேசிய காங்கிரசை விட்ட பின்னரும், அவர் தேசியக் கொள்கையை விடவில்லை. கட்சி அரயலைக் கைவிட்ட பின்னரும், தொழிற்சங்கத் தொடர்பை துறக்கவில்லை. தமது மூச்சு முடியும்வரை தொழிற்சங்கத்தோடு தொடர்பு கொண்ட தேசியவாதியாகவே அவர் திகழ்ந்தார்!

வாழ்க, திரு.வி.க.!



# தென்றலாக வீசும் தமிழ்!

மாண்புமிகு நிதி அமைச்சர்

## டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன்

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

என்ற திருவள்ளுவப் பெருந்தகையாரின் வாய்மொழி இலக்கணத்திற்கு ஏற்ற இலக்கியமாய்த் திகழ்ந்து, தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரின் அன்புக்கும், அரவணைப்புக்கும், நம்பிக்கைக்கும், நன்மதிப்புக்கும் போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் வாழ்த்துக்கும், வரவேற்புக்கும் உரியவராய்த் திகழ்ந்த தமிழ்த் தென்றல் திரு. வி. க. சான்றோராவார்.

கருத்துக்களை ஒழுங்காகச் சொல்ல வேண்டும், கோவையாகச் சொல்லவேண்டும், இனிமையாகச் சொல்ல வேண்டும், அப்படிப்பட்ட வல்லமையைப் பெற்றிருக்க வேண்டும், அப்படி ஒருவர் பெற்றிருந்தால் அவரது கட்டளைகளைக் கேட்டு, அவற்றின் படி நடக்க, உலக மக்கள் விரைந்தோடி வருவார்கள் என்பது மேற்குறிப்பிட்ட குறள் உணர்த்தும் கருத்தாகும்.

திருக்குறள் வகுத்துரைக்கும் நெறிக்கு ஏற்பத் தமிழ்த் தென்றல் திரு. வி. க. வின் சொற்பொழிவில், ஒழுங்கு இருக்கும். கருத்துக்கள் கோவையாக அமையும், இனிமையும் எளிமையும் கொஞ்சும், அழகு மிளிரும், ஆற்றல் ஒளிரும், உறுதி தென்படும், உயர்வு காணப்படும், அருமை துலங்கும், சிறப்பு திகழும். எனவே தான் அவரைத் தமிழ்கூறு நல்லுலகம் 'தமிழ்த் தென்றல்' என்று சிந்தை இனிக்க, செவி இனிக்க, சொல்லினிக்க வாயார விரும்பி அழைத்தது.

தமிழகத்தில் வீசுகின்ற காற்றுக்கள் வாடைக் காற்று, கோடைக் காற்று, கொண்டல் காற்று, தென்றல் காற்று என்று நான்கு வகையினவாக வகுத்துக் கூறப்படும். வட பகுதியிலிருந்து வீசுகின்ற காற்று வாடைக் காற்று எனப்படும். வாடை எப்பொழுதும் கடுங்குளிரையும், வேதனையையும், நோய்ப்பாட்டையும் அளிக்கவல்லது. எனவே தான் தமிழ் மக்கள் வடக்கே இருந்து வருகின்ற வாடையை எப்பொழுதுமே, எல்லாவகையிலும் எதிர்ப்பார்கள். கோடைக் காற்று, மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மழையைப் பொழிந்துவிட்டு, வறட்சிக் காற்றாய்த் தமிழகம் நோக்கி வீசும். இந்தக் காற்றையும் தமிழ்மக்கள் விரும்பமாட்டார்கள். கொண்டல் காற்று, கருமேகங்களோடு கிழக்குப் பகுதியிலிருந்து தமிழகத்தில் நுழைந்து மழையைப் பொழிவிக்கும். தமிழ்மக்கள் இந்தக் காற்றின் பயனை விரும்புவார்கள் என்றாலும், பெருமழையைப் பொழிவிக்கும்போது வேதனைப்படுவார்கள். தென்றல் காற்று, தமிழகத்தின் தென்பகுதியிலுள்ள பொதிகை மலைப்பக்கமிருந்து தமிழகம் நோக்கி ஆடி, அசைந்து, தவழ்ந்து, அருமையாகவும், மென்மையாகவும், இனிமையாகவும், உடலுக்கு இன்பம் பயப்பதாகவும் வரும். தென்றல் காற்றைத் தமிழ்மக்கள் வியந்து, பாராட்டிப், போற்றி, வாழ்த்தி, வரவேற்று நிற்பர். தமிழ்மக்களின் உடலுக்குத் தென்றல் காற்று எப்படிப்பட்ட இன்பத்தை வழங்குகிறதோ, அப்படிப்பட்டதொரு இன்பத்தைத் திரு.வி.கவின் பேச்சு, அதாவது மேடைகளிலே அவர் வீசிய மெல்லிய தமிழ்ப் பூங்காற்று, தமிழ்ப் பெருங்குடி மக்களின் உள்ளத்திற்குஅளித்தது.

ஆகையினால்தான் திரு. வி. க. அவர்களைத் தமிழ்ப் பேரறிஞர்கள் அனைவரும் 'தமிழ்த் தென்றல்' என்னும் அன்பு அடைமொழி கொடுத்து விரும்பி அழைத்தனர். 'மகாத்மா' என்றால் அண்ணல் காந்தியடிகளையும் 'பெரியார்' என்றால் பகுத்தறிவுத் தந்தை ஈ.வெ. இராமசாமி அவர்களையும் 'அறிஞர்' என்றால் அன்பு அண்ணன் அண்ணா அவர்களையும் குறிப்பதுபோல், 'தமிழ்த்தென்றல் என்றால், அந்தச் சொற்றொடர் திரு. வி. க. அவர்களைத்தான் குறிக்கும் என்ற மரபு நிலை நாட்டப்பட்டு விட்டது.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களின் பேச்சில் ஆரவாரமோ, அதிகாரமோ, அதட்டலோ, உருட்டலோ, மிரட்டலோ, பகட்டோ, பாவனையோ இருக்கா. அவர் எந்த ஒரு பொருள் பற்றியும் பேசுவார். உண்மையாகப் பேசுவார்; உறுதியோடு பேசுவார். அவரது பேச்சில் ஆர்வம் இருக்கும், அழுத்தந்திருத்தம் இருக்கும்; தெளிவு மிளிரும்; திட்பம் துலங்கும்.



தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் பேச்சு, எழுத்து ஆகிய இரண்டிலும் சிறுசிறுசொற்றொடர்கள் தாம் காணப்படும். மூன்று, நான்கு சொற்களுக்குமேல் ஒருசொற்றொடர் அமையாது. எளிய- இனிய-அழகிய- உயர்ந்த, சிறந்த நடையைத்தான் அவர் எப்பொழுதும் கையாள்வார். அவர் எந்த ஒரு கருத்தையேனும் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறார் என்றால், அதற்கான சொல்லை மூன்று தடவை சொல்லி வலியுறுத்துவார். 'மக்களின் வளர்ச்சிக்கு எது அடிப்படை? அன்பு! அன்பு! அன்பு!'' என்றும், 'மக்களிடம் நாடு எதை எதிர்பார்க்கிறது? கடமை! கடமை! கடமை!' என்றும் வலியுறுத்துவார்.

1938ஆம் ஆண்டில் இந்தித் திணிப்பை எதிர்த்துத் தந்தை பெரியார் அவர்கள் தண்டனை பெற்று, இரண்டாண்டு கடுங்காவல் சிறைசென்றபோது, தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்கள், தமது 'நவசக்தி' ஏட்டில், ''வெள்ளிய தாடி அசைய, பரந்த நெற்றி ஒளிர, விரிந்த முகம் மலர, முதுமை ஒழுக, தாங்கிய தடியுடன் எனது கெழுதகை நண்பர் பெரியார் இராமசாமி சிறைபுக்க காட்சி அவரது நண்பர், பகைவர், நொதுமலர் ஆகிய அனைவர் உள்ளத்தையும் உறையச் செய்யும் என்பதில் ஐயமில்லை. அவர் ஒரு சிறைப்பறவை. சிறைக்கோட்டம் அவருக்கு அறக்கோட்டம் ஆகியது போலும்!'' என்று உள்ளத்தை உருக்கும் வகையில் எழுதினார்.

தமிழால் திரு. வி. க. உயர்ந்தார். திரு. வி. க. அவர்களால் தமிழ்த்தென்றல் வீசிற்று.

வாழ்க தமிழ்த்தென்றல் திரு. வி. க.வின் பெயர்! வளர்க அவர் தம் புகழ்!

## பெரிய காரியம் செய்தவர் பெரியார்

பெரியாருக்கும் எனக்கும் உள்ள நட்பு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அது 35 வருடங்களுக்கு மேற்பட்டது. 'வைக்கம் வீரர்' என்பதை இந்த அடியேன் கைப்பேனா தான் சூட்டியது.




திருவிதாங்கூரிலே தீண்டாமையை ஒழிக்க மாபெரும் போராட்டத்தை நடத்தி வெற்றி பெற்ற பெரியாருக்கே அந்தப் பெருமை; ஆனால் அந்தப் புகழ் யாருக்கோ போயிற்று.

பெரியாரது அந்த வீரத்தியாகம் எனது வாழ்க்கைக் குறிப்பிலுள்ளது. எனக்குப் பெண்டு பிள்ளைகள் இல்லை. நான் செத்துப் போனால் எனக்காக அழுகின்ற ஒரு நண்பர் இருந்தால் அவர் பெரியார் ராமசாமியாகத் தான் இருக்கமுடியும்.

இந்த நாட்டில் பெரிய காரியம் செய்தவர் பெரியார் ஒருவர்தான்!

—திரு.வி.க.



## திரு.வி.க.வின் ஆத்திசூடி

அருகன் அருளறம் பொருளறம் வேண்டும்
ஆக்கத் தொழிலில் ஊக்கம் வேண்டும்
இறப்பையும் பிறப்பையும் மறத்தல் வேண்டும்
ஈரம் சுரக்கும் வீரம் வேண்டும்
உலகொரு குலமெனும் உணர்வுவேண்டும்
ஊனைக் கொலைபுலை உறங்கல் வேண்டும்
என்றும் பணிநினைந் தியற்றல் வேண்டும்
ஏசு பொறுமையில் நேசம் வேண்டும்
ஐயம் அறியா ஆட்சி வேண்டும்
ஒப்புர வுலகம் உயர்தல் வேண்டும்
ஓதா துணர்த்தும் ஓவியம் வேண்டும்
ஔவை உலவும் அகிலம் வேண்டும்.

''பொருளும் அருளும்'' என்ற நூலிலிருந்து

# திரு.வி.க.வின் அரசியல் வாழ்வு

மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர்
திரு. இராம. வீரப்பன்



'திரு.வி.க. வாழ்ந்த வாழ்வும் ஆற்றிய தொண்டும் நாமெல்லாம் பின்பற்றக்கூடிய பெருமையுடையது' என்றார் தந்தை பெரியார். இவ்வாறு தமிழ்ப் பெருமக்களால் மதிப்போடு பாராட்டப்பட்ட அத்தகு சிறப்புடைய அந்தச் செந்தமிழ்ச்செல்வருக்கு நூற்றாண்டுக் காலமிது (1883-1983).

நாடு நலம் பெறவும் நன்மை பல விளைந்திடவும் நாளும் உழைத்த நல்ல பல அரசியல் மேதைகளைக் கண்ட அருமை பெருமையுடையது நமது தமிழ்நாடு. அரசியலைச் சிலரைப் போலச் சொந்த லாபத்திற்குப் பயன்படுத்தாமல் பொதுநலம் கருதிப் புதுவழி காட்டிய பெருமகனார் திரு. வி. கலியாணசுந்தரனார்.

தமிழ்த் தென்றல், தமிழ் முனிவர், சாது முதலியார் என்றெல்லாம் போற்றிப் புகழப் பட்ட அவர்கால அரசியல், பண்பாடு பரிமளிப்பதாக இருந்தது. தன்னிகரற்ற தமிழ்ப் புலவராக, தலைசிறந்த மேடைப் பேச்சாளராக, இணையற்ற எழுத்தாளராக, ஏற்றமிகு சீர்திருத்தச் செம்மலாக, சிறந்த தேசபக்தராக மட்டுமல்ல; ஒவ்வொருவரும் பின்பற்றிடத் தக்க ஒழுக்க சீலராகவும் வாழ்ந்து காட்டியவர் திரு.வி.க.

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரான அவர், அரசியல் மீதுற்ற காதலால் தாம் பார்த்த தமிழாசிரியர் பணியினின்றும் விலகி 'தேசபக்தன்' ஏட்டிலும் பின்னர், 'நவசக்தி' ஏட்டிலும் ஆசிரியராகப் பணியாற்றி நாடு மதிக்கத்தக்க நல்ல அரசியல் கருத்துக்களைத் தொடர்ந்து எழுதி வந்தார். மேடைகளிலே ஆங்கிலத்தில் பேசுவது, அல்லது ஆங்கிலம் கலந்து பேசுவது அலங்காரம் எனக் கருதப்பட்டுவந்த அக்காலத்தில், காங்கிரசுக் கட்சியிலே தன்னை இணைத்துக் கொண்டிருந்த திரு.வி.க. தமிழே மேடைகளில் பேசப் பட வேண்டும் என்ற கட்டாய நிலையை உருவாக்கியவராவார். தணியாத விடுதலை வேட்கையைத் தமிழாலே உண்டாக்கியவராவார்.

'தமிழ்நாட்டிலே நல்ல தமிழிலே மேடையில் பேசமுடியும் என்பதை முதன் முதலில் பேசிக்காட்டியவர் திரு.வி.க. அழகிய தமிழிலே அரசியலைப் பற்றியும் எழுதமுடியும் என்பதை முதலாவதாக எழுதிக் காட்டினார் திரு.வி.க. அரசியலில் புயலாகவும், தமிழில் தென்றலாகவும் இருப்பவர் நம் திரு.வி.க.' எனப் பேரறிஞர் அண்ணா அவர்களும் அவருக்குப் புகழாரம்சூட்டியதுண்டு.

இந்திய நாடு முழுவதும் விடுதலைக் கனல் மூண்டெழுந்த அந்நாளில் ஒத்துழையாமை இயக்கத்திலும் உப்புச் சத்தியாக்கிரகத்திலும் முன்னின்று எழுச்சிக் குரலெழுப்பியவரென்றாலும் தமிழகத் தொழிலாளர் நலனில் தன்னலம்கருதாது தோழமை கொண்டிருந்தவர் அவர். அது மட்டுமல்ல; இந்தியாவிலேயே முதன்முதலாகத் தொழிலாளர் இயக்கம் தோன்றியதெனில், அது திரு.வி.க. அவர்கள் 'சென்னைத் தொழிலாளர் சங்கம்' என்ற பெயரில் 1918 ஏப்ரல் 27ல் தோற்றுவித்ததேயாகும்.

தமிழ்ச் சுரங்கமான திரு.வி.க. அவர்கள், தமிழ்ச்சமயமாம் சைவசமயத்திலே பற்றுமிகக் கொண்டவரென்றாலும்-வைணவம், சமணம், கிறித்தவம், பௌத்தம், இசுலாமியம் போன்ற பிற மதங்களின் மீது காழ்ப்புணர்ச்சி அற்றவராகவே இருந்தார் என்றால் அது உண்மை-வெறும் புகழ்ச்சியில்லை.

எழுபதாண்டுக் கால வாழ்வில் ஐம்பதுக்கும் மேலான பெரிய எழுத்தோவியங்களை எழுதி நமக்களித்த பெருமகனார் அவர். பிறமொழி கலவாத தனி நடை அவர் நடை. 'மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்' 'மார்க்சியமும் காந்தியமும்', 'இந்தியாவும் விடுதலையும்' போன்ற தலைப்புகளில் திரு.வி.க. எழுதிய சில நூல்கள் அன்னாரின் அரசியல் வாழ்வின் அரிய படப்பிடிப்புகளாகும்.





திரு.வி.க அவர்களின் உருவப்படத்தைத் தந்தை பெரியார் அவர்கள் திறந்து வைத்த நிகழ்ச்சி.

காந்தியம் அவரைக் கவர்ந்தபோதிலும் மார்க்சியத்தின் மீதும் அவருக்குப்பெருமதிப்பு இருந்தது. 'காந்தியமும் மார்க்சியமும் இணைய வேண்டும்' என்ற புரட்சிக் கருத்தின் வெளிப்பாடாகவே அவருடைய எழுத்தும் பேச்சும் அமைந்திருந்தன. காந்தியம் உயிர் என்றால் மார்க்சியம் உடல் என்றேகூட அவர் குறிப்பிட்டதுண்டு. அந்த இரண்டும் இணைந்தால் தான் இந்நாட்டிலுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் நீங்கும் என்று தெரிவித்த தெளிவு மிக்க சிந்தனைக்குச் சொந்தக்காரர் அவர்.

திலகரின் அரசியல் வேகமும், விவேகமும் திரு.வி.க.வை ஆட்கொண்டன. எனவே, அவரது அரசியல் சிந்தனைகள், பெரிதும் திலகருடைய கொள்கை முழக்கத்தின் எதிரொலியாகவே அமைந்தன. அன்னி பெசன்ட் அம்மையார் காட்டிய பரிவும் அவர் தம் அரசியல் பயிர் வளர்ச்சிக்கான ஆதாரமாக அமைந்தது.

இவ்வாறு அரசியல்மேல் அவருக்கு இருந்த பற்றும் பாசமும் பல்வேறு காரணங்களினாலே காஞ்சிபுரம் காங்கிரசு மாநாட்டிற்குப் பிறகு பலவீனப்படலாயிற்று.

''மக்கள் வாழ்க்கை நலனுக்குரிய துறைகள் பல. அவைகளுள் ஒன்று அரசியல்...!'' என்றெல்லாம் எழுதிய அவருக்கு அரசியல் கசந்ததேன்? என்ற வினா எழலாம். பதிலை நாமெழுதத் தேவையில்லை; அவரே தெரிவிக்கிறார் இப்படி—

'உயிரனைய அரசியல் ,பண்டை நாளில் உண்மை நெறி என்னும் கடவுள் நெறி நின்று இயங்கிற்று....பின்னை, அரசியல் உண்மை நெறியினின்றும் பிறழ்ந்து வீழ்ந்தது....' என்றெல்லாம் எழுதும் திரு.வி.க., தனது வாதத்திற்கு ஆதாரமாக 'யான் அரசியல் வாதியல்லன்' என்று பன்முறை காந்தி அடிகள் 'யங் இந்தியா'வில் எழுதியிருக்கிறார்' என்று எடுத்துக்காட்டி வலிவு சேர்த்திருக்கிறார்.

1917ஆம் ஆண்டுதொட்டே அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்தவரான அவர் நாட்டு நலம் கருதியே அது நேர்ந்ததெனச் சொல்கிறார்.

அப்போது நாடு இருந்த நிலையில், ஒரு கட்சியே போதுமென்றிருந்ததால், பல்வேறு அரசியல் கட்சிகள் பட்டம் பதவிகளே நோக்கமாக உருவாவதையும் செயல்பட்டதையும் கண்டிக்கும் அறிவு முதிர்ச்சி அவருக்கிருந்தது.

இளைஞர்கள் அரசியலைத் தெரிந்து கொள்ளலாமே தவிர, அதிலே முழுமையாக ஈடுபட்டுக் கருகிவிடக் கூடாது என்பது அவர் கருத்து. அரசியலைத் தெரிந்து கொள்ளும் இளைஞர்கள்கிளர்ச்சி எனும் எரிதழலில் வீழாமலும் கட்சிச் சேற்றில் நெளியாமலும், நாட்டிலுள்ள குறைபாடுகளைப் போக்கவல்ல சீர்திருத்தத் தொண்டில் தலைப்பட்டு உழைக்கலாம் என்றார் திரு.வி.க.

**சாதிக் கட்சிகள் தோன்றுவதையும், சாதி மாநாடுகள் கூடுவதையும் வன்மையாகக் கண்டித்த அவர், பகை வளர்க்கும் முயற்சிகளே அவை என்றும் குறிப்பிட்டார்.**

யாரிடம் குறை கண்டாலும் சரி; இடித்துரைக்க அவர் தவறினாரில்லை. தான் சார்ந்த கட்சி என்பதனாலே காங்கிரசுக் கட்சியின் நடவடிக்கைகள் யாவும் உயர்ந்தவை என்றோ, அதன் குறைபாடுகளை மறைத்தோ அவர் எழுதியதோ பேசியதோ இல்லை.

தான் எண்ணிச் செயல்படும் அறச்செயல்களைக் காங்கிரசுக் கட்சியிலிருந்து கொண்டு ஆற்றுவது அரிது என்ற எண்ணம் வந்தபோது, அவர் கொடுத்த விலகல் கடிதம் இங்கே குறிப்பிடத் தக்கதாகும். ஒரு கட்சியிலிருந்து விலகுவோர் அக்கட்சியினரின் மனம் புண்படும்படி எழுதுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ள இந்நாளில், அரசியல் நாகரிகத்தோடு அன்று (9.7.1926) அவர் எழுதிய விலகல் கடிதம் எடுத்துக் காட்டத் தக்கதாகும். இதோ அது—

'தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர்
சென்னை.

'அன்பார்ந்த ஐய,

'ஒத்துழையாமையே நாட்டுக்கு உரிமை நல்க வல்லது என்பது எனது அடிப்படையான கொள்கை. ஒத்துழையாமைக் கெனக் காந்தியடிகள் கோலிய திட்டம் இப்பொழுது காங்கிரசு நிகழ்ச்சி முறையில் இல்லாதொழியினும், அதன்கண் [illegible] ழையாக் குறிப்பு வேறு பொருளில் இருத்தல் கண்டு, அதை யாதல் நாடு நெகிழவிடாது காத்தல் சாலுமென்றும் ஒத்துழையாமை என்பது அறவே பட்டொழியாதவாறு அதை உணர்வளவிலாதல் ஒருபுடை ஓம்பிவரின் பின்னை அஃது ஆக்கம் பெறுதற்குரிய துறை தோன்றுமென்றும், ஒரு பெரு நோக்கம் கொண்டு கான்பூர் காங்கிரசுத்




மறைமலை அடிகளுடன் திரு. வி. கவும் மற்றப் பெருமக்களும்.

தீர்மான வழி நின்று யான் தொண்டாற்றத் தலைப்பட்டேன். இதுபோழ்து காங்கிரசு அபேட்சகர்களிற் சிலர் ஒத்துழையாமை உணர்வே நாட்டில் வேரூன்றாதவாறு கல்வி வருவது கண்கூடு. அவர்கள் நோக்கோடு எனது நோக்கு எங்ஙனே அரண்செய்யும்? காங்கிரசுக் கூட்டத்திலிருந்துகொண்டு அவர்களுடன் பிணக்குற்றுப் போரிடுதலுஞ் சால்புடைத்தன்று.

'நாட்டிலோ சாதிசமயப் பூசல், வகுப்புரிமையுணர்வு முதலியன காட்டுத் தீப் போல் பரவி வருகின்றன. இக்கொடுமைகளைத் தொலைக்க உழைக்க வேண்டுமென்னும் அவா என்னைப் பிடர்பிடித்து உந்தாத நாளில்லை. இதற்கு அரசியல் கிளர்ச்சியும், அரசியல் கட்சியும், தேர்தல் பிரச்சாரமும் பெருமுட்டாக நிற்பதும் எனக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறது.

திரு. வி. கவின் முயற்சியால் ராயப்பேட்டையில் உருவாகிய பாலசுப்ரமணிய பக்த ஜன சபை.



நாட்டிற்கண்ணெறியும் வகுப்புப் பிணக்கைத் தணிக்கவல்லது சன்மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள காந்தியமெனுந் தண்புனல் என்பதை எனது மனச்சான்றெனுங் கடவுள் நன்கு அறிவுறுத்துகிறது. அம் மனச்சான்று வழிநின்று தொண்டாற்ற வேண்டுமேல், காங்கிரசுக் காரியக்கமிட்டி கூட்டத்தில் அங்கம் பெற்றிருத்தல் அறமாகாது. அதனின்றும் விலக வேண்டுமென உறுதி கொண்டேன்.

'தயைகூர்ந்து எனது விலகுதலை ஏற்குமாறு வேண்டுகிறேன். இது முடிந்த மொழியன்றி மீண்டும் உன்னுமொழியன்று என்பதையும் தங்கட்கு வணக்கமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.'

—இவ்வாறு காரியக் கமிட்டியிலிருந்து விலகக் கடிதம் தந்து, தன் எதிர்பார்ப்பிலிருந்தும் கட்சி நடவடிக்கைகள் வேறுபட்டதால் சிலநாளில் அதிலிருந்தும் விலகி அரசியல் துறவறம் பூண்டார் திரு.வி.க.

அரசியல்வாதி என்பதனாலே அல்ல; 'தமிழ்த் தென்றல்' என்பதனாலே திரு.வி. கலியாண சுந்தரனார் புகழ் தமிழ் உள்ளவரை தமிழ் நிலமுள்ளவரை நீடித்திருக்கும்; நிலைத்திருக்கும் என்பது உறுதி. அவர் வாழ்ந்து காட்டிய அரசியல் வாழ்வு அரசியல்வாதிகளுக்கெல்லாம் அவசியப்பாடமாக என்றும் அமையத்தக்கதாகும்.





## முன்னாள் அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் மறைவு

தமிழ்நாட்டின் முன்னாள் அமைச்சராகவும், தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவராகவும், மாநிலத் திட்டக் குழுத் துணைத் தலைவராகவும் இருந்த திரு கே.ஏ. மதியழகன் அவர்கள் 17.8.83 அன்று காலை 9.45 மணிக்குக் காலமானார்.

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்களின் அண்ணனான திரு கே, ஏ. மதியழகன், சிறுநீரகக் கோளாறு காரணமாகச் சென்னை இராயப்பேட்டை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

16.8.83 காலையிலிருந்தே திரு கே. ஏ. மதியழகன் அவர்களின் உடல்நிலை கவலைக்கிடமாக இருந்தது. அன்று மாலை மாண்புமிகு முதல்வர் அவாகள் மருத்துவமனைக்குச் சென்று திரு மதியழகனைப் பார்த்தார். அவரது உடல் நலம் குறித்து மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணாமி அவர்களிடமும் மருத்துவர்களிடமும் கேட்டறிந்தார்.

17.8.83 காலையில் திரு மதியழகன் உயிர் பிரிந்தது. அவரது உடல் நுங்கம்பாக்கத்திலுள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.


மாண்புமிகு முதல்வர் அவர்கள் காலை 11.40 மணிக்கு திரு. மதியழகன் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

திரு மதியழகன் துணைவியார் திருமதி ராஜசுந்தரிக்கும் குடும்பத்தினருக்கும் மாண்புமிகு அமைச்சர் திரு கே.ஏ கே அவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆறுதல் கூறினார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதிகளும் அரசியல் கட்சித் தலைவர்களும் திரு கே. ஏ. மதியழகன் மறைவுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கோவை மாவட்டம் கணியூரில் 1926-ஆம் ஆண்டு பிறந்த திரு மதியழகன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. பட்டம் பெற்றார். மாணவப் பருவத்திலேயே திராவிடர் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு தந்தை பெரியார் அவர்களுடனும் பேரறிஞர் அண்ணா அவர்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டு பொது வாழ்வில் ஈடுபட்டார்.

திரு மதியழகன் அவர்களுக்கு மனைவியும், மூன்று பெண்களும், ஒரு மகனும் உள்ளனர். மறைந்த தலைவருக்கு நமது அஞ்சலியைச் செலுத்துவோம்!




# இலங்கைத் தமிழர்க்கு நிதி உதவி

இலங்கையில் கடுமையான சோதனைகளுக்கும் துன்பங்களுக்கும் ஆளாகித் திண்டாடும் தமிழர்களுக்கு உடனடித் தேவையான உணவு மற்றும் உடை ஆகியவைகளை வழங்க முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 15 இலட்சம், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. சார்பில்ரூ-3 இலட்சம், தமது சொந்தப் பொறுப்பில் ரூ. 2 இலட்சம். மத்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அனுப்பப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தவுடன், அமைச்சர் பெருமக்களும் சட்டப்பேரவைத் தலைவர்-துணைத் தலைவர்_சட்டமன்ற மேலவைத் தலைவர்-துணைத் தலைவர் ஆகியோரும் நிதி வழங்கினர். அவர்களைத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள்-திரைப்பட நடிக, நடிகையர், தொழில் முனைவோர், அரசு அலுவலர்கள், மற்றும் பொதுமக்கள் நிதிக் குவியலை அள்ளி வழங்கத் தொடங்கினர்.



## இலங்கைத் தமிழர் உதவி நிதி அனுப்பவேண்டிய முறை



இலங்கைத் தமிழர்கள் படுகொலையுண்டு சொல்லொணாத பல துயரங்களுக்குத் தொடர்ந்து ஆளாகிக் கொண்டு இருந்து வரும் இந்நிலையில், அனைத்துக் கட்சிகளுடனும் கலந்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பொதுமக்கள் அறிவார்கள்.

மக்களிடமிருந்து தமிழக அரசுக்குப் பெறப்படும் உதவித் தொகைகளை "இலங்கைத் தமிழர் உதவி நிதி" என்ற நிதியில் தமிழக அரசு சேர்த்து வருகிறது. காசோலையை அனுப்புவோர் இந்த நிதியின் பெயருக்கே எழுதி காசோலையை அனுப்பலாம். முதலமைச்சராலும், மற்ற அமைச்சர்களாலும் பெறப்படும் இப்படிப்பட்ட காசோலைகள் இந்த நிதியில் சேர்க்கப்படுகின்றன. இனிமேல் இப்படி காசோலை அனுப்ப விரும்புபவர்கள் மாவட்ட அளவிலேயே மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது கோட்ட ஆட்சித் தலைவர் அல்லது வட்டாட்சியர் ஆகியோரிடமே காசோலையைச் செலுத்திவிடலாம்.

காசோலை தவிர பணமாகவும், பொருளாகவும் உதவி செய்ய விரும்புவோரும் தாங்கள் கொடுக்கும் பணத்தினையும், பொருள்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது கோட்ட ஆட்சித் தலைவர் அல்லது வட்டாட்சியர் அவர்களிடமோ அளிக்கலாம்.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடமிருந்து பெறப்படும் உதவித் தொகைகள் அந்தந்தப் பள்ளித் தலைமை ஆசிரியர் அல்லது கல்லூரி முதல்வர் ஆகியோர் ஒன்று சேர்த்து தத்தம் பள்ளி/கல்லூரி சார்பாகச் சென்னையிலுள்ள பள்ளி/கல்லூரிக் கல்வித்துறை இயக்குநர் அவர்களுக்குக் காசோலை மூலம் இந்த நிதிக்கு அனுப்பி வைக்கலாம்.

ஒரு சில இடங்களில் மக்களுடைய அனுதாபமான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, சில விஷமிகள் தவறான எண்ணத்தோடு மக்களை ஏமாற்றி, மக்கள் வழங்கும் நிதியைக் கையாடல் செய்வதாக அரசுக்குத் தகவல் வந்துள்ளது. அத்தகவல்களின் பேரில் அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் விடுக்கும் ஒரு முக்கிய வேண்டுகோள் என்னவென்றால், தமிழ்நாடு அரசின் "இலங்கைத் தமிழர் உதவி நிதி" தமிழக அரசால் செயல்படுத்தப்படுவதொன்றாகும்; இந்த விஷயத்தில் பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்; அவதியுறும் இலங்கைத் தமிழர்களுக்கு அரசு ஆரம்பித்துள்ள நிவாரண நிதிக்கே மக்கள் பெருவாரியாக அன்புடன் ஈந்து உதவ வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



# இந்தியாவில் அமிர்தலிங்கம்

இந்திரன்

இலங்கைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவரும், இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான திரு அ. அமிர்தலிங்கம் அவர்கள் 13-8-'83 சனிக்கிழமை இரவு சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில், திரு அமிர்தலிங்கத்திற்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. விமான நிலையத்தில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு க. ராஜாராம், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன், மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு ராஜாமுகமது, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் திரு புலவர் புலமைப்பித்தன் முதலியோர் வரவேற்றனர்.



விமான நிலையத்திலிருந்து திரு அமிர்தலிங்கம் நேராக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இல்லம் சென்று சந்தித்து, அங்கு முதல்வருடன் ஒரு மணி நேரம் இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் பற்றி பேச்சு வார்த்தை நடத்தினார். பின்னர் சேப்பாக்கம் விருந்தினர் இல்லத்திற்குத் திரும்பினார்.

சென்னை-சேப்பாக்கம் விருந்தினர் இல்லத்தில், தமிழ்நாடு அரசின் விருந்தினராகத் தங்கியிருந்த திரு. அமிர்தலிங்கம் மாண்புமிகு முதல்வருடன் பேச்சு வார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து 14-8-83 காலையில் அழைப்பின் பேரில் இந்தியத் தலைமையமைச்சர் திருமதி. இந்திரா காந்தி அவர்களைச் சந்திக்கப் புதுடெல்லி புறப்பட்டுச் சென்றார்.

புதுடில்லியில் தலைமையமைச்சர் திருமதி. இந்திரா காந்தி அவர்களைச் சந்தித்து 90 நிமிடங்கள் இலங்கைப் பிரச்சினைகள் குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார் திரு அமிர்தலிங்கம். இந்தப் பேச்சு வார்த்தையின் போது மாண்புமிகு இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவும் உடனிருந்தார்.

அதற்கு முன்னதாகத் தலைமையமைச்சரின் வெளிநாட்டுறவுக் கொள்கை ஆலோசகர் திரு. ஜி. பார்த்தசாரதி, தலைமை அமைச்சரின் முதன்மைச் செயலாளர் திரு. பி. சி. அலெக்சாண்டர், வெளிநாட்டுறவு அமைச்சகத்தின் செயலாளராக உள்ள திரு. கே. எஸ். வாஜ்பாய் ஆகியோருடன் திரு. அமிர்தலிங்கம் இரண்டு மணி நேரம் பேசினார்.

பின்னர் ஆங்கிலச் செய்தி நிறுவனங்களுக்கு அவர் பேட்டி அளித்தார். அந்தப் பேட்டியில் கூறியதாவது;

''இலங்கையில் உள்ள தமிழர்களின் விருப்பங்களை உணரச் செய்வதில் உதவிட இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி தலையிட்டது நிலவரத்தில் ஒரு முக்கிய மாறுதலை ஏற்படுத்தியது. இந்தியா இலங்கைக்கு அண்மையில் உள்ள பெரிய நாடு. அது இலங்கையுடன் நெருக்கமான கலாச்சாரத் தொடர்புகளைக் கொண்டுள்ளது. இலங்கையில் கணிசமாக உள்ள சிறுபான்மையினரான தமிழர்கள் இந்திய மக்களின் இனத்தைச் சேர்ந்த

வர்கள். எனவே, இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க இந்தியா முயற்சிகளை மேற்கொள்வது நியாயமானது ஆகும்'' என்று கூறிய அவர்- ''இலங்கைப் பிரச்சினையில் இந்தியப் பிரதமர் அவர்கள் மிகுந்த அனுதாபம் காட்டுவதற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்'' என்றும் குறிப்பிட்டார்.

புதுடெல்லியில் மாண்புமிகு பாதுகாப்பு அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் மற்றும் மத்திய அரசு அமைச்சர்கள், அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதலியோரைக் கண்டு பேசிய திரு. அமிர்தலிங்கம், மீண்டும் இரண்டாவது முறையாக மறுநாளே பிரதமரைச் சந்தித்துப் பேசினார்.

பின்னர் சென்னை திரும்பிய அவரை 19-8-83 அன்று செய்தியாளர்கள் சந்தித்தனர்.

''இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும், மக்களும், பத்திரிகைகளும் காட்டிவரும் ஆதரவு எந்தக் காலத்திலும் மறக்க முடியாதது'' என்று கருத்தறிவித்த அவர், இலங்கைப் பிரச்சனைத் தொடர்பாகப் பிரதமரோடு பேசிய பேச்சுக்கள் பயனுள்ள வகையில் அமைந்திருத்ததாகக் குறிப்பிட்டார்.

அன்று மாலை காமன்வெல்த் நாடாளுமன்றத் தமிழ்நாடு கிளையின் சார்பில் சென்னை-கலைவாணர் அரங்கத்தில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. ராஜாராம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட திரு. அமிர்தலிங்கம், இலங்கைவாழ் தமிழர்களுக்குப் பல்லாண்டு காலமாக இலங்கை அரசினால் இழைக்கப்படும் இன்னல் குறித்து உருக்கமிகு உரையாற்றினார்.

''சர்வதேச உறவு என்பது சிக்கலான விஷயம் இதில் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை நன்குணர்ந்த சிறந்த ராஜதந்திரியாகப் பாரதப் பிரதமர் விளங்குகிறார். அவரது ராஜதந்திர அணுகுமுறை காரணமாக எங்களுக்குப் புதிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. தமிழக மக்கள் இந்திய அரசுக்குப் பக்க பலமாக இருந்து, உந்துசக்தியாக ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும்'' என்று அப்போது அவர் கேட்டுக் கொண்டார்.

கூட்ட முடிவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம் நன்றி கூறினார்.

தியாகமறவன் குட்டிமணி, முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் திரு.கே. ஏ. மதியழகன் ஆகியோரின் மறைவு குறித்து அவர்கள் இல்லங்களுக்குச் சென்று திரு. அமிர்தலிங்கம் அந்தந்தக் குடும்பத்தாருக்கும் ஆறுதல் கூறினார்.

20-8-83 அன்று திருச்சி சென்ற அவர், அங்கு வந்திருந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை இரண்டாம் முறையாகச் சந்தித்து, டில்லிப் பயணம் பற்றிய விவரங்களைத் தெரிவித்தார். முத்தமிழ்க்காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களைகயும் மற்றும் அரசியல் தலைவர்களையும் சந்தித்தார்.

அங்கு நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின்போது-''இலங்கைக்கு இப்போது இந்தியா இராணுவம் அனுப்பத் தேவையில்லை. எனினும் அங்கே தமிழர்களுக்கு எதிராக மீண்டும் கலவரம் மூண்டால், நாங்கள் இந்தியாவின் இராணுவத் தலையீட்டைக் கோர வேண்டியிருக்கும்'' என்றார் அவர்.

22.8.83 அன்று மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரும், மாண்புமிகு மேலவைத் தலைவரும் இணைந்து திரு, அமிர்தலிங்கத்திற்கு விருந்தளித்தனர்.

25.8.83ல், இலங்கைக்கு இந்தியப் பிரதமரின் சிறப்புத் தூதராகச் செல்லும் திரு, பார்த்தசாரதி அவர்களைச் சென்னையில் சந்தித்து இலங்கைப் பிரச்சினை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பின்னர், 26.8.83 அன்று இலங்கையில் பேச்சு வார்த்தை நடத்த வேண்டி, இந்தியத் தூதர் அழைப்பின் பேரில் கொழும்புக்குப் போய்ச் சேர்ந்தார் திரு. அமிர்தலிங்கம்.



தமிழகத்தில் எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் திரு.வி.க. போன்றவர்களின் சிலைகள் தோன்ற வேண்டும். அரசு மட்டும் செய்யாமல் வசதி படைத்தவர்களும் இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

தமிழைக் காத்து, வளர்த்து, பெருமை சேர்த்து-மொழியால் தமிழினத்தை ஒன்றுபடுத்த முடியும் எனக் கூறும் நாள் இது.

**— மாண்புமிகு முதல்வர்**

(29.8.82ல் வெஸ்லி மேனிலைப் பள்ளியில் நடைபெற்ற திரு.வி.க. சிலை திறப்பு விழாவில்.)

**அட்டையில்**

1983 ஆகஸ்ட் 26-ஆம் நாள், தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் நூற்றாண்டு நிறைவு பெறுவதையொட்டி, சென்னை பி அண்டு சி ஆலை அருகில் உள்ள திரு.வி.க அவர்களின் முழு உருவச் சிலையும், இராயப் பேட்டை வெஸ்லி மேனிலைப் பள்ளியில் 29.8.82ல் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப் பெற்ற சிலையும் இடம் பெற்றுள்ளன.



# திரு.வி.க.வின் கவித்திறன்



சிலம்பொலி சு. செல்லப்பன்

தமிழ்த் தென்றல் திரு.வி.க. உள்ளங்கவர் உரைநடையாளராகத் திகழ்ந்ததொப்பவே சிந்தனையில் தேன் பாய்ச்சும் செந்தமிழ்க் கவிஞராகவும் விளங்கி வந்தார். அவருடைய அரசியல், பத்திரிகை, தொழிலாளர் முன்னேற்றப் பணிகட்குப் பெருமளவில் உரைநடையே தேவைப்பட்டது. ஆதலின் கவிதை எழுதுவதில் அவர் அதிக ஆர்வம் காட்டவில்லை. ''யான் பாடுந் தொழிலை ஏற்றிருப்பவன் அல்லன். எனது வாழ்நாள் பெரிதும் பேச்சிலும் உரைநடை எழுதுவதிலும் கழிந்து வருவது தமிழ்நாட்டார்க்குத் தெரியும்'' என அவரே குறிப்பிட்டுள்ளார். எனினும் ''சில புலவர் தமது நூல்களுக்குச் சாற்றுக் கவிகள் விழைந்த போதும், கெழுதகை நண்பர் சிலர் இவ்வுலக வாழ்வை நீத்த போதும்'' பாடல் எழுதும் இன்றியமையாமை அவருக்கு நேர்ந்திருக்கின்றது. அவ்வாறு அவர் வடித்துள்ள கவிதைகள் அவரைச் சிறந்த கவிஞர் என எடுத்துக் காட்டுவனவாய் மிளிர்கின்றன.

பாம்பனடிகள் பற்றி அவர் பாடிய கையறுநிலைப் பாடலின் ஒரு பகுதி வருமாறு:

'பாம்பனெனும் பதிமுளைத்த பவளக் குன்றே!
பழம்பாண்டித் தமிழ்ப்பொழிலே!
பண்பார் இல்லத்
தீம்பயிரே! அன்புகொழி திரையே! தெய்வத்
திறங்கண்ட அறநிலையே! செகத்திலுற்ற
கூம்பலற எழுகதிரே! குழந்தை வேலன்
குகன்நெறியே நெறியென்ற குருவே! நீதி
ஓம்புகவென் றுரைத்தொழுகி உலகில் வாழ்ந்த
உயர்குமர குருதாச ஒளியே! போற்றி!'

பாம்பனடிகளைப் பவளக் குன்றாகவும், தமிழ்ப் பொழிலாகவும், பண்புப் பயிராகவும், அன்புத் திரையாகவும், அறநிலையாகவும், எழுகதிராகவும் கண்டுபோற்றுகின்ற திறத்தை இங்கே காண்கிறோம்.

பேரறிஞர் அண்ணாவை வாழ்த்தித் திரு.வி.க. ஒரு வெண்பாப் பாடியுள்ளார்.

''அண்ணா துரையென்னும் அண்ணல் தமிழ்நாட்டு
வண்ணான் அழுக்கெடுப்பில், வாய்மொழியில்-பண்ணாவான்;
சிற்பனெழுத் தோவியத்தில்; செவ்வரசு; நாவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமிஎன் றாடு.''

நாட்டு அழுக்ககற்றும் அண்ணல், இசையினிமைச் சொற்பொழிவாளர், எழுத்துச் சிற்பி, செம்மை நல அரசு, நாட்டுக் கலத்துக்கு நல்ல மாலுமி என அண்ணாவைக் கண்டு களிக்கிறார். எதுகை, மோனைகள் திரு.வி.க.வின் ஏவல் கேட்டு ஒழுகுவதை இவ்வெண்பாவால் அறிய முடிகிறது.

மன அமைதி குலையும்போது, மனத்தை அமைதிப் படுத்த திரு.வி.க. பாட்டெழுதுவதுண்டு. ''மன அமைதி எனக்கு எளிதில் குலைவதில்லை...கொந்தளிப்பு நுழையாதவாறு ஒல்லும்வகை மனத்தைக் காப்பது என் இயல்பு. மனிதப் பிறவி குறைபாடுடையது; வழுக்குதற்குரியது. பிறவிக் குறைபாடு ஒவ்வொருபோது சிறிதாதல் அமைதியைக் குலைத்து வழுக்கி விழச் செய்கிறது. குலைந்த அமைதியை மீண்டும் பெறவேண்டிக் காடு, மலை, கடற்கரைகட்குச் செல்வேன்; சென்று இயற்கைக் கோலங்களை ஊன்றி நோக்குவேன்; இயற்கைக் காவியங்களைப் படிப்பேன்; அமைதி கூடிவிடும். அங்கேயும் அவைகளிலும் அமைதி கூடாத வேளையில் மனத்தை ஒருமைப் படுத்துதற்குப் பாடல் எழுதப் புகுவேன்; அப்பொழுது என் மனம் பாட்டில் அமைதியுறும்'' எனத் திரு.வி.க. குறிப்பிடுகிறார்.

1949இல் அவருக்கு ஒரு கண்ணில் படலம் தோன்றியது. அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. எனினும் அக்கண் பார்வை மறைந்தது. 1950இல் மற்றொரு கண்ணும் பார்வை இழந்தது. தாளெடுத்துத் தானே எழுத முடியாத அந்நிலையில், தான் சொல்லிப் பிறரை எழுதச் செய்தார். அவ்வாறு சொல்லுதற்கு உரைநடையினும் செய்யுளே ஏற்றதெனத் திரு.வி.க. கண்டார். உரைநடையில் சொன்னதை மீண்டும் அவ்வாறே நினைவுபடுத்திச் சொல்லுதல் அருமை. பாட்டு ஒரு கட்டுக் கோப்புக்கு உட்பட்டதாதலால் சொன்னது மனத்திலே ஓவியமாக உருவெடுத்து நிற்கவும், அதனை மீண்டும் சொல்லவும் எளிதாகிறது. ஆதலாற்றான் தாம் சொல்லிப் பிறரெழுதுவதற்குத் திரு.வி.க. கவிதையைத் தேர்ந்தெடுத்தார். இதனை முதுமை உளறல் என்னும் நூலில்,

'பொழுது படுக்கையில் கழிக்க நேர்ந்த
பின்

கடிதில் உரைநடை முடிதல் கண்டேன்;
பாவின் அமைப்போ ஓவியம் ஆகி
உருண்டும் புரண்டும் திரண்டும் நிற்கும்
மொழிந்த பின்னும் அழிதல் அரிதாம்!
ஆதலின் பாவால் ஓதலைக் கொண்டேன்!

என்னும் அவர்தம் பாட்டுமொழியால் அறிகின்றோம்.

கண்ணொளி மறைந்த பிறகு அவர் வெளியிட்ட கவிதை நூல்களின் பட்டியலையும் 'முதுமை உளறல்' என்னும் நூலினில் அவரே தருகிறார்.

'இரண்டு கண்ணொளி வறண்ட இந் நாளினில்
'இருளில் ஒளியைக் குறள்வெண்பாவால்;
'இருமையும் ஒருமையும்', 'அருகன் அருகே',
'பொருளும் அருளும்-மார்க்கிஸ் காந்தி'
'சித்தந் திருத்தல்-செத்துப் பிறத்தல்'
என்னும் நூல்களைப் பன்னலன் அகவலால்.

**யாப்பு**

வெண்பா, விருத்தம் முதலிய வகைகளிலும் பாடியிருப்பினும் யாப்பைப் பொறுத்த வரை திரு.வி.க. ஆசிரியப்பாவையே பெரிதும் கையாண்டிருக்கிறார். ''கண்கள் படலத்தால் மறைக்கப் பெற்ற நாள்தொட்டுக்கருத்தொளியில் விளங்கும் பொருள்களைப் பெரிதும் அகவற்பாவால் வாய்மொழி வாயிலாக வெளியிட்டு வருகின்றேன். அவ்வெளியீடு எனக்கு எளிமையாகிவிட்டது. அகவற்பா பழந்தமிழர் கொண்ட ஒருவித உரைநடை'' என்பது திரு.வி.க. கூற்று.

**பாட்டுக் கொள்கை**

பாட்டு எத்தகையதாதல் வேண்டும் என்பது குறித்தும் திரு.வி.க. சிறந்தொரு கொள்கையைக் கொண்டிருந்தார். பாட்டென்பது சொல்லடுக்கன்று; அணிச்செருக்கன்று; யாப்புக் கட்டுமன்று; இயற்கையோடு இரண்டறவியைந்த மனத்தினின்றும் விரைந்தெழும் மகிழ்ச்சியின் பொங்கல் பாட்டாகும்.'' என்று அவர் குறிப்பிடுகிறார். இயற்கையோடு இயைந்து உள்ளத்திலிருந்து பெருக்கெடுக்கும் இன்ப ஊற்றே பாட்டு என்பது திரு.வி.க.வின் கருத்து.

இயற்கையை இறையாகக் காணுதல், பெண்மையைப் போற்றுதல், உரிமையில் நாட்டம், தொழிலாளர் பெருமையும் நலமும் பேசுதல் ,தமிழ்மொழிபாற் காதல் கொள்ளுதல், புதுமை விரும்புதல், பொதுமை வேண்டுதல், சாதி சமயமற்ற சமுதாயம் காணல், சமரச சன்மார்க்க நாட்டம் ,எல்லோரும் இன்புற்று வாழ வேண்டுதல் முதலியவை அவர்தம் பாடல்களில் அமுத ஊற்றாய்ப் பெருகி வெளிப்பட்டிருப்பதை உணர்கிறோம். இக் கருத்துக்கள் கவித்துவத்தோடு கூறப்பட்டு நம் நெஞ்சைப் பிணித்து நீங்கா இடம் பெறுகின்றன.

**பாடல்வழி திரு.வி.க.**

இயற்கையே இறை. இதனைத் திரு.வி.க ''இறைவனே இயற்கையுடல் என்றே கொண்டாய்'' என்பார். திரு.வி.க. பெண்மைக்கு மதிப்பளிப்பவர். சிவன் அருளை





1912-ல் திரு.வி.க.வின் தோற்றம்

வேண்டுகின்ற நூலில் பெண்மைக்குச் சிறப்பு மிக வேண்டுமென அவர் இறைவனிடம் வேண்டிக் கொள்வது கொண்டு அவர்தம் பெண்ணுரிமை நாட்டத்தை நாம் நன்கறியலாகும்.

'பெண்ணினை இழித்துக் கூறும்
பேய்க்கதை சாகச் சாக
கண்ணினை விழிக்கச் செய்யாக்
கருங்கதை மாய்க மாய்க
புண்ணினை வளர்க்குந் தீய
புன்கதை போக போக
கண்ணுதல் கொண்ட தேவே
கருணைசெய் இன்னே இன்னே'

எனப் பெண்ணுக்கு இழிவு தேடும் புராணக் குப்பைகள் ஒழிய வேண்டுமென இறைவனிடம் வேண்டுகின்றார்.

தமிழ்மொழியின் இனிமையை,
''கனியினிமை கரும்பினிமை காதலிலே இனிமைபெருந்
தனியரசில் இனிமையென்பார் தமிழினிமை உணராரே''
எனும் திரு.வி.க. வின் கன்னல் வரிகளில் துய்த்து மகிழலாம்.

தொழிலாளர் நிலையையும் அவர்கள் முன்னேற வேண்டிய இன்றியமையாமையையும் பலர் பாடியுள்ளனர். ஆனால் திரு.வி.க.வோ தொழிலாளர்களைத் தெய்வமாகவே மதித்துப் பாடுகிறார்.

''ஆக்குவன் காப்பன் அழிப்பன் தொழிலாளன்
பார்க்குள் அவன்செயல்கள் பாடு''
எனத் தொழிலாளர்களை முத்தொழில் செய்யும் இறைவனுக்கு நிகராக்குகின்றார். உலகம் உயர்வது தொழிலாளர்களால்தான் என்பதை அவர்,

''தொழிலாளன் கையினில் தாய்புது ஞாலம்
வழியாய் மலர்ந்துவரும் வாழ்த்து''

என நிலைநிறுத்தி, அத்தகைய தொழிலாளர் முன்னேற்றத்துக்கு அனைவரும் பாடுபட வேண்டுமென வலியுறுத்துகிறார். நாம் காண விரும்பும் உலகப் புதுமையைத் தொழிலாளர்களே நல்க முடியும் என்பது திரு.வி.க.வின் அசைக்க முடியாத நம்பிக்கை.

தொடர்ச்சி 39-ஆம் பக்கம்.



# தென்புலத்துக் காவலர் திரு.வி.க.

பூவிருந்த வல்லிக்குள் பூத்த பூவே!
புன்மைதனை ஒழிப்பதற்குப் புயலாய் மாறி
காவியத்தே ரேறிநிதம் மாநிலத்தில்; என்றும்
காலைபகல் பாராது கடமை யாற்றி
ஓவியம்போ லானவரே! ஒருநூற் றாண்டு
ஓடினாலும் ஓடாத ஒருமைப் பாடே!
நாவினிக்க நற்றமிழை நாட்டில், ஏட்டில்
நல்கிவந்த நாயகனே! வாழி, வாழி!

அடியார்க்கு அடியாராய் மாறி; நாளும்
அன்பருக்கு நண்பராகி அருந்தொண் டாற்றி
விடிவெள்ளிக் கவிதைகளை விதைத்து; அன்று
வெளிச்சத்தை உம்மைப்போல் விதைத்தோ ருண்டா?
கொடியாகி இந்நாட்டுக் கொழுகொம் பாகிக்
கொட்டியபூ கொள்கைப்பூ, கொஞ்சந் தானா?
மடியாமல் இருந்துவந்த மடமைப் பேயை
மண்ணுக்குள் புதைத்திட்ட மறையே வாழி!

தென்புலத்துக் காவலரே! திரு.வி.க.வே!
தேடிவரு வோரைநிதம் தேடிச் சென்ற
கண்மலரே! இந்நாட்டுக் கலையே—உன்போல்
கண்விழித்துத் தொழிலாளர் நலனைக் காத்த
மண்புகழும் மனிதர்யார்? மறைந்தும் வாழும்
மணியேஎன் ஒளியேஉன் பெருமை என்றும்
வெண்ணிலவு! தெவிட்டாத வெண்பா; ஞாலம்
விரைந்தேற்றுப் புகழ்கின்ற மறைநூ லாகும்

ஓராண்டு; நூறாண்டு; பலநூ றாண்டு
ஓடிடினும் ஓடாமல் உயர்ந்து நிற்கும்
சீரான உன்படைப்பு செகத்தோர் மெச்சும்
சிகரம்தான்! இமயத்துச் சிறப்புக் கீடு!
ஊராளும் பேராளர் உளத்தில் வாழும்
உத்தமனே! பெண்மைக்கு உயிரைத் தந்த
சீராளன் பாரதியைச் சிரசில் ஏற்றிச்
சீர்செய்த தமிழ்முனியே, என்றும் வாழி!



**கவிஞர். கே.வ. கபிலன்**







# திரு.வி.க. சில நினைவுகள்

**கே. அப்பன்ராஜ்**

**த**மிழ்த்தென்றல்

தமிழ்முனிவர்,

தொழிலாளர் இயக்கத் தந்தை

என்று பல்வேறு அடைமொழிகளால் தமிழ் மக்களால் அன்புடன் அழைக்கப்படும் தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்களுடன் பழக, பேச வாய்ப்புக் கிடைத்தது என் வாழ்க்கையின் பெரும்பேறு என்று நினைத்து, நினைத்து மனம் திளைக்கின்றேன்.

இராயப்பேட்டையில் சாது அச்சுக் கூடத்தில், தோட்டத்தை ஒட்டிய 'வெராண்டா'வில் சாய்வு நாற்காலியில் படுத்திருக்கும் அந்த மெல்லிய, எளிய உருவம் இன்னும் என் மனத்தில் பசுமரத்து ஆணிபோல் பதிந்திருக்கிறது. புன்னகை மாறாத முகம், ஒளி மங்கிய புறக்கண்கள் தீட்சண்யமான அறிவு கொழுந்து விட்டெரியும் அகக் கண்கள், கதராடையால் அலங்கரிக்கப்பட்ட அந்த ஞானியின் திருவுருவத்தை யாரும் எளிதில் போய் அணுகலாம். அவர் இருந்த இருப்பிடத்திற்குக் கூட அவருடைய இறுதி நாட்களில் இடைஞ்சல் வந்துவிட்டது. எத்தனையோ பேர் தங்கள் மாளிகையில் வைத்து அவரைப் பூஜிக்கத் தயாராக இருந்தார்கள். வீடு வாங்கப் பணம் அனுப்பினார்கள். அத்தனையும் அவரால் அன்போடு மறுக்கப்பட்டன.

''இந்த வீட்டிற்கு இத்தனை முக்கியத்துவம் ஏன் கொடுக்கிறீர்கள்?'' என்று ஒரு நாள் நான் கேட்டேன்.

''ஒன்றுமில்லை தம்பீ, என் கண்பார்வை மங்கிவிட்டது. இந்த வீடாக இருந்தால், யாருடைய உதவியும் இல்லாமல், யாருக்கும் சுமையாக இல்லாமல், நான் நடமாடமுடியும். பல வருடங்களாகப் பழகிவிட்ட வீடு. வாசற்படி, நிலைப்படி, மாடிப்படி மற்றும் ஒவ்வொன்றும் எங்கே இருக்கிறது என்பது எனக்கு அத்துபடி. ஆகவேதான் இந்த வீட்டைவிட்டு அகல என் மனத்திற்குத் துன்பமாக இருக்கிறது'' என்று கூறினார். கடைசியில் அந்த வீட்டை விட்டு மாறி, எதிரே உள்ள ஒரு வீட்டில் குடிபோக வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. இந்த வேதனையே அவருடைய வாழ்நாட்களைக் குறைத்துவிட்டது.

திரு.வி.க. அவர்களுக்குச் சென்னைத் தொழிலாளர் சங்கம் மணிவிழா கொண்டாடிய நேரம். அழகான அவருடைய திருவுருவப் படத்தை யாரைக் கொண்டு திறந்து வைக்கலாம் என்று யோசித்தோம். தந்தை பெரியாரைவிட யார் பொருத்தமாக இருக்கமுடியும்? அவரை அணுகினோம்.

''உயிரோடு இருப்பவர்கள் யாருடைய படத்தையும் நான் திறந்து வைக்க ஒப்புக்கொள்ள மாட்டேன்'' என்று ஆரம்பித்தார் அய்யா அவர்கள். எங்களுக்குத் 'திக்' என்றது. ஆனால் அடுத்து அவர்கள் கூறிய வார்த்தைகள் எங்கள் காதில் தேனாகப் பாய்ந்தன. ''ஆனால் திரு.வி.க.வின் படத்தைத் திறந்து வைக்கக் கண்டிப்பாக வருகிறேன். அது என்னுடைய கடமை'' என்றார்கள். யாருக்கும் கொடுக்காத மரியாதையைத் திரு.வி.க.வுக்குப் பெரியார் அவர்கள் ஏன் கொடுத்தார்கள் என்பதற்கு நாங்கள் வெளியிட்ட மலருக்கு அவர் எழுதியனுப்பியதே சான்று பகரும்.

''அவர் பொதுத் தொண்டுக்காகவே தன் வாழ்நாளை ஒப்படைத்துக் கொண்டவர். ஆனாலும் மற்ற 100க்கு 90 பொதுத் தொண்டர்களைப்போல் அல்லாமல் தன்னைப் பற்றி விளம்பரப்படுத்திக் கொள்வதில் சிறிது கூடப் பற்றில்லாதவர். மற்றும் பொதுத் தொண்டின் மூலம் எவ்வித சுயநலத்தையும் கருதாமல் தொண்டுக்காகவே தொண்டு செய்து வந்தார். அவர் ஏழையாகவே பொதுத்தொண்டுக்கு வந்தார். யாரும் அடையாத மதிப்பும் பெருமையும் அவரை வந்தடைந்தது என்றாலும் அவர் ஏழையாகவே முடிவெய்தினார்.

''இந்தத் தன்மையில் இவருக்கு இணையாகவோ, இவருக்கு அடுத்தபடியாகவோ சொல்லுவதற்குத்தமிழ்நாட்டில் எவருமே இல்லை. பொதுத் தொண்டின் பேரால் இறுதிவரை வாழாதவர்கள் என்றும், தனது நலத்தைப் பெருக்கிக் கொள்ளாதவர்கள் என்றும், செல்வம் சேர்த்துக் கொள்ளாதவர்கள் என்றும் சொல்லப்படுவதற்கு நமது நாட்டில் திரு.வி.க. அவர்களைத் தவிர வேறு யாரையுமே சொல்ல முடியாது என்பது எனது உறுதியான கருத்து.

''யாரிடத்திலும் எந்த உதவியையும் பெற மிக மிக வெட்கப்படுவார். யார் வலியச் சென்று செய்தாலும் மறுத்து விடுவார்.''

தந்தை பெரியார் அவர்கள் திரு.வி.கவைப் பற்றி இந்த கைய உயர்ந்த கருத்துக் கொண்டிருந்தமையால்தான், திரு.வி.க. அவர்களிடம் தந்தை பெரியார் அவர்கள் பெருமதிப்பு வைத்திருந்தார்கள்.

திரு.வி.க. அவர்கள் இயற்கை எய்தி, இறுதி ஊர்வலம் சூளையில் உள்ள சென்னைத் தொழிலாளர் சங்கத்திலிருந்து பல்லாயிரம் மக்கள் புடைசூழப் போய்க் கொண்டிருந்ததுசிந்தா திரிப்பேட்டையில் மரண ஊர்வலம் வந்து கொண்டிருக்கும்போது, தந்தை பெரியார் அவர்கள் தமிழகத்தில் எங்கோ ஒரு மூலையில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தவர், தமது நிகழ்ச்சிகளையெல்லாம் ரத்து செய்துவிட்டு ஓடோடியும் வந்து கலந்து கொண்டார்.

கலந்து கொண்டது மாத்திரமல்ல, அந்தத் தள்ளாத வயதில் நடந்தே வந்தார். பெருமழை கொட்டத் தொடங்கியது. மக்கள் முகங்களில் எல்லாம் கண்ணீர் வெள்ளம். சென்னைத் தெருக்களிலே தண்ணீர் வெள்ளம். தண்ணீரில் நனைந்து, பெரியாரின் காலணி அறுந்துவிட்டது. வெறுங்காலோடு அய்யா அவர்கள் தொடர்ந்து நடந்தார்கள். உள்ளத்து வேதனை கால் வேதனையை மூழ்கடித்து விட்டது போலும். அவர் வெறுங்காலோடு தட்டுத் தடுமாறி நடந்து வருவதைப் பார்த்த மனம் பொறுக்காத கூட்டம் கெஞ்சிக் கதறி அவரை ஒரு 'ரிக்ஷாவில்' ஏறி வரும்படி செய்தது.

அய்யா அவர்கள் வெறுங்காலோடு நடந்து வந்த காட்சியைக் கண்டு கதறிய எனக்கு ஒரு பழைய சம்பவம், அதே மாதிரி திரு.வி.க. அவர்கள் வெறுங்காலோடு நடந்த சம்பவம் நினைவுக்கு வந்தது.

1947ல் சென்னை பக்கிங்காம் கர்னாடிக் மில் தொழிலாளர்கள் தோழர் அந்தோணிப்பிள்ளையின் தலைமையில் சில பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக ஆறு மாத காலம் வீரப் போராட்டம் நடத்தினர். சங்கத் தலைவர் கைது செய்யப்பட்டால் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த ஒரு போராட்டக்குழு தொழிலாளர்களால் அமைக்கப்பட்டிருந்தது. அக்குழுவின் தலைவர் திரு.வி.க. அவர்கள் ஆவார்கள். போராட்டத்தின்போது தோழர் அந்தோணிப்பிள்ளையும் மற்றும் நூற்றுக்கணக்கான சங்க முக்கியஸ்தர்களும் கைது செய்யப்பட்டுச் சிறையிலே அடைக்கப் பெற்றனர். போராட்டக்குழு கூடி, போராட்டம் பற்றிய பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படவேண்டும். போராட்டக்குழு கூடும் விஷயம் வெளியானால் காரியம் அத்தனையும் கெட்டுவிடும். ஆனால் போராட்டக்குழு கூடியே ஆகவேண்டும்.

ஒருநாள் போராட்டக் குழு தற்போது 'டிரைவ் - இன் உட்லாண்ட்ஸ்' சிற்றுண்டி நிறுவனம் இருக்கும் தோட்டத்தில் கூடுவதாக முடிவு எடுத்தது. இந்தத் தோட்டம் அப்போது சுற்றிலும் நெருக்கமாக மரங்கள் அடர்ந்ததாய், வெளியே இருந்து பார்த்தால் உள்ளே இருப்பவர்கள் யாரும் தெரியாத வண்ணம் இருந்தது. கூட்டம் பகல் 12 மணிக்கு.

அக்கமிட்டிக் கூட்டத்திற்கு ரகசியமாக திரு.வி.க.வை அழைத்துவரும் பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. எப்படி அழைத்து வருவது? திரு.வி.க.வின் வீட்டைச் சுற்றி ரகசியப் போலீஸ், கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக்கொண்டு, கண்காணித்து வருகிறார்கள். மூன்றாம் பேருக்குத் தெரியாத மனுஷன் என்றால் யாருக்கும் தெரியாமல் ரகசியமாக அழைத்துச் செல்லலாம். திரு.வி.க.வை எப்படி ரகசியமாக அழைத்துச் செல்வது?

அன்று இரவு பூராவும் எனக்குத் தூக்கமில்லை. கடைசியில் ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாய் செயல்படத் துவங்கினேன். பகல் பன்னிரண்டு மணிக்கூட்டத்திற்குக் காலை பத்து மணிக்கே ஒரு வாடகைக் காரை எடுத்துக் கொண்டு திரு.வி.க. வீட்டின் முன்போய் நின்றேன்.

போகும்போதே சுற்று முற்றும் பார்த்து நிலைமையை ஒருவாறு கணித்துக் கொண்டேன். சாதகமான சூழ்நிலை இருப்பதைக் கண்டு மனத்திற்குள் மகிழ்ச்சி அடைந்தேன். வேகமாக வீட்டிற்குள் நுழைந்தேன். சாய்வு நாற்காலியில் அந்த அமைதியின் திருவுருவம் சாய்ந்து, சிந்

## மதுரை மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் புதிய 20 அம்சத் திட்டத்தை மதுரை மாவட்டம் சீரிய முறையில் அமல் நடத்தி வருகிறது. நடப்பு நிதியாண்டில் (1983-84) ஜூன் மாதம் முடிய மாவட்டத்தின் சாதனைகள் வருமாறு:

பாசன வசதியைப் பெருக்கும் திட்டத்தின் கீழ் 450.41 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெற்றுள்ளன. 1983-84-க்கான குறியீட்டு அளவு 2,795 எக்டேர்.

உபரிநில ஒதுக்கீடு இலக்கு அளவு 1,600 ஏக்கர். ஜூன் மாதம் வரை 115 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிணைத் தொழிலாளர் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் இதுவரை 13 தொழிலாளர்கள் மறுவாழ்வு பெற்றுள்ளனர். ஆதிதிராவிடர் வளர்ச்சிக்கான திட்டங்கள் துரிதப்படுத்தப்பட்டு 1,935 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. (இலக்கு அளவு 17,721 குடும்பங்கள்).

பிரச்சினைக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் 102 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 16 கிராமங்கள் குடிநீர் வசதி பெற்றுள்ளன.

ஜூன் மாதம் முடிய 9,693 குடும்பநல அறுவைச் சிகிச்சைகள் நடைபெற்றுள்ளன.



தனையில் ஆழ்ந்திருந்தது. திடீரென நான் போய் முன்னால் நின்றதும், உற்சாகம் மேலிட்டவராய் "வந்துவிட்டீர்களா? எப்படி வந்தீர்கள்? என்ன செய்தி?" என்று எழுந்து என்னைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

அப்போது அவருடைய பார்வை பழுதடையாமல் இருந்த நேரம். "போராட்டக் கமிட்டி கூடுகிறது. தாங்கள் வர இயலுமா?" என்று கேட்டேன். "ஓ அதற்காகத் தானே நான் காத்துக் கொண்டிருக்கிறேன்; இதோ உடனே வருகிறேன்" என்று சட்டையைத் தூக்கிப் போட்டுக் கொண்டு என்னுடன் கிளம்பி விட்டார். நான் ஒரு சிறு தவறு செய்தாலும், கூண்டோடு கைலாசம் என்பதுபோல, போராட்டக் கமிட்டி அப்படியே போலீஸார் கையில் சிக்கி விடும் ஆகவே மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியிருந்தது அதற்கு முழு ஒத்துழைப்புக் கொடுப்பது போல, திரு.வி.க.வும் துரிதமாகச் செயல்பட்டார்.

திரு.வி.க.வின் இல்லத்திற்கும் கூட்டம் நடக்கும் இடத்திற்கும் சில பர்லாங்குகளே இருக்கும். இருந்தாலும் அவரைக் காரில் ஏற்றிக் கொண்டு பாரிமுனைக்குச் சென்றேன். அங்கே நாங்கள் வந்த காரிலிருந்து இறங்கி, அந்தக் காரை அனுப்பிவிட்டு, யாரும் பின்தொடர்கிறார்களா என்பதை நன்கு கவனித்துவிட்டு, வேறு ஒரு வாடகைக் காரை அமர்த்திக்கொண்டு தியாகராய நகருக்குச் சென்றேன். அங்குதான் திருமதி. அந்தோணிப்பிள்ளை குடியிருந்தார். அவருடைய வீட்டில் திரு.வி.க.வைத் தங்க வைத்துவிட்டு, வந்த காரை அனுப்பிவிட்டேன். ஒரு சில நிமிடங்களில் அங்கிருந்து புறப்பட்டு, யாரும் பின்தொடரவில்லை என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டு திடீரென ஒரு 'சிட்டி பஸ்'சில் ஏறினோம். சன் தியேட்டர் முன்னால் வந்து இறங்கி நடந்தோம்.

மே மாதத்து உச்சி வெயில், தார் ரோடு. காலை கீழேவைக்க முடியாத அளவுக்குச்சூரிய வெப்பம். திரு.வி.க. அவர்களுக்கோ காலணி இல்லை. கொதிக்கும் தார் ரோட்டில் முதியவரின் வெறுங்கால்கள் நடைபோட்டன. நான் என் காலணியைக் கழட்டிக் கொடுத்தேன் "இதை அணிந்து கொண்டு வாருங்கள்" என்று மன்றாடினேன். "வேண்டாம். நான் காலணி அணியமாட்டேன். அப்படியொரு சபதம்" என்றார்கள். தலையிலே துணியைப் போட்டுக்கொண்டு, "வாருங்கள் போவோம்" என்று முன்னாலே நடக்க ஆரம்பித்துவிட்டார்கள். என் கண்கள் கலங்கின.

"உங்களை மிகவும் துன்பப் படுத்திவிட்டேன்" என்று நாத் தழுதழுக்கக் கூறினேன்.

அதற்கு அந்தச் சாந்த மூர்த்தி என்ன பதில் கூறினார் தெரியுமா?

"இதற்காகவா கலங்குவது! இது எனக்குப் பழக்கம். இதிலே எனக்கு உற்சாகமும் கூட. வாருங்கள் போவோம்," என்று என் தோளில் கைவைத்து ஆறுதல் சொன்னார்.

பிறகு அவரைப் பூங்காவிற்குள் அழைத்துச் சென்றேன். மூலைக்கு ஒருவராக இருந்த போராட்டக் கமிட்டியினர், எங்களைப் பார்த்து, ஒவ்வொருவராக வந்து கூடினர். தொடர்ந்து நடக்க வேண்டிய வேலை பற்றி விவாதிக்கப்பட்டது. சில முடிவுகள் எடுக்கப்பட்டன. திரு.வி.க. மீண்டும் அமைச்சரவையை அணுகிப் பேசுவது என்று தீர்மானிக்கப்பட்டது. கூட்டம் முடிந்ததும் தனியாகப் புறப்பட்டுவிட்டார் பெரியவர், அவர் இல்லம் நோக்கி.

"எனக்கு இனி யாரும் துணையாக வரவேண்டாம். வண்டியும் வேண்டாம். நான் நடந்தே போய்விடுவேன். நீங்கள் தாமதம் செய்யும் ஒவ்வொரு நிமிடமும் ஆபத்து. ஆகவே நீங்கள் எல்லோரும் இங்கிருந்து உடனே சென்று விடுங்கள்" என்று கூறிவிட்டு, விடுவிடுவென நடந்தார். அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்த எனக்கு காந்திஜி நடந்து போவதுபோல் ஒரு வண்ணச் சுவரொட்டி ஒட்டியிருக்குமே, அதுதான் நினைவிற்கு வந்தது. அதில் காந்திஜி காலணி அணிந்திருந்தார். இங்கே இவர் காலணியில்லாமல் நடக்கிறார்.

திரு.வி.க. அன்பும் பாசமும் கொண்டவர். தனக்கு உற்றாரிடத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

1950-ல் எனக்கு முகவை மாவட்டம் மானாமதுரையில் திருமணம். தலைமைதாங்க திரு.வி.க. அவர்கள் இசைவு அளித்திருந்தார்கள். அழைப்பிதழும் அச்சாகி விநியோகிக்கப்பட்டு விட்டது. ஆனால் திருமணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன் போய் அவருடைய பிரயாணத்திற்கு எப்படி வசதி செய்யலாம் என்பதைப் பேச முற்பட்ட எனக்கு ஒரே அதிர்ச்சி.

வழக்கமாக அவர் அமர்ந்திருக்கும் சாய்வு நாற்காலி காலியாக இருந்தது. விசாரித்ததில், அவர் மிகவும் நோய்வாய்ப்பட்டு, படுத்த படுக்கையாக இருப்பதாகவும், பார்வையாளர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை என்றும் கூறினார்கள். நான் செய்வதொன்றும் அறியாமல், அவர் தலைமை வகிப்பதாக அச்சிட்ட அழைப்பிதழை மட்டும் அவரிடம் காண்பிக்கும்படி கேட்டுக்கொண்டேன்.

அடிகளார் ஒருவர் காவி உடை

## தமிழ்நாட்டில் கூடுதல் தொலைக் காட்சி மையங்கள்

கொடைக்கானலில் 10 கிலோவாட் சக்தியுள்ள தொலைக்காட்சி அஞ்சல் மையத்தை உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதைத்தவிர சேலம், வேலூர், தஞ்சாவூர், கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் நெய்வேலியில் குறைந்த சக்தி டிரான்ஸ்மிட்டர்களை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வட ஆர்க்காடு மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்குத் தொலைக் காட்சி வசதி வழங்குவதற்காக ஏலகிரி மலைப்பகுதியில் அஞ்சல் டிரான்ஸ்மிட்டர் ஒன்றை நிறுவுமாறு தமிழ்நாடு அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரமான வேலூரில் குறைந்த சக்தி டிரான்ஸ் மிட்டர் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. பெங்களூரில் 10 கிலோவாட் தொலைக்காட்சி டிரான்ஸ்மிட்டர் மூலம் தர்மபுரி மாவட்டத்தின் பகுதிகள் தொலைக்காட்சி வசதி பெறும்.

# மனிதனின் கடமை



நமது தமிழ்நாட்டிற்குப் பல ஆயிரம் ஆண்டுகளாகத் தழைத்து வளர்ந்து வரும் வரலாற்றுப் பெருமை உண்டு. என்றாலும், எவ்வளவு தொன்மையான சிறப்பைப் பெற்றிருந்தாலும் மாற்றங்கள் சமுதாயத்தில் இன்றியமையாதவை. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்பது நமது தமிழ் இலக்கணம். அதே நேரத்தில் எந்த மரபுகளையும் பண்பாடுகளையும் நல்லவையென்று காலங்காலமாகப் போற்றி வந்தோமோ அவற்றை உதறிவிட்டு, புதுமை என்ற பெயரில் போலித்தனத்தை நாடி அலைவதும் நமக்கு உகந்ததல்ல. ஆனால் அதே சமயத்தில் பழமையிலேயே சிறைப்பட்டுப் புதிய சூழ்நிலைகளை உணர மறுத்தால் தேக்கம்தான் மிஞ்சி நிற்கும். இந்த இரண்டு நிலைகளிலும் சிக்குறாமல், பழமையை ஆதாரமாகக் கொண்டு புதுமையிலே ஆர்வம் காட்டி, நமது பழைய மரபுகள், பண்பாட்டு நெறிகள் இழையோடுகின்ற சமூகப் பொருளாதார அமைப்புதான் நமது நாட்டுக்கு ஏற்றதாகும். மாறுதலைக் கண்டு அஞ்சாமல் அறிவுடைமையோடும் ஆண்மையோடும் நின்று, எதையும் நன்றாய் ஆராய்ச்சி செயது, காலத்திற்கும் அவசியத்திற்கும் தக்க வண்ணம் தன்னைத் தயாரித்துக் கொள்ள வேண்டியது பகுத்தறிவுடைய மனிதனின் இன்றியமையாத கடமையாகும்.

—மாண்புமிகு முதல்வர்
(மதுரைகாமராஜர்பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா உரையிலிருந்து— 18.12.82)

அணிந்து திரு.வி.கவுடனேயே இருப்பார். அவர் அழைப்பிதழை எடுத்துக் கொண்டு மேலே போனார். ஆம். மாடியில் அவருடைய இருப்பிடம் மாற்றப்பட்டு விட்டது. சில நிமிடங்களில் கீழே வந்து என்னை அழைத்துக் கொண்டு போனார்.

பெரும் செல்வந்தர்களும் செல்வாக்கு மிக்கவர்களும் அனுமதி மறுக்கப்பட்டுத் திரும்பிக் கொண்டிருந்தனர். ஆனால் நான் மட்டும் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். எலும்பும் தோலுமாய் 'முதுமையின் உளறல்' எழுதிக் கொண்டிருந்த சாந்த சொரூபன் அங்கே படுத்திருந்தார்.

என்னை உட்காரச் சொல்லி விட்டு, மிகுந்த துயரத்தோடு, தன் இயலாமை பற்றிக் குறிப்பிட்டார். எனக்கு ஏற்பட்டுள்ள ஏமாற்றத்தின் வேதனையைத் தானும் அனுபவிப்பதாகக் கூறினார். கூட இருந்தவர்கள் தடுத்தும், சிரமப்பட்டு எழுந்து, உட்கார்ந்து, தன் இரண்டு கைகளையும் என் சிரசில் வைத்து,

''திருமண நிகழ்ச்சியின்போது வாழ்த்த வேண்டியதை, இப்போதே, இங்கேயே வாழ்த்துகின்றேன். உங்கள் திருமணம் சீரும் சிறப்புமாக நடந்து, உங்கள் இல் வாழ்க்கை இனிதே நடைபெற என் இதயத்தின் அடித்தளத்திலிருந்து வாழ்த்துகின்றேன்'' என்றார்கள். அவருடைய வாழ்த்து வீண்போகவில்லை. இன்றளவும் என் திருமண வாழ்க்கை இன்பத்திலும் துன்பத்திலும் உறுதியாக நின்று சான்று பகருகிறது.

திருமணத்திற்கு திரு.வி.க.வுக்குப் பதில் யாரைத் தலைமை தாங்கச் செய்வது? வழக்கமான புரோகிதர் சடங்கெல்லாம் கூடாது என்று சீர்திருத்தத் திருமணம் செய்ய என் வீட்டாரிடத்தும் என் மனைவி வீட்டாரிடத்தும் அனுமதி வாங்கி இருந்தேன். இப்போது அதிலே மாற்றம் என்றால் தலைகுனிவு தானே!

திருமணத்திற்கு முதல் நாள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் மதுரையில் வந்து தங்கியிருந்தார். எனக்கு அவரிடத்திலே அதிக ஈடுபாடு உண்டு.

கவிஞர் மதுரையில் தங்கியிருந்த இல்லத்துத் தலைவர் என்னுடைய உயிர்த் தோழர். ஆகவே நாங்கள் புரட்சிக் கவிஞரை அணுகி, நிலைமையை எடுத்துச் சொல்லி, அவரைத் தலைமை தாங்கும்படி தயக்கத்துடன் வேண்டினோம். அழைப்பிதழையும் காட்டினோம்.

''திரு.வி.கவுக்குப் பதில் நான் தலைமை தாங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். கண்டிப்பாக நான் வந்து தலைமை வகிக்கிறேன்'' என்றார்கள். திருமணத்தின்போது ஏராளமான வாழ்த்துத் தந்திகளும் கடிதங்களும் வந்திருந்தன. அவற்றை நண்பர்கள் முதலில் வாசிக்கத் துவங்கினர். அதிலே ஒரு தபால் கார்டு.

திரு.வி.க.அவர்கள் கையெழுத்திட்டு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். பாவேந்தர் அவர்கள் ''அதை முதலில் படியுங்கள்'' என்றார். திரு.வி.க. விடத்து எத்தகைய மதிப்பும் மரியாதையும் புரட்சிக் கவிஞர் வைத்திருந்தார்கள் என்பதை அது எடுத்துக் காட்டிற்று. சிறியேனாகிய என் திருமணத்தை மறக்காமல் திரு.வி.க. அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியது என் வாழ்நாளிலேயே மறக்க முடியாத நிகழ்ச்சி.





# சென்னை நகரக் காவல் துறையின் சிறப்புப் பயிற்சிகள்

**அ. மருது**

உலகத்திலேயே ஸ்காட்லண்டு யார்டு காவல் துறைக்கு அடுத்தபடியாக தமிழ்நாடு காவல்துறை புகழ்பெற்றுச் செயலாற்றி வருகிறது.

தமிழ்நாட்டின் தலைநகரிலுள்ள சென்னை நகரக் காவல் துறை பல அரிய சாதனைகளைப் புரிந்து மற்ற மாவட்டங்களுக்கு வழிகாட்டியாக உள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களின் அறிவுரைப்படி காவல்துறையில் பணி ஆற்றும் அனைவரும் உடலைக் கட்டுப்பாடாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க வேண்டுமென்பதற்காக, ஒழுங்காக-கவனத்துடன் வாரம் தவறாமல் உடற்பயிற்சி செய்து வருகின்றனர்.

சென்னை மெரினா கடற்கரையில் சென்னை நகரக் காவல் துறை ஆணையாளர் திரு.ஸ்ரீபால், துணை ஆணையாளர் திரு எம். பாலசந்திரன் ஆகியோரது மேற்பார்வையில், திருவல்லிக்கேணி சரக உதவி ஆணையாளர் திரு. வி.சுந்தரவரதன் அவர்களின் தலைமையில் உடற்பயிற்சி செய்து வருகிறார்கள்.

கடந்த 12.8.83 அன்று காலை நடந்த உடற்பயிற்சிப் போட்டிகளில் வெற்றி பெற்ற காவலர்களுக்கு, சென்னை நகரக்காவல் துறை ஆணையாளர் திரு ஸ்ரீபால் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

அவர் பேசுகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடிப் பார்வையில் செயல்பட்டுவரும் காவல்துறையைச் சார்ந்த அனைவருக்கும் செய்துள்ள நன்மைகள், வீட்டுவசதி மலிவு விலையில் உணவுப் பண்டங்கள் வழங்குதல், வாகன வசதி மருத்துவ வசதி ஆகியவற்றைப் பற்றி விரிவாக எடுத்துக்கூறி, காவல்துறையினர் மேலும் பல நல்ல காரியங்களைச் செய்து, பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றுச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.



குதிரை ஓட்டுநர், குதிரையின் மீது அமர்ந்து, திறமையாக ஓட்டுவதற்கு அவர்கள் முட்டுக்கால் பலத்தினால் குதிரையை இறுக்கிப் பிடிக்கவேண்டும். அதற்குண்டான பலம் காவலருக்கு இருக்கிறதா என்று சென்னை நகரக் காவல் துறை ஆணையாளர் திரு ஸ்ரீபால் அவர்கள் சோதனை செய்கிறார். திரு ஸ்ரீபால் அவர்கள் குதிரைச் சவாரி செய்வதில், இந்தியாவிலுள்ள வல்லுநர்களில் ஒருவர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.





# சிங்கவால் குரங்கு

டி. அச்சையா, வனத்துறைத் தலைவர்

தமிழகத்தில் காணப்பெறும் குரங்கினங்களில் மிகவும் அழகானதும் அரிதானதும் ஆகும் சிங்கவால் குரங்கு என்பது. சங்க இலக்கியங்களில் குரங்குகளைப் பற்றி மிக அழகாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மலையில் பெய்த மழையில் நனைந்து நனைந்து தன்னுடைய குட்டிகளுடன் ஒரு தாய்க் குரங்கு நடுங்குவதாகக் கூறும் குறுந்தொகைப் பாடலை இங்கு காண்போம்.

''இன்மயிலகவு மரம்பயில் கானத்து
நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்பப்
படுமழை பொழிந்த சாரலவர் நாட்டுக்
குன்ற நோக்கி னென் தோழி
பண்டை யற்றோ கண்டி சின்நுதலே''

என்று சிங்கவால் குரங்கு நரைமுக ஊகமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. மேலும் புறநானூற்றில்-

''குறுமலைக்கலமரும் பாலார் வெண்மதி
நரைமுக ஊகமொடுக்கும் வரையாமல்''

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இக்குரங்கு சங்க இலக்கியங்களிலும் மற்றும் மலைவாழ் மக்களிடையேயும் அரக்கன், சிங்காளன், முசு, நரைமுகவூகம் என்ற பெயர்களால் குறிப்பிடப்பட்டு வருகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் அரக்கன் சோலை என இக்குரங்குகள் வாழும் வனங்கள் அழைக்கப்படுகின்றன. இதுதலையும் உடலும் சுமார் இரண்டடி நீளமும், வால் ஒரு அடி நீளமும் நுனியில் சிங்கவால் நுனி ஒத்த கற்றை முடிகள் கொண்டு கட்டையான உறுதியான உடல் கட்டுடையது. பெண்ணினம் சற்றே சிறியது, மற்ற குரங்கினங்களிலிருந்து இதனை வேறு படுத்திக் காட்டுவது, ஆகும். இதன் தாடியும், கிருதாவும் நீண்ட ரோமங்களால் முகத்தைச் சுற்றி அமைந்திருப்பது. இதனுடைய கரிய உடலினின்று தனித்துக் காட்டுகின்றது.

இவ்வினம் வாழும் இடம் மஞ்சுகள் கொஞ்சும் மலைமுகடுகளைத் தழுவி நிற்கும் சோலைகளும், பள்ளத்தாக்குகளில் அடர்ந்து செறிந்துகாணப்படும் வனங்களுமாகும். இக்குரங்குகள் தரையில் இறங்குவதே இல்லை. இவை வாழும் கானகத்து மரங்களோ சுமார் 100 முதல் 150 அடி வரை உயரமுள்ளன. இச்சோலை மரங்கள் அநேக அடுக்குகளாக அமைந்திருக்கும். சுமார் 30 முதல் 50 அடி வரை உயரமுள்ள சில வகை மரங்கள் ஒரு அடுக்காகவும், அதற்கு மேல் 50 முதல் 90 அடி வரை வேறு வகையான மரங்கள் ஒரு மாடியாகவும், இவ்வாறு 15 அடி முதல் இவ் வனங்கள் மாடி மாடிகளாக அமைந்திருக்கும். இம்மரங்களெல்லாம் பசுமைமாறா இலையுதிராத் தன்மையன. அதாவது ஒரு பொழுதும் மரத்தில் இலைகள் அனைத்தும் உதிர்ந்து மொட்டையாக மரங்கள் காணப்படமாட்டா. இலைகள் உதிரும் பொழுதே புதிய இலைகள் உடனுக்குடன் தோன்றி விடுவதால் பசுமை மாறாத தன்மையைக் கொண்டுள்ளன. சிவப்பு, பழுப்பு நிறப் புதிய தளிர்களும் கற்பனைக் கெட்டாத பலவகைப் பச்சை நிறங்களையும் இலைகள் பெற்று அழகாகக் காணப்படும். மேடுதாழ்வு, பள்ளத்தாக்கு ஆகிய நில அமைப்பைப்பெற்றிருப்பதால் இவ்வனங்களில் உச்சிகளும் சமமாக இல்லாமல் உயர்ந்தும் தாழ்ந்தும் காணப்படும்.

இதனால் சூரிய ஒளி இவ்விலைகளின் மேல்பரவலாகப்படர்வதற்கு வாய்ப்புள்ளது. பருவக்காற்றுகள் சூல்கொண்டு மழை மேகங்களாக வானத்தில் படர்ந்து வரும் பொழுது சோலைக் காடுகளின் குளிர்ச்சி,இச்சூல் மேகங்களைஈர்த்து மழையாகப் பொழியச் செய்கின்றது என்பது அனைவரும் அறிந்த விஞ்ஞான உண்மை. இம்மரங்கள் தொடர்ந்து நெருங்கி அவற்றில் கிளைகளும் இலைகளும் ஒன்றுடன் ஒன்று செறிந்து, பிணைந்து இருத்தலால் எல்லா இலைகளின் பரப்பின் அளவைப் பொறுத்தே இலைகள் வெளியேற்றும் ஆவி நீரின் அளவு அமையும். இந்த ஆவி நீரின் அளவைப் பொறுத்துத் தான் வனச் சூழலின் தண்மைநிலை இருக்கும். எனவேதான் மழை மேகங்கள் சோலைக் காடுகளில் மழையைப் பொழிகின்றன. இவ்வாறு பெய்த மழை அடுக்கடுக்கான இலை, கிளைப் படுக்கைகளின் மீது விழும் பொழுது அவற்றின் வேகம் குறைந்து மரங்களின் கிளைகளின் வழியாக மெதுவாக இறங்கித் தரையை அடைகின்றன.

தரையிலோ பல நூற்றாண்டுகளாக வீழ்ந்த மக்கிப்போன, மக்கி மாறும் பல்வேறு நிலைகளிலுள்ள கடற்பஞ்சு போன்ற இலை மெத்தைகள் இருப்பதால் மழைநீரை உறிஞ்சி சிறுது சிறிதாகத் தாழ்வான மலைப்பகுதிகளிலுள்ள சிற்றருவிகளுக்கு அனுப்புகின்றன. எனவே தெள்ளத் தெளிந்த நீர்ச்சோலைகள் நிறைந்த மலைகளில் உள்ள ஆறுகளில் ஓடுவதைப் பார்க்கலாம்.

இத்தகைய வனங்கள் மின்சார வளர்ச்சிக்கென அமைக்கப்பட்டுள்ள அணைக் கட்டுகள் கட்டப்பட்ட காலத்தில் அதிகமாக அழிக்கப்பட்டன. எங்கெங்கே அணைகள் கட்டப்பட்டனவோ அங்கெல்லாம் ஐந்தாயிரம், பத்தாயிரம் வேலை ஆட்களின் தற்காலிகக் குடியிருப்புத்தோன்றி அம்மக்களின் அன்றாட விறகுத் தேவைகளுக்கென, காடுகள் சிறிது சிறிதாக அழிக்கப்பட்டன. மேலும் நம்முடைய பல்வேறு தேவைகளுக்கென இவ்வரிய வனங்கள் அழிக்கப்பட்டன. மனிதனால் தங்களது வாழ்க்கைச்சூழல் குறைக்கப்பட்டு வாழ்க்கைத் தேவைகள் மறுக்கப்பட்ட காரணத்தால் இவ்வினம் சிறிது சிறிதாக அழிந்து அறவே அற்றுப் போகும் நிலையை அடைந்துள்ளது.

முற்றிலும் அழிந்து போகும் முன்னர் இவ்வினம் காப்பாற்றப்பட வேண்டியதன் இன்றியமையாமையைக் கருத்தில் கொண்ட தமிழ்நாடு அரசு இவ்வினம் அதிகமாகக் காணப்படும் திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு சரணாலயத்தை 1976 ஆம் ஆண்டு அமைத்துள்ளது. வேறு தேவைகட்கெனக் களக்காடு வனங்கள் அழிக்கப்பட இருந்ததைத் தமிழக அரசு தடுத்து, இந்த அரிய உயிரினம் தொடர்ந்து வாழ வகை செய்துள்ளதை நம் நாட்டில் மட்டுமல்ல, பிற நாடுகளில் வனவிலங்கு புரத்தலில் ஆர்வம் உள்ளவர்களிடையேயும் குறிப்பாகக் குரங்கின ஆராய்ச்சி வல்லுநர்களிடையேயும் மகிழ்வையும் மனநிறைவையும் தந்துள்ளது.



## வாழ்க்கைத் தன்மை

மனிதர்களை[illegible]லேவே இ[illegible]ம்பமாக வாழும் பா[illegible]து. பி[illegible]ங்குகள் இனவிருத்தி[illegible]லங்களில் ம[illegible]ணும் பெண்ணும்[illegible]யிருந்து இனவிரு[illegible]லம்

85343

முடிந்த பின்னர் பெரும்பாலும் தனித்தனியாக வாழும் தன்மையுடையன. ஆனால் குரங்கினங்களோ குடும்பமாகப் பெண்கள், குட்டிகளுடன் 5 முதல் 30 வரை எண்ணிக்கையுள்ள குடும்பக் கூட்டங்களாக வாழ்கின்றன. ஒரு குடும்பத்தைச் சார்ந்தவை நெருங்கிய உறவினர்களாக இருக்கலாம். ஆண்கள் வளர்ச்சியடைந்து பெரியவைகளாகும் பொழுது கூட்டத் தலைவருடன் போட்டியிட்டு, பொருது பழைய தலைவனை விரட்டி விடலாம் அல்லது விரட்டப்படலாம். பெண்களை, குட்டிகளைப பேணுவதற்கெனத் தலைவன் தன் உயிரையும் அஞ்சாமல் பகைவர்களுடன் சாடுவது உண்டு.

இக்குரங்குகள் முதிர்ச்சியடைய ஆணுக்கு 7 ஆண்டுகளும், பெண்களுக்கு 3 ஆண்டுகளும் பிடிக்கலாம். ஒரு முறை ஈன்று அக்குட்டி வளர்ந்து தனியாகச் செல்லும் வரை பெண்கள் கூடுவதில்லை. அக்குட்டிகள் தனியாகத்தான் தன்னைப் பேணிக் கொள்ளும் வளர்ச்சி பெறக்குறைந்தது மூன்று ஆண்டுகளாகும். அநேகமாக இயற்கையின் போட்டி நிறைந்த சூழலில் 12 முதல் 15 ஆண்டுகட்கு மேல் இவை உயிருடன் இருக்க முடியாது.

எனவே ஒரு பெண் சிங்காளம் தன் வாழ்வில் பிற தேவைகள் சரியாக அமைந்திருந்தால் 3 குட்டிகளை ஈன முடியும். அக்குட்டிகள் நோயுறாமல்-எதிரிகளால் கவரப்படாமல் முழு வளர்ச்சியடைவது எளிதல்ல. ஒரு வேளை ஐந்து குட்டிகளில் ஒரு குட்டியே முதிர்ந்த பருவ நிலையை அடையலாம். இவ்வாறு குறைந்த வாழ்வுள்ள ஒரு குட்டியே ஈனும், இக்குரங்கினத்தைப் புரத்தல் உயிரியல் வல்லுநர்களுக்கு, அருகிவரும் இச்சூழலில் கடினமான ஒரு செயல் ஆகும்.

## உணவு

இவை தளிர்கள், மொட்டுகள், பூக்கள், பழங்கள், கொட்டைகள், பூச்சிகள், பல்லிகள், சிறு உயிரினங்கள், பறவைகள், முதலியவற்றை உணவாகக்கொண்டு வாழ்கின்றன. காட்டுப்பலா, முள்பலா, காட்டு ஆலம், அத்தி முதலிய பழங்களை விரும்பி உண்கின்றன. எனவே காட்டு அத்தி (அ) காட்டுப்பலா பழுத்திருக்கும் போது அதிக நேரம் அம்மரங்களில் அமர்ந்து இவை கூட்டமாகப் பழங்களை உண்ணும். பழுத்த ஒரு பெரிய மரத்தை நோக்கி பல மைல்கள் காட்டு வழியாக இவை தேடிச் செல்வதும் உண்டு. காட்டுப் பலா (குலினியா எக் சாரிலேடா) எனப்படும் ஒருவகை மரம் ஆண்டுக்குச் சுமார் 200 நாட்கள் பூக்களின் மூலமாகவும், இளந்தளிர்கள் மூலமாகவும், கொட்டைகள் மூலமாகவும், இக்குரங்கினத்திற்கு உணவாகத் தருகின்றன. டாக்டர் கடாம்பி என்ற அறிஞர் 1954ல் இத்தாவர இனத்தைப் பற்றி ஆராய்ந்து அம்மரம் காணப்படும் இடங்களைக் குறிப்பிட்டுள்ளார். இம்மரம் காணப்பட்ட இடங்களிளெல்லாம் சிங்காளம் என்ற இக்குரங்கு வாழ்ந்துள்ளது என்பதை அறியும்பொழுது வியப்பாக உள்ளது.

இக்குரங்கினங்கள் மக்களின் அறியாமையினால் மக்களுக்கு ஏற்படும் எல்லா நோய்களுக்குமே அவற்றின் இறைச்சியும் இரத்தமும் மருந்தாக அமையும் என்ற தவறான எண்ணம் நிலவி வருகின்றது. இருண்ட காடுகளில் இக்குரங்கினம் வாழ்வதால் மருந்துச் செடிகளையே தேர்ந்தெடுத்து உண்பதாகவும், அத்தகைய மருந்துச்செடிகளை இவை உண்பதால் இவற்றின் குருதியும், சதையும் மருந்தாக அமையும் என்ற மூட நம்பிக்கையும் இக்குரங்கினங்கள் விரைவில் அழியக்காரணமாக அமைந்தது. வனங்களில் சாலைகள் அமைப்பதால் 50 முதல் 100 அடி அகலமுள்ள அகன்ற மின்சாரக் கம்பங்கள் நடப் பெறுவதாலும் சோலைகள் தொடர்பற்று, சிறு சிறு பாகங்களாக ஆகின்றன. கிளைகள் ஒன்றோடொன்று தொட்டுக் கொள்ளாத நிலையில் இக்குரங்கினங்கள் தரையில் இறங்கி அருகில் உள்ள சோலைகளுக்குச் செல்லவேண்டிய அவசியம் ஏற்படுவதலால் புலிகளுக்கோ அல்லது மற்ற எதிரிகளுக்கோ உணவாகும் ஆபத்தான நிலையை அடைகின்றன. இவ்வினம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் சோலைகள் தொடர்ந்து அதிக அளவில் அமைந்திருந்தாலன்றி, இவற்றின் இயல்பான வாழ்வு பாதிக்கப்படும்.

மனிதனுக்கு ஏற்படக்கூடிய எல்லா நோய்களும், எல்லாக் குரங்கினங்களுக்கும் இவ்வரிய இனத்திற்கும் ஏற்படலாம். மனிதனுடைய உடல் அமைப்பு சில நோய்களுக்கு எதிர்ப்புத் தன்மை வர தன் உடலிலேயே அமைந்துள்ளது. ஆனால் குரங்கினங்களோ அவ்வாறன்றி ஒதுங்கி, தொன்று தொட்டு வாழ்ந்துள்ளன. எனவே மனிதனுக்கு ஏற்படும் மனிதனுடைய நோய்கள் ஒரு குரங்குக் கூட்டத்திற்குப் பரவ நேரிடில் அதாவது காச நோய், நிமோனியா போன்றவை நேர்ந்தால் பூண்டோடு அழிந்து விடும்.

சங்க இலக்கியங்களில் இக்குரங்கினங்களைப் பற்றி அரிய செய்திகளும் அவற்றின் வாழ்க்கை ஒழுக்கங்களைப் பற்றிய குறிப்புகளையும் காண்கின்றோம். மலையையும், மலை சார்ந்த காடுகளையும் பற்றிப் பாடப்பட்டுள்ள மலை படு கடாத்தில் நான்கு வகைக் குரங்குகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.



சங்கம் வளர்த்த தமிழ் இலக்கியங்களின் சிறப்பினை அறிந்து, உணர்ந்து பெருமை கொள்கிறோம். பண்டைய கோவில் சிற்பங்களைப் புகழ்ந்து பாதுகாக்கின்றோம். சித்தர்களின் கொள்கைளயும், சித்தாந்தங்களையும் பரப்ப வகை செய்கிறோம். எனினும் நம்முடைய தனிக் கலைக்கு அடிப்படையாக அமைந்துள்ள இயற்கைச்சூழலையும், அங்கு தோன்றி வளர்ந்த உயிரினங்களையும் நாம் புரத்தற்கு ஆவன செய்வதில்லை. இக்குரங்கினத்தையும், பிற அரிய விலங்கினங்களையும் புரத்தற்கெனத் தனி முயற்சிகள் மேற்கொண்டு அழிவினின்று காப்போம்!



## நேரத்துடன் பள்ளி செல்வேன்!



காலம் அறிந்தே உணவுண்ணும்
கடமை போலத் தினந்தோறும்
காலம் சிறிதும் தவறாமல்
கல்விச் சாலை சென்றிடுவேன்!

கல்வி அமுதம் தரும்பள்ளி
கடவுள் வாழும் கோயிலடா!
சொல்லிக் கொடுக்கும் ஆசானே
தூய கடவுள் ஆவாராம்!

பள்ளிக் கூட மணியடிக்கும்
முன்னே நானும் உடையணிவேன்
நல்ல புத்தகப் பைதூக்கி
நாளும் செல்வேன் பள்ளிக்கே!

அண்ணன் தம்பி அக்காளும்
அருமை யான தங்கையுமே
கண்ணைப் போலக் காலத்தைக்
கருத்தாய்ப் போற்றி வாழ்ந்திடுவோம்!

நேரம் தவறிப் பள்ளிக்கு
நீயும் நானும் சென்றாலே
யாரும் மதிக்க மாட்டார்கள்
இதனை உணர்வாய் எக்காளும்!

—தணிகை உலகநாதன்

# அறிவுச்சுடர்

உலகத்திலேயே மிகச் சிறிய நாடு வாடிகன் நகரமாகும். இதன் பரப்பளவு 4 சதுர கிலோ மீட்டர். போப்பாண்டவர் வசிக்கும் இந்த நகரத்தின் மொத்த மக்கள் தொகை ஆயிரம் பேர் மட்டுமே.

இன்று உலகிலுள்ள மொத்த சுயேச்சை நாடுகள் 161. மேலும் 62 நாடுகள் பிற நாடுகளின் ஆளுகையின் கீழ் உள்ளன. 26 நாடுகளில் கடற்கரையே கிடையாது!

உலகத்தின் மக்கள் தொகை ஒவ்வொரு வாரமும் 15 இலட்சம் பேர் வீதம் அதிகரித்துக்கொண்டு வருகிறது.

உலகத்திலேயே மக்கள்தொகை நெருக்கம் அதிகமான நாடு மோனாகோ. ஐரோப்பாவிலுள்ள இந்த நாட்டில் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 16,938 மக்கள் வீதம் வசிக்கின்றனர்.

உலகத்திலேயே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் அதிகமான நாடு பிரான்ஸ். இங்கு நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்.

உலகத்திலேயே மிக உயரமான கம்பம், போலந்திலுள்ள வார்சாவா வானொலிக் கம்பமாகும். எஃகினாலான இந்தக் கம்பம் 2,120 அடி உயரமானது!

பாம்புகளுக்குக் காதுகள் கேட்பதில்லை. பாம்பாட்டியின் அசைவுகளுக்கு ஏற்பவே பாம்புகள் ஆடுகின்றன. ஆனால் தரையில் ஏற்படும் அதிர்வுகளின் மூலம் சுற்றிலும் நடப்பதைப் பாம்புகள் உணர்ந்து கொள்ள முடியும்!


உலகத்திலேயே மிக அதிகமாகப் பூக்கள் விளையும் நாடு நெதர்லாந்து. இங்கு ஆண்டு தோறும் 270 கோடி மலர்கள் பறிக்கப்பட்டுவிற்கப்படுகின்றன.

உலகத்திலேயே மக்கள் தொகை அதிகமான நகரம் மெக்சிகோ சிட்டி. இங்கு 1 கோடியே 20 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர்.

உலகத்திலேயே அதிகமான ஆகாய விமானங்களைக்கொண்ட போக்குவரத்து நிறுவனம் ரஷ்யாவிலுள்ள ஏரோபிளாட் என்ற நிறுவனமாகும். இதனிடம் 1300 விமானங்கள் உள்ளன!

—நன்றி: பூக்கூடை

# தெரிந்து கொண்டால் நல்லது...!



# புலி

**புலி** காட்டு விலங்குகளுள் கடுமையானது. ஆற்றலிலும், அச்சமூட்டுவதிலும் புலியைப் போன்ற விலங்கு சிங்கம் ஒன்று தான்.

விலங்குகளுள் மிகப் பெரிய தான யானையைக்கூட அஞ்சச் செய்யும் புலி, பூனை இனத்தைச் சேர்ந்தது.

புலி வலிய உடல் உடையது. அதன் முன்னங் கால்களில் கூரிய நகங்கள் ஐந்தும், பின்னங்கால் களில் நான்கும் உள்ளன. கண்கள் கொள்ளிக் கட்டையைப் போன்ற ஒளி பெற்றவை. அதனால் புலி இரவிலும் எதையும் தெளிவாகப் பார்க்கும். புலியின் உடலில் சிறிது கரிய அல்லது முற்றிலும் கருமையான குறுக்குப் பட்டைகள் அழகான காட்சி தரும்.

இந்தியாவில் ரேவா என்னும் இடத்தில் வெண்ணிறமுடைய புலிகள் உள்ளன. அந்த வெள் ளைப் புலியே. புலி வகைகளுள் சிறந்ததெனக் கருதப்படுகிறது.

புலி கிழக்காசியாவிலேதான் வாழ்கிறது. புலியின் தாயகம் வடக்கு இரஷ்யா என்றும், அங்கி ருந்து அது கிழக்கு நோக்கி மஞ்சூரியா, கொரியா, சீனா, பர்மா, தாய்லாந்து, வியட் நாம் உள்ளிட்ட பல நாடுகளுக்குச் சென்று தங்கியது என்றும் பொது வாகக் கருதுகின்றனர். புலி பர்மாவிலிருந்து இந்தியாவில் நுழைந்து, இமயம் முதல் குமரி வரை உள்ள பல்வேறு மாநிலங் களில் பரவி வாழ்ந்து வருகிறது.

புலி பெரும்பாலும் தன் இருப் பிடத்தை விட்டுப் பகலில் வெளியே வராது; கதிரவன் மறைந்த பிறகே வெளியில்வரும். குளிர்ச்சி நிறைந்து, மேகம் கனிந்து, மழை பொழிகின்ற காலத்தில் பகலிலும் புலி வெளியே வரும்.


புலி இரவில் வேட்டையாடும். தனித்து வேட்டையாடும் இயல் புடையது; தன் இரையைத் தொடர்ந்து, அதை நன்கு நெருங் கிய பிறகே பாய்ந்து, அதன் கழுத்தின் பின்புறத்தையோ, தொண்டையையோ முதலில் தாக்கும்.


புலி எல்லா விலங்குகளையும் தின்னும்; கோழி முதலிய பறவை களையும் நீரில் வாழும் மீன் களையும் தின்னும். புலி தானே கொன்ற விலங்கை மட்டுமே சாப் பிடும் என்னும் கருத்து தவறா னது. இறந்து கிடக்கும் விலங் கையும் அது தின்னும். பெண் யானை, யானைக் கன்று, காட்டு எருமை, காட்டுப் பன்றி, மான், கரடி ஆகியவை அதற்கு விருப்ப மான இரைகளாகும்.

மனிதனை எப்போதேனும் ருசி பார்க்க நேரிட்டால், புலி மனித னைத் தின்னும் விலங்காக மாறி விடுகிறது; அப்போது ஆடு மாடு களைத் தாக்காமல் அவற்றை மேய்ப்பவனையே தேடி, அடித்துத் தின்னும்.

ஆண் புலியின் நீளத்தைவிடப் பெண் புலியின் நீளம் குறைவு.

புலி நீரில் நன்கு நீந்தும். 'புலிக்கு மரம் ஏறத் தெரியாது,' என்னும் கருத்தும் தவறானது. புலிக்கு மரம் ஏறவும் தெரியும். ஆபத்துக் காலத்தில் அது மரத் தில் தாவி ஏறிக் கொள்ளும். காட்டில் வெள்ளம் ஏற்படும் போது புலி மரத்தில் தாவி ஏறித் தன்னைக் காத்துக் கொள்ளும். புலிகளை வேட்டையாடுவதை யும், தோலுக்காகப் புலிகளைக் கொல்வதையும் தடுக்கத் தீவிர நடவடிக்கைகள் இப்போது நாடெங்கும் மேற்கொள்ளப்பட் டுள்ளன.





# மேகம் நல்ல மேகம்!

மாணவர் பக்கம் தயாரிப்பு: 'கிரிஜா'

**தொ**ழிற்சாலைகளிலிருந்து காற்றில் கலக்கும் நச்சுப் பொருள்களை அகற்றுவதற்கு மேகங்களைப் பயன்படுத்துவதற்கான வழி கள்பற்றி சோவியத் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

1980-ல் மாஸ்கோ ஒலிம்பிக் போட்டிகள் நடந்தபொழுது, மாஸ்கோ மீது குவிந்த மேகங்கள் செயற்கைமுறையில் கலைக்கப் பட்டு அங்கு வானிலை இனிமையாக இருக்க வகை செய்யப்பட்டது.

இப்பொழுது காற்றைச் சுத்தப்படுத்த மேகங்களைப் பயன்படுத்தும் முறையில் இந்த விஞ்ஞானிகள் கவனம் செலுத்துகின்றனர்.

தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும் நச்சுப் பொருள்கள் காற்றில் கலப்பது உல கெங்கிலும் பரவியுள்ள ஒரு பிரச்சனையாகும். நச்சுப் பொருள்கள் வட துருவப் பகுதியில் வாயுமண்டலத்தில் கலப்பதாக வைத்துக் கொண்டால் 3 அல்லது 4 மாதத்தில் அது தென் துருவப் பகுதிக்கு வந்து விடுகிறது.

சோவியத் நாட்டில் காற்று அதிகச் சுத்த மாக இருக்கிறது. இந்நாட்டின் மேற்கு எல் லைக்கு அப்பாலுள்ள நாடுகளின் தொழிற் சாலைகளிலிருந்து பெரும் அளவில் வெளிப் படும் கந்தகம், மற்றும் நைட்ரஜன் கலந்த வாயுக்கள் காற்றில் கலந்து சோவியத் நாட் டுக்கு வந்து விடுகின்றனவாம். இவற்றை மேகங்கள் உறிஞ்சும் வகையில் அவற்றைத் திசை திருப்பக்கூடிய ஒரு சாதனத்தை உரு வாக்க இந்த விஞ்ஞானிகள் முயன்று வருகின் றனர். இவ்விதம் மேகங்களை 'வாயு மண்டல வடிகட்டி' களாகப் பயன்படுத்த முடியும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

## வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றி

**உ**லகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியா அபார வெற்றி பெற்று வரலாறு படைத் துள்ளது. மேற்கு இந்தியத் தீவு கள் அணியை 43 ரன்கள் வித்தி யாசத்தில் இந்தியா தோற்கடித்து உலகக் கோப்பையை வென்றது.

புருடென்ஷியல் உலகக் கோப் பைப் போட்டியில் 2 முறை சாம் பியன் பட்டத்தை வென்ற மேற்கு இந்திய அணியை, இந்தியா திண றடித்துத் தோற்கடித்தது குறிப் பிடத்தக்கது.

முதலில் பேட் செய்த இந்திய வீரர்கள் 55-வது ஓவரில் 183 ரன்கள் எடுத்தனர். இந்த ரன் களை மேற்கு இந்தியத் தீவுகள் எளிதில் எடுத்து வெற்றி பெற்று விடும் என்று எதிர்பார்க்கப்பட் டது. ஆனால் இந்திய வீரர்கள் அபாரமாகப் பந்து வீசி 140 ரன் களுக்கு 52-வது ஓவரில் சுருட்டி வீசினார்கள். மதன்லால், அமர் நாத் இருவரும் தலா 3 விக்கெட் டுகளையும் சந்து 2 விக்கெட்களை யும், கபில்தேவ், பின்னி தலா 1 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார் கள்.

இந்திய வீரர்களின் பந்து வீச்சும், "பீல்டிங்"கும் வர்ணிக்க முடியாத அளவுக்கு இருந்தன. உலகக் கோப்பைப் போட்டியில் இந்தியா இறுதிப் போட்டிக்கு வந்து புருடென்ஷியல் கோப் பையை வென்றிருப்பது இதுவே முதல் முறையாகும். 1975,79- ஆம் ஆண்டுகளில் உலகக் கோப் பையை வென்ற மேற்கு இந்திய அணியிடமிருந்து, இந்தி அணி இப்போது இக்கோப்பையை வென்று வரலாறு படைத்திருக் கிறது. இந்தப் போட்டியில் சிறந்த வீரராக மொகிந்தர் அமர்நாத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.


இந்த வெற்றியின் மூலம் இந் திய அணிக்கு 30 ஆயிரம் டால ரும் (1 டாலர் என்பது சுமார் 10 ரூபாய்) இரண்டாவது இடம் பெற்ற மேற்கிந்திய அணிக்கு 15 ஆயிரம் டாலரும் கிடைக்கிறது.

உலகக் கிரிக்கெட் கோப்பை இறுதியில் இந்தியா படைத்த வர லாற்றுப் புகழ் வெற்றிக்கு இந்தி யக் குடியரசுத் தலைவர் திரு ஜைல்சிங் அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார். கபில்தேவுக்கு அனுப்பியுள்ள ஒரு வாழ்த்துச் செய்தியில், "உலகக் கோப்பையில் வெற்றி பெற்ற தற்கு உங்கள் அணிக்குப்பாராட்டு கள். உங்கள் வெற்றி குறித்துப் பெருமைப்படுகிறோம்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இந்தியாவால் முடியும் என் பதுதான் நான் எது பற்றியும் எப் போதும் கூறிவரும் முழக்கமாகும். அதனை நீங்களும் நிரூபித்து விட் டீர்கள். உங்களுக்கு என் நன்றி" என்று பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இந்திய கிரிக் கெட் அணியைப் பாராட்டி இருக் கிறார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் வெற்றியை மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பின்வருமாறு பாராட்டி இருக்கிறார்:

தமிழக மக்களின் சார்பிலும் அமைச்சரவையின் சார்பிலும், என் சார்பிலும் கபில்தேவுக்கும் அவரது குழுவினருக்கும் பாராட் டுதலைத் தெரிவித்துக் கொள் கிறேன். இந்த வெற்றியானது இந்தியக் குடிமகன் ஒவ்வொரு வரின் வெற்றியாகவும் கருதப் படும் என்பதில் ஐயமில்லை. இந் திய அணி மேலும் பல வெற்றி களைக் குவிக்க வாழ்த்துகள்".








# ஆடுகள் வளர்ப்பும் பொருளாதாரமும்

டாக்டர்
செ.அ. கோபாலகிருஷ்ணன்
டாக்டர்
கே.கே. கிருஷ்ணமூர்த்தி
வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
மதுரை.

ஆடுகள் வளர்ப்பு கிராமங்களில் வசிக்கும் சிறு நில, குறுநில விவசாயிகள் மட்டுமின்றி நிலமற்ற விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க உதவுகின்றது. கிராமங்களில் குறிப்பாக விவசாயிகள் 10 முதல் 100 ஆடுகள் கொண்ட மந்தைகளைப் பெணிக்காத்து வருவதன் நோக்கம் தங்கள் நிலங்களுக்கு வேண்டிய உரத் தேவையை ஓரளவு பூர்த்திசெய்வது மட்டுமின்றி, மழைபெய்யாத காரணத்தினால் விவசாயத்தில் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்டும் வகையில், இருக்கும் ஆடுகளைச் சந்தையில் விற்றுத் தங்கள் அன்றாடத் தேவைகளுக்கான செலவுகளுக்குச் சரிக்கட்டி வாழ்க்கையை நடத்துவார்கள். இதனால் ஆடுகளைக் கிராமப்புறங்களில் 'செல்லமாக' அடமானம் மீட்கும் அமைப்புக்கள்'' (Mortgage Lifters) என்று கூறுவது வழக்கம். செம்மறி ஆடுகள் கம்பளி ரோமம், தோல், இறைச்சிக்காகவும், வெள்ளாடுகள் பால், தோல், இறைச்சிக்காகவும் வளர்க்கப்படுவது அனைவரும் அறிந்ததே. வெள்ளாடுகள் பாலை அளித்து வளர்க்கும் விவசாயியின் தேவையைப் பூர்த்தி செய்வதால் வெள்ளாடுகளை ''ஏழையின் பசு'' ( Poor Man's cow ) என்று கூறுவது வழக்கம்.

செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வளர்ப்பு கிராம மக்களின் பொருளாதாரத்தை மேம்படச் செய்யவும், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களில் ( Integrated Rural Development ) முக்கிய அங்கம் வகிக்கிறது. ஊனமுற்றோர், வயதானவர்கள், சிறுவர்கள், கடின உழைப்புக்கு லாயக்கற்றவர்களுக்கு ஆடு வளர்ப்பு முழுத்தொழிலாகவும் அல்லது உபதொழிலாகவும் அமைந்து சமூகத்தில் அவர்களும் மேம்பட உதவுகிறது. ஆடுகளின் இறைச்சிக்கும் தோலுக்கும் நல்ல விலை கிடைப்பதால் ஆடுகள் வளர்ப்பு கிராமங்களில், வசிப்பவர்களின் பொருளாதாரத்தைச் சற்று உயர்த்த உதவுவதுமட்டுமின்றி, ஆடு வளர்ப்பவர்கள் குடும்பத்தினருக்குப்பால், இறைச்சியும் கிடைப்பதால் மாமிசப் புரதச்சத்து பற்றாக்குறையை ஓரளவு தவிர்த்து அவர்கள் உடல் ஆரோக்கியத்தையும் நல்ல நிலையில் வைத்துக் கொள்ள உதவுகிறது.

ஆடு வளர்ப்பு மற்ற கால் நடை வளர்ப்பினைப்போல் நிலம், கட்டடம் சாதனங்களுக்கு ஆகும் செலவு மிகவும் குறைவேயாகும். ஆடுகளைக்கிடைபோட்டு கிராமங்களில் நிலங்களின் நடுவே வைத்து விடுவதால் நிலத்தின் வளம் ஆடுகளின் சாணம், மூத்திரம் மூலம் பாதுகாக்கப்படுகிறது. மேலும் ஆட்டின் எருவை மாட்டின் எருவுடன் ஒப்பிட்டு நோக்கினால் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து ஆட்டின் எருவில் மாட்டின் எருவைக்காட்டிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. ஒரு ஆட்டின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 600 முதல் 700 கிலோ வரையில் எரு கிடைக்கும்.

செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை நம் தமிழ்நாட்டில் 5.4 மில்லியன்களாகும். ஏறத்தாழ இந்திய நாட்டின் ஆட்டு எண்ணிக்கையில் 12 சதம் நம் தமிழ்நாட்டில் காணப்படுகிறது. தற்சமயமுள்ள ஆடுகளின் எண்ணிக்கை கடந்த 10 ஆண்டுகள் 15 ஆண்டுகளிலிருந்த ஆடுகளின் எண்ணிக்கைவிடக் குறைந்து காணப்படுகிறது. இதற்குக் காரணத்தை ஆராய்ந்தால் மேய்ச்சல் நிலங்கள் நாளடைவில் துரிதமாகக் குறைவது, கடும் தொத்து வியாதிகளான வெக்கை, ஆட்டு அம்மை மற்றும் வயிற்றில் உண்டாகும் புழுக்கள், வெளிப்புற ஒட்டுண்ணிகளால் ஏற்படும் வியாதிகள் மூலமாக ஆடுகளின் இறப்பு வருடாவருடம் ஏற்படுவது முக்கிய காரணங்களாகும். மேலும் ஆடுகளின் உற்பத்திக்கான வழிமுறைகளைச் செய்யாமல் தொடர்ந்து அதிக எண்ணிக்கையான ஆடுகளை இறைச்சிக்காகக் கொல்லுதல் ஆடுகளின்எண்ணிக்கையில் நாளடைவில் குறைவு ஏற்படக் காரணமாகிறது. செம்மறி ஆடுகள் ஒரு ஈற்றில் ஒரு குட்டியை ஈனுவதால் செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை அதிகரிக்க முடியவில்லை. ஆனால் வெள்ளாடு ஒரு ஈற்றிற்கு இரண்டு மூன்று குட்டிகளை ஈனுவதால் கட்டுப்பாடின்றி வெள்ளாடுகளை இறைச்சிக்காகக் கொன்று குவித்தாலும் வெள்ளாடுகளின் எண்ணிக்கை ஓரளவு அதிகரித்து வரு

வதைக் குறிப்பாக இந்தியாவின் மொத்த வெள்ளாடுகள் எண்ணிக்கை 70 மில்லியனாகவும், செம்மறியாடுகள் எண்ணிக்கை 70 மில்லியனாகவும், செம்மறியாடுகளின் எண்ணிக்கை 40 மில்லியனைத் தாண்டாமல் கடந்த 15 ஆண்டுகளாக ஒரே நிலையில் இருப்பதை அறியக்கூடும்.

சுமார் பத்து சத ஆடுகளிலிருந்து நம் நாட்டில் கம்பளம் தயாரிக்கப்படுகிறது. நீலகிரி இன ஆடுகள் மூலம் நேர்த்தியான கம்பளம் கிடைக்கிறது. கோயம்புத்தூர் ஆடுகளின் ரோமங்கள் பெரும்பாலும் நேர்த்தியற்ற, தரம் குறைந்த கம்பளங்களைத் தயாரிக்க உதவுகின்றன.

நம் நாட்டில் தொடர்ந்து வறட்சி நிலையிலிருக்கும், 3600 கிராமங்கள் அடங்கிய திருநெல்வேலி, திருச்சி, இராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை, சேலம், தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, தருமபுரி, கோயம்புத்தூர் பகுதிகளில்தான் அதிக எண்ணிக்கையான ஆடுகள் இருக்கின்றன. தொடர்ந்து வறட்சி மிகுந்த இடங்களில் ( Drought Prone Area) வாழும் ஆடு வளர்க்கும் விவசாயிகள் முன்னேற்றமடைய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஆடு வளர்க்கும் விவசாயிகளுக்குக் கடன் வழங்கியும், ஆடுகளின் தரத்தை உயர்த்த அயல்நாட்டு உயர் இன ஆடுகளின் மூலம் இனச்சேர்க்கை செய்யும், கலப்பின ஆடுகளுக்குமேய்ச்சல் வசதி, உட்புற, வெளிப்புற ஒட்டுண்ணிகள் கடும் தொத்து வியாதிகளிலிருந்து காப்பாற்ற வைத்திய வசதிகள் அளித்தல் திட்டத்தின் குறிக்கோளாகும்.

மேலும், ஆடு வளர்க்கும் விவசாயிகளின் உற்பத்தி பொருட்களான ஆடுகள், தோல், கம்பளம் ஆகியவைகளுக்கு நல்ல விற்பனை விலைகள் கூட்டுறவு விற்பனைக் கூடங்கள் மூலமாகக் கிடைக்க வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஆடுகளிலிருந்து கிடைக்கும் பொருட்களான தோல், கம்பளம் ஆகியவற்றை, ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் கிராமங்களில் நிறுவப்பட்டுள்ள கிராம வளர்ச்சித் தொழிற்சாலைகளுக்கு அனுப்பி மூலப் பொருட்களிலிருந்து கம்பளி, நூல் நன்கு பதனிடப்பட்ட தோல், உள் நாட்டுத் தேவைகளுக்கும், அயல்நாட்டுக்கு ஏற்றுமதிக்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஆடுவளர்க்கும் விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படச் செய்தால், நம் கிராமங்களில் வறுமைக் கோட்டில் வாழும் பெரும்பான்மையான மக்கள் முன்னேற்றமடைய வழி ஏற்படும்.

செம்மறி ஆடுகள் வளர்ப்பின் பொருளாதாரத்தை ஆராய்ந்து பார்ப்போமானால் 25 பெட்டை ஆடுகளும் ஒரு கிடாவும்கொண்ட மந்தையின் செலவு, வருவாயைத் தெரிந்து கொள்வோம். 25 பெட்டை ஆடு 1 கிடாவின் விலை சேர்ந்து 4000 ரூபாய் ஆகிறது. ஆடுகளுக்கான ஒரு சாதாரண கச்சாப்பட்டி அமைக்கும் செலவு 350 ரூபாய். ஆடுகளுக்கு வேண்டிய சாதனங்கள் மருந்துக்கு 150 ரூபாய் தேவைப்படும். மொத்த செலவு 4500 ரூபாய். சிறு நில விவசாயிகளுக்கு 25 சதம் கடனளிப்புத் திட்டத்தின் கீழ் அளித்தால் கொடுக்க வேண்டிய கடன் ரூ. 3375. இந்தக் கடனை ஆடு வளர்க்கும் விவசாயிகள், முதல் 15 மாத முடிவில் 875 ரூபாயும், 23 மாத முடிவில் 1250 ரூபாயும், 31 மாத முடிவில் 1250 ரூபாயும் திருப்பிக்கொடுத்து கடனை அடைக்கிறார்கள். 25 பெட்டை ஆடு, ஒரு கிடா மந்தை வைத்



திருக்கும் விவசாயிக்கு ஆண்டுக்கு குறைந்தது 25 ஆட்டுக்குட்டிகளாவது. இறப்பு போக நிற்கும். 25 ஆட்டுக் குட்டிகள் விற்பனை கம்பளம், ஆட்டு எரு மூலமாகக் கிடைக்கும் வருமானம் மாதத்திற்கு 90 ரூபாய் வீதம் முதல் 15 மாதத்திற்கும், அடுத்த எட்டு மாதத்திற்கு மாதம் 150ரூபாய் வீதமும அதற்கடுத்த எட்டு மாதத்திற்கு மாதம் 165 ரூபாய் வீதமும் கிடைக்குமென்று கணக்கிடப்படுகிறது.

வெள்ளாடுகள்பால், இறைச்சி, தோல் அளிப்பதன் மூலம் வளர்ப்பவர்களின் பொருளாதாரத்தை உயர்த்த உதவுகின்றன. வெள்ளாடுகள் 14 மாதத்திற்குள் இருமுறை குட்டிகளைத் தருவதுடன் எட்டு ஆண்டுகளில் குறைந்தது ஏழு பெண் குட்டிகளை ஈனுவது பசு மாடு, எருமைகளால் இத்தனைப் பெண் கன்றுகளை அவைகளுடைய வாழ்நாளில் பெற்றுத் தர இயலாது.

குறிப்பாக, வெள்ளாடுகள் நல்ல பராமரிப்பின் மூலமும், அயல்நாட்டுப் பால் அளிக்கவல்ல வெள்ளாட்டு இனங்களான சானன் ( Saanen ) கிடாக்களைக் கொண்டு நம்நாட்டு ஆடுகளின் தரத்தை உயர்த்தினால், பால் பற்றாக்குறையை முக்கியமாக கிராமங்களில் வாழும் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வது மட்டுமின்றி, கிராமங்களில் பரவலாக நிலவியிருக்கும் புரதப் பற்றாக்குறையினை ஓரளவு வெள்ளாட்டுப்பால், இறைச்சி உற்பத்தியின் மூலம் தவிர்க்கக் கூடும்.

கிராமப் புறங்களில் வாழும் மக்களுக்குக் கிடைக்கும் வருமானயில் குறைந்தது 40 சதம் வெள்ளாடுகளை உபதொழிலாக வளர்ப்பதன் மூலம் கிடைக்கிறது என்று தெரிய வருகிறது. மேலும் வெள்ளாடு வளர்ப்பதினை முழு தொழிலாசக் கொண்டுள்ளவர்களுக்கு முக்கிய வருவாய் வெள்ளாடுகள் மூலம் கிடைப்பது மின்றி, செம்மறி ஆடு, மாடு, எருமை வளர்ப்பவர்களைக் காட்டிலும் வெள்ளாடு வளர்ப்பவர்களுக்கு அதிக வருவாய் கிடைக்கிறது என்று கணக்கிடப்படுகிறது.

வெள்ளாடு வளர்ப்பதனால் ஏற்படும் பொருளாதாரத்தை ஆராய்வோம். 25 பெண் ஆடுகள் ஒரு ஆண் ஆடு கொண்ட மந்தைக்கு ஆடுகளுக்கு மட்டும் 8000 ரூபாய் ஆகிறது. ஆடுகளுக்கு, குட்டி ஆடுகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவல்ல கச்சா வீடு, சாதனங்கள், மருந்துச் செலவு 2000 ரூபாய் ஆகும். ஆக மொத்தம் 25 பெண் ஆடுகள் ஒரு ஆண் ஆடு கொண்ட மந்தையின் மொத்தச் செலவு ரூ. 10,000 ஆகும்.


ஆடு வளர்ப்பவர்கள் ஆட்டு மந்தைக்காக ஆரம்பச் செலவு 10,000 ரூபாய் மற்றும் வட்டி அன்றாடச்செலவுக்கான கடனை ஐந்து வருடத்தில் திருப்பி அடைத்து விடுகிறார்கள்.

முதல் ஆண்டில் 2735 ரூபாயும், இரண்டாம் ஆண்டில் 2470 ரூபாயும், முன்றாம் ஆண்டில் 2215 ரூபாயும், நான்காம் ஆண்டில் 1960 ரூபாயும், ஐந்தாம் ஆண்டில் 1730 ரூபாயுமாக மொத்தக் கடனையும் திருப்பி அளித்து விடுகிறார்கள். 25 பெட்டை ஆடுகள் ஒரு ஆண் ஆடு கொண்ட வெள்ளாடு மந்தையை வளர்ப்பதன் மூலம், முதல் ஆண்டில் மாதத்திற்கு 504 ரூபாயும், இரண்டாம் ஆண்டில் மாதத்திற்கு 526 ரூபாயும், மூன்றாம் ஆண்டில் மாதத்திற்கு 547 ரூபாயும், நான்காம் ஆண்டில் மாதத்திற்கு 568 ரூபாயும், ஐந்தாம் ஆண்டில் மாதத்திற்கு 588 ரூபாயும் கிடைக்கிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

கிராமங்களில் வாழும் பெரும்பாலான மக்கள் குறிப்பாக வறுமைக்கோட்டிலிருக்கும் மக்கள் ஆடுகள் வளர்ப்பதன் மூலம் அவர்களுடைய வருவாய், ஆரோக்கிய நிலையை உயர்த்த வழிவகுக்க முடியும்.



# திரு.வி.க. கண்ட வாழ்க்கை நெறி



எஸ்.டி.காசிராஜன் ஐ.ஏ.எஸ்.,
இயக்குநர்,
சுற்றுலாத்துறை.

"இந்திய நாட்டின் வரலாறு, கங்கைக் கரையிலிருந்து அல்லாமல் காவிரிக் கரையிலிருந்து தொடங்கப்பட வேண்டும். அப்போதுதான் அது உண்மை வரலாறாக அமையும்'' என்றார் வரலாற்றுப் பேராசிரியர் வின்சென்ட் ஸ்மித். ஒரு நாட்டின் வரலாற்றை உள்ளபடி அறிந்து கொள்வதற்கு வரலாற்றுத் தொடக்கமும் பழம் நாகரிகமும் சிறப்பும் மலிந்த பகுதியிலிருந்து அமைதல் சிறப்புடையதென்று கருதல் போன்றே, பெருமக்கள் சிலரின் வாழ்வும் தொண்டும் உரிய வகையில் மாட்சிமைப்படுத்தப் பட வேண்டும். அத்தகைய பெருமக்களின் வாழ்க்கை நெறிகள், அடுத்தடுத்து வரும் தலைமுறையினருக்கு வழிகாட்டிகளாய்த் திகழ்கின்றன. எனவேதான், காலத்தை வென்று நின்றிடும் கருத்துக் கருவூலங்களை, அறிவுப் பெட்டகங்களை அளித்துப் போந்த பெருந்தகைகளின் ஆக்கமும் செயல்திறனும் உலகினரால் உயர்ந்தேத்தப்படுகின்றன.

அலெக்ஸாண்டரின்வீரம், நெப்போலியனின் தீரம், சேரன் செங்குட்டுவனின் ஆற்றல், அண்ணல் காந்தியடிகளின் தியாகம், கம்பரின் கவித்திறம், அரிஸ்டாட்டலின் அறிவுத்திறன் - என்றும் போற்றுதற்குரியன. இத்தகைய செயல் திறத்தைப் பாராட்டுவது போன்றே, ஒரு சில பெரியோர்களின் வாழ்க்கை நெறிகளும் மக்களின் உள்ளத்தில் நீங்காத இடம் பெற்றுவிடுகின்றன. அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கை நெறியும் தமிழ்த் தென்றல் திரு.வி. கலியாணசுந்தரனாரின்வாழ்க்கை நெறியும், கொள்கை அடிப்படையில் அமைந்தவை. தனி மனிதர்களின் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்த சீரிய சிந்தனைத் தெளிவில் மலர்ந்த கொள்கை நிலைகள், வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் பரவி, மனித சமுதாயம் ஆராய்ந்து அறியத்தக்கவைகளாய் அமைந்துவிட்டன.

திரு.வி.க.வின் வாழ்வு, அறவழியில் நின்றது; அன்பு ஆட்சி செலுத்தியது; எளிமையும் தூய்மையும் இணைந்து ஏற்றம் கண்டது. வாழ்க்கை என்பது பற்றியும் வாழ்க்கையின் வெற்றி, தோல்வி பற்றியும் பலர் பலவாறு கருத்துக் கொள்கின்றனர். திரு. வி.க. உண்மையான வாழ்க்கையின் குறிக்கோள் பற்றித் தெளிவு படுத்துகின்றார்.

''வாழ்க்கையில்வெற்றியும்பேசப் படுகிறது. தோல்வியும் பேசப்படுகிறது. வெற்றி வாழ்க்கை எது? தோல்வி வாழ்க்கை எது? பதவி, பொருள் முதலியவற்றில் படிப்படியே இவர்ந்தோர் வாழ்க்கை வெற்றியுடையதென்றும் மற்றவர் வாழ்க்கை தோல்வியுடையதென்றும் பொதுவாகக் கருதப்படுகின்றன. வாழ்க்கையின் வெற்றி, பதவி, பொருள் முதலியவற்றில் விளைவது உண்மையாயின், என்னுடைய வாழ்க்கை முழுத் தோல்வியுடையதென்று தயங்காது சொல்வேன். வாழ்க்கையில் வெற்றி என்பதும் தோல்வி என்பதும் எனக்கு வேறு விதமாகத் தோன்றுகின்றன. எவருடைய வாழ்க்கையில் அறிவு படிப்படியே வளர்ந்து, எவ்வுயிரும் பொதுவெனும் தெளிவு தோன்றித் தம் உயிரே பிற உயிருப் என்னும் உணர்வு பொங்கித் தொண்டு செய்யும் அன்புச் செல்வமாகிய அந்தண்மை அமைகிறதோ, அவர் வாழ்க்கை வெற்றியுடையதென்றும் மற்றவர் வாழ்க்கை தோல்வியுடையதென்றும் எனது கல்வி கேள்வி ஆராய்ச்சி அனுபவம் முதலியன எனக்கு உணர்த்துகின்றன''.

வாழ்க்கையின் வெற்றி, பொருளீட்டி வாழ்க்கை நலன்களைப் பெருக்கிக்கொள்வதில்நிலைபெறவில்லையென்பதும் தொண்டு வாழ்க்கை மேற்கொண்டு அந்தண்மை செறிந்த வகையில் பிறருக்காக வாழ்வதிலேயே உள்ளதென்பதும் தெளிவுபடுத்தியதுடன் வாழ்ந்தும் காட்டிய பெருமையுடையவர், திரு.வி.க.

தொண்டு வாழ்க்கையிலும் சிறந்த ஒன்று உலகில் உள்ளதா என்று வினவுகிறார். ''தொண்டே எனது வாழ்க்கை. எனது செல்வம்; எனது ஆருயிர்; எனது சமயம்; எல்லாம்; எல்லாம். விளைவு என்ன ஆயினும் ஆக. என் கடன் பணி செய்து கிடப்பதே''. என்ற உயரிய தத்துவத்தை உலகுக்கு அளித்தவர் திரு.வி.க. பிறப்பு வேண்டும்; அதுவும் அப்பிறப்பு பயன் கருதாத தொண்டிற்குப் பயன்படுதல் வேண்டும், சாதி, மதம், மொழி, நிறம், நாடு முதலியவற்றைக் கடந்து நிற்கும் பொதுமை அறத்திற்குரிய சன்மார்க்கத் தொண்டுசெய்து பயன்படவேண்டும். இத்தகைய தன்னலம் கருதாத தொண்டு வாழ்க்கையையே வாழ்நாள் முழுவதும் மேற்கொண்டு ஒழுகிய சிலர் திரு. வி.க.

திரு.வி.க. பொறுமையில் உறைந்து உறைந்து நின்றமையால் அவரது உள்ளம் சாந்தமாகியது. அவரது நெஞ்சம் தமிழில் ஊறி ஊறி வீரம் செறிந்ததாயிற்று.

திரு.வி.க.வின் வாழ்க்கைநெறி,

பிறப்புவழி உயர்வு தாழ்வு கருதும் பேதமையை வெறுத்தது; மக்களுடன் தீண்டாமை கொண்டொழுகும் சாதிவெறி பிடித்த மக்களைச் சாடியது; பெண்ணை அடிமைப்படுத்தும் இழிதன்மையை முற்றும் விலக்கியது.

தமிழ் மக்களின் துயரைக் கண்டு மனம் வாடியவர். திரு. வி.க. தமிழர்களின் உயர்விற்கும் பல்லாற்றானும் உழைத்திட்டார். தொழிலாளர்களின் துயர் துடைப்பதற்கு வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவிட்டார்.


**வாடிய பயிரைக்**
**கண்டபோ தெல்லாம்**
**வாடினேன் பசியினா**
**இளைத்தே**
**வீடுதோ றும்சென்**
**றிரந்து பசியறாத**
**வெற்றரைக் கண்டுளம்**
**பதைத்தேன்**

என்று மனம் வருந்திய சமரசம் கண்ட வள்ளலாரின் துன்பத்தை போன்றே, தொழிலாளர் துன்பங்களைக் கண்டு உளம் வருந்தினார். அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு அயராது உழைத்திட்டார். 'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் நேசித்த' பொதுமைப் பண்பாளர் திரு.வி.க.

தமிழ்த்தென்றல் தொல்லைகளிடையே ஆறுதல் அடையும் மருந்தாகக் கொள்கிறார், தமிழ் மொழியை! "தொல்லைநோய்க்கு மருந்துண்டோ? எனக்கொரு மருந்து துணைசெய்து வருகிறது. அஃதென்ன? அஃது எனது தாய்மொழி. அமிழ்தினும் இனிய தாய்மொழி. தொல்காப்பியனார், நக்கீரனார், நல்லந்துவனார், திருவள்ளுவனார், இளங்கோ, சாத்தனார், திருத்தக்கதேவர், மாணிக்கவாசகனார், நம்மாழ்வார், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதியார் முதலிய தமிழ் மருத்துவர் யான் நூலெழுதும் சிற்றறையிலும் வீற்றிருக்கின்றனர். அவர் முன்னே தொல்லை அணுகி எங்ஙனம் நோய் செய்யும்?''

தொல்லைதரு நிலைகள், திரு.வி.க. வை அணுகினால் அந்நோய்களுக்கு மருந்தளிக்கத் தமிழ்ச்சுவையை நாடினார். தமிழின் இனிமையை, தமிழின் உயர்வைஉன்னி உன்னி உள்ளம் மகிழ்ந்தார். பிணி தீர்க்கும் மாமருந்தாய்த் தமிழ்ச் சான்றோர்களின் அழியாப் புகழ் செறிந்த நூல்களைக் கருதினார்.

திரு.வி.க. கண்ட வாழ்க்கை நெறி, அவர் சார்ந்த சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் சிறு வேறு



பாடுகள் காரணமாகப் பொது நிலையான நாட்டுப்பற்றைக் கைவிடும் தன்மையைப் பெரிதும் சாடியதுடன் அத்தகைய சாதி, சமயப் பூசல்களைக் கைவிட்டுக் காலும் விட்டு தமிழ் உணர்வும் நாட்டுப்பற்றும் கொள்ளத் தூண்டியதாகும். சாதி வேற்றுமையைக் கடலில் அழுத்திவிட்டு எல்லோரும் இந்நாட்டு மக்கள், இந்தியர் என்ற உணர்ச்சியை வளர்த்திடப் பணியாற்றினார். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் முறையைக் கற்றுக்கொண்டு பொதுமை முயற்சியில் வெற்றி பெறக் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்தினார். காந்தியடிகளின் சிறந்தகுணங்கள் யாவினும் தலைசிறந்தது விட்டுக்கொடுக்கும் குணமே என்பதைச் சுட்டிக் காட்டி, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒற்றுமையை நாட்ட வேண்டுமென்றார். தமிழ் நாட்டின் ஒற்றுமைக்குக் கருவியொன்று உண்டென்றால் அது தமிழ்மொழிதான் என்று வலியுறுத்தினார். அனைவரும் தமிழர்கள் என்ற உணர்ச்சி பெறுவதுடன் தமிழ்மொழியை அண்ணல் காந்தியடிகளும் போற்றியுள்ளார் என்றும் சிறையிலிருக்கும் போது ஒரு மாதம் தமிழ் பயின்றவர் காந்தியடிகள் என்றும் பெருமையடைகின்றார் திரு.வி.க.

பொது வாழ்வில் ஈடுபட்டுப் பொதுத்தொண்டே மூச்சாகக் கருதி உழைத்த திரு.வி.க., வாழ்வில் அன்பையும் அறத்தையும் கவசங்களாகக் கொண்டார்.

''தீங்கெண்ணாதே தீங்கெண்ணாதே
தீமையைத் தீமையால் தீர்க்க எண்ணாதே
தீமையை அன்பால் தீர்க்க விரைக,
பகைவர் தூற்றலைப் பந்தி வேகாதே
பகைமை இருளில் அன்பொளி ஏற்றுக'
(''புதுமைவேட்டல்)''

## பொன் மொழிகள்

''பெண்மையினின்று தாய்மையும், தாய்மையினின்றும் இனிமையும் மலர்கின்றன.''

''அன்புக்கு உறையுள் பெண்மை. தனித்த ஆண்மையில் அன்பு சுவராது.''

''கலப்புமணம் இயற்கையின்பாற்பட்டது. அது பலதிற வேற்றுமைகளைக் களையவல்லது.''

''தாய்மொழிவழிக் கல்வி பயில்வது இயற்கைக்கு அரண் செய்வதாகும். நாட்டுக்கலைகள் நாட்டின் உயிர். இதனை அழியுமாறு இடந்தரும் நாடு இயற்கை இன்பம் நுகர்தல் அரிது.''

—திரு.வி.க.

திரு.வி.க. கண்ட வாழ்க்கை நெறி இதுவாகும். பகைமை இருளில் அன்பு எனும் ஒளியை ஏற்றினால், பகைமை நீங்குவதுடன் மனித சமுதாய வளர்ச்சியும் நிகழும் என்ற தத்துவம் கொண்டவர் ,திரு.வி.க. 'புதுமை வேட்டலில்' அழகுற மொழிந்த திரு.வி.க.வின் வாழ்க்கை நெறியினை, இன்றைய தமிழ் மாணாக்கர்கள் உன்னி உணர்ந்திட்டு, வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

''பிறர்க்கென வாழ்பிறவிப்
பேறுடைமை வாழ்க்கை;
அறத்து மயமாம்; அடை'',

என்று இயம்பும் திரு.வி.க., அறவாழ்க்கையை அறிவுறுத்துகின்றார். 'இருளில் ஒளி' என்ற நூலில்

''உற்றுழி என்பும் உதவும்
உளமுடைய
நற்றவ வாழ்க்கையை நாடு!''

என்று அறிவுறுத்தி,

''அன்பிலார் எல்லாம்
தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு''

என்ற குறட்பாவின் வாழ்க்கை நெறியினை வலியுறுத்துகின்றார் திரு.வி.க.

சிறு குடியில் பிறந்து, செல்வ வளமை குன்றிய குடும்பச் சூழலில் வளர்ந்த திரு.வி.க., வாழ்க்கையின் இன்றியமையாத் தேவைகளைப் பெற்றால் போதுமென்ற கருத்துடையவர். பொருள் வளமை கொழிக்கும் வாழ்வை விரும்பினாரில்லை; அது போன்றே வறுமை வாட்டும் வாழ்வை வெறுத்தார். அளவிற்கு அதிகமான செல்வம் ஒருபக்கம் குவிந்திருப்பதும் மறுபுறம் வறுமையே வாழ்வாகக் கொள்வதும் தவறு என்றார். இத்தகைய நிலையில் ஏழை, எளிய மக்களிடம் ஒழுக்கம், வேதாந்தம் பேசுவதும், பயனில்லாத ஒன்றாகக் கருதினார். பொருளாதாரச் வளர்ச்சி எய்தினால் அன்றி, சமுதாய முன்னேற்றம் என்பது வெறும் கூப்பாடாக முடியுமெனச் செப்பினார். கொள்ளையும் கொல்லலும் பொய்மையும் சமுதாயத்தில் காணக்கிடப்பதைக் கண்டு பொங்கினால் மட்டும் போதாது; அவற்றுக்கான மூலகாரணத்தைத் தெளிவாக உணர்ந்து அதைக் களைய முற்பட வேண்டுமென்பதும் பின்னர் சீலம் தழைக்கும், அருளறம் ஒழுக்கம் செழிக்கும் என்பதும் திரு.வி.க., கண்ட வாழ்க்கை நெறியாம். செல்வச் செருக்கு, ஒழுக்கம் கெடுக்கும்; செல்வமற்ற வறுமையும் ஒழுக்கம் கெடுக்கும் என்பதைப் பல்வாறு இடித்துரைத்த பெருமகனார், திரு.வி.க. ஆகவேதான்,

வறுமையும் அற்ற, வளமும் மிகைப்படாத வாழ்க்கைவேண்டுமென்று விழைகின்றார்;


''வறுமை செல்வம்
இரண்டும் அற்ற
வாழ்க்கை தேவை;
வாழ்த்துக அதனை!''

என்றுரைக்கின்றார்.

தொழிலாளர் இயக்கத்தில் பங்குகொண்டு கதவடைப்பு, வேலை நிறுத்தம் முதலிய செயல்களில் ஈடுபட்டபோதிலும் புரட்சிச் செய்கை அறவழியில் அமைந்திடல் வேண்டும் என்ற அசையாக் கொள்கை உடையவர். தான் நடத்திய தொழிற்சங்க நடவடிக்கைகள் அனைத்திலும் இந்த அறவழியைக் கடைப்பிடித்தே வந்ததுடன், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் வன்முறையில் சிறிதும் தலைப்படாதவாறு வழிநடத்திச் சென்றார்.

''அறிவுப் புரட்சி
அறவழிச் செய்க
தரும நெறியே
கருமம் ஆற்றுக
வாணிப வாழ்க்கையின்
கோணல் நீங்கும்
பொருந்திய போக்கில்
திருந்தும் உலகம்
நல்ல வாழ்க்கையை
நல்கல் உறுதி''.

அறவழி பொருந்திய வாழ்க்கை நல்வாழ்வை நல்கிடுவது உறுதி.



தமிழ்க் கலை யெல்லாம் வீரம், காதல். இவை யிரண்டும் இல்லாதது கலை யன்று. இரண்டும் தேவை. இரண்டும் வேறுபட்டனவல்ல.

என்றுரைத்த கொள்கைக் கோமான் வாழ்வின் குறிக்கோள் எதுவாக இருக்க வேண்டுமென்றும் குறிப்பிடுகிறார்;

''அருளறம் பொலியும்
அந்நல் வாழ்க்கையில்
அருளற வாழ்க்கையில்
பொருளறம் பூக்கும்
சாந்தம் சிந்தை ஏந்திநிற்கும்
தேவை அளவில் மேவும்
நெஞ்சம்
எந்த உயிரையும் சொந்த
உயிராய்க்
கருதும் வாழ்க்கை பெருகும்
பெருகும்;
இதுவே வாழ்க்கைக்
குறிக்கோள் இதுவே!

''நல்லநல்ல எண்ணங்கள்
நல்லுலகைத் தோற்றுவிக்
கும்
அல்லன் வேறாம் அறி.''

''ஒருவனது தீமை
உறுமளவில் நில்லா;
பெருகி உலகரிக்கும் பேய்''.

''தேவைக்கு மேல் நினையாச்
சித்தம் செகமானால்
யாவும் ஒழுங்குபடும் அன்று''

நல்ல எண்ணங்கள் மலரும் சோலையாக உள்ளப் பூங்கா அமைய வேண்டுமென்பதையும் தேவைகளைப் பெருக்கிக் கொள்ளாத மனநிறைவான வாழ்வு மேற்கொள்ளும் நெஞ்சுறுதிபெற்றிட வேண்டுமென்பதையும் வாழ்க்கை நெறியாகக் கொண்டிருந்தார், திரு.வி.க.

''புரட்சியிலே புதுஉலகப்
புரட்சியிலே புகுமின்
புரட்சியிலே பொரொழிக்கும்
புரட்சியிலே புகுமின்
புரட்சியிலே புரட்சிஅறப்
புரட்சியிலே புகுமின்
புனிதப்புது உலகமைக்கும்
புரட்சியிலே புகுமின்


போர் ஒழிக்கும் அமைதிப் புரட்சியை நாடி, நாட்டின் நலன் காத்திடுமாறு அழைக்கிறார், திரு வி.க.

புரட்சியெனில் எரிமலையென்று கருதும் உலகில், புரட்சி ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழ வேண்டுமென்கிறார். ''கொலைப் புரட்சி, அலைப் புரட்சி, கொதிப் புரட்சி வேண்டாம்; குத்துவெட்டு கொள்ளை ரத்தக் கொடும் புரட்சி வேண்டாம்; புலப்புரட்சி, அகப் புரட்சி, புதுப் புரட்சி வேண்டும்; பொதுமை அறப் புரட்சி எங்கும் புகுந்திடுதல் வேண்டும்''. புரட்சி என்ற சொல்லை வைத்து, சமுதாயத்தில் மலர்ந்திட விழையும் மாசறு அறத்தை வலியுறுத்திகின்றார் திரு.வி.க.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் , உரிமை வேட்கை முகிழ்த்து, இந்தியாவெங்கணும் பெருந்தலைவர்கள் தியாக வேள்வியில் குதித்திருந்த நேரத்தில்-தமிழகத்தில்அரசியல், சமுதாயம், தொழிலாளர் இயக்கம் ஆகிய துறைகளில் இரண்டறக் கலந்து துறவற வாழ்க்கை மேற்கொண்டிருந்த தமிழ் முனிவர்திரு.வி.க., வாழ்க்கையில் அறம் பிறழாது, ஒழுக்கம் தவறாது நற்பண்புகளை ஓம்பிப் போற்றி வந்தார். அவர் ஒரு தனி மனிதராக இயங்காது, அவரே ஒரு நிறுவனமாக இயங்கி வந்ததுடன், நாற்பது ஆண்டுகளுக்கு மேல் தமிழகத்தின் வரலாற்றில் நிலைத்துவிட்ட அரும்பெரும் செயல்களில் தன்னை இணைத்துக் கொண்டிருந்தார். கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் அனைத்துத் தலைவர்களும் அவரைப் போற்றினர். இந்திய நாட்டின் வரலாற்றில் இடம் பெற்ற சுதந்தரத் தலைவர்கள் அனைவருடனும் பழகிய பெருமையும், கொண்ட கொள்கை வழிநின்று இறுதிவரை போராடிய திறனும் அவருக்குண்டு. பொதுப் பணிகளில் பல சமயங்களில் புயலாகக் காட்சி தந்த இத்தமிழ் ஆசானின் வாழ்க்கை, அன்பும் அருளும் பண்பும் பாசமும் மிக்க உயரிய தத்துவநிலையில் அமைந்திட்டதாகும். பிறரிடம் உதவியை எதிர்பார்த்து வாழாத அச்சமற்ற உள்ள உரம் பெற்றிருந்தார். அன்பில் தோயும் சிந்தையுடையவர்; அதிகாரத்திற்கும் ஆணவத்திற்கும் அடிபணியாத திட்பம் உடையவர். எளிமையில் திளைத்தார்; செல்வத்தின் செழுமையை வெறுத்தார்.

''உரிமை என் பிறவியின் இயல்பு. உரிமை எனது பிறவிக் கூறாதலின் அது என்னை அடிமைக் குழியில் வீழாதவாறு காத்தே வருகிறது. அடக்கம் எனது உடைமை. அடிமை எனது பகைமை. உடன் பிறந்தவரிடத்தும் நான் அடிமையாயிருக்க ஒருப்படேன். அவர்க்கு உயிரையும் நல்கும் அன்பார்ந்த தொண்டாற்றுவதில் எனக்கு ஆர்வம் உண்டு''.

உரிமை வேட்கைமிக்க அவரது வாழ்வில் பெரிதும் கவர்ந்த தொழிலாளர் இயக்கத்தை நடாத்திய போதும் தன்னலம் கருதாத் தொண்டே மேலோங்கி நின்றது அண்ணல் காந்தியடிகளின் அற. வாழ்வைப் பேணி, அனைத்துக் கட்சியினரின் போற்றுதலையும் பெற்றுப் பொது மனிதராகத் திகழ்ந்தவர். தொழிலாளர்கள் மட்டுமன்றிப் பல திறத்து மக்களையும் ஒன்றுபடுத்த உழைத்திட்ட ஏற்றம் பெற்றவராக விளங்கியவர். சமயப் பொதுமை



காண விழைந்த இராமலிங்க அடிகள் போல் சமயங்கள் பலவற்றிலும் காணக்கிட்டும் அடிப்படை அறம் ஒன்றெனக் கண்ட சன்மார்க்க நெறியைப் பரப்பிட்ட பண்பாளராகமிளிர்ந்தவர். எக்காலத்திற்கும் பொருந்தும் அறிவுரைகளை வகுத்துத்தந்த வள்ளுவரைப் போல், உலகம் உய்யத்தக்க வாழ்க்கை நெறிகளை வாழ்ந்துகாட்டி மெய்ப்பித்த பெருமைமிக்கவராக இருந்தவர்.

சொல்லும் செயலும் ஒன்றிக் குறிக்கோளுடன் வாழ்ந்து ,வாழ்வைச் செம்மையுறச் செலவிட்ட செம்மல், இளைஞர்களுக்கு ஒப்பற்ற அறிவுரை நல்கிச் சென்றார். ''தொண்டு ஆற்றுக. உடலையும் போற்றுக ''என்றார். பகலிரவு பாராது உழைத்தமையால் கண்பார்வை இழந்த கொடுமைக்கு ஆளான திரு.வி.க., உடலை ஓம்பவேண்டிய இன்றியமையாத் தன்மையை இளைஞர்கட்கு வலியுறுத்தியுள்ளார். ஒரு சமுதாயத்தின் எதிர்கால ஏற்றம் இளைஞர்கள் வசம் உள்ளதென்ற கருத்தைக் கொண்டிருந்த திரு.வி.க. ,மாணாக்கர்களிடம் அளவிடமுடியாத அன்பும் பற்றும் பாசமும் வைத்திருந்தார். அவர்களுக்குத் தாய்மொழிப் பற்று மிகுந்திடவும் சீரிய வாழ்க்கை முறைகள் அமைந்திடவும் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்.

திரு.வி.க. கண்ட வாழ்க்கை நெறி அண்ணல் காந்தியடிகளின் அறவாழ்க்கையின் அடிப்படையில் அமைந்தது; ஆன்றோரும் சான்றோரும் சொல்லிப் போந்த அறிவுரைகளின் சாரத்தின்செயல் வடிவமாகத் திகழ்ந்தது. தமிழ் முனிவர் கண்ட வாழ்க்கை நெறியின் குறிக்கோளை அவரே கூறுகின்றார்; கேண்மின்!

''அருகன் அருளறம்
பொருளறம் வேண்டும்
ஆக்கத் தொழிலில்
ஊக்கம் வேண்டும்
இறப்பையும் பிறப்பையும்
மறத்தல் வேண்டும்
ஈரம் சுரக்கும்
வீரம் வேண்டும்
உலகொரு குலமெனும்
உணர்வு வேண்டும்
ஊனக் கொலை புலை
உறங்கல் வேண்டும்
என்றும்பணிநினைந்
தியற்றல் வேண்டும்
ஏக பொறுமையில்
நேசம் வேண்டும்
ஐயம் அறியா
ஆட்சி வேண்டும்
ஒப்புரவுலகம்
உயர்தல்வேண்டும்
ஓதாதுணர்த்தும்
ஓவியம் வேண்டும்
ஔவை உலவும்
அகிலம் வேண்டும்.
(''பொருளும் அறமும்'')

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களின் வாழ்க்கை நெறி, உலகளாவிய மனித சமய நெறியாகும். உலகம் அன்பில் தழைத்து உலக மக்கள் ஒரு குலமாக வாழ்ந்து உயர வேண்டும் என்னும் இமயம் போன்ற கொள்கை நெறியாகும்.

''வாழ்க உலகம் அன்பினிலே
வளர்க என்றும் இன்பினிலே''

தமிழ் முனிவரின் இத்தகைய உலகாய வாழ்க்கை நெறி வையத்தில் தழைத்திடுக! மனித இனம் ஏற்றமுறுக!

நன்றி:

**சென்னை வானொலி நிலையம்.**





# திரு.வி.க.வும் பெண்ணுரிமையும்

பேராசிரியர்
பு.பா. இராஜ இராஜேஸ்வரி

"உலகமே துயரமாக இருந்தது. பூந்தோட்டம் குரூரமாகத் தோன்றிற்று. மனிதனோ துறவியாகப் பெருமூச்சு விட்டான். பெண் புன்முறுவல் செய்யும் வரை'' என்று கூறுகிறான் காம்பெல் என்ற அறிஞன். இதையே வேறுவிதமாகச் சொல்கிறான் ஜாக்சன். ''சுவர்க்கத்தில் என் மனைவியைச் சந்திக்காவிட்டால் சுவர்க்கம் எனக்குச் சுவர்க்கமாய் இராது'' என்ற கூறும் அவனது கருத்து பெண்மையின் உயர்வுக்கு அணி திரட்டுகின்றது.

இதற்குக் காரணங்களாக அமையும்கருத்துக்களும் சிறப்புடையன. ''துயரங்களிலே அமிழ்ந்து கிடக்கும் ஆணின் மனம் ஒரு பெண்ணைக் கண்டதும் சூரியனைக் கண்ட பனிபோல் விலகி விடுகிறது'' என்று 'கேய்' என்ற அறிஞன் கூறுகிறான். ''ஆண் மகனுடைய உயர்ந்த அம்சங்களை எல்லாம் தட்டி எழுப்பவும் அவைகளைக் கவரக்கூடிய ஆற்றல் வாய்ந்தவள் உண்மையான பெண் என்று பெண்மைக்கு இலக்கணம் வகுக்கிறார் தத்துவஞானிடால்ஸ்டாய். ''ஒரு மனைவியினுடைய அன்பான பார்வையிலே பசுமையான தோட்டங்களைப் பார்க்கலாம். அவளுடைய தாய்மையான உள்ளத்திலே ஞான நூல்களை எல்லாம் காணலாம்'' என்று சிந்தனையாளன் 'கௌவி' பெண்மையைப் பாராட்டுகிறார்.

நம் நாட்டுக் கவிஞர் தாகூரும், ''பெண்கள் இயல்பிலேயே இனிமை நிரம்பியவர்கள். இந்தச் சிறப்பினால்தான் இல்வாழ்க்கை பயனடைகிறது'' பெண்ணின் இனிமையை இனிமையாகக்கூறுகிறார். பெண்ணை ''ஆணின் மேம்பாதியாகக்'' குறிப்பார் காந்தியடிகளார். பாரதியும்

''பெண்மை வாழ்கென்று கூத்
திடு வோமடா!
பெண்மை வெல்கென்று கூத்திடு
வோமடா''

என்று களி கொண்டாடுகிறார். அவர்வழி வந்த பாவேந்தர் பாரதிதாசனும், 'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்று பெண்மையின் சிறப்பைச் சுருங்கக் கூறி விளங்க வைக்கிறார். ''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல, மாதவம் செய்திட வேண்டுமம்மா'' என்று பெண் பிறவியின் உயர்வைச் சுட்டிக் காட்டுகிறார் கவிமணி அவர்கள். இவர்கள் வழி வந்த தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களும் ''தன் மனைவியே தனக்குத் திருக்குறளாக விளங்கினாள்'' என்று பெண்மையின் புகழ் பாடுகிறார்.

இவ்வாறு பெண்மையைப் போற்றியவர்களில் திரு.வி.க. அவர்கள் தலையாய இடத்தைப் பெறுகிறார். அவர் நா பெண்மையின் சிறப்பையே வாழ்த்தியது. கைகள் பெண்மையின் இறைமையைப் பக்திப் பரவசத்தோடு வணங்கின; கண்கள் பெண்மையைத் தாய்மைக் கனிவோடு கண்டு களித்தன; தலையோ பெண்மையின் உருவிற்கு வணங்கியது; நெஞ்சமோ பெண்ணின் அடிமை நிலைகண்டு துடித்தது; மூளையோ பெண்மையின் சிறப்பை உயர்த்த வழி கண்டது.

''அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, ஒப்பரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்றே பெண்மை'' என்று பெண்மைக்கே அவர் இலக்கணம் வகுக்கிறார். ''நீல வானத்தில் திங்கள் போலவும், பசுங்கொடியில் மயில் போலவும், விலங்குகளில் மான்போலவும் பெண்மையின் அழகு உலகில் பொலிகிறது'' என்கிறார்.

உலகம் பெண்மக்களாலும் ஆண்மக்களாலும் ஆக்கப்பட்டிருக்கிறது. உயர்திணை, அஃறிணை என்னும் இரு உலகிலும் பெண்பால் ஆண்பால் உண்டு. பெண்ணின்றி ஆணுமில்லை, ஆணின்றி பெண்ணுமில்லை. ஓரினத்திற்கு மற்றோர் இனம் இன்றியமையாததாக இருக்கிறது. ஆனால் ஐந்தறிவுடைய உயிர்களில் காணப்படும் பெண்ணுரிமை ஆறறிவுடைய மக்களிடத்தில் இல்லை. புல், செடி, கொடி முதலிய தாவரங்களும், ஊர்வன, நடப்பன, பறப்பன, நீர்வாழ்வன முதலியனவும் தங்கள் பெண்ணினத்தைத் தாழ்வாகக் கருதாத போது, எல்லாப் பிறவிகளிலும் உயர்ந்தாகக் காணப்படுகின்ற மக்கட் பிறவியில் மட்டும் இவ்வுயர்வு தாழ்வுநிலை ஏற்படக் காரணம் என்ன என்று வேதனைப்படுகிறார் திரு.வி.க. அவர்கள் (தமிழ்ச்சோலை-பக்கம்.68).

நாட்டின் இப்போதைய சிறுமைக்கே காரணங்களாகத் திரு.வி.க. அவர்கள் பின்வருவன வற்றைக் கருதுவார்: (1) பெண்ணுரிமை கடிந்தது. (2) பிறப்பால் வகுப்பு வகுத்தது (3) மக்களுள் தீண்டாமை கொண்டது. இவற்றுள் பெண்ணுரிமை கடிந்ததையே தலையாய காரணமாக திரு.வி.க. அவர்கள் கருதுவது குறிப்பிடத்தகுந்தது. பெண்நாட்டின் ஒரு பாதியாதலின் அவள் உரிமை கெட்டால் நாடு எங்ஙனம் நல்வாழ்வு பெறுதல் கூடும்? மனிதனது ஒரு பாதி வாயுவால் இயக்கமின்றி வீழ்ந்தால் அவன் எதற்குப் பயன்படுவன்? பெண்ணுரிமை இல்லா நாடு பக்கவாயு உடையானை ஒத்தது என்று சொல்லத் தேவையில்லை என்று திரு.வி.க. அவர்கள் பெண்ணினை ஒரு நாட்டின் சரிபாதியாகக் குறிப்பிடுவது பெண்மையின் பெருமையைப் புலப்படுத்தும்.

''கண்கள் இரண்டினில் ஒன்றைக்
குத்தி
காட்சி கெடுத்திடலாமோ''

என்று பாரதியும் இக்கருத்தை இன்னொரு நிலையில் வலியுறுத்துகிறார். ஒரு கண் குத்தி அழிக்கப்படும் போது, இன்னொரு கண்ணும் தானே அழியும் என்ற கருத்தைப் பெற வைக்கிறார்.

பெண்கள் அடிமையானதற்கே காரணம் ஆண்கள்தான் என்பதைத் திரு.வி.க. அவர்கள் ஆணித்தரமாகக் கண்டிக்கிறார். தொடக்கக் காலத்தில் பெண்கள் ஆண்கள் பெற்றிருந்த அத்தனை உரிமைகளையும்பெற்றிருந்தனர். நாளடைவில் ஆண்மக்கள் தங்கள் நலங்கருதிப் பெண்மக்களுக்கு அறியாமை விலங்கிட்டுச் சிறைப்படுத்தினர் என்று ஆணுலகின் குறையைச் சுட்டிக் காட்டுகிறார். (தமிழ்ச்சோலை-பக்கம்.68) முதலாளிகள் தொழிலாளிகளை அடக்கி ஆள்வதுபோல் ஆண்மக்கள் பெண்மக்களை அடக்கி ஆள்கிறார்கள்.

பெண்ணடிமைக்கு இந்து மதமும் ஒரு காரணம் எனத் திரு.வி.க. அவர்கள் வலியுறுத்துகிறார். 'முருகன் அல்லது அழகு' என்னும் அரியதொரு நூலைப் படைத்த திரு.வி.க.வின் நடுவு நிலைமை நெஞ்சம் இந்துமதத்தின் குறைகளைச் சுட்டிக் காட்டத் தவறவில்லை. ''பார்வதி பரமசிவன், இலட்சுமி நாராயணன், வள்ளிமணாளன், சீதாராமன், இராதாகிருஷ்ணன் என்று கடவுளை வாழ்த்தும் இந்து ஆண்மக்கள் தங்கள் பெண் மக்களை ஏனோ படுகுழியில் தள்ளிப் பாழ்படுத்துகிறார்கள்'' (தமிழ்ச்சோலை-பக்கம்.69) என்று இந்து மதத்தின் தன்மையையும், இம்மதத்தின் பெயரால் இந்துக்கள் பெண்மக்களை ஆடுமாடுகளாக்கிய நிலையையும் அஞ்சாமையுடன் எடுத்துக்கூறுகிறார். ''தெய்வ வடிவாகவும் அன்புக்கு நிலைக்களனாகவும், கடவுளால் படைக்கப்பட்ட பெண்ணைக் கோயிலுக்கென உரிமைப்படுத்தி அவளை ஆடச் செய்தும் பாடச் செய்தும் காமுறுவதா கடவுள் வழிபாடு'' என்று பெண்ணை இழிவு செய்யும் இந்துமதத்தைப்பழிக்கிறார்.

ஆண் பெண்ணை வேலைக்காரியாக நினைக்கிறான், காமக்கிழத்தியாக நினைக்கிறான். சடப்பொருளாக நினைக்கிறான். பெண்களுக்குப் பிறந்தகத்தில் அண்ணன் தம்பியரால் சிறுமை; புகுந்த அகத்தில் புருஷனால் சிறுமை; பெண்மகள் படுந்துன்பம் கண்டுதான் பெண்ணாய்ப் பிறப்பதிலும் மண்ணாய்ப் பிறக்கலாம் என்னும் நோகு நிலை வந்தது'' என்று நெஞ்சம் வெந்து துடிக்கிறார் திரு.வி.க. அவர்கள். பெண் இனத்தைக் கட்டுப்படுத்தி அடக்கி ஆள்வதற்கு ஆண்கள் கையாண்ட தந்திரம் பெண் கல்வி மறுப்பாகும் என்று அடிப்படைக் காரணம் காட்டுகிறார். (தமிழ்ச்சோலை-பக்கம் 69)

பெண்ணடிமையின் ஒரு கூறு ஆண்களின் பரத்தமைக் குணம். ஆணுடல் தாங்கிய ஒரே காரணத்தால ஒருவன் ஒருத்தியோடு வாழாது பல மகளிரொடு வாழ்கிறான். பெண்ணுடல் தாங்கிய ஒரே காரணத்தால் ஒருத்தி ஒருவனுடன் வாழ வேண்டிய நிலல இருக்கிறது. பெண்கற்பு மட்டுமே வற்புறுத்தப்படுகிறது. தன் தாய், தன் மனைவி, தன் மகள், தன் உடன்பிறந்தவள் கற்புடையவளாக இருக்கவேண்டும் என்று நினைக்கும் ஆடவர் சமுதாயம், மற்றப் பெண்களை மட்டும் பரத்தையராக, வேசையராகக் காமக் கண்ணோட்டத்தோடு நோக்கும் நிலை இன்றும் காணப்படுகிறது. இந்நிலையைத்திரு.வி.க. அவர்கள், ''சிற்சில இடங்களில் சட்டங்கள் செய்யச் சிலர் முயல்கிறார். சட்டம் செய்யும் ஆண்மகன் எவ்வளவு தூரம் அச்சட்டத்துக்குக் கட்டுப்படுகிறான் என்பது ஆராயற்பாற்று. ஒருபக்கம் பெண்ணுடன் விபசாரம்; மற்றொருபக்கம் விபசாரக் சட்டம்; இன்லொரு பக்கம் தண்டனை; இவைகளை ஆணினத்தார் கொடுமை எனக் கூறாது வேறென் கூறுவது?'' (தமிழ்ச்சோலை-பக்கம் 71) என்று ஆண்களின் நிலையைக் கூறுகிறார்.

வேசையர்கள் என்றே ஓரினம் ஆடவர்களால் படைக்கப்பட்டதை ஆசிரியர் வெறுத்துக் கூறுகின்றார். ''கடவுள் தொண்டுக்கென அர்ப்பணஞ் செய்யப்பட்ட பெண்ணன்பர்களைக் கெடுத்தது யார்? அக்கடவுளைப் பூசிக்கும் ஆண்மகன்; அக்கடவுள் அறம் வளர்க்கப் புகுந்த தர்மகர்த்தன்; அக்கடவுளை வழிபடச் செல்லும் அடியவன்; இவ்வாண்மக்கள் கொடுமையால் தேவடியார்களாக இருந்தவர்கள் வேசையர்களாக மாறிவிட்டார்கள்'' (தமிழ்ச்சோலை - பக்கம் 71) என்று பெண்கள் வேசையர்கள் ஆனதன் காரணத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.

ஆண்கள் சமுதாயம் பெண்களுக்கு இழைக்கும் கொடுமைகளில் ஒன்று கைம்மைக்கொடுமை. கைம் பெண்களின் நிலையை நினைக்கும்போது திரு.வி.க.வின் உள்ளம் நெக்குருகுகிறது; உள்ளம் குழைகிறது; ''இப்பாழும் நாட்டில் ஏன் பிறந்தோம் என்று நினைந்து, நினைந்து இரங்குதலும் நேர்கிறது.'' (பெண்ணின் பெருமை-291) என்று கைம்மை



பம்மல் சம்பந்தனாருடன் திரு.வி.க.

நிலையில் பெண்மைக்கு இழைக்கப்படும் அநீதிகண்டு இரங்குகிறது. திருமணம் செய்தும் கன்னி வாழ்வு நடாத்தும் பெண் தன் கணவனை இழக்கப் பெற்றால் மீண்டும் மணம் புரிந்து கொள்ளலாம் என்கிறார். நாயகனுடன் கூடிக் குலாவியபிறகு மறுமணம் தேவையில்லை. அவர்களுக்கு அறச்சாலை, கல்விச்சாலை, தொழிற்சாலைகள் அமைக்கப்படல் வேண்டும் என்கிறார். பெண் விரும்பினால் மறுமணம் செய்து கொள்ளலாம் என்று விதவைத் திருமணத்திற்கு வழிவகுக்கிறார்.

குழந்தை மணக் கொடுமையை எதிர்க்கும் திரு.வி.க. அவர்கள் குழந்தை மணத்திற்குத் துணையாக நிற்கும் இந்துமதத்தை, குழந்தைக் கைம்பெண்களைத் தோற்றுவிக்கும் இந்துமதத்தைக் கொலைமதம் என்று பழிக்கிறார் (பெண்ணின் பெருமை பக்கம் 299) அவர் மறுமணத்தையும் வற்புறுத்துகிறார் (பெண்ணின் பெருமை-பக்கம் 381).

சமூகச் சீர்திருத்தவாதியான திரு.வி.க. அவர்கள் காதல் திருமணம்தான் - கலப்புத் திருமணம் தான் சாதிமத வேற்றுமையைக் களைய உதவும். சமூகத்தைச் சீர்திருத்த உதவும்என்று நம்புகிறார் அதனால்தான் பகைவராயினும் காதலுக்காக முடியையே துறந்த வேல்ஸ் இளவரசரை ''முடியா காதலா சீர்திருத்தமா'' என்ற தம் நூலில் வாழ்த்துகிறார். ''பண்டைக் காலத்தில் காதல் மணம் நிகழ்ந்து வந்தமையால் தீயொழுக்கமும் பெருகவில்லை; பெண்ணுலகுக்குஞ் சிறுமை நேரவில்லை. காதலின்பம் மக்கள் வாழ்வைத் தூய்மைப்படுத்தி வந்தது'' என்று காதலுக்குப் பல்லாண்டு பாடுகிறார். (தமிழ்ச்சோலை-பக்கம் 109).

பெண்ணின் புகழ்பாடும்'பெண்ணின் பெருமை' என்னும் சீரிய நூலை திரு.வி.க.வைத் தவிர வேறு யாரும் இவ்வளவு சிறப்பாக எழுதியிருக்க முடியாது. ஆறே ஆண்டுகள் தன் இல்லத் துணைவி கமலா அம்மையாருடன் வாழ்ந்த இவர், மனைவி இறந்த பின்னும் மறுமணம் இல்லாமலே வாழ்நாளைக் கழித்த இவர் பெண்ணின் பெருமை உணர்ந்த அளவிற்கு, பெண்ணின் சிறப்பைப் போற்றிய அளவிற்கு வேறு யாரும் போற்றியிருக்க முடியாது. பெண்மையைத் தாய்மையாய் இறைமையாய்க் கண்டவர் அவர். பெண்மைக்கள் உள்ள நுட்பங்களையெல்லாம் இவ்வுலகம் உணர்ந்து போற்ற வேண்டும் என்பதே திரு.வி.க. வின் உட்கிடக்கையாகும்.

பெண்மையின் பெருமையையும் உரிமையையும் சீர்திருத்தச் செம்மல் தந்தை பெரியார் எடுத்துக் காட்டினார். தேசியக்கவி பாரதியார் தொடுத்துப் பாடினார்; தமிழ்த்தென்றல் திரு.வி.க அவர்கள் அடிக்கோடிட்டுக் காட்டினார். ஆயினும் இம்மூவரும் கண்ட கனவு நனவானதா என்பது இன்றும் வினாக்குறியாகவே இருக்கிறது. பெண்ணின் திருமணத்தின்போது கேட்கப்படும் வரதட்சிணையும் அதை முற்றிலும் தராத நிலையில் அவளை எரிக்கும் கொடுமையும் இன்னும் உலகில் இருக்கிறது. வாய்ச் சொல்லில் வீரர்கள் பெண்ணின் உரிமையை வானளாவப் பேசுகின்றார்கள். ஆனால் ; வீட்டில் பெண்களை அடிமைகளாகவே நடத்துகின்றனர்.

பெண் முதுகெலும்பு இல்லாமலிருப்பதால்தான் இன்னமும் வெயிலில் எறிந்த புழுவாக இருக்கிறாள்; அவள் பேசா மடந்தையாக இருப்பதால்தான் வீசி எறிந்த பூமாலையாக இருக்கிறாள்; அவள் தன் உரிமையை இன்னும் கேட்காமல் இருப்பதால் தான் வாயிற்கடையில் கிடக்கும் மிதியடியாக இருக்கிறாள்; பெண் வீறு கொண்டு எழுந்தால் வீடு விளக்கமுறும், நாடு நலமடையும், உலகமும் உயர்வடையும்.

## 16-ஆம் பக்கத் தொடர்ச்சி

நாட்டை அலைக்கழித்து வரும் சாதி சமயப் பூசல்கள் அறவே ஒழிக்கப்பட வேண்டும்; தனியொருவர்க்கு ஒரு நீதி எனும் நிலை அகற்றப்பட வேண்டும்; எல்லார்க்கும் எல்லாமும் எனும் பொதுமை மலர வேண்டும் என்பதை

'சாதியெனும் தொழுநோயை ஒழித்தல்
வேண்டும்
சமரசமே மண்ணிடை நிலவல்வேண்டும்
நீதிநெறி யாவர்க்கும் ஒன்றே என்னும்
நிலைதழைக்கப் புரோகிதர்கள் மாய்தல்
வேண்டும்'

எனத் திரு.வி.க. அழுத்தந் திருத்தமாக அறிவிக்கின்றார்.

தாழ்நிலை தகர்ந்து உயர்நிலை தானே உருவாகி விடாது. அதற்காகப் போராட வேண்டும். புரட்சி தோன்றவேண்டும். ஆனால் அந்தப் புரட்சி போரொழிந்த அறப்புரட்சியாக, அமைதிப் புரட்சியாக இருக்க வேண்டுமென்பது திரு.வி.க. விருப்பம்.

'புரட்சியிலே புது உலகப் புரட்சியிலே
புகுமின்.
புரட்சியிலேபோரொழிக்கும்புரட்சியிலே
புகுமின்
புரட்சியிலே புரட்சிஅறப் புரட்சியிலே
புகுமின்

புன்தப் புது உலகமைக்கும் புரட்சியிலே
புகுமின்'

என்பது அவர்தம புரட்சி வாக்கு. கார்ல் மார்க்சில் காந்தியத்தைப் பிணைத்துப் புரட்சி காண விரும்புகிறது திரு.வி.க. உள்ளம்.

**அடுத்த இதழில்**

**திரு.வி.க. அவர்களின் தமையனார் உலகநாதரின் பெண்மக்கள்'தமிழரசு' இதழுக்கு அளித்த பேட்டி**



உரைநடைக்குப் புத்துணர்ச்சியூட்டி மறுமலர்ச்சி கண்ட திரு.வி.க.வை அவர்தம் கவித்திறம் கொண்டு தலைசிறந்த கவிஞராகவும் நாம் கண்டு மகிழலாம்.

**திரு.வி.க.வின் கவிதை நூல்கள்**

உரிமை வேட்கை அல்லது
நாட்டுப்பாடல் (1931)
முருகன் அருள்வேட்டல் (1932)
திருமால் அருள்வேட்டல் (1938)
பொதுமை வேட்டல் (1942)
புதுமை வேட்டல் (1945)
கிறித்துவின் அருள்வேட்டல் (1945)
சிவனருள் வேட்டல் (1947)
கிறித்துமொழிக் குறள் (1948)
இருளில் ஒளி (1950)
இருமையும் ஒருமையும் (1950)
அருகன் அருகே அல்லது
விடுதலை வழி (1951)
பொருளும் அருளும் அல்லது
மார்க்கிஸ் காந்தி(1951)
சித்தந் திருந்தல் அல்லது செத்துப்
பிறத்தல் (1951)
முதுமை உளறல் (1951)
'வளர்ச்சியும் வாழ்வும்
அல்லது படுக்கைப் பிதற்றல்

திரு.வி.க.வின் கவிதைகள் அனைத்தும் பொதுமை நாடும் புகழ்க் கவிதைகளாகப் புத்துலகம் காண விரும்பும் புரட்சிப் பூக்கள்!

# திரு.வி.க.பேசுகிறார்

**பே**ச்சு ஒரு சிறந்த கலையாகும். இளைஞர் திறம்படப் பேசப் பழக வேண்டும். முன்னர், பேசப்போவதை எழுதிக் கொண்டு பின் பேசவேண்டும். பிறகு குறிப்பெழுதிக் கொண்டு பேசலாம். பழகிய பின், ஒருமுறை நினைத்துப் பார்த்துக்கொண்டு பேசலாம். தமிழ் மொழியில் அமைந்த கலை இனியது; உயர்ந்தது!

'**வி**வாதக்கலை' வேண்டும். இன்று ரஷ்யா 'Dialectic Materialism' பேசுகிறது. இது 3,000 ஆண்டுகட்கு முன்னரே காணப்பட்டது. விவாதக் கலையின் மூலமே அது படிப்படியாய் வளர்ந்து, இன்றையநிலையுற்றது. வாதப்போர் என்பது, அறிவுப்போர். அதிலேயே உண்மை காணமுடியும். விவாதம் செய்தல் ஓர் உண்மையான கலை, நிலையான கலை!



**நீ**ங்கள் பெரியவர்களானால் 'எப்படி வாழ்வது! (How to live) என்ற ஆங்கில நூலை அவசியம் படிக்கவேண்டும். நாகரிகத்துடன் நாம் அரிசிச் சோறு சாப்பிடுவதாகச் சொல்லப்படுகிறதே, அதில் நாகரிகமே இல்லை எனலாம். தவிட்டைப் போக்கி, வெண்ணிற அரிசியைச் ( Polished Rice ) சாப்பிடுகிறோம். தீட்டிய நல்ல வெள்ளைப் பச்சரிசியை உணவாக்கி, பூனை, நாயிடம் வைத்துப் பாருங்கள். மோப்பம் பிடித்துப்பார்த்து, அவை தொடவே தொடா. பூனையும், நாயும் தொடாத அரிசியைத் தான், இன்று நாம் உண்கிறோம்.

'**செ**ந்தயிர் கண்டம் கண்டமாக' என்று கம்பன் சொல்லுகிறான். இப்போது பலர் தயிர் சாப்பிட்டால் அஜீரணம் வருகிறதென்று சொல்லுகின்றார்கள். அது தவறான கருத்து. எலும்புகளுக்கு நல்ல பலனைத் தருவது, தயிர் ஒன்றே.

**கி**ரீஸ் நாடு ஓவியச் சிறப்போங்கியது. அதனினும் உயர்ந்தது தமிழ் ஓவியக்கலை; ஒப்புயர்வற்றது. தென்காசி, புதுக்கோட்டை, மாமல்லபுரம். இங்குள்ள ஓவியங்கள் இணையற்றவை.

**ஜ**ப்பானில் தமிழர் ஓவியம் கலந்துள்ளது. ஓவியத்தின் தாயகம் தமிழகமெனலாம்.

**ந**ம் நாடு வாழ விவாதம் வேண்டும். அன்று நாடு நன்றாக வளரும். பேச்சில் அழகும், திறமையும் பண்பும் அமைய வேண்டும். இவ்வகையில் பெண்மக்கள் பெரிதும் பங்கு கொள்ள வேண்டும். அப்போது தான் நம் நாடு நன்னிலையடையும்.

**ம**ன்று, மன்றமானது. மன்று என்பது, மரத்தடிக்குப் பெயர். பழைய சரித்திரத்திலே மன்று என்ற பொருளை அதிகமாகக் காணலாம். மன்று என்று நான் குறிப்பிடுகின்ற மரத்தடியிலே, முன்னர், தமிழ்மன்றம் கூடியது.

**உ**லக வரலாற்றை நோக்கினால், பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், பல பெரியோர்கள் தோற்றம் புலப்படும். அவருள் குறிக்கத்தக்கவர் மேடம் பிளாவட்ஸ்கி, டால்ஸ்டாய், காரல் மார்க்ஸ், ராஜா ராம் மோகன்ராய், தயானந்தர், இராமகிருஷ்ணர் முதலியோர். இதேகாலத்தில் வாழ்ந்தவர் நம் இராமலிங்க அடிகளாகும்.

**த**மிழர் இயல்பு பாட்டுப் பாடுவது. தமிழர், கவிதையில் திளைத்தனர். வள்ளலார் திருவொற்றியூரிற் கண்ட காட்சியை அழகாக அமைக்கின்றார். அடியார் கூட்டத்தை வருணிக்கும் ஒரு வர்ணனை உய்த்து உணரற்பாலது. 'கவிதைபோல் சாந்தம்' என்று சொல்வது போதாதென்றெண்ணி 'தண்டமிழ்க் கவிதை போல் சாந்தம்' என்றார்.

**ந**ல்ல காற்றிலே உலவி, நல்ல தண்ணீரை அருந்தி, சூரியவெளிச்சம் நம் உடலில் நன்கு படியும்படி வாழவோமானால், எந்த நோயும் வராது.

தகவல் : **கலவை பா. வரதன்**


**ஆதாரம்: தமிழ்க்கலை**



**த**ங்களுக்கென்று வாழாமல், நாட்டு மக்களுக்குகென்று வாழ்பவர்கள் சிலரேனும் இருப்பதால் தான் இந்த உலகம் வாழ்கிறது என்று புறநானூற்றுப்பாடல் ஒன்று சொல்லுகின்றது.

அந்தப்பாடல் இலக்கியத்துக்கு இலக்கணமாக வாழ்ந்தவர்தான் தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள்!

திரு.வி.க. அவர்களால் தமிழ் வளர்ந்தது; தமிழினம் வளர்ந்தது; தமிழகம் வளர்ந்தது; இந்திய விடுதலை இயக்கம் வளர்ந்தது; உலகம் போற்றும் தமிழ்ப் பண்பாடு வளர்ந்தது.



டாலென்ன, ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது! திரு.வி.க. எனும் ஆறு ''வான்பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலை இய கடற் காவிரியாகத்'' தமிழ்ப்பண்பாட்டின் பயிர் வளர்த்தும் உயிர் வளர்த்தும் ஓடிக்கொண்டிருக்கிறது.

திரு.வி.க.வின் தமிழ்த் தொண்டு தமிழ்த் தென்றலாக வீசிக் கொண்டிருக்கிறது; தமிழ்ச் சோலையாக நிலை பெற்று நலம் தந்துகொண்டிருக்கிறது.

திரு.வி.க. தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ள அழியாத் தமிழ்ச் செல்வமாக அவர் தம் நூல்கள் ஐம்பத்தைந்துக்கும் மேலும் உள்ளன.

# திரு.வி.க.வின் தமிழ்த் தொண்டு

## டாக்டர். நா.பாண்டுரங்கன்

திரு.வி.க. எளியவாழ்வு வாழ்ந்தார்; தமிழுக்கோ பெருவாழ்வு தந்தார்; தமிழர்களுக்கோ புது வாழ்வு மலர உழைத்தார்!

நிலவு தன் இருளை நீக்க நினைப்பதில்லை; ஆனால் உலக இருளைப்போக்கவே உழைத்துக் கொண்டிருக்கிறது.

திரு.வி.க. அவர்கள் தமிழ் வானில் மலர்ந்த நிறை நிலவு; அதன் புகழ் குறையாதது; கரையாதது; மறையாதது; குறையில்லாதது!

பணிவாழ்வால் திரு.வி.க.நாடு போற்றும் பெருந்தலைவராக வாழ்ந்தார்; ஆனால் அவர் தனி வாழ்வோ உள்ளம் உருக்குவது. பொதுமைவேட்டல் எனும் அவர் நூலில் அவரே சொல்லுகிறார் அவர் தம் தனிவாழ்வு பற்றி:

செல்வமுமின்றிச்சீர் மனையின்
றிச்சிறக்கு நன்மக்களுமின்றிப்
பல்வளமின்றிப் பணித்தனை
வாழப்
பரமனே அதனுளங் காண
வல்லமையுண்டோ வாழ்க்கையை
வகுக்கும்
வள்ளல்நீ, அதன்படி ஒழுகிச்
செல்வதென் கடமை .

அறநூல் மனிதன் தன்வாழ்வில் கைக்கொள்ள வேண்டிய அறம்பற்றி எடுத்துக் கூறுவது. ஆனால் அந்த அறநூலே ஒரு மனிதராக, மாமனிதராக உருவெடுத்ததுபோல் வாழ்ந்தவர் தாம் திரு.வி.க. அவர்கள்!

டாக்டர் மு.வ. அவர்களின் விளக்கம் இதற்குச் சான்று பகரும். ''திரு.வி.க.வின் தனி வாழ்க்கை திருக்குறளின் அறத்துப்பாலுக்கு ஒருவிளக்கம் எனலாம். அவ்வாழ்க்கையில் பாயிரம் உண்டு; இல்லறம் உண்டு; துறவறம் உண்டு; ஊழ்வலியும் உண்டு. திரு.வி.க. இல்லறத்தின் சிறப்பை உணர்ந்தவர்; துறவறத்தின் தூய்மையைப் பெற்றவர். அன்பு அருளாய்க் கனிந்த வாழ்வு அவர்தம் வாழ்வு!'' என்பார் டாக்டர் மு.வ. அவர்கள்.

திரு.வ.க.வின் வாழ்வு முழுவதும் தொண்டு வாழ்வாகவே தொடங்கித் தொண்டு வாழ்வாகவே நிறைவு பெற்று நிற்கிறது. அவர்தம் தொண்டுவாழ்வு நான்கு பெரும் தலைப்புகளில் அடங்கும். தமிழ்த்தொண்டு; தாய்நாட்டுத் தொண்டு; சமுதாயத் தொண்டு; தொழிலாளர் தொண்டு என்பவையே அவை!

திரு.வி.க.வின் தமிழ்த் தொண்டு ஒரு தமிழ் மழை எனலாம்; புது மழை எனலாம்.

திரு.வி.க. எனும் அடைமழை நின்றுவிட்டது; மழை நின்று விட்

திரு.வி.க.வின் நூல்கள் தமிழ்ச் செல்வமாக உள்ளன. அவை தமிழ்ச்செல்வம் மட்டும் அல்ல; தமிழ்க் கழனி; தமிழ் மழை; தமிழ்க் கதிர்; தமிழ்க் கடல் எனலாம்!

திரு.வி.க.வின் நூல்கள் அவர் தம் பேச்சுக்களையும் எழுத்துக்களையும் கொண்டு நிற்பன. பேச்சு, உரை, உரை விளக்கம், பாடல், தனித்தலைப்பு நூல், கட்டுரைகள், நாளிதழ்க் கிழமை இதழ்க் கட்டுரைகள், பாடல்கள் இவை அவர் நூல்களாக உள்ளன.

திரு.வி.க.வின் காலத்தில் மேடைப்பேச்சில் ஆங்கிலம் அரசோச்சிக் கொண்டிருந்தது. ''எங்கும் தமிழ்'' ''எதிலும் தமிழ்'' என்ற இன்றையத் தமிழ் புரட்சிக்குத் தம் தமிழ் மேடைப் பேச்சால் அன்று வித்திட்ட தமிழ்ப் புரட்சியின் தலைநாயகர் திரு.வி.க. அவர்கள்!

மணித் தமிழ்ப் பேச்சால் மக்கள் உள்ளம் கவர்ந்த மாபெரும் பேச்சாளர் திரு.வி.க.

புலமைத் தமிழால் புத்துணர் ஊட்டிப் புதுத் தமிழ் வளர்த்த மதுத் தமிழ்ப் பேச்சாளர் திரு.வி.க.!

தமிழ் முனிவரின் வாழ்வுத் தொண்டில், தமிழ்த் தொண்டு

பெற்ற இடம் பெரிது. அவர் காலத்து அறிஞர்கள் தலைவர்கள் வாய்மொழிகளே இதற்கு எடுத்துக்காட்டாய் அமையும்.

தந்தை பெரியார் அவர்கள் திரு.வி.க.வின் தமிழ்ப் பேச்சுப் பற்றிச் சொல்லும் மதிப்பீடு இது:

''திரு.வி.க.வின் பேச்சு மிகவும் சக்தி வாய்ந்தது. அந்தக் காலத்தில் அவர் பேசுகிறார் என்றால்தான் கூட்டம் வரும். நாடெங்கும் சுற்றிச் சுற்றிப் பிரச்சாரம் செய்தார். அந்தக் காலத்தில் தமிழில் பேசுவதற்கு ஆளே கிடையாது. திரு.வி.க. அவர்கள் தான் தமிழில் மிக அருமையாகப் பேசுவார். அவரை முன்மாதிரியாக வைத்து அவருடைய நடையில் பலர் பேச வேண்டும் என்கிற அளவுக்கு அவர் பேச்சால் மக்களுக்கு உணர்ச்சி உண்டாயிற்று!''

தேசபக்தி தெய்வ பக்திக்கு ஈடாகத் தமிழ்ப் பக்தி கொண்டவர் திரு.வி.க. என்பது பெருந்தலைவர் காமராசர் அவர்கள் கருத்து.

''திரு.வி.க. அவர்கள் சிறந்த தேசத் தலைவராகவும், தெய்வ பக்தராகவும், தமிழ்பக்தராகவும் சிறந்து விளங்கியவர்.

தமிழ்நாட்டின் தொழிற்சங்க இயக்கத்தின் தந்தையாகவும், தாயாகவும் விளங்கியவர். காந்தியடிகளின் அகிம்சை, எளிமை, சத்தியம் ஆகியவைகளை வாழ்க்கை நெறியாகக் கொண்டு வாழ்ந்து காட்டியவர்'' என்று காமராசர் கூறியுள்ளார்.

'பண்டித மணி' கதிரேசனார் திரு.வி.க.வின் தொழிலாளர் உலகத் தொண்டு எவ்வாறு தமிழ்த் தொண்டாகவும் ஏற்றம் பெற்றது என்று கூறுகிறார் பாரீர்:

''திரு.வி.க. யாரோடும் இகலின்றி அன்போடு பழகும் குணமுடையவர். தம் கல்வியின் பயனாகத் தமிழ்நாட்டு ஏழைகளாகிய தொழிலாளர் நலங்களைப் பாதுகாப்பதில் இடையறாது உழைத்துவந்தார். அதனால் தமிழுலகம் எய்திய பயன்மிகவாகும். இந்த நூற்றாண்டில் பலவகையாலும் தமிழ்நாட்டிற்கு அருந்தொண்டு ஆற்றியவர்களுள் இவர் தலைசிறந்தவர் என்னலாம்''

'கதைமன்னர்' கல்கி அவர்கள் திரு.வி.க.வின் பண்புநலம் பற்றிப் படம்பிடிக்கிறார். அதில் திரு.வி.கவின் தமிழ்த் தொண்டே முதலில் அமைகிறது.

கல்கி கூறுவது இது:




## தீந்தமிழ்க் களஞ்சியம்

## திரு. வி. க.



பேரதிர்ச்சி அடைந்திட்டோம் கல்யாண
சுந்தரனின் பிரிவி னாலே
ஆரதிர்ச்சி அடையாதார்? அருந்தமிழே
உருவான அறிவு வள்ளால்!
காரதிர்ச்சி கொண்டுபெரு மழையென்னும்
கண்ணீரை நினது மேனி
ஊர்வலத்தில் பொழிந்ததொரு விந்தையினை
எண்ணிமனம் உருகி னோமே



காந்தீயம் மார்க்சீயம் இரண்டினையும்
தமிழ்த்தேனில் கலந்து தந்தோய்!
சாந்தியினைச் சமரசசன் மார்க்கத்தை
மக்களெலாம் தழுவ வேண்டிச்
சாந்துணையும் பணியாற்றிக் கட்சிமதத்
தடையெல்லாம் தகர்த்து நின்றோய்!
தீந்தமிழ்நற் களஞ்சியமே! திரு.வி.க.
நின்மறைவால் திகைக்கின் றோமே!

இலக்கியப்பூந் தென்றலினை எல்லார்க்கும்
ஈந்து தமிழ் இன்பம் கண்டோய்!
கலக்கமறத் தொழிலாளர் இயக்கத்தைப்
புயலாக்கிக் காத்த வீரா!
மலைக்காமல் தமிழ்உணர்ச்சி மருந்தூட்டி
மாசற்ற தமிழர் உள்ளம்
துலக்கினையே கல்யாண சுந்தர! நீ
மறைந்ததுயர் துடைப்பார் யாரே!



முருகனையே அழகாகக் கண்டதமிழ்
முனிவரனே! பெண்ணி னத்தின்
பெருமையினை மாந்தரின உரிமையினைப்
பேணும்எழில் நூல்க ளாக்கித்
தரமுயரும் தமிழ்நடையால் புதியதொரு
சகாப்தத்தைச் சமைத்த நின்றன்
கரமலரை எரியுண்ணக் கண்டந்தோ
கையற்றோம்! கலங்கி னோமே

(தினமணி, 20.9.1953)

### கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம்

''தமிழுக்கும் தமிழ் எழுத்தாளர் குலத்துக்கும் தந்தையாக இருந்தார்; தொழிலாளர் குலத்துக்குத் தாயாக விளங்குகிறார். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகிய திறத்தினால் அந்தணர் திலகமாகத் திகழ்ந்தார். ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற திருவாக்கை வாழ்க்கையில் கடைப்பிடித்து நடந்தார். தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்தார்; அன்பே சிவம் என்ற உண்மையில் வாழ்க்கையெல்லாம் திளைத்திருந்தார்!''

திரு.வி.க. அவர்களின் தமிழ் நடை தமிழ் உலகில் முதல் முதல் புகுந்த தனிநடை; கனிநடை; மணிநடை; பணிநடை; மக்கள் தொண்டுக்கோ உணர்வூட்டும், அறிவூட்டும் புதுப்படை!

ஆய்வியல் உரைத் தமிழ்ப் பேராசிரியர், உயர்தமிழ்ப் புலவர் அவ்வை துரைசாமி அவர்கள் திரு.வி.க.வின் தமிழ்நடை பற்றிக் கூறுவது இது:

''தமிழ் இலக்கிய உலகில் நம் திரு.வி.க. சிறுசிறு வாக்கியங்களால் திருந்திய கருத்துக்களை அழுத்தம் திருத்தமாக எழுதும் புதுமுறை எழுத்து நடைகண்டவர். எழுத்து நடையில் திரு.வி.க. நடையென்ற ஒரு சிறப்பு நடையும் நிலவுகிறது. ''மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்'' பெண்ணின் பெருமை'' ''முருகன் அல்லது அழகு'' முதலிய நூல்கள் பயிலுந்தோறும் இன்பவொளி வீசி நிற்கின்றன.

கம்பரின் கவிதை நலனும், இளங்கோவின் கலை நலனும், வள்ளுவரின் பண்பு நலனும் அறிவு நலனும் ஒன்று கலந்து ஒருருவான சீர்சால் செந்தமிழ் நடையே திரு.வி.க.வின் தமிழ் நடையாகும்.

இவ்வகையில் திரு.வி.க.வை உரைநடைக் கம்பர்; உரைநடை இளங்கோ; உரைநடை வள்ளுவர் எனலாம்!

செந்தாமரையின் அழகும், செங்கரும்பின் சுவையும், செந்நெல்லின் பயனும் திரு.வி.க.வின் தீந்தமிழ் ஆகும்.

திரு.வி.க.வின் தமிழ்த்தொண்டு வியத்தகு ஆற்றல் விளைவிப்பது-ஓர் எடுத்துக்காட்டு. திரு.வி.க. அவர்கள் 1927 ஆம் ஆண்டு ''பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை'' எனும் நூல் எழுதி வெளியிட்டார்கள்.

1949 ஆண்டு அதன் ஏழாம் பதிப்பு வெளிவந்தது. அப்பெருநூல் - திருநூல் ஆற்றிய தொண்டின் மதிப்பு அளவில் அடங்காதது.



திரு.வி.க. ஆசிரியர் பணிபுரிந்த வெஸ்லி கல்லூரி

''பெண்ணின் பெருமை'' பெண்ணுலகுக்கும் அதன் வழி மக்கள் உலகுக்கும் விளைவித்த நலன் வியப்புக்குரியது.

திரு.வி.க.அவர்கள் இந்நூற் பயனை இயம்புகின்றார்கள்:

''முதற்பதிப்பு வெளிவந்த போது தமிழ்நாட்டில் பெண்ணுலகின்நிலை எப்படி இருந்தது? இன்று எப்படி இருக்கிறது? இடையில் நேர்ந்த மாறுதல்கள் மகிழ்ச்சிக்குரியன.

''முதற்பதிப்புத் தலைகாட்டிய போது எதிர்ப்புப் பெரிதும் எழுந்தது; இப்பொழுது எதிர்ப்பு மறைந்துவிட்டதென்று கூறலாம். இந்நூல் வெளிவந்த பின்னைத் தென்னாட்டில் பெண்ணுரிமைக்கெனத் தோன்றிய இயக்கங்கள் பல; சங்கங்கள் பல; முயற்சிகள் பல; மேலும் கலப்பு மணங்களும், கைம்மையர் மணங்களும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன; சட்டங்கள் செய்யவும் நாடு முனைந்து நிற்கிறது; இளைஞருள் ஒருவிதப் புத்துணர்வு தோன்றியிருக்கிறது; மூலை முடுக்குகளிலும் பெண்ணின் பெருமை பேசப்படுகிறது. பெண்ணுலகம் விழித்துக் கொண்டது என்று சுருங்கச் சொல்லலாம். இந்நூல் இன்னும் பல நலன்களைச் செய்யும் என்றே நம்புகின்றேன்''.

''பெண்ணின் பெருமை'' எனும் ஒரு நூல் ஆற்றியுள்ள தொண்டு இது என்ன், திரு.வி.க.வின் ஒவ்வொரு நூலும் ஆற்றியுள்ள தொண்டு எவ்வளவு? கணக்கிட்டால் அதுவே ஓர் ஆய்வுக் கட்டுரையாகும்.!

திரு.வி.க.வின் தமிழ்த் தொண்டு, தமிழ்த் தொண்டு மட்டுமோ? அன்று அன்று!

அது பெண்ணுலகின் பெருந் தொண்டு; தனி மனிதனைச் சமுதாய மனிதனாக்கும் அருந் தொண்டு; நாட்டுப்பற்றை வளர்க்கும் நாட்டுத் தொண்டு; அறிவுச் சமயத்தை வளர்க்கும் சமயத் தொண்டு; அன்பு வளர்க்கும் அறத்தொண்டு; புத்தறிவை வளர்க்கும் அறிவுத் தொண்டு; தொழிலாளர் நலன் வளர்க்கும் பாட்டாளித் தொண்டு; சமத்துவச் சமுதாயம் அமைக்கும் சமதர்மத் தொண்டு!

பாவேந்தர் திரு.வி.க.வின் தமிழ்த்தொண்டின் திறம் பற்றிக் கூறுகிறார்.

''திரு.வி.கலியாணசுந்தரனாரின்
செந்தமிழ்க் கட்டுரைகள்என்
னும்
அருவிகளில் ஆடியநல்லறிஞர்
களும்
அறிவுபெற்றார்; இளைய சிட்
டுக்
குருவிகளும் தமிழ்க்காதல் தலைக்
கேறிக்
குதித்தனவே; வடசொல்லின்
கைக்
கருவிகளும் தனித்தமிழின் கனிச்
சுவையைக்
கண்டுகளித்தனவே யன்றோ?

திரு.வி.க.வின் தமிழ் உள்ளம் இறுதியாகக் கருதிய கருத்து அவர் தம் தொண்டு வழி நடப்பார் தொடர்ந்து பணிபுரிய ஒரு பெரும் குறிக்கோள் ஆகும். ''மார்க்சியத்தின் உயிர்நாடி பொருள்; காந்தியத்தின் உயிர்நாடி அருள். இரண்டும் சேர்ந்த ஒன்று, வருங்காலப் புது உலகத்தை நல்வழியில் அமைக்க வல்லதென்பது எனது கருத்து'' என்று திரு.வி.க. கூறியுள்ளார்! இந்தப் புது உலகம் சமைக்கும் பணியே தமிழ்த்தொண்டர் அனைவரும் ஏற்க வேண்டிய பணியாகும்! அதுவே திரு.வி.க.வுக்குக் காட்டும் நன்றியாகும்!



# திரு.வி.க. நூல்களில் காணப்படும் அறவுணர்வுகள்

டாக்டர் அ.நாகலிங்கம்

'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' என்பது முன்னோர் மொழி. உலகில் உள்ள கோடிக் கணக்கான மக்களுக்கு அவ்வப் பொழுது பெரியோர் பலர் தோன்றி வழிகாட்டி வருகின்றனர். இவர்கள் வரிசையில் இடம் பெற்றவர் தமிழ்த்தென்றல் திரு. வி.கலியாணசுந்தரனார்.

இவர் நூல்களில், மக்கள் அறத்தொடு இயைந்த நேரிய இன்ப வாழ்க்கைக்கான வழிகளைக் காணலாம்.

ஒருவர், வாழ்க்கையில் அறநெறியில் நின்று வாழவேண்டுமென்றால் அவர் 1) மரபுவழிப் பண்புடையவராய் 2) மறநெறியில் சென்று உண்மை உணர்ந்து மனம் திருந்தியவராய் 3) பெரியோர் சேர்க்கையால் அறத்தில் உரம் பெற்றவராய் 4) நன்னூல்கள் பயிற்சியால் அறத்தைத் தெள்ளத் தெளிந்தவராய் இருக்க வேண்டும். திரு.வி.க.வின் அற உணர்வு இவற்றால் உருவானது.

திரு.வி.க.வின் நூல்கள் போராடும் உள்ளங்களுக்கு ஆறுதல் தருபவை. நன்னெறிகளை எடுத்துரைத்து வாழ்க்கையை இன்ப மயமாக்குபவை. இந்நூல்களில் காணப்படும் அறஉணர்வுகள் சிலவற்றை இங்கே காண்போம்.

**கடவுள் வழிபாடு :**

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் கடவுளை வணங்க வேண்டும். கடவுள் வணக்கமே வாழ்க்கையின் முடிந்த குறிக்கோளாக இருப்பதை முன்னோர் வாழ்க்கையால் அறிகின்றோம். திரு.வி.க. கடவுள்பக்தி உடையவர். முருகனைத் தம் வழிபடு கடவுளாகக் கொண்டவர். அவருக்கு உகந்த கோயில் திருப்போரூர். கடவுளையும் அவர் நிலைகளையும் அவரை வழிபடும் முறைகளையும் திரு.வி.க. விளக்கும் மாட்சி அறியற்பாலது.

**கடவுள் :**

''கடத்தலையுடையது கடவுள் என்றும் எல்லாவற்றையுங் கடந்து நிற்பது கடவுள் என்றும், உள்ளமாகிய உயிரைக் கடவுவது (செலுத்துவது) கடவுள் என்றும் பலவாறு கூறுப. அவரவர் அறிவாற்றலுக்குத் தக்கவாறு கடவுள் பொருளாகிக் கொண்டே போகும். மெய்யுணர்வு விளங்கியதும் கடவுளின் உண்மைநிலை புலனாகும்.

கடவுளை **அது** என்றும், **அவள்** என்றும், **அவன்** என்றும் சொல்வது உலக வழக்கு. ஊர் பேரில்லா ஒன்றை எப்படிச் சொன்னாலென்ன?

**மூவித நிலை :**

கடவுள் ஒன்றே. அதன் இயல்புகள் பல பல. இயல்புகளைத் திரட்டி மூவகைப் படுத்தலாம். ஒன்று எல்லாவற்றையுங் கடந்து தனித்து நிற்கும் நிலை; மற்றொன்று எல்லாவற்றிலும் நீக்கமறக் கலந்து நிற்கும் நிலை; இன்னொன்று குருவினுள் கூர்ந்து விளங்கும் நிலை. முன்னையது வழிபாட்டுக்குரியதாகாது; பின்னையன வழிபாட்டுக் குரியனவாய்த் துணை புரிவன.

மனமுடைய மக்கள்-வாக்குடைய மக்கள் -எல்லாவற்றையுங் கடந்து நிற்கும் ஒன்றை எப்படி நினைத்தல் கூடும்? எப்படி வாழ்தல் கூடும்?

எல்லாமாயுள்ள நிலை நினைத்தற்குரியது; வாழ்த்தற்குரியது. இதுவே கடவுள் இயற்கையை உடலாக்கொண்ட நிலை, இயற்கை உடல்; கடவுள் உயிர்.

இயற்கையில் இறை நீக்கமறக் கலந்துள்ள நுட்பம், இயற்கை வழிபாட்டாலேயே சிலர்க்கு இயல்பாக விளங்கும். பலர்க்கு அஃது அவ்வழிபாட்டால் விளங்குவதில்லை. இப்பலர்க்குக் குருநாதன் அருள் தேவை. கடவுள் குருநாதன் உள்ளத்தையும் கோயிலாகக்கொண்டு உயிர்கட்கு அருள் செய்தலால் கடவுள் நிலைகளில் குருநாதன் நிலையும் ஒன்றாகும். குருநிலையைத் தனியாகக் கொள்ளாது இயற்கை நிலையுடன் ஒன்ற வைப்பதும் ஒருவகை.'' (திருக்குறள் விரிவுரை-பாயிரம்)

இங்குச் சொல்லப்படும் குருவைக் கருத்தில் கொண்டு நோக்கின் ஒவ்வொரு சமயத்திலே உள்ள கடவுளரை (நாம் கடவுளாக நினைப்பவரை) குருமாராகக் கொள்வர். திரு.வி.க. ''சன்மார்க்க போதமும் திறவும்'' நூலில் விளக்கம் காண்க.

**புலால் உண்ணாமை:**

நாட்டில் புலால் உண்போர் தொகை நாளுக்குநாள் பெருகி வருகிறதேதவிரக்குறையவில்லை. மனிதன் தொடக்கத்தில் பொருந்திய உணவான மரக்கறி உணவையும் பின்னர்ப் பொருந்தா உணவான அசைவ உணவையும் உண்ணலானான். இன்று வரை அசைவ உணவை அவனால் விட முடியவில்லை. இனியும் அவனால் அதை விடவும் முடியாது. அந்த அளவிற்கு அஃது அவனைச் 'சிக்'கெனப் பற்றிக் கொண்டது. தன் ஊன்பெருக்குவதற்குப் பிற உயிர்களின் ஊனை உண்பவன் எங்ஙனம் உயிர்களிடத்து அன்பைச் செலுத்த முடியும்? 'உயிர்க்கொலை கூடாது' என வற்புறுத்திய புத்த பகவானின் சமயத்தைப் பின்பற்றும் இலங்கை சிங்களவர் மாமிச உணவை உண்பதனால் பெருகிய மூர்க்கம், உடன் வாழ்ந்து வரும் தமிழர்களையே பிணக்குவியல்களாக்கி விட்டது அல்லவா? எனவே, 'புலால் அமைதியை -அன்பை வளர்க்காது' என்பர் திரு.வி.க.

**கள்ளுண்ணாமை:**

திருவள்ளுவர் காலம் முதல் இன்றுவரை கள்ளை-மதுவை வெறுத்துப்பேசாத சான்றோர் இல்லை. ஆனால், இதில் என்ன வியப்பு எனில் எவ்வளவுக்கு எவ்வளவு சான்றோர் மதுவைப் புறக்கணிக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அது பெருகிக்கொண்டு வருகிறது! தீமைக்கு ஆற்றல் அதிகம் போலும்!.

தமிழ் வளர்த்த தந்தை திரு.வி வி.க. கள் உண்டதில்லை. கள் உண்ணக்கூடாது என்ற கோட்பாடு உடையவர். நாட்டுமக்கள் கள்ளை-சாராயத்தை உண்டு அறிவை இழந்து துன்புறுவதை இவர் விரும்புவதில்லை. மக்கள் அறிவுத் தெளிவுடன் இன்ப வாழ்க்கை வாழவே இவர் விழைந்தார். அவ் இன்ப வாழ்க்கைக்கு இடையூறாக இருக்கும் கள்ளை இவர் கடிந்தே வந்தார். பத்திரிகைகளில் எழுதினார். மாநாடுகளில் பேசினார். 5.4.1924ல் குளித்தலை என வழங்கும் குளிர் தண்டலையில் நடந்த திருச்சிராப்பள்ளி மாவட்ட 6வது அரசியல் மாநாட்டுத் தலைமையுரையில் மதுவிலக்குப் பற்றித் திரு.வி.க பேசிய பேச்சு இன்றும் தமிழ் மக்களுக்குத் தேவையான உரையாகும்.

''கள், மனிதனது உடல் வளத்தையும் உயிர் நலத்தையும்கெடுப்பது. தென்னை, பனை முதலியன கள்ளுக்காக ஏற்பட்டன வல்ல. மனித வாழ்வுக்கு வேண்டப்படும் பொருள் பல அவற்றில் இருக்கின்றன. மனிதனின், தன் முயற்சியால், கள்ளை அவற்றினின்றும் உண்டு பண்ணுகிறான். கள் இயற்கைப் படைப்பில் விளைவதன்று. இயற்கைப் படைப்பில்லாத ஒன்றைக் குடிப்பது வாழ்வைக் குலைக்கு மென்பதில் ஐயமில்லை.''

**தீண்டாமை**

'தீண்டாமை ஒரு பேய்' என்றனர் நம் முன்னோர். பேய் பிடித்த ஒருவன் அதன் தாக்குதலால் பன்னாள் துன்புற்று ஒரு நாள் விடுதலை அடைவதுபோல் தீண்டாமையால் நாம் பலகாலம் துன்புற்று வருகிறோம். இனி நாம் அவ் இன்னலினின்றும் மீளுவோம் என்ற நம்பிக்கை பிறக்கிறது. இன்று நகரத்தில் அத் தீண்டாமை தெரியவில்லை அதைப்பற்றி எவரும் கவலைப் படுவதில்லை. அஃது இங்கு ஒதுக்கப்படுகிறது. ஆனால் கிராமங்களில் அது தலைவிரித்தாடுகிறது. இன்னும் ஆடுகிறது. அதை ஒழிக்க கிராம மக்கள் முன்வர வேண்டும்.

அரசாங்கம் இன்று தீண்டாதாருக்கெலக் கல்வியிலும் வேலை வாய்ப்புக்களிலும் பல சலுகைகளை அளித்துவருகிறது.இதனால் அவ் இனத்தார் பல துறைகளில் பொருளியல் வசதியுடன் முன்னேறி வருகின்றனர். இது வரவேற்கத்தக்கதே. அத்தீண்டாமையைத் தமிழகச் சீர்திருத்தச் செம்மல் திரு.வி.க.தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கவில்லை. மாநாடுகளின்போது உடன் உறைந்தும் பழகியும் உண்டும் இருக்கிறார். தீண்டாமையை வெறுத்து ஒதுக்கிய அவர் அதை நாட்டிலிருந்து விரட்டவேண்டும் என்று வரலாற்றுப் புகழ்மிக்க காஞ்சி மாநாட்டில் தமிழ் மாகாண காங்கிரசில் (31 வது தமிழ் மாநாட்டில்) 21.11.1925ல் பேசியுள்ளார். அப்பேச்சின் ஒரு பகுதி வருமாறு:

கடவுள் படைப்புக்கு உட்பட்ட மக்களுள் ஒரு கூட்டத்தாரைத் தீண்டாதாரென விலக்கி வருத்துவதினுங் கொடுமை வேறொன்றுண்டோ? இக்கொடுமை, மக்கள் கூட்டத்துக்கே உய்யுநெறி காட்டும் உயர்கொள்கையுடைய ஹிந்துமதத்தைப் பரவாதவாறு தகைந்து சிறைப்படுத்தியிருக்கிறது. ஹிந்து மதத்திலுள்ள இக் கொடுமை அம்மதத்தை மாத்திரமா சிறைப்படுத்தியிருக்கிறது? 'அந்தோ! என்அருமைப் பாரத நாட்டையே அது சிறைப்படுத்தியிருக்கிறது! ஹிந்து மதத்திலுள்ள இக்குறை மற்ற இந்தியரையும், வருத்தி நிற்கிறது. இவ்வேளையில் 'தீண்டாமை இருந்தே தீரல் வேண்டும்.' என்று சில நூல்களைக் காட்டிப் போரிடுவோர் இல்லாமலில்லை. தீண்டாமை வேண்டும் என்னும் நோக்கோடு எழுதப்பட்ட நூல்களில் தீண்டாமை ' திகழாதிருக்குமோ? உரிமை வடிவான ஆண்டவன் அருள்பெற்ற மெய்யடியார்கள் அருளிய நூல்களில் தீண்டாமை என்னும் நாற்றம் வீசவே வீசாது.

(தமிழ்த் தென்றல் அல்லது தலைமைப் பொழிவு)

**கலப்பு மணம்**


திரு.வி.க. கமலாம்பிகையை மணந்தார். 6 ஆண்டுகள் இல்வாழ்க்கை வாழ்ந்தார்; மனைமாட்சியின் சிறப்பை உணர்ந்தார். 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற கோட்பாட்டில் உறைந்தார். உலகம் ஒருகுலமாகவேண்டுமெனின் அதற்குரிய ஒரே வழி கலப்புமணம் தான் என்ற கொள்கை உடையவர். தம் காலத்தே கலப்பு மணங்கள் பலவற்றை நடத்தியவர். வரவேற்றவர். சான்றாக 'ருக்மணி-அருண்டேல்' திருமணத்தைச் சொல்லலாம். இம் மணம் பற்றிய இவரது கருத்துக்கள் வருமாறு.

''காதல், சாதி மதம் நிறம் நாடு முதலிய கட்டுக்களைக் கடந்தது. ஒருவன் தனக்கு ஒத்த ஒருத்தியையும், அவ்வாறே ஒருத்தி தனக்குத் தக்க ஒருவனையும் தெரிந்தெடுக்கும் உரிமையுடையது கலப்பு மணம். அவ்வுரிமை காதலிலேயே செறியும். ஆகவே கலப்பு மணத்தைத் தவறாக உணரலாகாதென்பது எனது வேண்டுகோள்.

ஒரே குடும்பத்தில் ஒருவர் ஹிந்துவாகவும், இன்னொருவர் ஜைனராகவும், மற்றொருவர் புத்தராகவும், வேறொருவர் கிறிஸ்துவராகவும், பிறிதொருவர் இஸ்லாமியராகவும் இருக்கும் முறையில் உலகம் சீர்திருத்தம் எய்தல் வேண்டுமென்றும், மத மாறாமலே ஒரு மதத்தவர் இன்னொரு மதத்தவரை மணக்கும் உரிமை இருத்தல் வேண்டுமென்றும், அப்பொழுதே உரிமையுணர்வும் சமயப்பொறையும் வளருமென்றும், மதவெறியும் மதவாதமும் இடம்பெறாதொழியுமென்றும் யான் எண்ணுகிறேன்; பேசுகிறேன்; எழுதுகிறேன். இச்சீர்திருத்தத்துக்கும் கலப்பு மணம் தேவை'' 'திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள்)

இதுகாறும் கண்டவற்றால், திரு.வி.க். இறை வழிபாடு, புலால் உண்ணாமை, கள்ளுண்ணாமை, , தீண்டாமை, கலப்பு மணம் ஆகியவற்றை நாட்டில் பரப்பி மக்கள் நலம்பெறப் பாடுபட்டவர் என்பது போதரும்.


## அனைவரையும் நண்பராக்கிக் கொள்ளும் ஆற்றலர்



திரு.வி.க. கடைப்பிடித்து எழுதியும் பேசியும் வந்த அன்பு நெறியானது அவரை அன்புமயமாக்கியது. அவருக்குப் பகைவர் என்பவர் யாருமில்லாமல் செய்தது. அவருடன் பழகியவர்கள் அனைவரும் அவருடைய நண்பர்கள் ஆனார்கள். கடைசி வரையில் நண்பர்களாக இருந்து வந்தார்கள்.

—கல்கி

# ஒருமைப்பாட்டின் திருவுருவம்



சிறுவை நச்சினார்க்கினியன்

**1983** ஆம் ஆண்டு இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டினை விளக்கும் ஆண்டு. காரணம் திரு. வி.க. நூற்றாண்டு. திரு.வி.க. தான் இந்திய நாட்டின் ஒருமைப் பாட்டிற்காகக் குரல் கொடுத்த விடுதலை வீரர். கல்லூரிப் பேரா சிரியராய் விளங்கி, ஸ்ரீ பாலசுப் பிரமணிய சபை, சிவனடியார் திருக்கூட்டம் முதலிய நிறுவனங் களில் பங்குபெற்று, சமய நூல் களைப் பதிப்பித்தும், குறிப்புரை கள் எழுதியும் வந்த இவர் 1917 டிசம்பர் 7 ஆம் நாள் ''தேசபக் தன்'' எனும் நாளிதழின் ஆசிரி யர் ஆனார். பின்னர் 1920 அக் டோபர் திங்களில் தமக்கென ''நவசக்தி'' எனும் வார இதழி னைத் தொடங்கினார்.

திரு.வி.க. ''தேசபக்தன்'', ''நவசக்தி'' ஆகிய இதழ்களின் வாயிலாக நாட்டு விடுதலைப் பணிக்காக மக்களைத் தட்டி எழுப்பி, உணர்ச்சி ஊட்டி, சுதந் திர வீரர்களாக, நாட்டு விடுத லைக்குப் போராடும் போர்வீரர் களாக உருவாக்கினார். தாம் கற்ற இலக்கியங்கள் அனைத்தும் இந்திய நாட்டு விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஊட்டச் சத்தாக மாற்றினார். அரசியல் கருத்துகளைத் தமிழ் மொழியில் சொல்லவும் விளக்கவும் இயலாது என்று நம்பிய காலத்தில் திரு.வி. க. அவர்கள் அரசியல் கருத்து களைத் தம் எழுத்துகளின் மூல மும், தம் வீர உரைகளின் மூல மும் விளக்கம் செய்தார்கள். அத் துறையில் பல கலைச் சொற் களைப் படைத்தார்கள். தனக் கென ஒரு தனி நடையை அமைத் துக்கொண்டார்கள். இதனைப் பலரும் பின்பற்றவும் செய்தார் கள். இங்ஙனம் தாம் நாட்டின் விடுதலைக்காகப் போராடும்பேச் சிலும் எழுத்திலும் ஒருமைப்பாட் டின் உணர்வுகளை மக்களுக்கு ஊட்டத் தவறினாரில்லை. அத னையே ஒரு இலட்சியமாக மேற் கொண்டார்

தொழிலாளர்களின் பிரச்னை யைத் தீர்க்கத் தீவிரமாக உழைத் தார். ஆசிய நாட்டிலேயே முதன் முதல் 1918 ஏப்ரல் 27-ல் ''சென் னைத் தொழிலாளர் சங்கம்'' உருவாகியது. பல்வேறு தொழிற் சங்கங்களை இணைத்து 1920 ஜூலையில் ''மத்திய தொழிலா ளர் சங்கமும்'' பிறந்தது. தொழி லாளர் சங்கத்திற்குப் பல ஆண்டு கள் தலைவராயும் இருந்தார்கள். ஆனால்இவர்கள் என்றும் தொண் டனாகவே விளங்கினார்கள். தொண்டுதான் சன்மார்க்கத்திற் கும் பொதுமைப் பண்பிற்கும் வழிகோலும் எனக் கண்டார்கள். 'தொண்டு செய்யவே எனக்கு மீண்டும் பிறவி வேண்டும்' என வேண்டி நின்றார்கள். மார்க்சிய கருத்துகளை மகாத்மாவின் கருத் துக்களுடன் இணைத்து, பாலில் தேன் கலந்து தருவதுபோல் மக் கள் சமுதாயத்திற்குப் பொது மையை விளக்கினார்கள். முத லில் தேவைக்குமேல் பொருள் சேர்த்தலாகாது என.

''தேவை அளவில் திரட்டும்
பொருட்செல்வம்
பூவை அறமாக்கும் போக்கு.

தேவைக்கு மேலே திரட்டிச் சமய
மென்றும்
தேவென்றும் கூவல் திருட்டு

தேவைக்கு மேலே திரட்டும்
இடங்களில்
தாவும் கொலைகளவு சார்ந்து.''

-விளக்கம் கூறி அறிவுறுத்தினார்,

அடுத்து மக்கள் யாவரும் உழைத்து வாழவேண்டும் என

''உற்பத்தின் கென்றுழைத்தால்
உண்மைச் சமயமாய்
அற்பில் கிடத்தும் அறம்.

உற்பத்தி செய்ய உழையாத்
திமிர்வாழ்க்கை
அற்பத்தில் மாளும் அகன்று''

-வற்புறுத்திக் கூறுகிறார். இங்ங னம் திரு.வி.க. நாட்டின் பொரு ளாதாரச் சமன்பாட்டிற்கு, உற் பத்தி உழைப்பு இவைகளை வற் புறுத்தி தேவைக்குமேல் பொருள் சேர்க்கக்கூடாது, அது பொது மைப் பண்மைப் பாதிக்கும் எனக் கண்டு தம் உரை நடையிலும்,

''பிற உயிர்க்குத் தீங்கு செய்ய நினையாமை தேவைக்குமேல் பொருள் வேண்டாமைக்கு அடி கோல்வதாகும். பிற உயிரை வருந்தித் தேவைக்குமேல் பொருள் சேர்ப்பது கடவுள் நெறி நிற்பதாகாது. அது போலியே ஆகும்.''



-எனவும், பிறிதோர் இடத்தில்,

''தேவைக்குமேல் பொருள் திரட் டாமையை அஹிம்சை என்றும், அதுவே பரமதர்மம் என்றும் பல்லாயிரம் ஆண்டுக ளுக்கு முன்னரே விருஷபதேவர் அருளினார்''

-என்று சுட்டிக்காட்டி பொது மைப் பண்பிற்கு கால்கோள் செய்கிறார்.

இதன்பிறகு அடுத்த படிநிலை யாகக் கூட்டுறவு வாழ்வை மேற் கொள்ள வேண்டுமென்பார்,

''கூட்டுறவால் மக்கள் கொடுந்
தனிமைப் பற்றறுக்கும் நாட்
டமுற வாழ்வடைவர் நன்று
எல்லோரும் வாழவே எல்லோ
ரும் சேர்ந்துழைப்பர்: கல்லார்
இலராவர் காண்.
பொதுமை உலகிடைப் பொய்
களவு சூதுப் பொதியகலும்;
நீறாகும்; போற்று''

-இவ்வாறு மனத்தில் ஆழப்பதியும் வண்ணம் கூறிய கருத்துகள் ஏரா ளம். இப்படிப்பட்ட நல்லறங் களை நாம் எங்கிருந்து பெறலாம் எந்தப் பாலினை அருந்தினால் இப்படிப்பட்ட அறநிலைகளைப் பெற்று மனிதன் மானிடனாய் வாழ்வான் என்பதை,

''அறம்விளங்க மாசை அகற்று
வதென்ன? திறம் விளங்க வள்
ளுவரைத் தேடு.
பொருட்பாலோ டின்பப்பால்
போந்த அறப்பாலாம் அருட்
பால் அருந்துக ஆர்ந்து''

-என்று வள்ளுவத்தை நாடச் சொல்கிறார். ஏன் வள்ளுவரை நாடச் சொல்கிறார் எனின், முதலில் உலகு, உலகு எனக் குரல் கொடுத்துப் பேசியது வள்ளுவம். இதனை அவரே கூறுவார்:

''திருவள்ளுவர் யார்? 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சீரிய கொள்கை பிறந்த பெருந்தமிழ்க் குடியில் தோன் றியவர். அவர் நெஞ்சம், சாதி மதம் நிறம் மொழி நாடு முத லிய சிறுமைக் கட்டுக்களில் படிந்து கிடக்கவில்லை. அவர் நெஞ்சில் பரந்த உலகே படிந்து கிடந்தது''

-என்று கூறி இதற்கு உரிய மூல காரணத்தையும் கூறுவார்,

''பழந்தமிழறிஞர் கருத்து, சிறிய பன்மையில் படிய வில்லை. அவர்தம் நோக்கு, பெரிய ஒருமையில் சென்று ஒன்றியது. வேற்றுமை அவர்க் குப் புலனாகவில்லை; ஒற்று மையே அவர்களுக்குப் புலனா கியது.

## பாச்சுவை பாரதிதாசன்



திரு.வி.க.

எல்லாவற்றையும் பாட்டாக நோக்கும் நெஞ்சில் பாட்டு முகிழ்க்கும். அதனை எழுத் தோவியமாக அமைக்கும்பேறு பலர்க்கு வாய்ப்பதில்லை. தோழர் பாரதிதாசனுக்கு அப்பேறு எளிதில் வாய்த்தது. இது கருவி லுற்ற திருவேயாகும்.

தோழருடன் சிறிது நேரம் பேசினும் அவர்தம் குழந்தை மனம் புலனாகும். குழந்தை மனம் பாட்டுப் புலம் என்பதை விளக்க வேண்டுவதில்லை.

புதுவைத் தமிழ்வைப்பு-சுப்புவினிடத் திருந்து பொங்கி வழிந்த பாமணிகள் பலப்பல. அவற்றுள் கருத்து வேற்றுமை உண்டு. வேற் றுமை என் நெஞ்சைக் கவர்வதில்லை. பாட்டே என் நெஞ்சைக் கவரும். இது சுப்பு வின் பாட்டுத்திறம் என்று கூறாது வெறென்ன கூறுவது?

பொதுமைப் பொழில்-புதுமை மலர்- தமிழ்த்தேன்-பாச்சுவை-பாரதிதாசன்.

பொன்னி. 29.4.1951

அதுவருமாறு:

''யாதும் ஊரே யாவரும்
கேளிர் தீதும் நன்றும் பிறர்தர
வாரா. . . . . . . ,,
இப்புறப் பாட்டை உற்று
நோக்குக; நோக்கி நோக்கி
உன்னுக; உன்னி உன்னி அதில்
ஒன்றுக; பாட்டுப் பொருளில்
வேற்றுமைக்கு இடமுண்டோ?
பிணக்குக்கு இடமுண்டோ?
எல்லாம் ஒருமை!''

இப்படித் திரு.வி.க. நாட்டு மக்களுக்கு ஒருமைப்பாட்டினை உணர்த்திச் செல்ல மறப்ப தில்லை. நாட்டுப் பணிகளில் திளைத்து நின்றபோதும், சம யப் பணிகளில் முனைந்து திறந்த போதும் மொழி வளர்ச்சியால் தனித்தோர் ஊக்கம் செலுத்திய போதும் ஒருமைப்பாடே மேலோங்கி நின்றது.

இப் பொதுமைப் பண்பு (ஒருமைப்பாடு) மேவிட ''மானி டத் தன்மை'' ( humanism ) பெற்றிருத்தல் வேண்டும். மனி தத் தன்மை பிற உணர்வுகளை அன்பினால் நேசித்துஅறவணைப் பது, மனிதத்தன்மை பெறுவதற் குக் கல்வியாளனாக மலர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்ப தில்லை. மனிதத் தன்மை மேற் பட்டு இருந்தால் போதும். இதற்கு எடுத்துக்காட்டாக, ஏசுவையும் இராமகிருஷ்ணரையும் கூறுவர். ''இவர்கள் கல்வியாகிய வழியை மேற்கொள்ளாமலே ''மானிடத் தன்மை'' என்ற பயனைப் பெற்று விட்டனர்'' என்பார்கள்.

திரு.வி.க.வோ கல்வியிலும் சிறந்து மானிடத் தன்மையிலும் சிறந்து விளங்கினார்கள்.

ஒவ்வொரு நூலிலும் ஒருமைப் பாடு அதாவது பொதுமைத் தன்மை கோடிட்டுச் செல்லாமல் இருந்ததில்லை; 'பொதுமை வேட்டல்' எனும் தனி நூலும் இயற்றி அருளினார். அந்நூலில் தன் நெஞ்சினைப் பளிங்கு போல் திறந்து காட்டுகிறார். அவ ரவர் கருத்து அவரவர் இடத்தில் சிறந்தது - உயர்ந்தது - விழுமி யது என்பார். அக்கருத்துகள் அனைத்தும் மானிடத் தன்மை அடைந்திட வழிகோலும் தன் மையின என்று விளக்கம் தரு வார். திரு.வி.க.வின் நூல்கள் எப்படியோ, அப்படியே அவர் களது வாழ்வும்.

திரு.வி.க. அன்பினாலும் தம் சீரிய பண்பினாலும் ஆயிரம் ஆயி ரம் மக்களைத் தன்வசப்படுத் தினார். தொழிலாளர்கள் அவர் கள் சுட்டிக்காட்டிய வழிநடந்து வெற்றிகள் பல பெற்றார்கள். திரு.வி.க. தம் வாழ்க்கைக் குறிப் பில் தாம் பழகிய அன்பர்களின் குண நலன்களைப் பாராட்டி, அவர்கள் தம் வாழ்வில் செய்த சாதனைகளையும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

வாரந்தோறும் வெளிவரும் இதழ்களில் திரு.வி.க.வைத் தாக்கி இழித்தும் பழித்தும் பலர் எழுதினர், பலர் பேசினர். இத் தனைக்கும் திரு.வி.க. ஒரு புன் முறுவல் பூப்பார். அவ்வளவு தான். தன் வாய் அசைத்து அவர் களை ஒன்றும் சொன்னதில்லை. ஆனால் அவர்கள் எழுப்பிய வினாக்களுக்கு மிக நாகரிகமாக அடக்கமான விடைகள் எழுதிய பண்பாளர். இது ஒன்றே மானி டத் தன்மை அவர் முழுமையாகப் பெற்றிருந்தார் என்பதற்குச் சான்று. காழ்ப்பும் பகையும் அவர் கண்டதில்லை. ஒருவேளை இந்த இரண்டு சொற்களும் அவர் அறி யார் போலும்!

# மாநில தலைமைக் கணக்காயர்-I

தமிழ்நாடு, 261, அண்ணா சாலை,
சென்னை-600 018

## அரசு ஊழியர் வருங்கால வைப்பு நிதி
## 1982-83 ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகள்

மாநில தலைமைக் கணக்காயர், தமிழ்நாடு, அவர்கள், மாநில அரசு ஊழியர்கள் அனைவருடைய பொது வருங்கால வைப்பு நிதியின் (G.P.F) 1982-83 ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகளை (Account Slip) அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அறிக்கைகள், அரசு ஊழியர்கள் 1983ஆம் ஆண்டு மார்ச் மாதம் எந்த அலுவலகத்தில் பணி புரிந்தார்களோ, அந்தந்த அலுவலக நிர்வாக அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. ஆகவே, தமிழக அரசு ஊழியர்கள் அனைவரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, தத்தம் கணக்கு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். இந்தக் கணக்கு அறிக்கைகளில் ஏதாவது குறைகள் காணப்படுமேயானால், அந்தக் குறைகளை நிவர்த்திக்க, சம்பளப்பட்டியல் விவரங்களுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதும்படி கோரப்படுகிறார்கள். கணக்கு அறிக்கைகள் கிடைக்காவிட்டாலும் கீழ்க்கண்ட முகவரிக்கு உடனே எழுதவும்.

திரு சு. விசுவநாதன்,
கணக்கு அலுவலர் (F.M.I. பிரிவு),
மாநில தலைமைக் கணக்காயர் அலுவலகம்,
261 அண்ணா சாலை,
சென்னை-600 018.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி சேலைக
ஆயிரம் மலர்கள் பூத்து குலுங்கு
அழகோவிய சேலைகள்...

